# ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா

[பட்டப்படிப்பிற்குரியது]

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகின்றது)

ந. சட்டைநாதன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—650

# ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா

[பட்டப்படிப்பிற்குரியது]

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகின்றது)

ஆசிரியர்

**ந. சட்டைநாதன்**, எம்.காம்., எம்.லிட்.,

ரீடர், வணிகவியல் துறை,

(மதுரைப் பல்கலைக் கழகம்)

வி.இ.நா. செந்திக் குமார நாடார் கல்லூரி,

விருதுநகர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—September, 1975

T.N.T.B.S. (C.P.) No. 650

© Government of Tamilnadu

# RESERVE BANK OF INDIA

N. SATTAINATHAN

Price Rs. 9-85

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

*Printed by :*

M/s. NEW CENTURY PRINTERS,
No. 41-B, Ambattur Industrial Estate,
Madras-600 098.

# அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினைந் தாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தை யும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். 1969 ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறை களில் நூல்கள் எழுதித்தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண் டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்று விப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகமும், சென்னைப் பல்கலைக் கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டம் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூல நூல்கள் மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 650 ஆவது வெளி யீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 685 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும், கலையியற் பாடங்களை யும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங் களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளரவேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ் எங்கும் தமிழ்' என்ற குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு, தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

**இரா. நெடுஞ்செழியன்**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | | 1-11 |
| | இந்தியாவில் மைய வங்கி | .. | 2 |
| | ரிசர்வ் பாங்கின் அமைப்பு | .. | 5 |
| | நாட்டுடைமையாக்கப்படல் | .. | 6 |
| | மத்திய அவையும் வட்டார அவைகளும் | .. | 7 |
| | ரிசர்வ் பாங்கின் முக்கியப் பணிகள் | .. | 8 |
| 2. | ரிசர்வ் பாங்கின் பணத்தாள் வெளியிடும் அதிகாரம் | | 12-21 |
| | பணம் வெளியிடும் துறை | .. | 14 |
| | பணம் வெளியிடும் துறையின் சொத்துகள் | .. | 14 |
| | பண வெளியீட்டுத் திட்டம் | .. | 15 |
| | பணப் பெட்டகங்கள் | .. | 16 |
| | பணப் பருவக் காலங்கள் | .. | 18 |
| | மும்முரப் பருவம் | .. | 19 |
| | மந்தப் பருவம் | .. | 19 |
| | பொதுமக்களிடம் உள்ள பண அளிப்பு | .. | 20 |
| | அட்டவணையிலிடப்பட்ட வங்கிகளின் சொத்துகளிலும் பொறுப்புகளிலும் மாறுதல்கள் | .. | 20 |
| 3. | அரசாங்க வங்கியர் | | 24-31 |
| | மத்திய, மாநில அரசுகளுடன் ஒப்பந்தம் | .. | 24 |
| | நிருவாக ஏற்பாடுகள் | .. | 25 |
| | புதுக்கடன்கள் மற்றும் கருவூல உண்டியல்களை வெளியிடுதல் | .. | 26 |
| | வழி வகைக் கடன்கள் | .. | 28 |
| | அரசாங்க அறிவுரையாளர் | .. | 30 |

பக்கம்

4. ரிசர்வ் பாங்கும் பணச் சந்தையும் 32-75

வளர்ச்சியுற்ற பணச்சந்தை .. 33
வளர்ச்சியுற்ற பணச்சந்தையில் மையவங்கி .. 35
வளர்ச்சியுருத பணச்சந்தையில் மைய வங்கி .. 36
இந்தியப் பணச்சந்தை .. 38
மாற்றுஉண்டியல் அங்காடி வளராமைக்குக் காரணங்கள் .. 48
உண்டியல் அங்காடி .. 57
புதிய உண்டியல் மறுதள்ளுபடித் திட்டம் .. 61
பணச் சந்தையில் செயல் இணைப்பை ஏற்படுத்த ரிசர்வ் பாங்க் எடுத்துக்கொண்ட முயற்சிகள் .. 69

5. ரிசர்வ் பாங்கும் நிதியியல் நிருவாகமும் 76-161

ரிசர்வ் பாங்கின் கடன் கொள்கை .. 80
கடனின் விலையும், கிடைக்கக் கூடிய அளவும் .. 90
கடன் கட்டுப்பாட்டு முறைகள் .. 94
பாங்க் வீதம் .. 99
வெளி அங்காடி நடவடிக்கைகள் .. 120
காப்பு ரொக்க விகித மாறுதல்கள் .. 138
நிதியியல் கொள்கையில் மாறுதல்கள் .. 156

6. ரிசர்வ் பாங்கும் பொறுக்குக் கடன் கட்டுப்பாடும் 162-220

ரிசர்வ் பாங்கும் பொறுக்குக் கடன் கட்டுப்பாடும் 165
பொறுக்குக் கடன் கட்டுப்பாடு-1956 மார்ச்சுக்கு முன் .. 168
பொறுக்குக் கடன் கட்டுப்பாடு-1956-லிருந்து .. 170
அறிவுறுத்தல் .. 208
பிற அதிகாரங்கள் .. 215
கடனைத் திட்டமிடுதல் .. 216
வங்கிகள் அல்லாத நிறுவனங்கள்மீது கட்டுப்பாடு 219

7. வங்கிகளை மேற்பார்வையிடல் 221-252

வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல் .. 222
முதல், காப்பு ரொக்கம், காப்பு நிதி, ரொக்கத்தன்மை வாய்ந்த சொத்துகள் .. 228
ஆய்வு .. 231
வங்கிகள் நிருவாகத்தின்மீது கட்டுப்பாடு .. 235
வங்கி நடவடிக்கை முறைகள்மீது கட்டுப்பாடு .. 238
தணிக்கை .. 240

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| வங்கிகள் இணைப்பு | .. | 241 |
| கடன் தகவல் பணி | .. | 246 |
| ரிசர்வ் பாங்கின் பிற அதிகாரங்கள் | .. | 246 |
| வங்கி அலுவலர்க்குக் கல்வியும் பயிற்சியும் | .. | 248 |
| வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு | .. | 250 |
| 8. ரிசர்வ் பாங்கும் கிராமியக் கடனும் | | 253-296 |
| கிராமியக் கடன் ஆராய்ச்சிக்குப் பின் | .. | 255 |
| தேசிய வேளாண்மைக் கடன் (நீண்டகால) நடவடிக்கை நிதி | .. | 257 |
| தேசிய வேளாண்மைக் கடன் (நிலைபேறுக்க) நிதி | | 257 |
| ரிசர்வ் பாங்க் அளிக்கும் நிதி வசதிகள் | .. | 261 |
| கூட்டுறவு வங்கிகளைக் கண்காணித்தல் | .. | 274 |
| பிற அதிகாரங்கள் | .. | 275 |
| பணம் அனுப்புகை வசதித் திட்டம் | .. | 277 |
| வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு | .. | 278 |
| 9. ரிசர்வ் பாங்கும் தொழில் நிதியும் | | 297-320 |
| இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு | .. | 299 |
| மாநில நிதியக் கூட்டுருக்கள் | .. | 304 |
| இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி | .. | 307 |
| ரிசர்வ் பாங்கின் கடன் உதவி பற்றிய புள்ளி விவரங்கள் | .. | 313 |
| கடன் உத்தரவாதத் திட்டம் | .. | 315 |
| யூனிட் டிரஸ்ட் | .. | 317 |
| 10. வெளிநாட்டுச் செலாவணி நிருவாகமும் கட்டுப்பாடும் | | 321-341 |
| நாணய மாற்று வீதம் | .. | 323 |
| வெளிநாட்டுச் செலாவணி நிருவாகம் | .. | 324 |
| வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு | .. | 326 |
| அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளருக்கு உரிமம் வழங்குதல் | .. | 330 |
| ஸ்டர்லிங் வட்டார ஏற்பாடுகள் | .. | 331 |
| பன்னாட்டு நாணய நிதியில் அங்கம் வகித்தல் | .. | 331 |
| வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டின் நோக்கங்கள் | .. | 333 |
| இறக்குமதிமீது கட்டுப்பாடு | .. | 334 |
| ஏற்றுமதிமீது கட்டுப்பாடு | .. | 336 |

பக்கம்

தங்க நகைகள், செலாவணித் தாள்கள், நாணயங்கள் .. 338
இந்தியாவில் வெளிநாட்டு முதலீடுகளும், வெளிநாட்டில் இந்திய முதலீடுகளும் .. 338
புள்ளி விவரத் தாக்கீதுகள் .. 339
ஸ்டர்லிங் நடவடிக்கைகள் .. 340

11. ரிசர்வ் பாங்கின் அமைப்பு 342-358

பணத்தாள் வெளியிடும் துறை .. 343
வங்கியியல் துறை .. 345
மத்திய அலுவலகத் துறைகள் .. 347

12. கணக்கு விவர அறிக்கைகளும் வெளியீடுகளும் 359-384

காகிதப் பணம் வெளியிடும் துறையின் சொத்துகள் .. 360
வங்கியியல் துறை—பொறுப்புகள் .. 361
அட்டவணையிலிட்ட வங்கிகளின் கணக்கு அறிக்கைகள் .. 369
ரிசர்வ் பாங்கின் வருமானமும் செலவும் .. 374

13. முடிவுரை 385-390

மேற்கோள் நூற்பட்டியல் .. 391
கலைச்சொல் அகராதி .. 393

# 1. முன்னுரை

இன்றைய உலகில் மைய வங்கி இல்லாத நாடே இல்லை எனலாம். பெரும்பாலான மைய வங்கிகள் தொடக்கத்தில் தனியார் உடைமையில்தாம் இருந்தன. பின்னர்தாம் முழு அரசுடைமை வங்கிகளாயின. பாங்க் ஆஃப் இங்கிலாந்து, பாங்க் ஆஃப் ஹாலந்து, பாங்க் ஆஃப் பிரான்சு, ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா ஆகிய மைய வங்கிகள் இவ் வகையைச் சாரும். சென்ட்ரல் பாங்க் ஆஃப் சிலோன், யூனியன் பாங்க் ஆஃப் பர்மா, சென்ட்ரல் பாங்க் ஆஃப் பிலிப்பைன்ஸ் ஆகிய மைய வங்கிகள் தொடக்கத்திலேயே முழு அரசுடைமை வங்கிகளாகத் தொடங்கப்பட்டன. பாங்க் ஆஃப் ஸ்விட்சர்லாந்து, பாங்க் ஆஃப் இத்தாலி போன்ற மைய வங்கிகள் அரசினர் முதலீடோ தலையீடோ இன்றித் தனியாரால் நடத்தப்படும் மைய வங்கிகளாகும். பாங்க் ஆஃப் ஜப்பான், ஸ்டேட் பாங்க் ஆஃப் பாகிஸ்தான், பாங்க் ஆஃப் மெக்சிகோ ஆகிய மைய வங்கிகளில் 50 விழுக்காட்டிற்கு ஓரளவு மிகுதியான பங்குகளை அரசினரும் எஞ்சிய பங்குகளைத் தனியாரும் பெற்றிருப்பதனுல், இத்தகைய மைய வங்கிகள் கலப்பு (mixed) மைய வங்கிகளாகும். தொடக்கத்தில் அரசாங்க வங்கியாகவும் மற்றும் பணம் வெளியிடும் வங்கியாகவும் மட்டுமே, மைய வங்கிகள் பணிபுரிந்து வந்தன. சில வங்கிகள், வணிக வங்கியாகவும் பணியாற்றின. நாளடைவில், ஒன்றன்பின் ஒன்ருகப் பல மைய வங்கிப் பணிகளைப் பெற்றபின், தங்களுடைய வணிக வங்கிப் பணிகளைக் கைவிட்டன. மைய வங்கிகள் வணிக வங்கிகளைப்போல் இலாபம் தேடுவனவல்ல. மைய வங்கியானது தனக்கும் வணிக வங்கிகளுக்கும் உள்ள தனி உறவு மூலம், வணிக வங்கிகள்மீது தனது செல்வாக்கைச் செலுத்த முடிவதால் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளை அவ் வங்கிகளின் உதவியோடு நிறைவேற்றமுடிகிறது என்று சேயர்ஸ் (R. S. Sayers) கூறியுள்ளார். உலகில் மிகப் பழம்பெரும் மைய வங்கியாகப் பாங்க் ஆஃப் இங்கிலாந்து கருதப்படுகிறது. ரிசர்வ்

பாங்க் ஆஃப் இந்தியா உட்பட, பல மைய வங்கிகள் பாங்க் ஆஃப் இங்கிலாந்தின் மாதிரியில் (model) நிறுவப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் மைய வங்கி

இந்தியாவில் ஒரு மைய வங்கி அமைப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளின் வரலாறு மிக நீண்ட ஒன்றாகும். 1773ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் வாரென் ஹாஸ்டிங்ஸ் (Warren Hastings) என்பவர் 'ஜெனரல் பாங்க் இன் பெங்கால் அண்ட் பகார்' (General Bank in Bengal and Bahar) என்ற பெயரில் ஒரு மைய வங்கி அமைக்குமாறு பரிந்துரைத்தார். அந் நாள்களில் ஓரிடத்திலிருந்து பிற இடங்களுக்குப் பணம் அனுப்புவது செலவுடையதாகவும், வழிப்பறி காரணத்தினால் ஆபத்து நிறைந்ததாகவும் இருந்தது. மேலும், அரசாங்கம் வரி வசூல் செய்வதால் ஏற்படும் செலாவணிச் சுருக்கத்தையும் சரி செய்ய வேண்டியிருந்தது. இத்தகைய சூழ்நிலையில்தான், பெங்காலின் ஆளுநராக அப்போது இருந்த வாரென் ஹாஸ்டிங்ஸ், ஒரு மைய வங்கியை உருவாக்க வேண்டும் என்று கூறினார். 'ஜெனரல் பாங்க் இன் பெங்கால் அண்ட் பகார்' 1773 ஏப்ரல் திங்கள் ஆரம்பிக்கப்பட்டு, 1775 பிப்ரவரியில் மூடப்பட்டது. இவ் வங்கி, பணியாற்றிய மிகக் குறுகிய காலத்தில் கணிசமான இலாபத்தைச் சம்பாதித்தது. அந்த இலாபத்தில் பாதிப் பங்கை அரசினர் எடுத்துக் கொண்டனர்! பின்னர் இராபர்ட் ரிக்கர்ட்ஸ் (Robert Rickards) 1807-8-ல் 'ஜெனரல் பாங்க்' (General Bank) என்ற பெயரில் மைய வங்கி ஒன்று அமைக்க ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்தார். ஆனால், அத் திட்டம் கிழக்கிந்தியக் கம்பெனியின் (East India Company) இயக்குநர்களால் நிராகரிக்கப்பட்டது. இந்தியாவுடன் வணிக உறவு கொண்ட, இங்கிலாந்திலிருந்த வியாபாரிகள் குழு ஒன்று, பிரிட்டிஷ் இந்தியாவில் மாபெரும் வங்கியியல் நிறுவனம் அமைப்பதற்கான ஒரு திட்டத்தை, 1836-ல் கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர்களிடம் சமர்ப்பித்தது. ஆனால், இத் திட்டமும் வெற்றியடையவில்லை. 1884-ல் நெதர்லாண்ட்ஸ் பாங்க் (Netherlands Bank) மாதிரியில் இந்தியாவில் ஒரு மைய வங்கி அமைக்க யோசனை தெரிவிக்கப்பட்டது. பின்னர், கூட்டுறவுக் கடன் வசதிகளையும், வங்கி வசதிகளையும் பெருக்குவதற்காக, ஒரு மைய வங்கியை உருவாக்குதல் வேண்டும் என்று 1913-ல் சேம்பர்லெய்ன் குழு (Chamberlain Commission) தெரிவித்தது. சேம்பர்லெய்ன் குழுவின் அறிக்கையின் பிற்சேர்க்கையில், இந்திய மைய வங்கிக்கான சிறந்த மிகப் பெரிய திட்டம்

ஒன்றை, ஜே. எம். கெய்ன்ஸ் (J. M. Keynes) தீட்டியிருந்தார். அத் திட்டப்படி மைய வங்கிப் பணிகளையும், வணிக வங்கிப் பணி களையும் மைய வங்கி புரிதல் வேண்டும் என்று கெய்ன்ஸ் கருதினார். இத் திட்டத்தை ஆராய்ந்த சேம்பர்லெய்ன் குழு, இந்தியாவில் மைய வங்கி அமைப்பதற்கு ஆதரவாகவோ, எதிராகவோ கருத்துத் தெரிவிக்க இயலாத நிலையில் இருப்ப தாகத் தனது அறிக்கையில் கூறியது. ஆனால், இக் கருத்து மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், ஒரு சிறிய நிபுணர்கள் குழு மூலம் மைய வங்கி அமைப்பதுபற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் மேலும் கூறியது. ஆனால், இச் சமயம் முதல் உலகப் போர் மூண்டபடியால் சேம்பர்லெய்ன் குழுவின் சிபாரிசு களைச் செயல்படுத்த முடியவில்லை. முதல் உலகப் போருக்குப் பிறகு உண்டான நிதிக் குழப்பமும் (Monetary chaos) 1920 ஆம் ஆண்டு பிரஸ்ஸெல்ஸிலும் (Brussells), 1922 ஆம் ஆண்டு ஜெனீவாவிலும் (Geneva) நடந்த நிதி சம்பந்தப்பட்ட மாநாடு களில் மைய வங்கிகளின் அவசியத்தை வலியுறுத்தித் தீர் மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எந்தெந்த நாடுகளில் மைய வங்கி இல்லையோ அங்கங்கெல்லாம் மைய வங்கி அமைக்கப்பட வேண்டும் என்று 1933–ல் நடந்த உலகப் பொருளாதார மாநாட்டில் (World Economic Conference) மேலும் வலியுறுத்தப் பட்டது.

1921ஆம் ஆண்டு, பம்பாய், பெங்கால் மற்றும் சென்னையில் இருந்த மூன்று மாநில வங்கிகள் ஒன்று சேர்ந்து இம்பீரியல் பாங்க் ஆஃப் இந்தியாவை (Imperial Bank of India) உருவாக்கிய போது, இம்பீரியல் பாங்க் ஒரு முழு அளவு மைய வங்கியாக மாறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. உண்மையிலேயே, இம்பீரியல் பாங்க் ஒருபுறம் வணிக வங்கிகளின் பணிகளையும், மற்றொருபுறம் அரசாங்க வங்கி, வங்கிகளின் வங்கி, நாட்டின் பொதுக்கடன் நிருவாகம், தீர்வகம் (Clearing house) நடத்தல் போன்ற மைய வங்கிப் பணிகளையும் செய்து வந்தது. ஆனால், காகிதப் பணம் வெளியிடும் உரிமையும், வெளி நாட்டுச் செலாவணி நிருவாகமும் அரசாங்கத்தின் வசம் இருந்தன. இம்பீரியல் பாங்க் சில முக்கிய மைய வங்கிப் பணிகளைப் புரிந்தபோதும், அது ஒரு மைய வங்கியாக்கப்படவில்லை. ஏனெனில், அந்த மாபெரும் வணிக வங்கி மைய வங்கியாக மாற்றப்பட்டிருந்தால், அது தன் வணிக வங்கிப் பணிகளை விட்டுவிட வேண்டியிருக்கும். அப்படி வணிக வங்கிப் பணிகளை விடாமல், மைய மற்றும் வணிக வங்கிப் பணி களைத் தொடர்ந்து செய்தால், அது அனுபவிக்கும் தனிச் சலுகைகள் காரணமாக மற்ற வணிக வங்கிகளுடன் கடும்போட்டி

யிடுவதோடு மட்டுமல்லாமல் தன் சொத்துகளையும் பத்திரமாக வைத்திராது. 1926-ல் அறிக்கையைச் சமர்ப்பித்த எட்வர்டு ஹில்டன் யங் குழு (Edward Hilton Young Commission) கூட, இம்பீரியல் பாங்க் மைய வங்கியாக மாற்றப்படக்கூடாது என்றும் இம்பீரியல்பாங்க் மிகப்பெரிய வணிக வங்கியானதால் அதன் வணிக வங்கிப் பணிகளை இந்தியா இழக்கக்கூடாது என்றும் கருத்துத் தெரிவித்தது. இந்தியாவுக்கு ஒரு மைய வங்கியும் மிகப் பெரிய வணிக வங்கியும் தேவை என அக் குழு நினைத்துத்தான், ஒரு தனி மைய வங்கி அமைப்பதை மிகவும் வலியுறுத்தியது. அப்படி அமைக்கப்படும் மைய வங்கி **ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா** (Reserve Bank of India) என அழைக்கப்படவேண்டுமென்றும், அதனிடம் எல்லா மைய வங்கிப் பணிகளும் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் குழுக்கருதியது. செலாவணிக் கட்டுப்பாடு அரசாங்கத்திடமும், கடன் கட்டுப்பாடு இம்பீரியல் பாங்கிடமும் இருப்பது மிகப் பெரிய குறைபாடு எனச் சுட்டிக்காட்டி, இவ் விரு பணிகளும் நன்கு செயல்படுத்தப்பட வேண்டுமானல், அவை மைய வங்கியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று அக் குழு பரிந்துரைத்தது. ஹில்டன் யங் குழுவின் பரிந்துரைப்படி, 1927ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள், ஒரு மசோதா கொண்டு வரப்பட்டது. ஆனல், வங்கி அமைப்பு மற்றும் நிருவாக அமைப்பு ஆகியவை பற்றி மிக ஆழ்ந்த கருத்து வேற்றுமை ஏற்பட்டபடியால், அம் மசோதா கைவிடப்பட்டது. 1927-ல் அம் மசோதாவுக்குச் சில மாறுதல்களையும் திருத்தங்களையும் புகுத்தி, அப்போது நிதி அமைச்சராக இருந்த சர் பாசில் ப்ளாக்கெட் (Sir Basil Blackett), மீண்டும் அம் மசோதாவைக் கொண்டு வந்தார். ஆனல், இம் முறையும் பல கருத்து வேற்றுமைகளினல், அம் மசோதா வெற்றி யடையவில்லை. 1927 செப்டம்பர் 8ஆம் தேதியன்று, அரசாங்கம் மேற்கொண்டு அம் மசோதாவை நிறைவேற்றும் எண்ணத்தை மிக வருத்தத்துடன் கைவிட வேண்டியுள்ளது என நிதியமைச்சர் சர் பாசில் ப்ளாக்கெட் அறிவித்தார். பின்னர் 1931-ல் இந்திய மைய வங்கி விசாரணைக் குழு (Indian Central Banking Enquiry Committee, 1931) எவ்வளவு சீக்கிரம் அமைக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ரிசர்வ் பாங்க் அமைக்கப்பட வேண்டும் என மிகவும் வலியுறுத்திப் பரிந்துரை செய்தது. 1933-ல், இந்திய அரசியல் நிருணயச் சீரமைப்புப் பற்றிய அரசாங்க அறிக்கை (White paper on Indian Constitutional Reforms), 'ரிசர்வ் பாங்க்' அமைக்குமாறு பரிந்துரை செய்தது. இம் முயற்சியே இந்தியாவில் ஒரு மைய வங்கி அமைப்பதற்கான, வெற்றிகரமான முயற்சியாக அமைந்தது என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அப் பரிந்துரையின் படி, 1933ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8ஆம் தேதி ஒரு

மசோதா கொண்டு வரப்பட்டது. 1934-ல் ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் (Reserve Bank of India Act) நிறைவேறியது. 1935ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் தேதி முதல் ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா செயல்படத் தொடங்கியது.

## ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா சட்டம் 1934-ன்படி ரிசர்வ் பாங்கின் அமைப்பு

ஆரம்பத்தில் ரிசர்வ் பாங்க் ஒரு பங்குதாரார்களின் வங்கியாகவே இருந்தது. அதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் 5 கோடி ரூபாய். அது பங்கொன்றுக்கு 100 ரூபாய் வீதம் 5 இலட்சம் பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ரிசர்வ் பாங்க் சட்டம் -1934, பிரிவு 4 (8)-ன்கீழ் 2,20,000 ரூபாய் மதிப்புள்ள, பங்குகளை இயக்குநர்கள் ஆவதற்கான தகுதிக்காக (minimum share qualification) மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டது. 5 பங்குகளுடைய ஒரு பங்காளருக்கு ஒரு வாக்கு என்றும், ஒரு பங்காளருக்கு 10 வாக்குகளுக்குமேல் இல்லை என்றும், பங்குகளுக்குக் கொடுக்கப்படும் இலாப ஈவு எவ்வளவு என்றும் வரையறுக்கப்பட்டன.

தொடக்கத்தில், இவ் வங்கியின் மேற்பார்வையானது 16 இயக்குநர்களைக் கொண்ட ஒரு மத்திய அவையிடம் (Central Board of Directors) ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த அவையில் இந்திய ஆட்சித் தலைவரான கவர்னர் ஜெனரலால் நியமிக்கப்பட்ட 1 ஆளுநரும், 2 துணை ஆளுநர்களும், 4 இயக்குநர்களும் வட்டார அவைகளினால் (Regional Boards) தேர்ந்தெடுக்கப்பட்ட 8 இயக்குநர்களும் ஓர் அரசாங்க அதிகாரியும் இருந்தனர். வட்டார அவைகள் தங்களுக்கு மத்திய அவையால் இடப்படும் பணிகளுக்குத் தங்களுடைய ஆலோசனைகளைத் தெரிவித்ததோடல்லாமல் அவ்வப்போது இடப்படும் அலுவல்களையும் செய்து வந்தன. மத்திய அவையில், இயக்குநர் ஆவதற்கான தகுதிகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. வருடத்தல் குறைந்தது 6 கூட்டங்களை மத்திய அவை கூட்டியது. மத்திய அவையால் அமைக்கப்பட்ட குழு (Committee of the Central Board) வருடத்திற்கு 30 தடவை கூடியது. வருடாந்தரக் கணக்குகள் முடிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு வாரங்களுக்குள், பங்குதாரர்களின் வருடாந்தரப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மத்திய அவை தனக்கு அளிக்கப்பட்ட பணிகளைச் செம்மையாகச் செய்யாவிட்டால், அரசாங்கம் மத்திய அவையை நீக்கிவிடும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது.

## நாட்டுடைமையாக்கப்படல் (Nationalisation)

1927-ல், ரிசர்வ் பாங்கினை அமைக்க ஒரு மசோதா கொண்டு வரப்பட்டபோதே, ரிசர்வ் பாங்க் ஒரு நாட்டுடைமை வங்கியாகத் தொடங்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டது. மைய வங்கி, அரசினர் உடைமையில் இருக்க வேண்டுமா அல்லது தனியார் உடைமையில் இருக்க வேண்டுமா என்ற பிரச்சினை நீண்ட காலமாகத் தீர்க்கப்படாததால், இந்தியாவில் ஒரு மைய வங்கி அமைப்பதில் மிகவும் காலதாமதம் ஏற்பட்டது. 1935-ல் ரிசர்வ் பாங்க் அமைக்கப்பட்ட பின்னர், 1945 வரை, நாட்டுடைமைப் பிரச்சினை எழவில்லை. 1945-ல், பாங்க் ஆஃப் இங்கிலாந்து நாட்டுடைமையாக்கப்பட்டபோது, இந்தியாவிலும் ரிசர்வ் பாங்க் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் என்று விவாதிக்கப்பட்டது. ரிசர்வ் பாங்க் நாட்டுடைமையாக்கப்படுவதுபற்றிப் பல்வேறு வட்டாரங்களில் உடன்பாடாகவும், எதிராகவும் பல கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. இரண்டாவது உலகப் போருக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரும் பின்னரும், உலகிலுள்ள பல மைய வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. டென்மார்க் மற்றும் நியூசிலாந்து மைய வங்கிகள் 1936-லும், கனடா மைய வங்கி 1938-லும், பாங்க் ஆஃப் பிரான்சு 1946 ஜனவரியிலும், பாங்க் ஆஃப் இங்கிலாந்து 1946 மார்ச்சிலும், பாங்க் ஆஃப் நெதர்லாண்ட்ஸ் 1948-லும் நாட்டுடைமையாக்கப்பட்டன. இவ்வாறு உலகெங்கிலும் மைய வங்கிகள் நாட்டுடைமையாக்கப்படும் பொதுவான போக்கைப் (general trend) பின்பற்றி இந்திய ரிசர்வ் பாங்கும், ரிசர்வ் பாங்க் (பொது உடைமைக்கு மாற்றும்) சட்டம், 1948 [Reserve Bank (Transfer to Public ownership) Act, 1948] கீழ், 1949 ஜனவரித் திங்கள் 1-ம் நாள் முதல் நாட்டுடைமையாக்கப்பட்டது. அதாவது, ரிசர்வ் பாங்க் ஆரம்பிக்கப்பட்டு 13 ஆண்டு, 9 மாதங்களுக்குப் பின்னர் ரிசர்வ் பாங்க் நாட்டுடைமையாக்கப்பட்டது. ஆகவே, 1948 ஆம் ஆண்டு, ரிசர்வ் பாங்க் வரலாற்றில் ஒரு முக்கிய ஆண்டாக அமைந்தது. 100 ரூபாய் மதிப்புள்ள பங்கொன்றுக்கு, 118 ரூபாய் 10 அணு வீதம் ஈடாகக் கொடுத்து எல்லாப் பங்கு உரிமைகளையும் அரசாங்கம் பெற்றுக்கொண்டது.

1937 ஏப்ரலில், இந்தியாவிலிருந்து பர்மா பிரிந்த பிறகும் ரிசர்வ் பாங்க் தொடர்ந்து அந் நாட்டிற்கு 1942 ஜூன் 5 ஆம் தேதி வரை செலாவணி அதிகாரியாகவும், 1947 மார்ச் 31ஆம் தேதி வரை அவ் வரசின் வங்கியாகவும் பணியாற்றியது.

1947-ல் பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டபோது, ரிசர்வ் பாங்கிற்குப் பெரிய பிரச்சினைகள் எழுந்தன. இந்தியாவிற்கும்

பாகிஸ்தானுக்கும் ரிசர்வ் பாங்க் குறுகியகாலத்திற்கு மைய வங்கியாகப் பணியாற்றியது. 1948 ஜூலை 1 ஆம் தேதி முதல், பாகிஸ்தானுக்கு மைய வங்கியாகப் பணியாற்றுவதை, ரிசர்வ் பாங்க் நிறுத்திக்கொண்டது.

## மத்திய அவையும் வட்டார அவைகளும்

நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னர், வங்கியின் நிருவாகம் ஒரு மத்திய அவையிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த அவையில்,

1. ஓர் ஆளுநரும் 4 துணை ஆளுநர்களும் (பிரிவு 8 (1) (a))

2. ஒவ்வொரு வட்டார அவைக்கும் ஓர் இயக்குநர் வீதம் 4 வட்டார அவைகளுக்கு 4 இயக்குநர்களும் (பிரிவு 8 (1) (b) )

3. அரசாங்கத்தால் பிரிவு 8 (1) (c)-ன்படி நியமிக்கப்பட்ட 10 இயக்குநர்களும் (4) பிரிவு 8 (1) (d) ன்படி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஓர் அரசாங்க அதிகாரியும் உள்ளனர்.

ஆளுநரும், துணை ஆளுநர்களும் ஐந்து ஆண்டுகளுக்கு அதிகப்படாமல், அரசாங்கத்தால் முடிவு செய்யப்பட்டபடி பதவி வகிப்பர். மீண்டும் பதவியில் தொடர்ந்து இருக்கவும் இவர்கள் தகுதியுள்ளவர்கள். பிரிவு 8 (1) (b)-ன்படி நியமிக்கப்பட்ட இயக்குநர்கள் வட்டார அவையின் ஆணைப்படி பதவி வகிப்பார்கள். பிரிவு 8 (1) (c)-ன்படி நியமிக்கப்பட்ட இயக்குநர்கள் நான்கு ஆண்டுகள்வரை பதவி வகிக்கலாம்.

மேற்கண்ட எல்லா இயக்குநர்களுமே அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்றனர். பதவியிலிருந்து விலகும் இயக்குநர்கள் மீண்டும் இயக்குநர்களாகத் தகுதியுடையவர்கள் ஆவர். மத்திய அவை ஒரு வருடத்திற்குக் குறைந்தது 6 கூட்டங்களாவது நடத்த வேண்டும். குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது ஒரு கூட்டம் நடத்த வேண்டும். ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 58 (2)-ன் கீழ் மத்திய அவை நடைமுறை வசதிக்காகத் தனது சில அலுவல்களை ஆளுநர், துணை ஆளுநர்கள் மற்றும் சில இயக்குநர்கள் கொண்ட ஒரு குழுவிடம் ஒப்படைத்துள்ளது. அக் குழு, கவர்னர் உள்ள இடத்தில் வாரந்தோறும், பொதுவாகப் புதன் கிழமைகளில் கூடி, அவ்வப்போதைய வியாபார அலுவல்களைக் கவனிக்கின்றது. வட்டார அவைகளின்

தலைமையகங்கள் பம்பாய், கல்கத்தா, சென்னை, டில்லி ஆகிய நான்கு இடங்களில் இருக்கின்றன. வட்டார அவைகள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட 5 அங்கத்தினர்களை உடையவை. பிரதேசப் பொருளாதார நலன்களையும், கூட்டுறவு வங்கிகள் மற்றும் நாட்டுப் பாங்கர்களின்(Indigenous Bankers) நலன்களுக்குத் தேவையானவற்றைக் கவனித்து வருவதும், மத்திய அவைக்குத் தேவையான தகவல்களைக் கொடுப்பதும், மத்திய அவையால் கொடுக்கப்படும் பணிகளைச் செய்வதும் வட்டார அவைகளின் முக்கியப் பணிகளாகும். வட்டார அவையின் அங்கத்தினர்கள் தங்களுக்குள்ளேயே ஒரு தலைவரைத் (Chairman) தேர்ந் தெடுக்கிறார்கள். மத்திய அரசாங்கம் ஆளுநரைக் கலந்து ஆலோசித்த பிறகு, பொதுமக்களின் நலன் கருதி, வங்கி நடத்துவ தற்கான ஆணை பிறப்பிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால், அப்படிப்பட்ட ஆணைகள் வங்கி சுதந்திரமாகச் செயல் படுவதை எவ் வகையிலும் பாதிக்காது. பொதுவாக, மத்திய அவை சில அதிகாரங்களை வட்டார அவையிடம் ஒப்படைத்திருந் தால், வட்டார அவைகள் தங்கள் ஆலோசனைகளைத் தெரிவிக்க லாமேயொழிய, அவ் வாலோசனைகளைச் செயல்படுத்த முடியாது.

ஆளுநரே மத்திய அவையின் தலைவர். பிரிவு 7 (3)-ன் கீழ் ஆளுநருக்குப் பாங்கை நடத்துவதற்கு எல்லா அதிகாரங்களும் உண்டு. ஆளுநர் இல்லாதபோது, ஆளுநரால் நியமிக்கப்பட்ட துணை ஆளுநர், ஆளுநரின் பொறுப்பை ஏற்பார். இரு துணை ஆளுநர்களும், மூன்று நிறைவேற்றியக்குநர்களும் (Executive Driectors) ஆளுநர் தம் வேலைகளைச் செய்வதற்கு உதவுகிறார்கள். தொடக்கத்தில், ரிசர்வ் பாங்கில் இரண்டு துறைகள் மட்டுமே இருந்தன. தொடர்ந்த வளர்ச்சியினாலும், முன்னேற்றத்தினாலும் பாங்கில் உள்ள துறைகளின் எண்ணிக்கை அதிகமாகி உள்ளது. இப்பொழுது மத்திய அலுவலகத்தில் பதின்மூன்று துறைகள் உள்ளன.

## ரிசர்வ் பாங்கின் முக்கியப் பணிகள்

உலகத்திலுள்ள மற்ற மைய வங்கிகளைப் போலவே, ரிசர்வ் பாங்கும் எல்லா மைய வங்கிப் பணிகளையும் செய்கிறது. ரிசர்வ் பாங்க் சட்டத்தின் முகவுரையில் (Preamble to Reserve Bank of India Act) கூறப்பட்டுள்ளபடி, பணத்தாள் வெளியிடுவதை ஒழுங்குபடுத்துவதும், இந்தியாவில் நிதியியலில் நிலைபேற்றை (stability) உருவாக்குவதும், மற்றும், பொதுவாக நாட்டின் நலனில் செலாவணியையும், கடன் முறையையும் சரிவர நடத்து வதும் ரிசர்வ் பாங்கின் முக்கியப் பணிகளாகும். செலாவணிப்

பணத்தைச் சீர்படுத்துவதற்காக அரசாங்கத்தால் ரிசர்வ் பாங்க் சட்டம், பிரிவு 22-ன் கீழ் அளிக்கப்பட்டிருக்கும் 'பணம் வெளியிடும் தனிச் சலுகை'யை (sole right to issue notes) ரிசர்வ் பாங்க் பெற்றிருக்கிறது. பணம் வெளியிடுவதற்காக, ரிசர்வ் பாங்கில், பண வெளியீட்டுத்துறை (Issue Department) ஒன்று உள்ளது. வணிக வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களுக்கு, ரிசர்வ் பாங்க், ஒரு வங்கியாகப் பணியாற்றுவதோடல்லாமல், அவற்றின் ரொக்க இருப்புகளைத் தன் பொறுப்பில் வைத்துக் கொள்ளல் மற்றும் அவற்றுக்குக் கடன் வசதிகளை அளித்தல் ஆகிய பணிகளைப் புரிகிறது. கடன் கட்டுப்பாட்டிற்காகப் பாங்கு வீதம் (Bank rate), வெளி அங்காடி நடவடிக்கைகள் (Open market operations), காப்பு ரொக்க வீத மாறுதல்கள் (Variable cash reserve ratios) ஆகிய கடன் கணியக் கட்டுப்பாடு முறைகளையும் (Quantitative credit control methods) மற்றும், கடன் தன்மைக் கட்டுப்பாடு (Qualitative credit control), பொறுக்குக் கடன் கட்டுப்பாடு (Selective credit control), நேரடிக் கட்டுப்பாடு (Direct control) ஆகிய முறைகளையும் ரிசர்வ் பாங்க் கையாள்கிறது. ரூபாயின் புற மதிப்பைப் (external value) பராமரிப்பதும் ரிசர்வ் பாங்கின் முக்கியப் பணியாகும். இப் பணியைச் செவ்வனே செய்வதற்காக, வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கீடுகள் ரிசர்வ் பாங்கின் பொறுப்பில் உள்ளன. மேலும், இந்திய அரசாங்கம் அங்கத்தினராக இருக்கும் பன்னாட்டு நாணய நிதியில் (International Monetary Fund), ரிசர்வ் பாங்க், அரசாங்கத்தின் முகவராகப் (Government agent) பணிபுரிகிறது. ரிசர்வ் பாங்க் சட்டம், பிரிவு 20-ல் கூறப்பட்டுள்ளபடி மத்திய, மாநில அரசுகளின் வங்கியாக இருந்து அவ் வரசுகளின் சார்பில் பணத்தைப் பெறுதல், செலுத்துதல், அனுப்புதல் மற்றும் பொதுக்கடனை நிருவகித்தல் ஆகிய பணிகளையும் ரிசர்வ் பாங்க் செய்து வருகிறது. வெளிநாட்டுச் செலாவணியையும் ரிசர்வ் பாங்க் கட்டுப்பாடு செய்கிறது.

1950-லிருந்து ஐந்தாண்டுத் திட்டங்கள் காரணமாக வளர்ச்சிப் பணிகள் அதிகமான காரணத்தால், ரிசர்வ் பாங்கின் பணிகளும் அதிகமாகியுள்ளன. ஒரு காலத்தில், மைய வங்கிகள் செய்யக்கூடாத பணிகள் என்று கருதப்பட்ட சாதாரண வணிக வங்கிப் பணிகளைக்கூட ரிசர்வ் பாங்க் செய்தது, செய்து கொண்டும் வருகிறது. 1962-ல் வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு (Deposit Insurance Corporation), 1964-ல் 'யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா' ஆகிய நிறுவனங்களைத் தொடங்க, ரிசர்வ் பாங்க் பெரும் முயற்சிகளை மேற்கொண்டது. குறுகிய காலக் கடன் வசதிகள்

அளித்துக் கூட்டுறவு இயக்கத்தை வளர்ச்சியுறச் செய்கிறது. நீண்டகாலக் கடன்வசதி அளிப்பதற்காக, 1963-ல் வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு (Agricultural Refinance Corporation) அமைப்பதில், ரிசர்வ் பாங்க் மிகுந்த அக்கறை காட்டியது. தொழிற்கடன் வசதிகளைப் பெருக்குவதற்காகத் தொழில் நிதிக் கூட்டுரு (Industrial Finance Corporation), மாநில நிதியக் கூட்டுருக்கள் (State Financial Corporations), தொழில் வளர்ச்சி வங்கி (Industrial Development Bank), ஆகியவை, ரிசர்வ் பாங்கின் முழு முயற்சியால்தான் நிறுவப்பட்டன. இத்தகைய பலதரப்பட்ட முக்கியப் பணிகளைப் புரிகின்ற காரணத்தால், ரிசர்வ் பாங்க், அரசாங்கத்திற்குப் பொருளாதார மற்றும் பொதுப் பிரச்சினைகள் பற்றித் தன் மேலான ஆலோசனைகளைத் தெரிவிக்க முடிகிறது. வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின் (Banking Regulation Act) கீழ், விரும்பத்தகாத வங்கிச் செயல்களைத் தடுக்கவும், வைப்பாளர்கள் நலனைப் பாதுகாக்கவும், ரிசர்வ் பாங்குக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சிறு வங்கிகளைக் கட்டாய இணைப்புச் (compulsory amalgamation) செய்ய வைப்பதற்காக, 1960-ல், ரிசர்வ் பாங்க் அதிக அதிகாரங்களைப் பெற்றது. ஒரு சிலரால் வங்கிகள்மீது செலுத்தப்படும் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தவும், கம்பெனிகளுக்குக் கொடுக்கும் கடன் மற்றும் உத்தரவாத வசதிகளைக் கட்டுப்படுத்தவும், வங்கிகளில் சில அதிகாரிகளை நியமிக்கவும், நீக்கவும், 1964 பிப்ரவரி 1ஆம் நாள் முதல், ரிசர்வ் பாங்க் மேலும் சில அதிகாரங்களைப் பெற்றது.

கடந்த சில ஆண்டுகளில், வங்கிகளின் வளர்ச்சி மிக வேகமாக இருந்தபோதிலும், அதில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. கிராமப்புறங்களில் வங்கிகள் தங்கள் கிளைகளை ஆரம்பிக்கத் தயங்குதல், நகர்ப்புறங்களிலேயே மேலும் மேலும் கிளைகளை ஆரம்பித்தல், விவசாயம், சிறுதொழில், ஏற்றுமதி போன்ற முந்துரிமைத் துறைகளை (Priority sectors) அலட்சியம் செய்துவிட்டு மிகப்பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கும், பெரிய தொழில் நிறுவனங்களுக்கும் மட்டுமே கடன் வசதி அளித்தல் போன்ற சில குறைபாடுகள் காணப்பட்டன. இக் குறைபாடுகளை நீக்குவதற்காக, 1967 டிசம்பரில் வங்கிகளின்மீது சமுதாயக் கட்டுப்பாடு (Social control) கொண்டு வரப்பட்டது. பொருளாதாரம், சட்டம், கூட்டுறவு, கிராமியப் பொருளாதாரம் (Rural economy) துறைகளில் வல்லுநர்களாக இருப்பவர்கள் வங்கிகளின் இயக்குநர் அவைகளில் (அரசால்) உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு, இயக்குநர் அவைகள் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டன. வங்கியியலில் தேர்ந்த வல்லுநர்களே,

இயக்குநர் அவையின் தலைவராக நியமிக்கப்பட்டனர். வங்கி நிருவாகங்கள்மீது, ரிசர்வ் பாங்கு, தன் முழு அதிகாரத்தைச் செலுத்தியது. 1968 பிப்ரவரியில், நிதியமைச்சரைத் தலைவராகவும், ரிசர்வ் பாங்கின் ஆளுநரைத் துணைத் தலைவராகவும், தொழில், வியாபாரம், வேளாண்மை, வணிக வங்கிகள், கூட்டுறவு ஆகிய துறைகளின் சார்பில் பிரதிநிதிகளும் கொண்ட தேசியக் கடன் குழு (National Credit Council) ஒன்று, அவ்வப்போது வங்கிக் கடன் தேவைகளைப் பரிசீலிப்பதற்காக அமைக்கப்பட்டது. ஆனால், சமுதாயக் கட்டுப்பாடு அவ்வளவு வெற்றிகரமாக அமையாததால், 1969 ஜூலை 19ஆம் நாள், 14 பெரிய வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டு, ரிசர்வ் பாங்குக்கு, மேலும் சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன.

ரிசர்வ் பாங்கின் முக்கியப் பணிகளான பணத்தாள் வெளியிடல், அரசாங்க வங்கியாகப் பணிபுரிதல், செலாவணியைக் கட்டுப்படுத்தல், வங்கிகளை மேற்பார்வையிடுதல், கிராமியக் கடன் வசதி அளித்தல், தொழிற்கடன் வசதி அளித்தல், வெளிநாட்டுச் செலாவணியை நிருவகித்தல் ஆகியவை, பின்வரும் அத்தியாயங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

# 2. ரிசர்வ் பாங்கின் பணத்தாள் வெளியிடும் அதிகாரம்

உலகில் உள்ள மற்ற மைய வங்கிகளைப் போலவே, ரிசர்வ் பாங்கும், பணத்தாள்கள் வெளியிடும் தனி உரிமையைப் பெற்றிருக்கிறது. பணத்தாள்கள் மற்றும் கடன்மீது, ரிசர்வ் பாங்க் கட்டுப்பாட்டு உரிமையைப் பெற்றிருக்க வேண்டும் என்பதற்காக ரிசர்வ் பாங்கிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒரு ரூபாய்த் தாள்கள், நாணயங்கள் மற்றும் துணை நாணயங்கள் தவிர மற்ற எல்லாப் பணத்தாள்களையும் வெளியிடும் உரிமையை ரிசர்வ் பாங்க் பெற்றிருக்கிறது. வங்கி வசதிகளும், வங்கிப் பழக்க வழக்கங்களும் முன்னேறிய போதிலும், பணத்தாள்களின் பங்கு அப்படியொன்றும் கணிசமாகக் குறைந்துவிடவில்லை. ரிசர்வ் பாங்க், தனது தொடக்கக் காலத்தில், அரசாங்க வங்கியாகவும், பணத்தாள்கள் வெளியிடும் வங்கியாகவுமே பெரும்பாலும் பணியாற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

## சட்ட சம்பந்த சரத்துகள் (Legal Provisions)

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 22-ன் கீழ், இந்தியாவில் பணத்தாள் வெளியிடும் தனி அதிகாரத்தை ரிசர்வ் பாங்க் பெற்றிருக்கிறது. பிரிவு 38-ல் கூறப்பட்டுள்ளபடி மத்திய அரசாங்கம் ரிசர்வ் பாங்க் மூலம் மட்டுமே ஒரு ரூபாய்த் தாள்களையும், நாணயங்களையும் புழக்கத்தில் விடவேண்டும். ரிசர்வ் பாங்க் சட்டத்தில் உள்ளபடி, மத்திய அவையின் பரிந்துரையின் பேரில் ரூபாய் இரண்டு, ஐந்து, பத்து, இருபது, ஐம்பது, நூறு, ஐந்நூறு, ஆயிரம், ஐந்தாயிரம், பத்தாயிரம் ஆகிய பணத்தாள்களையும், மத்திய அவையின் பரிந்துரையின்பேரில் மத்திய அரசு குறிப்பிடும் பிற மதிப்புள்ள பணத்தாள்களையும் ரிசர்வ் பாங்க் வெளியிடலாம். தற்போது ஐம்பது ரூபாய், ஐந்நூறு ரூபாய் பணத்

தாள்களைத் தவிர மற்ற எல்லாப் பணத்தாள்களும் வெளியிடப் படுகின்றன. ஆயிரம் ரூபாய், பத்தாயிரம் ரூபாய்த்தாள்கள் 1946-ல் ரிசர்வ் பாங்கால் புழக்கத்திலிருந்து எடுக்கப்பட்டு, 1954-ல்தான் புழக்கத்தில் திரும்பவும் விடப்பட்டன.

1935-ல் ரிசர்வ் பாங்க் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், 1938 சனவரியில்தான் ரிசர்வ் பாங்க் முதன் முதலில் பணத்தாள்களை வெளியிட ஆரம்பித்தது. முதன் முதலில் 5 ரூபாய், 10 ரூபாய்த் தாள்களை மட்டுமே வெளியிட்டது. பின்னர்தான் 100, 1000, 10000 ரூபாய்த் தாள்களை வெளியிட்டது. நீண்ட நாள்களுக்கு அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட பணத்தாள்களும் புழக்கத்தில் இருந்தன.

1973 மார்ச் திங்கள் இறுதியில் 559018 லட்ச ரூபாய்க்குப் பணத்தாள்களும் நாணயங்களும் வெளியிடப்பட்டிருந்தன. இதில் ஒரு ரூபாய்த் தாள்கள் 5·46 சதவீதமும், இரண்டு ரூபாய்த் தாள்கள் 6·65 சதவீதமும், பத்து ரூபாய்த் தாள்கள் 31·43 சத வீதமும், நூறு ரூபாய்த் தாள்கள் 50·94 சதவீதமும், ஆயிரம் ரூபாய்த் தாள்கள் 0·78 சதவீதமும், ஐயாயிரம் ரூபாய்த் தாள்கள் 0·34 சதவீதமும், பத்தாயிரம் ரூபாய்த் தாள்கள் 0·18 சதவீதமும் சிறு நாணயங்கள் 2·97 சதவீதமுமாக இருந்தன.

1970-ல் மகாத்மா காந்தி நூற்றாண்டு விழா பத்து ரூபாய் நாணயங்களை (Mahathma Gandhi Centenary Ten Rupee coins) 122 இலட்ச ரூபாய்க்கு ரிசர்வ் பாங்க் வெளியிட்டது. 1971, 1972-லும் இத்தகைய நாணயங்கள் வெளியிடப்பட்டன. 1973-ல் மொத்தம் 256 இலட்ச ரூபாய்க்கு, இத்தகைய நாணயங்கள் வெளியிடப்பட்டிருந்தன. 1971-ல் உலக உணவு மற்றும் வேளாண்மைச் சங்க நினைவுப் பத்து ரூபாய் நாணயங்கள் (World Food and Agriculture Organisation, Commemorative Ten Rupee coins) 30 இலட்ச ரூபாய்க்கு வெளியிடப்பட்டன. 1973 மார்ச் வரை வெளியிடப்பட்ட இத்தகைய நாணயங்களின் மதிப்பு, ரூபாய் 37 இலட்சம். 1973-ல் விடுதலைநாள் வெள்ளிவிழா நினைவுப் பத்து ரூபாய் நாணயங்கள் (Independence Day Silver Jubilee Commemorative Ten Rupee coins) 103 இலட்ச ரூபாய் மதிப்பிற்கு வெளியிடப்பட்டன.

பணத்தாள்களின் அமைப்பு, நிறம் ஆகியவை மத்திய அரசால் முடிவு செய்யப்படுகின்றன. பணத்தாள்களைப் புழக்கத்தில் விடுதல், புழக்கத்தில் இருக்கும் பணத்தாள்களைத் திரும்பவும் எடுத்துக்கொள்ளுதல் ஆகிய பணிகளைப் புரிவதோடல்லாமல்

பணத்தாள்களையும், நாணயங்களையும், பிற மதிப்புள்ள பணத் தாள்களாகவோ அல்லது நாணயங்களாகவோ மாற்றுவதற்கான வசதிகளையும், ரிசர்வ் பாங்க் அளிக்கிறது.

## பணம் வெளியிடும் துறை (Issue Department)

பணம் வெளியிடும் துறை என்ற ஒரு தனித் துறைமூலம், ரிசர்வ் பாங்க் பணத்தை வெளியிடுகிறது. பணம் வெளியிடும் அலுவலைக் கவனிக்கப் பணம் வெளியிடும் துறையும், வங்கியியல் அலுவல்களைக் கவனிக்க வங்கியியல் துறையும் ரிசர்வ் பாங்கில் இருப்பது, பாங்க் ஆஃப் இங்கிலாந்தில் நிலவும் முறையை ரிசர்வ் பாங்க் ஏற்றுக்கொண்ட ஒன்றாகும். இங்கிலாந்தில் அவ்வாறு இருப்பதற்கே, மாக்மில்லன் குழு (Macmillan Committee) தனது எதிர்ப்புகளைத் தெரிவித்துள்ளது. டாக்டர் முரஞ்சன் (Dr. S.K. Muranjan) கூட, பணம் வெளியிடும் துறை, வங்கியியல் துறை ஆகியவற்றின் சொத்துகள் தனித்தனியாக வைக்கப்பட்டிருப்பது சரியில்லை என்று கருத்துத் தெரிவித்துள்ளார். ஆனால், ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 23-ல் கூறப்பட்டுள்ளபடி, பணம் வெளியிடும் துறையின் சொத்துகளும் வங்கியியல் துறையின் சொத்துகளும் தனித்தனியாக வைத்திருக்கப்பட வேண்டும். பணத்தைப் புழக்கத்தில் விடுதல், புழக்கத்திலிருந்து திரும்பவும் எடுத்துக்கொள்ளுதல் ஆகியவை வங்கியியல் துறை மூலம் நடைபெறுகின்றன. ஆனால், பணத்தாள்களுக்குப் பதில் நாணயங்களும், நாணயங்களுக்குப் பதில் பணத்தாள்களும், ஒரு மதிப்புள்ள தாள்களுக்குப் பதில் பிற மதிப்புள்ள பணத்தாள்களும் அளித்தல் ஆகிய பணிகள், பணம் வெளியிடும் துறையால் கவனிக்கப்படுகின்றன.

## பணம் வெளியிடும் துறையின் சொத்துகள்

இத் துறை தன் வசம் தங்க நாணயங்கள், தங்கக் கட்டிகள், பிறநாட்டு ஆவணங்கள், ரூபாய் நாணயங்கள், இந்திய அரசாங்கத்தின் ரூபாய் ஆவணங்கள், இந்தியாவில் செலுத்தப்பட வேண்டிய மாற்று உண்டியல்கள், உறுதிப் பத்திரம் ஆகியவற்றைச் சொத்துகளாக வைத்திருக்கிறது. இந்தச் சொத்துகளின் மதிப்பு, இத் துறையின் கடன் பொறுப்புகள் தொகைக்குக் குறையாத மதிப்பளவிற்கு இருக்கவேண்டும். ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், 1934-ல் கூறப்பட்டுள்ளபடி, மேற்கூறப்பட்ட சொத்தில், 40 சதவீதத்தைத் தங்க நாணயம், தங்கக் கட்டிகள் மற்றும் ஸ்டர்லிங் ஆவணங்கள் ஆகிய வடிவில் ரிசர்வ் பாங்க் வைத்திருத்தல் வேண்டும்.

அப்படி வைத்திருக்கும் தங்க நாணயம் மற்றும் தங்கக் கட்டிகளின் மதிப்பு, 40 கோடி ரூபாய்க்குக் குறையக் கூடாது. மீதமுள்ள சொத்துகள் (40 சதவீதம் நீங்கலாக) ரூபாய் நாணயங்கள், இந்திய அரசாங்கத்தின் ரூபாய் ஆவணங்கள், ரிசர்வ் பாங்க் வாங்கத் தகுதி பெற்ற மாற்று உண்டியல்கள், உறுதிப் பத்திரங்கள் ஆகிய வடிவில் உள்ளன. ஆனால், இந்திய அரசாங்கத்தின் ஆவணங்களின் மதிப்பு, மொத்தச் சொத்து மதிப்பில் நான்கில் ஒரு பங்கு அல்லது 50 கோடி ரூபாய் — இவ் விரண்டில் எது குறைவோ அதற்கு அதிகமாக இருக்கக்கூடாது என்று இருந்த நிபந்தனை 1951-ல் நீக்கப்பட்டது. தங்க நாணயங்களையும், தங்கக் கட்டிகளையும் ரிசர்வ் பாங்க் தனது பொறுப்பிலோ அல்லது தனது முகவரின் பொறுப்பிலோ வைத்திருக்கவேண்டும். ஸ்டர்லிங் ஆவணங்களாவன:

(1) பாங்க் ஆஃப் இங்கிலாந்தில், ரிசர்வ் பாங்கின் பணம் வெளியிடும் துறையின் வரவில் உள்ள ரொக்க இருப்புகள்.

(2) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நல்ல கையெழுத்துகளைப் பெற்று, இங்கிலாந்தில் செலுத்தப்பட வேண்டிய, 90 நாள்களுக்கு அதிகமாகாத கால முதிர்வைப் பெற்ற மாற்று உண்டியல்கள்.

(3) ஐந்து ஆண்டுகளுக்குள் முதிர்வடையக் கூடிய இங்கிலாந்து அரசாங்கத்தின் ஆவணங்கள்.

## பண வெளியீட்டுத் திட்டம்

பண வெளியீட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரை பாங்க் ஆஃப் இங்கிலாந்தைப்போல் வரையறை செய்யப்பட்ட நம்பிக்கைத் திட்டத்தைப் (Fixed Fiduciary System) பின்பற்றாமல் வீதாச்சாரக் காப்புத் திட்டத்தையே (Proportional Reserve System) ரிசர்வ் பாங்க் பின்பற்றியது. வீதாச்சாரக் காப்புத் திட்டத்தைப் பின்பற்றிப் பணம் வெளியிடும் பிற நாடுகளின் பட்டறிவைக் கருத்தில் கொண்டு, 1927-ல், ஹில்டன் யங் குழு (Hilton Young Commission) பரிந்துரை செய்தபடி, குறைந்த அளவு 40 சதவீதம் தங்கம், தங்க ஆவணங்கள் (பின்னர்ப் பிறநாட்டு ஆவணங்களும்) ஆகியவை கூடிய காப்புடன் வீதாச்சாரக் காப்புத் திட்டம் சுமார் 20 ஆண்டுகளாக இந்தியாவில் கையாளப்பட்டது. செலாவணி நெகிழ்ச்சியே, இத் திட்டத்தின் சிறப்பு இயலாகும். செலாவணியைப் பெருக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்படும்போது,

குறைந்த அளவு தங்கத்தைக் காப்பாக வைத்திருந்தால் போது மானது. ஆனால், தங்கக் காப்பின் அளவு குறையும்போது, புழக்கத் திலுள்ள செலாவணியின் அளவு பன்மடங்கு குறைக்கப் படுவதால், இத் திட்டம் அவ்வளவு பயனுள்ளதாக அமையவில்லை. ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் பொருளாதார முன்னேற்றம் காரணமாகச் செலாவணிப் பெருக்கத்தின் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டது. ஆகவேதான், 1956-ல், ரிசர்வ் பாங்க் சட்டம் திருத்தப்பட்டு, 1956 அக்டோபர்த் திங்கள் ஆறும் நாளிலிருந்து 400 கோடி ரூபாய் வெளிநாட்டு ஆவணங்களும், 115 கோடி ரூபாய் தங்க நாணயங்கள், தங்கக் கட்டிகள் ஆகியவை கூடிய குறைந்த அளவு காப்புத் திட்டத்தை (Minimum Reserve System) ரிசர்வ் பாங்க் கையாளத் தொடங்கியது. 1956 அக்டோபர்த் திங்கள் ஆறும் தேதிக்கு முன்னர், பணம் வெளியிடும் துறையில் இருந்த தங்கமானது, ஒரு தோலா தங்கம் ரூ. 21-24 ஆக மதிப்பிடப் பட்டது. திருத்தப்பட்ட, சட்ட விதிப்படி, ஒரு தோலா தங்கம் ரூ. 62-50 ஆக, மறு மதிப்பீடு செய்யப்பட்டது. அதன்படி, பணம் வெளியிடும் துறையில் இருந்த 40·02 கோடி ரூபாய் மதிப்புத் தங்கம், 117·76 கோடி மதிப்புள்ள தங்கமாக மறு மதிப்பீடு செய்யப்பட்டு, அதனால் ஏற்பட்ட இலாபம் ரிசர்வ் பாங்க் காப்பு நிதிக்கு மாற்றப்பட்டது. தங்கம் மறு மதிப்பீடு செய்யப்பட்ட காரணத்தினால், குறைந்த அளவு தங்கக் காப்பு, 115 கோடி ரூபாய்க்குப் பதிலாக, 400 கோடி ரூபாய் மதிப்பிற்கு இருக்க வேண்டும் என்று மாற்றியமைக்கப்பட்டது. 1957 அக்டோபர் 31 ஆம் நாள், ரிசர்வ் பாங்க் சட்டம் திருத்தியமைக்கப்பட்டபடி, பணம் வெளியிடும் துறையில் உள்ள தங்க நாணயங்கள், தங்கக் கட்டிகள், வெளிநாட்டு ஆவணங்கள் ஆகியவற்றின் மொத்த மதிப்பு, எந்த ஒரு நேரத்திலும், 200 கோடி ரூபாய்க்குக் குறையக் கூடாது. இந்த 200 கோடியில் குறைந்தது 115 கோடி ரூபாய் மதிப்பிற்குத் தங்க நாணயங்களும் தங்கக் கட்டிகளும் இருத்தல் வேண்டும். 1966 ஜூன் மாதத்தில் ஏற்பட்ட ரூபாய் மதிப்புக் குறைப்பின்(Rupee Devaluation)போது பணம் வெளியிடும் துறையில் இருந்த தங்கம் ஒரு தோலா ரூ. 98-44 ஆக மதிப்பிடப் பட்டது. இதனால், இத் துறையில் இருந்த 115·89 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம், 182·53 கோடி ரூபாய் மதிப்புள்ளதாக மறு மதிப்பீடு செய்யப்பட்டதால் ஏற்பட்ட இலாபம், ரிசர்வ் பாங்க் காப்பு நிதிக்கு மாற்றல் செய்யப்பட்டது.

## பணப் பெட்டகங்கள் (Currency Chests)

செலாவணி சம்பந்தப்பட்ட அலுவல்களைக் கவனிப்பதற் காகப் பணத்தாள் வெளியிடும் துறையின் பத்து அலுவலகங்கள்

பெங்களூர், பம்பாய், பைகுலா (பம்பாய்), கல்கத்தா, ஹைதரா பாத், கான்பூர், சென்னை, நாக்பூர், புதுடில்லி, பாட்னு, கௌஹாத்தி (கௌஹாத்தியில் உள்ளது துணை அலுவலகம்) ஆகிய இடங்களில் உள்ளன. நாட்டின் எல்லா முக்கிய இடங் களிலும் பணப் பெட்டகங்கள் உள்ளன. பணத்தாள் வெளியிடும் துறையின் அலுவலகங்கள் இல்லாத இடங்களில் ரிசர்வ் பாங்கின் முகவராக (Agent) செயலாற்றும் ஸ்டேட் பாங்கிலும் அதன் கிளைகளிலும், ஸ்டேட் பாங்க் இல்லாத இடங்களில் அரசாங்கக் கருவூலங்களிலும், துணைக் கருவூலங்களிலும் பணப் பெட்டகங்கள் உள்ளன. கருவூலங்களிலும், துணைக் கருவூலங்களிலும் உள்ள பணப் பெட்டகங்களைப் பாதுகாப்பது அந்தந்த மாநில அரசுகளின் பொறுப்பாகும். ஸ்டேட் பாங்கிலும், அதன் கிளைகளிலும் உள்ள பணப் பெட்டகங்களைப் பாதுகாப்பது ஸ்டேட் பாங்கின் பொறுப்பாகும்.

ஸ்டேட் பாங்க் அல்லது மாநில அரசுகள் அதிகமான பணப் பெட்டகங்கள் தேவை என்று கேட்டால், மத்திய அரசு அனுமதித்த பின்னர், அதற்கு ஏற்ற வசதிகளை ரிசர்வ் பாங்க் செய்து கொடுக் கிறது. துணை நாணயங்களை விநியோகிப்பதற்காக, பணத்தாள் வெளியிடும் துறை, சிறு நாணயங்கள் டெப்போக்களை (small coins depots) ஸ்டேட் பாங்க், ஸ்டேட் பாங்க் கிளைகள், கருவூலங்கள், துணைக் கருவூலங்கள் ஆகியவற்றில் வைத்திருக்கிறது.

பணப் பெட்டகங்களில், புதிய மற்றும் திரும்பவும் புழக்கத்தில் விடக் கூடிய நோட்டுகளும், ரூபாய் நாணயங்களும் இருக்கின்றன. ரூபாய் நாணயங்களுக்குப் பதில் பணத்தாள்களை அளித்தல், உயர்ந்த இன ரூபாய்த் தாள்களுக்கு (higher denomination notes) குறைந்த இன ரூபாய்த் தாள்களாக (lower denomination notes) மாற்றும் வசதிகளை அளித்தல் அல்லது குறைந்த இனப் பணத்தாள்களுக்குப் பதில் உயர்ந்த இனப் பணத் தாள்களை அளித்தல், பழைய மற்றும் அழுக்கடைந்த பணத்தாள் களுக்குப் பதில் புதிய பணத்தாள்களைக் கொடுத்தல் ஆகிய பணிகளைப் புரிய, பணப் பெட்டகங்கள் உதவி புரிகின்றன. தன் முகவர் வங்கிகள் மற்றும் துணை முகவர் வங்கிகளிடம் இருக்கும் பணப் பெட்டகங்களில் உள்ள இருப்புகளை ரிசர்வ் பாங்கே தேவைப்பட்டபோது சரிபார்த்துக் கொள்கிறது. அரசாங்கக் கருவூலங்களிலும், துணைக் கருவூலங்களிலும் உள்ள பணப்பெட்ட கங்களின் இருப்புகளைச் சரிபார்க்க, மாவட்ட ஆட்சியாளர் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறார். மேலும் முகவர், துணை முகவர் வங்கிகளில் இருக்கும் கண்காணிப்பு அதிகாரிகள், அவ்வப்போது

பணப் பெட்டக இருப்புகளைச் சரிபார்த்து அதற்கான அறிக்கையை ரிசர்வ் பாங்குக்கு அனுப்பி வைக்கிறார்கள். கருவூலத்தில் அல்லது ரிசர்வ் பாங்கின் முகவர் வங்கியில் ஒரு பணப் பெட்டகம் உள்ளது. இவ் வசதியிருப்பதால் பணம் தேவைப்படும்போது பணத்தைப் பணப் பெட்டகத்திலிருந்து எடுத்துக் கொள்ளவும், அதிகப் பணம் இருக்கும்போது அவற்றைப் பணப் பெட்டகத்தில் வைத்துவிடவும் முடிகிறது. இதனால், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செய்யப்படும் அனாவசியமான பணமாற்றங்களைத் தவிர்க்க முடிகிறது. இத்தகைய வசதிகளைப் பணப் பெட்டகங்கள் மூலம் பெற முடிவதால், மத்திய, மாநில அரசுகள், ஸ்டேட் பாங்க் ஆகியவை குறைந்த பட்ச ரொக்க நிலுவைகளுடன் செயலாற்ற முடிகின்றன. பணப் பெட்டகங்களில் வைக்கப்படவேண்டிய பணத்தாள்கள், நாணயங்களின் இருப்பு ஆகியவை, பணப் பெட்டகங்கள் எந்த இடத்தில் இருக்கின்றனவோ அந்த இடத்தின் தேவையைப் பொறுத்ததாகும். அவ்வப்போது பணப் பெட்டகங்களின் தேவைகளுக்கேற்ப, பணத்தாள் வெளியிடும் துறை, தேவையான பணத்தாள்களையும் நாணயங்களையும் அனுப்பி வைக்கிறது. ஒவ்வோர் அரையாண்டு முடிவிலும் ரிசர்வ் பாங்கின் முகவர் வங்கிகள், துணை முகவர் வங்கிகள், கருவூலங்கள் ஆகியவை, தங்களுக்குத் தேவையான பணத்தாள்கள் மற்றும் நாணயங்கள் பற்றி, ரிசர்வ் பாங்குக்குத் தெரியப்படுத்துகின்றன. அவற்றிடம் இருக்கும் இருப்பு மற்றும் பிற தேவைகளைப் பரிசீலித்த பிறகு, ரிசர்வ் பாங்க் தேவையான பணத்தாள்களையும், நாணயங்களையும் அவற்றுக்கு அனுப்பி வைக்கிறது.

பணப் பெட்டகங்களில் இருக்கும் பணத்தாள்கள் புழக்கத்தில் உள்ள நோட்டுகளாகக் கருதப்பட மாட்டா. ஆனால், ரூபாய் நாணயங்கள், பணத்தாள் வெளியிடும் துறையின் சொத்துகளாகக் கருதப்படும்.

## பணப் பருவக் காலங்கள்

பணப் புழக்கம் எப்போதும் ஒரே சீராக இருப்பதில்லை. சில சமயம் மிக அதிகமான பணமும், சில சமயம் குறைந்த அளவு பணமும் புழக்கத்திற்குத் தேவைப்படுகிறது. அதிகப்பணம் தேவைப்படும் கால அளவை மும்முரப் பருவம் (Busy season) என்றும், குறைந்த பணம் தேவைப்படும் கால அளவை மந்தப் பருவம் (Slack season) என்றும் அழைக்கிறார்கள். மும்முரப் பருவம், நவம்பரில் ஆரம்பித்து ஏப்ரல்வரை தொடர்கிறது. மந்தப் பருவம், மே மாதத்திலிருந்து அக்டோபர்வரை ஆகும்.

## மும்முரப் பருவம்

மும்முரப் பருவத்தின்போது வணிகர்களும், வியாபாரிகளும் வங்கிகளிடமிருந்து கடன் வாங்கியோ அல்லது வங்கியில் தங்கள் கணக்கில் உள்ள பணத்தை எடுத்தோ தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுகிறார்கள். இத்தகைய அதிகப் பணத் தேவையை, வங்கிகள், தாங்கள் ரிசர்வ் பாங்கில் வைத்துள்ள கணக்கிலிருந்து பணம் எடுத்தோ, அல்லது தங்கள் முதலீடுகளை ரிசர்வ் பாங்கிடமோ அல்லது வெளிச்சந்தையில் விற்பதன் மூலமாகவோ அல்லது ரிசர்வ் பாங்கிடம் கடன் வாங்கியோ சந்திக்கின்றன. பெருகும் பணத்தேவையை இவ்வாறு பூர்த்தி செய்வதின் காரணமாக, வங்கியியல் துறையின் மொத்தப் பண இருப்பு குறைகிறது. இக் குறைவை நிறைவு செய்ய, தன்னிடம் உள்ள சொத்துகளான ரூபாய் ஆவணங்கள், பிறநாட்டு ஆவணங்கள் ஆகியவற்றைப் பணத்தாள் வெளியிடும் துறையிடம் கொடுத்துவிட்டுத் தேவையான பணத்தை வங்கியியல் துறை பெற்றுக் கொள்கிறது. பொதுமக்களின் அதிகப் பணத்தேவை, கடைசியில், படிப்படியாக, அதிகப் பணப்புழக்கத்தில் போய் முடிகிறது என்று இதன்மூலம் விளங்குகிறது.

## மந்தப் பருவம்

மந்தப் பருவத்தின்போது, பொது மக்களுக்கு அவ்வளவு பணத்தேவை இல்லாததால், அவர்கள் வங்கிகளிடமிருந்து கடன் வாங்கியிருந்தால் அவற்றைத் திருப்பிக் கொடுக்கிறார்கள். அல்லது தேவைக்கும் அதிகமாக இருக்கும் பணத்தைத் தங்கள் வங்கிக் கணக்குகளில் போட்டு வைக்கிறார்கள். இப்படி அதிகப் படியாக வந்து சேரும் பணத்தை, வங்கிகள், தாங்கள் ரிசர்வ் பாங்கிடம் வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்கவோ அல்லது வங்கியியல் துறையில் தங்களுக்கு உள்ள கணக்குகளில் அதிகப் பணத்தைச் செலுத்தவோ ரிசர்வ் பாங்கில் சட்டப்படி வைப்பதற்கான ரொக்க இருப்புக்குத் தேவையான பணத்தைச் செலுத்தவோ பயன்படுத்துகின்றன. வங்கிகளின் இத்தகைய செயல்களால், ரிசர்வ் பாங்கின் வங்கியியல் துறையில் அதிகப் பணம் குவிகிறது. வங்கியியல் துறை, தன்னிடம் இவ்வாறு வந்து சேரும் தேவைக்கும் அதிகமாக இருக்கும் பணத்தைப் பணத்தாள் வெளியிடும் துறையிடம் செலுத்துகிறது. வங்கியியல் துறை பணத் தாள்களுக்குப் பதில் சொத்துகளையும், பணத்தாள் வெளியிடும் துறை சொத்துகளுக்குப் பதில் பணத்தாள்களையும் மாற்றிக் கொள்கின்றன. இத்தகைய தொடர் நிகழ்ச்சிகளால் புழக்கத்தில் இருக்கும் பணத்தின் அளவு குறைகிறது. இவ்வாறுதான், மந்தப் பருவத்தின்போது, பணப்புழக்கத்தில் மாறுதல்கள் ஏற்படுகின்றன.

## பொதுமக்களிடம் உள்ள பண அளிப்பு (Money supply with the public)

பொது மக்களிடம் உள்ள பண அளிப்பில் பருவக்காலங்களில் ஏற்படும் மாறுதல்களைக் (அட்டவணை 1) கவனிக்கும்போது, (1) பொதுமக்களிடம் உள்ள செலாவணி (Currency with the public), (2) ரிசர்வ் பாங்கிடம் உள்ள வைப்புகள், (3) வங்கிப் பணம் ஆகியவை அடங்கிய பொதுமக்களிடம் உள்ள பண அளிப்பில், மும்முரப் பருவத்தின்போது பெருக்கமும், மந்தப் பருவத்தின்போது சுருக்கமும் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். 1972-73 மும்முரப் பருவத்தில் ஏற்பட்ட பெருக்கம், எல்லா மும்முரப் பருவங்களில் ஏற்பட்ட பெருக்கங்களைவிட மிக அதிக மானது என்பதும் தெரிய வருகிறது.

## அட்டவணையிலிடப்பட்ட வங்கிகளின் சொத்துகளிலும் பொறுப்புகளிலும் மாறுதல்கள்

மேற்கூறப்பட்ட மாறுதல்கள் அட்டவணையிலிடப்பட்ட வணிக வங்கிகளின் குறிப்பிட்ட சில முக்கியமான பொறுப்பு களிலும் சொத்துகளிலும் பருவக் காலங்களில் ஏற்படும் மாறுதல் களைக் கவனித்தால் மேலும் நன்ருக விளங்கும் (அட்டவணை 2). மந்தப் பருவத்திலும் மும்முரப் பருவத்திலும் நிகரக் கேட்பு வைப்புகளில் ஏற்பட்ட மாறுதல்களைப் பத்தி 1 மூலமும், நிகரத் தவணை வைப்புகளில் ஏற்பட்ட மாறுதல்களைப் பத்தி 2 மூலமும், மொத்த வைப்புகளில் ஏற்பட்ட மாறுதல்களைப் பத்தி 3 மூலமும் அறியலாம். பத்தி 4ல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிவரங்களின் படி மும்முரப் பருவத்தின்போது வங்கிகள் ரிசர்வ் பாங்கிடமிருந்து அதிகமாகக் கடன் பெற்றன என்பதும் மந்தப் பருவத்தின்போது ரிசர்வ் பாங்கிடம் பெற்ற கடன்களைத் திருப்பிக்கொடுத்தன என்பதும் தெரிய வருகிறது. கையிருப்பு ரொக்கமும், ரிசர்வ் பாங்கிடம் வங்கிகள் வைத்துள்ள ரொக்க இருப்புகளும் மந்தப் பருவத்தின்போது அதிகமாகவும், மும்முரப் பருவத்தின்போது குறைவாகவும் உள்ளன (பத்தி 5). இதனுல்தான், ரொக்க–வைப்பு வீதம் (Cash-deposit ratio) மந்தப் பருவத்தின்போது அதிகமாகவும், மும்முரப் பருவத்தின்போது குறைவாகவும் உள்ளது (பத்தி 6). அரசாங்க ஆவணங்களில் வங்கிகள் செய்யும் (முதலீடுகள் மந்தப் பருவத்தின்போது அதிகமாகவும், மும்முரப் பருவத்தின்போது) அம் முதலீடுகளை விற்று விடுவதாலோ அல்லது அவற்றின்மீது கடன் வாங்குவதாலோ முதலீடுகளின் அளவு குறைவாக உள்ளது (பத்தி 7). இதனுல்தான் முதலீடு-வைப்பு வீதம் (Investment-deposit ratio) மந்தப் பருவத்தின்போது

அதிகமாகவும், மும்முரப் பருவத்தின்போது குறைவாகவும் உள்ளது (பத்தி 8). மிக முக்கியமான மாறுதலை, வங்கிகள் கொடுத்த கடனின்மூலம் காணலாம். மந்தப் பருவத்தில் குறைந்த அளவு கடனையும், மும்முரப் பருவத்தில் மிக அதிக அளவு கடனையும் வங்கிகள் கொடுத்துள்ளன என்பது பத்தி 9-ல் உள்ள புள்ளி விபரங்கள் தெளிவாக்குகின்றன. இதனால்தான், கடன்—வைப்பு வீதம் (Credit-deposit ratio) மந்தப் பருவத்தின் போது குறைவாகவும், மும்முரப் பருவத்தின்போது அதிகமாகவும் உள்ளது (பத்தி 10).

## அட்டவணை 1

### பருவக் காலங்களில் பொது மக்களிடம் உள்ள பண அளிப்பில் மாறுதல்கள்

### (Seasonal variations in Money Supply with the Public)

(ரூபாய் கோடிக் கணக்கில்)

| | 1960-61 | | 1965-66 | | 1970-71 | | 1971-72 | | 1972-73 | | 1973-74 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மந்தப் பருவம் | மும்முரப் பருவம் | மந்தப் பருவம் | மும்முரப் பருவம் | மந்தப் பருவம் | மும்முரப் பருவம் | மந்தப் பருவம் | மும்முரப் பருவம் | மந்தப் பருவம் | மும்முரப் பருவம் | மந்தப் பருவம் | மும்முரப் பருவம் |
| பொது மக்களிடம் உள்ள பண அளிப்பு | —80 | +235 | —43 | +482 | +145 | +581 | +166 | +795 | +80 | +1278 | +319 | +1266 |
| 1. பொது மக்களிடம் உள்ள செலாவணி | —89 | +205 | —101 | +349 | —33 | +484 | —28 | +443 | —170 | +934 | +93 | +786 |
| 2. ரிசர்வ் பாங்கிடம் உள்ள பிற வைப்புகள் | +4 | —6 | —18 | +6 | +10 | —23 | —1 | +26 | —10 | —21 | —11 | +3 |
| 3. வங்கிப் பணம் | +6 | +36 | +76 | +126 | +168 | +201 | +195 | +326 | +259 | +365 | +237 | +476 |

## அட்டவணை 2

## அட்டவணை 2

பருவக் காலங்களில் அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளின்
முக்கிய சொத்துகளிலும், பொறுப்புகளிலும் மாறுதல்கள் (ரூபாய் லட்சக் கணக்கில்)

| பருவக் காலம் | நிகர கேட்பு வைப்புகள் 1 | நிகர தவணை வைப்புகள் 2 | மொத்த வைப்புகள் 3 | ரிசர்வ் பாங்கிடம் பெற்ற கடன் 4 | கையிருப்பு ரொக்கமும் ரிசர்வ் பாங்கிடம் உள்ள இருப்புகளும் 5 | ரொக்க வைப்பு வீதம் 6 | அரசு ஆவணங்களில் முதலீடுகள் 7 | முதலீடு-வைப்பு வீதம் 8 | வங்கி கடன் 9 | கடன்-வைப்பு வீதம் 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மந்தப்பருவம் 1960 | +7,41 | —30,68 | —23,26 | —27,02 | +4,17 | 7·6 | —52,33 | 36·2 | —20,31 | 58·2 |
| மும்முரப்பருவம் 1960-61 | +52,68 | —43,34 | +9,34 | +21,53 | —23,24 | 6·3 | —126,32 | 29·4 | +198,53 | 68·3 |
| மந்தப்பருவம் 1965 | +79,99 | +97,92 | +177,90 | —122,81 | +21,60 | 6·5 | +138,61 | 30·5 | —93,37 | 71·7 |
| மும்முரப்பருவம் 1965-66 | +120,60 | +93,32 | +213,92 | +28,48 | +5,44 | 6·2 | —27,34 | 27·4 | +309,53 | 76·9 |
| மந்தப்பருவம் 1970 | +174,32 | +274,28 | +448,60 | —85,92 | +31,21 | 6·2 | +155,24 | 23·8 | +225,68 | 77·0 |
| மும்முரப்பருவம் 1970-71 | +190,22 | +245,29 | +435,51 | +40,15 | +12,34 | 6·0 | +39,12 | 22·7 | +394,16 | 78·0 |
| மந்தப்பருவம் 1971 | +201,66 | +421,88 | +623,54 | —172,05 | +58,53 | 6·3 | +208,50 | 23·7 | +162,78 | 73·1 |
| மும்முரப்பருவம் 1971-72 | +310,16 | +314,24 | +624,40 | +4,22 | +13,69 | 6·0 | +143,94 | 23·6 | +354,95 | 71·7 |
| மந்தப்பருவம் 1972 | +262,17 | +442,47 | +704,64 | —16,12 | +51,06 | 6·1 | +519,41 | 28·1 | +67,35 | 66·2 |
| மும்முரப்பருவம் 1972-73 | +335,74 | +475,84 | +811,58 | +17,55 | +52,60 | 6·1 | —89,57 | 24·5 | +896,94 | 70·3 |
| மந்தப்பருவம் 1973 | +251,40 | +647,36 | +898,76 | +56,17 | +464,47 | 10·4 | +186,79 | 24·1 | +345,65 | 67·4 |
| மும்முரப்பருவம் 1973-74 | +451,70 | +231,10 | +682,81 | +252,73 | —218,24 | 7·6 | +71,38 | 23·2 | +100,518 | 72·6 |

# 3. அரசாங்க வங்கியர்

## (Government Banker)

*1935-ல், ரிசர்வ் பாங்க் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், இம்பீரியல் பாங்க் ஆஃப் இந்தியா, அரசுக்கு வங்கியாகப் பணியாற்றி வந்தது. பணத்தாள் வெளியிடும் உரிமை இந்திய அரசாங்கத்திடமும், கடன்கட்டுப்பாடு இம்பீரியல் பாங்கிடமும் இருப்பது மிகப்பெரிய குறைபாடு என ஹில்டன் யங் குழு (Hilton Young Commission) கருத்துத் தெரிவித்தது. ரிசர்வ் பாங்க், தனது ஆரம்பக் காலத்தில், அரசுக்கு வங்கியாகவும், பணத்தாள் வெளியிடும் வங்கியாகவுமே, பெரும்பாலும், பணி புரிந்து வந்தது என்பது முன்பே குறிப்பிடப்பட்டது.*

### சட்ட சம்பந்த சரத்துகள்

*ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவுகள் 20, 21-ல் கூறப்பட்டுள்ளபடி மத்திய அரசாங்கத்தின் சார்பில் பணத்தைப் பெற்றுக் கொள்ளுதல், செலுத்துதல், பணம் அனுப்புதல், பொதுக்கடனை நிருவகித்தல் ஆகிய பணிகளை ரிசர்வ் பாங்க் செய்கிறது. பிரிவு 21Aயின்படி, மாநில அரசாங்கங்களுக்கும், மேற்கூறிய பணிகளை ரிசர்வ் பாங்க் செய்கிறது. பதிலுக்கு, மத்திய அரசும், மாநில அரசுகளும் ரிசர்வ் பாங்கிடமே இத்தகைய பணிகளை ஒப்படைக்க வேண்டும். ரிசர்வ் பாங்க் அலுவலகங்களோ அல்லது அதன் முகவரான (Agent) ஸ்டேட் பாங்க் கிளைகளோ இல்லாத இடங்களில், மத்திய அரசும், மாநில அரசுகளும் தங்களுடைய கருவூலங்கள் அல்லது துணைக் கருவூலங்களின்மூலம் மேற்கூறிய பணிகளைச் செய்துகொள்ளலாம்.*

### மத்திய, மாநில அரசுகளுடன் ஒப்பந்தம்

*ரிசர்வ் பாங்க், அரசாங்கங்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, இப் பணிகளைச்*

செய்து வருகிறது. முதன்முதலில், மத்திய அரசுடன் 1935 ஏப்ரல் திங்கள் 5ம் தேதி, ரிசர்வ் பாங்க் ஒப்பந்தம் செய்துகொண்டது. அத்தகைய ஒப்பந்தத்தின்படி அரசாங்கத்திற்கு வங்கிப் பணிகளைச் செய்து, அதற்கான கணக்குகளை ரிசர்வ் பாங்க் வைத்திருக்க வேண்டும். ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா, மாநில அரசுகளோடு செய்துகொள்ளும் ஒப்பந்தங்களும், கிட்டத்தட்ட இம்மாதிரி யானவையே. இத்தகைய பணிகளைச் செய்வதற்கு, அரசாங்க ரொக்க இருப்புகளை வட்டியில்லாமல் இலவசமாக வைத்திருப்ப தைத் தவிர, வேறு எந்தவித வருமானமும் கிடையாது. அப்படி வைக்கப்பட்டிருக்கும் ரொக்க இருப்புகள், மத்திய அரசாங்கத் தைப் பொறுத்த வரையில், குறைந்தது 50 கோடி ரூபாயும், பல்வேறு மாநில அரசாங்கங்களைப் பொறுத்த வரையில், 5 இலட்ச ரூபாயிலிருந்து 85 இலட்ச ரூபாய் வரையிலும் மாறுபடுகிறது. பொதுவாக, இந்தக் குறைந்த பட்ச ரொக்க இருப்புகள்பற்றி, அரசாங்கமும், ரிசர்வ் பாங்கும் அவ்வப்போது முடிவு செய்து கொள்கின்றன.

ஆரம்பத்தில், ரிசர்வ் பாங்க், மத்திய அரசாங்கத்துடன் மட்டுமே ஒப்பந்தங்கள் செய்து கொண்டது. 1937 ஏப்ரல் 1-ம் தேதி முதல், ஒவ்வொரு மாகாண அரசாங்கத்துடனும் (Provincial Governments) தனித்தனியே ஒப்பந்தம் செய்துகொண்டது. 1956-ல், இந்தியா பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டபோது, எந்த ஒரு மாநிலத்துடனும் ரிசர்வ் பாங்க் ஒப்பந்தம் செய்து கொண்டு, அவற்றுக்கு வங்கிப் பணிகளைப் புரியலாம் என்று ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 21 திருத்தியமைக்கப் பட்டது. 1956 அக்டோபர் மாதத்திலிருந்து ஜம்மு-காஷ்மீர் தவிர மற்ற எல்லா மாநில அரசுகளின் பொதுக் கடன்களையும் ரிசர்வ் பாங்கே நிருவாகம் செய்து வருகிறது. அரசாங்கக் கருவூலங்களிலும், துணைக் கருவூலங்களிலும், தன் அலுவலகங் களிலும், தன் முகவர் அலுவலகங்களிலும் போதுமான அளவு பணத்தாள்களும், நாணயங்களும் கூடிய செலாவணிப் பெட்ட கங்களை வைத்திருந்து, ரிசர்வ் பாங்க், அரசாங்கத்திற்கு அவ்வப் போது தேவைப்படும் பணத்தைக் கொடுத்தல் வேண்டும்.

## நிருவாக ஏற்பாடுகள்

அரசாங்க வங்கியராக இருப்பதால் அரசாங்கத்தின் சார்பில் பணத்தைப் பெறும் மற்றும் செலுத்தும் பணிகளைக் கவனிக்க வங்கியின் பொதுக் கணக்குத்துறை (Public accounts department) பெங்களூர், பம்பாய், பைகுலா (பம்பாய்), கல்கத்தா, கான்பூர், சென்னை, நாக்பூர், புதுடில்லி, பாட்னா ஆகிய இடங்களில்

செயல்படுகிறது. மத்திய, மாநிலக் கருவூல விதிகள் மற்றும் மத்திய, மாநில அரசுகளின் தலைமைக் கணக்கரால் (Accountant-General) அவ்வப்போது கொடுக்கப்படும் கட்டளைகளின்படி, அரசாங்கம் சம்பந்தப்பட்ட பணிகளை ரிசர்வ் பாங்க் கவனித்து வருகிறது. ரிசர்வ் பாங்கின் கிளை அலுவலகங்கள் அல்லது வங்கியல் துறையின் அலுவலகங்கள் இல்லாத இடங்களில், ஸ்டேட் பாங்க் அல்லது அதன் முகவர் வங்கி இருக்குமேயானால், ஸ்டேட் பாங்கையே ரிசர்வ் பாங்க் தனது தனி முகவராகக் (Sole agent) கட்டாயம் நியமிக்க வேண்டும் என்று, ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 45, 1959-ல் திருத்தியமைக்கப் பட்டது. ஸ்டேட் பாங்க், தன் துணை வங்கிகளோடு செய்து கொண்ட முகவர் ஒப்பந்தத்தின்படி, ரிசர்வ் பாங்கால் தனக்குக் கொடுக்கப்பட்ட சில பணிகளை, அவற்றிடம் ஒப்படைக்கிறது. முகவர் மற்றும் துணைமுகவர் வங்கிகள், அரசாங்கத்தின் பொது வான வங்கிப் பணிகளைச் செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட கழிவைப் (commission) பெறுகின்றன. இப் பணிகளைச் செய்வதற்காக ஸ்டேட் பாங்க், அதன் துணை வங்கிகள் ஆகியவற்றின் கிளைகள் உள்ள எல்லா இடங்களிலும் பணப் பெட்டக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ரிசர்வ் பாங்கின் பணம் அனுப்புகை வசதிகள் திட்டத்தின் (Reserve Bank's remittance facilities scheme) கீழ் அட்டவணையிலிட்ட வங்கிகள் (Scheduled Banks) மாநிலக் கூட்டுறவு வங்கிகள், பொதுமக்கள் ஆகியோருக்குப் பணம் அனுப்பும் வசதியை, இந்த முகவர் மற்றும் துணைமுகவர் வங்கிகளின் கிளைகள் செய்கின்றன. சில ஸ்டேட் பாங்க் கிளைகளும், ஸ்டேட் பாங்கின் துணை வங்கிகளும் (State Bank of India Subsidiaries), அரசாங்கங்கள், புதுக் கடன்களை எழுப்பும்பொழுது அரசாங்கங்களின் சார்பில் கடன் தொகைகளை வசூலிக்கின்றன.

## புதுக் கடன்கள் மற்றும் கருவூல உண்டியல்களை வெளியிடுதல் (Issue of New loans and Treasury Bills)

பொதுக்கடனை நிருவகிக்கின்ற காரணத்தால், புதுக் கடன் வெளியிடும் பொறுப்பும் ரிசர்வ் பாங்கைச் சார்ந்ததாகும். ரிசர்வ் பாங்க் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, பங்குத் தொகுப்புச் சான்றிதழ்கள் (stock certificates) புரோ நோட்டுகள் ஆகியவை வடிவில் மத்திய அரசின் ரூபாய்க் கடன்கள், பொதுக்கடன் அலுவலகங்கள்மூலம் எழுப்பப்படுகின்றன. புதுக் கடன் எழுப்பு வதற்காக, ரிசர்வ் பாங்க் அளிக்கும் வசதிகளை, மாநில அரசுகளும் பயன்படுத்திக் கொள்கின்றன. ரிசர்வ் பாங்க், நிதியியல் அங்காடி களோடு (Financial markets) கொண்டுள்ள நெருங்கிய தொடர்

பின் காரணமாக, அரசாங்கங்கள் புதுக் கடன்களை வெளியிடும் பொழுது, எவ்வளவு வெளியிட வேண்டும், வெளியிட வேண்டிய தருணம், நிபந்தனைகள் ஆகியவைபற்றித் தனது அறிவுரைகளை அரசாங்கங்களுக்குக் கூறமுடிகிறது. கடன் வெளியீடுகள் வெற்றி கரமாக அமையவேண்டும் என்பதற்காக, ரிசர்வ் பாங்க், சிறப் பீட்டுப் பத்திரங்கள் அங்காடியில் (Gilt-edged securities market) தீவிரமாகச் செயல்படுகிறது. பணஅங்காடி, அரசாங்க ஆவணங்கள் அங்காடி (Government securities market) ஆகியவற்றின்மீது, கடன் நடவடிக்கைகளின் விளைவுகளைக் குறைந்தபட்சமாக்க, ரிசர்வ் பாங்க் முயற்சிகளை எடுத்துக் கொள்கிறது. அதே சமயத்தில் அரசாங்கத்துக்குச் சாதகமான நிபந்தனைகளில் கடன் எழுப்பவும், ரிசர்வ் பாங்க் உதவி செய்கிறது. பொதுவாக, மத்திய அரசும் மாநில அரசுகளும், தனித்தனியாகவே தங்களுடைய கடன்களை எழுப்புகின்றன. பல்வேறு மாநில அரசுகள் கடன்களைத் தனித் தனியாக வெளியிடுவதால், அவை தங்களுடைய உள்ளூர் செல்வாக்கையும், உள்ளூர் செல்வத்தையும் முழு அளவில் திரட்ட முடிகிறது. மத்திய அரசின் சார்பில், எவ்வெப்போது தேவையோ அவ்வப்போது, கருவூல (Treasury Bills) ரிசர்வ் உண்டியல்களை பாங்க் விற்பதால், அரசாங்கத்திற்குத் தேவையான குறுகிய கால நிதித் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, பண அங்காடியில், தேவைக்கு அதிகமாக இருக்கும் பணத்தையும் எடுத்துக் கொள்கிறது.

1950-க்கு முன்னுல், மாநில அரசுகளின் சார்பிலும், கருவூல உண்டியல்களை ரிசர்வ் பாங்க் விற்று வந்தது. ஆனுல், அத்தகைய விற்பனைகள் மிகக் குறைவே. 1965 வரை, கருவூல உண்டியல்கள் பொதுமக்களுக்கு வாராந்திர ஏலங்களில் டெண்டர்கள்மூலம் விற்கப்பட்டன. அப்படி விற்கப்பட்ட கருவூல உண்டியல்கள் 91 நாள்கள் கால அளவை உடையன. அதே கால அளவை உடைய, இடைக்காலக் கருவூல உண்டியல்கள் (Intermediate Treasury Bills) சில ஆண்டுகளில் விற்கப்பட்டன. வாராந்திர ஏல நாளுக்கு அடுத்த நாளிலிருந்து, அடுத்த ஏலத்திற்கு டெண்டர்கள் வருவ தற்கு முந்தின நாள் வரையில், ரிசர்வ் பாங்கால் நிருணயிக்கப் பட்ட விலையில், இத்தகைய இடைக்காலக் கருவூல உண்டியல்கள் விற்கப்படுகின்றன. 1965 ஜுலை 12க்குப் பிறகு, கருவூல உண்டியல்கள் விற்பனையில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. அம் மாறுதல்களின்படி, இப்போது, கருவூல உண்டியல்கள் வாரம் முழுவதிலும் பொதுமக்களுக்கு விற்கப்படுகின்றன. இம் மாறுதல் களினுல் வணிக வங்கிகள் அவ்வப்போது தங்களிடமுள்ள உபரிப் பணத்தைக் கருவூல உண்டியல்களில் முதலீடு செய்ய முடிகிறது.

தள்ளுபடி விகிதம் (discount rate) ஓர் ஆண்டுக்கு 2·65 சதவிகிதமாக 1960—61-ல் இருந்தது. இவ்விகிதம் 1961—62-ல் 2·57 ஆகவும், 1962—63-ல் 2·41 ஆகவும், 1963-64-ல் 2·34 ஆகவும் 1964—65-ல் 2·71 ஆகவும் இருந்தது. 1965 ஜூலை 16லிருந்து 1868 மார்ச்சு 2 வரை 3·5 சதவிகிதமாகவும், 1968 மார்ச்சு 4 லிருந்து 1971 ஜனவரி 8 வரை 3 சதவிகிதமாகவும், 1971 ஜனவரி 9 லிருந்து 1973 மே 31 வரை 3·50 சதவிகிதமாகவும், 1973 ஜூன் 1 லிருந்து 4 சதவிகிதமாகவும், 1974 ஏப்ரல் 1 லிருந்து 4·25 சதவிகிதமாகவும், 1974 ஜூலை 23 லிருந்து 4·60 சதவிகிதமாகவும் உள்ளது.

இந்தியாவில் கருவூல உண்டியல்களின் பங்கு அவ்வளவு முக்கியமானதன்று. பெரும்பாலும் வணிக வங்கிகளே மந்தப் பருவத்தின் (slack season) போது, தங்களுடைய உபரிப் பணத்தைக் கருவூல உண்டியல்களை வாங்கப் பயன்படுத்துகின்றன. வங்கிகள், தங்களுக்குப் பணம் தேவைப்படும்பொழுது, இந்த உண்டியல்களை, ரிசர்வ் பாங்கிடம் மறுதள்ளுபடி (rediscount) செய்து பணத்தைப் பெற்றுக் கொள்கின்றன. மாநில அரசுகள், உபரிநிதி வைத்திருக்கும்போது, மத்திய அரசின் கருவூல உண்டியல்களில் முதலீடு செய்கின்றன. இதற்காக மாநில அரசுகளுக்குத் தனிக் கருவூல உண்டியல்கள் (Adhoc Treasury Bills) விற்கப்படுகின்றன. அத்தகைய வசதிகள் அரசாங்கத் துறைகள், பிறநாட்டு மைய வங்கிகள் ஆகியவற்றிற்கும் அளிக்கப்படுகின்றன. இக் கருவூல உண்டியல்கள், 91 நாள் காலக் கெடுவை உடையவை. வாராந்திர ஏலங்கள் நடந்தாலும், நடக்காவிட்டாலும், மாநில அரசுகளின் தேவைகளுக்குத் தகுந்தாற்போல் கருவூல உண்டியல்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே, இவ் வசதிகள் உண்டாக்கப்பட்டன. மேலும், வாராந்திரக் கருவூல உண்டியல்கள் வெளியீட்டில் மாநில அரசுகள் போட்டியிட்டால் தள்ளுபடி விகிதத்தில் (discount rate) விரும்பத்தகாத ஏற்றத் தாழ்வுகள் உண்டாகும். பொதுமக்களுக்கு விற்கப்படும் அதே விலையில், கருவூல உண்டியல்கள், மாநில அரசாங்கங்களுக்கும் விற்கப்படுகின்றன. மாநில அரசுகள், வங்கிகள், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ரிசர்வ் பாங்க் கருவூல உண்டியல்களை மறுதள்ளுபடி செய்து கொடுக்கிறது.

## வழிவகைக் கடன்கள் (Ways and Means advances)

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17 (5)ன்படி, ரிசர்வ் பாங்க், மத்திய மாநில அரசுகளுக்கு, மூன்று மாதத்திற்குள் திருப்பிக் கொடுக்க வேண்டிய வழிவகைக் கடன்களைக்

கொடுக்கிறது. இத்தகைய கடன்கள்மீதான வட்டி விகிதம் பற்றியோ, அதிகபட்சக் கடன்கள்பற்றியோ, சட்ட சம்பந்தப் பட்ட சரத்துகள் எதுவும் இல்லை. ஆனால், இவ் விஷயங்கள்பற்றி, ரிசர்வ் பாங்க், மத்திய, மாநில அரசுகளோடு, ஒப்பந்தம் அல்லது ஏற்பாடுகள் செய்து கொள்கிறது.

1943–44-ல் இருந்து, சுமார் 10 ஆண்டுகளுக்கு, மத்திய அரசு தன்வசம் மிகுந்த ரொக்க இருப்புகளை வைத்திருந்ததால், ரிசர்வ் பாங்கிடம் வழிவகைக் கடன்கள் எதுவும் வாங்கவில்லை. ஆனால் 1954–55-லிருந்து, ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் வளர்ச்சிப் பணிகளின் செலவு அதிகமாகி விட்டபடியால், அரசாங்கம் ரிசர்வ் பாங்கிடம் மீண்டும் வழிவகைக் கடன்களைப் பெறும் நிலைமை உருவாகிவிட்டது. ஆனால், பெரும்பாலும் இத்தகைய கடன்கள், ரிசர்வ் பாங்கிடம் தனிக் கருவூல மாற்று உண்டியல்களை விற்றுத்தான் பெறப்பட்டன. சென்ற சில ஆண்டு களாக, மாநில அரசுகள் தங்களுடைய குறுகிய காலக்கடன் தேவைகளை இரண்டு வழிகளில் ரிசர்வ் பாங்கிடமிருந்து பெறு கின்றன. முதன்முறையில், ரிசர்வ் பாங்கால் குறிப்பிடப்பட்ட ஓர் அளவுக்குட்பட்டு எந்தவித ஆவணங்களும் இல்லாமல், மாநில அரசுகள் கடனைப் பெற்றுக்கொள்கின்றன. தற்போது, இந்த அளவானது, மாநில அரசுகள் ரிசர்வ் பாங்கில் வைத்திருக்கும் ரொக்க இருப்பைப்போல் மூன்று பங்கு ஆகும். இத்தகைய கடன் வழக்கமான வழிவகைக் கடன்கள் (Normal ways and means advances) என அழைக்கப்படுகின்றன. இரண்டாவது முறையின் கீழ் வழக்கமான வழிவகைக் கடன்களைப்போல் இரண்டு பங்கு அள விற்கு, சிறப்பு வழிவகைக் கடன் (Special ways and means advances) மத்திய அரசு ஆவணங்கள் மீதான அடைமானத்தின் பேரில் ரிசர்வ் பாங்கால் கொடுக்கப்படுகின்றன. இந்த அளவுகளுக்கு மேலும், ரிசர்வ் பாங்க் தன் விருப்பப்படி, கூடுதல் சிறப்பு வழி வகைக் கடன்களை (Additional special ways and means advances) அளிக்கலாம். வழக்கமான மற்றும் சிறப்பு வழிவகைக் கடன் களின் வட்டி விகிதம், ரிசர்வ் பாங்க் விகிதத்தைவிட ஒரு சதவிகிதம் குறைவானதாகும். இத்தகைய சிறப்பு வழிவகைக் கடன்களின் அளவையும் தாண்டி, மாநில அரசுகள் ''அங்கீகரிக்கப் படாத மேல்வரைப் பற்றுகளை''ப் (Unauthorised over drafts) பெறுகின்றன. இவ்வகைக் கடன்களுக்கு, பாங்க விகிதத்தில் வட்டி வசூலிக்கப்படுகிறது. ஐந்தாவது நிதிக்குழு (Fifth finance-commission), அங்கீகரிக்கப்படாத மேல்வரைப் பற்றுகளை ஒழிப் பதற்கான சிபாரிசுகளையும் செய்தது. மாநில அரசுகள் தொடர்ந்து அங்கீகரிக்கப்படாத மேல்வரைப் பற்றுகளைப் பெற்று இருந்தால்,

ரிசர்வ் பாங்க், அத்தகைய விஷயத்தை, மாநில அரசுகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு மட்டுமல்லாமல், அத்தகைய மேல்வரைப் பற்றுகளை எவ்வளவு சீக்கிரம் சரிசெய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சரிசெய்யுமாறும் கேட்டுக்கொள்கிறது. மேற் கூறியவைபற்றி, மத்திய அரசுக்கும் ரிசர்வ் பாங்க் தெரிவிக் கிறது. சில சமயங்களில் மத்திய அரசால், மாநில அரசுகளுக்கு, திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் நிதி உதவியின் மூலம் அல்லது மாநில அரசுகளுக்குப் பங்காகச் சேர வேண்டிய வரிப் பணத்தை முன்பணமாகக் கொடுப்பதன்மூலம், அத்தகைய அங்கீகரிக்கப் படாத மேல்வரைப் பற்றுகளை மத்திய அரசு சரி செய்கிறது. மத்திய அரசு, தன் பண நிலைமையைப் பொறுத்து, தனக்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்குத் தனிக் கருவூல உண்டியல்களை (Adhoc Teasury Bills) ரிசர்வ் பாங்கிடம் விற்கிறது. இதன்மூலம், மாநில அரசுகளைப் பொறுத்த வரையில், துவக்கத் தில் எக் கடன்கள் ரிசர்வ் பாங்கின் கடனுகை இருந்தனவோ அக் கடன்கள், மத்திய அரசின் கடனுகை மாறிவிடுகின்றன.

மாநில அரசுகளின் இத்தகைய மேல்வரைப் பற்றுகள் பெரும் பிரச்சினையாக இருந்தன. இத்தகைய பழக்கத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்புதற்காக, மத்திய நிதி அமைச்சகத் தோடும், திட்டக்குழுவோடும் கலந்தாலோசித்து ரிசர்வ் பாங்க் ஒரு புதுத்திட்டத்தை உருவாக்கியுள்ளது. இத் திட்டம் 1972 மே 1 ஆம் தேதியிலிருந்து செயல் முறைக்கு வந்தது. இப் புதுத் திட்டத்தின்படி, ஏழு நாள்களுக்கு, அதிகப்படாத, முழுவதும் தற்காலிகமான, மேல்வரைப் பற்றுகளைப் தவிர, வேறு எந்த மேல்வரைப் பற்றுகளையும், ரிசர்வ் பாங்க் அனுமதிப்பதில்லை. இப் புதுக் கொள்கையினுல், மாநில அரசுகள் மேல்வரைப் பற்று களுக்காக ரிசர்வ் பாங்கிடம் நெருங்குவது கணிசமாகக் குறைந் துள்ளது.

## அரசாங்க அறிவுரையாளர் (Government Adviser)

உலகத்தில் உள்ள பிற மைய வங்கிகளைப் போலவே, ரிசர்வ் பாங்க், அரசாங்கத்தின் அறிவுரையாளராகப் பணியாற்றுகிறது. வங்கியியல், நிதி சம்பந்தப்பட்ட விஷயங்கள், திட்டங்கள், ஆகியவைபற்றித் தன் அறிவுரைகளை, ரிசர்வ் பாங்க் அளிக்கிறது. நிதிக் கொள்கைகள், புதுக் கடன்கள், வேளாண்மைக் கடன், கூட்டுறவு இயக்கம், தொழிற் கடன், வங்கியியல் மற்றும் கடன் சம்பந்தப்பட்ட சட்டங்கள் ஆகியவைபற்றியும் ரிசர்வ் பாங்க் தன் யோசனைகளைக் கூறுகிறது.

ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்குதல், அத் திட்டங்களுக்குத் தேவையான பணத்தைச் சேகரிக்கும் முறை, வங்கியியல் மற்றும் கடன் சம்பந்தப்பட்ட நிறுவன ஏற்பாடுகள் ஆகியவை பற்றியும் ரிசர்வ் பாங்க் அறிவுரை வழங்குகிறது. பன்னாட்டு நிதியியல்பற்றியும், ரிசர்வ் பாங்க் அறிவுரை கூறுகிறது. நன்முறையில் இவ் வறிவுரைகளை வழங்குவதற்காக, ரிசர்வ் பாங்க் ஒரு பெரிய ஆராய்ச்சி மற்றும் புள்ளியல் துறையை உருவாக்கியுள்ளது. அவ்வப்பொழுது நிதியியல் அங்காடியில் (Financial-markets) ஏற்படும் மாறுதல்களைப்பற்றி, ரிசர்வ் பாங்க், அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்துகின்றது.

# 4. ரிசர்வ் பாங்கும் பணச்சந்தையும்

ஒரு நாட்டின் மைய வங்கியைப்பற்றி ஆராயும்போது, அந் நாட்டின் பணச்சந்தையைப்பற்றிக் கூறுமல் இருக்க இயலாது. நல்லதொரு பணச்சந்தை இல்லாமல் மையவங்கி செயல்படுவது கடினமாவது போலவே, மையவங்கி இல்லாமல் பணச்சந்தை செயல்படுவதும் கடினம். மையவங்கி இல்லாமலே, பணச்சந்தை அமைக்கப்படலாம். ஆனுல், அவ்வாறு அமைக்கப்படும் பணச் சந்தை எந்த அளவிற்குச் சிறப்பாக அமையும் என்பது ஐயத்திற் குரியது. முதலில் அமைக்கப்பட வேண்டியது பணச்சந்தையா அல்லது மையவங்கியா என்பது கடந்த காலத்தில் ஒரு விவாதத் திற்குரிய தலைப்பாக இருந்தது. ஆனுல், தற்போது முதன்முதலில் மையவங்கியே அமைக்கப்பட வேண்டும் என்று உலக நிதியியல் வல்லுநர்கள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். மைய வங்கி முதலில் அமைக்கப்படுமாயின், அதைச்சுற்றிப் பணச்சந்தை தானுகவே வளரும் என்று பென்சமின் ஸ்ட்ராங் (Benjamin Strong) கூறியுள்ளார். ஒரு மையவங்கி உருவாக்கப்பட்டதும், அதன்விளை வாகத் தொடர்ந்து சிறந்த வங்கியியல் முறை வளர்ந்து, மிகவும் ஆச்சரியப்படத்தக்க முறையில், குறுகிய காலத்தில், உண்டியல் அங்காடியும் பிறக்கிறது என்பதைப் பிற நாடுகளின் பட்டறிவு நன்கு எடுத்துக்காட்டுகிறது என்று இந்தியச் செலாவணி மற்றும் நிதி பற்றிய அரசினர் குழுவின் அறிக்கை (Royal commission on currency and finance, 1925) கூறுகிறது. ஒரு மைய வங்கியை அமைத்து விட்டுத் தானுகவே பணச்சந்தை வளர்ந்து விடும் என்று வாளாயிருத்தலாகாது. மையவங்கியின் அமைப்பு, நாட்டுக்கு நாடு மாறுபடலாம். ஆனுல், பணச்சந்தையை மையவங்கி கட்டுப்படுத்த வேண்டும் என்பது உலகெங்கிலும் ஒப்புக்கொள்ளப் பட்ட ஒரு கோட்பாடு ஆகும். ஆனுல், கட்டுப்படுத்தும் முறையில் மையவங்கிக்கு மையவங்கி வேறுபாடு இருக்கலாம். தான் திறம்படச் செயல்படவும், பணச்சந்தைக்கு உதவவும், ஒரு மைய வங்கி, சூழ்நிலைக்கு ஏற்றாற்போல், தன்னை மாற்றிக்கொள்வது இன்றியமையாததாகும். எத்தகைய சூழ்நிலையில் மையவங்கி

அமைக்கப்பட்டது என்பதைப் பொருத்து, மையவங்கி தான் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்பற்றி முடிவு செய்யலாம்; மையவங்கிக்குக் கொடுக்கப்பட்டுள்ள சட்டமுறை அதிகாரங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

வணிக மாற்று உண்டியல்கள், குறுகிய கால அரசாங்க ஆவணங்கள் போன்ற கடன் கருவிகளின்மூலம் குறுகிய கால நிதியைக் கடன் கொடுக்கவும், பெறவும் உள்ள அமைப்பே பணச் சந்தை ஆகும் என்று சென் (S.N. Sen) கூறியுள்ளார்.

## வளர்ச்சியுற்ற பணச்சந்தை

ஒரு பணச்சந்தையானது, வளர்ச்சியுற்ற பணச்சந்தையாகக் கருதப்பட வேண்டுமாயின் எத்தகைய நிபந்தனைகளை அது நிறைவு செய்ய வேண்டும் என்று சென் (S.N. Sen) மிக அழகாகவும், தெளிவாகவும் கூறியுள்ளார். அந் நிபந்தனைகள் என்ன என்பதை இனிக் காண்போம்.

## 1. நல்ல அமைப்புள்ள வங்கியியல் முறை

குறுகிய கால நிதியில் வங்கிகளே பெரும்பாலும் ஈடுபடுகின்றன. வங்கிகளைப் பணச்சந்தையின் கரு என்று கூறலாம். வங்கிகளே பெரும்பாலான குறுகிய கால நிதியைச் சந்தைக்கு அளிக்கின்றன, மற்றும் பெறுகின்றன. மேலும், பணச்சந்தையிலுள்ள பல்வேறு பகுதிகளுக்கும் இணைப்பையும் ஏற்படுத்துகின்றன. பணச்சந்தை ஏற்படுத்தும் அதிர்ச்சியை இவை தாங்கிக் கொள்கின்றன; அவ்வாறு தாங்க முடியாத அதிர்ச்சியை மையவங்கி தாங்கிக்கொள்கிறது. வங்கிகள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு அளிக்கக்கூடிய வசதிகளைப் பொருத்து, பணச் சந்தையின் வளர்ச்சி அமைகிறது. பணச்சந்தை செம்மையாக அமைவதற்கு மையவங்கி இருத்தல் வேண்டும். மையவங்கி உற்றுழி உதவுவோனாக (Lender of the last resort) பணியாற்றுவதால், பணச்சந்தை, மையவங்கி இன்றிச் செயல்படுவது கடினம். நெருக்கடி காலங்களில் மையவங்கிபோல் வங்கிகளுக்கு உதவுவார் இல்லை. மற்ற எல்லா நிபந்தனைகளும் நிறைவு செய்யப்படினும், நல்ல வளர்ச்சியுற்ற வங்கியியல் முறையும், மையவங்கியும் இன்றேல், அத்தகைய பணச்சந்தையை நல்லதொரு பணச்சந்தையாகக் கருதமுடியாது.

## 2. கிடைக்கக்கூடிய குறுகிய கால சொத்துகள்

சந்தையில் செயல்படுவதற்குத் தேவைப்படும் தகுந்த கருவிகள் கிடைத்தல் இன்றியமையாதது ஆகும். மாற்று உண்டியல்கள், அரசாங்கக் கருவூல உண்டியல்கள், குறுகிய கால அரசாங்கப் பத்திரங்கள் போன்றவை தொடர்ந்தும், போதுமான அளவுக்கும் கிடைக்க வேண்டும். மேற்கண்ட கருவிகள் உயர்ந்த தரமுடையனவாகவும், அதிகச் செலவில்லாமல் மாற்றத் தகுந்தவையாகவும் இருத்தல் வேண்டும்.

## 3. உரிமையாளரின் எண்ணிக்கை (Number of dealers)

மேற்கூறப்பட்ட சொத்துகளைத் தேவைப்படும்போது சந்தைக்கு விற்கவும், சந்தையிலிருந்து பெற்றுக்கொள்ளவும், சந்தை போதுமான அளவுக்கு உரிமையாளரைப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் சந்தைக்கு ஆதரவு கிடைப்பதுடன் போட்டியும் வளர்கிறது. குறுகிய காலச் சொத்துகளில் முதலீடு செய்வோர்க்கு, இத்தகைய உரிமையாளர்கள் ஒரு சுறுசுறுப்பான அங்காடியை ஏற்படுத்தித் தருகின்றனர். இத்தகைய உரிமையாளர்கள் இல்லாமல் பணச்சந்தையை அமைப்பது கடினம்.

## 4. துணை அங்காடிகள் (Sub-Markets)

நிதிகளை மிகக் குறுகிய காலத்திற்குக் கடன் அளிக்க, மற்றும், கடன்பெற வசதிகளை அளிக்க அழைப்புக்கடன் அங்காடியும் (Call loans market), வணிக அல்லது வியாபார மாற்று உண்டியல்களின் பேரில் கடன் வசதிகளை அளிப்பதற்கு ஒரு மாற்று உண்டியல் அங்காடியும் (bill market), மூன்று திங்களுக்கு அரசாங்கம் கடன் பெறக்கூடிய அரசாங்கக் கருவூல உண்டியல் அங்காடியும் (Treasury bills market) வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடுவதற்கு ஒரு வெளிநாட்டுச் செலாவணி அங்காடியும், மற்றும் பிற துணை அங்காடிகளும், வளர்ச்சியுற்ற பணச்சந்தையில் இருத்தல் வேண்டும். எந்தத் துணை அங்காடி, பணச்சந்தையில் முக்கிய இடத்தைப் பெறுகிறது என்பது நாட்டுக்கு நாடு மாறுபடலாம். ஒவ்வொரு துணை அங்காடியும், நியாயமான அளவுக்குப் போட்டி நிலையில் செயல்பட வேண்டும்; பல்வேறு வழிகளிலும் நிதியைப் பல உரிமையாளர்களும் சேகரிக்க வேண்டும். கடன் அளிப்போர், கடன் பெறுவோர், உரிமையாளர் ஆகியோரின் எண்ணிக்கை

அதிகமாக இருத்தல் வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், ஒவ்வோர் அங்காடியும் மிகுந்த திறனைப் பெற்றுச் சுறுசுறுப்பாகச் செயல்பட வேண்டும். எந்த அளவுக்கு நடவடிக்கையில் ஈடுபட்டாலும், வட்டி வீதத்திலோ அல்லது சொத்துகளின் விலையிலோ பெரிய மாற்றங்கள் நிகழக் கூடாது. ஒவ்வோர் அங்காடியிலும் அடிக்கடி வியாபாரம் நடைபெற வேண்டும். அங்காடியின் உரிமையாளர்கள் மிகுந்த வருவாய்களையும் தகுந்த சொத்துகளையும் பெற்றிருத்தல் வேண்டும். ஒவ்வோர் அங்காடியும் மற்ற அங்காடிகளைச் சார்ந்து இருப்பதுமட்டுமின்றி, மற்ற அங்காடிகளின் செயலின் விளைவாலும் பாதிக்கப்படவேண்டும். அங்காடிகளுக்கு இடையே நியாயமான அளவுக்குப் பண மாற்றங்கள் ஏற்படவேண்டும். ஓர் அங்காடியில் ஏற்படும் பண வீத மாற்றங்கள், பிற அங்காடிகளிலும் விளைவை ஏற்படுத்த வேண்டும்.

## 5. பிற நாடுகளில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலித்தல்

வளர்ச்சியுற்ற பணச்சந்தை பிறநாடுகளின் நிதியியல், பொருளாதாரம், அரசியல் போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்களை மிக அழகாகப் பிரதிபலிக்கிறது.

பணச்சந்தை வெற்றிடத்தில் வளரும் காளான் இல்லை. பணச்சந்தை வளர்வதற்குச் சாதகமான சூழ்நிலையும் அமைதல் அவசியம். சான்றாக, வங்கிகளும், வியாபாரிகளும், உண்டியல்களை விரும்பாவிடில் உண்டியல் அங்காடி வளர்ச்சியுறாது. நாட்டில் கம்பெனி வளர்ச்சியும், தொழில் வளர்ச்சியும் ஏற்பட்டாலொழிய, ஆவணங்கள் அங்காடி வளர்ச்சியுறாது.

## வளர்ச்சியுற்ற பணச் சந்தையில் மைய வங்கி

வளர்ச்சியுற்ற பணச்சந்தை மிக்க உணர்ச்சி மிகுந்த ஓர் அமைப்பு ஆகும். பணச்சந்தை நிலைமையும், பணச்சந்தை வீதங்களும் மைய வங்கிக்கு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்வதில் மிகவும் உதவுகின்றன. பணச்சந்தையின் அமைப்பு நன்றாக இருப்பின், மிக்க உணர்ச்சியுள்ள அங்காடியில் மைய வங்கி செயல்படுமாயின், அதன் விளைவுகள் பணச்சந்தை முழுவதிற்கும் பரவுகின்றன. ஒரு குளத்தின் நடுவில் கல்லை எறிந்தால், அலைகள் கரை வரையில் பரவுவது போலவே நல்லதொரு பணச்சந்தையில் மைய வங்கியின் செயலும் அமையும். உண்டியல் அங்காடி, அழைப்புக்கடன்

அங்காடி, வெளிநாட்டுச் செலாவணி அங்காடி ஆகியவை மைய வங்கிக்கு மிகவும் உதவுகின்றன. உண்டியல் அங்காடி இருந்தால், தானுகவே ரொக்கமாகக் கூடிய முதலீடுகளில் மைய வங்கி முதலீடு செய்ய முடியும்; வங்கியியல் முறையில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்த முடியும். அழைப்புக்கடன் அங்காடி வளர்ச்சியுற்று இருந்தால், வங்கிகள் மிகக் குறைந்த ரொக்க இருப்போடு செயல் படமுடியும். இதன் விளைவாக, வெளி அங்காடி நடவடிக்கைகள் (Open market operations) மூலம், மைய வங்கி எளிதில் வங்கி களின் ரொக்க இருப்பில் மாறுதல்கள் செய்ய முடியும்.

வளர்ச்சியுற்ற பணச்சந்தை, மைய வங்கியின் பொறுப்பைப் பெரிதாகக் குறைக்க முடியும். மேற்கூறியவற்றிலிருந்து, வளர்ந்து வரும் நாடுகள், பணச்சந்தையை முதன்முதலாக அமைக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாகாது. வளர்ச்சியுற்ற பணச் சந்தை இருந்தால், மைய வங்கியின் பணியின் சுலபமாக முடியும் என்ற முடிவுக்குத்தான் நாம் வரவேண்டியிருக்கிறது. இலண்டன் பணச்சந்தையும், நியூயார்க் பணச்சந்தையுமே மேற்கூறப்பட்ட பெரும்பாலான நிபந்தனைகளை நிறைவு செய்கின்றன.

## வளர்ச்சியுருத பணச்சந்தையில் மைய வங்கி

வளர்ச்சியுருத பணச்சந்தையில் குறைபாடுகளே அதிகம். இக் காரணத்தினுல் வங்கிகள்மீது முழுமையாகக் கட்டுப்பாடு செலுத்த முடியவில்லை. வங்கிகளைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிக்கல் நிறைந்ததாக உள்ளது. அழைப்புக்கடன் அங்காடி இல்லா விடில், வங்கிகள் மிகுந்த ரொக்க இருப்புகளைத் தங்களிடம் வைத்துக்கொள்ள நேரிடும். இதனுல், எந்த ஒரு கடன் கட்டுப் பாட்டு நடவடிக்கையும் வெற்றியடையாமல் போகிறது. மைய வங்கி மிகுந்த அளவிற்கு வெளி அங்காடி நடவடிக்கைகளை மேற் கொண்டால்தான், விரும்பிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும். ஆனுல், அவ்வளவு மிகுந்த அளவிற்கு வெளிஅங்காடி நட வடிக்கைகளை மையவங்கி மேற்கொள்ள முடியாது. முதலாவ தாக, உண்டியல் அங்காடி இல்லையேல் மையவங்கி பணச்சந்தை யின் துடிப்பை உணரமுடியாது. இரண்டாவதாக, அரசாங்க ஆவணங்கள் அங்காடி (Government securities market) பரந்த தாக இருக்காது. இதனுல், மிகுந்த அளவில் வெளி அங்காடி நடவடிக்கைகளை மேற்கொண்டால், ஆவணங்களின் விலை சரியும். ஆவணங்களும், மிகுந்த அளவுக்கு அல்லது தேவைப்படும் அளவுக்குக் கிடைக்காது. வங்கிகளுக்கிடையே போதிய இணைப்பு இல்லாததால், அவற்றைக் கட்டுப்படுத்தவும் இயலாது. துணை

அங்காடியும் போதிய அளவுக்கு வளர்ச்சியுருததால், எல்லா அங்காடிகளிலும் மையவங்கி செயல்பட வேண்டியிருக்கும்.

வளர்ச்சியுருத பணச்சந்தையில் பாங்க் வீதம் (Bank rate) அவ்வளவு திறனுள்ளதாக அமையாது. பொதுவாக, வங்கிகளின் கடன் உற்பத்தியில் மாறுதல்களை ஏற்படுத்தி அதன் வழியாக முதலீடு, வருமானம், விலைகள் ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்படுத்தவும், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மாறுதல்கள் ஏற்படுத்தவும், பாங்க் வீதமாற்றம் பயன்படுத்தப்படுகிறது. பாங்க் வீதத்தில் ஏற்படும் மாறுதல்கள்போல், பிற பணச்சந்தை வீதங்களிலும் மாற்றங்கள் ஏற்படவேண்டும். ஆனல், வளர்ச்சியுருத பணச்சந்தையில், இவ்வாறு ஏற்படாது. பாங்க் வீத மாறுதல்கள் வெற்றியடைய வேண்டுமாயின், வங்கிகள் மறுதள்ளுபடி வசதிகளைப் பெறவும், கடன் வசதிகளைப் பெறவும், மைய வங்கியை நம்பியிருத்தல் வேண்டும். வளர்ச்சியுருத பணச்சந்தையில், உண்டியல் அங்காடியும் வளர்ச்சியுருமலே இருக்கும். இதனுல், அவ்வளவாக மறுதள்ளுபடி வசதிகளைப் பெறமுடியாது. மேலும், வங்கிகள் தங்களிடம் மிகுந்த ரொக்க இருப்புகளை வைத்திருப்பதால், கடன் பெறுவதற்கு மைய வங்கியை நம்பிருக்கமாட்டா. வங்கிகள் எப்போதாவது மறுதள்ளுபடி வசதிபெறவோ, கடன் வசதி பெறவோ மைய வங்கியிடம் சென்றல், மைய வங்கி, சட்ட முறை அதிகாரங்களைப் பெற்றிருந்தாலும், அவை பயன்பட மாட்டா. வளர்ச்சியுருத பணச்சந்தையில் நிலைமை இவ்வாறு தான் இருக்கும். மேலும், வங்கிகள் பாங்க் வீத மாறுதலுக்குத் தகுந்தாற்போல், தங்கள் வட்டி வீதங்களை மாற்றிக் கொள்ள மாட்டா.

மறுதள்ளுபடி வசதிகளை மைய வங்கி அளிப்பதால் வங்கியியல் முறை முழுவதிற்கும் ரொக்கத்தன்மை அதிகமாகிறது; பணச்சந்தையோடு தொடர்பு ஏற்படுகிறது. ஆனல், இவை வளர்ச்சியுருத பணச்சந்தையில் அல்ல.

போதுமான அளவுக்கு வங்கிகள் மறுதள்ளுபடி வசதிகளைப் பெருததால், கடனைக் கட்டுப்படுத்த மைய வங்கி பிற கட்டுப்பாட்டுக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. வெளி அங்காடி நடவடிக்கை மூலம் உண்டியல்கள், ஆவணங்கள், பத்திரங்கள், தங்கம், வெள்ளி ஆகியவற்றை மைய வங்கி வாங்குகிறது அல்லது விற்கிறது. ஆனல், வளர்ச்சியுருத பணச்சந்தையில் மேற்கூறியவற்றுக்கான அங்காடிகளும் வளர்ச்சியுற்றிருக்க மாட்டா. போதுமான அளவுக்கு மேற்கண்ட சொத்துகளும் கிடைக்காது. ஓர் அளவுக்கு மேல் வெளிஅங்காடி நடவடிக்கையில்

மைய வங்கி ஈடுபட்டால், அங்காடி மிகவும் பாதிக்கப்படும். மேலும், வங்கிகள் ஒரே சீரான காப்பு ரொக்கத்தை வைத்திருக் காததால், வெளி அங்காடி நடவடிக்கை வெற்றி பெறுவதில்லை.

பாங்க் வீதம் திறனற்றதாகவும், வெளி அங்காடி நடவடிக் கையைப் போதிய அளவுக்கு மேற்கொள்ள முடியாததாலும், வளர்ச்சியுறுத பணச்சந்தையில், மைய வங்கி கடனைக் கட்டுப் படுத்தக் காப்பு ரொக்க வீத மாறுதல் முறையையும் (Variable cash reserve ratio) கையாள வேண்டியுள்ளது. கனடா, நியூஜி-லாந்து ஆகிய நாடுகளில் காப்பு ரொக்கவீத மாறுதல், அவ்வளவு பயன் அளிக்கவில்லை என்று ப்ளம்ப்ட்ரி (Plumptre) கருத்துத் தெரி வித்துள்ளார். வளர்ச்சியுறுத நாடுகளில் வங்கிகள், வழக்கமாக, தேவைக்கும் அதிகமான காப்பு ரொக்கத்தை வைத்திருப்பதால், இக் கருவி அவ்வளவு பலனுள்ளதாக அமையாது என்று ப்ளம்ப்ட்ரி கூறியுள்ளார்.

பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டை (Selective credit control) மைய வங்கி மேற்கொள்ள வேண்டுமாயின், மைய வங்கிக்கும், மற்ற வங்கிகளுக்குமிடையே ஒத்துழைப்பு இருத்தல் வேண்டும். மைய வங்கி சட்டமுறைப்படி அதிகாரங்களைப் பெற்றிருக்க வேண்டும். முறைதவறி நடக்கும் வங்கிகளைத் தண்டிக்கவும் அதிகாரங்களைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால், மக்கள் ஆட்சி உள்ள நாடுகளில் பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டை மையவங்கி மேற்கொண்டால், மையவங்கி சர்வாதிகாரப் போக்கைப் பின்பற்றுகிறது என்று குறைகூறப்படும்.

## இந்தியப் பணச்சந்தை

இந்தியப் பணச்சந்தை ஓர் அமைப்பற்ற பணச்சந்தை எனவும், வளர்ச்சியுறுத பணச்சந்தை எனவும், பலவீனமான பணச்சந்தை எனவும் பல்வேறு வகையில் குறிப்பிடப்படுகிறது. ஏன் அவ்வாறு குறிப்பிடப்படுகிறது என்பது பற்றியும், எவ்வகை யில் ரிசர்வ் பாங்க் செயல்படுவதில் பணச்சந்தை உதவுகிறது என்பது பற்றியும் இனிக் காண்போம்.

### 1. பல்வேறு பகுதிகளுக்குள் போதிய இணைப்பு இல்லாமை

ரிசர்வ் பாங்க், ஸ்டேட் பாங்க், நாணயமாற்று வங்கிகள் ஆகியவை உள்ள பகுதி மையப் பகுதியெனவும் (Central part) லேவாதேவிக்காரர்கள், நாட்டுப் பாங்கர்கள், கடன் அலுவல கங்கள், சீட்டு நிதிகள், நிதிகள் ஆகியவை உள்ள பகுதி அங்காடிப்

பகுதி (Bazaar part) எனவும் இந்திய வங்கிகளையும் கூட்டுறவு வங்கிகளையும் உடைய பகுதி நடுப் பகுதி (Middle part) எனவும் அழைக்கப்படுகிறது. இப் பகுதிகளுக்கிடையே நெருங்கிய தொடர்பு இல்லாமல் இருந்தது. 1935 வரை இந்தியாவில் ஒரு மைய வங்கி இல்லாததால் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. மைய வங்கி இல்லாததால் இம்பீரியல் பாங்க் சில மைய வங்கிப் பணிகளைப் புரிந்து வந்தது. ஆகவே, இம்பீரியல் பாங்க், வங்கியரின் வங்கியாகச் சில பணிகளைச் செய்யும்போது சட்டப்படி ரொக்க இருப்புகள் வைக்கவேண்டிய அவசியம் ஏதும் இல்லாதிருந்தும், நாணயமாற்று வங்கிகளும், பெரிய இந்திய வங்கிகளும் இம்பீரியல் பாங்கிடம் தங்களுடைய ரொக்க இருப்புகளை வைத்திருந்தன. இம்பீரியல் பாங்க் இவ் வங்கிகளுக்குக் கடன் வசதிகள் அளித்த போதிலும், அக் கடன் வசதிகள் போதுமான அளவுக்கு இல்லை. மேலும், இம்பீரியல் பாங்க் அரசாங்க வங்கியாகவும், பின்னர் ரிசர்வ் பாங்கின் முகவராகவும் இருந்ததால் சில தனிச்சலுகைகளை அனுபவித்து வந்தது. இதனால் இம்பீரியல் பாங்கை, இந்திய வங்கிகள் அநியாயமாகத் தங்களுடன் போட்டி இடுவதாகக் கருதினவே தவிர, தக்க சமயத்தில் உதவும் நண்பராகவோ அல்லது அறிவுரையாளராகவோ கருத வில்லை. தற்போதும், ஸ்டேட் பாங்க் அவ்வாறே கருதப்படுகிறது. நாணய மாற்று வங்கிகளும் அவ்வாறே கருதப்பட்டன. ஸ்டேட் பாங்க் மற்றும் பிறவங்கிகளிடம், கூட்டுறவு வங்கிகள் கடன் பெறுகின்றன. ஆனால், கூட்டுறவு வங்கிகள், நாட்டுப் பாங்கர்கள், லேவா தேவிக்காரர்கள், ஆகியோரிடையே யாதொரு தொடர்பும் இல்லை. வணிக வங்கிகள் தங்களுடன் போட்டியிடுவதாகக் கூட்டுறவு வங்கிகள் கருதுகின்றன. மேலும் நாட்டுப் பாங்கர்களிடையேயும் யாதொரு தொடர்பும் இல்லை. இவர்கள் ஸ்டேட் பாங்கிடமோ அல்லது ரிசர்வ் பாங்கிடமோ கணக்குகள் வைத்துக் கொள்வதில்லை. தங்களுக்கு அதிகப்பணம் தேவைப்படும்போது, ஸ்டேட் பாங்க் அல்லது பிறவங்கிகளிடம் மறுதள்ளுபடி செய்து தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்கின்றன.

## 2. அமைப்புள்ள பகுதி செயல்படும் விதம் (Organised Section)

அமைப்புள்ள பகுதியில் மூன்று பிரிவுகள் உள்ளன.

1. அழைப்புக்கடன் அங்காடி (Call money market)
2. உண்டியல் அங்காடி (Bill market)
3. துணைக்கடன் அங்காடி (Collateral loan market)

## அழைப்புக்கடன் அங்காடி

இந்திய வங்கிகள் தேவைக்கும் அதிகமான ரொக்க இருப்புகளை வைத்திருந்தன. ஆகையால் அழைப்புக்கடனை இந்திய வங்கிகள் பெறுமேயானால், பெரும்பாலும், சட்டப்படி வைக்கவேண்டிய ரொக்க இருப்பைச் சரிக்கட்டவோ அல்லது ஆண்டு முடிவில் இருப்பு நிலைக்குறிப்பைப் புறச்சோடனை (window dressing) செய்யத்தான் ஆகும். ஆனால், இந்திய நாணயமாற்று வங்கிகள், சற்றே போதுமான அளவுக்கு ரொக்க இருப்பு வைத்திருந்தால், அவை அதிகமாக அழைப்புக்கடன் வாங்கவேண்டிய நிலையில் இருந்தன. பொதுவாக, வங்கிகள், பெரிய தொழிலகங்கள் ஆகியவை வங்கிகளுக்குக் கடன் கொடுப்பவையாக இருந்தன. கடன்கள் பொதுவாக, நேரடியாகவோ அல்லது தரகர்கள் மூலமாகவோ ஏற்பாடு செய்யப்படுகின்றன.

மந்தப் பருவம், மும்முரப் பருவம், அழைப்புக் கடனின் அளிப்பு மற்றும் தேவை, கருவூல உண்டியல்களின் முதிர்வு ஆகியவற்றைப் பொறுத்து அழைப்புக்கடன் வீதம், நிருணயிக்கப் படுகிறது. 1974 பிப்ரவரியில் அழைப்புக்கடன்வீதம் 15 விழுக்காடாக இருந்தது.

## உண்டியல் அங்காடி

நன்கு வளர்ச்சியுள்ள உண்டியல் அங்காடிக் கடன் அமைப்பிற்கு இன்றியமையாததாகும். ஆனால், 1952 வரை, இந்தியாவில் உண்டியல் அங்காடி இல்லை. 1935 இல் ரிசர்வ் பாங்க் அமைக்கப் பட்ட போதிலும், உண்டியல் அங்காடியை உருவாக்க, அது எந்த ஒரு முயற்சியையும் நீண்டகாலமாக எடுத்துக் கொள்ள வில்லை. 1952 லிருந்து பெயரளவில் 'உண்டியல் அங்காடி' என்று அழைக்கப்படுகின்ற ஒன்று இருந்து வருகிறது. 1970-ல், ஓர் உண்டியல் அங்காடியை அமைக்க ரிசர்வ் பாங்க் மீண்டும் முயன்றது.

## துணைக்கடன் அங்காடி

துணைக்கடன் அங்காடி பணச்சந்தையின் ஒரு முக்கிய பகுதியாகும். கடன் (loan), மேல்வரைப் பற்று (overdraft), ரொக்கக் கடன் முறை (cash credit) ஆகிய வடிவில், வங்கிகள் துணைக் கடன்களை அளிக்கின்றன. வங்கிகள் அளிக்கும் மொத்தக்கடனில், துணைக்கடன்களின் பங்கு சுமார் 75 % ஆகும். (அட்டவணையிலிட்ட எல்லா வங்கிகளும் 1972 - 73 இல் கொடுத்த மொத்தக் கடனில், துணைக்கடனின் பங்கு 82% ஆகும்) அரசாங்கப் பத்

திரங்கள், முதல்தரக் கம்பெனிப் பங்குகள், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் போன்ற பிணையங்களின் (securities) பேரில், வங்கிகள் கடன் கொடுக்கின்றன. அவ்வாறு கடன் கொடுக்கும் போது, பிணையத்திற்குத் தகுந்தாற்போல், வரம்பு (margin) வைத்துக் கொள்கின்றன. மேல்வரைப் பற்றுகளைக் காட்டிலும், ரொக்கக் கடன் முறையையே வியாபாரிகள் பெரிதும் விரும்புகின்றனர்.

## 3. பணச்சந்தை வீதங்கள் (Rates In Money Market)

இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் நீண்ட காலக் கடன் வீதங்கள் குறுகிய காலக் கடன் வீதத்தைவிட அதிகமாகவே உள்ளன. ஆனால் இந்தியாவிலோ 1870 லிருந்து 1900 வரை குறுகிய காலக்கடன் வீதம், நீண்ட காலக் கடன் வீதத்தைவிட 1 விழுக்காடு அதிகமாக இருந்தது. ஆனால், முதல் உலகப்போருக்குப் பிறகு, இது குறைந்து விட்டது. இன்றைக்கும் நீண்டகாலக் கடன் வீதங்களுக்கிடையே எந்தவிதத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. எடுத்துக்காட்டாக, ஒருவர் வணிக வங்கியில் தவணைக் கணக்கில் 5 ஆண்டிற்கு மேற்பட்ட கால அளவுக்கு 1973 ஏப்ரல் 1 ஆம் நாள் முதலீடு செய்வாராயின், 7. 25% வட்டி பெறுவார். அதற்குப் பதில், 1979–ல் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய, 1972 - 73இல் வெளியிடப்பட்ட மத்திய அரசின் கடனில் முதலீடு செய்வாராயின் $4\frac{3}{4}\%$ வட்டியே பெறுவார். 1973 ஏப்ரல் 1க்குப் பிறகு ஓராண்டுக் காலத்திற்கு மேற்பட்ட, ஆனால், 2 ஆண்டுக்கு உட்பட்ட காலத்திற்குத் தவணை வைப்பில் முதலீடு செய்தால் 6% வட்டி பெறுவார்.

வைப்புகள் மீதான வட்டி வீதத்தைப் பார்க்கையில் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் நடப்பு வைப்புகளின்மீது வங்கிகள் வட்டி ஏதும் கொடுப்பதில்லை. அதற்கான காரணங்களாவன : வட்டி கொடுக்க வேண்டுமே என்பதற்காக, வங்கிகள் இந்த நடைமுறை வைப்புகளையும் முதலீடு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். மேலும், நடப்புக்கணக்கைத் திறப்பவர்கள் வட்டி வருமானம் கருதி இக் கணக்கைத் திறப்பதில்லை. காசோலைகளையும், உண்டியல்களையும் இக் கணக்கின் உதவியால் வசூல் செய்வதற்காகவும் மற்றும் பிற காரணங்களுக்காகவும் நடப்புக் கணக்குகளைத் திறக்கிறார்கள். ஆனால், இந்திய வங்கிகள் நடப்புக் கணக்குகளுக்கும் வட்டி கொடுத்து வந்தன. 1930 வரை $2\frac{1}{2}$ விழுக்காடு வரை வட்டி கொடுத்து வந்தன. ஆனால் இது ஒரு விரும்பத்தக்க கொள்கையன்று. இதனால், வங்கிகள் தங்கள்

சொத்தின் பெரும்பகுதியை ரொக்கத்தன்மை உடையனவையாக வைத்திருக்க இயலாது. 1969 செப்டம்பர் 1ஆம் நாள், நடப்புக் கணக்குகளும், 14 நாள்களுக்கு உட்பட்ட வைப்புகளுக்கும் வட்டி கொடுக்கக் கூடாது என்று ரிசர்வ் பாங்க் கட்டளையிட்டது.

அரசாங்க ஆவணங்கள் மீதான வருமானம், பணச்சந்தையில் குறுகிய காலக்கடன்மீதான வட்டி வீதம், அடிப்படைப் பொருளா தார நிலை ஆகியவற்றைப் பொறுத்து தவணை வைப்புகளின் வீதம் நிருணயிக்கப்படுகிறது.

இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், பாங்க் வீதத்திற்கும், வைப்புக்கணக்கு வீதத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. பிற கடன்வீதங்கள் பாங்க் வீதத்திற்கு ஏற்றாற்போலும், பொரு ளாதார நிலைமையைப் பொறுத்தும் அவ்வப்போது நிருணயிக்கப் படுகின்றன. ஆனால் இந்தியாவில் நிலவும் பல வட்டிவீதங்களுக் கிடையே எந்த ஒரு தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

பாங்க் வீதத்திற்கும் பிற வீதங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருத்தல் அவசியம். பாங்க் வீத மாறுதல்களுக்கு ஏற்றாற்போல் பிறவிகிதங்கள் உயரவும், குறையவும் வேண்டும். வைப்பு வீதம், கடன் வீதம், அழைப்புக்கடன் வீதம், மாற்று உண்டியல்கள் மறு தள்ளுபடி வீதம் ஆகியவை பிற விகிதங்கள் ஆகும்.

இங்கிலாந்தில் வைப்பு வீதம் பாங்க் வீதத்தைவிட $1\frac{1}{2}$ விழுக் காடு குறைவு. அழைப்புக்கடன் வீதம் பாங்க் வீதத்தைவிட 1 விழுக்காடு குறைவு. கடன் வீதம் பாங்க் வீதத்தைவிட 1 விழுக் காடு அதிகம்.

நம் நாட்டில், பாங்க் வீதத்தில் மாறுதல்கள் ஏற்பட்ட போது, பிறவீதங்களில் தகுந்த அளவுக்கு மாற்றங்கள் ஏற்பட வில்லை. இது பற்றி 'பாங்க் வீதம்' என்ற தலைப்பின் கீழ் விரி வாகக் கூறப்பட்டுள்ளது.

பலதரப்பட்ட வட்டி வீதங்கள் சந்தையில் நிலவுவது பற்றி மையவங்கி விசாரணைக் குழு (Central Banking Enquiry Committee-1930) பின்வருமாறு தெரிவித்தனர்.

அழைப்புக்கடன் வீதம் $\frac{3}{4}\%$ ஆகவும், உண்டியல் வீதம் 3% ஆகவும், பாங்க் வீதம் 4% ஆகவும் சிறு வியாபாரிகளின் அங்காடி வீதம் $6\frac{3}{4}\%$ ஆகவும் கல்கத்தாவின் சிறு வியாபாரிகளின் உண்டியல் வீதம் 10% ஆகவும் ஒரே சமயத்தில் இருப்பது பல்வேறு சந்தைகளுக்கிடையே பணம் நகர்வதில் இருக்கக்கூடிய மிக அதிக மான மந்த நிலைமையைக் காட்டுகிறது.

இனி 1973 மார்ச்சு இறுதியில் நிலைமை எவ்வாறு இருந்தது என்பதைக் காண்போம்.

பாங்க் வீதம் 6% ஆகவும், ஸ்டேட் பாங்கின் உண்டியல் (Hundi) வீதம் $8\frac{3}{4}-10\frac{1}{2}\%$ ஆகவும், ஸ்டேட் பாங்கின் கடன் $8\frac{1}{2}\%$ ஆகவும் அட்டவணையிலிட்ட பெரிய வணிக வங்கிகளின் அழைப்புக்கடன் வீதம் பம்பாயில் 4.15% ஆகவும், கல்கத்தாவில் 3.70% ஆகவும், சென்னையில் 4.14% ஆகவும், அங்காடி உண்டியல் வீதம் (Bazaar bill rate) பம்பாயில் 15% ஆகவும், கல்கத்தாவில் 15% ஆகவும், சென்னையில் 22.8% ஆகவும் இருந்தது.

1930–ல் மைய வங்கி விசாரணைக் குழு கூறியது இன்றைக்கும் பொருந்தும் என்பதே மேற்கண்ட வீத நிலைமையிலிருந்து தெரிய வருகிறது.

அழைப்புக்கடன் எனப்படுவது 24 மணி நேரத்திற்குக் கிடைக்கக்கூடிய கடன் ஆகும். கடன் கொடுத்தவர் விரும்பும் போதோ அல்லது கடன் வாங்கியவர் விரும்பிய போதோ கடன் பைசல் செய்யப்படும். ஆனால், ஆவணங்கள்மீது ரிசர்வ் பாங்கால் பாங்க் வீதத்தில் கொடுக்கப்படும் கடனோ, கடன் வாங்குபவர் விருப்பப்படி திருப்பிக் கொடுக்கப்படுவதாகும். ஆகையால் பாங்க் வீதம் அழைப்புக்கடன் வீதத்தைவிட அதிகமாக இருக்கவேண்டும். ஆனால் அப்படி இருக்கிறதா? இல்லையே! எடுத்துக்காட்டாக, 1974 பிப்ரவரியில் பாங்க் வீதம் 7 விழுக்காடாக இருந்தபோது அழைப்புக்கடன் வீதம் 15 விழுக்காடாக, அதாவது இருமடங்கிற்கும் அதிகமாக அல்லவா இருந்தது.

இந்திய வங்கிகள் சங்கம் (Indian Bank's Association) தலையிடாதிருந்திருந்தால், அழைப்புக்கடன் வீதம் மேலும் அதிகமாக இருந்திருக்கும். 1973 சூலை துவக்கத்தில் பம்பாயில் அழைப்புக்கடன் வீதம் $6\frac{3}{4}\%$-7% ஆக இருந்தது; ஆகஸ்ட் மூன்றும் வாரம் $3\frac{1}{2}\%-4\%$ ஆக இருந்தது; செப்டம்பர் இரண்டாம் வாரம் முடிய இந் நிலைமை தொடர்ந்தது; அதன் பின்னர் தொடர்ந்து உயர்ந்து அக்டோபர் இறுதியில் $12\frac{1}{2}\%$ ஆக இருந்தது. டிசம்பர் முதல் வாரம் $12\%-13\frac{1}{2}\%$ ஆக இருந்தது. ஆனால் மிகவும் ஆச்சரியப்படும் வகையில் 1973 டிசம்பர் 13-ம் நாள் அழைப்புக்கடன் வீதம் 30% ஆக இருந்தது; இவ்வளவு அதிக அளவுக்கு எப்போதுமே அதிகரிக்கவில்லை. இச் சமயத்தில்தான் இந்திய வங்கிகள் சங்கம் தலையிட்டு, உச்ச வீதம் 15% என நிருணயித்தது. அன்றைய தினம் முதல் 1974 சூன் முடிய அழைப்புக் கடன் வீதம் 15% ஆக இருந்து வந்தது.

கல்கத்தாவிலும், அழைப்புக்கடன் வீதம் கிட்டத்தட்ட பம்பாயில் இருந்தது போலவே இருந்தது. 1973 ஜூலை துவக்கத்தில் 6%–6½% ஆகவும், ஆகஸ்ட் 6-ம் நாள் 3¼ ஆகவும் அக்டோபர் இறுதியில் 12%-12½% ஆகவும், டிசம்பர் 13-ம் நாள் 30% ஆகவும் இருந்தது. இத் தருணத்தில் இந்திய வங்கிகள் சங்கம் தலையிட்டதால், அழைப்புக்கடன் வீதம் 1974 ஜூன் முடிய 15% ஆக இருந்தது.

## 4. பணச்சந்தையின் வளையாத்தன்மையும் நிலையற்ற தன்மையும்

1932 வரை இந்தியப் பணச்சந்தை நிலையற்றதன்மை உடையதாக இருந்தது. 3 விழுக்காட்டிலிருந்து 7 அல்லது 8 விழுக்காடுவரை கடன் வீதம் உயர்ந்தது. இம்பீரியல் பாங்க் கடன் கட்டுப்பாட்டையும் மத்திய அரசு காகிதப்பணம் வெளியிடும் பணியினையும் மேற்கொண்டதால் இந் நிலைமை நிலவியது. நாட்டிலுள்ள எல்லா ரொக்கத்தையும் சேகரிக்காததால், கடன் கொள்கையை நன்கு வகுக்க முடியவில்லை.

## 5. பணச்சந்தையின்மீது அங்காடி நடவடிக்கையால் ஏற்படும் விளைவுகள்

ரிசர்வ் பாங்க் துவக்கப்பட்டதிலிருந்து பணச்சந்தை மீது இருந்த அரசாங்கத்தின் ஆதிக்கம் முடிந்தது. அரசாங்கம் குறுகிய காலக் கடன் தேவைக்காக, கருவூல உண்டியல்கள்மூலம் அதிக அளவில் கடன் வாங்குவதும், நீண்டகாலக் கடன்களை வாங்குவதும் பணச்சந்தையைப் பாதிக்கும். ஆனால், தகுந்த வெளி அங்காடி நடவடிக்கைமூலம் ரிசர்வ் பாங்க் அவற்றைக் கட்டுப் படுத்துவதால் அவற்றின் விளைவுகள் தெரிவதில்லை.

## 6. வணிக உண்டியல்களின் பற்றுக்குறை

வணிக உண்டியல்கள் ஒரு கடன்கருவியாக வியாபார வட்டாரத்தில் வளரவில்லை. 1952 வரை, உண்டியல் அங்காடி இல்லாததும் இதற்கு ஒரு காரணமாகும்.

உண்டியல்கள் பற்றுக்குறைக்குக் கீழ்க்கண்ட காரணங்கள் முக்கியமானவை ஆகும்.

1. உண்டியல்களை மறுதள்ளுபடி செய்தலோடு சிறப்பீட்டுப் பத்திரங்களை (Gilt-edged securities) ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சிறப்பீட்டுப் பத்திரங்கள் நல்ல ரொக்கத்தன்மை உடையவையாக இருந்ததாலும், நல்ல வருமானம் தரக்கூடியவையாக இருந்ததாலும், வங்கிகள் சிறப்பீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்யவே பெரிதும் விரும்பின.

2. ரிசர்வ் பாங்கிடம், உண்டியல்களை மறுதள்ளுபடி செய்து கொள்வதைவிட, இம்பீரியல் பாங்கிடம் கடன் வாங்குவதையே வங்கிகள் கீழ்க்கண்ட காரணங்களுக்காகப் பெரிதும் விரும்பின.

அ. உண்டியல்களை, ரிசர்வ் பாங்கிடம் சென்று மறுதள்ளுபடி செய்வது, ஒரு பெரிய பலவீனமாகப் பணச்சந்தையில் கருதப்பட்டது.

ஆ. இம்பீரியல் பாங்க் நாட்டு வங்கியருக்குத் தள்ளுபடி செய்த வீதத்திலேயே வங்கிகளுக்கும் தள்ளுபடி செய்தது.

இ. இம்பீரியல் பாங்க் தங்களுடன் போட்டியிட்டதால், வங்கிகள், இம்பீரியல் பாங்கிற்குத் தங்களிடம் இருந்த மாற்று உண்டியல்களின் மதிப்பைத் தெரியப்படுத்த விரும்பவில்லை.

3. மாற்று உண்டியல்களில் கையொப்பமிட்டோரின் நிதி நிலைமை பற்றித் தெரிந்து கொள்வது வங்கிகளுக்குச் சில சமயங்களில் மிகவும் கடினமாக இருந்தது.

4. மாற்று உண்டியல்களோடு ரெயில்வே இரசீதோ, பண்டக இரசீதோ இணைக்கப்படுவதில்லையாதலால், அம் மாற்று உண்டியல்கள் உண்மையான வணிக மாற்று உண்டியல்களா அல்லது பணமுடை உண்டியல்களா (Accommodation bills) என்பதை நிருணயிக்க முடியவில்லை.

5. பத்திரக்கட்டணம் (Stamp duty) மிக அதிகமாக இருந்ததால் முட்டாடி உண்டியல்கள் (Muddati Hundi) சந்தையில் கிடைக்காமல் போயின.

6. மார்வாரிகள், குஜராத்தியர்கள், முல்தானி ஷராவ்கள் (Multani Shroffs), நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் ஆகியோர் உண்டியல்களில் தொழில் செய்துவந்த போதிலும் அவர்கள் வெளியிலிருந்து நிதி வசதிகளைப்பெற மறுத்ததால், அமைப்புள்ள சந்தையிலிருந்து தனியாகவே செயல்பட நேர்ந்தது.

7. உண்டியல்களுக்கிடையே திட்ட அளவு (Standardisation) ஏதும் இல்லை.

8. மாற்று உண்டியல்களோடு ஒப்பிடும்போது, ரொக்கக் கடன் வசதிகள் கடன் பெறுவோர்க்கும், கடன் அளிக்கும் வங்கிகளுக்கும் வசதியாக இருந்ததால், உண்டியல்கள் பற்றுக்குறை இருந்தது.

ரொக்கக்கடன்முறை, குறைந்த செலவு மற்றும் மிகுந்த வசதி உடையதாக இருந்ததால், இந்தியாவில் உண்டியல்கள் பிரபலம் ஆகவில்லை என ரிசர்வ் பாங்க் ஒத்துக்கொண்டது.

நல்ல உண்டியல் அங்காடியை உருவாக்காவிடில் இந்திய வங்கியல்முறை சிறப்புடையதாக அமையாது என்று மைய வங்கி விசாரணைக் குழுவினர் கருத்தினைத் தெரிவித்தனர்.

பனந்திகர் (S.G. Panandikar) கூறியிருப்பதுபோல, இச் சூழ்நிலையில் வங்கிகளின் இசைவு தரப்பட்ட மாற்று உண்டியல்கள் சாதாரண வணிகமாற்று உண்டியல்களைவிட அதிக தரம் பெற்றவை. அதற்கான காரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. அத்தகைய மாற்று உண்டியல், வங்கியால் உறுதியளிக்கப்படுகிறது; தனி நபரால் அன்று.

2. அத்தகைய மாற்று உண்டியல்களை ஏற்பதால், அவ்வாறு ஏற்கும் வங்கி கடன் கொடுக்கிறதே தவிர, பணம் கொடுப்பதில்லையாதலால் வங்கியின் கடன் கொடுக்கும் திறன் அதிகமாகிறது.

3. வங்கிகளின் மாற்று உண்டியல் சுலபமாக ரொக்கமாகக் கூடிய ஒரு குறுகிய காலத்தாலாகும்.

4. ஆவணமாற்றுத்தன்மை (Negotiability) காரணமாக இவ்வகை உண்டியல் நாட்டின் பல பாகங்களில் சுலபமாகப் புழக்கத்தில் இருக்கக்கூடியது.

## 7. பணச்சந்தையின் அமைப்பற்ற பகுதி

நாட்டுப் பாங்கர்களும், லேவாதேவிக்காரர்களும் பணச்சந்தையில் ஒரு பகுதியாக இல்லாதது மிகப்பெரிய குறையாகும். நாட்டுப் பாங்கர்கள் உள்ள அமைப்பற்ற பகுதியில், குறுகியகால நிதிக்கும் நீண்டகால நிதிக்கும் எத்தகைய வேறுபாடும் கிடையாது. கடன் எத்தகைய நோக்கங்களுக்காகவும் கொடுக்கப்படலாம். நாட்டுப் பாங்கர்கள் இவ்வாறு தனியாக இருக்கும்வரை, ரிசர்வ் பாங்க் பணச்சந்தைமீது முழுமையாகக் கட்டுப்பாடு செலுத்த முடியாது. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக நாட்டுப் பாங்கர்கள் வங்கிகளிடம் கடன்பெற்று வருவதால், வங்கிகளை ரிசர்வ் பாங்க்

கட்டுப்பாடு செய்வதால், நாட்டுப் பாங்கர்களை மறைமுகமாகக் கட்டுப்பாடு செய்ய முடிகிறது.

## 8. பணத்தேவையின் பருவக்கால மாறுதல்கள்

இந்தியப் பணச்சந்தையின் குறிப்பிடத்தக்க சிறப்பு என்னவெனில், மும்முரப் பருவத்தின் (Busy season) போது மிக அதிக அளவுக்குப் பணம் தேவைப்படுகிறது. இதனால் வட்டி வீதம் உயருகிறது. மந்தப் பருவத்தின் (Slack season) போது பணம் அவ்வளவாகத் தேவைப்படுவதில்லை. மும்முரப் பருவம் என்பது, ஒவ்வோர் ஆண்டிலும் நவம்பரிலிருந்து ஏப்ரல்வரை உள்ள கால அளவையும், மந்தப் பருவம் என்பது மே யிலிருந்து அக்டோபர் வரையில் உள்ள கால அளவையும் குறிக்கும். எடுத்துக்காட்டாக, அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள் 1970 மந்தப் பருவத்தில் கொடுத்த கடனை விட 1971 மந்தப் பருவத்தின்போது 163 கோடி ரூபாய் அதிகமாகவும், 1972 மந்தப் பருவத்தில் 1971-ல் அளித்ததைவிட 67 கோடி ரூபாய் அதிகமாகவும் கடன் கொடுத்திருந்தன. ஆனால், 1971-72 மும்முரப் பருவத்தில் 1970—71-ல் கொடுத்திருந்ததைவிட 355 கோடி ரூபாய் அதிகக் கடனும், 1972—73-ல் 1971-72 மும்முரப் பருவத்தில் கொடுத்திருந்த கடனை விட 878 கோடி ரூபாய் அதிகமாகவும் கடன் கொடுத்திருந்தன. இவ்வாறு மும்முரப் பருவத்தின்போது அதிகப் பணம் தேவைப்படுவதால், வட்டி வீதம் உயருகிறது. எடுத்துக்காட்டாக, 1973 ஆகஸ்ட் 30-ல் பம்பாயில் 3·75% ஆக இருந்த அழைப்புக்கடன் வீதம் 1973 செப்டம்பர் இறுதியில் 10% ஆகவும், டிசம்பரில் 12·96% ஆகவும் இருந்தது. 1973 அக்டோபரில் கல்கத்தாவில் 9·72% ஆக இருந்த அழைப்புக் கடன் வீதம் டிசம்பரில் 19·03% ஆக இருந்தது. 1973 அக்டோபரில் சென்னையில் 9 89% ஆக இருந்த அழைப்புக்கடன் வீதம், டிசம்பரில் 17·93% ஆக இருந்தது. பணப்பருவக் காலங்களில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி விரிவாக இரண்டாம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

## 9. நன்கு வளர்ச்சியுற்ற வங்கியியல் அமைப்பு இல்லாமை

இந்திய வங்கியியல் அமைப்பை நன்கு வளர்ச்சியுற்ற அமைப்பாகக் கருதமுடியாது. நீண்டகாலமாக, மாநகரங்களிலும், நகரங்களிலும் மட்டுமே, இந்திய வங்கிகள் தங்கள் கிளைகளைத் திறந்து வந்தன. 1970-ல் வங்கிகளின்மீது சமுதாயக் கட்டுப்பாடு

(Social control) கொண்டு வரப்பட்டதிலிருந்து, வங்கிகளின் போக்கில் மாறுதல்கள் காணப்படுகின்றன. வங்கிக் கிளைகள் பரவலாக இல்லாததால் பணத்தை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்ற முடிவதில்லை. இதனால், பலவித வட்டி வீதங்கள் சந்தையில் நிலவுகின்றன. கிளை வங்கியல்முறை ஆமை வேகத்தில் பரவி வருகிறது.

மாற்று உண்டியல் அங்காடியை அமைப்பதற்கு ரிசர்வ் பாங்க் மேற்கொண்ட முயற்சிகளைப்பற்றி பார்க்குமுன்னர், ஒரு மாற்று உண்டியல் அங்காடி ஏன் நீண்டகாலத்திற்குத் தோன்ற வில்லை என்பது பற்றிக் காண்போம்.

## மாற்று உண்டியில் அங்காடி வளராமைக்குக் காரணங்கள்

### 1 எளிய பண நிலைமை (Easy money condition)

1935-ல் ரிசர்வ் பாங்க் துவக்கப்பட்டபோதே ஓர் உண்டியல் அங்காடியும் தோன்றலாம் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் பல காரணங்கள் குறுக்கே நின்றதால் மாற்று உண்டியல் அங்காடி உருவாகவில்லை. அவற்றில் ஒரு காரணம்தான் எளிய பணநிலைமை. எளிய பணநிலைமை நிலவியதால், துவக்கத்தில் ரிசர்வ்பாங்க் மலிவுப் பணக் கொள்கையைப் (Cheap money policy) பின்பற்ற வேண்டியிருந்தது. எளிய பணநிலைமை காரணமாக, வங்கிகளுக்கு ரிசர்வ் பாங்கிடம் கடன் உதவி பெறச் செல்ல வேண்டிய அவசியம் எழவில்லை. முதல் உலகப்போரின் போது, அரசாங்கங்கள் பல பயனற்ற செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததால், வேண்டுமென்றே குறைந்த வட்டிக்கொள்கை பின்பற்றப்பட்டது. போருக்குப்பின்னர், தேசிய வருமானத்தையும், உற்பத்தியையும் பெருக்குவதற்காகவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும், பல திட்டங்களைச் செயல்படுத்த வேண்டி யிருந்ததால், அரசாங்கம் பற்றாக்குறை நிதியாக்கத்தைப் (deficit financing) பின்பற்ற வேண்டியிருந்தது. பின்னர், பொருளாதார மந்த நிலைமையின் (economic depression) போதும், வட்டியைக் குறைந்த அளவில் வைத்திருக்க வேண்டியிருந்தது. மந்த நிலைமையின்போது வட்டி வீதத்தைக் குறைவாக வைத்திருப்பது பொருளாதார மீட்சிக்கு (economic recovery) மிகவும் பயன்படும் என கெய்ன்ஸ் பிரபு (Lord Keynes) போன்ற பொருளாதார வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். பின்னர், இரண்டாம் உலகப்போரின்போது, அரசாங்கம் கடன் வாங்க வேண்டி யிருந்ததால், குறைந்த வட்டிவீதக் கொள்கையையே பின்பற்ற வேண்டியிருந்தது.

மேற்கூறியவற்றைப் பார்க்கும்போது. இரண்டாம் உலகப் போர் முடிய, எளிய பணநிலைமை நிலவியதைக் காணலாம். இதன் காரணமாக, ரிசர்வ் பாங்கிடம், வணிக வங்கிகள் தங்கள் மாற்று உண்டியல்களை மறுதள்ளுபடி செய்து கொள்வதற்காகச் செல்லவில்லை. ஆகவே, எளிய பணநிலைமை, மாற்று உண்டியல் அங்காடி வளராமைக்கு ஒரு காரணமாகும்.

## பாங்க் வீதமும், மறுதள்ளுபடி வீதமும் ஒன்ருக இருத்தல்

மறுதள்ளுபடி செய்வதற்கும், கடன் அளிப்பதற்கும் அதே வீதத்தை ரிசர்வ் பாங்க் பயன்படுத்தியதும், மாற்று உண்டியல் அங்காடி வளராமைக்கு ஒரு காரணமாகும். மறு தள்ளுபடி செய்து, தேவையான நிதியைப் பெறுவது, ஒரு சிக்கல் நிறைந்த மற்றும் காலத்தை வீணுக்கக்கூடிய செயலாகும். ஆகவே, மறு தள்ளுபடி செய்து கொள்வதற்குப் பதில், ரிசர்வ் பாங்கிடமிருந்து கடன் பெறவே, வங்கிகள் பெரிதும் விரும்பின. மறு தள்ளுபடி வீதத்தை விட கடன் வீதம் அதிகமாக இருந்திருந்தால், ஒரு மாற்று உண்டியல் அங்காடி வளர்ந்திருக்கும்.

## மாற்று உண்டியல்களின் பற்ருக்குறை

இந்தியப் பணச்சந்தையில் மாற்று உண்டியல்கள் இன்றும் பற்ருக்குறையில்தாம் உள்ளன.

உண்டியல்கள் (Hundis), உள்நாட்டு வணிக மாற்று உண்டியல்கள், வேளாண்மை மாற்று உண்டியல்கள், அரசாங்கக் கருவூல உண்டியல்கள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி உண்டியல்கள் ஆகியவை இந்தியாவில் உள்ள உண்டியல்கள் ஆகும்.

வேளாண்மை, வணிகம், சிறுதொழில்கள் ஆகியவற்றின் நிதித் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் உண்டியல்கள், உள்நாட்டு மாற்று உண்டியல்கள் ஆகும். உண்டியல்களில் பலவகை உண்டு. அவற்றில், உண்மையான வணிக நோக்கங்களுக்குக் கடன் அளிப்பதற்காகப் பயன்படும் முல்தானி உண்டியல்கள் (Multani Hundis) மிக முக்கியமானவை. இத்தகைய உண்டியல்களை ஸ்டேட் பாங்கும், பிற வங்கிகளும் மறு தள்ளுபடி செய்கின்றன. இந்த முல்தானி உண்டியல்கள் தவிர, முட்டாடி உண்டியல்கள் (Muddati Hundis) ஷிகார்பூர் உண்டியல்கள்(Shikarpur Hundis) ஷாஜாஹ் உண்டியல்கள் (Shahjog-Hundis) தனிஜாக் உண்டியல்கள் (Dhanijog Hundis) ஜொக்மி உண்டியல்கள் (Jokhmi Hundis) ஆகிய உண்டியல்களும் உள்ளன. ஆனல் அதிக முத்திரைக் கட்டணத்தின் (stamp duty) காரணமாக இந்த உண்டியல்கள் மறைந்து வருகின்றன. இந்த உண்டி-

யல்கள் ஒரு சில பகுதிகளில் மட்டுமே மிகுந்த செல்வாக்கைப் பெற்றுள்ளன. இவை தவிர, முல்தானி ஷராவ்கள் (Multani-Shroffs) நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், குஜராத்திய ஷராவ்கள் (Gujarati Shroffs) மார்வாரிகள் (Marwaris) ஆகியோரும் உண்டியல் வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். ஆனால், இவர்கள் தங்கள் சொந்த நிதியின் உதவியால் அவ்வாறு ஈடுபடுகின்றனர்; வங்கிகளிடமிருந்து கடன் பெற்று அன்று. இதனால் நாட்டு பாங்கர்கள் (Indigenous bankers) மாற்று உண்டியல்களை மறு தள்ளுபடி செய்தால், பணச்சந்தையின் பிறபகுதிகளில் எந்த ஒரு விளைவும் இருப்பதில்லை.

உள்நாட்டு வியாபார உண்டியல்களைப் பொறுத்தவரை, இந்திய வணிக வங்கிகள், ரொக்கக்கடன், கடன், மேல் வரைப் பற்று ஆகிய வழிகள்மூலம் கடன் கொடுப்பதையே பெரிதும் விரும்புகின்றன. தள்ளுபடி செய்வதை அவ்வளவாக விரும்புவதில்லை. ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டத்தின்கீழ் பிரிவு 17 (2) (a) 17 (4) (c) 17 (4) (d) ஆகியவற்றின்கீழ், ரிசர்வ் பாங்க் மாற்று உண்டியல்களை மறுதள்ளுபடி செய்யத் தயாராக இருந்த போதிலும் வங்கிகள் அவ்வாறு மறுதள்ளுபடி செய்து கொள்ள ரிசர்வ் பாங்கை அவ்வளவாக நாடவில்லை என்பது பின்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

## அட்டவணை 1

கடன் வகை

(ரூபாய் கோடிக் கணக்கில்)

| ஆண்டு (ஏப்ரல்-மார்ச்சு) | ரிசர்வ் பாங்க் | | அட்டவணையிலிட்ட வங்கிகள் | |
|---|---|---|---|---|
| | பிறவகைக் கடன் 1 | உண்டியல் மறு தள்ளுபடி 2 | பிறவகைக் கடன் 3 | உண்டியல் தள்ளுபடி 4 |
| 1950-51 | 16.75 | 8.21 | 533.66 | 13.26 |
| 1951-52 | 61.37 | 3.72 | 530.05 | 50.40 |
| 1952-53 | 26.95 | 8.80 | 473.98 | 54.64 |
| 1953-54 | 41.10 | 10.74 | 469.83 | 68.36 |
| 1954-55 | 47.87 | 10.37 | 512.41 | 110.41 |

| ஆண்டு (ஏப்ரல்-மார்ச்சு) | ரிசர்வ் பாங்க் பிறவகைக் கடன் | உண்டியல் மறு தள்ளுபடி | அட்டவணையிலிட்ட வங்கிகள் பிறவகைக் கடன் | உண்டியல் தள்ளுபடி |
|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 |
| 1955-56 | 79.94 | 12.23 | 612.45 | 148.79 |
| 1956-57 | 127.87 | 2.98 | 723.60 | 176.44 |
| 1957-58 | 78.40 | 7.68 | 806.21 | 156.52 |
| 1958-59 | 113.44 | 5.18 | 865.07 | 148.60 |
| 1959-60 | 156.54 | 33.60 | 951.29 | 176.59 |
| 1960-61 | 185.50 | 39.17 | 1110.96 | 208.58 |
| 1961-62 | 177.69 | 46.60 | 1178.38 | 229.22 |
| 1962-63 | 205.63 | 66.00 | 1309.28 | 278.73 |
| 1963-64 | 218.14 | 64.60 | 1520.15 | 296.31 |
| 1964-65 | 302.92 | 86.51 | 1698.12 | 335.58 |
| 1965-66 | 239.37 | 53.01 | 1954.78 | 341.65 |
| 1966-67 | 310.40 | 228.13 | 2277.88 | 477.62 |
| 1967-68 | 301.58 | 168.88 | 2555.95 | 542.30 |
| 1968-69 | 352.21 | 170.58 | 2884.50 | 602.22 |
| 1969-70 | 513.53 | 61.92 | 3413.24 | 675.70 |
| 1970-71 | 674.86 | 39.09 | 3831.81 | 975.72 |
| 1971-72 | 530.71 | 111.16 | 4335.27 | 1066.91 |
| 1972-73 | 460.62 | 132.32 | 5199.86 | 1118.73 |
| 1973-74 | 725.88 | 398.54 | 6147.18 | 1386.86 |

அட்டவணை 1, பத்தி 3—ல், அட்டவணையிலிட்ட எல்லா வங்கிகளும் கொடுத்த கடன் (தள்ளுபடி செய்த மாற்று உண்டியல்கள் தவிர) பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன. பத்தி 4-ல் வாங்கிய மற்றும் தள்ளுபடி செய்த மாற்று உண்டியல்களின் மதிப்பைப் (பத்தி 4) பிறவகைக் கடன்களோடு (பத்தி 3) ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எந்த ஓர் ஆண்டிலும் (1970-71 தவிர) அட்டவணையிலிட்ட வங்கிகள், பிறகடன் அளவில் தள்ளுபடி செய்த உண்டியல்களின் மதிப்பு 25 % க்கு அதிகமாக இல்லை என்பது தெரியவருகிறது.

பத்தி 1–ல் ரிசர்வ் பாங்க் கொடுத்த கடன்பற்றிய புள்ளி விபரங்களும், பத்தி 2-ல் மறுதள்ளுபடி செய்து கொடுத்தது பற்றிய புள்ளி விபரங்களும் தரப்பட்டுள்ளன. ரிசர்வ் பாங்க் மறு தள்ளுபடி செய்து அளித்த உதவியைவிட, பிறவகைக் கடன்களே அதிகமாக உள்ளன. ஆனால், 1966-67, 67-68, 68-69, 73-74 ஆகிய ஆண்டுகளில் உண்டியல்களின் பங்கு அதிகமாகியுள்ளது. உண்டியல்களின் பங்கு பிறவகைக் கடனில் குறைவாக இருப்பதைப் பார்க்கையில், வங்கிகள் மறுதள்ளுபடி செய்து கொள்ள அவ்வளவாக விரும்பவில்லை என்பது தெரிகிறது. மேலும் ரிசர்வ் பாங்க் அரசாங்கக் கருவூல உண்டியல்களையே பெரும்பாலும் தள்ளுபடி செய்திருந்தது. உள்நாட்டு உண்டியல்களின் மதிப்பு மிகக்குறைவே.

## வேளாண்மை உண்டியல்கள்

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17 (2) (b), 17 (4) (c), 17 (4) (d) ஆகியவற்றின்கீழ், அட்டவணையிலிட்ட வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவை அளிக்கும் வேளாண்மை மாற்று உண்டியல்களை ரிசர்வ் பாங்க் மறுதள்ளுபடி செய்யலாம். ஆனால் இத்தகைய உண்டியல்களும் அவ்வளவு அதிகமாக இல்லை. மேற்கண்ட பிரிவுகளின்கீழ் ரிசர்வ் பாங்க் வழங்கிய கடன்பற்றிய புள்ளி விபரங்கள் பின்னால் தரப்பட்டுள்ளன.

## அரசாங்கக் கருவூல உண்டியல்கள்

மத்திய அரசும், மாகாண அரசுகளும், முதல் உலகப் போரின்போது முதன்முதலாக, அரசாங்கக் கருவூல உண்டியல்களை வெளியிட்டன. மத்திய அரசு தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. அட்டவணை 2–ல், ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் பொதுமக்களிடம் இருந்த அரசாங்கக் கருவூல உண்டியல்களின் மதிப்பு பத்தி 2-லும், ரிசர்வ் பாங்கிடம் இருந்த உண்டியல்கள் பத்தி 3-லும், மாநில அரசுகள் மற்றும் பிற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் ஆகியோரிடம் இந்தக் கருவூல உண்டியல்கள் பத்தி 4-லும் தரப்பட்டுள்ளன. அப்புள்ளி விபரங்களைப் பார்க்கையில், ரிசர்வ் பாங்கே ஒவ்வோர் ஆண்டு இறுதியிலும் மிக அதிகமான அரசாங்கக் கருவூல மாற்று உண்டியல்களைப் பெற்றிருந்தது என்பது தெரியவரும். 1969–70, 71-72, 72-73, 73-74 ஆகிய ஆண்டுகளில் இறுதியில் பொதுமக்களின் பங்கு சற்று அதிகமாகி இருப்பதைக் காணலாம். பொதுமக்கள் அதிகமாகப் பெற்றிருததால் கருவூல உண்டியல்களும், உண்டியல்களாக அவ்வளவாக வளரவில்லை.

## அட்டவணை 2

### இந்திய அரசாங்கக் கருவூல மாற்று உண்டியல்கள்

(Outstandings - at the end of the period)

*(ஒவ்வோர் ஆண்டுக்கால இறுதியில் பாக்கி நின்ற தொகை)*

*(ரூபாய் கோடிக் கணக்கில்)*

| ஆண்டு (ஏப்ரல்-மார்ச்சு) | மொத்தம் 1 | பொது மக்கள் 2 | ரிசர்வ் பாங்க் 3 | மாநில அரசுகளும் பிற அங்கீகரிக்கப் பட்ட நிறுவனங்களும் 4 |
|---|---|---|---|---|
| 1950-51 | 358.02 | — | 274.52 | 83.51 |
| 1955-56 | 595.25 | 13.00 | 487.52 | 94.74 |
| 1960-61 | 1106.30 | 29.13 | 886.41 | 190.75 |
| 1965-66 | 1611.82 | 81.75 | 1388.41 | 141.66 |
| 1969-70 | 2233.66 | 150.24 | 1757.41 | 326.00 |
| 1970-71 | 2517.92 | 88.43 | 2218.41 | 211.08 |
| 1971-72 | 2765.62 | 157.47 | 2449.41 | 158.73 |
| 1972-73 | 4044.26 | 240.78 | 3385.41 | 418.06 |
| 1973-74 | 4384.30 | 487.68 | 3741.41 | 155.21 |

### ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மாற்று உண்டியல்கள்

இத்தகைய மாற்று உண்டியல்கள் பெரும்பாலும் ஸ்டர்லிங்கில் எழுதப்படுவதால், நாணயமாற்று வங்கிகளே அவற்றில் பெரும்பாலும் ஈடுபடுகின்றன. எந்த அளவுக்கு அட்டவணையிலிட்ட இந்திய வணிக வங்கிகள் வெளிநாட்டு உண்டியல்களில் ஈடுபட்டன என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணை 3 காட்டுகிறது.

## அட்டவணை 3

### அட்டவணையிலிட்ட இந்திய வணிக வங்கிகள் வாங்கிய மற்றும் தள்ளுபடி செய்த மாற்று உண்டியல்கள்

(ரூபாய் கோடிக் கணக்கில்)

| | வாங்கிய மற்றும் தள்ளுபடி செய்த மாற்று உண்டியல்கள் | |
|---|---|---|
| ஆண்டு ஏப்ரல்-மார்ச்சு | உள்நாட்டு உண்டியல்கள் | வெளிநாட்டு உண்டியல்கள் |
| 1954-55 | 73·72 | 12·68 |
| 1955-56 | 94·57 | 20·23 |
| 1956-57 | 103·32 | 28·59 |
| 1957-58 | 88·47 | 20·27 |
| 1958-59 | 95·44 | 21·55 |
| 1959-60 | 108·86 | 25·46 |
| 1960-61 | 134·18 | 29·77 |
| 1961-62 | 151·58 | 27·64 |
| 1962-63 | 183·36 | 35·08 |
| 1963-64 | 200·56 | 46·41 |
| 1964-65 | 241·10 | 56·31 |
| 1965-66 | 252·05 | 60·11 |
| 1966-67 | 329·82 | 95·77 |
| 1967-68 | 382·91 | 99·50 |
| 1968-69 | 420·26 | 111·43 |
| 1969-70 | 463·77 | 135·10 |
| 1970-71 | 728·96 | 150·83 |
| 1971-72 | 781·92 | 160·99 |
| 1972-73 | 779·56 | 181·34 |
| 1973-74 | 933·17 | 276·79 |

1954-55 க்கு முன்னர், அட்டவணையிலிட்ட இந்திய வணிக வங்கிகள் வாங்கிய மற்றும் தள்ளுபடி செய்த மாற்று உண்டியல்கள் பற்றிய புள்ளி விபரங்களை, ரிசர்வ் பாங்க், தனது வெளியீடுகளில் தரவில்லை. கடந்த பல ஆண்டுகளில், இவ் வங்கிகள் வாங்கிய வெளிநாட்டு மாற்று உண்டியல்களை, உள்நாட்டு உண்டியல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், வெளிநாட்டு உண்டியல்களின் பங்கு சுமார் 25% ஆகும். எனவே இவ் வங்கிகள் இன்றும் தங்கள் உண்டியல் வியாபாரத்தைப் பெருக்க வேண்டிய நிலையில்தாம் உள்ளன.

## இம்பீரியல் பாங்க் ஆஃப் இந்தியா

ஒரு மாற்று உண்டியல் வளராததற்கு, இம்பீரியல் வங்கியும் (தற்போதைய ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா) ஒரு காரணமாகும். 1935 வரை இந்தியாவில் ஒரு மைய வங்கி இல்லாததால், இம்பீரியல் வங்கியே பல மைய வங்கிப் பணிகளைப் புரிந்து வந்தது. இம்பீரியல் வங்கி ஒரு பெரிய வணிக வங்கியும் ஆகும். பிற வணிக வங்கிகள், இம்பீரியல் வங்கி தங்களுடன் கடும் போட்டியிடுவதாகக் கருதியதால், அதனிடம் தங்கள் வசமிருக்கும் மாற்று உண்டியல்களைத் தள்ளுபடி செய்து கொள்ளவோ அல்லது அதன் பார்வைக்குக் கொண்டுவரவோ மறுத்தன. ஆனால், இம்பீரியல் வங்கி, வணிக வங்கிகளின் மாற்று உண்டியல்களை மறுதள்ளுபடி செய்துதரத் தயாராக இருந்தது. ஆனால், எத்தகைய உண்டியல்களை மறுதள்ளுபடி செய்யும் என்று இம்பீரியல் வங்கி வரையறுக்காததால், வங்கிகள் குழப்பத்தில் இருந்தன.

## ரொக்கக் கடனும், மேல்வரைப் பற்றுகளும் (Cash credit and overdrafts)

அட்டவணையிலிட்ட இந்திய வணிக வங்கிகள், ரொக்கக் கடன், மேல்வரைப் பற்று ஆகிய வழிகளில் கடன் கொடுப்பதையே பெரிதும் விரும்பின. வங்கிகளின் வாடிக்கையாளரும் அவ்வாறு கடன் பெறுவதையே பல காரணங்களுக்காக விரும்பினர்.

துவக்கத்தில் இருந்ததுபோல் மாற்று உண்டியல்களின் பங்கு சமீப காலங்களில் அவ்வளவு குறைவாக இல்லை என்பதை அட்டவணை 4 காட்டுகிறது. 1950-51-ல் பிறவகைக் கடனில், மாற்று உண்டியல்களின் பங்கு 2% ஆகும். ஆனால், படிப்படியாக இது உயர்ந்து, 1973—74-ல் 22% ஆக இருந்தது.

# அட்டவணை 4

## அட்டவணையிலிட்ட இந்திய வணிக வங்கிகள் கொடுத்த கடன்

(ரூபாய் கோடிக் கணக்கில்)

| ஆண்டு (ஏப்ரல்-மார்ச்சு) | கடன், ரொக்கக் கடன், மேல்வரைப்பற்று | வாங்கிய மற்றும் தள்ளுபடி செய்த மாற்று உண்டியல்கள் |
|---|---|---|
| 1950-51 | 403·78 | 12·09 |
| 1951-52 | 347·77 | 47·65 |
| 1952-53 | 348·12 | 51·05 |
| 1953-54 | 349·77 | 64·04 |
| 1954-55 | 377·88 | 86·40 |
| 1955-56 | 457·30 | 114·80 |
| 1956-57 | 557·82 | 131·91 |
| 1957-58 | 654·56 | 108·74 |
| 1958-59 | 718·61 | 126·99 |
| 1959-60 | 796·20 | 134·32 |
| 1960-61 | 921·64 | 163·95 |
| 1961-62 | 978·94 | 179·22 |
| 1962-63 | 1086·60 | 218·44 |
| 1963-64 | 1275·01 | 246·97 |
| 1964-65 | 1456·32 | 297·41 |
| 1965-66 | 1694·44 | 312·16 |
| 1966-67 | 1942·21 | 425·59 |
| 1967-68 | 2200·09 | 482·41 |
| 1968-69 | 2470·68 | 537·69 |
| 1969-70 | 2961·83 | 598·87 |
| 1970-71 | 3340·36 | 879·73 |
| 1971-72 | 3822·98 | 942·91 |
| 1972-73 | 4643·37 | 960·90 |
| 1973-74 | 5494·78 | 1269·96 |

## அதிக அளவு முத்திரைக் கட்டணம்

இந்தியாவில் தவணை உண்டியல்களுக்கு (Usance Bills) அதிக முத்திரைக் கட்டணம் (stamp duty) செலுத்த வேண்டியிருப்பதால், அச் செலவும் கடன் அடக்க விலையில் சேருகிறது. 1957 மே-யில் இக் கட்டணம் குறைக்கப்பட்ட போதிலும், கடன் அடக்க விலை (cost of loan) அதிகமே.

## தேவையான அளவுக்குப் பண்டகங்கள் இல்லாமை

போதிய அளவுக்குப் பண்டகங்கள், (warehouses) இல்லாததால், ஆவணங்கள் சேர்ந்த உண்டியல்கள் (Documentary Bills) கிடைப்பது அரிதாக உள்ளது. பண்டகங்களின் வளர்ச்சி இந்தியாவில் ஓர் அண்மைக்கால நிகழ்ச்சியே. மத்திய பண்டகக் கூட்டுருவும் (Central ware housing corporation) மாநிலப் பண்டகக் கூட்டுருகளும் நிறைய அளவில் பண்டகங்களைத் திறக்க முயற்சி செய்து வருகின்றன. பண்டகங்களையும், பண்டக இரசீதுகள் பேரில் கொடுக்கப்படும் கடன்களையும் ஊக்குவிக்கும் வகையில், பொறுக்குக் கடன் கட்டுப்பாட்டை (selective credit control) விதிக்கும்போது, பண்டக இரசீதுகளின் பேரில் வழங்கப்படும் கடன்களுக்குச் சலுகை முறையில், குறைந்த அளவு வரம்பையே ரிசர்வ் பாங்க் விதிக்கிறது.

## வங்கி அலுவலகங்களின் குறைந்த எண்ணிக்கை

வங்கியியலில் வளர்ச்சியுற்ற பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், இந்தியாவில் உள்ள வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. இதனுல் உண்டியல்களை வசூல் செய்வதில் கால தாமதம் ஏற்படுகிறது; சில சமயங்களில் உண்டியல்களை வசூல் செய்ய முடிவதில்லை. மேலும் சிற்றூர்களில் வங்கிகள் இல்லையெனில், அவ்வூர் வியாபாரிகளின் தொழில் நன்மதிப்பு (good will) பற்றி வங்கிகள்மூலம் அறிந்து கொள்ள முடிவதில்லை. இதனுல் உண்டியல்களை வியாபாரத்தில் ஈடுபடுத்த முடிவதில்லை.

## உண்டியல் அங்காடி (Bill Market)

1952-லிருந்துதான் மாற்று உண்டியல் அங்காடி என்று பெயரளவில் சொல்லக்கூடிய ஓர் அங்காடி இருந்து வருகிறது. பொதுவாக நாணயமாற்று வங்கிகளே உண்டியல்களைத் தள்ளுபடி செய்துவந்தன. நல்ல தள்ளுபடியகம் (Discount House) இல்லாததால் பல சிக்கல்கள் ஏற்பட்டன. சில சமயங்களில் சில மாற்று உண்டியல்களை முதிர்வு அடையும்வரை வைத்திருக்க வேண்டி

யிருந்தது அல்லது இலண்டன் கழிவுச் சந்தையில் மறுதள்ளுபடி செய்ய வேண்டிருந்தது.

ரிசர்வ் பாங்க், தனது நிதிக் கொள்கையில், 1951-ல் சில பெரிய மாறுதல்களைச் செய்தது. பாங்க் வீதம் 3 விழுக்காட்டிலிருந்து $3\frac{1}{2}$ விழுக்காட்டுக்கு 1951 நவம்பரில் உயர்த்தப்பட்டது. அவசியம் ஏற்பட்டாலொழிய, ரிசர்வ் பாங்க் வெளி அங்காடி நடவடிக்கை மூலம் அரசாங்க ஆவணங்களை வாங்கத் தயாராக இல்லை என்று அறிவித்தது. இதனால் அப்போது ஏற்படவேண்டிய கடன் பெருக்கம் அவ்வளவாக ஏற்படவில்லை. வெளிஅங்காடி நடவடிக்கையில் இத்தகைய மாறுதல்கள் செய்யப்பட்டதால், வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் கடன்வாங்க வேண்டிய நிலைமை உருவாகியது. 1952 சனவரியில்தான் மாற்று உண்டியல் அங்காடித் திட்டத்தை ரிசர்வ் பாங்க் கொண்டுவந்தது. இத் திட்டத்தின் கீழ் ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17 (4) (c) யின்படி 10 கோடி ரூபாயோ அல்லது அதற்கும் அதிகமாகவோ வைப்புகளைப் பெற்றுள்ள வங்கிகளுக்குத் தவணைப் புரோநோட்டுகள் (Usance promissory notes) மீது, ரிசர்வ் பாங்க் கடன் (advance) அளிக்க ஒத்துக்கொண்டது. இரு நல்ல கையொப்பங்களைக் கொண்ட (அவற்றில் ஒரு கையொப்பம் ஓர் அட்டவணையிலிட்ட வங்கியுடையதாகவுள்ள) உண்மையான வணிக அல்லது வியாபார நடவடிக்கையால் எழும் மாற்று உண்டியல்களை ரிசர்வ் பாங்க் மறு தள்ளுபடி செய்ய இசைந்தது. அத்தகைய மாற்று உண்டியல்கள்மீது ரிசர்வ் பாங்க், பாங்க் வீதத்திற்கு $\frac{1}{2}$ விழுக்காடு குறைவான வீதத்தில் கடன் கொடுக்கவும், ஒவ்வொரு கடனிற்கும் குறைந்த அளவு 25 இலட்ச ரூபாயாகவும், ஒவ்வோர் உண்டியலுக்கும் 1 இலட்ச ரூபாயாகவும் முடிவு செய்யப்பட்டது. மேலும், வங்கிகள் கடனைத் தவணை உண்டியல்களாக (Usance Bills) மாற்றுவதில் ஏற்படக்கூடிய பத்திரக் கட்டணத்தில் (stamp duty) பாதியை, ரிசர்வ் பாங்க் ஏற்க ஒத்துக்கொண்டது. 1953 சூன் திங்கள், மாற்று உண்டியல் அங்காடித் திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டது. அதன்படி 5 கோடி ரூபாய் அல்லது அதற்கும் மேலான வைப்புகள் உடைய வங்கிகள் மேற்கூறப்பட்ட வசதிகளை ரிசர்வ் பாங்கிடமிருந்து பெறத் தகுதிபெற்றன. 1954 சூன் திங்களில், இத் திட்டம் உரிமம் பெற்ற எல்லா வங்கிகளுக்கும் நீடிக்கப்பட்டது. குறைந்த பட்சக் கடன் அளவு 10 இலட்ச ரூபாயாகவும், பின்னர் 50,000 ரூபாயாகவும் குறைக்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் வங்கிகள் நிறையக் கடன்களைப் பெற்றன. வங்கிகள்மீதும், பணச் சந்தைமீதும் கட்டுப்பாட்டைச் செலுத்த இத் திட்டம் ரிசர்வ் பாங்கிற்குப் பெருமளவில் உதவியது. அரசாங்கக் கருவூல உண்டி-

யல்கள் பணச்சந்தையில் முக்கிய பங்கை வகிக்கின்றன. கருவூல உண்டியல்கள் 3 மாதகால முடிவில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியவை. அரசாங்கக் கருவூல உண்டியல்கள் ரொக்கத் தன்மை வாய்ந்தவையாக இருப்பதாலும், எளிதாக விற்கக் கூடியவையாக இருப்பதாலும், வங்கிகள் அரசாங்கக் கருவூல உண்டியல்களில் முதலீடு செய்வதைப் பெரும்பாலும் விரும்புகின்றன. வங்கிகள் அரசாங்கக் கருவூல உண்டியல்களை ரிசர்வ் பாங்கிடம் மறு தள்ளுபடி செய்து கொள்வது ஒரு மிகப்பெரிய பலவீனமாகப் பணச் சந்தையில் கருதப்பட்டதால் அரசாங்கக் கருவூல உண்டியல்களின் மறு தள்ளுபடி அதிகம் இல்லை. ஆனுல், தற்போது, ரிசர்வ் பாங்க், கருவூல உண்டியல்களை மறுதள்ளுபடி செய்யத் தயாராக இருக்கிறது.

## ஏற்றுமதி மாற்று உண்டியல்கள் சேர்க்கப்படல்

மாற்று உண்டியல்கள் பயன்படுத்தப்படுவதை அதிகமாக்குவதற்காக, ஏற்றுமதி உண்டியல்களுக்கும் மாற்று உண்டியல் அங்காடித் திட்டத்தின் கீழ், 1958 அக்டோபர் 1-லிருந்து ஓராண்டிற்கு, மறு தள்ளுபடி வசதிபெறத் தகுதி பெற்றவை என்று ரிசர்வ் பாங்க் அறிவித்தது. உண்டியல் அங்காடித் திட்டத்தின்கீழ் கடன்பெறத் தகுதிபெற்ற அட்டவணையிலிட்ட வங்கிகளும், வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டவர்களும், இத் திட்டத்தின் கீழ் ஏற்றுமதி உண்டியல்களை மறுதள்ளுபடி செய்து உதவி பெறலாம். சிறு ஏற்றுமதியாளருக்குப் பயனளிக்கும் வகையில், மறுதள்ளுபடி செய்யக்கூடிய தனி ஓர் உண்டியலின் மதிப்பு 20,000 ரூபாயாகவும், எந்த ஒரு சமயத்திலும் மறு தள்ளுபடி செய்யக்கூடிய உண்டியல்களின் மதிப்பு இரண்டு இலட்ச ரூபாயாகவும் நிருணயிக்கப்பட்டது. (பிறவகைக்கு, இந்த அளவுகள் முறையே 50,000 ரூபாயும், 5 இலட்ச ரூபாயும் ஆகும்). பிற உண்டியல்களுக்கு உள்ளது போலவே, இந்த ஏற்றுமதி உண்டியல்களுக்கும் 4% வட்டி நிருணயிக்கப்பட்டது. ஆனுல் தவணைப் புரோ நோட்டுக்களின் முத்திரைக் கட்டணத்தில் பாதியை ரிசர்வ் பாங்க் ஏற்கும். காலப் போக்கில், ஏற்றுமதி உண்டியல்களை மறு தள்ளுபடி செய்வது, 1961 செப்டம்பர் 30 வரை நீடிக்கப்பட்டது. உண்டியல்களின் மதிப்பும் படிப்படியாகக் குறைக்கப்பட்டது. 1961 சனவரி 12இல், மறுதள்ளுபடி செய்யக் கூடிய தனி ஒரு தவணைப் புரோ நோட்டின் மதிப்பு 5,000 ரூபாய்க்குக் குறைக்கப்பட்டது. ஆனுல் வங்கிகள், மறுதள்ளுபடி வசதி பெற எந்த ஒரு சமயத்திலும் குறைந்தது 1 இலட்ச ரூபாய் மதிப்பிற்காவது மாற்று உண்டியல்களை ரிசர்வ் பாங்கிடம் கொடுக்க வேண்டும், 1959 சனவரி 17ஆம் நாளிலிருந்து, முத்திரைக் கட்டணத்தின் முழு

அளவையும் ரிசர்வ் பாங்க் ஏற்றுக் கொண்டது. துவக்கத்தில், பம்பாயிலும், கல்கத்தாவிலும் உள்ள ரிசர்வ் பாங்கின் அலுவலகங்களில் மட்டுமே அளிக்கப்பட்டு வந்த வசதிகள், பின்னர் சென்னை, புதுடில்லி, கான்பூர், பெங்களூர், நாக்பூர் ஆகிய இடங்களில் உள்ள அலுவலகங்களிலும் அளிக்கப்பட்டன.

இந்த உண்டியல் அங்காடித் திட்டத்தைப் பற்றிக் குறை கூறாதவரே இல்லை எனலாம். குறைகூற வேண்டும் என்ற தவறான நோக்குடன் அவர்கள் குறைகூறவில்லை. திட்டத்தில் இருந்த குறைகளே அவர்களைக் குறைகூறத் தூண்டியது என்பதுதான் உண்மை.

பேராசிரியர் வகில் (Vakil) பின்வருமாறு இத் திட்டத்தைப் பற்றிக் கூறியுள்ளார்:

உண்டியல் அங்காடித் திட்டம் என்ற பெயரே தவறானது; இந்தியாவில் உண்டியல்களும் இல்லை, அவற்றுக்கான அங்காடிகளும் இல்லை. ரிசர்வ் பாங்கால் மேற்கொள்ளப்பட்ட இம் முயற்சி ஒரு திட்டமுமில்லை. குறைந்த வட்டியில் கடன் கொடுப்பதற்கு இது ஓர் ஒழுங்கு முறையே ஆகும். செயற்கை உண்டியல்களின் பேரில் உண்டியல் அங்காடியை நிறுவினால், அது தோல்வியில்தான் முடியும். ரிசர்வ் பாங்கின் இத் திட்டத்தை மிகப் பரிசுத்தமான ரோமப் பேரரசுக்கே (Most Holy Roman Empire) ஒப்பிட வேண்டும். அது ''பரிசுத்தமானதுமன்று, ரோம வழியினத் தவருடையதும் அன்று, பேரரசும் அன்று'' என்பது போல.

உண்டியல் அங்காடித் திட்டம் வெற்றி பெறாததற்கு, ரிசர்வ் பாங்கின் முன்னாள் பொருளாதார ஆலோசகரான தாக்கூர் (P.T. Thakore) கீழ்க்கண்ட காரணங்களைக் கூறியுள்ளார்.

1. செயற்கை உண்டியல்களின் அடிப்படையில் இத் திட்டம் செயல்பட்டதால் வெற்றியடையவில்லை. கேட்பு உண்டியல்களை (Demand bills) தவணை உண்டியல்களாக (Usance bills) மாற்றும் திட்டம் தவறானது.

2. எளிதில் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு, இத் திட்டம் சிக்கல் நிறைந்ததாக இருந்ததால் தோல்வியடைந்தது.

3. தொடர்ந்து அளித்து வந்த சலுகைகளை ஒன்றன் பின் ஒன்றாக ரிசர்வ் பாங்க் நிறுத்திக் கொண்டதால், இத் திட்டம் நொண்டித் திட்டமாகியது.

4. 90 நாள்களுக்கு உட்பட்ட உண்டியல்களை மட்டுமே இத் திட்டத்தின் கீழ் மறுதள்ளுபடி செய்யலாமாதலால், அதற்கு மேற்பட்ட கால அளவுள்ள உண்டியல்களை வங்கிகள் தள்ளுபடி செய்ய முடியாமல் போயிற்று.

5. இத் திட்டத்தினைச் சிறு வங்கிகளும் பயன்படுத்தும் அளவிற்கு, ரிசர்வ் பாங்க் எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ள வில்லை. ஆகவே, நாணயமாற்று வங்கிகளும், இம்பீரியல் வங்கியும் ஒரு சில பெரிய வணிக வங்கிகளும் மட்டுமே இத் திட்டத்தின் மூலம் அதிகப் பயனடைந்தன.

6. ரிசர்வ் பாங்க் அலுவலகர்களின் கெடுபிடி, சந்தேக மனப்பான்மை, நம்பிக்கையின்மை, அளவுக்கு மீறிய கண்டிப்பு ஆகியவை காரணமாகப் பல வணிக வங்கிகள் இத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

சிறுமனப்பான்மையால், உந்தப்பட்ட அவநம்பிக்கை, கண்ணியமின்மை, நாணயமின்மை, ஆகியவற்றின் அடிப்படையில் இத் திட்டம், 'A' முதல் 'Z' வரை செயல்படுத்தப்பட்டது என்கிறார் தாக்கூர்.

இத் திட்டத்தைச் செம்மையாக்குவதற்கு ஆலோசனை தெரிவித்தவர்களின் எண்ணிக்கை, இத் திட்டத்தைக் குறை கூறியவர் எண்ணிக்கை ஒன்றும் குறைந்துவிடவில்லை. ஆலோசனை தெரிவித்தவர்களும் பலர், தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளும் பல. ''அறுவை (operation) முடிந்து விட்டது, ஆனால் நோயாளிதான் இறந்துவிட்டார்'' என்பதுபோல, ஆலோசனைகள் இத் திட்டத்தின் உயிரைக் காக்கப் பயன்படவில்லை. பெயரளவில், உயிர் பிரியுமுன் மன்றாடும் நோயாளியைப்போல, இத் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வந்தது.

## புதிய உண்டியல் மறுதள்ளுபடித் திட்டம்

ஓர் உண்டியல் அங்காடியை உருவாக்கவும், மாற்று உண்டியலை ஒரு கடன் கருவியாகப் பெரியளவில் பயன்படுவதற்கு யோசனை தெரிவிக்கவும், 1970 பிப்ரவரியில் ரிசர்வ் பாங்க் ஒரு குழுவை நியமித்தது.

அங்காடித் திட்டம் பற்றிப் பின்வருமாறு இக் குழு கருத்துத் தெரிவித்தது:—

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டத்தை உருவாக்கியவர்கள், மாற்று உண்டியல்களை வாங்குவது/மறுதள்ளுபடி செய்வதன்

மூலம், ரிசர்வ் பாங்க், அட்டவணையிலிட்ட வங்கிகளுக்கு மறுநிதி வசதியளிக்கும் என்று எதிர்பார்த்தனர். ரிசர்வ் பாங்க் மறு தள்ளுபடி செய்வது பற்றிய சரத்துகள் பிரிவு 17-ல் உள்ளன. ஆனால் இவை செயலற்று (dormant) உள்ளன. கடன்களைத் தவணைப் புரோநோட்டுகளாக மாற்றி அவற்றின் பேரில் ரிசர்வ் பாங்கிடம் வங்கிகள் மறு நிதிவசதி பெறுகின்றன. ஆனால் ''இத்தகைய 'உண்டியல்கள்' உண்டியல்களும் இல்லை, அவற்றுக்கு ஒரு சந்தையும் இல்லை.'' ரொக்கக் கடனும், மேல்வரைப் பற்றுகளும், வணிக உண்டியல்களின் பற்றுக் குறையும்தாம் இதற்குக் காரணம்.

ரிசர்வ் பாங்கால் நியமிக்கப்பட்ட குழு, 1970 ஜூனில் தனது அறிக்கையை ரிசர்வ் பாங்கிடம் சமர்ப்பித்தது. அக் குழுவின் பரிந்துரையின் பேரில், ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17 (2) (a)யின் கீழ் புதியதொரு மாற்று உண்டியல் மறுதள்ளுபடித் திட்டத்தை ரிசர்வ் பாங்க் கொண்டு வந்தது. அத் திட்டத்தின் முக்கிய அம்சங்களும், திட்டத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. பொதுத்துறையில் உள்ள வங்கிகள் உள்பட, அட்டவணையிலிட்ட எல்லா வணிக வங்கிகளும் மறுதள்ளுபடி செய்வதற்காக, ரிசர்வ் பாங்கிடம் மாற்று உண்டியல்களைக் கொடுக்கத் தகுதி பெற்றவை.

2. சரக்கு விற்பனையின் காரணமாக எழக்கூடிய உண்மையான வியாபார மாற்று உண்டியல்கள் மட்டுமே இத் திட்டத்தின் கீழ் வரும்.

3. மாற்று உண்டியலானது சரக்கு வாங்குபவருடைய வங்கி மீது எழுதப்பட்டதும் (drawn on) அவ் வங்கியால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்; குறிப்பிட்ட அந்த வங்கி உரிமம் பெறாத அட்டவணையிலிட்ட வங்கியாக இருப்பின், அவ்வுண்டியல், கூடுதலாக, ஓர் உரிமம் பெற்ற அட்டவணையிலிட்ட வங்கியினுடைய கையொப்பத்தைப் பெற்றிருக்க வேண்டும்; உண்டியலானது, சரக்கு வாங்குபவர் பேரிலும், அவரது வங்கியின் பேரிலும் கூட்டாக (jointly) எழுதப்பட்டு, அவ் விருவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கலாம்.

4. உண்டியல்கள் 90 நாள்களுக்கு அதிகப்படாத கால அளவை உடையனவாக இருத்தல் வேண்டும்; சில விதி விலக்கு பெற்ற சமயங்களில், 120 நாள்கள் வரைக்கான கால அளவை

உடையனவாக இருக்கலாம்; ஆனால். 120 நாள்களுக்கு உட்பட்ட கால முதிர்வை உடைய மாற்று உண்டியல்களை, ரிசர்வ் பாங்கிடம் மறுதள்ளுபடிக்காக எடுத்துச் செல்லும்போது, 90 நாள்களுக்கு அதிகமாகாத கால முதிர்வை உடையனவாக இருத்தல் வேண்டும்.

5. உண்டியல் இரு நல்ல கையொப்பங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

6. ரிசர்வ் பாங்கால் அவ்வப்போது அறிவிக்கப்படும் ஒரு சில குறிப்பிட்ட சரக்கு விற்பனையால் எழக்கூடிய மாற்று உண்டியல்கள், இத் திட்டத்திலிருந்து பாங்கின் அறிவிப்புப்படி அவ்வப்போது நீக்கப்படும்.

7. பம்பாய், கல்கத்தா, சென்னை, புதுடில்லி ஆகிய இடங்களில் உள்ள ரிசர்வ் பாங்கின் அலுவலகங்களில், துவக்கத்தில் இத் தகைய மறுதள்ளுபடி வசதிகள் அளிக்கப்படும்.

8. சிறு சிறு மாற்று உண்டியல்களை (மிகக் குறைந்த மதிப்புத் தொகையை உடையன) ஒவ்வொன்றாக, தனியாக, மறுதள்ளுபடி செய்வதற்குப்பதில், அவ் வுண்டியல்களைத் தொகுப்புத் தொகுப்பாக (in bunches) மறு தள்ளுபடிக்குக் கொடுக்கவேண்டும். தனியொரு மாற்று உண்டியலின் மதிப்பு 5,000 ரூபாய்க்குக் குறைவாக இருக்கக்கூடாது. எந்த ஒரு சமயத்திலும் மறு தள்ளுபடி செய்வதற்காகக் கொடுக்கப்படும் மாற்று உண்டியல்களின் மொத்த மதிப்பு 50,000 ரூபாய்க்குக் குறைவாக இருக்கக் கூடாது.

புதிய மாற்று உண்டியல் மறுதள்ளுபடித் திட்டம் 1970 நவம்பர் 1-ம் நாளிலிருந்து அமுலுக்கு வரும் என்று ரிசர்வ் பாங்க் 1970 ஆகஸ்டில் அறிவித்தது. இத் திட்டம் வங்கியியல் முறையில் உள்ள ரொக்கத் தன்மையைப் பரப்பிச் சமமாக்கவும், ரிசர்வ் பாங்கிடம் வங்கிகள் கடன் பெறுவதைக் குறைக்கவும் மிகவும் பயன்படும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. முழு வங்கியியல் முறையும் (Whole banking system) நிதிப்பற்றாக்குறையால் இன்னலுற்றால்தான் ரிசர்வ் பாங்கிடம் உதவி பெறலாம். ஒரு சில வங்கிகள் நிதிப் பற்றாக் குறையால் தவித்தாலும், ரிசர்வ் பாங்கிடம், நிதி உதவி பெற முடியாது.

இந்திய உணவுத் தானியக் கூட்டுரு (Food Corporation of India) மாநில அரசுகள் மற்றும்/அல்லது அவற்றின் அங்கீகரிக்கப் பட்ட முகவர்கள் ஆகியோருக்கு உணவுத் தானியக் கொள்முதல், விநியோகம் ஆகியவற்றிற்காகக் கொடுக்கப்படும் கடனைப்

பொறுத்தவரை, 1970 அக்டோபர்' 30-ல் அளிக்கப்பட்ட கடன் அளவிலிருந்து எவ்வளவு உயர்ந்திருக்கிறதோ அதில் 50%அளவுக்குப் பாங்க் வீதத்தில் மறு நிதிவசதி அளிக்க ரிசர்வ் பாங்க் இசைந்தது. 1971 ஏப்ரல் 9 ஆம் நாளிலிருந்து 1971 ஜூன் 30 ஆம் நாள் வரையில் உள்ள கால அளவிற்கு, மேற்கூறப்பட்ட மறு நிதிவசதி 50%லிருந்து 75%க்கு உயர்த்தப்பட்டது. பின்னர், கால அளவு 1971 ஜூலை இறுதி வரை நீடிக்கப்பட்டது. பின்னர், இவ் வசதி 1971 ஆகஸ்டிற்கு 60%க்கும் அதற்குப்பிறகு 50%க்கும் குறைக்கப்பட இருந்தது. (அடிப்படை அளவு, முன் போல், 1970 அக்டோபர் 30 லிருந்து குறிப்பிட்ட நாள் வரையில் அதிகரித்த தொகையில் இத்தனை விழுக்காடு) திடீர்த் தேவைகளினால் அல்லது கடன் அதிகம் தேவைப்படுவதினால் ஒரு சில வங்கிகளின் ரொக்கத் தன்மையில் கடினநிலை நிலவினால் அச் சமயங்களில், தகுந்த வங்கிகளுக்கு, பாங்க் வீதத்தில் ரிசர்வ் பாங்க் தான் கருதியபடி மறு நிதி வசதியளிக்கலாம்.

1970 டிசம்பர் 25-ல், முந்திய ஆண்டில் இருந்ததைவிட பணஅளிப்பு 755 கோடி (12%) ரூபாய் அதிகரித்திருந்தது. 1970 டிசம்பரில் பொதுவிலை மட்டம் (General price level) 1969 டிசம்பரில் இருந்ததைவிட 6.5% உயர்ந்திருந்தது. ரிசர்வ் பாங்கிடமிருந்தும் வங்கிகள் அதிகமாகக் கடன் வாங்கி இருந்தன. இந் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக 1971 சனவரி 9 இல், ரிசர்வ் பாங்க், பாங்க் வீதத்தை 5% லிருந்து 6%க்கு உயர்த்தியது. நிகர ரொக்கத்தன்மை வீதத்திலும் மாறுதல்கள் செய்யப்பட்டன.

முந்துரிமைத் துறைகளுக்கு (Priority sectors) முன்னர் மறுநிதி வசதி அளித்து வந்ததுபோல், அதே நிபந்தனைகளின் பேரில், தொடர்ந்து நிதி வசதியை ரிசர்வ் பாங்க் அளித்து வந்தது.

1. பிரதமக் கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம் சிலவற்றுக்குக் கொடுக்கப்பட்ட கடன், ஏற்றுமதிக்குக் கொடுக்கப்பட்ட கடன் ஆகிய இரண்டிற்கும் ரிசர்வ் பாங்கால் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து அதிகரித்துள்ள கடன் அளவுக்கு ரிசர்வ் பாங்கால் கொடுக்கப்படும் மறுநிதிக்கு $4\frac{1}{2}$% வட்டி (நிகர ரொக்கத்தன்மை) வீதம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

2. சிறுதொழில்கள், விவசாயிகள் ஆகியோருக்குக் கொடுக்கப்பட்ட கடனுக்கு, ரிசர்வ் பாங்கால் குறிப்பிடப்பட்ட ஒரு தேதியிலிருந்து அதிகரித்துள்ள கடன் அளவுக்கு ரிசர்வ் பாங்கால் கொடுக்கப்படும் மறுநிதிக்கு, நிகர ரொக்கத்தன்மை வீதம் எவ்வாறு இருப்பினும், பாங்க் வீதத்தில் வட்டி விதிக்கப்படும்.

3. புதிய மாற்று உண்டியல் மறு தள்ளுபடித் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் கடன் வசதிகளுக்குப் பாங்க் வீதத்தில் வட்டி வசூலிக்கப்படும்.

4. உணவு தானியக் கொள்முதலுக்காகக் கொடுக்கப்படும் கடனுக்குக் கொடுக்கப்படும் மறுநிதிக்கு 1970 அக்டோபர் 30-ல் கொடுக்கப்பட்ட கடன் அளவில் 50% அளவு வரை, பாங்க் வீதத்தில் வட்டி வசூலிக்கப்படும்.

வங்கிகள் முல்தானி உண்டியல்களைத் தள்ளுபடி செய்யும் போது, எந் நோக்கங்களுக்காக அவ்வாறு தள்ளுபடி செய்து கடன் அளிக்கப்படுகிறது என்பது பற்றியும், எத்தகைய நிபந்தனைகளின் பேரில் கடன் அளிக்கப்படுகிறது என்பது பற்றியும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும், ரொக்கக் கடன்முறைக்குப் பதிலாக உண்டியல் மற்றும் கடன் முறைகளைப் பின்பற்றுமாறும் ரிசர்வ் பாங்க் ஆளுநர் வங்கிகளைக் கேட்டுக் கொண்டார். நாளடைவில், பிறவகை உண்டியல்கள் பலவும், புதிய மாற்று உண்டியல் மறுதள்ளுபடித் திட்டத்தின்கீழ், கொண்டு வரப்பட்டன. இந்தப் புதிய திட்டத்தின்கீழ், ஆண்டு முழுவதிலும் மறுதள்ளுபடி வசதிகள் கிடைக்கும். மேலும், 1971 ஜூன் 30-க்குப் பின்னர் பெறும் மறுதள்ளுபடி வசதிகள், நிகர ரொக்கத்தன்மை வீதத்தைப் பாதிக்காது என்றும் அறிவிக்கப்பட்டது. பழைய உண்டியல் அங்காடித் திட்டத்தை 1971 ஜூன் 30-லிருந்து நிறுத்திக் கொள்ளப் போவதாக ரிசர்வ் பாங்க் அறிவித்தது; ஆனால், உணவுத் தானியக் கொள்-முதலுக்குக் கொடுக்கப்படும் கடனுக்கு ரிசர்வ் பாங்கால் அளிக்கப்படும் மறுநிதி வசதியைப் பொறுத்தவரை, அத் திட்டம் தொடர்ந்து செயலில் இருக்கும். மறுதள்ளுபடி செய்யக்கூடிய தனி ஒரு மாற்று உண்டியலின் மதிப்பு, குறைந்த அளவு 10,000 ரூபாயாக இருக்கவேண்டும் என்று இருந்தது; பின்னர், 1971 ஏப்ரல் 17-ல், இந்த அளவு 5,000 ரூபாய்க்குக் குறைக்கப்பட்டது. முன்னர் இருந்தது போலவே, வங்கியொன்று ரிசர்வ் பாங்கிடம் மறு தள்ளுபடி செய்வதற்கு எந்த ஒரு சமயத்திலும் எடுத்துச் செல்லக்கூடிய மாற்று உண்டியல்களின் மொத்த மதிப்பு 5,000 ரூபாய்க்குக் குறையாமல் இருக்கக்கூடாது.

1971 ஜூலை 30-ல், வேறு சில வகை மாற்று உண்டியல்களும் இத் திட்டத்தின்கீழ் மறுதள்ளுபடி வசதி பெறத் தகுதி பெற்றன. அரசாங்கத் துறைகள், பிற அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிறுவனங்கள், சட்டமுறைக் கூட்டுருகள் (Statutory Corporations) அரசாங்கக் கம்பெனிகள் ஆகிய நிறுவனங்களுக்குச் சரக்கு விற்ற

தால் எழுந்த மாற்று உண்டியல்கள், உண்டியல் மறுதள்ளுபடித் திட்டத்தின் எல்லா விதிகளையும் நிறைவு செய்யின், அத்தகைய உண்டியல்களும் 1971 ஜூலை 30 லிருந்து ரிசர்வ் பாங்கிடம் மறு தள்ளுபடி வசதிபெறத் தகுதிபெற்றவை ஆகும்.

இந்தியத் தொழிற் கடன் மற்றும் முதலீட்டுக் கூட்டுருவின் (வரையறுக்கப்பட்டது) (Industrial credit and Investment corporation of India, Ltd.,) பேரில் அதன் வாங்குபவர் சார்பில் அதன் (கூட்டுரு) பேரில் எழுதப்பட்டு கூட்டுருவால் ஏற்றுக்கொள்ளப் பட்ட மாற்று உண்டியல்களும் அல்லது வாங்குபவர், கூட்டுரு ஆகிய இருவர் பேரிலும் எழுதப்பட்டதும், இருவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் ஆகிய உண்டியல்களும் 1972 ஏப்ரலிலிருந்து மறுதள்ளுபடி வசதிபெறத் தகுதிபெற்றன; ஆனால் அத்தகைய உண்டியல்கள், உரிமம் பெற்ற அட்டவணையிலிட்ட வணிக வங்கி யால் ரிசர்வ் பாங்கிடம் மறுதள்ளுபடிக்குக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

## புதிய திட்டத்தின் வளர்ச்சி

1971 மே 28-ல், இத் திட்டத்தின்கீழ் மறுதள்ளுபடி செய் யப்பட்ட மாற்று உண்டியல்களின் மதிப்பு (Outstanding bills) 16·73 கோடி ரூபாயாகும். இது 1971 ஜூனில் 10·39 கோடி ரூபாயாகவும், 1972 ஜூனில் 10 கோடி ரூபாயாகவும் 1973 ஜூனில் 9·9 கோடி ரூபாயாகவும் இருந்தது.

1972 ஜூன் இறுதியில், 35 வங்கிகளுக்கு அளித்திருந்த மறு தள்ளுபடி வசதிகளின் மொத்த மதிப்பு 193·5 கோடி ரூபாய் ஆகும். 1973 ஜூன் இறுதியில், மொத்தம் 38 வங்கிகள் இத் திட் டத்தில் பங்கேற்றிருந்தன. 1973 ஜூன் இறுதியில், ரிசர்வ் பாங்க் அளித்திருந்த மறுதள்ளுபடியின் மொத்த மதிப்பு 183·4 கோடி ரூபாயாகும். இந்த அளவு, முந்திய ஆண்டில் அளிக்கப்பட்ட வசதிகளைவிட 10%கோடி ரூபாய் குறைவானதாகும் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

1973 பிப்ரவரியில், வங்கிகளிடம் தேவையான அளவுக்கு நிதி இருந்ததால், இத் திட்டத்தின்கீழ் 53 இலட்ச ரூபாய்க்குத் தான் மறுதள்ளுபடி வசதிகள் பெற்றன. பின்னர், பணச்சந்தையில் கடின நிலைமை நிலவியதால், 1973 மார்ச்சில் 35 கோடி ரூபாய்க்கு மறுதள்ளுபடி வசதிகள் அளிக்கப்பட்டன; இருப்பினும், இது சென்ற ஆண்டின் அளவைவிடக் குறைவே ஆகும். (1972 மார்ச்சு — 45 கோடி ரூபாய்).

உண்டியல் அங்காடித் திட்டம் இன்றைக்கும் வளர்ச்சியுறாத நிலையில்தான் உள்ளது என்று கூற வேண்டியுள்ளது. நினைத்தால் வங்கிகள் இத் திட்டத்தின்கீழ் திடீரென்று வசதி பெறுவதும், திடீரென்று நிறுத்திக் கொள்வதும் விந்தையாகவே உள்ளது.

சில உண்டியல்கள் இத் திட்டத்தின்கீழ் மறுதள்ளுபடி பெறத் தகுதி பெற்றவை என்று சில சமயங்களிலும், வேறு சில சமயங்களில் சில உண்டியல்கள் தகுதி பெற்றவை இல்லை என்றும் ரிசர்வ் பாங்க் திடீரென்று அறிவிப்பதால், வங்கிகள் உண்டியல்களைத் தள்ளுபடி செய்வது மிகவும் பாதிக்கப்படுகிறது.

1973-74 (சூலை—சூன்)-ல் வங்கிகளிடையே நிலவிய நிதி பற்றுக்குறையின் காரணமாக, புதிய உண்டியல் மறுதள்ளுபடித் திட்டம் மேலும் முக்கியத்துவம் பெற்றது. பொதுக் கடன் கொள்கைக்குட்பட்டு, மாற்று உண்டியலைச் சிறந்த கடன் கருவியாக (credit instrument) ஆக்குவதற்கு எல்லா முயற்சிகளும் ரிசர்வ் பாங்கால் மேற்கொள்ளப்பட்டன. இத் திட்டத்தின்கீழ் மறு தள்ளுபடி செய்யத் தகுதிபெற்ற மாற்று உண்டியல்களின் தள்ளுபடிவீதம், கடன் வட்டி வீதத்தைவிடக் குறைவாகும். ரிசர்வ் பாங்கிடம் மறுதள்ளுபடிக்காகக் கொடுக்கப்படும் தனி ஒரு மாற்று உண்டியலின் மதிப்பு உயர்த்தப்பட்டது. முன்னர் 2 இலட்ச ரூபாய் அல்லது அதற்குக் குறைவான மதிப்புள்ள மாற்று உண்டியல்களை ரிசர்வ் பாங்கிடம் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. தற்போது இந்த அளவு 10 இலட்சத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது. 1973 டிசம்பர் 1 ஆம் நாள் மறுதள்ளுபடி வீதம் 8%லிருந்து 9½%க்கு உயர்த்தப்பட்டது; 1974 சூலை 23-ல் இவ் வீதம் 11% க்கு உயர்த்தப்பட்டது. மறுதள்ளுபடி வசதிகள் முன்போல் ஆண்டு அடிப்படையில் வழங்கப்படாமல், ஆறுமாத அடிப்படையில் வழங்கப்படுகின்றன. பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பொருள்கள் பேரில் உள்ள மாற்று உண்டியல்கள் மறுதள்ளுபடிக்குத் தகுதியற்றவை. 1973-74-ல் இத் திட்டத்தின்கீழ் உதவிபெற்ற வங்கிகளின் எண்ணிக்கை 38 லிருந்து 52 க்கு உயர்ந்துள்ளது. ரிசர்வ் பாங்க் அளித்திருந்த மறுதள்ளுபடி வசதிகளின் மொத்த மதிப்பு 365 கோடி ரூபாயாகும். (1972-73 = 183·4 கோடி ரூபாய்). ஆகவே 1973-74 1972-73-ல் அளித்த வசதிகளைவிட 181·6 கோடி ரூபாய் அதிக அளவுக்கு நிதிவசதிகள் அளிக்கப்பட்டிருந்தன.

## உண்டியல் அங்காடித் திட்டத்தின் வளர்ச்சி

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17 (3A), 17(4) (a), 17 (4) (c) ஆகியவற்றின் கீழ் ரிசர்வ் பாங்க் கொடுத்த

### அட்டவணை 5

ரிசர்வ் பாங்க் அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளுக்கும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும் கொடுத்த கடன்

(ரூபாய் கோடிக் கணக்கில்)

| ஆண்டு (ஏப்ரல் மார்ச்சு) | அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள் | | மாநிலக் கூட்டுறவு வங்கிகள் | |
|---|---|---|---|---|
| | மொத்த கடன் பிரிவு 17 (3A) 17 (4) (a) 17 (4) (c) | பிரிவு 17 (4) (c) | மொத்த கடன் பிரிவு 17 (3A) 17 (4) (a) 17 (4) (c) | பிரிவு 17 (4) (c) |
| | 1 | 2 | 3 | 4 |
| 1951-52 | 199·84 | 28·82 | 11·29 | 6·40 |
| 1952-53 | 163·26 | 66·87 | 10·48 | 6·57 |
| 1953-54 | 233·56 | 66·81 | 14·32 | 7·31 |
| 1954-55 | 346·43 | 147·58 | 17·69 | 7·73 |
| 1955-56 | 496·40 | 227·75 | 23·80 | 13·03 |
| 1956-57 | 1017·10 | 560·64 | 33·95 | 23·81 |
| 1957-58 | 622·26 | 305·24 | 57·12 | 41·41 |
| 1958-59 | 519·56 | 119·75 | 75·28 | 56·70 |
| 1959-60 | 587·47 | 85·41 | 100·65 | 80·43 |
| 1960-61 | 1073·57 | 255·29 | 147·11 | 115·45 |
| 1961-62 | 643·16 | 284·79 | 192·92 | 153·39 |
| 1962-63 | 663·55 | 325·70 | 220·28 | 166·31 |
| 1963-64 | 741·38 | 253·99 | 301·56 | 257·76 |
| 1964-65 | 1065·34 | 274·75 | 283·49 | 230·87 |
| 1965-66 | 1251·99 | 323·31 | 293·44 | 209·58 |
| 1966-67 | 1100·09 | 418·16 | 330·94 | 247·81 |
| 1967-68 | 975·01 | 368·23 | 453·96 | 379·97 |
| 1968-69 | 2550·32 | 1353·53 | 484·68 | 399·50 |
| 1969-70 | 2776·92 | 1110·59 | 507·80 | 423·26 |
| 1970-71 | 4795·02 | 1719·69 | 481·45 | 389·01 |
| 1971-72 | 4136·88 | 1194·22 | | |
| 1972-73 | 2075·78 | 220·59 | | |
| 1973-74 | 4079·41 | 310·82 | | |

கடன் (advances) பற்றிய புள்ளி விபரம் அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளைப் பொருத்தவரை, அட்டவணை 5—ல் பத்தி 1-லும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளைப்பொருத்தவரை பத்தி 3-லும் கொடுக்கப்பட்டுள்ளது. பிரிவு 17 (4) (c) யின் கீழ், உண்டியல்களை மறுதள்ளுபடி செய்து கொடுத்த கடன், அட்டவணையிலிட்ட வங்கிகளுக்குப் பத்தி 2-லும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பத்தி 4-லும் கொடுக்கப்பட்டுள்ளது.

தொடக்கத்தில், அதாவது, 1951-52 லிருந்து 1953-54 வரை, அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள் உண்டியல் மறுதள்ளு படிமூலம் அவ்வளவாகக் கடன் பெறவில்லை. 1954-55 லிருந்து 1957-58 வரை கிட்டத்தட்ட 50% கடனை, உண்டியல்களை மறு தள்ளுபடி செய்தே பெற்றன. 1958-59-ல் உண்டியல் மறுதள்ளு படிமூலம் பெற்ற கடன் சுமார் 20% ஆகும். 1959-60-ல் 14%க்கு வீழ்ச்சியுற்றது. பின்னர், உண்டியல்களை மறுதள்ளுபடி செய்து பெற்ற கடன் உயர்வதும், குறைவதுமாகவே இருந்தது. ஒரே சீராக எப்போதும் இல்லை. 1961-62 லிருந்து 1968-69 வரை உண்டியல்களின் பங்கு அதிகரித்ததுபோல் இருந்து வந்தது. ஆனால் மீண்டும் 1969-70 லிருந்து, மொத்தக் கடனில், மாற்று உண்டியல்களை மறுதள்ளுபடி செய்து பெற்ற கடனின் பங்கு குறைந்து வருகிறது. 1970-71-ல் 36% ஆக இருந்தது. 1972-73—ல் 9%க்குக் குறைந்தது. இதனைப் பார்க்கையில் உண்டியல் அங்காடி வெற்றி பெறுமா என்பது ஐயப்பாடாக உள்ளது. ஆனால் மாநிலக் கூட்டுறவு வங்கிகளைப் பொருத்தவரை, அவை தொடர்ந்து மாற்று உண்டியல்களை மறுதள்ளுபடி செய்து கொள்வதன்மூலமே அதிகக் கடனைப் பெற்று வந்திருக்கின்றன என்பது புலனாகிறது. மாநிலக் கூட்டுறவு வங்கிகளைப்போல், அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளும் உண்டியல்களை மறுதள்ளு படி செய்வதற்கான எல்லா ஏற்பாடுகளையும் ரிசர்வ் பாங்க் செய்ய வேண்டும்.

ரிசர்வ் பாங்க் பணச்சந்தையைப் பரந்ததாக்கவும் ஒருங்கிணைக் கவும், ஒன்று சேர்க்கவும் எடுத்துக்கொண்ட முயற்சிகளைக் கீழே காண்போம்.

## பணச்சந்தையில் செயல் இணைப்பை ஏற்படுத்த ரிசர்வ் பாங்க் எடுத்துக்கொண்ட முயற்சிகள்

சிறந்த நிதியியல் நிருவாகத்தை அமைக்க ரிசர்வ் பாங்க் மேற் கொண்ட முதல்பணி, நாட்டுப் பாங்கர்களை (Indigenous Bankers) தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர எடுத்துக்கொண்ட முயற்சி யாகும். ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் 1934, பிரிவு 55 1) 1937 டிசம்பர் 31 ஆம் நாளுக்குள் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா

சட்டத்தை நாட்டுப் பாங்கர்களுக்கும் விரிவாக்க எடுத்துக்கொண்ட வழிமுறைகளை மத்திய அரசுக்கு ரிசர்வ் பாங்கைச் சமர்ப்பிக்கக் கோரியது. நாட்டுப் பாங்கர்களின் உண்டியல்களையும் புரோ நோட்டுகளையும் ரிசர்வ் பாங்கிடம் வங்கிகள் மறுதள்ளுபடி செய்துகொள்ளச் சட்டத்தில் இடம் இருந்தது. ஆனால் நாட்டுப் பாங்கர்களை நேரடிக் கட்டுப்பாட்டில் கொணர்வதே ரிசர்வ் பாங்கின் குறிக்கோளாக இருந்தது.

1937 மே திங்கள் 6-ஆம் நாளில், ரிசர்வ் பாங்க் எல்லா அட்டவணையிலிட்ட வங்கிகளுக்கும், ஷராஃப் சங்கங்களுக்கும் (Shroff Association) நாட்டுப் பாங்கர்களை ரிசர்வ் பாங்கின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதுபற்றி அவற்றின் கருத்துகளைத் தெரிவிக்குமாறு ஒரு சுற்றறிக்கை அனுப்பியது. நாட்டுப் பாங்கர்களின் பலதரப்பட்ட வியாபாரம் காரணமாக, ரிசர்வ் பாங்க் நாட்டுப்பாங்கர்களுடன் நேரடியாகத் தொடர்பு வைத்துக்கொள்ள முடியாது என்று ரிசர்வ் பாங்க் அச் சுற்றறிக்கையில் தெரிவித்தது. அதற்குப் பதில், அட்டவணையிலிட்ட வங்கிகள்மூலம், நாட்டுப் பாங்கர்களுடன் தொடர்பு கொள்ள, தனி ஒப்புதலை ரிசர்வ் பாங்க் தெரிவித்தது. அட்டவணையிலிட்ட வங்கிகளிடமிருந்தும் ஷராஃப் சங்கங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற கருத்துகளின் அடிப்படையில் ரிசர்வ் பாங்க் ஒரு திட்டத்தை வகுத்தது. அதன்படி நாட்டுப் பாங்கர்களுக்கு ரிசர்வ் பாங்கிடம் நேரடி மறுதள்ளுபடி செய்யும் வசதி அளித்தல், அரசாங்க ஆவணங்கள்மீது கடன், சலுகை முறையில் பணமாற்றல் வசதிகள் (Remittance facilities) அளித்தல், ஆகிய வசதிகளைக் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில், ரிசர்வ் பாங்க் அளிக்க முன்வந்தது. அந் நிபந்தனைகளின்படி நாட்டுப் பாங்கர்கள்:

1. வங்கித் தொழில் அல்லாத மற்ற தொழில்களைக் கைவிடவேண்டும் ;

2. சரியான கணக்குப் புத்தகங்களை வைத்திருந்து அவற்றை ரிசர்வ் பாங்கின் ஆய்வுக்குக் கொணர்தல் வேண்டும்;

3. அட்டவணையிலிட்ட வங்கிகள் வழங்குவதுபோல் அவ்வப்போது ரிசர்வ் பாங்கிற்குத் தகவலறிக்கை அனுப்ப வேண்டும்.

இத் திட்டம் 1931-ல் மைய வங்கி விசாரணைக்குழு (Central-Banking Enquriry Committee) பரிந்துரை செய்திருந்ததுபோலவே அமைந்திருந்தது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இத் திட்டத்தை நாட்டுப் பாங்கர்கள் நிராகரித்தனர். இத் திட்டத்தில் அவர்களுக்கு யாதொரு தனிச்சலுகையும் இல்லையாகையாலும், பழக்கமற்ற தொழில்களை மேற்கொள்ளவும் பழகிய தொழிலிலிருந்து விலகவும் வேறு எந்த வசதியும் இல்லையாகையாலும் ரிசர்வ்

பாங்கின் திட்டப்படி வசதிகளைப்பெற, ரிசர்வ் பாங்கிடம் நாட்டுப் பாங்கர்கள் நெருங்கவில்லை. மேலும், அத்தகைய எல்லா வசதி களையும் மேற்கூறிய நிபந்தனைகள் இன்றி நாட்டுப் பாங்கர்கள் இம்பீரியல் பாங்கிடமிருந்தும், பிற அட்டவணையிலிட்ட வங்கி களிடமிருந்தும் பெற்று வந்தனர். இத்தயை சூழ்நிலையில் ரிசர்வ் பாங்க் தன் திட்டத்தைக் கைவிட்டது; ஆனல் நாட்டுப் பாங்கர்கள் தங்களுடைய கருத்துகளைக் காலப்போக்கில் மாற்றிக் கொள்வார் களேயானல் தனது கதவுகள் எப்போதும் அவர்களை ஏற்றுக் கொள்ள திறந்தே இருக்கும் என்று ரிசர்வ் பாங்க் அறிவித்தது.

நாட்டுப் பாங்கர்கள் வங்கித் தொழிலல்லாத தொழில்களை உடனடியாகக் கைவிட வேண்டும் என்றதாலும், அவர்களுடைய கணக்குகளை ரிசர்வ் பாங்க் ஆய்வு செய்யவும் பின்னர் வெளியிடவும் கோரியதால், நாட்டுப் பாங்கர்களுக்கும் பாங்கிற்கும் இடையே கருத்து வேற்றுமை எழுந்தது. ஆகவே, அத் திட்டத்தைச் சிறிதளவு மாற்றியமைத்துக் கொண்டு 1941-ல் மீண்டும் கடைசி முறையாக எத்தனை பேர் படிப்படியாக வங்கித் தொழில் அல்லாத தொழில்களை விடுத்து ரிசர்வ் பாங்கின் கட்டுப்பாட்டிற்கு வர இருக்கின்றனர் என்று பம்பாய் ஷராஃப் சங்கத்தை ரிசர்வ் பாங்க் கேட்டுக் கொண்டது. வங்கித் தொழில் அவ்வாறு பிற தொழில் களைப் பிரிக்க 5 ஆண்டுகள் கொடுக்க வேண்டும் என்று நாட்டுப் பாங்கர்கள் சார்பில் அறிவிக்கப்பட்டது. தங்கள் கணக்குகளை ரிசர்வ் பாங்கின் ஆய்விற்கும், பிறகு அவற்றை வெளியிடவும் சம்மதம் தெரிவித்தனர். ஆனல், எத்தனை பேர் இவ்வாறு மேற் கூறியபடி இணங்கி இத் திட்டத்தின்கீழ்ச் சேரத் தயாராயிருந் தனர் என்று நிச்சயமாகக் கூறுததால், ரிசர்வ் பாங்க் மேற் கொண்டு ஒன்றும் செய்ய இயலவில்லை. மேலும், அச் சமயம் உண்டியல் தொழில் செய்து வந்த முல்தானி ஷராஃப்கள் (Multani Shroffs) இம்பீரியல் பாங்கிடமிருந்தும், பிற வங்கிகளிட மிருந்தும் எல்லா வசதிகளையும் பெற்று வந்ததால், இத் திட்டத்தில் அக்கறை காட்டவில்லை. செட்டியார்கள், மார்-வாரிகள், குஜராத்திய ஷராஃப்கள் ஆகியோரும் அவ்வாறே இருந்தனர். இத்தகைய சூழ்நிலையில் ரிசர்வ் பாங்க் தன் திட்டத்தை மீண்டும் ஒருமுறை கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகையால் இன்றும் நாட்டுப் பாங்கர்கள் ரிசர்வ் பாங்கின் கட்டுப்பாட்டிற்கு அப்பால்தான் உள்ளனர். அட்டவணை யிலிடா வங்கிகளைப்போல் நாட்டுப் பாங்கர்களும் ரிசர்வ் பாங்கிட மிருந்து பணமாற்றல் வசதிகளைப் பெற்று வருகிருர்கள். நாட்டுப் பாங்கர்கள், ரிசர்வ் பாங்கின் கட்டுப் பாட்டுக்கு வராதவரை ரிசர்வ் பாங்க் முழுமையாகக் கடனைக் கட்டுப்படுத்த முடியாது.

நிதியியல் நிருவாகத்திற்கு நல்ல வங்கியியல் முறை இருப்பது அவசியம். பலவீனமான வங்கிகளும், வங்கித் தோல்விகளும் பணச் சந்தையைக் கெடுப்பதால் பொதுமக்களின் நம்பிக்கை குலேகிறது. பணச் சந்தைமூலம்தான் ரிசர்வ் பாங்க் நிதியியல் நிருவாகத்தைச் செயல்படுத்த வேண்டும். வங்கித் தொழிலில் ஒரு பலவீனமான வங்கி பலமான வங்கியையும் பலவீனப்படுத்துகிறது. ஆகவே பலவீனமான வங்கிகள் தோன்றுகின்றனவா என ரிசர்வ் பாங்க் அடிக்கடிக் கண்காணித்து வருகிறது.

1936-ல் திருவாங்கூர் நேஷனல் பாங்கும் கொய்லான் பாங்கும் இணைவதற்கு ரிசர்வ் பாங்க் உதவியது. 1938-ல் சில தென்னிந்திய வங்கிகளுக்கு, ரிசர்வ் பாங்க் உதவியது. 1946-ல் பாங்குச் சந்தையில் ஊக வணிகச் செயல்களால் அரசாங்க ஆவணங்கள் விற்பதில் சிறிய வங்கிகளுக்கு இடையூறுகள் ஏற்பட்டன. ஆகவே ரிசர்வ் பாங்க் அரசாங்க ஆவணங்களை வாங்க முன்வந்து, சீர்குலேவு ஏற்படாமல் தடுத்தது.

சட்டமுறை அதிகாரங்களின்றி, ரிசர்வ் பாங்க், நிதியியல் நிருவாகத்தில் வெற்றியடைய முடியாதெனக் கருதப்பட்டது. ஆகவே 1946-ல் எந்த ஒரு வங்கியினுடைய கணக்குப் புத்தகங்கள், இருப்புகள் ஆகியவற்றை ஆய்வு நடத்தவும் அதன் பேரில் மேலும் வைப்புகள் பெறுமல் தடுக்கக்கோரி மத்திய அரசிடம் பரிந்துரைக்கவும் அதிகாரம் பெற்றது. 1947 செப்டம்பர் 20-ல் அட்டவணையிலிட்ட மற்றும் அட்டவணையிலிடாத வங்கிகளுக்கு நெருக்கடிக் காலத்தில் கடன் வழங்கும் அதிகாரத்தை ரிசர்வ் பாங்க் பெற்றது. 1949 வங்கிக் கம்பெனிகள் சட்டத்தில் (Banking Companies Act, 1949) மேற்கூறிய எல்லா அதிகாரங்களும் இடம் பெற்றன. 1949 வங்கிக் கம்பெனி சட்டத்தின்கீழ் ரிசர்வ் பாங்கின் நிதியியல் நிருவாக அதிகாரம் கூடுதலாகியது.

1950-ல் தி பெங்கால் சென்ட்ரல் பாங்க் (The Bengal Central Bank), கொமில்லா பாங்கிங் கார்ப்பொரேஷன் (The Comilla Banking Corporation), கொமில்லா யூனியன் பாங்க் (The Comilla Union Bank), ஹூக்லி பாங்க் (Hoogly Bank) ஆகிய நான்கு வங்கிகள் ஒருங்கிணைந்து யுனைடெட் பாங்க் ஆஃப் இந்தியா லிமிடெட் (United Bank of India Limited) உருவாவதில் ரிசர்வ் பாங்க் உதவி செய்தது. ரிசர்வ் பாங்க் நடத்திய ஆய்வின் விளைவாக 1951 மார்ச்சு திங்களில் பஞ்சாப் நேஷனல் பாங்க் (Punjab National Bank) பாரத் பாங்கின் (Bharat Bank Limited) சொத்துகளையும் கடன்களையும் எடுத்துக் கொண்டது. 1953-ல் மர்க்கண்டைல் பாங்க் ஆஃப் ஹைதரபாத் லிமிடெட் (Mercantile Bank of Hyderabad Limited) ஹைதரபாத் ஸ்டேட் பாங்கோடு (Hydera–

bad State Bank) கலப்பு (merger) செய்தது; ரிசர்வ் பாங்கின் இத்தகைய நடவடிக்கைகளும் உதவிகளும் வங்கித் தோல்விகள் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்துகின்றன. இப்படி ரிசர்வ் பாங்க் ஆய்வு நடத்திய போதிலும், உதவி செய்து கண்காணித்து வந்த போதிலும், பொதுமக்களுக்குப் பேரிடி தரும் வகையில் 1960 ஆகஸ்ட் திங்கள் 9ஆம் நாள் பாலய் சென்ட்ரல் பாங்க் ( Palai Central Bank) மூழ்கியது. லஷ்மி பாங்க் (Laxmi Bank) 1960 ஜூன் 28-ல் கலைக்கப்பட்டதுபொலய் பாங்க் தோல்விக்குப் பிறகு, ரிசர்வ் பாங்க், பாங்க் ஆஃப். நாக்பூர் லிமிடெட் (Bank of Nagpur Limited), இண்டோ கமர்சியல் பாங்க் லிமிடெட் (The Indo–Commercial Bank Limited), தி நியூசிடிசென் பாங்க் ஆஃப் இந்தியா லிமிடெட் (The New Citizen Bank of India Limited), திப்ரபாத் பாங்க் லிமிடெட் (The Prabhat Bank Limited) ஆகிய வங்கிகளுக்கு, கடன் ஒத்திவைப்பு ஆணை (Moratorium) அளித்தது.

1935ஆம் ஆண்டின் முன்னர் 1914-ல்தான் மிக அதிக அளவு வங்கித் தோல்விகள் ஏற்பட்டன. அதாவது 1914-ல் 42 வங்கிகள் தோல்வியுற்றன, அதற்கு அடுத்த மிக அதிக அளவு வங்கித் தோல்வி (30) 1934-ல் ஆகும். 1935லிருந்து 1949 வரை ஏற்பட்ட வங்கித் தோல்விகளின் எண்ணிக்கை கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டது (அட்டவணை 6).

## அட்டவணை 6

### வங்கித் தோல்விகள் (Bank Failures)

| ஆண்டு | தோல்வியுற்ற வங்கிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1935 | 51 |
| 1936 | 88 |
| 1937 | 65 |
| 1938 | 73 |
| 1939 | 117 |
| 1940 | 107 |
| 1941 | 94 |
| 1942 | 50 |
| 1943 | 59 |
| 1944 | 28 |
| 1945 | 27 |
| 1946 | 27 |
| 1947 | 37 |
| 1948 | 45 |
| 1949 | 53 |

# 5. ரிசர்வ் பாங்கும் நிதியியல் நிருவாகமும்

இன்றைய உலகில் நிதியியல் நிருவாகம் என்பது செலாவணியையும் கடனையும் முறைப்படி வேண்டுமென்றே குறிப்பிட்ட சில நோக்கங்களுடன் கட்டாயமாகக் கட்டுப்படுத்துவதே ஆகும். சீரான அளவில் விலைவாசிகளை வைத்திருக்கவும், சீரான நாணய மாற்று விகிதம், சீராக முன்னேறக்கூடிய வேலைவாய்ப்பு மற்றும் வணிகம் ஆகியவற்றை ஏற்படுத்துவதே நிதியியல் நிருவாகத்தின் குறிக்கோள்களாகும். இக் குறிக்கோள்களை அடைய, பொது நலனைக் கருத்தில் கொண்டு சிலசமயம் செலாவணி மற்றும் கடன் பெருக்கத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ அல்லது பெருக்க வேண்டிய தேவையோ ஏற்படும். முதல் உலகப்போரின் போது சீர்குலைந்துபோன நிதியியல் முறையைத் திரும்பவும் ஒழுங்குபடுத்துவதிலும், நன்முறையில் உருவாக்குவதிலும் உலக வல்லுநர்கள் ஈடுபட்டனர். இச் சமயத்தில்தான் நிதியியல் நிருவாகம் புதுமுறையில் உருவானது எனக் கூறலாம்.

வாணிபச் சுழல்களால் (Trade cycles) ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைக் கட்டுப்படுத்துதல், கடனைக் கட்டுப்படுத்துதல், பொருளாதாரத்தில் சீரான தன்மையை உண்டாக்குதல், இருக்கின்ற வருவாய்களை முழு அளவிற்குப் பயன்படுத்துதல், சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையேயுள்ள இடைவெளியை முடிந்த வரை சரி செய்தல் ஆகியவைகளும் நிதியியல் நிருவாகத்தின் குறிக்கோள்களாகும். ஒரு காலத்தில், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதும் அல்லது அதைத் தன் நேர் அதிகாரத்தில் வைத்துக் கொள்வதும் ஒரு மையவங்கியின் முக்கியக் குறிக்கோள்களாகக் கருதப் படவில்லை என்று மாக்மில்லன் குழு (Macmillan Committee 1931) கூறியுள்ளது. மாக்மில்லன் குழு மேலும் கூறுவதாவது: ''ஒரு மையவங்கியின் நிதியியல் நிருவாகத்தின் முக்கிய வேலை என்னவெனில், கடனின் பரிமாணத்தையும், கடன் கொடுக்கப்படும் போது இடப்படும் நிபந்தனைகளையும் மாற்றுவதன்மூலம், விலைவாசி

பாங்க் ஈடுபட்டது. பணமாற்றல்களின் மீதான வீதத்தைக் குறைத்தால், அதிக அளவில் வங்கிக் கிளைகள் பெருக வசதியாக இருக்கும் என்று மேற்படிக் குழுவின் பரிந்துரையின்பேரில், ரிசர்வ் பாங்க் 1951 செப்டம்பர் முதல் தேதியிலிருந்து பண மாற்றல்களின் மீதான வீதத்தைக் குறைத்தது. 1952 நவம்பரிலும், பின்னர் 1955 நவம்பர், 1956 அக்டோபர் ஆகிய காலங்களில் பண மாற்றல் வசதிகள் மேலும் தளர்த்தப்பட்டன.

1951-ல் அகில இந்திய அளவில் கிராமியக்கடன்பற்றி ஆராய ஒரு குழுவை (Rural Credit Survey Committee) ரிசர்வ் பாங்க் நியமித்தது. 1954—ல் அக் குழு அறிக்கையைச் சமர்ப் பித்தது. நாடெங்கிலும் கிளைகளுடன் கூடிய ஒரு பலம் பொருந்திய வணிக வங்கியாகச் செயல்படுவதற்காகவும், நாட்டில் வங்கி வசதிகளைப் பெருக்குவதற்காகவும், கூட்டுறவு மற்றும் பிற வங்கி களுக்குப் பணமாற்றல் வசதிகள் அளிக்கவும், ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவை அமைக்குமாறு அக் குழு பரிந்துரை செய்தது.

1962 சனவரி 1-ல் வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு (Deposit Insurance Corporation) ரிசர்வ் பாங்கின் முயற்சியால் நிறுவப் பட்டது. கிராமியக் கடனை மறுபரிசீலனை செய்வதற்காக, 1966 சூலையில், அகில இந்திய கிராமியக் கடன் மறுபரிசீலனைக் குழுவை ரிசர்வ் பாங்கின் ஆளுநர் நியமித்தார். 1969 சூலை 30ஆம் நாள் அக் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டது. சிறு விவசாயிகள் வளர்ச்சி நிறுவனம் (Small Farmers Development Agency) அமைக்குமாறும், வணிக வங்கிகள் அதிக அளவுக்கு வேளாண்மைக் கடன் அளிப்பதில் ஈடுபட வேண்டும் என்றும், ரிசர்வ் பாங்கில் ஒரு வேளாண்மைக்கடன் அவையை (Agricultural Credit Board) அமைக்க வேண்டும் என்றும் அக் குழு பரிந்துரை செய்தது.

மாற்று உண்டியலை ஒரு கடன் கருவியாக அதிக அளவில் பயன் படுத்துவது பற்றியும் இந்தியாவில் ஒரு மாற்று உண்டியல் அங்காடியை உருவாக்குவது பற்றியும் யோசனை தெரிவிக்க 1970 பிப்ரவரியில், ரிசர்வ் பாங்க் ஒரு குழுவை நியமித்தது.

நீண்டகாலக் கடன் ஏற்பாடுகளைப் பரிசீலனை செய்வதற்காக 1970 அக்டோபரில் ஒரு குழு (Study Group Term Loan participation Arrangement) நியமிக்கப்பட்டது.

பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள், சிறு தொழில்களுக்கு உண்டியல்களைச் செலுத்துவதில் ஏற்படும் காலதாமதத்தைப் பற்றிப் பரிசீலனை செய்வதற்காக, 1971 அக்டோபரில் ஒரு குழு நியமிக்கப் பட்டது.

இவ்வாறு பல்வேறு வகையிலும் வங்கியியல் முறையைச் செம்மையாக்குவதில் ரிசர்வ் பாங்க் முனைந்துள்ளது.

# 5. ரிசர்வ் பாங்கும் நிதியியல் நிருவாகமும்

இன்றைய உலகில் நிதியியல் நிருவாகம் என்பது செலாவணியையும் கடனையும் முறைப்படி வேண்டுமென்றே குறிப்பிட்ட சில நோக்கங்களுடன் கட்டாயமாகக் கட்டுப்படுத்துவதே ஆகும். சீரான அளவில் விலைவாசிகளை வைத்திருக்கவும், சீரான நாணய மாற்று விகிதம், சீராக முன்னேறக்கூடிய வேலைவாய்ப்பு மற்றும் வணிகம் ஆகியவற்றை ஏற்படுத்துவதே நிதியியல் நிருவாகத்தின் குறிக்கோள்களாகும். இக் குறிக்கோள்களை அடைய, பொது நலனைக் கருத்தில் கொண்டு சிலசமயம் செலாவணி மற்றும் கடன் பெருக்கத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ அல்லது பெருக்க வேண்டிய தேவையோ ஏற்படும். முதல் உலகப்போரின் போது சீர்குலைந்துபோன நிதியியல் முறையைத் திரும்பவும் ஒழுங்குபடுத்துவதிலும், நன்முறையில் உருவாக்குவதிலும் உலக வல்லுநர்கள் ஈடுபட்டனர். இச் சமயத்தில்தான் நிதியியல் நிருவாகம் புதுமுறையில் உருவானது எனக் கூறலாம்.

வாணிபச் சுழல்களால் (Trade cycles) ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைக் கட்டுப்படுத்துதல், கடனைக் கட்டுப்படுத்துதல், பொருளாதாரத்தில் சீரான தன்மையை உண்டாக்குதல், இருக்கின்ற வருவாய்களை முழு அளவிற்குப் பயன்படுத்துதல், சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையேயுள்ள இடைவெளியை முடிந்த வரை சரி செய்தல் ஆகியவைகளும் நிதியியல் நிருவாகத்தின் குறிக்கோள்களாகும். ஒரு காலத்தில், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதும் அல்லது அதைத் தன் நேர் அதிகாரத்தில் வைத்துக் கொள்வதும் ஒரு மையவங்கியின் முக்கியக் குறிக்கோள்களாகக் கருதப்படவில்லை என்று மாக்மில்லன் குழு (Macmillan Committee 1931) கூறியுள்ளது. மாக்மில்லன் குழு மேலும் கூறுவதாவது: ''ஒரு மையவங்கியின் நிதியியல் நிருவாகத்தின் முக்கிய வேலை என்னவெனில், கடனின் பரிமாணத்தையும், கடன் கொடுக்கப்படும் போது இடப்படும் நிபந்தனைகளையும் மாற்றுவதன்மூலம், விலைவாசி

களில், நிதியியல் முறையின் நேரடிக்கட்டுப்பாடுமூலம் மாற்றங்களைக் கொண்டு வரலாம். கடனின் பரிமாணம், அதற்குக் கொடுக்கபட வேண்டிய விலை, அதன் உபயோகம் ஆகியவற்றை மொத்தமாகவும், குறிப்பிட்ட பகுதியையும், பொருளாதாரத்தின் சீரிய தன்மைக்கு நன்மை பயக்கும் வகையில் கட்டுப்படுத்தலே நிதியியல் நிருவாகத்தின் குறிக்கோளாகும்.''

சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையே ஒரு சமத்துவத்தை (equilibrium) வேலை நிறைவு (full employment) உள்ளபோது அடைவதே நிதியியல் நிருவாகத்தின் குறிக்கோளாகும் என்பது கிரௌதரின் (G. Growther) கருத்தாகும்.

மேற்கூறிய குறிக்கோள்களுக்கிடையே முரண்பாடுகள் இருப்பினும் எந்தக் குறிக்கோள்களைப் பின்பற்றுவது என்பது சந்தர்ப்பங்களைப் பொறுத்ததாகும்.

இக் கொள்கைகளைக் கையாளும்போது உலகநிதி நிலைமையையும் கருத்தில் கொள்ள வேண்டும். பொருளாதாரத்தின் சீரான நிலைமையும், இருக்கும் வருவாயை முழு அளவுக்குப் பயன்படுத்துவதும், நிதியியல் நிருவாகத்தைப் பொறுத்தது மட்டுமல்ல. அரசாங்கக் கொள்கையின் ஒத்துழைப்பில்லாமல், நிதியியல் நிருவாகத்தின்மூலம் மட்டும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியாது. தொழில் மந்தம் அல்லது தொழில் தேக்கம் (depression or stagnation) இருக்கும்போது மைய வங்கி எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறது. நிதியியல் கொள்கைகளால் மட்டும் பொருளாரத்தில் மாற்றங்களை விளைவிக்க முடியாது. அரசாங்கக் கொள்கைகளும் மற்ற நிதி சம்பந்தப்படாத கொள்கைகளும் பொருளாதாரத்தில் எவ்வளவோ விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இந் நிலையில் நிதிக்கொள்கைக்கும் பிற அரசாங்கக் கொள்கைக்கும், பொருளாதாரத் திட்டங்களுக்குமிடையே தொடர்பு இருந்தாலொழிய எதையும் அடைவது மிகக் கடினமாகும். நிதியியல் நிருவாகத்தைப் பொருளாதாரத்திட்டம் இன்றி நினைக்க முடியாதது போலவே பொருளாதாரத் திட்டம், நிதியியல் நிருவாகம் இல்லையெனில் பெரும் தோல்வியடையும் என்று பால் எய்ன்சிக் (Pall Einzig) கூறியுள்ளார்.

நிதியியல் நிருவாகம் மைய வங்கியிடம்தான் இருக்கவேண்டும். ஏனென்றால், பணச் சந்தையில் அவ்வப்போது ஏற்படும் மாறுதல்களையும், நாளுக்கு நாள் ஏற்படும் மாறுதல்களையும், நாளுக்கு நாள் தேவைப்படும் பணத்தின் அளவு பற்றி விரைவாகவும் சரியாகவும், தேவைப்படும் நேரத்தில் அவை பற்றித் தெரிந்து கொள்ளும்

நிலையில் மைய வங்கி இருக்கிறது. பணச்சந்தையில் தோன்றும் தேவைகளுக்கேற்ப எந்த அளவிற்குச் செலாவணியையும் கடனையும் கட்டுப்படுத்த வேண்டும் என்று மைய வங்கி ஒன்றே நன்கு அறிந்திருக்கிறது. இப் பணி மைய வங்கியிடம் இருப்பதால்தான் பணத்தின் அளிப்பிற்கும், தேவைக்கும் இடையே ஒரு சமத்துவத்தை ஏற்படுத்த மைய வங்கி முயற்சிகளைச் செய்யமுடிகிறது.

வியாபார மற்றும் வணிகத்தேவைகளுக்குத் தகுந்தாற்போல் செலாவணியும் கடனும் சரிசெய்யப்படுகிறதா என்று பார்த்தால் எந்த அளவுக்கு நிதியியல் நிருவாகம் திறம்படச் செயல்படுகிறது என்பது நன்ருக விளங்கும். இக் காரணத்திற்காகவே செலாவணி, கடன் ஆகிய இரண்டையும் ஒரு மைய இடத்திலிருந்து கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் எழுகிறது. ஆகவே, மைய வங்கிகளிடமே காகிதப்பணம் வெளியிடும் தனி உரிமையும் கொடுக்கப்பட்டுள்ளது. வணிக வங்கிகளின் ரொக்க இருப்புகளும், நாட்டின் செலாவணி இருப்பும் மைய வங்கி போன்ற ஒரு மைய அமைப்பில் இருப்பதுதான் நிதியியல் நிருவாகத்தின் அடிப்படையாகும். இத்தகைய அதிகாரங்கள் மைய வங்கியிடம் இல்லாதிருப்பின் ஒரு மைய வங்கி பண அளிப்பைச் செம்மையாகவும் முழுமையாகவும் கட்டுப்படுத்த முடியுமா என்பது ஐயத்திற்குரியது.

பொதுமக்களிடம் பங்குகள், பத்திரங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்யும் பழக்கமே இருப்பதில்லை. பொருளாதார நிலைமை மற்றும் அமைப்பு, வங்கிகளின் பொது அமைப்பு, மக்களிடையே ஏற்பட்டுள்ள வங்கிப் பழக்க வழக்கங்களின் வளர்ச்சியின் அளவு, நன்கு வளர்ச்சியுற்ற பணச்சந்தை, பணச்சந்தைகளில் பல்வேறு பகுதிகளுக்கும் உள்ள தொடர்பு, கடன் பயன்படுத்தப்படும் முறை, மக்களிடையே உள்ள கடன் உணர்வுகள் (Consciousness) ஆகியவற்றைப் பொறுத்துத்தான் எவ்வளவு செம்மையாக நிதியியல் நிருவாகம் செயல்பட முடியும் என்று அறியலாம். ஆனல் பணச்சந்தைகளில் ஒழுங்கற்ற நிலைமை, வளர்ச்சியுருத முதல் அங்காடி (Capital market), மக்களிடம் வங்கிப் பழக்கங்கள் வளராதிருப்பதால் பெரும் தொகைகளைக்கூட வங்கிகளில் (வைப்புக்கள் மூலம்) வைத்திராமல் தங்கள் வசம் வைத்திருத்தல் போன்றவை பின்தங்கிய நாடுகளில் பொதுவாகக் காணப்படுகின்றன.

நிதியியல் நிருவாகத்தில் கடனின் பங்கு மிக முக்கியமான ஒன்ருகும். வியாபார நடவடிக்கைகளில் கடனின் பங்கை அறியாதோர் இல்லை. கடனை நல்லவழிகளிலும், தீயவழிகளிலும்பயன்படுத்தலாம். அதனல்தான் கடன் உற்பத்தியும் (credit creation), கடன் கொடுப்பதும் (credit disbursement) சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருக்க

வேண்டும் என்று உலகெங்கிலும் கருதப்படுகிறது. கடன்கட்டுப் பாடானது (credit control) மைய வங்கிக் கொள்கைகள் எல்லா வற்றினுடனும் தன் தொடர்பை வெளிப்படுத்துவதோடல்லாமல் மைய வங்கியின் எல்லாப் பணிகளையும் ஒன்று சேர்த்துப் பொது வான குறிக்கோள் ஒன்றை அடைய உதவி செய்கிறது என்று டிகாக் (Decock) கூறியுள்ளார். கடன் கட்டுப்பாட்டின்மூலம்-தான் மைய வங்கி நிதியியல் கொள்கையின் மூன்று குறிக்கோள் களான நாணய மாற்று முறையை நிலைப்படுத்தல், விலைவாசியில் சீரான நிலைமையை உருவாக்குதல், பொருளாதார நிலைப்பேறுக்கம் ஆகியவற்றை அடைய முடிகிறது.

ரிசர்வ் பாங்க் தொடங்கப்படுவதற்கு முன்பே, ஹில்டன் யங் குழுவினர் (Hilden young commission) இந்தியாவில் அமைக்கப் படும் மைய வங்கியின் பணி, கடனையும் செலாவணியும் கட்டுப் படுத்துவதே ஆகும் என்றனர்.

இந்தியாவில் மைய வங்கி அமைப்பதால், இந்திய வங்கிகளின் ரொக்க இருப்பை ஒரே இடத்தில் சேகரித்து வைக்கவும், தொழில், வியாபாரம், விவசாயம் ஆகியவற்றிற்குக் கிடைக்கும் கடன் அளவை அதிகரிக்கவும் பருவகால நெருக்கடியின்போது அதிக வட்டி கொடுத்துக் கடன் வாங்கிப் பயன்படுத்துவதால் ஏற்படும் கெடுதல்களைக் குறைக்கவும் முடியும் என்று மைய வங்கி விசாரணைக் குழுவினரும் (Central Banking enquiry committee, 1931) கூறினர். ''பணத்தாள் வெளியிடுவதைக் கட்டுப்படுத்தவும், ரொக்க இருப்புகளை வைத்திருக்கவும், நிதியியலில் நிலையான நிலைமையை அடையவும், இதற்காக நாட்டின் செலாவணி மற்றும் கடன் முறையைத் தனது சௌகரியத்திற்குச் செயல்படுத்தவும்'' ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், ரிசர்வ் பாங்கிற்கு அதிகாரம் கொடுத்துள்ளது.

இக்குறிக்கோள்களை அடையக் கீழ்க்கண்ட அதிகாரங்கள் ரிசர்வ் பாங்கிற்குச் சட்டமுறைப்படி கொடுக்கப்பட்டுள்ளன.

1. வணிகத்தாள்களை (commercial papers) வாங்குதல் அல்லது மறுதள்ளுபடி செய்தல்.
2. தகுதிபெற்ற பிணையங்கள்மீது கடன் கொடுத்தல்.
3. தகுதிபெற்ற வங்கிகளின் ரொக்க இருப்புகளை வைத் திருத்தல், மாற்றுதல்.
4. அவ்வப்போது தன் வட்டிவீதத்தைத் தெரியப்படுத்துதல்.
5. அரசாங்க ஆவணங்களை வாங்குதல் மற்றும் விற்றல்.

## ரிசர்வ் பாங்கின் கடன் கொள்கை

ரிசர்வ் பாங்கின் கடன் கொள்கை வெற்றிகரமாகவும் செம்மையாகவும் இருக்க வேண்டுமாயின்:

1. பணச்சந்தை நன்கு வளர்ச்சியுற்றிருக்க வேண்டும்;

2. வணிக வங்கிகள் தங்கள் பணத்தேவைகளுக்காக மைய வங்கியைச் சார்ந்திருத்தல் வேண்டும். மேலும் வங்கிகளுக்கிடையே, ஒரு வங்கியானது மற்றொரு வங்கியைத் தனது பணத் தேவைகளுக்கு நம்பியிருக்க வேண்டும்;

3. மைய வங்கிக்கும் பிற வங்கிகளுக்குமிடையே உள்ள ஒத்துழைப்பையும் பொறுத்தது;

4. மைய வங்கியிடம் மறுதள்ளுபடி (rediscount) செய்து கொள்வதில் வங்கிகளுக்கு எந்தவித தப்பெண்ணமும் (prejudice) இருக்கக்கூடாது;

5. வங்கிகள் சாதாரண காலங்களுக்குத் தேவையான சற்றே போதுமான ரொக்க இருப்புகளை வைத்திருக்க வேண்டும்;

6. மைய வங்கி விரும்பத்தக்க அல்லது மைய வங்கி மறுதள்ளுபடி செய்வதற்குத் தகுதிபெற்ற கடன் கருவிகளை (credit instruments) வங்கிகள் போதுமான அளவுக்குத் தங்கள் வசம் வைத்திருக்க வேண்டும்.

இந்தியாவில் மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் எந்த அளவிற்கு நிறைவு செய்யப்படுகின்றன என்பதைப் பார்ப்போம்.

இந்தியப் பணச்சந்தையை நல்ல வளர்ச்சியுற்ற பணச் சந்தையாகக் கருத முடியாது. இந்தியப் பணச்சந்தையில் அமைப்புள்ள பணச்சந்தை, அமைப்பற்ற பணச்சந்தை என இரு பிரிவுகள் உள்ளன. இவ்விரு பிரிவுகளும் தங்களுக்கிடையே எந்த ஒரு தொடர்பும் இன்றிச் செயல்படுகின்றன. மேலும், அமைப்பற்ற பணச்சந்தையில் உள்ள ஒவ்வொரு பகுதியும் ஒரு தனிப் பணச்சந்தை போல இயங்குகிறது. மாற்று உண்டியல் அங்காடி (bill market) இல்லாதது மிகப்பெரிய குறையாகும். இங்கிலாந்தில் உள்ளது போல், ஏற்பகங்களும் (Acceptance Houses) தள்ளுபடியகங்களும் (Discount Houses) இந்தியாவில் இல்லை. பணச்சந்தையில் நிலவும் பலதரப்பட்ட வட்டி விகிதங்கள் இந்தியப் பணச்சந்தையின் மற்றுமொரு சீர்கேடாகும். மேலும் கறுப்புப் பணப் பெருக்கம் ரிசர்வ் பாங்கின் நடவடிக்கைகளைச் செயலற்றதாக்கி விடுகிறது. நீண்டகாலக் கடனளிக்கும் நிறுவனங்களின் (Tern Lending Institution)

தோற்றம் அண்மைக்கால நிகழ்ச்சியே ஆனதால் பணச்சந்தையின் மற்றொரு பிரிவான முதல் அங்காடி (Capital market) இன்னும் வளர்ச்சியுறும் நிலையில்தான் உள்ளது. ஆகவே, இந்தியப் பணச் சந்தையில் உள்ள குறைகள்தாம் நிறைவே தவிர, நிறைவுகள் குறைவே. இத்தகையப் பணச்சந்தையில்தான் ரிசர்வ் பாங்க் செயல்பட வேண்டியிருக்கிறது. இருப்பினும், ரிசர்வ் பாங்க் தன்னால் இயன்றவரை வெற்றிகரமாகவே செயல்படுகிறது.

இந்திய வங்கிகள், ரிசர்வ் பாங்க் துவங்கப்படுவதற்கு முன்னர், தங்களுடைய பணத்தேவைகளுக்கு இம்பீரியல் வங்கி யையே பெரிதும் நம்பி இருந்தன. இம்பீரியல் வங்கியும் ஒரு வணிக வங்கியாக இருந்ததால், இம்பீரியல் வங்கியை ஆபத்துக் காலத்தில் உதவி செய்யும் நண்பராகக் கருதாமல், ஒரு மாபெரும் போட்டியாளராகவே வங்கிகள் கருதின. மேலும், இம்பீரியல் வங்கி பெற்றிருந்த தனிச்சலுகைகள் காரணமாக, தங்களுடன் கடும்போட்டியிடுவதாக வணிக வங்கிகள் குறைகூறி வந்தன. ரிசர்வ் பாங்க் அமைக்கப்பட்ட பின்னராவது, இந் நிலையில் மாறுதல் ஏற்படும் என்று கருதப்பட்டது. இம்பீரியல் வங்கியைப் பொறுத் தவரை, அது மிகுந்த வருவாய்களையும், ரொக்க இருப்புகளையும் பெற்றிருந்ததால், ரிசர்வ் பாங்கிடம் கடன் அல்லது மறுதள்ளுபடி உதவி கேட்டுச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. பலம் வாய்ந்த கடன்கொடுப்பவராகப் பணச் சந்தையில் இயங்கி யதன் மூலம், வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் மறுதள்ளுபடி வசதிகள் பெறச் செல்லாமல் இம்பீரியல் வங்கி பார்த்து வந்தது. மேலும், ரிசர்வ் பாங்க் வீதத்திற்கும், இம்பீரியல் வங்கி வீதத்திற்கும் நிறைய வேறுபாடுகள் இருந்தன. ரிசர்வ் பாங்க் தனது பாங்க் வீதம் $3\frac{1}{2}$ விழுக்காடு என்று 1935 சூலைத் திங்கள் நான்காம் நாளில் அறிவிக்கும் முன்னரே இம்பீரியல் வங்கி 1935 சூன் திங்களி லிருந்தே அரசாங்க ஆவணங்கள் பேரில் $3\frac{1}{2}$ விழுக்காட்டில் கடன் கொடுத்து வந்தது. சூலைத்திங்களில், ரிசர்வ் பாங்க் தனது பாங்க் வீதத்தை $3\frac{1}{4}$ விழுக்காடாக ஆக்கியபோது, இம்பீரியல் வங்கி 3 விழுக்காட்டிற்கு அழைப்புக்கடன் வழங்க முன்வந்தது. இத் திட்டத் தின் கீழ் குறைந்த வட்டியில் கடன் பெறும் வணிகவங்கிகள் தங்களு டைய வணிக மாற்று உண்டியல்களை ரிசர்வ் பாங்கிற்கு எடுத்துச் சென்று மறுதள்ளுபடி செய்யாதிருக்கவே இம்பீரியல் வங்கி இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டது என்று நம்ப ஏதுவா கிறது. 1935, நவம்பர் 28—ம் நாள், ரிசர்வ் பாங்க் தனது பாங்க் வீதத்தை 3 விழுக்காடாக மாற்றியது. அதே சமயம், இம்பீரியல் வங்கி, அரசாங்க ஆவணங்கள் பிற அங்கீகரிக்கப் பட்ட ஆவணங்கள், தங்கம், வெள்ளி ஆகியவை பேரில் $2\frac{3}{4}$ விழுக்

காட்டில் கடன் கொடுக்க முன் வந்தது. இம்பீரியல் வங்கியின் வீதத்திற்கேற்றாற்போல் சந்தை வீதங்களும் மாறின. இக்காரணங்களினால், ரிசர்வ் பாங்க் மைய வங்கியாக இருந்த போதிலும் தன்னந்தனியே நிற்க வேண்டிய நிலைமை உருவாகியது. 1935-க்கும் 1939 க்கும் இடையே, ரிசர்வ் பாங்கிற்கும் இம்பீரியல் பாங்கிற்கும் இடையே இத்தகைய மாறுபட்ட கொள்கைகள் நிறையக் காணப்பட்டன. இதற்குப் பின்னராவது, வணிக வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் பண உதவி நாடி நெருங்கலாம் எனக்கருதப்பட்டது. ஆனால், வணிக வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் நெருங்கவே இல்லை. வணிக வங்கிகள் தங்களிடம் மிகுந்த ரொக்கத்தையும், வருவாயையும் பெற்றுத் தன்னிறைவு பெற்றிருந்ததால், ரிசர்வ் பாங்கிடம் உதவி நாடி நெருங்க வேண்டிய அவசியம் எழவில்லை. ஆகவே, வணிக வங்கிகள், ரிசர்வ் பாங்கிடம் உதவிநாடிச் செல்வது பற்றி எந்தவிதத் தப்பெண்ணமும் (prejudice) பெற்றிருக்கவில்லை என்பது தெரிகிறது. அட்டவணையிலிட்ட எல்லா வங்கிகளுடைய முக்கியச் சொத்துகள், பொறுப்புகள் பற்றிய புள்ளி விபரங்கள் அட்டவணை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணையிலிட்ட எல்லா வங்கிகளுடைய சொத்துகள், பொறுப்புகள் ஆகியவற்றின் நிலைமையைப் பார்த்தால், இவ்வங்கிகள் ரிசர்வ் பாங்கிடமிருந்து தொடக்கத்தில் ஏன் அவ்வளவாகக் கடன் வாங்கவில்லை என்பது தெரியவரும்.

அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் வணிக வங்கிகள் தங்களுடைய மொத்தக்கேட்பு, தவணைப் பொறுப்புகளில் 10 விழுக்காடு அளவிற்கு மட்டுமே ரொக்க இருப்புகள் வைத்துள்ளன. ஆனால் இந்த நிலைமை 1951–52 வரையில் இந்தியாவில் உருவாகவில்லை. அட்டவணை, 1 பத்தி, 6 ஐ நோக்கும்போது, அட்டவணையிலிட்ட வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் சட்டமுறைப்படி வைத்திருக்கவேண்டிய காப்பு ரொக்கத் தொகையைவிட எந்த அளவிற்குக் கூடுதலாக (Excess over statutory- minimam) காப்பு ரொக்கத்தை வைத்திருந்தன என்பது தெரிகிறது. மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்புகள், சட்டமுறைக்காப்பு ரொக்கம் ஆகியவை குறைந்தபோது, கூடுதல் காப்பு ரொக்கத் தொகையும் 1951-52-லிருந்து கணிசமாகக் குறைந்துள்ளது.

கேட்புப் பொறுப்புகள் தவணைப் பொறுப்புகளைவிட 1957–58 வரையில் அதிகமாக இருந்தன. 1958–59 லிருந்து அட்டவணையிலிட்ட வங்கிகளின் தவணைப் பொறுப்புகளில் மெச்சத்தக்க நல்ல வளர்ச்சி காணப்படுகிறது. மேலும், 1958-59

லிருந்து கேட்புப் பொறுப்புகளைவிட தவணைப் பொறுப்புகளே அதிகம். இதுவன்றி 1958-59 முதல் 1973-74 வரை கேட்புப் பொறுப்புகளுக்கும் தவணைப் பொறுப்புகளுக்கும் இருந்த இடைவெளி மிக அதிகமாகியுள்ளது. 1973-74—ல் தவணைப் பொறுப்புகள் கேட்புப் பொறுப்புகளைவிட 1537.32 கோடி ரூபாய் அளவிற்கு அதிகமாக இருந்தன. 1960-61-ல் இருந்த மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்புகளை 1973-74-ல் இருந்த அளவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவை கிட்டத் தட்ட ஆறு பங்கு அதிகமாகி உள்ளன என்று தெரியவருகிறது.

அரசாங்க ஆவணங்களில் அட்டவணையிலிட்ட வங்கிகள் செய்த முதலீடு என்பது கீழ்க்கண்டவற்றைக் குறிக்கும். மத்திய, மாநில அரசின் ஆவணங்கள், கருவூல மாற்று உண்டியல்கள், கருவூல வைப்பு இரசீதுகள் (Treasury Deposit Receipts) கருவூல சேமிப்பு வைப்புச் சான்றிதழ்கள் (Treasury Savings Deposit Certificates) மற்றும் தேசிய திட்டச் சான்றிதழ்கள் (National Plan Certificates) தேசிய சேமிப்புச் சான்றிதழ்கள் (National Savings Certificates) போன்ற அஞ்சலகச் சான்றிதழ்கள் ஆகிய வற்றில் அட்டவணையிலிட்ட வங்கிகள் செய்த முதலீடு மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்புகளில் எவ்வளவு விழுக்காடு என்பது, பத்தி 8-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. 1949 வரை, ரிசர்வ் பாங்க் தனது வெளியீடுகளில் வங்கிகள் அரசாங்க ஆவணங்களில் செய்த முதலீடு பற்றிய புள்ளி விபரங்களை அதிகாரப் பூர்வமாக வெளி யிடவில்லையாதலால், அதுபற்றிய புள்ளி விபரங்கள் இங்கே கொடுக்கப்படவில்லை. 1959-60-லிருந்து அரசாங்க ஆவணங் களில் செய்த முதலீட்டின் விழுக்காடு படிப்படியாகக் குறைந்து வந்துள்ளதைக் காணலாம். (பத்தி 8)

வங்கிகளுக்குத் தவிர பிறருக்குக் கொடுத்த கடன், ரொக்கக் கடன், மேல்வரைப்பற்றுகள் ஆகியவற்றின் கூடுதல் தொகை மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்பில் எவ்வளவு விழுக்காடு என்பது பத்தி 9-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. கடன்—வைப்பு வீதம் (credit-deposit ratio) கிட்டத்தட்ட 70 விழுக்காட்டி லிருந்து சில ஆண்டுகளில் அதிகமாகவும் சில ஆண்டுகளில் குறை வாகவும் இருப்பினும், கவனிக்கவேண்டியது என்னவெனில் இந்த விழுக்காடு கிட்டத்திட்ட 70% ஆகவே இருந்தாலும், மொத்த வைப்புகள் அதிகமாகிவிட்டபடியால் அளித்த கடன் தொகை குறிப்பாக 1960-61-லிருந்து அதிகமாகியுள்ளது.

ஆகவே 1950—51 வரை அட்டவணையிலிட்ட வங்கிகள் அதிக ரொக்க இருப்புகளைப் பெற்றிருந்தாலும், கடன் பெருக்கம்

அவ்வளவாக இல்லையாதலாலும், ரிசர்வ் பாங்க் ஆவணங்களை வாங்கிக் கடன் வசதிகளைப் பெருக்கியதாலும் (வெளி அங்காடி நடவடிக்கைகள் வழியாக) ரிசர்வ் பாங்கிடம் அதிகமாகக் கடன் பெறவில்லை என்பது பத்தி 5–ல் உள்ள புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. 1951–52-லிருந்து, ரிசர்வ் பாங்க் அதிகக் கடன்களைக் கொடுத்து வருகிறது. 1951–ல் ரிசர்வ் பாங்க் தனது மலிவுப் பணக்கொள்கையைக் (cheap money policy) கைவிட்டதாலும், பாங்க் வீதத்திலும், வெளி அங்காடி நடவடிக்கைக் கொள்கையிலும் மாறுதல் செய்ததாலும், வங்கிகளின் கடன் பெருக்கம் அதிகமானதாலும், ரிசர்வ் பாங்கிடமிருந்து அதிகக் கடனைப் பெற வேண்டிய நிலைமை எழுந்தது. எவ்வகையிலாவது கடன் பெருக்கத்தை அடைய வேண்டும் என்பதற்காக, அட்டவணையிலிட்ட வங்கிகள் கீழ்க்கண்ட வழிகளைப் பின்பற்றின.

1. தங்களுடைய காப்பு ரொக்க இருப்பு விழுக்காட்டைக் குறைத்துக் கொண்டன. (பத்தி 7)

2. ரிசர்வ் பாங்கிடம் சட்டமுறைப்படி வைக்கவேண்டிய ரொக்க இருப்புகளுக்குமேல் கூடுதலாக வைத்திருக்கும் தொகையைக் குறைத்தன. (பத்தி 6)

3. அரசாங்க ஆவணங்களில் முதலீடு செய்வதைக் குறைத்தன. (பத்தி 8)

4. தங்களுடைய வைப்புகளில் பெரும் அளவைக் கடன் கொடுக்கப் பயன்படுத்தின. (பத்தி 9)

5. ரிசர்வ் பாங்கிடம் கூடுதலான கடன்களைப் பெற்றன. (பத்தி 5)

## அட்டவணை 1.

### அட்டவணையிலிட்ட எல்லா வங்கிகளுடைய முக்கிய சொத்துகளும், பொறுப்புகளும்

(ரூபாய் இலட்சக் கணக்கில்)

மொத்த வைப்புத் தொகையில்

| ஆண்டு ஏப்ரல்-மார்ச்ச | கேட்பு வைப்புகள் | தவணை வைப்புகள் | மொத்த வைப்புகள் | ரிசர்வ் பாங் கிடம் பெற்ற கடன் | சட்டமுறைக் காப்பிற்கும் அதிகமாக ரிசர்வ் பாங்கிடம் வைத்திருந்தக் காப்பு ரொக்கம் | காப்பு ரொக்கத்தின் % | முதலீட்டின் % | கொடுத்த % |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1937-35 | 117,89 | 97,78 | 215,67 | — | 22,41 | 16.8 | | 42.2 |
| 1935-36 | 125,84 | 100,55 | 226,39 | — | 22,07 | 16.0 | | 41.4 |
| 1936-37 | 135,04 | 108,74 | 243,78 | 4 | 16,55 | 13.1 | | 49.0 |
| 1937-38 | 130,05 | 108,29 | 238,34 | 2 | 8,06 | 10.0 | | 50.1 |
| 1938-39 | 135,51 | 106,07 | 241,58 | 10 | 7,16 | 9.4 | | 51.4 |
| 1939-40 | 155,70 | 106,16 | 261,86 | 3 | 20,12 | 14.1 | | 51.9 |
| 1940-41 | 200,15 | 107,08 | 307,23 | 2 | 25,74 | 15.4 | | 40.3 |
| 1941-42 | 280,28 | 104,20 | 384,49 | 3 | 37,08 | 16.9 | | 26.5 |

அட்டவணை 1-இன் தொடர்ச்சி ?

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1942-43 | 419,41 | 131,03 | 550,44 | 11 | 36,67 | 14.2 | | 25.8 |
| 1943-44 | 561,52 | 181,92 | 743,43 | 10 | 53,92 | 15.0 | | 29.2 |
| 1944-45 | 631,81 | 240,33 | 872,13 | 5 | 50,84 | 13·0 | | 32·5 |
| 1945-46 | 722,31 | 310,66 | 1,032,97 | 6 | 43,35 | 12.2 | | 38.4 |
| 1946-47 | 743,45 | 364,28 | 1,107,73 | 45 | 53,71 | 12.0 | | 42.5 |
| 1947-48 | 760,76 | 330,37 | 1,091,13 | 1,60 | 45,55 | 11.0 | | 43.2 |
| 1948-49 | 609,77 | 279,92 | 889,69 | 7,18 | 30,26 | 11.4 | | 50.7 |
| 1949-50 | 595,18 | 273,71 | 868,89 | 5,69 | 26,29 | 11.6 | | 50.9 |
| 1950-51 | 592.55 | 288,06 | 880,61 | 12,41 | 21.78 | 10.6 | 33.6 | 60.6 |
| 1951-52 | 541.95 | 280,10 | 822,05 | 54,13 | 10,80 | 9.58 | 36.01 | 70.61 |
| 1952-53 | 521,30 | 309,24 | 830,54 | 18,87 | 9,87 | 9.08 | 36.52 | 63.65 |
| 1953-54 | 521,82 | 325,64 | 847,56 | 31,00 | 7,85 | 8.60 | 37.63 | 63.51 |
| 1954-55 | 567,28 | 375,32 | 942,60 | 37,07 | 9,93 | 8.25 | 36.51 | 66.07 |
| 1955-56 | 630,80 | 412,35 | 1,043,15 | 65,08 | 8,81 | 8.12 | 34.50 | 72.98 |
| 1956-57 | 703,61 | 471,69 | 1,175,30 | 103,16 | 6,65 | 7.51 | 29.54 | 76.58 |
| 1957-58 | 730,65 | 720,59 | 1,451,24 | 42,00 | 13,66 | 7,24 | 30.35 | 66.34 |
| 1958-59 | 722,38 | 912,63 | 1,635,01 | 61,86 | 8,11 | 6.59 | 37.51 | 62.00 |
| 1959-60 | 781,33 | 1,120,69 | 1,902,02 | 79,44 | 14,13 | 8.04 | 37.58 | 59.30 |
| 1960-61 | 719,72 | 1,026,34 | 1,746,06 | 94,53 | 12,67 | 6.7 | 32.0 | 75.6 |
| 1961-62 | 788,76 | 1,133,11 | 1,921,87 | 53,04 | 6,07 | 6.4 | 31.3 | 73.2 |
| 1962-63 | 867,11 | 1,175,14 | 2,042,26 | 71,28 | 7,61 | 6.2 | 29.0 | 77.8 |
| 1963-64 | 1,071,10 | 1,214,00 | 2,285,10 | 84,16 | 10,55 | 6.5 | 28.0 | 79.5 |

## அட்டவணை 1-ன் தொடர்ச்சி 3

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1964-65 | 1,239,35 | 1,343,95 | 2,583,30 | 153,02 | 11,97 | 6.3 | 27.8 | 78.7 |
| 1965-66 | 1,427,03 | 1,522,90 | 2,949,93 | 73,52 | 15,69 | 5.8 | 27.5 | 77.6 |
| 1966-67 | 1,674,78 | 1,814,98 | 3,489,76 | 293,82 | 15,66 | 6.3 | 26.5 | 79.0 |
| 1967-68 | 1,872,61 | 2,050,73 | 3,923,34 | 273,26 | 17,23 | 5.8 | 25.5 | 79.0 |
| 1968-69 | 1,966,27 | 2,458,29 | 4,424,55 | 350,06 | 20,01 | 24.8 | 24.8 | 78.8 |
| 1969-70 | 2,267,24 | 2,860,46 | 5,127,69 | 511,63 | 23,66 | 6.4 | 23.7 | 79.7 |
| 1970-71 | 2,663,49 | 3,350,62 | 6,014,11 | 673,85 | 25,47 | 6.1 | 23.6 | 79.6 |
| 1971-72 | 3,177,02 | 4,067,89 | 7,244,91 | 528,39 | 37,23 | 6.38 | 23.70 | 74.57 |
| 1972-73 | 3,857,20 | 4,957,09 | 8,814,29 | 452,05 | 33,53 | 5.72 | 25.41 | 71.69 |
| 1974-74 | 4,395,83 | 5,933,15 | 10,328,98 | 718,95 | –109,71 | 8.45 | 23.70 | 72.94 |

# அட்டவணை 2

ரிசர்வ் பாங்க் அளித்த கடன் (ரூபாய் இலட்சக் கணக்கில்)

| ஆண்டு (ஏப்ரல் மார்ச்சு) | அரசுக்குக் கொடுத்த கடன் | மாநில அரசுகளுக்குக் கொடுத்த கடன் | பிற கடன் | வாங்கிய அல்லது மறுதள்ளுபடி செய்த உள்நாட்டு மாற்று உண்டியல் | வாங்கிய அல்லது மறுதள்ளுபடி செய்த அரசாங்கக் கருவூல உண்டியல் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1935-36 | 87 | | 1 | | |
| 1936-37 | 154 | | 1 | 1 | |
| 1937-38 | 79 | | 2 | 1 | 5 |
| 1938-39 | 172 | | 2 | | 153 |
| 1939-40 | 105 | | 10 | | 287 |
| 1940-41 | 201 | | 7 | | 97 |
| 1941-42 | 409 | | 4 | | 27 |
| 1942-43 | 149 | | 4 | | 68 |
| 1943-44 | 49 | | 15 | | 91 |
| 1944-45 | 43 | | 11 | | 146 |
| 1945-46 | 22 | | 12 | | 335 |
| 1946-47 | 5 | | 82 | | 233 |
| 1947-48 | 157 | | 21 | | 262 |
| 1948-49 | 171 | | 334 | 29 | 399 |
| 1949-50 | 335 | | 839 | 53 | 377 |
| 1950-51 | 156 | | 1675 | | 821 |
| 1951-52 | 94 | | 6137 | | 372 |
| 1952-53 | 330 | | 2695 | | 880 |
| 1953-54 | 51 | | 4110 | | 1074 |
| 1954-55 | 45 | | 4787 | | 1037 |
| 1955-56 | — | | 7994 | | 1223 |
| 1956-57 | 765 | | 12787 | | 298 |
| 1957-58 | 2123 | | 7840 | | 768 |
| 1958-59 | 2477 | | 11344 | | 518 |
| 1959-60 | 2234 | | 15654 | | 3360 |
| 1960-61 | 3902 | | 18550 | | 3917 |
| 1961-62 | 8089 | | 17769 | | 4660 |
| 1962-63 | 5476 | | 20731 | | 6600 |
| 1963-64 | 7062 | | 22096 | | 6460 |
| 1964-65 | — | 7397 | 30638 | | 8651 |
| 1965-66 | — | 21121 | 24457 | | 5301 |
| 1966-67 | — | 7066 | 31741 | | 22813 |
| 1967-68 | — | 11973 | 31098 | | 16888 |
| 1968-69 | — | 15182 | 36094 | | 17058 |
| 1969-70 | — | 21198 | 52231 | | 6192 |
| 1970-71 | — | 24951 | 70879 | 671 | 3138 |
| 1971-72 | — | 62520 | 61894 | 4180 | 6936 |
| 1972-73 | — | 13468 | 69109 | 354 | 9695 |
| 1973-74 | — | 23756 | 92276 | 250679 | 14175 |

அட்டவணை 2-ல், 1935-லிருந்து 1974 மார்ச்சு முடிய, ரிசர்வ் பாங்க் அளித்த கடன் மறுதள்ளுபடி வசதி ஆகியவை பற்றிய புள்ளி விவரங்கள் தரப்பட்டுள்ளன. பத்தி 2-ன் தலைப் பான ''அரசுக்குக் கொடுத்த கடன்'' என்பது, இந்திய ரிசர்வ் பாங்கின் சட்டம், பிரிவு 17 (5) ன் கீழ் மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் ரிசர்வ் பாங்கால் கொடுக்கப்படும் (கடன் பெற்ற தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள் திருப்பிக் கொடுக்க வேண்டிய) வழிவகைக் கடன்களைக் (Ways & Means advances) குறிக்கும். 1943—44லிருந்து மத்திய அரசு எந்த ஒரு வழிவகைக் கடனையும் ரிசர்வ் பாங்கிடமிருந்து பெறவில்லை. இந்திய ரிசர்வ் பாங்கின் சட்டம், பிரிவு 46A யின் கீழ், தேசிய வேளாண்மைக் கடன் (நீண்ட கால நடவடிக்கை) நிதியிலிருந்து, மாநில அரசு களுக்குக் கொடுக்கப்படும் கடனும், முன்பணமும் மற்றும் மாநில அரசுகள் பெற்றுவந்த தற்காலிக மேல்வரைப் பற்றுகளும் இத் தலைப்பில் அடங்கும். 1964 டிசம்பர் திங்களிலிருந்துதான், மத்திய, மாநில அரசுகள் பெற்ற கடன் பற்றியப் புள்ளி விவரங் கள் தனித்தனியாக ரிசர்வ் பாங்கின் வெளியீடுகளில் கொடுக்கப் படுகின்றன.

1948 வரையில், அரசாங்கமே ரிசர்வ் பாங்கின் மிகப் பெரிய வாடிக்கையாளராக இருந்ததென்பதை பத்தி 2—ல் உள்ள புள்ளிகள் தெளிவாக்குகின்றன. 1957 வரையில், ரிசர்வ் பாங்க் அரசுக்குக் கொடுத்த கடன் அவ்வளவு அதிகம் இல்லை. ஆனால் 1958 லிருந்து 1964 வரை கடன் தொகையில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன. 1965 லிருந்து 1974 வரை மத்திய அரசு ரிசர்வ் பாங்கிடம் கடன் பெறுவதை நிறுத்திக் கொண்டது; வழிவகைக் கடன்களை அவ்வளவாகப் பெறாமல், 1954-55-லிருந்து ரிசர்வ் பாங்கிற்குத் தனிக் கருவூல மாற்று உண்டியல்களை விற்பதன் வழியாகத் தனது தேவைகளைப் பெற்று வருகிறது.

1965-லிருந்து 1974 வரை மாநில அரசுகள் பெற்ற கடனைப் பார்க்கும்போது (பத்தி 3) 1971—72-ல் ரிசர்வ் பாங்க் அளித்த பிற கடன்களைவிட மாநில அரசுகளுக்குக் கொடுத்த கடனே அதிக மாக உள்ளது.

பத்தி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள 'பிற கடன்கள்' கீழ்க் கண்டவற்றைக் குறிக்கும். இந்திய ரிசர்வ் பாங்கின் சட்டம், பிரிவு 17, 18 ஆகியவற்றின்கீழ், அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளுக்கும், மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும் பிறவகை யினருக்கும் (இந்தியத் தொழில் நிதிக்கூட்டுரு, மாநில நிதியக் கூட்டுருக்கள் போன்றவை) ரிசர்வ் பாங்க் கொடுத்த கடனைக்

குறிக்கும். இத்தகைய நிறுவனங்களுக்குக் கொடுத்த கடன் பற்றிய புள்ளி விவரங்கள், 1962 ஜூலைத் திங்களிலிருந்துதான், ரிசர்வ் பாங்க், தனித்தனியாக வெளியிட்டு வருகிறது. 1965 சனவரித் திங்களிலிருந்து இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிக்கு, தேசியத் தொழில்கடன் (நீண்டகால நடவடிக்கை) நிதியிலிருந்து கொடுக்கப்படும் கடன், முன்பணம் ஆகியவையும், 'பிறகடன்கள்' தலைப்பில் அடங்கும். தேசிய வேளாண்மைக் கடன் (நிலைப் பேறுக்கம்) நிதி ஆகியவற்றிலிருந்து கொடுக்கப்படும் கடனும், முன்பணமும், மாநிலக்கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுக்கப்படும் கடனில் அடங்கும்.

1951 நவம்பரில், ரிசர்வ் பாங்க், பாங்க் வீதத்தை 3 விழுக்காட்டிலிருந்து $3\frac{1}{2}$ விழுக்காடாக ஆக்கியதாலும், வெளி அங்காடி நடவடிக்கைக் கொள்கையில் மாறுதல் செய்தமையாலும், ரிசர்வ் பாங்கிடம் கடன் பெறுவதற்காக வங்கிகள் நெருங்க வேண்டிய நிலைமை உருவாகியது ஆகவே, 1951-லிருந்து, நான்கைந்து ஆண்டுகளைத் தவிர, ரிசர்வ் பாங்க் மேற்கூறப்பட்ட பிற நிறுவனங்களுக்குத் தொடர்ந்து அதிகக் கடன் தொகையை அளித்து வந்துள்ளது.

வாங்கிய அல்லது மறுதள்ளுபடி செய்த உள்நாட்டு மாற்று உண்டியல்களின் மதிப்பைப் பார்க்கையில் பெரும்பாலும் இல்லை என்றே சொல்ல வேண்டியுள்ளது. முக்கியமாகப் பருவகாலப் பணத் தேவைகளை அளிப்பதற்காகவே, வணிக உண்டியல்களை ரிசர்வ் பாங்க், பெரும்பாலும், மறுதள்ளுபடி செய்தது.

1950-லிருந்து மாநில அரசுகளின் சார்பில் ரிசர்வ் பாங்க் கருவூல உண்டியல்களை வெளியிடுவதில்லை. 1950க்கு முன்னால் அத்தகைய நிகழ்ச்சிகள் மிகக்குறைவே. ரிசர்வ் பாங்க் வாங்கிய அல்லது மறுதள்ளுபடி செய்த கருவூல உண்டியல்களின் மதிப்புத் தொகை, சீராக இல்லை என்பது, பத்தி 6-ன் வழியாகத் தெரியவருகிறது.

## கடனின் விலையும், கிடைக்கக்கூடிய அளவும் (Cost and availability of Credit)

அண்மைக் காலத்தில் கடனின் விலையை (Cost of Credit உயர்த்துவதற்காகவும், கிடைக்கக்கூடிய கடனின் (Availability of Credit) அளவைக் குறைப்பதற்காகவும், ரிசர்வ் பாங்கால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக ஆகும்.

1. வைப்புக்களுக்கான வட்டி விகிதத்தை உயர்த்துவதன் மூலம், வணிக வங்கிகளுக்குப் பணத்தின் விலையை (Cost of money) உயர்த்துதல் ;

2. ரிசர்வ் பாங்கிடமிருந்து பெறக்கூடிய மறுநிதியின் (Refinance) விலையை உயர்த்துதல், கிடைக்கக்கூடிய அளவைக் குறைத்தல்;

3. வங்கிகள் கடன் கொடுப்பதற்காக வைத்துள்ள வருவாய்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் (indirectly) குறைத்தல்;

4. வங்கிகளிடமிருந்து கடன் பெறுவோருக்குக் கடனின் விலையை உயர்த்துதல்.

இவைபற்றி இனி விரிவாகக் காண்போம்.

## 1. வைப்புகளின் வட்டி வீதத்தை உயர்த்துதல்

முதலாவதாக, பொது மக்களிடமிருந்து பெறும் சேமிப்பு வைப்புகளுக்கும், தவணை வைப்புகளுக்கும் வங்கிகள் கொடுக்க வேண்டிய வட்டிவீதம் பெருமளவிற்கு வங்கிகளுக்குக் கிடைக்கக் கூடிய பணத்தின் விலையை நிருணயிக்கிறது, நடப்பு வைப்புகளுக்கு வட்டி ஏதும் கொடுக்க வேண்டியதில்லை. சேமிப்பு வைப்புகள் தவணை வைப்புகள் ஆகியவைகட்குக் கொடுக்க வேண்டிய வட்டிவீதம் 1970 ஏப்ரல், 1971 சனவரி, 1973 ஏப்ரல், 1974 ஏப்ரல் 1, 1974 சூலை 23 ஆகிய காலங்களில் மாற்றியமைக்கப்பட்டது. 1970 ஏப்ரல் 1-ல் சேமிப்பு வைப்புகளின் வட்டிவீதம் 3·50 % ஆகவும், ஓராண்டிற்குமேல் ஆனால் 2 ஆண்டிற்கு உட்பட்ட தவணை வைப்புகளின் வட்டிவீதம் 5· 50 % ஆகவும் இருந்தது. 1973 ஏப்ரல் 1-ல், மேற்கண்ட வட்டி வீதங்கள் முறையே 4 % ஆகவும் 6 % ஆகவும் இருந்தன. வைப்பு வீதம் உயர்த்தப்படும்போது, கிடைக்கக்கூடிய பணத்தின் அடக்கவிலையும் உயர்வது இயல்பே. நடப்பு வைப்புகளுக்கு வட்டி ஏதும் இல்லை எனினும், நடப்பு வைப்பின் அடக்க விலை, அது (நடப்பு வைப்பு) மொத்த வைப்பில் எந்த அளவுக்கு உள்ளது என்பதைப் பொறுத்தாகும்.

கீழ்க்கண்டவையும், வங்கிகளுக்குக் கிடைக்கக்கூடிய பணத்தின் விலையைப் பாதிக்கின்றன.

1. ரிசர்வ் பாங்கால் நிருணயிக்கப்படும் சட்டமுறை ரொக்கத்தன்மை வீதம் (Statutory liquidity ratio).

2. ரிசர்வ் பாங்கால் முடிவு செய்யப்பட்டபடி ரிசர்வ் பாங்கிடம் வங்கிகள் வைத்திருக்க வேண்டிய கட்டாயக் காப்பு ரொக்கம் (Statutory cash reserve).

சட்டமுறை ரொக்கத்தன்மை வீதம் உயர்த்தப்படும்போது, வங்கிகள் தங்கள் நிதியை அதிக வருமானம் தரக்கூடிய முதலீடுசளில், முதலீடு செய்ய முடியாமல் போகிறது.

சட்டமுறைக் காப்பு ரொக்கம் 3% லிருந்து 5 % ஆகவும் பின்னர் 1973 செப்டம்பரில் 7 % ஆகவும் உயர்த்தப்பட்டது. சட்டமுறைக்காப்பில் ஏற்படும் 1 % உயர்வால், சுமார் 100 கோடி ரூபாய் ரிசர்வ் பாங்கில் முடங்குகிறது. (சான்ருக, 1973 மார்ச்சு இறுதியில், அட்டவணையிலிட்ட எல்லா வங்கிகளுடைய மொத்தக் கேட்பு, தவணை வைப்புகள் 8814·29 கோடி ரூபாயாக இருந்தது. இப்போது, சட்டமுறைக்காப்பு ரொக்கத்தை ரிசர்வ் பாங்க் 1 % உயர்த்துமேயாளுல், 88.14 கோடி ரூபாய் மதிப்புள்ள வைப்புகள் ரிசர்வ் பாங்கில் முடங்கிவிடும்) சட்டமுறைக்காப்பு ரொக்க வீதம் 3 % -லிருந்து 7 %-க்கு உயர்த்தப்பட்டால் சுமார் 430 கோடி ரூபாய் மதிப்புள்ள வைப்புகள் ரிசர்வ் பாங்கில் முடக்கப்பட்டது. இவ்வாறு, வங்கிகள் கூடுதலாக சட்டமுறைக்காப்பு ரொக்கத்தைத் தன்னிடம் வைத்திருக்க வேண்டும் என்று ரிசர்வ் பாங்க் கட்டளையிட்டால், வங்கிகள் தங்கள் முதலீடுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. இதனுல் வங்கிகளுக்குக் கடன் கொடுக்கக் கிடைக்கக் கூடிய வருவாயின் அளவு குறைக்கப்படுகிறது.

சட்டமுறை ரொக்கத்தன்மை வீதமும், காப்பு ரொக்க வீதமும் உயர்த்தப்படுவதால், எவ்வாறு வணிக வங்கிகளிடம் கடன் அளிப்பதற்கு உள்ள வருவாய்கள் குறைகின்றன என்பது அட்டவணை 3-ல் காட்டப்பட்டுள்ளது.

## அட்டவணை 3

### வணிக வங்கிகளிடம் கடன் அளிப்பதற்கு உள்ள வருவாய்கள்

| | | சட்டமுறை ரொக்கத் தன்மை விகிதம் | சட்டமுறைக் காப்புரொக்க விகிதம் | மொத்தத் தவணை கேட்புப் பொறுப்புகளில் கடனளிக்கக் கிடைக்காதது % | கடன் பெருக்கத்திற்குக் கிடைக்கக் கூடிய இருப்பு % |
|---|---|---|---|---|---|
| 1970 | சனவரி | 25 | 3 | 28 | 72 |
| | பிப்ரவரி | 26 | 3 | 29 | 71 |
| | ஏப்ரல் | 27 | 3 | 30 | 70 |
| 1972 | ஆகஸ்ட் | 29 | 3 | 32 | 68 |
| | நவம்பர் | 30 | 3 | 33 | 67 |
| 1973 | சூன் | 30 | 5 | 35 | 65 |
| | செப்டம்பர் | 30 | 6 | 36 | 64 |
| | செப்டம்பர் | 30 | 7 | 37 | 63 |
| | டிசம்பர் | 32 | 7 | 39 | 61 |

### ரிசர்வ் பாங்கிடம் பெறக்கூடிய மறுநிதியின் விலையை உயர்த்துதல்

ரிசர்வ் பாங்க், வங்கிகளுக்குத்தான் அளிக்கக்கூடிய மறு நிதியின் விலையைக் கீழ்க்கண்ட வகையில் உயர்த்தலாம்.

1. பாங்க் வீதத்தை உயர்த்துதல்.
2. நிகர ரொக்கத் தன்மை வீத முறையில் (Net liquidity ratio) மாறுதல்கள் செய்தல்.

பாங்க் வீதம் 5 % லிருந்து 6 % ஆகவும் பின்னர் 1973 மே யில் 7 % ஆகவும், 1974 சூலையில் 9 % ஆகவும் உயர்த்தப் பட்டது.

நிகர ரொக்கத்தன்மை வீதத்தில் ஏற்படும் மாற்றங்களுக்குத் தகுந்தாற்போல், வங்கிகள் பெறக்கூடிய கடனின் வட்டி வீதமும் உயருகிறது.

இவைபற்றி விரிவாக, பின்னல், கூறப்பட்டுள்ளது.

## கடனளிக்குக் கடனின் விலையை உயர்த்துதல்

1973 மே யில், வங்கிகள் தாங்கள் கொடுக்கும் கடனுக்குக் குறைந்த அளவு 10 % வட்டி வசூலிக்க வேண்டும் என்று ரிசர்வ் பாங்க் கட்டளையிட்டது 1973 நவம்பரில், இந்த வட்டி வீதம் 11 %-க்கு உயர்த்தப்பட்டது. 1974 ஜூலை 23-லிருந்து வட்டி வீதம் $12\frac{1}{2}$ % ஆகும்.

## கடன் கட்டுப்பாட்டு முறைகள்

கடன் கட்டுப்பாட்டிற்கான நடவடிக்கைகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை முறையே :

1. கடன் கணியக்கட்டுபாடு (Quantitative credit control)
2. கடன் தன்மைக்கட்டுபாடு (Qualitative credit control)

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம் ஆகிய சட்டங்களின்படி கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி ரிசர்வ் பாங்க் கடனைக் கட்டுப்படுத்துகிறது. ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டப்படி கடன் கட்டுபாட்டிற்கான பொதுவான அதிகாரங்களையும், வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டப்படி வணிக, மற்றும் கூட்டுறவு வங்கிகளின் நடவடிக்கைகளை நேரடியாகக் கட்டு படுத்தும் (Direct regulation) அதிகாரத்தையும் ரிசர்வ் பாங்க் பெற்றிருக்கிறது. எல்லாக் கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளும் வங்கிகளின் காப்பு ரொக்கத்தைப் பாதிக்கின்றன. வெளி அங்காடி நடவடிக்கைகள்(Open market operation) காப்பு ரொக்க மாறுதல்கள் (Cash reserve variations( ஆகியவை வங்கிகளின் காப்பு ரொக்கத்தை நேரடியாகப் பாதிக்கின்றன. ஆனல், பாங்க் வீதம் (Bank rate) மறைமுகமாகவே வங்கிகளின் காப்பு ரொக்கத்தைப் பாதிக்கிறது. அவ்வப்போது இருக்கும் நிலைமை, எந்த அளவுக்கு மற்றும் எவ்வளவு சீக்கிரம் மாறுதல்களை உண்டாக்க வேண்டும் என்பதைப் பொறுத்து எக் கருவியைப் பயன்படுத்த வேண்டும் என்பது முடிவு செய்யப்படுகிறது. வெளி அங்காடி நடவடிக்கைகள் மூலம் அவ்வப்போதைக்குத் தேவையான மிகச் சிறிய அளவு மாறுதல்களையும் உண்டாக்கலாம். காப்பு ரொக்கத்தில் செய்யப்படும் மாறுதல்கள் உடனடியே பொதுவாக எல்லா வங்கிகளையும் பாதிக்கின்றன.

ஆனல், பாங்க் வீதத்தில் செய்யப்படும் மாறுதல்கள் பொருளாதாரம் முழுவதிலும் மாறுதல்களை உண்டாக்குகின்றன.

வங்கிகளுக்குக் கிடைக்கக்கூடிய கடன், ரிசர்வ் பாங்க் வாங்கக்கூடிய அல்லது மறுதள்ளுபடி செய்யக்கூடிய வணிகத் தாள்களையும் (Commercial papers) பொறுத்ததாகும். அட்டவணையிலிட்ட வங்கிகளுக்கு (Scheduled banks) ரிசர்வ் பாங்க் கடன் கொடுப்பது பற்றி ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டப்படி, ரிசர்வ் பாங்க் தகுதியுள்ள ஆவணங்கள்மீது கடன் கொடுத்தோ அல்லது மறுதள்ளுபடி செய்தோ கடனைப் பெருக்குகிறது. ரிசர்வ் பாங்க் மறுதள்ளுபடி செய்யத் தகுதிபெற்ற வணிகத்தாள்களாவன:—

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17 (2)(a)

இந்தியாவில் எழுதப்பட்டதாகவும், இந்தியாவிலேயே கொடுக்கப்பட வேண்டியதாகவும், உண்மையான வணிக அல்லது வியாபார நடவடிக்கைகளினுல் உண்டானவையாகவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நல்ல கையொப்பங்களை உடையவையாகவும், அவ்விரு கையொப்பங்களில் ஒரு கையொப்பமானது அட்டவணையிலிட்ட ஒரு வங்கியினுடையதாகவோ அல்லது ஒரு மாநிலக் கூட்டுறவு வங்கியினுடையதாகவோ இருக்கும். மாற்று உண்டியல்களையும் புரோ நோட்டுகளையும் வாங்குதல், விற்றல் மற்றும் மறுதள்ளுபடி செய்தல்; கால முதிர்வைப் பொருத்த வரை கருணை நாள்கள் (days of grace) நீங்கலாக வாங்கிய அல்லது மறுதள்ளுபடி செய்த தேதியிலிருந்து

(i) சரக்குகள் ஏற்றுமதி சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக எழுதக்கூடிய மாற்று உண்டியல்கள் மற்றும் புரோ நோட்டுகளைப் பொறுத்தவரை, 180 நாள்களுக்கு உட்பட்டது.

(ii) பிற மாற்று உண்டியல்கள் மற்றும் புரோ நோட்டுகளைப் பொறுத்தவரை 90 நாள்களுக்குட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

**பிரிவு (17) (2) (b)**

இந்தியாவில் எழுதப்பட்டதாகவும், இந்தியாவிலேயே கொடுக்கப்பட வேண்டியதாகவும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நல்ல கையொப்பங்களை உடையவையாகவும், அவ்விரு கையொப்பங்களில் ஒரு கையொப்பமானது அட்டவணையிலிட்ட ஒரு வங்கியினுடையதாகவோ அல்லது மாநிலக் கூட்டுறவு வங்கியினுடையதாகவோ இருந்து பருவக்கால வேளாண்மைக் கடன்

நோக்கத்திற்காகவோ விவசாயப் பயிர்களை விற்பதற்காகவோ எழுதப்பட்டதாகவும் அல்லது கொடுக்கப்பட்டதாகவும், கருணை நாள்கள் தவிர, வாங்கிய அல்லது மறு தள்ளுபடி செய்த தேதியிலிருந்து 15 திங்களுக்குட்பட்ட கால முதிர்வை உடையனவாகவும் உள்ள மாற்று உண்டியல்களையும் புரோ நோட்டுகளையும் வாங்குதல், விற்றல் மற்றும் மறுதள்ளுபடி செய்தல்.

## பிரிவு (17) (2) (c)

இந்தியாவில் எழுதப்பட்டதாகவும் கொடுக்கப்பட வேண்டியதாகவும் அட்டவணையிலிட்ட ஒரு வங்கியின் கையொப்பத்தைப் பெற்றதாகவும், மத்திய அல்லது மாநில அரசுகளின் ஆவணங்களில் வியாபாரம் செய்வதற்கோ அல்லது அவற்றை வைத்திருப்பதற்காகவோ எழுதப்பட்டதாகவும் அல்லது கொடுக்கப்பட்டதாகவும், கருணை நாள்கள் தவிர வாங்கிய அல்லது மறுதள்ளுபடி செய்த தேதியிலிருந்து 90 நாள்களுக்குட்பட்ட கால முதிர்வை உடைய மாற்று உண்டியல்களையும் புரோ நோட்டுகளையும் வாங்குதல், விற்றல் மற்றும் மறுதள்ளுபடி செய்தல்.

## பிரிவு (17) (3) (b) :

இந்தியாவில் அல்லது இந்தியாவிற்கு வெளியில் பன்னாட்டு நிதியில் உறுப்பினராக உள்ள எந்த ஒரு நாட்டிலும் எழுதப்பட்ட மாற்று உண்டியல்களை (கருவூல உண்டியல்கள் உட்பட) வாங்குதல், விற்றல் மற்றும் மறுதள்ளுபடி செய்தல்; காலமுதிர்வைப் பொறுத்தவரை வாங்கிய அல்லது மறுதள்ளுபடி செய்த தேதியிலிருந்து —

(i) இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சரக்குகள் சம்பந்தப்பட்ட உண்மையான நடவடிக்கைகளினால் எழக்கூடிய மாற்று உண்டியல்களைப் பொறுத்தவரை 180 நாள்களுக்குட்பட்டதாகவும்

(ii) பிற மாற்று உண்டியல்களைப் பொறுத்தவரை 90 நாள்களுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

அட்டவணையிலிட்ட வங்கி அல்லது மாநிலக் கூட்டுறவு வங்கி தவிர பிறரிடம் மேற்கூறப்பட்டபடி வாங்கவோ, விற்கவோ அல்லது மறுதள்ளுபடி செய்யவோ கூடாது.

மேற்கூறப்பட்ட மாற்று உண்டியல்கள் ரிசர்வ் பாங்க் வாங்கிய அல்லது மறுதள்ளுபடி செய்த தேதியிலிருந்து கருணை நாள்களைத் (days of grace) தவிர்த்து, 90 நாள்களுக்கு அதிகமாகாத ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவை (maturity) உடையவையாக

இருத்தல் வேண்டும். ஆனால் வேளாண்மை மாற்று உண்டியல் களின் காலக்கெடு 15 திங்களாகவும், ஏற்றுமதி மாற்று உண்டியல் களின் காலக்கெடு 150 நாள்களாகவும் இருக்கலாம். ரிசர்வ் பாங்க் வாங்குவதற்கு முன் அல்லது மறுதள்ளுபடி செய்வதற்கு முன் மாற்று உண்டியலோ அல்லது புரோ நோட்டோ, கோரிய தும் கொடுபட வேண்டியதாக (Payable on demand) இருந்தால், அவற்றை ஒரு குறிப்பிட்ட காலக்கெடு உள்ளவையாக மாற்றி னல்தான், ரிசர்வ் பாங்க், அவற்றை வாங்கவோ அல்லது மறு தள்ளுபடி செய்யவோ முடியும். நன்கு வளர்ச்சியடைந்த ஒரு மாற்று உண்டியல் அங்காடி இல்லாத காரணத்தால் மறுதள்ளுபடி செய்யும் அதிகாரத்தை ரிசர்வ் பாங்க் பயன்படுத்த முடியவில்லை. ஆகவே, ரிசர்வ் பாங்க் பிற மாற்றுத் திட்டங்களின்கீழ் வங்கி களுக்குக் கடனைக் கொடுக்கிறது. ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு (17) (4) ன் கீழ் கொடுக்கப்படும் கடன்கள் கோரி யதும் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். அத்தகைய கடன்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிணையங்களின் பேரில் கொடுக்கப் படுகின்றன.

(அ) ட்ரஸ்டி தன் பணத்தை முதலீடு செய்யலாம் என்று இந்திய அரசாங்கச் சட்டங்களால் முடிவு செய்யப்பட்ட பங்குத் தொகுப்புகள் (Stocks) நிதிகள் (Funds) ஆவணங்கள் (Securities) ஆகியவை [(பிரிவு 17) 17 (4) (a)]

(ஆ) தங்கம் அல்லது வெள்ளி அவற்றின் பேரில் உள்ள பத்திரங்கள் [(Documents of title) பிரிவு (17) (4) (b)]

(இ) ரிசர்வ் பாங்க் வாங்க அல்லது மறுதள்ளுபடி செய்யத் தகுதிபெற்ற மாற்று உண்டியல்களும் புரோ நோட்டுகளும் அல்லது மாநில அரசால் முதல் மற்றும் வட்டி திருப்பிக்கொடுத்தல் பற்றி முழுவதும் உறுதி செய்யப்பட்ட மாற்று உண்டியல்களும் புரோ நோட்டுகளும் (பிரிவு 17) (4) (c)/

(ஈ) அட்டவணையிலிட்ட வங்கி அல்லது மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் சரக்குரிமை ஆவணங்களின் (Documents of title to goods) ஆதாரத்தைப் பெற்ற புரோ நோட்டுகள் (வியாபார அல்லது வணிக நடவடிக்கைகள் அல்லது விவசாயப் பருவ காலத் தேவைகளை நிறைவு செய்வதற்காகக் கடன்பெறும் பொருட்டு, அட்டவணையிலிட்ட வங்கி அல்லது மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு அத்தகைய ஆவணங்களைக் கடனாளிகள் மாற்றல் செய் திருக்க வேண்டும் அல்லது அடைமானம் செய்திருக்க வேண்டும். [(பிரிவு (17) (4) (d)]

இந்தத் துணைப்பிரிவுகளின் கீழ் சரக்குரிமை ஆவணங்களின் ஆதாரத்தையுடைய புரோ நோட்டுகளின் பேரில் கடன் கொடுக்கலாமேயொழிய சரக்குகளின் ஆதாரத்தின் பேரில் கடன் கொடுக்கக்கூடாது. சரக்குகள் விற்பனைச்சட்டம் (Sale of goods act 1930) பிரிவு 2 (4)-ன் படி கப்பல் இரசீதுகள் (Bills of lading) துறைமுகச் சீட்டுகள் (Dock warrants) பண்டக இரசீதுகள் (ware housekeeper's certificates) இரயில்வே இரசீதுகள் (Railway Receipts) ஆகியவை சரக்குரிமை ஆவணங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன. ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டத்தின் (1962-ல் புகுத்தப்பட்ட) பிரிவு 17 (3A)ன்-படி ரிசர்வ் பாங்க் கோரினால் திருப்பிக் கொடுக்கக்கூடிய கடன்கள் அல்லது 180 நாள்களுக்கு அதிகமாகாத குறிப்பிட்டகால அளவுகளின் முடிவில் திருப்பிக் கொடுக்கக்கூடிய கடன்களை ரிசர்வ் பாங்க் கொடுக்கலாம்.

மேற்கூறிய கடன் வசதிகளுக்கு மேலும், ரிசர்வ் பாங்க் தகுதியுள்ள பத்திரங்களின்மீது அல்லது ரிசர்வ் பாங்க் போதுமானது என்று கருதும் பத்திரங்கள்மீதோ ஆபத்துக் காலங்களில் பிரிவு 18 (1) (3)-ன் படி வங்கிகளுக்குக் கடன் கொடுக்கலாம். இப் பிரிவின்படி அட்டவணையிலிட்ட மற்றும் அட்டவணையிலிடாத வங்கிகள் இக் கடனைப் பெறலாம்.

அட்டவணையிலிட்ட வங்கிகளுக்குக் கடன் கொடுக்கும்போது, பொதுப் பொருளாதார நிலைமை, கொடுக்கப்படும் கடனுக்குப் பெறும் பிணையங்களின் தன்மை, விண்ணப்பிக்கும் வங்கியின் நடவடிக்கைகளின் பொதுத்தன்மை, வங்கிகள் பணிபுரியும் விதம் ஆகியவற்றை ரிசர்வ் பாங்க் கருத்தில் கொள்கிறது. எக்காரணமும் கூறாமல் கடன் விண்ணப்பங்களை நிராகரிக்கும் அதிகாரம் ரிசர்வ் பாங்கிற்கு உண்டு.

## மறுதள்ளுபடி வசதிகள்

முழுக்கடன் அமைப்பின் நெகிழ்ச்சித் தன்மையையும், ரொக்கத்தன்மையையும் அதிகமாக்குவதில்தான் பாங்க் வீதத்தின் முக்கியத்துவம் அடங்கியுள்ளது. வங்கிகளின் ரொக்க இருப்பு நிலை மோசமாகும்போது அல்லது சட்டப்படி இருக்கவேண்டிய அளவிற்குக் குறையும்போது அல்லது வங்கிகள் ரொக்க இருப்புகளை அதிகமாக்க வேண்டும் என்ற அவசியமோ, விருப்பமோ ஏற்படின், மைய வங்கி மறுதள்ளுபடி வசதிகள் அளிப்பதன் மூலம் வங்கிகளின் சொத்துக்களை ரொக்கமாகக் கூடுதலான அல்லது மாற்று வழிகளுக்கு வகை செய்கிறது. அரசினர் குழுவின் செலாவணி மற்றும் நிதி பற்றிய 1926-ம் ஆண்டின் அறிக்கை (Report of the Royal Commission on currency and Finance 1926) கூறியிருப்பதுபோல,

மைய வங்கியானது மறுதள்ளுபடி வசதிகளை அளிக்காதிருப்பின் வங்கிகள் வணிக உண்டியல்கள்மீது கொடுக்கும் குறுகியக் காலக் கடன்களை அவசரக் காலத்தில் ரொக்கமாக மாற்றமுடியாத நிலை உண்டாகும் மறுதள்ளுபடி செய்வதால்:—

1. எந்த வங்கியின் உண்டியல்கள் மறுதள்ளுபடி செய்யப் படுகிறதோ, அவ் வங்கியின் கடன் அளிக்கும் திறன் அதிகமாகிறது;

2. கடினமான சூழ்நிலையில், வைப்புச் செலாவணி நெகிழ்ச் சித் தன்மையைப் பெறுகிறது;

3. மைய வங்கியில் உள்ள வங்கிகளின் ரொக்க இருப்பு அதிகமாகிறது;

4. பணத்தாளின் பெருக்கமும், சுருக்கமும் தானுகவே நடை பெற உதவி செய்வதால் அதை நெகிழ்ச்சியுடையதாக்குகிறது.

## பாங்க் வீதம் (Bank Rate)

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 49-ல் பாங்க் வீதம் பற்றிய இலக்கணம் காணப்படுகிறது:

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டத்தின்கீழ் வாங்கு வதற்குத் தகுதி பெற்ற வணிகத் தாள்களையும் (Commercial papers) மாற்று உண்டியல்களையும் எந்த வீதத்தில் ரிசர்வ் பாங்க் வாங்குவதற்கு அல்லது மறுதள்ளுபடி செய்வதற்குத் தயாராக இருக்கிறதோ, அந்த வீதமே, பாங்க் வீதம் ஆகும்.

இந்தியாவில், வளர்ச்சியுற்ற மாற்று உண்டியல் அங்காடி இல்லாத காரணத்தால், இவ் வீதம் செயல்முறையில் இல்லை. இக் காரணத்தினுல், எந்த வீதத்தில் ரிசர்வ் பாங்க் கடன் அளிக் கிறதோ, அந்த வீதத்தையே பாங்க் வீதத்திற்குச் சமமாகக் கருத வேண்டியிருக்கிறது.

1884—க்கும் 1900—க்கும் இடையே, பிரான்சு மைய வங்கி (Bank of France) தனது தள்ளுபடி வீதத்தில் (discount rate) 111 தடவையும், பாங்க் ஆஃப் இங்கிலாந்து தனது தள்ளுபடி வீதத்தில் 400 தடவையும் மாறுதல்கள் செய்தன. 1901-க்கும் 1914-க்கும் இடையே, பிரான்சு மைய வங்கி தனது தள்ளுபடி வீதத்தை 10 தடவையும், பாங்க் ஆஃப் இங்கிலாந்து 66 தடவையும் மாறுதல் கள் செய்தன. ஆனுல் இந்தியாவைப் பொறுத்தவரை, 1935-ல் ரிசர்வ் பாங்க் துவங்கப்பட்டதிலிருந்து 1974 வரையில், பத்தே பத்து முறைதான் பாங்க் வீதத்தில் மாறுதல்கள் செய்யப்பட்டன. இந்தப் பத்துத் தடவையில் 8 தடவை பாங்க் வீதம் உயர்த்தப்

பட்டது; இரண்டு தடவை குறைக்கப்பட்டது. இம் மாறுதல்கள் பற்றி விரிவாகக் கீழே கூறப்பட்டுள்ளது.

## 1935–ல் பாங்க் வீதம் குறைக்கப்படல்

ரிசர்வ் பாங்க் தொடக்கப்பட்டபோது, பாங்க் வீதம் $3\frac{1}{2}$ விழுக்காடாக இருந்தது. 1935 நவம்பரில், பாங்க் வீதத்தை ரிசர்வ் பாங்க் 3 விழுக்காடாக மாற்றியது. 1951 அக்டோபர் முடிய, பாங்க் வீதம் 3 விழுக்காடாகவே இருந்தது. சுமார் 16 ஆண்டுகளுக்குப் பாங்க் வீதத்தில் எவ்வித மாறுதலும் இல்லாதிருந்தது ஒரு வியத்தகு செய்தியே.

## 1951–ல் பாங்க் வீதம் உயர்த்தப்படல்

கொரியாப்போர் 1950 சூன் திங்களில் மூண்டது. இச் சமயத்தில்தான் உலகில் உள்ள பல நாடுகளின் நிதிக் கொள்கைகளில் பெருத்த மாறுதல்கள் செய்யப்பட்டன. கொரியாப் போரினல், பல நாடுகள் நெகிழ்வுடைய நிதிக் கொள்கையைப்(Flaxible monetary policy) பின்பற்றத் துவங்கின. இதனுல்தானே என்னவோ, இச் சமயத்தில் (1951–52), நிதிக் கொள்கை திருப்பிக் கண்டு பிடிக்கப்பட்டது (Rediscovered), என்று அடிக்கடி கூறப்படுகிறது. ஆகவே, கொரியப் போரின் விளைவுகளினுல்தான் நிதிக் கொள்கையில் மாறுதல்கள் ஏற்பட்டன எனக் கூறினுல் மிகையாகாது.

மற்ற நாடுகளைப் பின்பற்றி, இந்தியாவிலும் ரிசர்வ் பாங்க் தனது புது நிதிக்கொள்கையை 1951 நவம்பரில் அறிவித்தது. 1951–ல் ரிசர்வ் பாங்க் மூன்று பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்கி நின்றது.

வியாபாரம், தொழில், உற்பத்தி ஆகியவற்றிக்கான கடன் தேவையைப் பாதிக்காமல், எவ்வாறு வங்கிகளின் கூடுதலான கடன் உற்பத்தியைத் தடை செய்யலாம் என்பதே முதல் பிரச்சினை ஆகும்.

திட்டக்குழு (Planning commission) முதல் ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கு ஏற்றாற் போல் எவ்வாறு கடன் கட்டுப்பாட்டுக் கொள்கையை மேற்கொள்ளலாம் என்பதே இரண்டாவது பெரும் பிரச்சினையாகும். ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற, பற்றுக்குறை நிதியாக்கத்தைப் (Deficit financing) பின்பற்ற வேண்டியிருப்பதால், அதன் காரணமாகப் பணவீக்கத்தின் (Inflation) விளைவுகள் அதிகமாகும் என்ற அச்சமும் இச் சமயத்தில் எழுந்தது. ஆகையால்தான், திட்

டக்குழு, கடன் கட்டுப்பாட்டுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ரிசர்வ் பாங்கைக் கேட்டுக் கொண்டது.

கடன் நெகிழ்ச்சியே (Credit elasticity) எவ்வாறு பணச் சந்தையில் ஏற்படுத்தலாம் என்பதே, மூன்றுவது பிரச்சினையாகும்.

இம் மூன்று பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக ரிசர்வ் பாங்க் தனது புதிய நிதிக்கொள்கையை 1951-ல் நவம்பர்த் திங்களில் அறிவித்தது. இக் கொள்கையின் மூன்று கூறுகள் பின்வருமாறு:—

முதலாவதாக, ரிசர்வ் பாங்க் தனது பாங்க் வீதத்தை 3 விழுக்காட்டிலிருந்து $3\frac{1}{2}$ விழுக்காடாக (15-11-1951) உயர்த்தியது. 1935 நவம்பரிலிருந்து 3 விழுக்காடாக இருந்த பாங்க் வீதம், பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு $\frac{1}{2}$ விழுக்காடு உயர்த்தப் பட்டது என்பது ஈண்டு நினைவூட்டத்தக்கது. பாங்க் வீதத்தில் 1935-ல் மாறுதல் செய்யப்பட்ட போதிலும், 1951-ல் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட மாறுதலையே, முதன் முதல் செய்த பலனுள்ள மாறுதலாகக் கருத வேண்டியிருக்கிறது.

இரண்டாவதாக, பாங்க் வீதத்தைப் பலனுடையதாக்கவும், வங்கிகள்மீது தனது கட்டுப்பாட்டை அதிகமாக்கவும், நீண்ட காலத்திற்குப்பின், ரிசர்வ் பாங்க் தனது வெளி அங்காடி நடவடிக்கைக் கொள்கையில் மாறுதல் செய்தது. இம் மாறுதலின் படி, மும்முரப் பருவத்தின் (Busy season) போது வங்கிகளிடமிருந்து ஆவணங்களை வாங்குவதையும், மந்தப் பருவத்தின் (Slack season) போது அவற்றைத் திரும்ப விற்பதையும் ரிசர்வ் பாங்க் நிறுத்திக் கொண்டது.

மூன்றுவதாக, ரிசர்வ் பாங்க் ஒரு புதிய உண்டியல் அங்காடித் திட்டத்தைச் (Bill market scheme) செயல்முறைக்குக் கொண்டு வந்தது. அடிக்கடி ஆவணங்கள் வாங்குவதற்கும் விற்பதற்கும் பதிலாக, இத் திட்டத்தின்கீழ், ரிசர்வ் பாங்க் கடன் வசதி அளிக்கத் தயாராயிருந்தது.

மும்முரப் பருவத்தின் துவக்கத்தில் (அக்டோபர்—ஏப்ரல்) இம் மாறுதல் செய்யப்பட்டதால், பாங்க் வீதம் பலனுடையதாக அமைந்தது. வங்கிக் கடன் கிடைப்பதைக் கடினமானதாக ஆக்கவும், மிகுந்த செலவுடையதாக ஆக்கவுமே, பாங்க் வீதம் உயர்த்தப்பட்டது. இக் குறிக்கோள்களைப் பாங்க் வீத உயர்வு அடைந்தது என்றே கூற வேண்டும். இம்பீரியல் வங்கி, அழைப்புக் கடன் வீதத்தை உயர்த்தியது. நாணய மாற்று வங்கிகளும்

தங்களது கடன் வீதத்தை உயர்த்தின. வங்கிகளுக்கிடையே உள்ள அழைப்புக்கடன் வீதமும் (Inter Bank call money rate) உயர்த்தப் பட்டது. மற்ற வங்கிகளும் தங்களது கடன் வீதங்களில் மாற்றங் களைச் செய்தன. பொதுவாக, எல்லா வங்கிகளும் கடன் கொடுப் பதில் முன்னெச்சரிக்கையுடன் கூடிய கொள்கையைப் பின்பற்றின; மேலும், சரக்குகளையும், பொருள்களையும் பதுக்குவோருக்குக் கடன் தர மறுத்தன. ஆனால், இத்தகைய கடன் கட்டுப்பாட்டுக் கொள்கையை ரிசர்வ் பாங்கின் எந்தவிதமான வற்புறுத்தலு மின்றி, அட்டவணையிலிட்ட வங்கிகள் தாமாகவே பின்பற்றின என்பது இங்கே குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். இதுவன்றி, தாங்கள் கொடுத்த காலங் கடந்த கடன்களையும் திருப்பிக் கொடுக்குமாறு கடனாளிகளை வங்கிகள் கேட்டுக் கொண்டன. 1952-ன் முற்பகுதியில், விலைவாசிகள் வேகமாகக் குறைய ஆரம்பித்தன. மொத்த விற்பனை விலைப் பொதுக் குறியீட்டெண் (Wholesale price General Index Number) 1951 டிசம்பர் இறுதியில் 433·2 லிருந்து 1952 டிசம்பர் இறுதியில் 374·5-க்குக் குறைந்தது. அதாவது, மொத்த விற்பனை விலையில், ஓர் ஆண்டில் 13 விழுக் காடு வீழ்ச்சி ஏற்பட்டது.

## 1957-ல் பாங்க் வீத உயர்வு

1957 மே திங்களில் பாங்க் வீதத்தை மாற்றுமுன், ரிசர்வ் பாங்க் சில மாறுதல்களைச் செய்தது. பாங்க் வீத உயர்வுக்குமுன், ரிசர்வ் பாங்க் தனது உண்மையான கடன் வீதத்தைப் படிப்படி யாக உயர்த்தியது. 1956 மார்ச் முதல் நாளிலிருந்து, உண்டியல் அங்காடித் திட்டத்தின்கீழ் வங்கிகள் பெற்று வந்த $\frac{1}{2}$ விழுக்காடு சலுகை $\frac{1}{4}$ விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. இதனால் வங்கிகள் ரிசர்வ் பாங்கிடமிருந்து 3 விழுக்காட்டிற்குப் பதிலாக $3\frac{1}{4}$ விழுக்-காட்டில் கடன் பெற வேண்டியிருந்தது. 1956 நவம்பர், 21ஆம் நாளிலிருந்து $\frac{1}{4}$ விழுக்காடு சலுகையும் நிறுத்தப்பட்டது. இவ்வாறு சலுகை நிறுத்தப்பட்டதாலும் இச் சமயம், அரசாங்கம் தவணை உண்டியல்களின் (Usance bills) மீதான பத்திரக் கட்டணத்தை (Stamp duty) உயர்த்தியதாலும், உண்டியல் அங்காடித் திட்டத் தின்கீழ் 4 விழுக்காட்டில்தான் வங்கிகள் கடன்பெற முடிந்தது. மேலும், ரிசர்வ் பாங்க், அரசாங்க ஆவணங்களின் பேரில் கொடுக் கும் கடன்மீதான வீதத்தை $3\frac{1}{2}$ விழுக்காட்டிலிருந்து 4 விழுக் காடாக உயர்த்தியது. இத்தகைய பல மாற்றங்களுக்குப் பின்னர்தான் 1957 மே திங்கள் 16ஆம் நாள் பாங்க் வீதம் 4 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. ரிசர்வ் பாங்கின் புதிய நிதிக் கொள்கையினால்தான் விலைவாசிகள் குறைந்தன என்று கூற இயல

வில்லை; ஆனால் ரிசர்வ் பாங்கின் கொள்கையும் ஓரளவுக்குப் பயனுள்ளதாக அமைந்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். உலகெங்கிலும் 1952-ல் விலைவாசி வீழ்ச்சி ஏற்பட்டது; ஆகவே, இந்தியாவில் ஏற்பட்ட விலைவாசிகளின் இறங்குமுகம் ஒன்றும் வியப்பளிக்கக் கூடியதாக இல்லை என்று பலர் கூறலாம். ஆனால், ரிசர்வ் பாங்க் அத்தகைய சூழ்நிலையில் செயல்பட்ட விதம் பாராட்டுதலுக்கு உரியதாகும்.

1951 நவம்பருக்குப் பின்னர் 1957 மே வரையில், பாங்க் வீதத்தில் எவ்வித மாறுதலும் இல்லை. 1951-குப் பின்னர், ரிசர்வ் பாங்கிடம் கடன் உதவி கேட்டுச் செல்வது வங்கிகளுக்கு வழக்கமான பழக்கமாக ஆகிவிட்டது. அதிகமான ரொக்க இருப்புகளைப் பெற்றிருந்ததாலும், பணம் தேவைப்படும்போது ரிசர்வ் பாங்கிடம் ஆவணங்களை விற்றுப் பெற முடிந்ததாலும், கடன் உதவி கேட்டு, வணிக வங்கிகள், ரிசர்வ் பாங்கை 1951 வரை நெருங்கவில்லை. 1951-க்குப் பின்னர், வங்கிகள் அவ்வளவாக ரொக்க இருப்புகளைப் பெற்றிருக்கவில்லையாதலாலும், தொழில் பெருக்கம் காரணமாகவும், ரிசர்வ் பாங்கின் வெளி அங்காடி நடவடிக்கையில் ஏற்பட்ட மாறுதலினாலும், தொடர்ந்து ரிசர்வ் பாங்கிடம் வணிக வங்கிகள் கடன் பெற ஆரம்பித்தன. இந்த பாங்க் வீத உயர்வால், உண்டியல் அங்காடித் திட்டத்தின் கீழ் பெறக்கூடிய கடனின் வீதம் 4·2 விழுக்காடு ஆகியது. ஆகவே, ரிசர்வ் பாங்கின் பாங்க் வீதத்திற்கும் கடன் வீதத்திற்கும் இடையே இருந்த இடைவெளியைச் சரி செய்யவும், பணவீக்கத்தை எதிர்த்துப் போராடவுமே, இச் சமயம் பாங்க் வீதம் உயர்த்தப்பட்டது. மேலும், வெளிநாட்டுச் செலாவணிக் காப்பு மிகக் குறைந்த அளவிற்கே இருந்ததால், பன்னாட்டு நிதியிடமிருந்தும் (IMF) உலக வங்கியிடமிருந்தும் (World Bank) நிதி உதவி பெற மத்திய அரசாங்கம் முடிவு செய்தது. ஆனால், உலக வங்கியின் வல்லுநர்கள், இந்தியாவில், பணவீக்க நிலைமை நிலவி வருவதாகக் கருத்துத் தெரிவித்தனர். ஆகவே, பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் சில நடவடிக்கைகளை மேற் கொண்டது. இந் நடவடிக்கைகளின் கூடவே, பாங்க் வீதத்தையும் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.

ஆனால், இந்த முறை செய்யப்பட்ட பாங்க் வீத உயர்வு பலனளிக்கவில்லை. வங்கிகள் கொடுக்கும் கடன் அளவு குறையவில்லை; நேர்மாறுதலாக, வங்கிக்கடன் பெருகியது. 1957 மே திங்களில் அட்டவணையிலிட்ட வங்கிகள் கொடுத்த கடன் (வாங்கிய மற்றும் தள்ளுபடி செய்த மாற்று உண்டியல்கள் உட்பட) 932.62 கோடி ரூபாய் ஆகும். 1957 சூன் 7ஆம் நாள் இக் கடன் அளவு

938·27 கோடி ரூபாயாக இருந்தது. பாங்க் வீதம் பலனளிக்க வில்லை என்பதற்கு இது ஒன்றே சான்று ஆகும். இதனால், ரிசர்வ் பாங்க், பாங்க் வீதத்தை மட்டும் நம்பியிராமல், பிற கடன் கட்டுப் பாட்டுக் கொள்கைகளையும் பின்பற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

1957லிருந்து 1963 வரையில் பாங்க் வீதத்தில் எவ்வித மாறுதலும் இல்லை. ஆனால், 1960 செப்டம்பரில், ரிசர்வ் பாங்க் பங்கீட்டு முறையைக் (quota system) கொண்டு வந்தது. பாங்க் வீதத்தை உயர்த்தாமல், ஆனால், அதே சமயத்தில் கடன் பரி மாணத்தைக் கட்டுப்படுத்துவதும், ஒழுங்கு படுத்துவதுமே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு வங்கிக்கும், அரசு ஆவணங்கள் பேரிலும், மாற்று உண்டி-யல்கள் பேரிலும் ரிசர்வ் பாங்கிடமிருந்து பெறும் கடன் பங்கீடு நிருணயிக்கப்பட்டது. இதன்படி, இந்தப் பங்கீட்டில் 100 விழுக் காடு வரை கடன் பெறுவதற்குப் பாங்க் வீதத்தில் வட்டி கொடுக்க வேண்டும். 100 விழுக்காட்டிற்குமேல் ஆனால் 200 விழுக்காட் டிற்குள் பெறும் கடன்களுக்குப் பாங்க் வீதத்தைவிட ஒரு விழுக்காடு அதிகமாக வட்டி கொடுக்க வேண்டும். அதாவது, 5 விழுக்காடு வட்டி கொடுக்க வேண்டும். 200 விழுக்காட்டிற்கு அதிக மாகக் கடன் பெற்றால் பாங்க் வீதத்தைவிட 2 விழுக்காடு அதிக மாக வட்டி கொடுக்க வேண்டும். அதாவது, 6 விழுக்காடு. மேலும், எல்லா அட்டவணையிலிட்ட வங்கிகளும் தாங்கள் முன்பேகொடுத் துள்ள மற்றும் புதிதாகக் கொடுக்கவிருக்கும் கடன்களுக்கான வட்டி வீதத்தைக் குறைந்தது ஐந்து விழுக்காட்டிற்கு உயர்த்து மாறு, ரிசர்வ் பாங்கால் கேட்டுக் கொள்ளப்பட்டன. இது மட்டு மின்றி முன்பே ஐந்து விழுக்காட்டில் கடன் கொடுத்துவரும் வங்கிகள், தங்களுடைய சராசரிக் கடன் வீதத்தைக் குறைந்தது ½ விழுக்காடு அளவிற்காவது 1960 அக்டோபர் 1-ம் நாளிலிருந்து உயர்த்துமாறு ரிசர்வ் பாங்கால் கேட்டுக் கொள்ளப்பட்டன.

## பங்கீட்டு முறை ஏன்?

பல தொழிலகங்கள் தங்களுடைய பெரும்பாலான கடன் தேவைகளை வங்கிகளிடமிருந்தே பெற்று வந்தன; தங்களுடைய வருவாயைப் பெருக்குவதிலோ அல்லது முதல் அங்காடி மூலம் நிதி திரட்டுவதிலோ முயற்சிகள் செய்யவில்லை. இது விரும்பத்தக்க செயலில்லையாதலால், வங்கிக் கடனின் விலையை உயர்த்த வேண்டியது இன்றியமையாததாக அமைந்தது. மேலும், வங்கிக் கடன் மலிவாக இருந்ததால் ஊக வணிக நோக்கங்களுக்கும் (Speculative purposes) பயன்படுத்தப் பட்டதால், இதையும்

தடை செய்ய வேண்டியிருந்தது. வட்டி வீதம் உயர்த்தப்பட்டால் ஊக வணிகம் செய்வோர்க்கு (Speculators) வங்கிக் கடனைப் பயன் படுத்துவது இலாபகரமாக அமையாதல்லவா? ஆனல், பாங்க் வீதத்தை ரிசர்வ் பாங்க் உயர்த்தி இருக்கலாமே எனக் கேட்கலாம். பாங்க் வீதம் உயர்த்தப்பட்டிருந்தால், அரசாங்க ஆவணங்களின் மதிப்பு வீழ்ச்சியுறும். இதனுல், அரசாங்கம் கடன்பெறுவது கடினமாக ஆவது மட்டுமில்லாமல் அதிக வட்டியும் கொடுக்க நேரும். இவற்றைக் கருத்தில் கொண்டுதான் பாங்க் வீதத்தை ரிசர்வ் பாங்க் உயர்த்தவில்லை. பங்கீட்டு முறையில் சில மாறு தல்களை ரிசர்வ் பாங்க் செய்தது.

1962 சூலைத் திங்களில் கீழ்க்கண்ட மாறுதல் செய்யப்பட்டது. அட்டவணையிலிட்ட வங்கிகள் ரிசர்வ் பாங்கிடமிருந்து பாங்க் வீதத்தில் பெறும் கடன் பங்கீட்டு அளவு, ஒவ்வோர் அட்டவணை யிலிட்ட வங்கியின் சராசரி சட்டமுறைக் காப்பில் (Statutory-reserve) ஐம்பது விழுக்காட்டிற்குக் குறைக்கப்பட்டது. 200 விழுக்காடு அளவிற்குக் கடன் பெற, வங்கிகள் பாங்க் வீதத்தைவிட 1 விழுக்காடு (அதாவது, 5 விழுக்காடு) அதிக வட்டி கொடுக்க வேண்டும். 200 விழுக்காட்டிற்குமேல், ஆனுல் 400 விழுக்காட் டிற்கு உட்பட்ட அளவிற்குக் கடன் பெற பாங்க் வீதத்தை விட இரண்டு விழுக்காடு (அதாவது, 6 விழுக்காடு) அதிக வட்டி கொடுக்க வேண்டும். 400 விழுக்காட்டிற்குமேல் பெறும் கடன் களுக்கு, பாங்க் வீதத்தைவிட $2\frac{1}{2}$ விழுக்காடு அதிகமாக (அதாவது, $6\frac{1}{2}$ விழுக்காடு) வட்டி கொடுக்க வேண்டும்.

1962 அக்டோபர் திங்களில் ரிசர்வ் பாங்க் தனது கடன் கொள்கையை மேலும் இறுக்கிப் பிடித்தது. இதன்படி, ஒவ்வொரு வங்கியும் ரிசர்வ் பாங்கிடமிருந்து வாங்கக்கூடிய மொத்தக் கடனுக்கு, உச்ச அளவு (Ceiling) நிருணயிக்கப்பட்டது. இம் மாறு தலின்படி வங்கிகள் தங்களுடைய சட்டமுறைக் காப்பில் (Statutory reserve) 25 விழுக்காடு அளவிற்கு, ரிசர்வ் பாங்கிட மிருந்து 4 விழுக்காட்டில் கடன் பெறலாம்; அடுத்த 25 விழுக் காடு அளவுக் கடனுக்குப் பாங்க் வீதத்தைவிட 1 விழுக்காடு அதிக வட்டி கொடுக்க வேண்டும்; இந்த அளவுகளுக்கு மேல் பெறும் கடன்களுக்கு, பாங்க் வீதத்தைவிட 2 விழுக்காடு அதிக வட்டி கொடுக்க வேண்டும்.

## 1963-ல் பாங்க் வீதம் உயர்த்தப்படல்

1963 சனவரித் திங்கள் மூன்றும் நாள், பாங்க் வீதம் 4 விழுக் காட்டிலிருந்து $4\frac{1}{2}$ விழுக்காடாக உயர்த்தப்பட்டது. இந்த

உயர்வின் விளைவாக, பங்கீட்டு முறையில் மேலும் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. இதன்படி, வங்கிகள் தங்களின் சராசரி சட்ட முறைக் காப்பில் 50 விழுக்காடு அளவிற்கு $4\frac{1}{2}$ விழுக்காட்டில் கடன் பெறலாம். (அதாவது, பாங்க் வீதத்தில்) அடுத்த 50விழுக் காட்டுக் கடனுக்கு, பாங்க் வீதத்தைவிட $1\frac{1}{2}$ விழுக்காடு அதிக வட்டி கொடுக்க வேண்டும். இந்த அளவுகளுக்குமேல் பெறும் கடன்களுக்கு $6\frac{1}{2}$ விழுக்காடு வட்டி கொடுக்க வேண்டும்.

1963 அக்டோபரில் இம்முறை தளர்த்தப்பட்டது. வங்கிகள் தங்களுடைய சராசரி சட்டமுறைக் காப்பில் 150 விழுக்காடு அளவிற்குக் கடன்பெற ரிசர்வ் பாங்க் அனுமதித்தது. முதல் 75 விழுக்காட்டுக் கடன் அளவிற்குப் பாங்க் வீதத்திலும், அடுத்த 75 விழுக்காட்டுக் கடனுக்கு 6 விழுக்காடு வட்டியும் கொடுக்க வேண்டும்.

1964 மார்ச்சுத் திங்களில் கடைசி முறையாகப் பங்கீட்டு முறையில் மீண்டும் மாறுதல் செய்யப்பட்டது. இம் மாறுதலின்படி, வங்கிகள் தங்களுடைய சராசரி சட்டமுறைக் காப்பில் 50 விழுக் காடு அளவிற்குப் பெறும் கடனுக்கு $4\frac{1}{2}$ விழுக்காடு வட்டியும், அடுத்த 50 விழுக்காட்டுக் கடன் அளவிற்கு 6 விழுக்காடு வட்டியும் கொடுக்க வேண்டும். 100 விழுக்காட்டிற்குமேல் ரிசர்வ் பாங்க் முடிவு செய்தபடி, சில வங்கிகளுக்கு மட்டும் $6\frac{1}{2}$ விழுக்காடு வட்டி யில் கடன் கொடுக்கப்படும். பாங்க் வீதம் 1964–ல் $4\frac{1}{2}$ விழுக் காட்டிலிருந்து 5 விழுக்காடாக உயர்த்தப்பட்டபோது பங்கீட்டு முறை கைவிடப்பட்டது.

மேற்கூறப்பட்ட பங்கீட்டுமுறை பற்றி பல வட்டாரங்களில் குறைகூறப்பட்டது. அடிக்கடி பங்கீட்டு முறையில் மாறுதல்கள் செய்வதற்குப் பதில், ரிசர்வ் பாங்க் நேரடியாகத் தனது பாங்க் வீதத்தை உயர்த்தி இருக்கலாமே என்று பிர்லா (G. D. Birla) இடித்துரைத்தார். வங்கிகளுக்குப் பல தொந்தரவுகளையும், கஷ்டங்களையும் பங்கீட்டுமுறை உண்டாக்கியது என்றும் குறை கூறப்பட்டது. ரிசர்வ் பாங்கிடமிருந்து பெறும் கடன்களுக்கு $6\frac{1}{2}$ விழுக்காடு வட்டி கொடுக்க நேர்ந்தபோது, அரசு ஆவணங்களில் தாங்கள் செய்யும் முதலீடுகளுக்கு 4 விழுக்காடு வட்டியே பெற முடிந்ததாகையால் தாங்கள் இலாபகரமாக வங்கித் தொழிலைச் செய்ய முடியவில்லை என வங்கிகள் சுட்டிக்காட்டின. பாங்க் வீதத்திற்கும் சந்தை வீதங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும் என்றும் இச் சமயத்தில் வலியுறுத்தப்பட்டது. ஆனால் அவ்வாறு ஒரு தொடர்பை ஏற்படுத்துவது, பங்கீட்டுமுறை இருக்கும் வரையில் இயலாத காரியம் என்று பிர்லா (G. D. Birla) எடுத்துரைத்தார்.

1963 சனவரியில் பாங்க் வீதம் 4 விழுக்காட்டிலிருந்து $4\frac{1}{2}$ விழுக்காடாக உயர்த்தப்பட்டதால், எந்த ஒரு விரும்பத்தக்க விளைவும் ஏற்படவில்லை என்றே கூற வேண்டும். 1963-ம் ஆண்டின் மந்தப் பருவத்தின்போது வங்கிக் கடனில் 122 கோடி ரூபாய் அளவுக்குச் சுருக்கம் ஏற்பட்டது என்பது பெரிய அரிய ஒரு செயலாகத் தோன்றலாம். ஆனால், இக் கடன் சுருக்கம் பாங்க் வீத உயர்வால்தான் ஏற்பட்டதா என்பது ஐயமே. இச் சமயம் முதலீடுகளின் அளவு குறைந்ததால், வங்கிக்கடன் அவ்வளவாகத் தேவைப்படவில்லை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. எது எப்படியிருப்பினும், மொத்த விற்பனை விலையின் குறியீட்டு எண்ணைப் பொறுத்தவரை, 1963 மார்ச்சில் 110 ஆக இருந்தது. ஏப்ரலில் 117 ஆகவும் மேயில் 121 ஆகவும், சூனில் 124 ஆகவும், சூலையில் 127 ஆகவும், தொடர்ந்து உயர்ந்து கொண்டிருந்தது. ஆகவே, 1963-ல் செய்யப்பட்ட பாங்க் வீத உயர்வு, அவ்வளவாக நிலைமையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

## 1964-ல் பாங்க் வீதம் உயர்த்தப்படல்

1964 செப்டம்பர், 26ஆம் நாள், $4\frac{1}{2}$ விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாக பாங்க் வீதம் உயர்த்தப்பட்டது. பண அளிப்பு (Money supply) மிக அதிகமாக உயர்ந்திருந்ததே இந்தப் பாங்க் வீத உயர்வுக்குக் காரணமாகும். 1964-ல் 11 விழுக்காடு அளவிற்குப் பணஅளிப்பு அதிகமாகியிருந்தது. இதற்குக் காரணம், முந்தைய மும்முரப் பருவத்தில், வங்கிக் கடனில் 377 கோடி ரூபாய் அளவுக்குப் பெருக்கம் ஏற்பட்டிருந்ததேயாகும்; மேலும், மந்தப் பருவத்தின்போது வங்கிகள், கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை. பண அளிப்பில் பெருக்கம் ஏற்பட்ட அளவிற்கு, உற்பத்தியில் பெருக்கம் ஏற்படவில்லை. இதனால், மிகுந்த பணம், குறைந்த பொருள்களைத் துரத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டதால், விலைவாசியின் நிலைமை மோசமாகியது. விலைவாசிகள் 14 விழுக்காடு அளவுக்கு உயர்ந்தன. இத்தகைய போக்கினைக் கட்டுப்படுத்துவதற்காகவே, பாங்க் வீதம் 5 விழுக்காடாக உயர்த்தப்படுகிறது என்று ரிசர்வ்பாங்க் அறிவித்தது. இந்த பாங்க் வீத உயர்வுக்குப் பிறகு, கடன் கிடைப்பதை (Availability of credit) அவ்வளவாகக் கட்டுப்படுத்தாமல், கடன் விலையைக் cost of credit) கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை ரிசர்வ் பாங்க் மேற்கொண்டது. அதாவது, அதிக வட்டி கொடுத்தால் ரிசர்வ் பாங்கிடம் கடன் வசதி பெறலாம்.

வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், ஒவ்வொரு வங்கியும் இந்தியாவிலுள்ள தனது கேட்பு, தவணைப் பொறுப்புகளில், நடப்புச் சந்தை விலைப்படி 20 விழுக்காட்டிற்குக் குறையாத மதிப்புக்கு ரொக்கம், தங்கம் அல்லது வில்லங்கமற்ற அங்கீகரிக்கப்பட்ட பிணையங்கள் ஆகியவற்றை இந்தியாவில் வைத்திருக்க வேண்டும் என்று கோரப்பட்டது (Statutory liquidity reserve). 1962-ல் வங்கிக் கம்பெனி (திருத்தச்) சட்டம் அமுலுக்கு வந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், மேற்கூறப்பட்ட விழுக்காடு 25 க்கு உயர்த்தப்பட்டது. காப்பு ரொக்கமாகிய மூன்று விழுக்காடு இந்த 25 விழுக்காட்டில் அடங்காது. 1964 செப்டம்பரில் பாங்க் வீதம் உயர்த்தப்பட்ட போது 28 விழுக்காடு நிகர ரொக்கத் தன்மை வீதம் (net liquidity ratio) ரிசர்வ் பாங்கிடம் வைத்திருக்காவிடிலும்,அதிகவட்டி கொடுத்தால் ரிசர்வ் பாங்கிடம் கடன் பெறலாம் என்ற நிலைமை ஏற்பட்டது. இதன்படி, நிகர ரொக்கத்தன்மை வீதம் 28 விழுக்காட்டிலிருந்து 1 விழுக்காடு குறைந்தால், வங்கிகள். பாங்க் வீதத்தைவிட ½ விழுக்காடு அதிக வட்டி கொடுக்க வேண்டும்; 2 விழுக்காடு குறைந்தால், பாங்க் வீதத்தைவிட 1 விழுக்காடு அதிகமாக வட்டி கொடுக்க வேண்டும். வங்கிகள் தாங்கள் கொடுக்கும் கடனுக்கு. 9 விழுக்காடு வட்டிபெற வேண்டும் என்று குறிக்கப்பட்டது.

## 1965–ல் பாங்க் வீத உயர்வு

1965 பிப்ரவரி 17-ம் நாள், பாங்க் வீதம் 5 விழுக்காட்டிலிருந்து 6 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. இந்த உயர்வு, நாட்டின் அக, புற நிலைமையின் காரணமாகத்தான் செய்யப்பட்டது. நாட்டின் புறநிலைமையைப் பொறுத்தவரை, வெளிநாட்டுச் செலாவணி நிலைமை திருப்தி அளிப்பதாக இல்லை. ஏற்றுமதியில் ஓரளவுக்கு முன்னேற்றம் இருந்த போதிலும், நிலைமை மோசமாகவே இருந்தது. நாட்டின் அக நிலைமையை நோக்குங்கால், விலைவாசிகளின் நிலைமை திருப்தியளிப்பதாக இல்லை. முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், 1964-ல் விலைவாசிகள் 16 விழுக்காடு அளவுக்கு உயர்ந்திருந்தன. வேளாண்மைப் பொருள் உற்பத்தி அதிகரித்திருந்த போதிலும், இவ்வாறு விலைவாசிகள் உயர்ந்திருந்தன. இச் சமயத்தில், பண அளிப்பும் அதிகமாகி இருந்தது. 1964-ல் சுமார் 200 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் பெருக்கம் அதிகமாகியது. இதனுல் ஏற்படும் பண வீக்கத்தின் விளைவுகளைக் கட்டுப்படுத்தவே, பாங்க் வீதம் உயர்த்தப்பட்டது. 28 விழுக்காடாக இருந்த குறைந்த அளவு நிகர ரொக்கத்தன்மை வீதமும் 30 விழுக்காட்டிற்கு உயர்த்தப் பட்டது. இந்தக் குறைந்த அளவு நிகர ரொக்கத்தன்மை

வீதம் 1 விழுக்காடு குறைந்தால், வங்கிகள், தாங்கள் ரிசர்வ் பாங்கிடமிருந்து பெறும் கடன்களுக்கு, பாங்க் வீதத்தைவிட $\frac{1}{2}$ விழுக்காடு அதிகமான வட்டியைக் கொடுக்க வேண்டும். இதற்குத் தகுந்தாற்போல், வங்கிகள் தாங்கள் கொடுக்கும் கடன்மீது பெறக்கூடிய உயர்ந்த அளவு வட்டி 10 விழுக்காடு எனவும் ரிசர்வ் பாங்க் குறித்தது.

## 1968-ல் பாங்க் வீதம் குறைக்கப்படுதல்

1968 மார்ச்சுத் திங்கள் இரண்டாம் நாள், பாங்க் வீதம் 6 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காட்டிற்குக் குறைக்கப்பட்டது. 1935-ல் பாங்க் வீதம் $3\frac{1}{2}$ விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது என்பது ஈண்டு நினைவு கூறத்தக்கது. ஆகவே, 1968-ல் பாங்க் வீதம் குறைக்கப்பட்டது, ரிசர்வ் பாங்கின் வரலாற்றில் இரண்டாவது தடவை ஆகும். எச் சூழ்நிலையில் ரிசர்வ் பாங்க், இம் முடிவை எடுக்க நேர்ந்தது என்பது பற்றி இங்குக் காண்போம். 1967-68-ல் முந்துரிமைத் துறைகளான ஏற்றுமதிகள் சிறு தொழில்கள் போன்றவைகளுக்குக் கடன் அளிப்பதற்காக, ரிசர்வ் பாங்க் தனது கடன் கொள்கையைத் தளர்த்தியது. அவ்வாறு தளர்த்திய போதிலும், 1967-68 மும்முரப் பருவத்தில் ஏற்பட்ட கடன் பெருக்கம் எதிர்பார்த்ததைவிடக் குறைவே. 1965-லிருந்து பாங்க் வீதம் பயன்படுத்தப்படவில்லை. பொருளாதார முன்னேற்றத்திற்குக் கடன் ஒரு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது என்று மத்திய நிதி அமைச்சகமும், ரிசர்வ் பாங்கும் உணர்ந்தன. ஆகவே, பாங்க் வீதம் குறைக்கப்பட்டது. இதற்கு ஏற்றாற்போல், பிற வீதங்களும் திருத்தியமைக்கப்பட்டன.

1968க்கு முன்னுல் கடன்கட்டுப்பாட்டின் மூலம் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதையே ரிசர்வ் பாங்க் தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தது. பணவீக்கத்தின் விளைவுகள் ஓய்ந்தன என்று நினைத்ததால்தான், பாங்க் வீதத்தை ரிசர்வ் பாங்க் குறைத்தது. பொருளாதார மீட்சிக்கான (Economic recovery) கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்று வல்லுநர்கள் கருதினர். பாங்க் வீதத்தைக் குறைப்பதன்மூலம் விரும்பத் தக்கத் துறைகளுக்குக் கடன் கிடைக்கச் செய்வதோடு மட்டுமல்லாமல், பயனுள்ள காரியங்களுக்கு ஊக்கம் அளிக்க முடியும் எனவும் ரிசர்வ் பாங்க் கருதியது ஆகவே, நாட்டின் எல்லா வட்டாரங்களிலும், பாங்க் வீதக் குறைப்பு வரவேற்கப்பட்டது. தொழில், வியாபாரம், பங்குச் சந்தைகள், பணச் சந்தை, முதல் சந்தை, வணிக வங்கிகள் ஆகிய எல்லா வட்டாரங்களிலிருந்தும், பாங்க் வீதக் குறைப்புக்கு மிகுந்த ஆதரவு கிடைத்தது.

பாங்க் வீதக் குறைப்பால், வங்கிகளுக்கு ஒன்றும் பெரிய நன்மை கிடைத்து விடவில்லை. வங்கிகள் ரிசர்வ் பாங்கிடமிருந்து அவ்வளவாகக் கடன் பெற வில்லையாதலால் இக் குறைப்பால் அவை அதிகப் பலனடையவில்லை. குறைந்த வட்டி வீதத்தில் வைப்புகள் பெறமுடிந்த போதிலும், அதற்காகக் குறுகிய காலத்திற்காகப் பொறுத்திருக்க வேண்டியிருந்தது. பாங்க் வீதத்திற்கு ஏற்றாற் போல் கடன் வீதங்கள் மாற்றியமைக்கப்படவில்லை.

பாங்க் வீதக் குறைப்பு குறுகிய காலத்தில் பலன் தராது; நீண்ட காலத்தில் பலன்களை எதிர்பார்க்கலாம். எதிர்பார்த்த விளைவுகள் ஏற்படவில்லையாதலால், பாங்க் வீதத்தை உயர்த்த ரிசர்வ் பாங்க் முடிவு செய்தது.

## 1971-ல் பாங்க் வீதம் உயர்த்தப்படல்

1971 சனவரி 9ஆம் நாளிலிருந்து, பாங்க் வீதம் 5 விழுக்காட்டிலிருந்து 6 விழுக்காட்டிற்கு உயர்த்தப்பட்டது. இம் முறையும், பண வீக்கத்தின் விளைவுகளைக் குறைப்பதற்காகவும் வங்கிகளின் கடன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும், ரிசர்வ் பாங்கிடம் வங்கிகள் பெறும் கடன் அளவைக் குறைப்பதற்காகவும், பாங்க் வீதம் உயர்த்தப்பட்டது.

பாங்க் வீதம் உயர்த்தப்படுவதற்குமுன் இருந்த சூழ்நிலை பற்றி இப்போது காண்போம். பொருளாதார நிலைமையை நன்கு ஆராய்ந்த பிறகு, ரிசர்வ் பாங்கின் ஆளுநர் விலைவாசிகளின் ஏறும் போக்குபற்றி அதிருப்தி தெரிவித்தார். 1970 டிசம்பர் 19ஆம் நாள் மொத்த விற்பனை விலைக்குறியீட்டு எண் 181·2 ஆக இருந்தது. இது முந்தைய ஆண்டில் இருந்ததைவிட 6·3 விழுக்காடு அதிகம். 1970-ல் (பட்டிகை ஆண்டு) பொது மக்களிடம் இருந்த பண அளிப்பு 6791·10 கோடி ரூபாய் ஆகும்; இது முந்தைய ஆண்டில் இருந்ததைவிட, 13 விழுக்காடு அதிகம். இப் பணப்பெருக்கம், பெரும்பாலும் வங்கிகளின் கடன் பெருக்கத்தின் விளைவே ஆகும். 1970-ல் அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளின் கடன் பெருக்கம் 812 கோடி ரூபாய் ஆகும்; முந்தைய ஆண்டில் 547 கோடி ரூபாய் அளவுக்குத்தான் கடன் பெருக்கம் ஏற்பட்டிருந்தது. 1970-ல், வழக்கமான மந்தப் பருவத்தின் போதுகூட 228 கோடி ரூபாய்க்கு வங்கிகள் கடன் பெருக்கம் செய்திருந்தன. இக் கடன் பெருக்கம், உணவுத்தானியங்கள் கொள்முதலுக்கும், முந்துரிமைத் துறைகளின் தேவைகளுக்கும் கடன் கொடுத்ததால் ஏற்பட்டது என்ற வணிக வங்கிகளின் கூற்று உண்மையாகவே இருக்கலாம். ஆனால், வங்கிக்கடன் மிக

வேகமாகப் பெருகியதும், விலைவாசிகள் இன்னும் வேகமாக உயர்ந்ததும் எல்லோர் கவனத்தையும் ஈர்த்ததே! 1970-ல் கடன் பெருக்கம் ஏற்பட்ட அளவிற்கு, வைப்புப் பெருக்கம் ஏற்பட்டதா? இல்லையே! இதனால், ரிசர்வ் பாங்கிடம், வங்கிகள் கடன்பெற்றுத் தங்கள் கடன் நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டியிருந்ததே! 1970-71 மும்முரப் பருவத்தின் துவக்கத்தில், ரிசர்வ் பாங்கிடமிருந்து வங்கிகள் பெற்ற கடன் 151 கோடி ரூபாயாக இருந்தது. இந்த அளவு 1971 சனவரியில் 351 கோடியாக உயர்ந்தது. விலைவாசிகள் உயர்ந்து வருவதையும், வங்கிக்கடனில் தொடர்ந்த பெருக்கம் இருப்பதையும் கவனித்துவந்த ரிசர்வ் பாங்க், பாங்க் வீதத்தை உயர்த்துவதைவிட வேறெதுவும் செய்ய இயலவில்லை. இதோடு நில்லாமல், தன்னிடமிருந்து வணிக வங்கிகள் பெறும் கடனை விலை உயர்ந்ததாக்குவதில் (costlier) ரிசர்வ் பாங்க் ஈடுபட்டது. 1971 சனவரி 29ஆம் நாளிலிருந்து, குறைந்த அளவு நிகர ரொக்கத்தன்மை வீதம் (33 விழுக்காட்டிலிருந்து) 34 விழுக்காடாகக் குறிக்கப்பட்டது. தான் கொடுக்கும் கடனை விலை உயர்ந்ததாக்கும்போது, ரிசர்வ் பாங்க் முந்துரிமைத் துறைகளின் தேவையை மறக்கவில்லை. முன்போல், முந்துரிமைத் துறைகள் சலுகை வீதத்தில் கடன்பெற, ரிசர்வ் பாங்க் வகை செய்தது.

## 1973-ல் பாங்க் வீதம் உயர்த்தப்படல்

1973 மே திங்கள் 31ஆம் நாள் பாங்க் வீதம் 6 விழுக்காட்டிலிருந்து 7 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் பிரிவு 42 (·1) இன் கீழ் ஒவ்வொரு அட்டவணையிலிட்ட வணிக வங்கியும் ரிசர்வ் பாங்கிடம் வைத்திருக்க வேண்டிய காப்பு ரொக்கம் 3 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாக, 1974 சூன் 28ஆம் நாள் அன்று முடியும் ஓர் ஆண்டுக்கால அளவிற்கு உயர்த்தப்பட்டது; இவ்வாறு வைக்கப்படும் கூடுதல் வைப்புக்கு, ஆண்டுக்கு 4·75 விழுக்காடு வீதம் வட்டி கொடுக்க ரிசர்வ் பாங்க் இசைந்தது. 1973 சூன் 29ஆம் நாளிலிருந்து குறைந்த அளவு நிகர ரொக்கத்தன்மை வீதமும் 37 விழுக்காட்டிலிருந்து 39 விழுக்காட்டிற்கு உயர்த்தப்பட்டது. 1973 சூன் 1ஆம் நாளிலிருந்து வங்கிகள் தாங்கள் கொடுக்கும் கடன்களுக்குக் குறைந்த அளவு 10 விழுக்காடு வட்டி வசூலிக்க வேண்டும் என்றும் ரிசர்வ் பாங்க் கட்டளையிட்டது. ஆனால், இந்தியக் கடன் உத்தரவாதக் கூட்டுருத் (Credit guarantee corporaion of India) திட்டத்தின்கீழ் கொடுக்கப்படும் கடன்களும், ஏற்றுமதிக்காகக் கொடுக்கப்படும் கடன்களும் சில மாநிலங்களில் உள்ள பிரதமக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குக் கொடுக்கப்படும் கடன்களும், உணவுத்

தானியக் கொள்முதலுக்காகவும் விநியோகத்திற்காகவும் பொதுத் துறைக்குக் கொடுக்கப்படும் கடன்களும், மாறு வட்டி வீதத் திட்டத்தின் (Differential interest rates scheme) கீழ் கொடுக்கப்படும் கடன்களும், இந்தக் குறைந்த அளவு 10 விழுக்காடு வட்டி வீதத்திலிருந்து விலக்கு பெறும்.

ரிசர்வ் பாங்க் மேலும் தன் கடன் கொள்கையை நெருக்கியது. ஒவ்வோர் அட்டவணையிலிட்ட வணிக வங்கியும் தனது மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்புகளில் ரிசர்வ் பாங்கிடம் வைத்திருக்க வேண்டிய காப்பு ரொக்கம் 1973 செப்டம்பர் 8ஆம் நாள் 6 விழுக்காடாகவும், 1973 செப்டம்பர் 22ஆம் நாள் 7 விழுக்காடாகவும் உயர்த்தப்பட்டது; இந்த உயர்வு 1974 செப்டம்பர் கடைசி வெள்ளிக்கிழமை வரை நடைமுறையில் இருக்கும் என்றும் ரிசர்வ் பாங்க் அறிவித்தது. மேலும் 1973 செப்டம்பர் 8ஆம் நாள், குறைந்த அளவு நிகர ரொக்கத் தன்மை வீதம் 40 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. இந்த 40 விழுக்காட்டிலிருந்து 1 விழுக்காடோ அல்லது பகுதியோ குறைந்தால், பாங்க் வீதத்தை விட 1 விழுக்காடு அதிக வட்டியை வங்கிகள் ரிசர்வ் பாங்கிற்குக் கொடுக்க வேண்டும்; மேலும், 36 விழுக்காட்டிற்குக் குறைந்தால், உயர்ந்த அளவு வட்டி வீதம் 12 விழுக்காடு எனவும் ரிசர்வ் பாங்க் அறிவித்தது.

எத்தகையச் சூழ்நிலையில், பாங்க் வீதம் 1973-ல் உயர்த்தப்பட்டது என்பதை ஈண்டுக் காண்போம். 1971 சனவரியில்தான், பாங்க் வீதம் 6 விழுக்காட்டிலிருந்து 7 விழுக்காடாக உயர்த்தப்பட்டது என்று முன்பே குறிப்பிடப்பட்டது. 1971 சனவரியிலிருந்து 1973 மே வரையில் ஏற்பட்ட எத்தகைய மாறுதல்கள் பாங்க் வீத உயர்வுக்குக் காரணமாக இருந்தன. ரிசர்வ் பாங்கிடமிருந்து அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள் வாங்கிய கடன் 1970-71-ல் 368·37 கோடி ரூபாயாகவும், 1971-72-ல் 207·45 கோடி ரூபாயாகவும், 1972-73-ல் 138·45 கோடி ரூபாயாகவும் படிப்படியாகக் குறைந்து வந்துள்ளது என்பது தெரிகிறது. அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளின் மொத்தக்கேட்பு, தவணைப் பொறுப்புகள் 1970·71-ல் 3356·37 கோடி ரூபாயாகவும், 1971-72-ல் 4076·55 கோடி ரூபாயாகவும், 1972-73-ல் 4990·71 கோடி ரூபாயாகவும் இருந்தன. இப் புள்ளி விபரங்கள், வங்கிகளின் வைப்புத் தொகையில் ஏற்பட்ட நல்ல வளர்ச்சியைக் காட்டுகின்றன. அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள் கொடுத்த கடனைப் பார்க்கும்போது, 1970-71-ல் 4683·83 ரூபாயாகவும், 1971-72-ல் 5263·36 கோடி ரூபாயாகவும், 1972-73-ல் 6066·06 கோடி ரூபாயாகவும் படிப்படியாக

திருந்ததைக் காணலாம். அதாவது, அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளின் மொத்தக்கேட்பு, தவணைப் பொறுப்புகளில், இவ் வங்கிகள் கொடுத்த கடனின் விழுக்காடு 1970-71-ல் 79·30 ஆகவும், 1971-72-ல் 74·07 ஆகவும், 1972-73-ல் 70·63 ஆகவும் படிப்படியாகக் குறைந்திருந்தது. இப் புள்ளி விபரங்களி லிருந்து என்ன தெரிகிறது என்றால், அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள் வைப்புத் தொகையை அதிகமாகப் பெற்றிருந்த போதிலும், அவ்வளவாகக் கடன் பெருக்கத்தில் ஈடுபடவில்லை என்பதே ஆகும். ஆனால், பொதுமக்களிடம் இருந்த மொத்தப் பண அளிப்பு 1969-70-ல் 6386·54 கோடி ரூபாயாகவும், 1970-71-ல் 7139·97 கோடி ரூபாயாகவும், 1971-72-ல் 8137·96 கோடி ரூபாயாகவும், 1972-73-ல் 9347·85 கோடி ரூபாயாகவும் மிக வேகமாக வளர்ச்சியுற்றிருந்தது. தொழில் உற்பத்திக் குறியீட்டெண்ணைப் பொறுத்த வரையில் (1960 = 100) (Index numbers of industrial production, base) 1960 = 100) 1970-ல் 180·8 ஆகவும், 1971-ல் 186·1 ஆகவும், 1972-ல் 199·3 ஆகவும், 1973 மார்ச் இறுதியில் 197·8 ஆகவும் இருந்தது. இதிலிருந்து தொழில் உற்பத்தி அவ்வளவாகப் பெருகவில்லை என்பது தெரிகிறது. மொத்த விற்பனை விலைக் குறியீட்டு எண்ணைப் பார்க்கையில், அனைத்துப் பண்டங்களுக்கும் குறியீட்டு எண் 1969-70-ல், 1968-69-ல் இருந்ததைவிட 3·7 விழுக்காடு அதிகமாகவும், 1970-71-ல் அதற்கு முந்தைய ஆண்டில் இருந்ததைவிட 5·5 விழுக்காடு அதிகமாகவும், 1971-72-ல் அதற்கு முந்தைய ஆண்டை விட 4 விழுக்காடு அதிகமாகவும், 1972-73-ல் முந்தை ஆண்டைவிட 9·9 விழுக்காடு அதிக மாகவும் இருந்தது. ஆனால் உணவுத்தானியங்களின் மொத்த விலைக் குறியீட்டெண் 1970-71-ல் 1969-70-ல் இருந்ததைவிட 0·7 விழுக்காடு குறைவாகவும், 1971-72-ல் 1970-71-ல் இருந் ததைவிட 3.9 விழுக்காடு அதிகமாகவும், 1972-73-ல், 1971-72-ல் இருந்ததைவிட 15·2 விழுக்காடு அதிகமாகவும் இருந்தது. மத்திய, மாநில அரசுகளின் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் (Annual budget) பற்றுக்குறையானது (deficit) 1970-71-ல் 426 கோடியாகவும், 1971-72-ல் 808 கோடியாகவும், 1972-73-ல் 701 கோடியாகவும் இருந்தது. ஆகவே, மொத்தப் பண அளிப்பில் ஏற்பட்ட மிக அதிகக் கூடுதலும், தொடர்ந்து மத்திய, மாநில அரசுகள் பற்றுக்குறை நிதியாக்கத்தை மேற்கொண்டதாலும் விலைவாசிகள் உயர்ந்தன. இதனால், பண வீக்கத்தால் ஏற்படும் விளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்காகவே, ரிசர்வ் பாங்க், பாங்க் வீதத்தை 7 விழுக்காடாக ஆக்கியது.

## 1974-ல் பாங்க் வீதம் உயர்த்தப்படுதல்

1974 சூலை 22-ம் நாள், ரிசர்வ் பாங்க், பாங்க் வீதத்தை 7 விழுக்காட்டிலிருந்து 9 விழுக்காடாக உயர்த்தியது. பாங்க் வீதத்தை 2 விழுக்காடு அளவுக்கு உயர்த்தியது. ரிசர்வ் பாங்கின் 40 ஆண்டு வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும். பண வீக்கத்தின் காரணமாக விலைவாசி உயர்ந்து வந்ததாலும், ரிசர்வ் பாங்கிடம் வங்கிகள் அதிக அளவு கடன் பெற்று வந்ததாலும், பாங்க் வீதம் உயர்த்தப்பட்டது. 1973 சூன் 29-ம் நாள் 9962 கோடி ரூபாயாக பொது மக்களிடம் இருந்த பணஅளிப்பு 1974 சூன் 28-ம் நாள் அன்று 11,376 கோடி ரூபாயாக இருந்தது. 1973 ஏப்ரல் 27-ம் நாள் இது 9607 கோடி ரூபாயாக இருந்தது. இதற்கு வங்கிகளின் கடன் பெருக்கமும் காரணம் ஆகும். அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள் கொடுத்த கடன் 1972 சூன் 30-ம் நாள் அன்று 5479·85 கோடி ரூபாயாகவும், 1973 சூன் 29-ம் நாள் 6412.14 கோடி ரூபாயாகவும், 1974 சூன் 28-ம் நாள் 7733·16 கோடி ரூபாயாகவும் இருந்தது. மொத்த வைப்புகள் 1972 சூன் 30–ல் 7509·60 கோடி ரூபாயாகவும், 1973 சூன் 29-ல் 10635·11 கோடி ரூபாயாகவும் இருந்தன. வைப்புகள் வளர்ந்திருந்த போதிலும், வங்கிகள், ரிசர்வ் பாங்கிடமிருந்து பெற்ற கடன் குறையவில்லை. 1972 சூன் 30-ல் 42·11 கோடி ரூபாயும், 1973 சூன் 29-ல் 140·54 கோடி ரூபாயும் 1974 சூன் 28-ல் 420.86 கோடி ரூபாயும் ரிசர்வ் பாங்கிடமிருந்து அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள் கடனைப் பெற்றிருந்தன.

மொத்த விற்பனைவிலைக் குறியீட்டெண்ணைப் பார்க்கும்போது (1961-62=100) 1973 சூன் 30-ல் 241·5 ஆக இருந்தது. 1973 சூன் 29-ல் 307·8 ஆக இருந்தது. தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்ணைப் (Index number of industrial production) பார்க்கையில், பட்டிகை ஆண்டு (Calender year) 1971-ல் 186·1 ஆகவும், 1972-ல் 199·3 ஆகவும் 1973-ல் 199·6 ஆகவும், இருந்தது (1960-100) 1973-74-ல் விலைவாசிகள் உயர்ந்ததுபோல் எந்த ஆண்டிலும் உயரவில்லை என்பதை அட்டவணை 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விபரங்களின்மூலம் தெரிந்துகொள்ளலாம். அட்டவணை 5-ன்மூலம், எந்த அளவிற்குப் பொது மக்களிடம் இருந்த பணஅளிப்பும், பற்றுக்குறை வரவு, செலவுத் திட்டமும் தங்களுடைய பங்கை விலைவாசிகள் உயர்வுக்குச் செலுத்தின என்பதைக் காணலாம். ரிசர்வ் பாங்கின் பாங்க் வீதக் கொள்கை ஒரு பயனற்ற கொள்கை என்றும், ரிசர்வ் பாங்க், பாங்க் வீதக்

கொள்கையைக் கையாள்வதில் தோல்வி அடைந்துவிட்டது எனவும் பல வட்டாரங்களில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. ரிசர்வ் பாங்க், பாங்க் வீதத்தை உயர்த்தி, கடனைக் கட்டுப்படுத்தியபோதிலும் விலைவாசிகள் உயர்ந்து கொண்டே இருக்கின்றனவே என்று பலரும் குறை கூறுகிறார்கள். ஆனால், இது உண்மையா?

விலைவாசிகள் உயர்வுக்கு, ரிசர்வ் பாங்க்தான் காரணமா? ரிசர்வ் பாங்க்தான் காரணம் என்றால், விலைவாசிப் பிரச்சினையை எப்போதோ தீர்த்திருக்கலாமே! மத்திய, மாநில அரசுகளின் பற்றாக்குறை நிதியாக்கமும், தொழில் உற்பத்தியில் தேக்கமும், வேளாண்மை உற்பத்தியில் நிலையின்மையும், பதுக்கல்காரர்களின் பதுக்கல் விளையாட்டும், கள்ளச்சந்தைக் கயவர்களின் போக்கும், ஊகவணிகர்களின் (Speculators) நடவடிக்கையும், நெஞ்சுறுத்தல் இல்லா வர்த்தகரின் செயல்களும் அன்றோ, விலைவாசி உயர்வுக்குக் காரணங்கள். இதை விடுத்து, ரிசர்வ் பாங்கைக் குறைகூறினால், அது எங்ஙனம் பொருந்தும்? ரிசர்வ் பாங்க் தன்னால் இயன்றவரை விலைவாசிகளைக் கட்டுப்படுத்த எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. ரிசர்வ் பாங்க் இந்த அளவுக்குக் கடனைக் கட்டுப் படுத்தாவிடில், நிலைமை இன்னும் மோசமாக ஆகியிருக்குமே என்பதை ரிசர்வ் பாங்கைக் குறை கூறுவோர் உணர வேண்டும்.

ரிசர்வ் பாங்கின் பாங்க் வீதம் மிக அதிகம் என்று குறை கூறுவோரும் உண்டு. அட்டவணை 6-ல் கொடுக்கப்பட்டுள்ள பலநாட்டு மைய வங்கிகளின் பாங்க் வீதத்துடன் ரிசர்வ் பாங்கின் பாங்க் வீதத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் ரிசர்வ் பாங்கின் பாங்க் வீதம் அதிகமா, இல்லையா என்பதை ஒப்பிட்டுப் பார்ப்போர் முடிவு செய்து கொள்ளலாம்.

பாங்க் வீத மாறுதல்களுக்கு ஏற்றாற்போல் சந்தை வீதங் களில் மாறுதல் ஏற்படவில்லை. (இது பற்றியப் புள்ளி விபரங்கள் அட்டவணை 7-ல் கொடுக்கப்பட்டுள்ளன). அவ்வாறு மாறுதல் ஏற்பட்டால்தான் பாங்க் வீத மாறுதல் வெற்றியடையும் என்று முன்னமேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

## அட்டவணை 4.

மொத்த விலைகள் குறியீட்டெண்ணின் வருடாந்திர சதவிகிதக் கூடுதல்:
*1962-63 முதல் 1973-74 வரை (1961-62 = 100)*

| | 1962-63 | 1963-64 | 1964-65 | 1965-66 | 1966-67 | 1967-68 | 1968-69 | 1969-70 | 1970-71 | 1971-72 | 1972-73 | 1973-74 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உணவுப் பண்டங்கள் | 6·5 | 8·3 | 17·3 | 6·8 | 18·3 | 21·4 | -5·3 | -0·1 | 3·6 | 3·1 | 13·9 | 23 4 |
| உணவுத் தானியங்கள் | 5·4 | 9·3 | 26·3 | 6·0 | 18·5 | 24·8 | -12·0 | 3·5 | -0 7 | 3·9 | 15·2 | 19·5 |
| குடிவகை, புகையிலை | 3·1 | 17·3 | 8·2 | 1·6 | 0·6 | 13·3 | 26·6 | 1·3 | -5·2 | 5·4 | 19·6 | 7·8 |
| எரிபொருள், மின்சாரம் விளக்கு, மசகு எண்ணெய் | 3·2 | 14·4 | 1·8 | 3·1 | 8·3 | 5·5 | 4·6 | 4·3 | 4·3 | 6·4 | 5·0 | 18·4 |
| தொழில், கச்சாப் பொருள்கள் | –2·2 | 2·4 | 15·6 | 14·5 | 19·2 | –1·3 | 0·5 | 14·4 | 9·5 | -3·2 | 6·8 | 46·6 |
| ரசாயனப் பொருள்கள் | 11·8 | 2·2 | 2·2 | 7·6 | 14·4 | 9·2 | 7·4 | 8·7 | 2·2 | 4·8 | 1·9 | 9·5 |
| யந்திரங்கள், போக்கு வரத்து சாதனங்கள் | 3·9 | 4·2 | 3·2 | 5·2 | 7·4 | 4·2 | 0·5 | 2·8 | 8·5 | 7·4 | 5·8 | 9·6 |
| செய் பொருள்கள் | 2·6 | 2·1 | 4·0 | 8·3 | 7·9 | 2·8 | 2·5 | 6·7 | 7·9 | 7·2 | 5·1 | 13·3 |
| இடை பொருள்கள் | 2·5 | 2·3 | 6·3 | 11·8 | 12·1 | 4·7 | -0·9 | 10·1 | 11·6 | 10·1 | 7·9 | 26·2 |
| அனைத்துப் பண்டங்கள் | 3·8 | 6·1 | 10·9 | 7·6 | 13·9 | 11·6 | -1·2 | 3·7 | 5·5 | 4·0 | 9·9 | 22·7 |

## அட்டவணை 5.

### பண அளிப்பும், பற்றாக்குறை நிதியாக்கமும்.

(ரூபாய் கோடிக்கணக்கில்)

| ஆண்டு ஏப்ரல்-மார்ச் | மக்கள் வசம் உள்ள செலாவணி | வங்கிகளில் உள்ள கோரிக்கைக்கு உட்பட்ட வைப்புக்கள் | மொத்தப் பண அளிப்பு | வருடாந்திரக் கூடுதல் | பற்றாக்குறை நிதியாக்கம் ( — ) |
|---|---|---|---|---|---|
| 1960-61 | 2098.05 | 770.56 | 2868.61 | 199.16 | 69 |
| 1961-62 | 2201.16 | 844.66 | 3045.82 | 177.21 | –152 |
| 1962-63 | 2379.47 | 930.51 | 3309.97 | 264.15 | –128 |
| 1963-64 | 2605.56 | 1146.56 | 3752·12 | 442.15 | –172 |
| 1964-65 | 2769.05 | 1311.23 | 4080.28 | 328.16 | –133 |
| 1965-66 | 3034.28 | 1495.10 | 4529.39 | 449.11 | –352 |
| 1966-67 | 3196.80 | 1753.16 | 4949.96 | 420.57 | –301 |
| 1967-68 | 3376.08 | 1973.99 | 5350.07 | 400.11 | –244 |
| 1968-69 | 3681.97 | 2097.28 | 5779.25 | 429.18 | –382 |
| 1969-70 | 4010.34 | 2376.20 | 6386.54 | 607.29 | 13 |
| 1970-71 | 4383.32 | 2756.65 | 7139.97 | 753.43 | –426 |
| 1971-72 | 4821.87 | 3316.08 | 8137.96 | 997.99 | –808 |
| 1972-73 | 5442.61 | 3969.06 | 9411.68 | 1273.72 | –876 |
| 1973-74 | 6337.87 | 4502.08 | 10835.96 | 1424.28 | –861 |

## அட்டவணை 6.

### மைய வங்கிகளின் தள்ளுபடி வீதம்

| | வீதம் | குறிப்பிட்டுள்ள நாளிலிருந்து |
|---|---|---|
| ஆஸ்திரியா | 6.50 | 15–5–1974 |
| பெல்சியம் | 8.75 | 1–2–1974 |
| பிரேசில் | 18.00 | பிப்ரவரி 1972 |
| கனடா | 9.25 | சூலை 1974 |
| கொலம்பியா | 16.00 | பிப்ரவரி 1974 |
| டென்மார்க் | 10.00 | 23–1–1974 |
| எகிப்து | 5.00 | 15–5–1962 |
| பின்லாந்து | 9.25 | 1–7–1973 |
| பிரான்சு | 13.00 | 20–6–1974 |
| கிரீஸ் | 11.00 | பிப்ரவரி 1974 |
| இந்தியா | 9.00 | 22–7–1974 |
| ஈரான் | 9.00 | 29–8–1974 |
| அயர்லாந்து | 12.00 | 30–4–1974 |
| இத்தாலி | 9.00 | மார்ச்சு 1974 |
| சப்பான் | 9.00 | 22–12–1973 |
| மெக்சிகோ | 4.50 | 4–6–1942 |
| நெதர்லாந்து | 8.00 | 6–12–1973 |
| நியூசிலாந்து | 6.00 | மார்ச்சு 1972 |
| நார்வே | 5.50 | மார்ச்சு 1974 |
| பாகிஸ்தான் | 9.00 | 4–9–1974 |
| பெரு | 9.50 | 5–11–1959 |
| பிலிப்பைன்ஸ் | 10.00 | சூன் 1969 |
| போர்ச்சுக்கல் | 6.50 | 25–7–1974 |
| தென்னாப்பிரிக்கா | 8.00 | 14–8–1974 |
| ஸ்பெயின் | 7.00 | 9–8–1974 |
| ஸ்ரீலங்கா | 6.50 | சனவரி 1970 |
| ஸ்வீடன் | 6.00 | 3–4–1974 |
| ஸ்விட்சர்லாந்து | 5.50 | 21–1–1974 |
| தாய்லாந்து | 5.50 | சூலை 1974 |
| துருக்கி | 8.75 | 28–11–1973 |
| ஐக்கிய வல்லரசு (U.K.) | 11.50 | 19–9–1974 |
| அமெரிக்கா | 8.00 | 25–4–1974 |
| மேற்கு ஜெர்மனி | 7.00 | சூன் 1973 |

## அட்டவணை 7.

### பாங்க் வீதமும், பிற வீதங்களும்

| | 1951 நவம்பர் 15 | | 1957 மே 16 | 1963 சனவரி 3 | | 1964 செப் 26 | | 1965 பிப் 17 | | 1973 மே 30 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முன்னர் அக்டோபர் | பின்னர் டிசம்பர் | முன்னர் ஏப்ரல் / பின்னர் ஜூன் | முன்னர் டிசம்பர் | பின்னர் சனவரி | முன்னர் ஆகஸ்ட் | பின்னர் அக்டோபர் | முன்னர் சனவரி | பின்னர் மார்ச்சு | முன்னர் ஏப்ரல் | பின்னர் ஜூலை | |
| பாங்க் வீதம் | 3·0 | 3·5 | 3·5 | 4·0 | 4·0 | 4·5 | 4·5 | 5·0 | 5·0 | 6·0 | 6·0 | 7·0 |
| அழைப்புக்கடன் வீதம் | 0·5 | 0·5 | 3·0-3·50 | 3·0-3·25 | 5·00 | 4·86 | 2·37 | 1·8 | 4·8 | 7·64 | 10·0 | 10·5 |
| ஸ்டேட் பாங்க் உண்டியல் வீதம் | 4·0 | 4·5 | 5·25 | 5·50 | 6·50 | 7·0 | 7·25 | 7·75 | 8·25 | 9·25 | 8¾-10½ | 8–12 |
| மத்திய அரசு 3% 1986 கடன் வட்டி விகிதம் | 3·13 | 3·22 | 3·91 | 3·88 | 4·76 | 4·76 | 4·73 | 4·77 | 4·84 | 5·13 | 5·0 | 5·0 |

## வெளி அங்காடி நடவடிக்கைகள்
## (Open Market Operations)

பாங்க் வீதக் கொள்கையின் குறைபாடுகளினுல், வெளி அங்காடி நடவடிக்கைகளை ஒரு கூடுதல் அல்லது மாற்றுக் கருவி யாகப் பயன்படுத்த வேண்டிய அவசியம் எழுகிறது. பாங்க் வீதம் அவ்வளவு பலன் உள்ளதாக இல்லாததால், வெளி அங்காடி நடவடிக்கையின் முக்கியத்துவம் அதிகமாகியது. பண அளிப்பில் தேவையான மாறுதல்களை ஏற்படுத்துவதற்காக, மைய வங்கி, சந்தையில் நேரடியாகத் தன் இச்சைப்படி சந்தையுடன் தொடர்பு கொள்வதையே வெளி அங்காடி நடவடிக்கை எனக் குறிப்பிடப்படுகிறது.

வெளிச்சந்தையில் ஈடுபடக்கூடிய எத்தகைய வணிகத் தாளை யும் (Commercial papers), அதாவது அரசாங்க ஆவணங்களையோ, அல்லது பிற ஆவணங்களையோ அல்லது வங்கியர்களின் மாற்று உண்டியல்களையோ அல்லது வெளிநாட்டுச் செலாவணியையோ மைய வங்கி வாங்குவது அல்லது விற்பதுதான் வெளி அங்காடி நடவடிக்கைகள் எனப்படுகின்றன என்று டி காக் (De Cock) கூறி யிருக்கிருர். தொழிலகங்களின் பங்குகள், பங்குத் தொகுப்புகள், மற்றும் தங்கம் ஆகியவற்றை வாங்குவதையும் விற்பதையும் வெளி அங்காடி நடவடிக்கையில் சேர்த்துக் கொள்ளலாம். ஆனுல், வெளி அங்காடி நடவடிக்கை எனப்படுவது நீண்டகாலச் சிறப் பீட்டுப் பத்திரங்களை (Long term gilt-edged securities) வாங்கு வதையும், விற்பதையும் மட்டுமே பொதுவாகக் குறிக்கிறது; இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் இந்த முறையில்தான் வெளி அங்காடி நடவடிக்கைகள் குறிப்பிடப்படுகின்றன. 1930-லிருந்து ரிசர்வ் பாங்க் பெரும்பாலும் அரசாங்கப் பத்திரங்களையும், சிறப் பீட்டுப் பத்திரங்களையும் மட்டுமே வாங்கியும் விற்றும் வருவதால் வெளி அங்காடி நடவடிக்கை என்பது அரசு ஆவணங்களில் மைய வங்கி ஈடுபடுவதையே குறிப்பதாகத் தவருகக் கருதப்படுகிறது.

## வெளி அங்காடி நடவடிக்கை செயல்படும் விதம்

ரிசர்வ் பாங்க், ஆவணங்களைச் சந்தையில் வாங்குமாயின் அல்லது விற்குமாயின் புழக்கத்தில் உள்ள பணத்தின் அளவையும், வணிக வங்கிகளின் ரொக்க இருப்பையும் நேரடியாகவும் உடனடி யாகவும் குறைக்கிறது அல்லது அதிகமாக்குகிறது. வங்கிகள் கடன் உற்பத்தி செய்வது, வங்கிகளின் ரொக்க இருப்பை பொருத்ததாகும். மைய வங்கியின் வெளி அங்காடி நடவடிக்கை,

மேலும், பணத்தாள் அளிப்பை அதிகமாக்குகிறது அல்லது குறைக்கிறது. இதனுல் பண வீதங்களிலும் கடன் நிலைமை களிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன.

இரண்டாவதாக, அரசாங்க ஆவணங்களை விற்பதால் அல்லது வாங்குவதால் அரசாங்க ஆவணங்கள் விலையிலும் நீண்டகாலக் கடன்வீதத்திலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன.

மேற்கூறிய இருமுறைகள் மூலம் ரிசர்வ் பாங்க், பணம், கடன் அதனுல் பொதுப் பொருளாதாரச் செயல்கள் ஆகிய வற்றில் தேவைப்பட்ட பெருக்கமோ அல்லது சுருக்கமோ செய்ய முடிகிறது.

டி காக் (De Cock) கூறியிருப்பதுபோல, பாங்க் வீதக் கொள்கை, முதலில் குறுகியகாலக் கடன் வீதங்களில் மாறுதல் உண்டாக்குவதன் மூலமும், இதனுல் நீண்டகாலக் கடன் வீதங்கள் அல்லது அவற்றுக்கான வருமானம் ஆகியவற்றில் விளைவுகளை ஏற்படுத்துவதன்மூலம், பணம் மற்றும் கடன்மீது சுற்றி வளைத்து மாறுதல்களைக் கொண்டு வருகிறது. ஆனுல் வெளி அங்காடி நடவடிக்கை, பணம், கடன் ஆகியவற்றின் மீதும், வட்டி வீதங்கள்மீதும் நேரடியான, உடனடியான மாறுதல் களை விளைவிக்கின்றது.

மேலும், வங்கிகளும் அவைகளின் வாடிக்கையாளர்களும் பாங்க் வீத மாறுதல்களுக்கு ஏற்றாற்போல் மாறுதல்களைச் செய்து கொண்டால்தான் பாங்க் வீதம் திறன் படைத்ததாகும். ஆனுல், வெளி அங்காடி நடவடிக்கையில் ரிசர்வ் பாங்க் ஈடுபடும்போது வங்கிகளின் ரொக்க இருப்புகள் பாதிக்கப்படுவதால், மாறுதல்கள் நிச்சயம் நிகழ்கின்றன. அதாவது, மறுதள்ளுபடி நடவடிக்கை களைப் பொறுத்தவரை, ரிசர்வ் பாங்க், சந்தையின் மறுவிளை வுக்குப் (reaction) பொறுத்திருக்க வேண்டியுள்ளது. ஆனுல் வெளி அங்காடி நடவடிக்கையை இத்தகைய மறுவிளைவை எதிர் பார்க்காமல் நடத்த முடிகிறது. பாங்க் வீதம், வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் கடன் வாங்கும் விருப்பத்தைப் (willingness to borrow) பாதிக்கிறது. ஆனுல், வெளிஅங்காடி நடவடிக்கை வங்கிகளின் வாடிக்கையாளருக்குக் கடன்- அளிக்கும் விருப்பத்தைப் பாதிக் கிறது.

பாங்க் வீதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது வெளி அங்காடி நடவடிக்கை மேன்மை உடையவையாக இருப்பினும், பாங்க் வீதக் கொள்கையை முழுவதாகப் புறக்கணித்து விடக் கூடாது. உண்மையிலேயே, பாங்க் வீதத்துடன் வெளி அங்காடி நடவடிக்கையைச் சேர்த்துச் செயல்படுத்தினுல் நல்ல விளைவுகளை

உண்டாக்கலாம். வெளிஅங்காடி நடவடிக்கைகளை, பாங்க் வீதத்தைப் பலமுள்ளதாக்கவோ அல்லது பாங்க் வீத மாறுதல்களை உண்டு பண்ணுவதற்கு முன் சந்தையில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தவோ சிறந்த முறையில் பயன்படுத்தலாம். மேலும், வெளிஅங்காடி நடவடிக்கையை, அரசாங்கம் கடனை வெளியிடும் போதோ அல்லது கடனைத் திருப்பிக் கொடுக்கும்போதோ சந்தையில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தப் பயன் படுத்தலாம்.

தொழில், வியாபாரம் ஆகியவை பாதிக்கப்பட்டிருந்தால் மலிவுப் பணக் கொள்கையைக் (Cheap money policy) கடைப் பிடிக்க, இக் கருவி மிகவும் பயன்படும். பொதுவாகப் பணச் சந்தையைக் கட்டுப்படுத்தவும் உதவும். பாங்க் வீதத்தின் மூலம், வங்கிகளின் ரொக்க இருப்புகளில் எப்போதோதான் மாறுதல்கள் செய்யப்படுகின்றன. ஆனால், வெளி அங்காடி நடவடிக்கையை நாள்தோறும் அதிக அளவிற்கும், குறைந்த அளவிற்கும் மாறுதல்கள் செய்யப் பயன்படுத்தலாம். மைய வங்கி, குறுகிய கால ஆவணங்களில் மட்டுமே, பெரும்பாலும், வெளி அங்காடி நடவடிக்கையில் ஈடுபடுகிறது.

எந்த அளவுக்கு ரிசர்வ் பாங்க் வெளி அங்காடி நடவடிக் கையில் ஈடுபடலாம் என்பது ரிசர்வ் பாங்கின்

1. சொத்தின் தரத்தையும், அளவையும் பொறுத்தது;

2. வருவாயைப் பொறுத்தது.

இவை பற்றி இங்கே விரிவாகக் காண்போம்.

## ரிசர்வ் பாங்க் சொத்தின் அளவு, தரம்

ரிசர்வ் பாங்கின் வங்கியியல் துறை பெற்றிருக்கக்கூடிய அரசாங்க ஆவணங்கள், பிற ஆவணங்கள் ஆகியவற்றின் மதிப்பு ரிசர்வ் பாங்கின் செலுத்திய முதல், காப்புநிதி ஆகியவற்றைவிட அதிகமாக இருக்கக்கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டி ருந்தது; வைப்புகளைப் பொறுத்தவரை, ரிசர்வ் பாங்க் தனது மொத்த பொறுப்புகளில் ஐந்தில் மூன்று பங்கிற்கு அதிகமாகப் பெற்றிருக்கக் கூடாது. ஆவணங்களின் தவணை முதிர்வு பற்றியும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. ரிசர்வ் பாங்க் எவ்வகை ஆவணங்களைப் பெற்றிருக்கலாம் என்பது பற்றியும் எந்த அளவுக்கு ஆவணங்களைப் பெற்றிருக்கலாம் என்பது பற்றியும், ரிசர்வ் பாங்க்மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள்,

1951-ல் ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் திருத்தப்பட்டு, நீக்கப்பட்டன. இதனுல், ரிசர்வ் பாங்க் பெற்றிருக்கக் கூடிய ஆவணங்களின் அளவு அதிகமாகியது.

ரிசர்வ் பாங்கின் பணத்தாள் வெளியிடும் துறை பெற்றிருக்க வேண்டிய சொத்துகளேயும், இங்கே கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இதுபற்றி, அத்தியாயம் இரண்டில், 'பணம் வெளியிடும் துறையின் சொத்துகள்' என்ற தலைப்பின்கீழ் விரிவாகக் கூறப் பட்டுள்ளது.

ரிசர்வ் பாங்க் எத்தகைய தரமுள்ள சொத்துகளில் வெளி அங்காடி நடவடிக்கைக்காக ஈடுபடலாம் என்று ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், 1934, பிரிவு 17-ல் வரையறுக்கப் பட்டுள்ளது.

(1) உண்மையான வணிக அல்லது வியாபார நடவடிக்கை காரணமாகவோ அல்லது பருவகால வேளாண்மை நடவடிக்கை காரணமாகவோ எழக்கூடிய மாற்று உண்டியல்களேயும் புரோ நோட்டுகளேயும் வாங்கலாம், விற்கலாம். [ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17 (2), 17 (3)- ]

(2) மத்திய அரசின் ஆவணங்கள், பல்வேறு மாநில அரசு களின் ஆவணங்கள், மற்றும் ரிசர்வ் பாங்கின் மத்திய அவையின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசால் குறிப்பிடப்படும் பிற ஆவணங்கள் ஆகியவற்றை ரிசர்வ் பாங்க் வாங்கலாம், விற்க லாம். [ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17 (8)]

(3) ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17 (11) ன் கீழ், அரசாங்கத்தின் சார்பில் கடன்களே வெளியிடவும் அல்லது மாற்றவும், கருவூல உண்டியல்களே வாங்கவும், விற்கவும், ரிசர்வ் பாங்க் அதிகாரம் பெற்றிருக்கிறது. இத்தகைய செயல்களும் வெளி அங்காடி நடவடிக்கைக்கு ஒப்பாகும். ஏனெனில், ஒரு கடன் நடவடிக்கையால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விளேவோ அல்லது எல்லா விளேவுகளுமோ ஏற்படுகின்றன.

1. வங்கிகளுக்கும் ரிசர்வ் பாங்கிற்கும் இடையே ரொக்க இருப்புகளில் மாற்றல்கள் (shifts).

2. வங்கிகள் அல்லாத முதலீட்டாளர்கள் வைத்துள்ள ரொக்க இருப்புகளில் மாறுதல்கள்.

3. வங்கிகள்வசம் உள்ள அரசாங்கப் பொறுப்புகளில் எந்த அளவு மாற்றம் ஏற்படுகிறதோ அந்த அளவுக்கு அவற்றின் வைப்புப் பொறுப்புகள் அதிகமாகுதல் அல்லது குறைதல்.

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17 (12)-ல் கூறப்பட்டுள்ளபடி, ரிசர்வ் பாங்க் தங்க நாணயங்கள், தங்கம், வெளிநாட்டுச் செலாவணி ஆகியவற்றை வாங்கலாம், விற்கலாம்.

ஆனால், ரிசர்வ் பாங்குக்குக் கம்பெனிப் பங்குகளை வாங்கவோ விற்கவோ அதிகாரம் கிடையாது. ஆனால், மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட நிறுவனங்களின் பங்குகளை வாங்கவும், விற்கவும் செய்யலாம்.

ரிசர்வ் பாங்க், வெளி அங்காடி நடவடிக்கைகளில் இறங்கும் போது இலாபம் அடையவோ அல்லது விலைகளை அதிகமாக்கவோ நினைப்பதில்லை. சந்தை சுதந்திரமாகத் தொடர்ந்து நன்முறையில் இருக்கச் சந்தைப் போக்கினைச் சீர்செய்வதே ரிசர்வ் பாங்கின் நோக்கமாகும்.

## ரிசர்வ் பாங்கின் வருவாய்

எந்த அளவிற்கு வெளி அங்காடி நடவடிக்கையில் ரிசர்வ் பாங்க் ஈடுபடலாம் என்பது, ரிசர்வ் பாங்க் பெற்றிருக்கும் வருவாயின் அளவையும் பொருத்தது ஆகும். இது எவ்வாறு என்பதை இங்குக் காண்போம்.

ஒரு விதத்தில் ரிசர்வ் பாங்கிடம் உள்ள வருவாய் அளவற்றது என்றே கூறவேண்டும். வங்கியர்களின் வங்கியாக இருப்பதால், ரிசர்வ் பாங்க் கடனை உற்பத்தி செய்யும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது. ரிசர்வ் பாங்க் பெறக்கூடிய அல்லது விற்கக்கூடிய சொத்துகள், கடனை உற்பத்தி செய்வதற்காக அல்லது கடனைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படுவதால் நாட்டில் உள்ள பண அளிப்பில் மாறுதல் ஏற்படுகிறது. ரிசர்வ் பாங்க் பணத்தாள் வெளியிடும் ஏகபோக உரிமையைப் பெற்றிருக்கிறது. ரிசர்வ் பாங்க், கேட்பு வைப்புகளை உற்பத்தி செய்வதும், பணத்தாள் வெளியிடுவதும் தத்துவ முறையில் (theoretically) அளவுக்கு உட்பட்டதாக இருக்கலாம். ஆனால், உண்மையில் ரிசர்வ் பாங்கின் வருவாய் அளவற்றது. இத்தகைய பாரம்பரிய முறையில் (traditional) வருவாயைப் பெருக்குவதோடல்லாமல், வேறு சில வழிகளிலும் ரிசர்வ் பாங்க் தனது வருவாயைப் பெருக்கிக் கொள்கிறது.

முதலாவதாக, 1973 டிசம்பர் இறுதியில் ரிசர்வ் பாங்கின், செலுத்திய மூலதனம் 5 கோடி ரூபாயாகவும், காப்பு நிதி 150 கோடி ரூபாயாகவும் இருந்தது.

இரண்டாவதாக, ரிசர்வ் பாங்க் மத்திய, மாநில அரசுகளிடமிருந்து பெறும் வைப்புத் தொகை ரிசர்வ் பாங்கின்

வருவாயைக் கூட்டுவதில் முக்கிய பங்கு பெற்றிருக்கிறது. பொதுக் கடனை நிருவகிப்பதால், ரிசர்வ் பாங்க் பணச் சந்தையில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

மத்திய அரசின் வைப்புகள் 1960–61-ல் 76·46 கோடி ரூபாயாகவும், 1965-66-ல் 51·44 கோடி ரூபாயாகவும், 1969–70-ல் 167·64 கோடி ரூபாயாகவும், 1970-71-ல் 250·55 கோடி ரூபாயாகவும், 1971-72-ல் 214·86 கோடி ரூபாயாகவும், 1972-73-ல் 53·83 கோடி ரூபாயாகவும், 1973-74-ல் 140·37 கோடி ரூபாயாகவும் இருந்தன. மேற் கூறப்பட்ட ஆண்டுகளில், மாநில அரசுகளின் வைப்புகள் முறையே 28·99, 25·76, 8·21, 13·37, 4·96, 16·79, 19·39 கோடி ரூபா யாகவும் இருந்தன.

மூன்றாவதாக, அட்டவணையிலிட்ட வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் சட்டப்படி கட்டாயம் வைக்கவேண்டிய வைப்புகளும், ரிசர்வ் பாங்கின் வருவாயைப் பெருக்குகின்றன.

அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளின் இத்தகைய வைப்புகள் 1960-61-ல் 65·69 கோடி ரூபாயாகவும், 1965-66-ல் 95·70 கோடி ரூபாயாகவும், 1969-70-ல் 160-16 கோடியாகவும், 1970-71-ல் 187·54 கோடியாகவும், 1971-72-ல் 22·546 கோடியாகவும், 1972-73-ல் 275·48 கோடி ரூபாயாகவும், 1973-74-ல் 770·74 கோடி ரூபாயாகவும் இருந்தது.

மேற்கூறியவை தவிர, மாநிலக் கூட்டுறவு வங்கிகளும் ரிசர்வ் பாங்கிடம் கட்டாயமாகச் சட்டப்படி வைப்புகளை வைத்திருக்க வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுகளில் மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் வைத்திருந்த வைப்புகள் முறையே 1·02, 1·72, 6·42, 7·04, 8·30, 10·67, 12·53 கோடி ரூபாயாக இருந்தது.

நான்காவதாக, எந்த அளவிற்கு, வங்கிகள் மாற்று உண்டியல்களை வசூல் செய்வதற்கும், வாடிக்கையரின் நிதிகளை மாற்றுவதற்கும் ரிசர்வ் பாங்கின் உதவியைப் பெறுகின்றனவோ, அந்த அளவிற்கு ரிசர்வ் பாங்கின் வருவாயும் பெருகும்.

ரிசர்வ் பாங்கின் வருவாய்த் தேவைகள் சூழ்நிலையைப் பொறுத்து இருப்பதால், அதன் வருவாய் போதுமானதா இல்லையா என்பதைக் கூற இயலாது.

வெளி அங்காடி நடவடிக்கை வெற்றிகரமாக அமைய வேண்டுமானால்,

1. பரந்த, அகலமான ஆவணங்கள் அங்காடி (Securities market) இருத்தல் வேண்டும்.

2. வங்கிகள் ஒரே சீரான ரொக்க இருப்பைப் பெற்றிருக்க வேண்டும்.

வளர்ச்சியுறுத பணச் சந்தைகளில் இவ் விரண்டும் காணப்பட மாட்டா என்று பிளம்ப்ட்ரி (A. F. W. Plumptre) கூறியிருக்கிறார். இந்தியாவில் எந்த அளவுக்கு இவை நிறைவு செய்யப்படுகின்றன என்பது பற்றிக் காண்போம்.

## சந்தையின் தரம்

பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய மூன்று இடங்களில் உள்ள சந்தைகள் மூலம்தான் பெரும்பாலான வெளி அங்காடி நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகின்றன. இச் சந்தைகளில் ஆவணங்கள் வியாபாரத்தில் ஈடுபடுவோர் (dealers) அதிகமாக இல்லை. அதிக வருவாயோ அல்லது பலவிதப்பட்ட (varieties) ஆவணங்களோ இல்லை. இலண்டன், நியூயார்க் ஆகிய இடங்களில் உள்ள சந்தைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் பெரிய ஒப்பந்தங்களை முடிக்கக் கூடிய பலத்தைப் பெற்றுள்ளன. ஆனால் இந்திய ஆவணங்கள் சந்தை அவ்வாறு முடிக்க முடியாத நிலையில் இருக்கிறது. சந்தை, குறுகிய தன்மை உடையதாக இருப்பதால் ஓர் அளவுக்கு மேல் ஆவணங்களை விற்கவோ, வாங்கவோ முடியவில்லை. அப்படி விற்றாலோ, வாங்கினாலோ ஆவணங்களின் விலைகள் பெரிதும் பாதிக்கப்படும்.

## அட்டவணை 8.

### மத்திய, மாநில அரசுகளின் உரிமையாளர்

(ரூபாய் கோடிக்கணக்கில்)

| ஆவணங்களைப் (Holder) பெற்றிருந்தோர் | 1969 மார்ச்சு இறுதியில் | மொத்தத்தில் விழுக்காடு | 1971 மார்ச்சு இறுதியில் | மொத்தத்தில் விழுக்காடு |
|---|---|---|---|---|
| மத்திய, மாநில அரசுகள் | 310.9 | 6.7 | 262.6 | 4.9 |
| ரிசர்வ் பாங்க் (சொந்தக் கணக்கில்) | 1342.3 | 29.0 | 1485.7 | 28.0 |

**அட்டவணை 8-ன் தொடர்ச்சி 1**

| | | | | |
|---|---|---|---|---|
| அட்டவணையிலிட்ட வங்கிகள் | 1060.6 | 22.9 | 1332.4 | 25.1 |
| அட்டவணையிலிடாத வங்கிகள் | 7.4 | 0.2 | 5.9 | 0.1 |
| கூட்டுறவு வங்கிகள் | 75.8 | 1.6 | 93.8 | 1.8 |
| இந்திய ஆயுள் காப்பீட்டுக் கூட்டுறவு | 641.5 | 13.8 | 748.4 | 14.1 |
| பிற காப்பீட்டுக் கம்பெனிகள் | 34.5 | 0.8 | 45.4 | 0.9 |
| சேமநல நிதிகள் | 833.8 | 18.0 | 1021.0 | 19.2 |
| இந்திய யூனிட் டிரஸ்ட் | 1.2 | — | 0.1 | — |
| தனி நபர்கள் | 48.7 | 1.1 | 46.4 | 0.9 |
| பிறர் | 272.3 | 5.9 | 264.2 | 4.4 |
| மொத்தம் | 4629.0 | 100.0 | 5305.9 | 100.0 |

பரந்த, அகலமான ஆவணங்கள் சந்தை இருந்தால்தான் வெளி அங்காடி நடவடிக்கை வெற்றியடையவும், மத்திய, மாநில அரசுகளின் ஆவணங்களைச் சொந்தமாகப் பெற்றிருந்தோர் பற்றிய புள்ளி விபரங்கள் அட்டவணை 8-ல் தரப்பட்டுள்ளது. இப் புள்ளி விபரங்களைப் பார்க்கும்போது இந்திய ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவும் (Life insurance corporation) சேமநல நிதிகளும், சேர்ந்து பெருமளவு அரசாங்க ஆவணங்களைப் பெற்றிருந்தன என்பது தெரிகிறது; ஆனால், இவை முதலீட்டு நோக்கத்துடன்தான் இந்த ஆவணங்களைப் பெற்றிருந்தன என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். ரிசர்வ் பாங்க் அட்டவணையிலிட்ட வங்கிகளைவிட, சற்றே அதிகமாகப் பெற்றிருந்தது. அட்டவணையிலிட்ட வங்கிகளின் பங்கு அவ்வளவு அதிகமாக இல்லாததால், அரசாங்க ஆவணங்களின் அங்காடி, தற்போதும் குறுகிய தன்மை உடையதாகத்தான் உள்ளது என்பது தெரியவருகிறது.

## வங்கிகளின் ரொக்க இருப்பு

ஒரே சீரான ரொக்க வீதத்தை வங்கிகள் பெற்றிருந்தால், வெளி அங்காடி நடவடிக்கை வெற்றியடையும். ஆனால் இந்தியாவில் உள்ள வங்கிகள் 1951 வரை மிகுந்த ரொக்க இருப்புகளைப் பெற்றிருந்தன. சட்டப்படி வைக்க வேண்டியதற்கு மேலும், ரிசர்வ் பாங்கிடம் மிகுந்த ரொக்கத்தை வைத்திருந்தன. இதுபற்றி விரிவாக, இதே அத்தியாயத்தில், ''ரொக்க இருப்பு விகித மாறுதல்கள்'' என்ற தலைப்பின்கீழ் கூறப்பட்டுள்ளது.

## ரிசர்வ் பாங்கின் வெளி அங்காடி நடவடிக்கைகள்

துவக்கத்தில் ரிசர்வ் பாங்க் தனது வங்கியியல் துறையில் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள மத்திய அரசின் ஆவணங்களைப் பெற்றிருந்தது. இந்த 5 கோடி ரூபாய், மத்திய அரசால் ரிசர்வ் பாங்கின் காப்பு நிதிக்குத் துவக்கத்தில் செலுத்தப்பட்ட தொகை யாகும். ரிசர்வ் பாங்கின் துவக்க காலத்திலேயே, பணச் சந்தையில் கடின நிலை நிலவியது. சிறப்பீட்டுப் பத்திரங்களின் (Gilt-edged securities) பேரில், குறுகிய காலக் கடனைப் பெற முடியாமல் வங்கிகள் தவித்தன. 1935 ஏப்ரலில் அழைப்புக் கடன் வீதம் (Call loan rate) பம்பாயில் $3\frac{1}{2}$ விழுக்காடாக உயர்ந் திருந்தது; 1935 சூனில் $2\frac{3}{4}$ விழுக்காடாக இருந்தது. வங்கி களுக்கு உதவவும், பணச் சந்தையின் நிலைமையைச் சீர்திருத்தவும் ரிசர்வ் பாங்க் சந்தையில் இறங்கி ஆவணங்களை வாங்கியது. 1935 சூன் திங்களில் 6 கோடி ரூபாய்க்கு ரிசர்வ் பாங்க் முதலீடு செய்திருந்தது. இவ்வாறு 6 கோடி ரூபாய்க்கு முதலீடு செய்தது குறைவாகத் தோன்றலாம். ஆனால், இச் சமயம் மந்தப்பருவம் (slack season) துவங்கியால், இந்தக் குறைந்த அளவு முதலீடு, விரும்பிய விளைவுகளைச் சந்தையில் ஏற்படுத்தியது. அழைப்புக் கடன் வீதம் சூலையில் $\frac{1}{2}$ விழுக்காடும் செப்டம்பரில் $\frac{1}{4}$ விழுக்காடும் குறைந்தது. இந்த நடவடிக்கையே, பணச்சந்தையில் இருந்த கடின நிலையைப் போக்குவதற்காக ரிசர்வ் பாங்க் மேற்கொண்ட முதல் நடவடிக்கையாகும். மேலும் ரிசர்வ் பாங்க் மலிவுப் பணக் கொள்கையைக் (Cheap money policy) கையாள விரும்பியது என்பதையும் இங்கே கருத்தில் கொள்ளவேண்டும். இதற்குப் பின்னர் 1935-ல் எளிய பண நிலைமை (Easy money conditions) நிலவியது; மந்தப் பருவத்தின்போது, இந் நிலைமை உச்சத்தை அடைந்ததால், சிறப்பீட்டுப் பத்திரங்கள் அங்காடியை மேலும் தாக்கியது. ஆனால், ரிசர்வ் பாங்க், சிறப்பீட்டுப் பத்திரங்களின் விலை மேலும் வீழ்ச்சியுறாமல் அதைத் தாங்கிப் பிடிக்க எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. சிறப்பீட்டுப் பத்திரங் களின் விலை பற்றி அவ்வளவாகக் கவலைப்படாமல், பணச் சந்தையின் கடின நிலையை நீக்குவதிலும், அரசாங்கத்தின் பொதுக்கடனை வெளியிடுவதற்காகச் சந்தையைத் தயார் செய்வ திலும்தான், ரிசர்வ் பாங்க் தனது வெளி அங்காடி நடவடிக்கைக் கொள்கையைப் பயன்படுத்தியது என்பது மேற்கூறப்பட்ட நிகழ்ச்சியிலிருந்து தெரியவருகிறது. ரிசர்வ் பாங்கின் இக் கொள்கையை உறுதிப்படுத்தும் வகையில், 1937-ல் மீண்டும் இத்தகைய நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்தது. ரிசர்வ் பாங்க் தனது முதலீட்டை அதிகமாக்குவதற்காக 1937-ல், ஆவணங்களைச்

சந்தையில் வாங்கியது. 1937-ல் மும்முரப் பருவத்தின்போது பணச்சந்தையில் கடின நிலைமை நிலவியதால், பம்பாயில் அழைப்புக் கடன் வீதம், 1937 சனவரியில் $1\frac{1}{2}$ விழுக்காடாகவும், ஏப்ரலில் 2 விழுக்காடாகவும் உயர்ந்தது. இதே சமயத்தில் சிறப்பீட்டுப் பத்திரங்களின் விலையும் வீழ்ச்சியுற்றது. ரிசர்வ் பாங்க் சந்தையிலிருந்து மிகுந்த ஆவணங்களை வாங்கத் தொடங்கியது; 1937 சனவரியில் 6 கோடி ரூபாய்க்கும், 1937 சூலையில் 9 கோடி ரூபாய்க்கும், ஆவணங்களை வாங்கியது. ரிசர்வ் பாங்கின் இத் தகையச் செயலால் பணச்சந்தையில் இருந்த கடின நிலைமை மாறியது. இதனல் சிறப்பீட்டுப் பத்திரங்கள் அங்காடியின் நிலைமையும் முன்னேறியது. 1937 சூலையிலிருந்து சிறப்பீட்டுப் பத்திரங்களின் விலையில் முன்னேற்றம் காணப்பட்டது. அரசாங்கத் திற்குப் புதுக்கடன் வெளியிடுவதில் உதவவும், அல்லது பணச் சந்தையின் கடின நிலையை நீக்கவும் அல்லது மலிவுப் பணக் கொள்கையைப் பின்பற்றவும் மட்டுமே, ரிசர்வ் பாங்க், சந்தையி லிருந்து ஆவணங்களை வாங்கியது என்பது தெரிய வருகிறது.

1938-39-ல், அழைப்புக்கடன் வீதம் இரண்டு விழுக்காடாக ஆனதால், அரசாங்க ஆவணங்களின் விலையில் சரிவு ஏற்பட்டது; மிகுந்த ஏற்றத்தாழ்வுகளும் (Fluctuations) ஏற்பட்டன. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக, ரிசர்வ் பாங்க் சந்தையி லிருந்து ஆவணங்களை வாங்கத் தொடங்கியது. ரிசர்வ் பாங்க் அவ்வளவு அதிகமாக ஈடுபடவில்லை. எனினும், 'சிறப்பீட்டுப் பத்திரங்கள் அங்காடியின் நிலைமை' வேகமாக முன்னேறியது. இரண்டாம் உலகப்போர் மூள்வதற்குமுன் ரிசர்வ் பாங்கின் வெளி அங்காடி நடவடிக்கை மிகக் குறைவே என்று மேற்கூறப்பட்ட விவரங்களிலிருந்து தெரியவருகிறது. போருக்கு முன் $4\frac{1}{2}$ ஆண்டில், ரிசர்வ் பாங்கின் வங்கியியல் துறையில் இருந்த முதலீடுகள் 9 கோடி ரூபாயைத் தாண்டவில்லை.

ஆகவே, போருக்கு முன்னர் சிறப்பீட்டுப் பத்திரங்களின் விலையை ஓர்ளவுக்கு நிலைநிறுத்தவும், புதுக்கடன் எழுப்புவதற்காகச் சந்தையைத் தயார் செய்வதிலும், பணச்சந்தையின் கடின நிலையை அகற்றுவதிலும்தான் வெளி அங்காடி நடவடிக்கைகள் பயன் படுத்தப்பட்டன. இந் நோக்கங்கள் ஒன்றுக்கொன்று நெருங்கியத் தொடர்பு உடையனவாக இருப்பதால், எந்த ஒரு நோக்கத்திற் காக வெளி அங்காடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதைக் கூறுவது சாத்தியமாகாது. எப்படி இருப்பினும், நடவடிக்கைகளின் அளவு மிகக் குறைவே.

இரண்டாம் உலகப் போரின் துவக்க காலத்தில், சிறப்பீட்டுப் பத்திரங்கள் அங்காடிக்கு உதவுவதற்காக, ரிசர்வ் பாங்க் அரசாங்கக் கடன்களை வாங்க வேண்டிய நிலைமை உருவாகியது. 1937-38-ல் தொடங்கிய சிறப்பீட்டுப் பத்திரங்களின் விலையின் வீழ்ச்சி நிலைமை 1938-39-லும் தொடர்ந்து 1939-40-ல் உச்ச நிலையை அடைந்தது. சிறப்பீட்டுப் பத்திரங்கள் அங்காடிக்கு ஆதரவு அளிப்பதற்காக, 1940—ல் ரிசர்வ் பாங்க் சந்தையிலிருந்து ஆவணங்களை வாங்கத் தொடங்கியது. இச் சமயம், ரிசர்வ் பாங்கின் வங்கியியல்துறை 13 கோடி ரூபாய்க்கு முதலீட்டைப் பெற்றிருந்தது. 1940 ஜூலையிலிருந்து, சிறப்பீட்டுப் பத்திரங்கள் அங்காடியின் நிலைமை படிப்படியாக முன்னேறியது. தொடக்கத்தில், ரிசர்வ் பாங்க், ரூபாய் ஆவணங்கள் வைத்திருப்பது பற்றி பிரிவு 33 (3), ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டத்தில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இக் கட்டுப்பாடுகள் 1941 பெப்ரவரியில் நீக்கப்பட்டதால், ரிசர்வ் பாங்க் கூடுதலான ரூபாய் ஆவணங்களை வைத்திருக்க முடிந்தது. மக்களிடம் மிகுந்த வருவாய்ப் பெருக்கம் ஏற்பட்டதாலும், அரசாங்கக் கூடுதல் பணச் செலுத்தல்களின் காரணமாக மக்களிடம் மிகுந்த வருவாய்ப் பெருக்கம் ஏற்பட்டதாலும், முதலீடு செய்யத் தகுந்த ஆவணங்கள் கிடைப்பது அரிதாக இருந்ததாலும், குறுகியகால நிதி மிகுந்த அளவில் கிடைத்ததாலும், அரசாங்கம் தனது கடன்களுக்குக் குறைந்த வட்டியே கொடுத்து வந்ததாலும், 1940—லிருந்து 1943 வரை பணச்சந்தையில் எளிய பண நிலைமை நிலவியது. இவையெல்லாம் சிறப்பீட்டுப் பத்திரங்கள் அங்காடி புத்துயிர் பெற மிகவும் உதவின. இச் சமயத்தில் நீண்டகாலக் கடனின் முதலீட்டுத் தேவை தொடர்ந்து பெருகி வந்தது. 1943 லிருந்து 1946 வரை புதுக்கடனை வெளியிடுவதும் விற்பதும் வெளி அங்காடி நடவடிக்கையின் புதிய பணியாக இருந்தது. இச் சமயத்தில் சந்தையில் மிகுதியாக இருந்த குறுகியகால நிதி, சிறப்பீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டதால், 'சிறப்பீட்டுப் பத்திரங்கள் அங்காடி நிலைமை' மேலும் முன்னேறியது. ஆகவே, போர்க் காலத்தின்போது, சிறப்பீட்டுப் பத்திரங்கள் அங்காடியில் அரசாங்க ஆவணங்களின் விலைக்கு ஆதரவு அளிக்கவும், சிறப்பீட்டுப் பத்திரங்கள் அங்காடியில் நம்பிக்கையை உண்டாக்கவும், அரசாங்க ஆவணங்களின் விற்பனையை அதிகரிக்கவும், வெளிஅங்காடி நடவடிக்கைகள் மிகவும் பயன்படுத்தப்பட்டன. அதாவது, வெளிஅங்காடி நடவடிக்கைக் கொள்கை ஒரு கடன் கட்டுப்பாட்டுக் கருவியாகப் போருக்குமுன் பயன்படுத்தப்படவில்லை.

## வெளி அங்காடி நடவடிக்கை - போருக்குப்பின்

போருக்குப் பின்னர், ஆவணங்களின் விலையை நிலை நிறுத்தவும், வங்கியியல் மற்றும் நிதியியல் அமைப்பைச் சீர்படுத்தவும் 1946-47-ல் ரிசர்வ் பாங்க் தனது முழு ஆதரவை அளித்தது. 1946-மே யிலிருந்து ஆகஸ்ட்வரை, பத்திரங்களின் விலை உயர்ந்ததால், வருமான விகிதம் குறைந்துகொண்டே போயிற்று. இப் போக்கினைத் தடுப்பதற்காக, ரிசர்வ் பாங்க் ஆவணங்களை மிகுந்த அளவுக்கு விற்கத் தொடங்கியது. செப்டம்பரில் பத்திரங்களின் வருமானம் உயர்வதுபோல் இருந்த போதிலும், டிசம்பரில் மீண்டும் கவிழ்ந்தது. ஆகவே, மிகுந்த அளவில் ரிசர்வ் பாங்க் அரசாங்க ஆவணங்களை வாங்க நேர்ந்தது. 1946 டிசம்பர் 27—ல் 40·42 கோடி ரூபாய்க்கு அரசாங்க ஆவணங்களை ரிசர்வ் பாங்க் வாங்கியிருந்தது. தொழில், வியாபாரம் ஆகியவற்றின் நிதித் தேவைகளை நிறைவு செய்வதற்காக, அரசாங்கக் கடனை வாங்குவதன்மூலம், நிதியைக் கிடைக்கச் செய்ய வேண்டியிருந்தது, தொடர்ந்து அதிகரித்துவரும் வியாபாரத்தின் நிதித் தேவை, நாட்டுப் பிரிவினையால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, ரூபாயின் மதிப்புக் குறைப்பு, கொரியப்போர், உலகெங்கிலும் கடன் அமைப்பில் ஏற்பட்டுவந்த கடினத்தன்மை போன்ற காரணங்கள் தொடர்ந்து ரிசர்வ் பாங்கைச் சந்தையிலிருந்து வெளி அங்காடி நடவடிக்கைமூலம் கடன்களை வாங்கக் கட்டாயப் படுத்தின.

1948-49-ல் சிறப்பீட்டுப் பத்திரங்களின் விலை சரிந்தது. அட்டவணையிலிட்ட வங்கிகளின் கேட்புப் பொறுப்புகள் 1948 ஜூலைக்கும் 1949 மார்ச்சுக்கும் இடையே சுமார் 95 கோடி ரூபாய்க்குக் குறைந்தன. 1948-49-ல் புழக்கத்தில் உள்ள பணத்தாள்கள் 8 கோடி ரூபாய்க்குக் குறைந்தது. ஆவணங்களின் விலையை நிலைநிறுத்தவும், வட்டியைச் சீராக்கவும், ரிசர்வ் பாங்க் தொடர்ந்து தனது ஆதரவை அளித்தது. 1949 ஜூன் திங்களோடு முடியும் 10 திங்களில் அட்டவணையிலிட்ட வங்கிகளின் அரசு ஆவணங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் சுமார் 140 கோடி ரூபாய் அளவுக்குக் குறைந்தன. ரிசர்வ் பாங்க்தான் அவ்வளவையும் வாங்கநேர்ந்தது. ரிசர்வ் பாங்க் வாங்காவிட்டால், அவ்வளவு ஆவணங்களும் சந்தையில் விற்கப்பட்டிருந்தால் அவற்றின் விலை வீழ்ச்சியுற்றிருக்கும். இது ரிசர்வ் பாங்கின் தலையீட்டால் தடுக்கப்பட்டது. வங்கிகள் அரசாங்க ஆவணங்களில் முதலீடு செய்வதை விடுத்து, மிக்க இலாபகரமாக இருந்ததால் வியாபாரத்திற்கும், தொழிலுக்கும் கடன் கொடுப்பதில் முனைந்தன. போர்க் காலத்தில் இறக்குமதிகளின் மீதிருந்த கட்டுப்

பாடு போருக்குப் பின்னர் தளர்த்தப்பட்டதால், இறக்குமதி செய்வதற்காக அரசாங்க ஆவணங்கள் விற்கப்பட்டு, ரிசர்வ் பாங்கிடம் வெளிநாட்டுச் செலாவணி வாங்கப்பட்டது. 1946-47-ல், வெளிச்சந்தையில் ரிசர்வ் பாங்க் வாங்கிய ஆவணங்களின் மதிப்பு 95 கோடி ரூபாயாகவும், விற்ற ஆவணங்களின் மதிப்பு 33 கோடி ரூபாயாகவும் இருந்தது; அதாவது நிகரக் கொள்முதல் 62 கோடி ரூபாய் ஆகும். குறுகியகால ஆவணங்களே மிகுதியாக வாங்கப்பட்டிருந்தன. வெளிச் சந்தையில் வாங்கிய ஆவணங்களின் மதிப்பு 1947-48-ல் 75 கோடி ரூபாயாகவும், 1948-49-ல் 122 கோடி ரூபாயாகவும், விற்ற ஆவணங்களின் மதிப்பு 1947-48-ல் 23 கோடியாகவும், 1948-49-ல் 30 கோடி ரூபாயாகவும் இருந்தது. இவ்விரு ஆண்டுகளிலும் நிகரக் கொள்முதல், முறையே, 52 கோடி ரூபாயும், 91 கோடி ரூபாயும் ஆகும். இதிலிருந்து 1948-49-ல் எல்லா ஆண்டுகளைவிட நிகரக் கொள்முதல் அதிகம் என்று தெரிகிறது. ரிசர்வ் பாங்க் தனது 1947-ம் ஆண்டின் ஆண்டு அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டது.

நிறுவனங்களின் ஆவண விற்பனைக்கு ரிசர்வ் பாங்க் தொடர்ந்து மிகுந்த ஆதரவை அளித்து வந்துள்ளது. வெளிச் சந்தையில் ரிசர்வ் பாங்க் ஆவணங்களை வாங்குவதன்மூலம், பருவ கால நிதித் தேவைகளை அளிப்பதோடு வங்கிகளின் ரொக்க வரு வாய்களைப் பெருக்குகிறது.

வணிக வங்கிகள் முதலீடு செய்வதில் ரிசர்வ் பாங்க் பல முறை அறிவுரை வழங்கியுள்ளது. வங்கிகள் நீண்டகால ஆவணங் களையே பெரிதும் விரும்புகின்றன; ஆனால், குறுகியகால ஆவணங் களில் முதலீடு செய்வதே பயனளிக்க வல்லது என்று ரிசர்வ் பாங்க் 1948 மார்ச்சில் தனது சுற்றறிக்கைமூலம் வங்கிகளுக்குத் தெரியப்படுத்தியது.

வங்கிகள், தங்கள் கடந்த காலத்தில் தவறான கொள்கையைப் பின்பற்றி வாங்கிய நீண்டகால ஆவணங்களைப் படிப்படியாக விற்றுக் குறைத்துக் கொள்வதன்மூலம் தங்களுக்கு ஏற்படும் நட்டத்தைக் குறைத்துக் கொள்வதோடு, அரசு ஆவணங்களின் சந்தையையும் தொந்தரவு செய்ய வேண்டிய நிலைமை எழாது என்று ரிசர்வ் பாங்க் 1948 ஆகஸ்டில் மீண்டும் வலியுறுத்தியது.

1950-51-ல் பருவக்கால நிதித் தேவைக்கு ஏற்பட்ட நெருக்கடி நிலைமையைக் கருதி ரிசர்வ் பாங்க் வெளிச்சந்தையில் ஆவணங்களை வாங்கியது.

1950 ஜூனில் கொரியப்போர் மூண்டதால் 1951 மும்முரப் பருவத்தில் நிதித் தேவை அதிகரித்தது. அரசாங்க ஆவணங்களை

விற்று தங்களுடைய கூடுதல் நிதித் தேவையை வங்கிகள் பெற்றன. இவ்வாறு அதிக அளவுக்குத் திடீரென்று ஆவணங்களை விற்றதால், ஆவணங்களின் விலை சரிந்து, அவற்றின் வருமானம் உயர்ந்தது. 1950 டிசம்பரில் சிறப்பீட்டுப் பத்திரங்களின் விலை மிகவும் சரிந்திருந்தது. மேலும் விலைகள் குறையாமலிருக்க, 1950 டிசம்பரில் ரிசர்வ் பாங்க் சந்தையிலிருந்து ஆவணங்களை வாங்கத் தொடங்கியது. இதனால் வணிக வங்கிகளின் பருவக்கால நிதித் தேவையையும் நிறைவு செய்யமுடிந்தது.

## வெளி அங்காடி நடவடிக்கைக் கொள்கையில் மாறுதல்

1951 நவம்பர் 15—ம் நாள், ரிசர்வ் பாங்க், பாங்க் வீதத்தை 3 விழுக்காட்டிலிருந்து $3\frac{1}{2}$ விழுக்காடாக உயர்த்தியது. கூடவே, தமது வெளி அங்காடி நடவடிக்கைக் கொள்கையில் மிகப் பெரிய மாறுதலையும் செய்தது.

1. தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அன்றி, அட்டவணையிலிட்ட வங்கிகளின் பருவக்கால நிதித் தேவைகளை நிறைவு செய்வதற்காக, ரிசர்வ் பாங்க் வெளிச்சந்தையிலிருந்து ஆவணங்களை வாங்க இயலாது.

2. ஆனால், ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17 (4) (a) யில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அரசாங்க ஆவணங்கள் மீதும், பிற ஆவணங்கள்மீதும் பாங்க் வீதத்தில் கடன் கொடுக்க ரிசர்வ் பாங்க் இசைந்தது.

1951 வரையில், அட்டவணையிலிட்ட வங்கிகளுக்கு நிதி தேவைப்பட்டபோது, ரிசர்வ் பாங்க் ஆவணங்களை வாங்குவதற்கு ஆயத்தமாக இருந்ததால், வங்கிகள் தங்கள் நிதித் தேவையை எளிதாக நிறைவு செய்துகொள்ள முடிந்தது. 1951-ல் வெளி அங்காடி நடவடிக்கையில் செய்யப்பட்ட மாறுதல், ரிசர்வ் பாங்கின் கடன் கொள்கையில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிக்கிறது.

தனது புதிய கொள்கையைப் பின்பற்றி, ரிசர்வ் பாங்க் சிறப்பீட்டுப் பத்திரங்களின் விலைக்கு வழக்கமாக அளித்து வந்த தனது ஆதரவைத் திடீரென்று நிறுத்திக் கொண்டதால், சிறப்பீட்டுப் பத்திரங்களின் விலை சரிந்தது. விலைகள் சரிந்ததால், சிறப்பீட்டுப் பத்திரங்களின் மீதான வருமானத்திற்கும் பிற ஆவணங்களின் மீதான வருமானத்திற்கும் இடையே இருந்த இடைவெளி குறைந்தது.

ரிசர்வ் பாங்க், பாங்க் வீதத்தை உயர்த்தியதாலும், வெளி அங்காடி நடவடிக்கையில் மாறுதல் செய்ததாலும், வங்கிகள்

தங்களுடைய மும்முரப் பருவநிதித் தேவையைப் பெறுவதற்காக, ரிசர்வ் பாங்கிடம் நெருங்கிக் கடன்பெற வேண்டிய அவசியம் எழுந்தது. இவ்வாறு தங்களுடைய நிதித் தேவைகளுக்கு, வங்கிகள் ரிசர்வ் பாங்கை நம்பியிருந்ததால், தாங்கள் கடன் கொடுக்கையில் எச்சரிக்கையான கொள்கையைப் பின்பற்ற வேண்டிய அவசியம் எழுந்தது, இதனால், வங்கிகள்மீது, ரிசர்வ் பாங்க், தனது கட்டுப் பாட்டை இறுக்க முடிந்தது.

பாங்க் வீதத்தை மட்டும் உயர்த்தியிருந்தால், ரிசர்வ் பாங்க் கடன்மீதும், பண அளிப்பின்மீதும் முழுமையாகக் கட்டுப்பாடு செலுத்தியிருக்க முடியாது. ஏனெனில், வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் ஆவணங்களை விற்பதன் மூலம் தேவையான நிதியைப் பெற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால், ரிசர்வ் பாங்க், ஆவணங்களை வாங்க மறுத்ததால், வங்கிகள் இவ்வாறு ஆவணங்களை விற்க இயலவில்லை. ஆகவே, பாங்க் வீத மாறுதலோடு வெளி அங்காடி நடவடிக்கையிலும் மாறுதல் செய்ததால், இரண்டும் பலனுடைய தாயின.

1952 சனவரியில் ரிசர்வ் பாங்க் மாற்று உண்டியல் அங்காடித் திட்டத்தைக் கொண்டு வந்தது. இத் திட்டம் வங்கிகளுக்குக் கடன் கொடுப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட ஒரு மாற்று வழியே ஆகும். இதனால் வங்கிகள் மீது ரிசர்வ் பாங்க் தனது நேரடிக் கட்டுப்பாட்டைச் செலுத்த முடிந்தது. மேலும், வங்கிகள் இத் திட்டத்தின்கீழ் கடன்பெற முடிந்ததால், மும்முரப் பருவத்தின் போது ஆவணங்களை விற்க வேண்டிய அவசியம் எழவில்லை. ஆகையால், ஆவணங்கள் வாங்குபவராக இல்லாமல், விற்பவராக ரிசர்வ் பாங்க் சந்தையில் இறங்கியது.

இந்த இடைக் காலத்தில், சிறப்பீட்டுப் பத்திரங்கள் அங்காடி, எவ்வளவு கடன் வெளியிடப்பட்டாலும், உறிஞ்சக்கூடிய பலத்தைப் பெற்றிருந்தது. 1955-56-ல் மத்திய, மாநில அரசுகள் தங்கள் கடன்களை ஒன்றன்பின் ஒன்றாக வெளியிட்டன. அட்ட வணையிலிட்ட வங்கிகளின் வைப்புத்தொகை மிகவும் பெருகி இருந் ததால், அவ் வங்கிகள், இக் கடன்களில் முதலீடு செய்ய முடிந்தது; ஆகவே, இக் கடன் வெளியீடுகள் வெற்றியடைந்தன. ரிசர்வ் பாங்கின் வெளி அங்காடி நடவடிக்கைகளைப் பொறுத்தவரை 1951 டிசம்பரிலிருந்து 1956 மார்ச்சு வரை, ரிசர்வ் பாங்க் தனது சொந்தக் கணக்கில் 46 கோடி ரூபாய்க்கு அரசு ஆவணங்களை விற்றிருந்தது.

1956 மும்முரப் பருவத்தின்போது, பணச்சந்தையில் மிகவும் கடினமான நிலைமை நிலவியது. நிதி மிகவும் அதிக அளவில்

தேவைப்பட்டது. வங்கிகள் தங்களிடமிருந்த எல்லா வருவாயை யும் உச்ச அளவுக்குப் பயன்படுத்திய போதிலும், நிதிப் பற்றுக் குறையால் நலிந்தன. இச் சமயம் சிறப்பீட்டுப் பத்திரங்கள் மிகவும் பலவீனமாகக் காணப்பட்டன. இந்த நிலைமையைச் சீர் படுத்துவதற்காக, ரிசர்வ் பாங்க் மத்திய, மாநில அரசுகளின் கடன்களை வாங்குவதற்காகச் சந்தையில் நுழைந்தது. ரிசர்வ் பாங்கின் இத்தகைய ஆதரவின் காரணமாக, **1957 மே 16-ல்,** பாங்க் வீதம் 4 விழுக்காடாக ஆக்கப்பட்ட போதிலும், அம் மாறுதல் சிறப்பீட்டுப் பத்திரங்கள் அங்காடியை ஓரளவுக்குத் தான் பாதித்தது. ரிசர்வ் பாங்கின் இத்தகைய நடவடிக்கை, ஆவணங்கள் அங்காடியில் ஏற்படவிருந்த தேக்கத்தைத் (recession) தடுத்து நிறுத்தியது. மேலும், சிறப்பீட்டுப் பத்திரங்களின் விலையில் ஒரு நிலையான தன்மையை ஏற்படுத்தியது. ஆகவே, சிறப் பீட்டுப் பத்திரங்கள் அங்காடிக்கு ஆதரவு அளிக்கவும் பணச்சந்தை யில் நிலவிய கடின நிலைமையை நீக்குவதற்காகவும், ரிசர்வ் பாங்க் இத் தகைய செயல்களில் ஈடுபட்டது என்பது தெளிவா கிறது.

1957 சூலைத் திங்களிலிருந்து, ரிசர்வ் பாங்க், வெளிச்சந்தை யில், பெரும்பாலும் ஆவணங்களை விற்று வருகிறது. 1957 சூலைத் திங்கள் முதல் 1960 மார்ச்சுத் திங்கள் வரை, நிகர விற்பனை 224 கோடி ரூபாயாக இருந்தது. இவ் வாண்டுகளில், நாட்டிலுள்ள ரொக்க வருவாயை உச்ச அளவுக்குத் திரட்டுவதில் ரிசர்வ் பாங்க் முழு அளவிற்கு ஈடுபட்டிருந்தது.

1961-லிருந்து 1963 வரை, நிகரக் கொள்முதல்தான் அதிகமாக இருந்தது. இந்த மூன்றாண்டுகளில் ரிசர்வ் பாங்க் வெளி அங்காடி நடவடிக்கைமூலம் செய்த நிகரக் கொள்முதல் 168·8 கோடி ரூபாயாகும்.

1964-65லிருந்து 1968-69 வரை, விற்பனை மிக அதிகமாக இருந்தது. இக் குறிப்பிட்ட காலத்தில், வெளி அங்காடி நட-வடிக்கை மூலம் விற்பனை செய்த ஆவணங்களின் நிகர மதிப்பு 320 கோடி ரூபாயாகும்.

அரசாங்கக் கணக்கின் வழியாக ரிசர்வ் பாங்க் ஈடுபடும் வெளி அங்காடி நடவடிக்கைகள் பற்றிய புள்ளி விவரங்களை, ரிசர்வ் பாங்க் தனது செய்தித் துணரில் கொடுப்பதில்லை; இது பற்றிய புள்ளி விவரங்கள் அரசாங்கத்தின் ரொக்க இருப்பு முதலீட்டுக் கணக்கில் (Cash balance investment account) ரிசர்வ் பாங்க் தனியாக வைத்திருக்கிறது. ஆகவே, அரசாங்கக் கணக்கின் வழியாக ரிசர்வ் பாங்க் நடத்திய வெளி அங்காடி நடவடிக்கை பற்றிய புள்ளி விவரங்கள் அட்டவணை 9-ல் தரப்பட்டுள்ளன.

1970-71-லிருந்து 1973-74 (ஜூலை-ஜூன்) முடிய நிகர விற்பனையே அதிகமாக இருந்து வருகிறது. நிகர விற்பனை 1970-71-ல் 84·1 கோடியாகவும், 1971-72-ல் 51·1 கோடியாகவும், 1972-73-ல் 137·7 கோடியாகவும், 1973-74-ல் 56·1 கோடி ரூபாயும் ஆகும். மொத்தக் கொள்முதலும், மொத்த விற்பனையும் 1970-71-ல் முறையே 275·7 கோடி, 359 8. கோடியாகவும், 1971-72-ல் 258·6 கோடி, 309·7 கோடியாகவும், 1972-73-ல் 437·0 கோடி, 574·7 கோடியாகவும், 1973-74-ல் 358·8 கோடி, 414·9 கோடி ரூபாயாகவும் இருந்தது.

## அட்டவணை 9

### ரிசர்வ் பாங்கின் வெளி அங்காடி நடவடிக்கைகள்

(ரூபாய் கோடிக்கணக்கில்)

| ஆண்டு | மொத்தக் கொள்முதல் | மொத்த விற்பனை | நிகரக் கொள்முதல் (–) நிகர விற்பனை ( ) |
|---|---|---|---|
| 1948 | 75·9 | 23·5 | –52·4 |
| 1949 | 121·9 | 30·6 | –91·3 |
| 1950 | 89·1 | 70·4 | –18·7 |
| 1951 | 155·4 | 98·8 | –56·6 |
| 1952 | 66·7 | 54·7 | –12·0 |
| 1953 | 12·9 | 14·3 | 1·4 |
| 1954 | 17·8 | 40·0 | 22·2 |
| 1955 | 30·1 | 57·8 | 27·7 |
| 1956 | 22·1 | 38·0 | 15·9 |
| 1957 | 47·5 | 28·3 | –19·2 |
| 1958 | 24·2 | 89·2 | 65·0 |
| 1959 | 65·2 | 154·3 | 89·1 |
| 1960 | 23·3 | 83·6 | 60·3 |
| 1961 | 138·4 | 26·0 | –112·4 |
| 1962 | 66·6 | 33·0 | –33·6 |
| 1963 | 72·3 | 49·5 | –22·8 |

வங்கியியலமைப்பும், நிதி அமைப்பும் வளர்ச்சியுறாததால், ரிசர்வ் பாங்கின் துவக்கத்திற்குப் பிறகு சில ஆண்டுகளுக்கு வெளி அங்காடி நடவடிக்கைகள் மிகக் குறைவே. அந்த மிகக் குறைவான வெளி அங்காடி நடவடிக்கைகளும் பருவக்கால நிதித் தேவைகளைச் சமாளிப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டன. 1935-லிருந்து 1944 வரை, எந்த ஓர் ஆண்டிலும் முதலீட்டில் நிகரப் பருவகால மாறுதல்கள் ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமாக இல்லை.

ஆவணங்கள் பெற்றிருப்பது பற்றி, 1941 வரை ரிசர்வ் பாங்க் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்ததாலும், 1951 வரை மாற்று உண்டியல் அங்காடி இல்லாதிருந்ததாலும் ரிசர்வ் பாங்க் அவ்வளவாக வெளி அங்காடி நடவடிக்கையில் ஈடுபட முடிய வில்லை. இரண்டாவது உலகப்போரின் போதும், அதற்குப் பிறகும், 1939 லிருந்து 1945 வரை மலிவுப் பணக் கொள்கையைப் (Cheap money policy) பின்பற்ற உதவும் ஒரு கருவியாகவும் அரசாங்கக் கடன்களை வெளியிடுவதற்கும், வெளி அங்காடி நடவடிக்கை பயன்பட்டது.

போர்ச் சமயத்தில் குவித்து வைத்திருந்த ஆவணங்களை வங்கிகளும், பிறரும் விற்றுவந்த காரணத்தால், 1946 லிருந்து 1951 வரை, ரிசர்வ் பாங்க் அரசாங்க ஆவணங்களைப் பெரும் அளவிற்கு வாங்குவதில்தான் முனைந்திருந்தது. சிறப்பீட்டுப் பத்திரங்கள் அங்காடிக்குக் கிடைத்த அதிகாரப் பூர்வமான ஆதரவின் காரணமாகப் பணவீக்கமும், அதன் விளைவுகளும் தென் படத் துவங்கின. கொரியப் போரின் (Korean war) போது பண வீக்கத்தின் விளைவுகள் மிகவும் மோசமாகின. 1951 நவம்பரில் பாங்க் வீதத்தை உயர்த்தியபோது, வெளி அங்காடி நடவடிக்கை களில் ரிசர்வ் பாங்க் சில மாறுதல்களைச் செய்தது. 1951 வரையில் அரசாங்க ஆவணங்களை வாங்குவதன்மூலம் பருவகால நிதித் தேவைகளை அளிப்பது நிறுத்தப்பட்டது. ஆனால் அரசாங்க ஆவணங்களின் பேரில் (collateral security) தற்காலிகக் கடன் மட்டும் கொடுக்கப்பட்டது. இதுவரை ரிசர்வ் பாங்கின் நிகரக் கொள்முதல் தலைதூக்கி நின்றதால் வெளி அங்காடி நடவடிக்கை நல்லதொரு கடன்கட்டுப்பாட்டுக் கருவியாக செயல்பட முடிய வில்லை. இத் தகைய கொள்கை மாற்றத்தால் வெளி அங்காடி நடவடிக்கை, நிதிக் கொள்கையின் நெகிழ்ச்சித் தன்மை வாய்ந்த ஒரு கருவியாக மாறியது. இத் தகைய மாற்றத்திற்குப் பிறகும் 1952 வரையில் ரிசர்வ் பாங்கின் நிகரக் கொள்முதல்தான் அதிகமாக இருந்தது. 1953 முதல் 1960 வரையில் (1957 தவிர) ரிசர்வ் பாங்கின் நிகர விற்பனையே அதிகம். 1961, 1962, 1963 ஆகிய மூன்று ஆண்டுகளிலும், நிகரக் கொள்முதல் நிகர விற்பனையை விட அதிகம். 1964 முதல் 1969 வரை நிகர விற்பனையே அதிகம்.

ஆவணங்கள் அங்காடியின் குறுகியத் தன்மையினாலும், மலிவுப் பணக் கொள்கையைப் பின்பற்றியதாலும், பருவகால நிதித் தேவைகளை அளிக்க வேண்டியிருந்ததாலும், ரிசர்வ் பாங்க் கடைசியாகக் கடன் அளிப்பவராகப் பணியாற்ற வேண்டியிருந்த தாலும், ரிசர்வ் பாங்கில் தொடக்கக் காலத்தில் இருந்த அதிக நிகரக் கொள்முதல் வியப்பு அளிக்கக் கூடியதாக இல்லை.

மத்திய அரசால், ரிசர்வ் பாங்கிற்கு விற்கப்பட்ட கருவூல உண்டியல்கள் பற்றிய புள்ளி விபரம் அட்டவணை 10-ல் தரப் பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில், மிக அதிக அளவுக்குக் கருவூல உண்டியல்கள் ரிசர்வ் பாங்கிடம் விற்கப்பட்டிருப்பதை இந்த அட்டவணையிலிருந்து அறியலாம்.

## அட்டவணை 10

மத்திய அரசால் ரிசர்வ் பாங்கிற்கு விற்கப்பட்ட கருவூல உண்டியல்கள்

(ரூபாய் இலட்சக் கணக்கில்)

| ஆண்டு ஏப்ரல் மார்ச்சு | ரிசர்வ் பாங் கிடம் விற்கப் பட்ட கருவூல உண்டியலின் மதிப்பு | ஆண்டு ஏப்ரல் மார்ச்சு | ரிசர்வ் பாங் கிடம் விற்கப் பட்ட கருவூல உண்டியலின் மதிப்பு |
|---|---|---|---|
| 1935-36 | 100,52 | 1955-56 | 1,994,09 |
| 1936-37 | 62,93 | 1956-57 | 2,737,58 |
| 1937-38 | 75,30 | 1957-58 | 4,236,65 |
| 1938-39 | 100,12 | 1958-59 | 4,644,56 |
| 1939-40 | 104,95 | 1959-60 | 5,011,87 |
| 1940-41 | 140,76 | 1960-61 | 4,532,92 |
| 1941-42 | 291,48 | 1961-62 | 4,270,22 |
| 1942-43 | 496,42 | 1962-63 | 4,798,97 |
| 1943-44 | 275,73 | 1963-64 | 5,248,72 |
| 1944-45 | 144,81 | 1964-65 | 5,883,45 |
| 1945-46 | 161,99 | 1965-66 | 5,205,86 |
| 1946-47 | 220,29 | 1966-67 | 6,013,65 |
| 1947-48 | 271,33 | 1967-68 | 6,157,65 |
| 1948-49 | 1,117,85 | 1968-69 | 6,921,65 |
| 1949-50 | 1,381,12 | 1969-70 | 6,905,65 |
| 1950-51 | 1,394,35 | 1970-71 | 7,974,65 |
| 1951-52 | 1,335,50 | 1971-72 | 9,683,65 |
| 1952-53 | 1,233,09 | 1972-73 | 11,525,55 |
| 1953-54 | 1,309,06 | 1973-74 | 14,426,65 |
| 1954-55 | 1,523,81 | | |

### காப்பு ரொக்க விகித மாறுதல்கள் (Variable cash reserve ratios)

இந்தியாவில் பாங்க் வீத மாறுதல்கள் அவ்வளவு வெற்றி கரமாக அமையவில்லை என்று முன்பே கூறப்பட்டது. வெளி

அங்காடி நடவடிக்கைகள், சில சமயங்களில் வெற்றியடைகின்றன; வேறுசில சமயங்களில் தோல்வி அடைகின்றன. வளர்ச்சியுறாத பணச் சந்தைகளாக இருப்பின், தேவைப்பட்ட அளவுக்கு வெளி அங்காடி நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாது. பாங்க் வீதம், வெளி அங்காடி நடவடிக்கைகள் ஆகிய பாரம்பரிய (traditional) கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளின் திறன் குறைந்துள்ளமையால், மைய வங்கிகள் கடனைக் கட்டுப்படுத்த சில புதிய முறைகளைக் கையாள்கின்றன; அவற்றில் ஒன்றுதான் 'காப்பு ரொக்க விகித மாறுதல் முறை' ஆகும்.

காப்பு ரொக்க விகித மாறுதல் முறையின்கீழ், வங்கிகள் தங்களுடைய மொத்த வைப்புகளில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டை மைய வங்கியிடம் செலுத்தி வைத்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. அவ்வாறு வைக்கப்படும் காப்பு ரொக்கத்தை மாற்றும் அதிகாரத்தை மைய வங்கி பெற்றிருக்கிறது. ரொக்க இருப்பை அடிப்படையாகக் கொண்டுதான், வங்கிகள் கடன் உற்பத்தி செய்கின்றன. இதனால் காப்பு, ரொக்க விகிதத்தை மைய வங்கி உயர்த்தும்போது, வங்கிகளின் கடன் உற்பத்தி செய்யும் திறன் குறைகிறது. காப்பு ரொக்க விகிதம் குறைக்கப்படும்போது வங்கிகளின் கடன் உற்பத்தி செய்யும் திறன் கூடுகிறது.

காப்பு ரொக்க விகித முறையை இங்கிலாந்து பின்பற்ற வேண்டும் என்று கெய்ன்ஸ் பிரபு (Lord Keynes) முதன்முதலில் பரிந்துரைத்தார். தவணைப் பொறுப்புகளைப் பொறுத்தவரை 0 விழுக்காட்டிலிருந்து 6 விழுக்காடு வரையிலும், கேட்புப் பொறுப்புகளைப் பொறுத்தவரை 10 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடு வரையில் மாற்றுவதற்கு, பாங்க் ஆஃப் இங்கிலாந்துக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கெய்ன்ஸ் பரிந்துரைத்தார்.

தனிப்பட்ட வங்கிகளில் காப்பு ரொக்கம் சிதறிக் கிடப்பதற்குப் பதிலாக ஒரு மைய இடத்தில் வைக்கப்பட்டிருந்தால், கடன் அமைப்பு நெகிழ்ச்சித் தன்மை உடையதாகிறது. பர்கெஸ் (W. R. Burgess) கூறியிருப்பதுபோல், அவ்வாறு காப்பு ரொக்கம் ஒரு மைய இடத்தில் வைக்கப்படுவது ஓர் இடமாற்றமே என்று கருதக்கூடாது; ஆனால், காப்பு ரொக்கத்தின் திறனும், குணமும், தன்மையும் மாறுகிறது; உண்மையான நோக்கங்களுக்கு உதவ மிகவும் பயன்படுகிறது.

அமெரிக்காதான், முதன்முதலில் காப்பு ரொக்க விகித முறையைக் கையாண்டது. பின்னர்தான், பல நாடுகளும் அமெரிக்காவைப் பின்பற்றி இம் முறையைக் கையாளத் துவங்கின.

இந்திய வங்கிகள் இவ்வாறு குறைந்த அளவு ரொக்க இருப்பை மைய வங்கியில் வைப்பதால் மூன்று குறிக்கோள்கள் நிறைவு செய்யப்படுகின்றன. அவை முறையே :

1. தனியொரு வங்கியின் ரொக்கத்தன்மையும், கடன் தீர்க்கும் நிலையும் (solvency) காக்கப்படுவதால், வங்கியியல் முறையே காக்கப்படுகிறது.

2. இதனால் ரிசர்வ் பாங்க் பெறும் வைப்புகள், அதன் செயல்களுக்குப் பயன்படக்கூடிய வருவாயாக அமைகிறது.

3. வெளி அங்காடி நடவடிக்கையையோ அல்லது பிற முறைகளையோ பின்பற்றி வங்கிகளின் கடன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடிகிறது.

இந்த எல்லாக் குறிக்கோள்களும் ஒன்றுக்கு ஒன்று நெருங்கிய தொடர்பு உடையனவாகும். காலப் போக்கில் மூன்றாவது குறிக்கோளைவிட முதல் இரண்டு குறிக்கோள்களும் அவ்வளவு முக்கியமானதாகக் கருதப்படவில்லை. ஆகவே, கடனைக் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படும் ஒரு முக்கிய ஆயுதமாகவே, காப்பு ரொக்க விகிதம் கருதப்படுகிறது.

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 42 (1) - ன் கீழ் அட்டவணையிலிட்ட வங்கிகள் தங்களுடைய மொத்தக் கேட்புப் பொறுப்பில் 5 விழுக்காட்டையும், தவணைப் பொறுப்பில் 2 விழுக்காட்டையும் குறைந்த அளவுக் காப்பு ரொக்கமாக ரிசர்வ் பாங்கிடம் வைத்திருந்தன.

வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம் பிரிவு 18-ன் கீழ், அட்டவணையிலிடப்படாத வங்கி தனது கேட்பு, தவணைப் பொறுப்புகளில் குறைந்தது 3 விழுக்காடு அளவிற்குக் காப்பு ரொக்கம் வைத்திருக்க வேண்டும். இந்த 3 விழுக்காட்டுத் தொகையை, அட்டவணையிலிடப்படாத வங்கி, தன்னிடமோ அல்லது ரிசர்வ் பாங்கில் உள்ள கணக்கிலோ அல்லது ஸ்டேட் பாங்கிலோ அல்லது மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட எந்த ஒரு வங்கியில் உள்ள கணக்கிலோ அல்லது இத் தொகையில் ஒரு பகுதியைத் தன்னிடம் ரொக்கமாகவும் மறு பகுதியை மேற்கண்ட வங்கிக் கணக்கிலும் வைத்திருக்க வேண்டும். எவ்வளவு தொகை காப்பு ரொக்கமாக வைக்கப்பட்டிருந்தது என்பது பற்றிய அறிக்கையை ஒவ்வொரு திங்களும் 15 ஆம் நாளுக்கு முன் ரிசர்வ் பாங்கிற்குத் தாக்கல் செய்ய வேண்டும். கடந்த திங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் இருந்த காப்பு ரொக்கம், கேட்பு, தவணைப் பொறுப்புகள் ஆகியவை அவ் வறிக்கையில் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

1956 - லிருந்துதான் ரிசர்வ் பாங்க் காப்பு ரொக்க விகித மாறுதல் முறையை ஒரு கடன் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பெற்றது. 1956 வரையில் வங்கிகளின் சட்டமுறைக் காப்பு ரொக்கத்தைப் பெற்றுவந்ததே தவிர, அதை மாற்றுவதற்கான அதிகாரத்தை ரிசர்வ் பாங்க் பெற்றிருக்கவில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மிகுந்த அளவிற்குப் பற்றுக்குறை நிதியாக்கத்தைக் கையாள வேண்டியிருந்ததால், வங்கிகளின் வைப்புத் தொகை பெருகியது. இதனுல் வங்கிகள் கடன் உற்பத்தியில் ஈடுபட்டன. இக் கடன் உற்பத்தியைக் கட்டுப் படுத்துவதற்காக, பாங்க் வீத, வெளி அங்காடி நடவடிக்கை ஆகியவை தவிர வேறு கடன்கட்டுப்பாட்டுக் கருவியும் தேவைப் பட்டது. 1956-ல் ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் திருத்தப்பட்டு, வங்கிகளின் காப்பு ரொக்கத்தை மாற்றுவதற்கு, ரிசர்வ் பாங்கிற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. இதன்படி, தன்னிடம் அட்டவணையிலிட்ட வங்கிகளால் வைக்கப்பட்டுள்ள குறைந்த அளவு ரொக்க இருப்பை, கேட்புப் பொறுப்புகளைப் பொறுத்தவரை 5 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடுவரை யிலும், தவணைப் பொறுப்புகளைப் பொறுத்தவரை 2 விழுக்காட்டி லிருந்து 8 விழுக்காடு வரையிலும், ரிசர்வ் பாங்க் மாற்றமுடிந் தது. 1962 செப்டம்பர் திங்களிலிருந்து ரிசர்வ் பாங்கிடம் அட்ட வணையிலிட்ட வங்கிகள் வைத்திருக்க வேண்டிய ரொக்க இருப்பைப் பொறுத்தவரை, அவைகளின் (வங்கிகளின்) கேட்புப் பொறுப்புகளுக்கும் தவணைப் பொறுப்புகளுக்கும் இருந்த வேறு-பாடு நீக்கப்பட்டது. அப்போதிலிருந்து வங்கிகள் தங்களுடைய மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்புகளில் 3 விழுக்காட்டை ரிசர்வ் பாங்கில் உள்ள தங்கள் கணக்கில் காப்பு ரொக்கமாக வைத்திருக்க வேண்டும் என்ற விதி கொண்டுவரப்பட்டது; இக் காப்பினை 3 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடு வரையில் உயர்த் தவோ அல்லது குறைக்கவோ ரிசர்வ் பாங்க் அதிகாரம் படைத் துள்ளது. எந்தவோர் அட்டவணையிலிட்ட வங்கியினுடைய கேட்புப் பொறுப்பும், தவணைப் பொறுப்பும் ஓர் அளவிற்குமேல் இருக்கிறது என ரிசர்வ் பாங்க் கருதினுல், மேற்கூறப்பட்ட காப்பு ரொக்க வீத இருப்புகளுக்கும் கூடுதலான காப்பு ரொக்கத்தைத் தன்னிடம் செலுத்தி வைத்திருக்குமாறு அந்த ஒரு வங்கியை ரிசர்வ் பாங்க் கட்டளை இடலாம். ஆனுல், ரிசர்வ் பாங்கிடம் வைத் திருக்க வேண்டிய காப்பு ரொக்கம் மொத்தத்தில், வங்கிகளின் மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்பில் 15 விழுக்காட்டிற்கு அதிகமாகக் கூடாது. குறைந்த அளவுக் காப்பு ரொக்கமான 3 விழுக்காட்டிற்கு அதிகமாக உள்ள காப்பு ரொக்கத் தொகைக்கு, ரிசர்வ் பாங்க் தன் இச்சைப்படி ஒரு குறிப்பிட்ட வட்டியைக்

கொடுக்கலாம்; வங்கிகள், குறைந்த அளவு சட்டமுறைக் காப்பு இருப்பை முழுமையாக ரிசர்வ் பாங்கிடம் வங்கிகள் வைத்திருக்கின்றனவா என்பதைப் பொருத்துத்தான் வட்டி கொடுக்கப்படும்.

காப்பு ரொக்க விகிதத்தை, ரிசர்வ் பாங்க் எவ்வாறு பயன்படுத்தியது என்று பார்க்குமுன், வங்கிகளின் ரொக்க இருப்புகள் எவ்வாறு இருந்தன என்பதைக் காண்போம்.

## அட்டவணை 11

### அட்டவணையிலிட்ட எல்லா வங்கிகளின் ரொக்க இருப்புகள்

(ரூபாய் இலட்சக் கணக்கில்)

| ஆண்டு ஏப்ரல்-மார்ச் | கையிருப்பு ரொக்கம் 1 | ரிசர்வ் பாங்கிடம் வைத்திருக்கும் ரொக்க இருப்பு 2 | மொத்த ரொக்கம் (1+2) 3 | மொத்த வைப்புகள் 4 | மொத்த வைப்புகளில் மொத்த ரொக்கத்தின் விழுக்காடு 5 |
|---|---|---|---|---|---|
| 1934-35 | 6,03 | 30,26 | 36,29 | 215,67 | 16·8 |
| 1935-36 | 5,89 | 30,37 | 36,26 | 226,39 | 16·0 |
| 1936-37 | 6,61 | 25,38 | 31,99 | 243,78 | 13·1 |
| 1937-38 | 6,78 | 16,72 | 23,50 | 238,34 | 10·0 |
| 1938-39 | 6,88 | 16,06 | 22,94 | 241,58 | 9·4 |
| 1939-40 | 7,91 | 30,03 | 37,94 | 261,86 | 14·1 |
| 1940-41 | 9,48 | 37,89 | 47,38 | 307,23 | 15·4 |
| 1941-42 | 12,14 | 52,75 | 64,89 | 384,49 | 16·9 |
| 1942-43 | 18,45 | 60,26 | 78,71 | 550,44 | 14·2 |
| 1943-44 | 26,03 | 85,63 | 111,69 | 743,43 | 15·0 |
| 1944-45 | 32,23 | 87,24 | 119,47 | 872,13 | 13·0 |
| 1945-46 | 40,67 | 85,68 | 126,35 | 1,032,97 | 12·2 |
| 1946-47 | 38,30 | 95,57 | 133,87 | 1,107,73 | 12·0 |
| 1947-48 | 37,51 | 87,90 | 125,41 | 1,091,13 | 11·5 |
| 1948-49 | 34,90 | 66,34 | 101,24 | 889,69 | 11·4 |

## அட்டவணை 11-ன் தொடர்ச்சி 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1949-50 | 34,50 | 61,53 | 96,03 | 868,89 | 11.0 |
| 1950-51 | 34,95 | 58,36 | 93,31 | 880,61 | 10.6 |
| 1951-52 | 33,97 | 44,78 | 78,75 | 822,05 | 9.58 |
| 1952-53 | 32,66 | 42,73 | 75,39 | 830,54 | 9.0 |
| 1953-54 | 32,07 | 40,83 | 72,90 | 847,56 | 8·6 |
| 1954-55 | 31,62 | 46,18 | 77,80 | 942,60 | 8.2 |
| 1955-56 | 35,84 | 48,90 | 84,74 | 1,043,15 | 8.12 |
| 1956-57 | 33,98 | 54,28 | 88,26 | 1,175,30 | 7.51 |
| 1957-58 | 37,19 | 67,85 | 105,04 | 1,451,24 | 7.24 |
| 1958-59 | 43,36 | 64,40 | 107,76 | 1,635,01 | 6.59 |
| 1959-60 | 62,12 | 90,79 | 152,91 | 1,902,02 | 8.04 |
| 1960-61 | 45,56 | 71,02 | 116,58 | 1,746,06 | 6.7 |
| 1961-62 | 48,86 | 74,59 | 123,46 | 1,921,87 | 6.4 |
| 1962-63 | 51.73 | 73,97 | 125,71 | 2,042,26 | 6.2 |
| 1963-64 | 58,18 | 89,42 | 147,60 | 2,285,10 | 6.5 |
| 1964-65 | 66,72 | 95,73 | 162,45 | 2,583,30 | 6.3 |
| 1965-66 | 73,28 | 97,57 | 170,85 | 2,949,93 | 5.8 |
| 1966-67 | 87,69 | 133,46 | 221,15 | 3,489,76 | 6.3 |
| 1967-68 | 89,94 | 137,37 | 227,31 | 3,923,34 | 5.8 |
| 1968-69 | 109,59 | 172,43 | 282,02 | 4,424,55 | 6.4 |
| 1969-70 | 147,11 | 183,03 | 330,13 | 5,127,69 | 6.4 |
| 1970-71 | 168,38 | 205,36 | 373,75 | 6,014,11 | 6.1 |
| 1971-72 | 181,93 | 280,14 | 462,06 | 7,244,91 | 6.38 |
| 1972-73 | 223,43 | 274,46 | 497,89 | 8,814,29 | 5.72 |
| 1973-74 | 250,01 | 625,36 | 875,37 | 10,281,39 | 8.51 |

# அட்டவணை 12

## ரிசர்வ் பாங்கிடம் வங்கிகள் வைத்திருந்த ரொக்கஇருப்பு

(ரூபாய் இலட்சக்கணக்கில்)

| | அட்டவணையிலிட்ட எல்லா வங்கிகள் | | அட்டவணையிலிட்ட இந்திய வணிக வங்கிகள் | |
|---|---|---|---|---|
| ஆண்டு ஏப்ரல்-மார்ச்ச | சட்டமுறைக் காப்புத் தொகை (Statutory minimum) 1 | சட்டமுறைக் காப்பைவிட அதிகமாக வைத்திருந்த தொகை (Excess over Statutory minimum) 2 | சட்டமுறைக் காப்புத் தொகை 3 | சட்டமுறைக் காப்பைவிட அதிகமாக வைத்திருந்த தொகை 4 |
| 1934-35 | 7,85 | 22,41 | 5,32 | 19,55 |
| 1935-36 | 8,30 | 22,07 | 5,72 | 19,91 |
| 1936-37 | 8,83 | 16,55 | 6,09 | 14,19 |
| 1937-38 | 8,67 | 8,05 | 6.06 | 6,27 |
| 1938-39 | 8,90 | 7,16 | 6,24 | 5,37 |
| 1939-40 | 9,91 | 20,12 | 6,79 | 14,90 |
| 1940-41 | 12,15 | 25,74 | 8,11 | 16,52 |
| 1941-42 | 15,67 | 37,08 | 11,28 | 30,89 |
| 1942-43 | 23,59 | 36,67 | 17,74 | 32,10 |
| 1943-44 | 31,72 | 53,92 | 24,66 | 45,26 |
| 1944-45 | 36,40 | 50,84 | 28,27 | 38,54 |
| 1945-46 | 42,33 | 43,35 | 33,91 | 32,87 |
| 1946-47 | 41,86 | 53,71 | 34,04 | 44,45 |
| 1947-48 | 42,36 | 45,55 | 34,37 | 37,09 |
| 1948-49 | 36,09 | 30,25 | 29,30 | 26,66 |
| 1949-50 | 35,23 | 26,29 | 27,89 | 22,21 |
| 1950-51 | 36,57 | 21,78 | 29,06 | 16,76 |
| 1951-52 | 33,98 | 10,80 | 26,52 | 5,79 |
| 1952-53 | 32,86 | 9,87 | 25,41 | 8,10 |
| 1953-54 | 32,98 | 7,85 | 25,94 | 5,97 |

## அட்டவணை 12-ன்—தொடர்ச்சி

| | | | | |
|---|---|---|---|---|
| 1954-55 | 36,25 | 9,93 | 28,67 | 8,00 |
| 1955-56 | 40,09 | 8,81 | 32,30 | 6,59 |
| 1956-57 | 44,38 | 6,55 | 36,43 | 4,44 |
| 1957-58 | 51,56 | 13,66 | 42,70 | 9,36 |
| 1958-59 | 55,44 | 8,11 | 47,45 | 6,61 |
| 1959-60 | 64,83 | 14,13 | 55,98 | 10,43 |
| 1960-61 | 62,69 | 12,67 | 54,02 | 11,01 |
| 1961-62 | 67,49 | 6,07 | 58,63 | 4,41 |
| 1962-63 | 66,36 | 7,61 | 57,86 | 5,77 |
| 1963-64 | 74,33 | 10,55 | 65,18 | 9,59 |
| 1964-65 | 83,72 | 11,97 | 73,27 | 9,68 |
| 1965-66 | 95,70 | 15,69 | 83,98 | 12,82 |
| 1966-67 | 109,72 | 15,66 | 97,30 | 12,88 |
| 1967-68 | 122,99 | 17,23 | 109,88 | 15,06 |
| 1968-69 | 138,69 | 20,01 | 124,65 | 18,23 |
| 1969-70 | 160,16 | 23,66 | 144,17 | 22,17 |
| 1970-71 | 187,54 | 25,21 | 169,60 | 23,23 |
| 1971-72 | 225,46 | 37,23 | 205,69 | 35;27 |
| 1972-73 | 275,48 | 33,53 | 253,14 | 31,00 |
| 1973-74 | 770,74 | –10971 | 712,46 | –11149 |

சட்டமுறைப்படி வைக்க வேண்டிய காப்பு ரொக்கம் ரிசர்வ் பாங்கின் வருவாயைப் பெருக்கியதேயொழிய, கடனைக் கட்டுப் படுத்துவதற்குப் பயன்படவில்லை. சட்டமுறைப்படி வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் வைத்திருக்க வேண்டிய குறைந்தஅளவுக் காப்பு ரொக்கம் வரையறுக்கப்பட்டதே தவிர ரிசர்வ் பாங்கிற்கு அதனை மாற்றக்கூடிய அதிகாரம். நீண்ட காலமாகக் கொடுக்கப்படவில்லை என்று முன்பே கூறப்பட்டது. மிகுந்த அளவுக்கு வங்கிகள் காப்பு ரொக்கத்தைப் பெற்றிருந்தன என்பது அட்டவணை 11-லிருந்து தெரிந்து கொள்ளலாம். 1935-ல் ரிசர்வ் பாங்க் தொடங்கப் பட்டபோது, அட்டவணையிலிட்ட வங்கிகள் தங்களுடைய மொத்தப் பொறுப்புகளில் 16·8 விழுக்காடு அளவுக்குக் காப்பு ரொக்கத்தைப் பெற்றிருந்தன. இந்த 16·8 விழுக்காடு படிப் படியாகக் குறைந்துவந்த போதிலும் 1951-52 வரையில்,

வங்கிகள் மிகுந்த காப்பு ரொக்கத்தைப் பெற்றிருந்தன என்பதை அட்டவணையிலிருந்து அறியலாம் (பத்தி 5). 1935-லிருந்து 1950-51வரை (1939 தவிர) எந்த ஓர் ஆண்டிலும், காப்பு ரொக்கம் 10 விழுக்காட்டிற்குக் குறையவில்லை. 1951-52-லிருந்து 1972-73 வரை (1959-60 தவிர) காப்பு ரொக்கம் படிப்படியாகக் குறைந்து வந்துள்ளதை அட்டவணை 11-ல் ஐந்தாம் பத்தியிலிருந்து அறியலாம். வங்கிகள் காப்பு ரொக்கத்தைப் படிப்படியாகக் குறைத்துக்கொண்டு, முதலீடு செய்வதற்குத் தங்கள் நிதியைப் பயன்படுத்தின.

1935-லிருந்து 1948 வரையில், வங்கிகள் தங்களிடம் வைத்திருந்த ரொக்க இருப்பைவிட, ரிசர்வ் பாங்கிடம் இருமடங்குக்கும் அதிகமாக (சில ஆண்டுகளில் 4 மடங்கிற்கு அதிகமாக) ரொக்க இருப்பை வைத்திருந்தன என்பது பத்தி 1, 2 ஆகியவைகளில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் தெளிவாக்குகின்றன. 1949-லிருந்து 1973-74 வரை, எந்த ஓர் ஆண்டிலும், தங்களிடமிருந்த ரொக்க இருப்பைப்போல் இருமடங்கோ அல்லது அதற்கு அதிகமாகவோ வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் வைத்திருக்கவில்லை என்பதையும் அறியலாம்.

எந்த அளவுக்கு, அட்டவணையிலிட்ட எல்லா வங்கிகளும், அட்டவணையிலிட்ட இந்திய வணிக வங்கிகளும் ரிசர்வ் பாங்கிடம் வைத்திருக்க வேண்டிய சட்டமுறைக் காப்பை (Statutory reserve) விட, அதிகமான தொகையை வைத்திருந்தன என்பது பற்றிய புள்ளி விவரங்கள்அட்டவணை 12-ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 12—ல் சட்டமுறைப்படி ரிசர்வ் பாங்கிடம் வைத்திருந்த காப்பு ரொக்கம் பற்றிய புள்ளி விவரம், எல்லா அட்டவணையிலிட்ட வங்கிகளைப் பொறுத்தவரை பத்தி 1-லும், அட்டவணையிலிட்ட இந்திய வணிக வங்கிகளைப் பொறுத்தவரை பத்தி 3-லும் தரப்பட்டுள்ளது. இச் சட்டமுறைக் காப்பு ரொக்கத்திற்கும் அதிகமாக (Excess over statutory minimum) வங்கிகள் வைத்திருந்த காப்பு ரொக்கம் பற்றிய புள்ளி விவரம், எல்லா அட்டவணையிலிட்ட வங்கிகளைப் பொறுத்தவரை, பத்தி 2-லும் அட்டவணையிலிட்ட இந்திய வணிக வங்கிகளைப் பொறுத்தவரை பத்தி 4-லும் தரப்பட்டுள்ளது.

1935-லிருந்து 1948 வரை, எல்லா அட்டவணையிலிட்ட வங்கிகளும், அட்டவணையிலிட்ட இந்திய வணிக வங்கிகளும், சட்டமுறைக் காப்பு ரொக்கத்தைவிட அதிகமாகவே ரிசர்வ் பாங்கிடம் ரொக்க இருப்பை வைத்து வந்திருக்கின்றன என்பது தெரிய வருகிறது. 1949-லிருந்து இவ் விருவகை வங்கிகளும்,

சட்டமுறைக் காப்பு ரொக்கத்தைவிடக் குறைவான அளவிற்கே கூடுதலான ரொக்க இருப்புகளை ரிசர்வ் பாங்கிடம் வைத் திருந்ததைக் காணலாம்.

**காப்பு ரொக்க விகித மாறுதல்**

1956-ல்தான் காப்பு ரொக்கத்தை மாற்றக்கூடிய அதிகா ரத்தை ரிசர்வ் பாங்க் பெற்றது என்று முன்பே கூறப்பட்டது. 1960-ல்தான் முதன் முதலாக, காப்பு ரொக்க விகிதத்தில் ரிசர்வ் பாங்க் மாறுதல் செய்தது. அட்டவணையிலிட்ட வங்கி களின் சொத்து, பொறுப்புகளைக் கவனித்தால், எத்தகைய சூழ்நிலையில் ரிசர்வ் பாங்க் இத்தகைய மாறுதலைச் செய்தது என்பதை நன்குணரலாம். இதனை விவரிக்கும் வகையில், அட்டவணை 13-ல் சில முக்கிய புள்ளி விவரங்கள் தரப்பட்டுள்ளன.

1960ஆம் ஆண்டின் தொடக்கத்தில், பணம் அதிகமாகத் தேவைப்பட்டது. 1960 சனவரியில் எல்லா அட்டவணையிலிட்ட வங்கிகளின் வைப்புகளும் 1887·10 கோடி ரூபாயாக இருந்தன; 1959 சனவரியில் 1623·70 கோடி ரூபாயாக இருந்தன. இந்த ஓர் ஆண்டில் வைப்புகள் 263·40 கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்திருந்தன. ஒவ்வொரு திங்களிலும் ஏற்பட்ட மாற்றத்தை அட்டவணை 13-ல் உள்ள பத்தி 2-ன் வழியாக அறியலாம். வைப்புப் பெருக்கம் ஏற்பட்டதால், வங்கிகள் கடன் பெருக்கத்தில் ஈடுபட்டன. 1959 சனவரியில் 904·45 கோடி ரூபாயாக இருந்த வங்கிகளின் கடன், 1960 சனவரியில் 1001·70 கோடி ரூபாயாக இருந்தது (பத்தி 5). ரிசர்வ் பாங்கிடமிருந்து பெற்ற கடன் 1959 சனவரியில் 33·78 கோடி ரூபாயாகவும், 1960 சனவரியில் 26·17 கோடி ரூபாயாகவும், பிப்ரவரியில் 42·56 கோடி ரூபா யாகவும், மார்ச்சில் 64·84 கோடி ரூபாயாகவும் இருந்தது (பத்தி 3). முதலீடுகள் படிப்படியாக உயர்ந்து வந்திருப்பினும், 1959 டிசம்பரிலிருந்து குறைந்து வந்திருப்பதைக் காணலாம். இதிலிருந்து வங்கிகளின் வைப்புத் தொகையில் பெருக்கம் ஏற்பட்ட தால் மட்டும் வங்கிகள் கடனைப் பெருக்கவில்லை, கடன் பெருக்கத் திற்காக வங்கிகள் தங்களிடம் இருந்த முதலீடுகளை விற்றன(பத்தி4) என்றும், ரிசர்வ் பாங்கிடம் கடனும் (பத்தி 3) வாங்கின என்றும் தெரிய வருகிறது. மேலும், 2414·68 கோடி ரூபாயாக 1959 சனவரியில் இருந்த பண அளிப்பு, 1960 சனவரியில் 2608·52 கோடி ரூபாயாகவும், மார்ச்சில் 2720·22 கோடி ரூபாயாகவும் பெருகி இருந்தது (பத்தி 6). முன்பே உயர்ந்திருந்த விலைவாசிகள் மேலும் உயரத் தொடங்கின. 1960 பிப்ரவரி நடுவில்

# அட்டவணை 13

## அட்டவணையிலிட்ட வங்கிகளின் முக்கிய சொத்து, பொறுப்புகள்

*(ரூபாய் கோடிக்கணக்கில்)*

| 1 | மொத்த வைப்புகள் 2 | ரிசர்வ் பாங்கிடம் பெற்ற கடன் 2 | முதலீடுகள் 4 | மொத்தக் கொடுத்த கடன் 5 | மக்களிடம் உள்ள பண அளிப்பு 6 |
|---|---|---|---|---|---|
| 1959 | | | | | |
| சனவரி | 1623.70 | 33.78 | 634.36 | 904.45 | 2414.68 |
| பிப்ரவரி | 1640.86 | 34.32 | 616.71 | 949.00 | 2462.36 |
| மார்ச்சு | 1658.90 | 51.23 | 617.17 | 990.00 | 2526.02 |
| ஏப்ரல் | 1721.11 | 37.33 | 612.41 | 1021.43 | 2601.22 |
| மே | 1743.01 | 24.90 | 628.55 | 1020.27 | 2560.03 |
| சூன் | 1772.73 | 5.52 | 635.18 | 998.02 | 2552.43 |
| சூலை | 1802.32 | 4.49 | 676.25 | 976.39 | 2482.42 |
| ஆகஸ்ட் | 1823.80 | 5.51 | 721.81 | 946.49 | 2472.00 |
| செப்டம்பர் | 1847.87 | 3.63 | 762.44 | 927.28 | 2450.77 |
| அக்டோபர் | 1856.68 | 7.71 | 788.28 | 933.92 | 2490.59 |
| நவம்பர் | 1875.04 | 3.85 | 800.54 | 927.37 | 2493.34 |
| டிசம்பர் | 1872.94 | 10.11 | 797.52 | 951.23 | 2541.67 |
| 1960 | | | | | |
| சனவரி | 1887.10 | 26.17 | 773.19 | 1001.70 | 2608.52 |
| பிப்ரவரி | 1898.06 | 42.56 | 767.19 | 1049.59 | 2643.71 |
| மார்ச்சு | 1923.69 | 64.84 | 740.42 | 1100.61 | 2720.22 |
| ஏப்ரல் | 1963.35 | 46.17 | 729.22 | 1129.56 | 2764.12 |
| மே | 1978.49 | 44.58 | 744.69 | 1131.90 | 2744.65 |
| சூன் | 1994.82 | 45.91 | 744.07 | 1131.62 | 2723.25 |

## அட்டவணை 13-ன்—தொடர்ச்சி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சூலை | 2099.50 | 37.41 | 736.61 | 1125.90 | 2690.86 |
| ஆகஸ்ட் | 2011.45 | 24.85 | 736.68 | 1114.45 | 2678.36 |
| செப்டம்பர் | 1966.45 | 45.56 | 733.91 | 1128.55 | 2651.75 |
| அக்டோபர் | 1947.07 | 27.53 | 703.11 | 1115.91 | 2680.93 |
| நவம்பர் | 1931.88 | 19.49 | 687.78 | 1107.81 | 2639.17 |
| டிசம்பர் | 1921.11 | 35.96 | 662.15 | 1147.77 | 2705.24 |

மொத்த விற்பனைவிலைப் பொதுக்குறியீட்டு எண் 120ஆக இருந்தது (1952-53-100). இந் நிலைமை, ரிசர்வ் பாங்க் உட்பட, எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது. நிலைமையைக் கட்டுப்படுத்தவும், பணஅளிப்பும், வங்கிக் கடனும் மேலும் பெருகாமல் தடுக்கவும், விலைவாசிகள் ஏறுவதை ஓரளவுக்காவது குறைக்கவும், ரிசர்வ் பாங்க் முதன் முதலில் காப்பு ரொக்க வீதக் கருவியைப் பயன்படுத்தியது. 1960 மார்ச்சு 11-ல், ரிசர்வ் பாங்க் விடுத்த அறிவிப்பு மூலம், வங்கிகளின் வைப்புகள் முடக்கம் (Impound) செய்யப்பட்டன. இதன்படி கேட்பு, தவணைப் பொறுப்பில், 1960 மார்ச்சு 11-க்குப் பிறகு ஏற்படும் உயர்வில் 25 விழுக்காட்டை வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டன. ஆனல், சட்டமுறைப்படி வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் வைத்திருக்கவேண்டிய குறைந்த அளவுக் காப்பு ரொக்கம், இந்த 25 விழுக்காட்டில் அடங்காது. இவ்வாறு வைக்கப்படும் கூடுதல் வைப்புகள் மொத்தத்தில் கேட்புப் பொறுப்புகளில் 20 விழுக்காட்டிற்கு அதிகமாகாமலும், தவணைப் பொறுப்புகளில் 8 விழுக்காட்டிற்கு அதிகமாகாமலும் இருக்க வகை செய்யப்பட்டது. இக் கூடுதல் காப்பிற்கு, வங்கிகள், தங்கள் வைப்புகளுக்குக் கொடுக்கும் சராசரி வட்டி அளவுக்கு, ஆனல், பாங்க் வீதத்திற்கு அதிகமாகாத அளவில், ரிசர்வ் பாங்க் வட்டி கொடுக்க இசைந்தது.

1960 மே ஐந்தாம் நாள், இந்த முறை மேலும் இறுக்கப்பட்டது. இதன்படி, கேட்பு, தவணை வைப்புகளில், 1960 மே 6-க்குப் பிறகு ஏற்படும் உயர்வில் 50 விழுக்காட்டை வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. முன்போல் 3 திங்களுக்கொரு முறை வட்டி கொடுப்பதற்குப் பதிலாக, 6 திங்களுக்கொரு முறை வட்டி கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இக் கூடுதல் காப்பிற்கு, வங்கிகள் தங்களுடைய வைப்புகளுக்குக் கொடுக்கும் சராசரி வட்டியைவிட

$\frac{1}{2}$ விழுக்காடு அதிக வட்டி (ஆனால், உயர்ந்த அளவு $4\frac{1}{2}$ விழுக்காட்டிற்கு உட்பட்டு) 1960 ஜூலை முதல் நாளிலிருந்து கொடுக்க ரிசர்வ் பாங்க் இசைந்தது. 1960 ஜூலை இரண்டாம் நாள் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. இதன்படி, கூடுதல் காப்பினைக் கண்டுபிடிக்க வங்கிகளின் மொத்தப் பொறுப்பில் வங்கிகள் தங்களுக்கிடையே பெறும் கடன்கள் (Inter Bank Borrowings) சேர்க்கப்படவில்லை. மேலும், 1960 மார்ச்சு 11ஆம் நாளிலிருந்து ஏற்பட்ட கூடுதல் பொறுப்புகளில் 50 விழுக்காட்டிற்குமேல் எந்த ஒரு வங்கியும் ரிசர்வ் பாங்கிடம் வைத்திருக்க வேண்டியதில்லை என்று ரிசர்வ் பாங்க் கட்டளையிட்டது; 1960 மே ஆறும் நாளுக்குப் பிறகு வங்கிகளின் வைப்புகளில் வீழ்ச்சி ஏற்பட்டதால், வங்கிகளுக்கு இச் சலுகை வழங்கப்பட்டது.

### 1960 நவம்பரில் 11-ல் தளர்த்தப்படல்

மும்முரப் பருவத்தின் நிதித் தேவைகளை நிறைவு செய்வதற்காக 1960 நவம்பரில் சிறு மாறுதல்கள் செய்யப்பட்டன. இதன்படி, 1960 நவம்பர் 11-க்குப் பிறகு வங்கிகள் பெற்ற கூடுதல் வைப்புகளுக்கு, ரிசர்வ் பாங்கிடம் கூடுதல் காப்பு வைக்க வேண்டியதில்லை. மேலும், முன்னால் ரிசர்வ் பாங்கிடம் வைக்கப் படவேண்டிய 50 விழுக்காடாக இருந்த கூடுதல் காப்பு 25 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. 1960 நவம்பர் 11-க்குப் பின்னர் ரிசர்வ் பாங்கின் இரண்டாம் அட்டவணையில் இடப்படும் வங்கிகளுக்குக் கூடுதல் காப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

ரிசர்வ் பாங்கிடம் கடன் பெற நெருங்கமுடியவில்லையாதலாலும், ஆனால் அதே சமயம் மும்முரப் பருவத்தின் நிதித் தேவையை வங்கிகள் அளிக்க வேண்டியிருந்ததாலும், மேற்கூறப் பட்டபடி கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது. இவ்வாறு வைப்புகள் முடக்கப்பட்டதால், வங்கிகள் கொடுத்த கடன் படிப்படியாகக் குறைந்து வந்திருப்பதைக் காணலாம் (பத்தி 5). 1960 ஏப்ரல் திங்களில் 1129·56 கோடியாக இருந்த வங்கிகளின் கடன் 1960 நவம்பரில் 1107·81 கோடி ரூபாய்க்குக் குறைந்திருந்தது (அட்டவணை 13, பத்தி 5). 1960 அக்டோபரில் வங்கிகள் ரிசர்வ் பாங்கிடமிருந்து பெற்ற கடன், செப்டம்பரில் பெற்றதைவிட 18·03 கோடி ரூபாய் குறைந்திருந்தது. நவம்பரில், அக்டோபரில் பெற்றதைவிட 8·04 கோடி ரூபாய் மேலும் குறைந்தது. இந்த மாறுதல், நவம்பர் 11-ல் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதால் தான் ஆகும். ஆனால், சந்தையில் ஏற்பட்ட எளிய பணநிலைமை நீண்ட நாள்களுக்கு நீடிக்கவில்லை. டிசம்பரில் கடினநிலை

உருவாகியது. சந்தைக் கடன் விகிதம் அதிகமாக இருந்ததால், வங்கிகள் ரிசர்வ் பாங்கிடமிருந்து தங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த அடிப்படைப் பங்கீட்டைக் (Basic Quota) காட்டிலும் தண்டனை வீதத்தில் (Penal rate) அதிகமான கடன் பெற்றன. இதனுல் வங்கிகள் ரிசர்வ் பாங்கிடமிருந்து நவம்பரில் பெற்ற கடனைவிட, டிசம்பரில் 16·47 கோடி ரூபாய் அதிக அளவுக்குக் கடன் பெற்றிருந்தன. பணஅளிப்பும் நவம்பரில் இருந்ததைவிட டிசம்பரில் 66·07 கோடி ரூபாய் அதிகம் பெருகி இருந்தது. பணச்சந்தையில் பணம் அதிகமாகத் தேவைப்பட்டதால், பணச் சந்தையில் நிலவிய கடின நிலைமையைப் போக்குவதற்காக, ரிசர்வ் பாங்க் கட்டுப்பாடுகளைத் தளர்த்த முடிவு செய்தது. 1961 சனவரியிலிருந்து வங்கிகள் கூடுதல்காப்பினைத் தன்னிடம் வைக்க வேண்டாம் என்று ரிசர்வ் பாங்க் வங்கிகளைக் கேட்டுக்கொண்டது. அதாவது சட்டமுறைப்படி ரிசர்வ் பாங்கிடம் வைத்திருக்க வேண்டிய காப்புரொக்கத்தை வைத்திருந்தால் மட்டும் போதுமானது. 1961 சனவரியில் வங்கிகள் கூடுதலாக ரிசர்வ் பாங்கிடம் வைத்திருந்த காப்பு ரொக்கம் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

இந்தக் காப்பு ரொக்கவீத மாறுதலினுல் ஓரளவுக்குத்தான் பலன் இருந்தது. இருப்பினும் அது அவசியமே என்று ரிசர்வ் பாங்க் கருத்துத் தெரிவித்தது.

காப்பு ரொக்க வீத மாறுதல் செய்து திடீரென்று வங்கிகளை வியப்பில் ஆழ்த்துவதற்குப் பதில் ரிசர்வ் பாங்க் தனது கொள்கை பற்றி முன்பே விளக்கங்கள் அளித்திருக்கலாம் என்று குப்தா (G. P. Gupta) கூறியிருக்கிறுர்.

### சட்டமுறை ரொக்கத்தன்மை விகிதம்

வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 24-ன் கீழ் வங்கிகள் தங்களுடைய மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்புகளில் 20 விழுக்காட்டை ரொக்கம், தங்கம், வில்லங்கமில்லாத அங்கீகரிக்கப் பட்ட (Unencumbered approved securities) ஆவணங்கள் ஆகிய ரொக்கத்தன்மை வாய்ந்த சொத்து வடிவில் வைத்திருந்தன. ரிசர்வ் பாங்க் வங்கிகள் வைக்கவேண்டிய ரொக்க இருப்புகளை உயர்த்தினுல், வங்கிகள் தங்களிடம் இருக்கும் அரசாங்க ஈடுகளை விற்று, தங்கள் பணமுடையைச் சரிசெய்து கொள்வதால், ரொக்க மாறுதல்களின் விளைவுகள் அவ்வளவாக இருப்பதில்லை. வங்கிகள் தங்களது கேட்பு, தவணைப் பொறுப்புகளில் 25 விழுக்காட்டிற்குக் குறையாமல், ரொக்கத்தன்மை வாய்ந்த சொத்துகள் வடிவில் ரிசர்வ் பாங்கிடம் வைத்திருக்க வேண்டும் என்று 1962-ல் வங்கி

யியல் ஒழுங்காற்றுச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. இம் மாறுதல்கள் 1964 செப்டம்பர் 16ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தன. மேற்கூறிய ரொக்க இருப்புகளைத் தவிர, ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் பிரிவு 42—ன்படி அட்டவணையிலிட்ட வங்கிகள் வைக்கவேண்டிய இருப்புகளை ரிசர்வ் பாங்கிடம் வைத்திருத்தல் வேண்டும். அட்டவணையிலிடா வங்கிகள் வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம் பிரிவு 18-ன் கீழ்த் தாங்கள் வைக்கவேண்டிய ரொக்க இருப்புகளை வைத்திருத்தல் வேண்டும். கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி சட்டமுறை ரொக்கத்தன்மை விகிதம் படிப்படியாக உயர்த்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| பிப்ரவரி 2, | 1970 | 25%-லிருந்து 26% |
| ஏப்ரல் 24, | 1970 | 26%-லிருந்து 27% |
| ஆகஸ்ட் 28, | 1970 | 27%-லிருந்து 28% |
| ஆகஸ்ட் 4, | 1972 | 28%-லிருந்து 29% |
| நவம்பர் 17, | 1972 | 29%-லிருந்து 30% |
| டிசம்பர் 8, | 1973 | 30%-லிருந்து 32% |
| ஜூலை 29, | 1974 | 32%-லிருந்து 33% |

### மாறுபட்ட விகித முறை (System of Differential Rates)

பொதுவாக பாங்க் வீதத்தை மாற்றுவதற்குப் பதில் ரிசர்வ் பாங்க் மாறுபட்ட விகித முறையையும் பின்பற்றியது. இத் திட்டத்தின்படி ரிசர்வ் பாங்கிடமிருந்து பெறும் கடன்களுக்கு அதிக வட்டியை வங்கிகள் கொடுக்கவேண்டியிருக்கின்றன. 1960 அக்டோபரிலிருந்து 1964 செப்டம்பர்வரை செயல்பட்ட இத் திட்டத்திற்கு, நடுநடுவே, நிறைய மாறுதல்கள் கொண்டுவரப்பட்டன. இத் திட்டத்தின்கீழ் வங்கிகள் தாங்கள் சட்டப்படி வைத்திருக்க வேண்டிய காப்புரொக்கத்தில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டுக்குச் சமமான, அடிப்படைப் பங்கீடு (basic quota) வரையறுக்கப்பட்டது. இந்த அடிப்படைப் பங்கீடுவரை பாங்க் வீதத்தில் வங்கிகள் கடன் பெறலாம். அடிப்படைப் பங்கீட்டுக்குச் சமமான அதிகப்படியான பங்கீட்டையும், சில சமயங்களில், அடிப்படைப் பங்கீட்டுக்கும் அதிகமான பங்கீட்டையும் வங்கிகளுக்கு ரிசர்வ் பாங்க் அளித்தது. ஆனால், இப்படி அடிப்படைப் பங்கீடுகளுக்குமேலும் கொடுக்கப்படும் பங்கீடுகளுக்கு, ரிசர்வ் பாங்க் அதிகமான வட்டியை வசூலித்தது. இதற்குமேலும், ரிசர்வ் பாங்கிடம் இருந்து கடன் வாங்க வேண்டுமேயானால், மேலும் அதிகப்படியான வட்டியைக் கொடுக்கவேண்டும்; ஆனால் இத் தகைய கடன்களைக் கொடுப்பது ரிசர்வ் பாங்கின் விருப்பத்தைப்

பொறுத்ததாகும். ஆனால் இவ்வாறு இருந்தபோதிலும், ரிசர்வ் பாங்கிடமிருந்து வங்கிகள் பெறும் கடன்களின் அளவு குறைய வில்லை என்று கருதப்பட்டது. இத் திட்டம், வங்கிக்கு வங்கி சொத்து நிலைமையில் உள்ள மாறுதல்களைக் கருத்தில் கொள்ள வில்லை. வங்கிகள் தாங்கள் ரிசர்வ் பாங்கிடமிருந்து வாங்கிய கடன்களுக்கு அதிகப்படியாகக் கொடுக்கும் வட்டியைத் தங்களு டைய வாடிக்கையாளருக்குக் கொடுக்கும் கடன்களின்மீதான வட்டியைஉயர்த்தி ஈடுசெய்துகொண்டன. இந்த'பங்கீட்டுமுறை' பற்றி 'பாங்க் வீதம்' என்ற தலைப்பின்கீழ் மேலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. 1964 செப்டம்பரில் இத் திட்டம் கைவிடப் பட்டது. இத் திட்டத்தில் உள்ள குறைகளை நீக்குவதற்காக, நிகர ரொக்கத்தன்மை விகிதமுறை (Net Liquidity Ratio System) கொண்டுவரப்பட்டது.

## நிகர ரொக்கத்தன்மை வீதம் (Net Liquidity Ratio)

1964 செப்டம்பரில் இம் முறை கொண்டுவரப்பட்டது. வங்கிகளிடம் உள்ள மொத்த ரொக்கம், ரிசர்வ் பாங்கிடமும் பிற அறிவிக்கப்பட்டுள்ள வங்கிகளிடமும் வங்கிகள் வைத்துள்ள ரொக்க இருப்பு, நடப்புக் கணக்கில் பிற வங்கிகளிடம் வைத்துள்ள ரொக்க இருப்பு, அரசாங்க ஆவணங்கள் மற்றும் அங்கீகரிக்கப் பட்ட ஆவணங்களில் செய்த முதலீடு ஆகியவை சேர்ந்த கூட்டுத் தொகையில் ரிசர்வ் பாங்க், ஸ்டேட் பாங்க், தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவற்றிடமிருந்து பெற்ற கடனைக் கழித்தால் கிடைப் பதே நிகர ரொக்கத்தன்மை விகிதம் ஆகும். சுருங்கச் சொன்னால், சட்டமுறை ரொக்கத்தன்மை வீதத்திலிருந்து ரிசர்வ் பாங்க், ஸ்டேட் பாங்க், தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவைகளிடமிருந்து பெற்ற கடனைக் கழித்தால் கிடைப்பதே நிகர ரொக்கத்தன்மை விகிதம் ஆகும்.

அதாவது,

நிகர ரொக்கத்தன்மை = சட்டமுறை ரொக்கத்தன்மை வீதம் – ரிசர்வ் பாங்க், ஸ்டேட் பாங்க், தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவற்றிடமிருந்து பெற்ற கடன்.

குறைந்தபட்ச நிகர ரொக்கத்தன்மை விகிதம் 28% ஆக இருந்தது. இந்த 28%-லிருந்து குறையும் ஒவ்வொரு விழுக்காட் டிற்கும் வங்கிகள் தாங்கள் ரிசர்வ் பாங்கிடமிருந்து வாங்கிய முழுக் கடனுக்கும் $\frac{1}{2}$ சதவிகிதம் அதிக வட்டியைச் செலுத்த வேண்டும்.

வெளிநாட்டு வங்கிகள், ரூபாய் 50 கோடி அல்லது அதற்குமேல் கேட்பு, தவணைப் பொறுப்புகளைப் பெற்றுள்ள அட்டவணையிலிட்ட இந்திய வங்கிகள், தாங்கள் கொடுக்கும் கடன்களின்மீது, உயர்ந்த அளவு வட்டி 9% வசூலிக்க வேண்டும் என்று வரையறுக்கப் பட்டது. வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் அதிக வட்டி கொடுத்துக் கடன் வாங்குவதை ஊக்குவிக்கக் கூடாது என்று ரிசர்வ் பாங்க் இவ்வாறு செய்தது. இத் திட்டம், முந்தைய திட்டத்தைவிடப் பல்வேறு வகையிலும் நல்ல திட்டம் என்று கருதப்படுகிறது. நிகர ரொக்கத்தன்மை விகிதத்தில் 1965 பிப்ரவரியிலும், 1970 பிப்ரவரியிலும், 1970 ஏப்ரலிலும் மாறுதல்கள் செய்யப்பட்டன.

1970 ஏப்ரல் 24-ல் நிகர ரொக்கத்தன்மை விகிதம் 32% ஆக ஆக்கப்பட்டது. இந்த 32%-லிருந்து ஒரு விழுக்காடோ அல்லது அதன் ஒரு பகுதியோ குறைந்தால், வங்கிகள் ரிசர்வ் பாங்கிடமிருந்து வாங்கிய கடன்களுக்கு பாங்க் விகிதத்தைவிட 1% அதிகமான வட்டியைக் கொடுக்க வேண்டும். ஆனால் இத்தகைய தண்டனை விகிதங்கள் (Penal rates), வங்கிகள் தாங்கள் ரிசர்வ் பாங்கிடமிருந்து பாங்க் விகிதத்தில் எவ்வளவு கடன் வாங்கலாம் என்று உரிமையிருக்கிறதோ அதற்குமேல் வாங்கும் கடன்களுக்கே பொருந்தும்.

### அண்மைக்கால நிகழ்ச்சிகள்

வங்கிகள் அதிக ரொக்கம் பெற்றிருப்பதாக ரிசர்வ் பாங்க் கருதியதால், வங்கிகளின் கடன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த விரும்பியது. இதனால் 1973 ஜூன் 29ஆம் நாளிலிருந்து 39% ஆக இருந்த நிகர ரொக்கத்தன்மை வீதம் 1973 செப்டம்பர் 8ஆம் நாள் 40% ஆக ஆக்கப்பட்டது. இந்த 40 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடோ அல்லது ஒரு பகுதியோ குறைந்தால், வங்கிகள் பாங்க் வீதத்தைவிட ஒரு விழுக்காடு அதிகவட்டி கொடுக்க வேண்டும். 36%-க்குக் குறைந்தால், 1973 நவம்பர் வரையில் 12% உயர்ந்த அளவு வட்டி வசூலிக்கப்பட்டது. பின்னர் இவ் வட்டி 15%-க்கு உயர்த்தப்பட்டது. 1974 ஜூலை 22-ல் 7%-லிருந்து 9%-க்கு பாங்க் வீதம் உயர்த்தப்பட்டபோது, நிகர ரொக்கத் தன்மை வீதத்தில் மாறுதல் செய்யப்படவில்லை. ஆனால், உயர்ந்த அளவு வட்டி, 18% ஆக நிருணயிக்கப்பட்டது.

கீழ்க் குறிப்பிட்டவாறு நிகர ரொக்கத்தன்மை வீதத்தில் மாறுதல்கள் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| செப்டம்பர், | 1964 | 28% |
| பிப்ரவரி, | 1965 | 30% |

| | | |
|---|---|---|
| பிப்ரவரி, 18, | 1970 | 31% |
| ஏப்ரல், 24, | 1970 | 32% |
| ஆகஸ்ட், 28, | 1970 | 33% |
| சனவரி, 29, | 1971 | 34% |
| நவம்பர், 17, | 1972 | 36% |
| மார்ச்சு, 30, | 1973 | 37% |
| சூன், 29, | 1973 | 39% |
| செப்டம்பர், 8, | 1973 | 40% |

**சட்டமுறைக் காப்பு ரொக்க விகிதம்-அண்மைக்கால மாறுதல்கள்**

அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள், ரிசர்வ் பாங்கிடம் சட்டமுறைப்படி வைத்திருக்க வேண்டிய காப்பு ரொக்க விகிதம் (statutory cash reserve ratio) 1973 சூன் 29-லிருந்து ஓராண்டுக் காலத்திற்கு 3%-லிருந்து 5%-க்கு உயர்த்தப்பட்டது. இவ்வாறு கூடுதலாக வைக்கப்படும் வைப்புகளுக்கு, ஓராண்டிற்கு 4.75% வட்டி தர ரிசர்வ் பாங்க் இசைந்தது. 1974 ஏப்ரல் 1ஆம் நாள் முதல் 5.25 வட்டி தர ரிசர்வ் பாங்க் முன் வந்தது. 1973 செப்டம்பர் எட்டாம் நாள் 5 விழுக்காட்டிலிருந்து 6 விழுக்காட்டிற்குச் சட்ட முறைக் காப்பு ரொக்க விகிதம் உயர்த்தப்பட்டது. 1973 செப்டம்பர் 22-ல், 6 விழுக்காட்டிலிருந்து 7 விழுக்காட்டிற்கு உயர்த்தப்பட்டது. 1974 செப்டம்பர் இறுதிவரை, இந்த 7% அமலில் இருக்கும் என்று ரிசர்வ் பாங்க் அறிவித்தது.

இவ்வாறு 1973 சூனில் 3% ஆக இருந்த காப்பு ரொக்க விகிதம், 1973 செப்டம்பரில் 7% ஆக உயர்த்தப்பட்டதால், சுமார் 416 கோடி ரூபாய் ரிசர்வ் பாங்கில் முடங்கியது. அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளின் தற்போதுள்ள மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்புகளைப் பார்க்கும்போது 1% சட்டமுறைக் காப்பு ரொக்க விகிதம் உயர்த்தப்பட்டால், சுமார் 100 கோடி ரூபாய் ரிசர்வ் பாங்கில் முடங்கிவிடும்.

1973 சூனில் உயர்த்தப்பட்ட 2% சட்டமுறைக் காப்பு ரொக்கம் 1974 சூன் 29-லிருந்து தேவையில்லை என்று ரிசர்வ் பாங்க் அறிவித்தது (ஆனல் 1974 சூன் 29-லிருந்து சட்டமுறை ரொக்கத் தன்மை விகிதம் 32%-லிருந்து 33%-க்கு உயர்த்தப் பட்டது). 1974 செப்டம்பரோடு முடியும் கூடுதல் 2% சட்ட முறைக் காப்பு ரொக்க விகிதம், அத் தேதியிலிருந்து புதுப்பிக்கப் படும் என்றும் ரிசர்வ் பாங்க் அறிவித்துள்ளது. ஆகவே, சட்ட

முறைக் காப்பு ரொக்க விகிதம் தற்போது 5% ஆக உள்ளது. 1973 சூன்வரை இவ் விகிதம் 3% ஆக இருந்தது என்பதை இங்கு வலியுறுத்திக் கூறத் தேவையில்லை.

## நிதியியல் கொள்கையில் மாறுதல்கள்

1. நிதியியல் கொள்கையில் செய்யப்பட்ட மாறுதல்கள் திடீரெனச் செய்யப்பட்டவை அல்ல; 1970-லிருந்தே ரிசர்வ் பாங்க் படிப்படியாக, ஒன்றன்பின் ஒன்றாகப் பல கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கியது.

2. நிதியியல் கொள்கைகளில் செய்யப்பட்ட இத்தகைய மாறுதல்கள் பண அளிப்பில் ஏற்படும் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவும், முடிந்த அளவுக்குப் பணவீக்கத்தால் ஏற்படும் விளைவுகளைக் குறைக்கவும் ஆகும்.

3. இதுவரை பாங்க் வீதம் போன்ற கருவிகளே அதிகம் பயன்படுத்தப்பட்டன. ஆனால் முதல்முறையாக ரிசர்வ் பாங்கிடமிருந்து வங்கிகள் பெறக்கூடிய மொத்த உயர்ந்த அளவுக் கடன் அளவுகள் வரையறுக்கப் பட்டுள்ளன.

4. இம் மாறுதல்களினால் வங்கிகளின் வாடிக்கையாளர் களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களை ரிசர்வ் பாங்க் தெரிந்துகொண்டு அவைகளை நீக்க முயற்சி செய்கிறது.

5. வங்கிகளில் உள்ள கடன் கொடுக்கக்கூடிய பணம் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக, அவ்வப்போது ரிசர்வ் பாங்க் சில வழிமுறைகளையும் வகுத்து வருகிறது.

1972 சூலைத் திங்கள் முதல் டிசம்பர்த் திங்கள் வரை வங்கி களுக்குக் கடன் அவ்வளவாகத் தேவைப்படாததால் ரிசர்வ் பாங்கின் நிதிக் கொள்கையில் யாதொரு மாறுதலும் செய்யப்பட வில்லை. ஆனால், போகப்போக வங்கிகளின் கடன்பெருக்கம் அதிக மானதால், கடன் கொள்கையில் மாறுதல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1972 ஆகஸ்ட் திங்கள் 4ஆம் நாள் 29 விழுக்காடாக இருந்த சட்டமுறை ரொக்கத்தன்மை வீதம் 1972 நவம்பர் திங்கள் 17ஆம் நாள் 30 விழுக்காட்டிற்கு உயர்த்தப்பட்டது. மேலும், ரிசர்வ் பாங்கிடம் பெறக்கூடிய கடன்வீதத்தை நிருணயிக்கும் நிகர

ரொக்கத்தன்மை வீதம் 36 விழுக்காட்டிற்கு உயர்த்தப்பட்டது. அப்படி இருப்பினும் வங்கிகளிடம் அதிக அளவில் ரொக்க இருப்புகள் இருந்ததால் போட்டி போட்டுக்கொண்டன.

1973 சனவரிக்குப் பிறகு வங்கிகளின் கடன் பெருக்கம் அதிகமானதால், ரிசர்வ் பாங்க் 1973 மார்ச் திங்கள் 17ஆம் நாள், மேலும் வங்கிகளின் கடன்பெருக்கத்தை ஒடுக்கியது.

1. இந் நடவடிக்கைகளினால், ரிசர்வ் பாங்கிடம் மறுநிதி வசதி பெற வங்கிகள் நெருங்க முடியாமல் போயின.

2. பொதுமக்களிடமிருந்து பெறும் வைப்புகள் மீதான வட்டியை, ரிசர்வ் பாங்க் அதிகமாக்கியது. ஆகவே, 1973 மார்ச் 30ஆம் நாள் முதல் நிகர ரொக்கத்தன்மை விகிதம் (36-லிருந்து 37 விழுக்காடாக) ஆனது.

மேற்கூறிய நடவடிக்கைகளை மேற்கொண்ட பிறகும் கடன் பெருக்கம் அதிகமாகிக்கொண்டே இருந்ததால் மேலும் கடுமையான நடவடிக்கைகளை 1973 மேத் திங்கள் 3ஆம் நாள், ரிசர்வ் பாங்க் மேற்கொண்டது. 1973 மேத் திங்கள் 31ஆம் நாள், பாங்க் வீதம் 6 விழுக்காட்டிலிருந்து 7 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 42 (1)-ன்படி அட்டவணையிலிட்ட வங்கிகள் வைக்க வேண்டிய ரொக்க இருப்புகள் வீதம் 3 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காட்டிற்கு உயர்த்தப்பட்டது. இப்படிக் கூடுதலாக வைக்கப்படும் தொகைக்கு ரிசர்வ் பாங்க் 4·75 விழுக்காடு வட்டி தர இசைந்தது. 1973 சூன் 29ஆம் நாள் நிகர ரொக்கத்தன்மை விகிதம் 37 விழுக்காட்டிலிருந்து 39 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. மேலும், 1973 சூன் 1ஆம் நாளிலிருந்து வங்கிகள் கொடுக்கும் கடனுக்குக் குறைந்த அளவுக் கடன்வீதம் 10 விழுக்காடாக நிருணயிக்கப்பட்டது.

1973 நவம்பரில் ரிசர்வ் பாங்க் வங்கிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தையின்படி ரிசர்வ் பாங்கிடம் வங்கிகள் மறுநிதி வசதிகளை இதுவரை பெற்றுவந்ததுபோலத் தங்கள் விருப்பப்படி பெறமுடியா.

1973 நவம்பர் 16ஆம் நாள், ரிசர்வ் பாங்க் வங்கிகளுக்கு அனுப்பிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

(1) முன்பே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்வதோடு வங்கிகளின் கடன் கொடுக்கும் திறனை மேலும் குறைப்பதாக ரிசர்வ் பாங்கின் கடன் கொள்கை இருந்தது.

(2) கடன் பெருக்கத்தின் மீதான விரும்பத்தகுந்த கட்டுப் பாடுகளை வெற்றியடையச் செய்யமுடியும் என்று ரிசர்வ் பாங்க் கருதியது.

(3) ரிசர்வ் பாங்க் மதிப்பிட்டபடி, வங்கிகள் ஓரளவுக்குத் தேவைக்கும் அதிகமான பணத்தைப் பெற்றிருக்கலாம்; ஆகையால், வங்கிகள் இந்த அதிகப் பணத்தை முதலீடு செய்யப் பயன் படுத்தலாம்.

(4) மேற்கூறப்பட்ட அதிகப் பணத்தை வங்கிகள் கடன் பெருக்கத்திற்குப் பயன்படுத்த எண்ணினால் ரிசர்வ் பாங்க் அவ்வாறு செய்யமுடியாமல் செய்துவிடும்.

(5) எப்போதும் வங்கிகள் கடன் வாங்குவதுபோல் ரிசர்வ் பாங்கிடம் வாங்க முடியாது. ரிசர்வ் பாங்க் விருப்பப்பட்டால் தான் கடன் கொடுக்கும்.

மேலும், வங்கிகள் தங்களிடம் கடன் கொடுப்பதற்காக வைத்துள்ள பணம் நல்ல முறையில் பயன்படுவதற்காகச் சில வழி முறைகளையும் ரிசர்வ் பாங்க் வகுத்துள்ளது.

(1) ஏற்றுமதி, உணவுத் தானியங்கள் கொள்முதல், விவசாயம், சிறு தொழில்கள், மற்றும் சிறு கடனாளிகளின் தேவையை நிறைவு செய்யும் வகையில் வங்கிக்கடன் அமைய வேண்டும்.

(2) பொறுக்குக்கடன் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள பொருள்களின்மீது அக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டும்.

(3) அத்தியாவசியப் பொருள்கள் உற்பத்திக்கும், தேவையான கடனைக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

(4) 1 கோடி ரூபாய்க்கும் அதிகமான கடன்கள் ரிசர்வ் பாங்கால் அங்கிகரிக்கப்பட வேண்டும்.

போட்டி காரணமாக வட்டி வீதத்தைக் குறைப்பதைத் தடுக்குமாறு, 1972 டிசம்பர்த் திங்களில் ரிசர்வ் பாங்க் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு அறிவுரை கூறியது. மேலும், 25 இலட்சம் ரூபாய் அல்லது அதற்குமேல் கடன் கொடுக்கும் போது பிற வங்கிகள் எந்த வட்டி வீதத்தில் கடன் கொடுக்கத் தயாராயிருக்கின்றனவோ அந்த விகிதத்திற்குக் குறைவாகக் கடனளிக்கக்கூடாது. 1973 சனவரியில் மற்றொரு சுற்றறிக்கை மூலம், 75 இலட்ச ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட கடன்களைப்

பொறுத்தவரை, எல்லா வங்கிகளும் கலந்தாலோசித்த பின்னர், ரிசர்வ் பாங்கின் அனுமதி பெற்று அக் கடனைக் கொடுக்கலாம்.

1973 சூலையில் ரிசர்வ் பாங்க் வணிக வங்கிகளை அவைகளின் கடனைக் கட்டுப்படுத்துமாறு கேட்டுக்கொண்டது. 1973 சூலை 13ஆம் நாளிலிருந்து சலுகை முறையில் அளிக்கப்பட்ட மறுநிதி வசதிகளை ரிசர்வ் பாங்க் நிறுத்திக்கொண்டது.

1973-ல் நிகர ரொக்கத்தன்மை விகிதம் அமலில் இருந்த போதிலும், ரிசர்வ் பாங்க் கடனைக் கட்டுப்படுத்த விரும்பியபோது, நிகர ரொக்கத்தன்மை விகிதத்தின் குறைபாடுகள் தெரிந்தன.

முதலாவதாக, ரிசர்வ் பாங்க் முந்துரிமைத் துறைக்குக் கடன் கொடுத்ததைப் பயன்படுத்தி வணிக வங்கிகள் தொடர்ந்து ரிசர்வ் பாங்கிடம் கடன் பெற்று வந்தன.

இரண்டாவதாக, வங்கிகள் அதிக வட்டி கொடுத்து ரிசர்வ் பாங்கிடம் கடன் பெற விரும்பினால், எவ்வளவு கடன் வாங்கினாலும் அவற்றை ரிசர்வ் பாங்க் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருந்தது.

ஆகவே சூலைத் திங்களில், ரிசர்வ் பாங்க் கொடுத்து வந்த எல்லா மறுநிதி வசதிகளையும் நிறுத்தியது. அந் நாளிலிருந்து ரிசர்வ் பாங்க் விருப்பப்பட்டால்தான் வணிக வங்கிகளுக்குக் கடன் கொடுக்கலாம். 1973 நவம்பர் 30-ல், ரிசர்வ் பாங்க் கீழ்க்கண்டவாறு வணிக வங்கிகள் வாங்கக்கூடிய அதிக அளவுக் கடன் அளவுகளை வரையறுத்தது:

(1) 1973ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 8ஆம் நாளிலிருந்து 1974ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 11ஆம் நாள் வரையிலுள்ள கால அளவிற்கு, 1973ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 28ஆம் நாளன்று இருந்த மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்புகளில் $1\frac{1}{2}\%$

(2) 1974ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 12ஆம் நாளிலிருந்து 1974ஆம் ஆண்டு ஏப்ரல் 5ஆம் நாள் வரையிலுள்ள கால அளவிற்கு, 1973ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 28ஆம் நாளன்று இருந்த மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்புகளில் 2%.

(3) 1974ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ஆம் நாளிலிருந்து 1974ஆம் ஆண்டு மேத்திங்கள் 31ஆம் நாள் வரையிலுள்ள கால அளவிற்கு 1973ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 28ஆம் நாள் அன்று இருந்த மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்புகளில் 1%.

(4) 1974 ஜுன் 1ஆம் நாளிலிருந்து 1974 அக்டோபர் 31ஆம் நாள் வரையிலுள்ள கால அளவுக்கு 1974 மார்ச்சு 29ஆம் நாளன்று இருந்த மொத்த கேட்பு, தவணைப் பொறுப்புகளில் 1%.

**1973 - 74 - ல்** (ஜுலை-ஜுன்) கடன் கொள்கை மேலும் இறுக்கப்பட்டது. **1973** ஜுலையிலிருந்து பாங்க் வீதத்தில் அல்லது பாங்க் வீதத்திற்குக் குறைவான வீதத்தில் மறுநிதி வசதிகள் அளிப்பதை ரிசர்வ் பாங்க் நிறுத்தியது. சட்டமுறைக் காப்பு ரொக்க விகிதம் 1973 செப்டம்பர் 8-ல் 5%-லிருந்து 6%-க்கும், 1973 செப்டம்பர் 22-ல் 6%-லிருந்து 7%-க்கும் உயர்த்தப் பட்டது. 1973 செப்டம்பர் 8-லிருந்து நிகர ரொக்கத்தன்மை வீதம் 39%-லிருந்து 40%-க்கு உயர்த்தப்பட்டது. 1973 டிசம்பர் 8-லிருந்து சட்டமுறை ரொக்கத்தன்மை வீதம் 30%-லிருந்து 32%-க்கு உயர்த்தப்பட்டது. 1973 நவம்பர் 16-லிருந்து நிகர ரொக்கத்தன்மை வீதம் 33%-க்குக் குறைந்தால் வங்கிகள் ரிசர்வ் பாங்கிடமிருந்து பெறும் கடனுக்குக் கொடுக்க வேண்டிய வட்டி வீதம் 12%-லிருந்து 15%-க்கு உயர்த்தப்பட்டது. வங்கிகள் தங்கள் வாடிக்கையாளருக்குக் கொடுக்கும் கடன்களுக்கு வசூலிக்கும் வட்டி வீதம் 10%-லிருந்து 11%-க்கு 1973 டிசம்பர் முதல் நாளிலிருந்து உயர்த்தப்பட்டது. 1974 ஏப்ரல் 1, 1974 ஜுலை 23 ஆகிய தேதிகளில் வைப்புகளுக்கான வட்டிவீதம் உயர்த் தப்பட்டது. 1973 ஜுனில் உயர்த்தப்பட்ட 2% கூடுதல் சட்ட முறைக் காப்பு ரொக்க வீதம் 1974 ஜுன் 29-லிருந்து தேவையில்லை என்று ரிசர்வ் பாங்க் அறிவித்தது. சட்டமுறை ரொக்கத்தன்மை வீதம் 1974 ஜுன் 29-லிருந்து 32%-லிருந்து 33%-க்கு உயர்த்தப் பட்டது. 1974 செப்டம்பரோடு முடிவுறும் 2% கூடுதல் சட்ட முறைக் காப்பு ரொக்க வீதம் அத் தேதியிலிருந்து புதுப்பிக்கப்படும் என்றும் ரிசர்வ் பாங்க் அறிவித்தது. ஒவ்வொரு வங்கியையும் தனது மிகப் பெரிய 50 கடனாளிகளின் கணக்குகளைக் கவனத்துடன் கண்காணித்து வருமாறு எல்லா அட்டவணையிலிட்ட பெரிய வணிக வங்கிகளையும் 1974 ஜுலை 4-ல் ரிசர்வ் பாங்க் கேட்டுக் கொண்டது. கடன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மேலும் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1974 ஜுலை 23-லிருந்து பாங்க் வீதம் 9% ஆகும். வங்கிகள் தங்கள் வாடிக்கை யாளருக்குக்கொடுக்கும் கடனுக்கு வசூலிக்கும் வட்டிவீதம் 11%-லிருந்து $12\frac{1}{2}$%-க்கு உயர்த்தப்பட்டது; பொறுக்குக் கடன் கட்டுப் பாட்டுக்குட்பட்ட பொருள்கள் பேரில் கொடுக்கும் கடனுக்கான வட்டி 13%-லிருந்து 15%-க்கு உயர்த்தப்பட்டது. நிகர ரொக்கத் தன்மை வீதம் 1973 செப்டம்பர் 8-லிருந்து தொடர்ந்து 40%

ஆகவே இருப்பினும், ரிசர்வ் பாங்க் வசூலிக்கும் உயர்ந்தபட்ச வட்டிவீதம் 1974 ஜூலை 23-ல் 15% லிருந்து 18% க்கு உயர்த்தப் பட்டது. இந்த 40% நிகர ரொக்கத்தன்மை வீதம் உள்ளவரை பாங்க் வீதத்தில் கடன் பெறலாம். ஆனால் 40% லிருந்து 1% அல்லது 1%-ல் ஒரு பகுதியோ குறைந்தால், அவ்வாறு குறையும் ஒவ்வோர் 1% அல்லது அதன் பகுதிக்கு பாங்க் வீதத்தைவிட 1% அதிக வட்டி கொடுக்க வேண்டும்.

# 6. ரிசர்வ் பாங்கும் பொறுக்குக்கடன் கட்டுப்பாடும்

## (Reserve Bank of India and Selective Credit Control)

கடன்கணியக் கட்டுப்பாட்டு முறைகள் கடன்கிடைக்கக் கூடிய அளவையும் கடன்மீதான வட்டியையும் மட்டும் பாதிக்கின்றனவேதவிர கடன் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை அல்ல. பாங்க் வீதம் வட்டிவீதத்தையும், வெளி அங்காடி நடவடிக்கை, காப்பு ரொக்க விகித மாறுதல்கள் ஆகியவை வங்கிகளின் ரொக்கஇருப்பையும் பாதிக்கின்றன. வங்கியிலிருந்து கடன் பெறுவோர் அனைவருமே கடனை நல்வழியில் பயன்படுத்துவதில்லை. பொருளாதாரத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடிய அல்லது அவசியமற்ற தேவைகட்கும், கடன் பயன்படுத்தப் படலாம். இந்தியாவில் பணவீக்கம் (inflation) உள்ளதால், கடன் சரியான முறையில் பயன்படுத்தப்படாவிடில், பல தீய விளைவுகள் ஏற்படும். சான்றாக, வங்கிக்கடன் தாராளமாகக் கிடைத்தால் வங்கிகளிடமிருந்து கடன்பெற்றுச் சரக்குகளைப் பதுக்கி வைப்பதிலேயே ஒரு கூட்டம் முனைந்திருக்கும். மேலும், ஊக வணிக (Speculative business) நோக்கங்களுக்கும் கடன் பயன் படுத்தப்படலாம். இத்தகைய சூழ்நிலைகளில் சமுதாயத்தில் விரும்பத்தக்க நோக்கங்களுக்கும், பொருளாதாரத்திற்குப் பயன் தரும் நோக்கங்களுக்கும் வங்கிக்கடன் பயன்பட பொறுக்குக் கடன் கட்டுப்பாடு அவசியம் தேவைப்படுகிறது.

வங்கிக்கடன் தவறான வழியில் பயன்படுத்தப்படாமல் ரிசர்வ் பாங்க் கவனித்துக் கொள்ளவேண்டும். பல்வேறுபட்ட கடனாளிகளுக்கும், நோக்கங்களுக்கும் இடையே இருக்கும் வேறுபாடுகளை ரிசர்வ் பாங்க் உணரவேண்டும். ஊக வணிக நோக்கங்களுக்கு வங்கிக்கடன் கிடைக்காமல் இருக்கிறதா என்று கவனிப்பதோடல்லாமல் உண்மையான வியாபாரத் தொழில் தேவைகளுக்குக் கடன்பெற முடிகிறதா என்றும் கவனித்துச்

கொள்ள வேண்டும். நாணயமுள்ள கடனாளியையும் (sound borrower) நாணயமற்ற கடனாளியையும் (unsound borrower) வேறுபடுத்திக் கண்டறியத் தெரிந்தவரே, நல்ல பாங்கர் ஆவார் என்று சேயர்ஸ் (R. S. Sayers) கூறியுள்ளார்.

முன்னேறிய நாடுகளில்கூட பொறுக்குக்கடன் கட்டுப் பாட்டின் அவசியம் நன்கு உணரப்படுவதால்தான், தற்போது இம் முறையை மேன்மேலும் பயன்படுத்துகின்றனர். ஜான் மதாய் (John Mathai) கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறார்:

அவசியமற்றவைக்குப் பணத்தைக் கட்டுப்படுத்துவதும் அவசியமானவைக்குப் பணத்தை வெளியிடுவதும் மைய வங்கியின் விவேகமான ஒரு கொள்கையாகும்.

பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டின்படி ரிசர்வ் பாங்க் முறைதவறி நடக்கும் ஒரு வணிக வங்கியையோ அல்லது பொது வாக எல்லா வங்கிகள்மீதோ நேரடி நடவடிக்கைகளை எடுக்க லாம். அல்லது பொதுவாக வங்கிகளுக்குக் கடனளிப்பது மற்றும் முதலீடு செய்வதுபற்றித் தன் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம். குறிப்பிட்ட சிலவகை வங்கிக் கடன்கள்மீது தடைவிதிக்கலாம். இதனால் வங்கிகளிடமிருந்து கடன் வாங்குவோர், குறிப்பிட்ட சில காரணங்களுக்கோ அல்லது குறிப்பிட்ட சில ஆவணங்கள் பேரிலோ கடன் வாங்க இயலாது.

பாங்கு வீத மாற்றங்கள் ரிசர்வ் பாங்கிடம் கடன்பெறும் எல்லா வங்கிகளையும் பாதிக்கிறது. வெளி அங்காடி நட வடிக்கைகள் வங்கிகளையும் பணச்சந்தையையும் பாதிக்கின்றன. ஆனால் நேரடி நடவடிக்கையானது குறிப்பிட்ட ஒரு வங்கிமீது நேரடியாக நடவடிக்கை எடுப்பதைக் குறிக்கும். இதற்காக மைய வங்கி சட்டமுறைப்படி அதிகாரம் பெற்றிருக்கவேண்டும்.

எந்தக் கடன்துறைமீது பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டு நட வடிக்கை எடுக்கப்படுகிறதோ, அந்தக் கடன் துறையின் அளவைப் பொறுத்ததே பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டின் வெற்றியும் தோல்வியும். மைய வங்கியானது, வங்கிகளின் கடன் கொள்கையை மட்டுமே கட்டுப்படுத்தி வரும்போது, மற்றொரு பகுதி மையவங்கியின் ஆதிக்கத்திற்கப்பாற்பட்டிருந்தால், பொறுக்குக்கடன் கட்டுப்பாடு அவ்வளவு செம்மையாகச் செயல்படமுடியாது. ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடு களில், இத்தகைய நிலைமையே நிலவுகிறது. இந்தியப் பணச் சந்தையும் இரு கூறாக இருப்பதால் இந்தியாவிலும் பொறுக்குக் கடன் கட்டுப்பாட்டின் தன்மை செம்மையாக அமையவில்லை.

பொறுப்புள்ள வங்கிகளாக இருந்தாலும் வங்கிகளின் எண்ணிக்கை அதிகமாக இல்லாதிருந்தாலும் பொறுக்குக்கடன் கட்டுப்பாடு சிறப்பாகச் செயல்படமுடியும். ஆனல், இந்தியாவிலோ பொறுப்பை உணராத சிறிய வங்கிகள் பரந்து நிறைய காணப்படு வதால் பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டை அவ்வளவாக நடை முறையில் செயல்படுத்த முடியவில்லே. மேலும் வியாபாரிகள் ஒன்றுக்கு மேற்பட்ட சரக்குகளில் ஈடுபட்டிருப்பின், பொறுக்குக் கடன் கட்டுப்பாட்டின்கீழ் ஒரு குறிப்பிட்ட பொருளுக்குக் கடன் கிடையாதென்றல், வேறொரு பொருள்மீது கடன்பெற்று விரும்பத் தகாத வழியில் அக் கடனைப் பயன்படுத்தலாம்.

இத்தகைய வரையறைகள் (limitations) இருப்பினும், பொறுக்குக்கடன் கட்டுப்பாடு பெரும்பாலும் வெற்றிகரமாகவே அமைகிறது. எது எப்படி இருப்பினும் பொறுக்குக்கடன் கட்டுப் பாடு இன்றேல் பொருள்களின் விலே இன்னும் அதிகமாக இருக்கும். நெகிழ்ச்சியுடைய (flexible) மற்றும் உடனடியாகப் பயன்படுத்தப்படக்கூடிய ஒரு கருவியாக பொறுக்குக் கடன் கட்டுப்பாடு விளங்குகிறது.

கடன் கணியக்கட்டுப்பாட்டின் படியும் பொறுக்குக் கடன் கட்டுப்பாட்டு முறையைக் கையாளலாம். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் முந்துரிமைத் துறைகளுக்கு (விவசாயம், ஏற்றுமதி, சிறுதொழில்கள் ஆகியவை) கொடுக்கும் கடன்களுக்கு வட்டி வீதங்களில், ரிசர்வ் பாங்க் சலுகை காட்டுகிறது. மேற்கத்திய நாடுகளில் நீடித்த நுகர்வுப் பொருள்களின் (durable consumer goods) தேவை அவைகளின் அளிப்பைவிட அதிகரித்தால், அதனல் உண்டாகும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தப் பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டைப் பயன்படுத்துகிறார்கள். அமெரிக்காவில் பங்கு அங்காடிக்குக் கொடுக்கப்படும் கடனைக் கட்டுப்படுத்தவும், இம் முறையைப் பயன்படுத்துகிறார்கள். இந்தியாவைப் பொறுத்த வரை, உணவுப் பொருள்கள் மற்றும் இன்றியமையாத கச்சாப் பொருள்கள் ஆகியவைகளைப் பதுக்கி வைப்பதால் ஏற்படும் விலே உயர்வைத்தடுப்பதற்காக, இம் முறை பயன்படுத்தப்படுகிறது. பொறுக்குக்கடன் கட்டுப்பாடு, பொதுக்கடன் கட்டுப்பாட்டிற்கு ஒரு பயனுள்ள சேர்க்கை ஆகும். பொறுக்குக்கடன் கட்டுப் பாடும் பொதுக்கடன் கட்டுப்பாடும் சேர்ந்து பயன்படுத்தப்படும் பொழுது, பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டின் திறன் அதிகமா கிறது. பொதுக்கடன் முறைகளைப் பாதிக்காமல், ஒருசில இடங்களில் மட்டுமே காணப்படும் உபரிக்கடனைக் கட்டுப்படுத்த, பொறுக்குக்கடன் கட்டுப்பாடு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. தேவையும் அளிப்பும் சந்திக்குமிடத்தில் விலே நிருணயிக்கப்

படுகிறது என்பது உலகறிந்த பொருளாதார உண்மையாக இருந்தாலும், அளிப்பு மிகக்குறைவாக இருந்தால், பொறுக்குக்கடன் கட்டுப்பாடுகள், விலைஉயர்வை ஓரளவு கட்டுப்படுத்துமேயொழிய விலைஉயர்வைத் தடுத்து நிறுத்தாது.

நமது நாட்டைப்போன்ற வளர்ந்துவரும் நாடுகளில், அரசாங்கம் பொருளாதார முன்னேற்றத்திற்காக, திட்டங்களின் கீழ் அதிகமாகச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. இதனால் ஏற்படும் பணப்பெருக்கத்தின் விளைவுகளைக் குறைக்க, பொறுக்குக் கடன்கட்டுப்பாட்டின் அவசியம் உணரப்படுகிறது. ஊக வணிக நோக்கங்களுக்காக (speculative-purposes) அத்தியாவசியப் பொருள்கள் பதுக்கிவைக்கப்படும்போது, அவைகளின் சந்தை விலை உயருகிறது. ஆகையால் ஊகவணிக நோக்கங்களுக்குக் கிடைக்கும் கடனைக் கட்டுப்படுத்துவது, பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டின் மிக முக்கியமான குறிக்கோளாகும்.

### ரிசர்வ் பாங்கும் பொறுக்குக்கடன் கட்டுப்பாடும்

1943-ம் ஆண்டு ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டத்தின் படி ரிசர்வ் பாங்கிற்கு எந்த ஒரு பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டு அதிகாரமும் கொடுக்கப்படவில்லை. 1946-ல் வங்கிகள் பெருமளவிற்குக் கம்பெனிப் பங்குகள், பங்குத்தொகுப்புகள் ஆகியவற்றின் மீது கடன் கொடுப்பதை ரிசர்வ் பாங்க் எச்சரித்தது. ஆனால் இத்தகைய எச்சரிக்கை சில வட்டாரங்களில் எடுபடவில்லை என்றும் அத்தகைய சூழ்நிலைகளில் நடவடிக்கை எடுக்க ரிசர்வ் பாங்கிற்கு அதிகாரம் இல்லை என்றும் ரிசர்வ் பாங்க் ஆளுநரே தெரிவித்தார். 1949-ல் வங்கிக் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் (Banking Companies Act) ரிசர்வ் பாங்கிற்குப் பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டின் மூலம் கடனைக் கட்டுப்படுத்த, நிறைய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன.

வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 21, வங்கிக் கம்பெனிகள் கொடுக்கும் கடனைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை ரிசர்வ் பாங்கிற்கு அளிக்கிறது. பிரிவு 21-ன் சரத்துகள் பின்வருமாறு:

பிரிவு 21 (1) பொது நலங்கருதி அல்லது வைப்பாளர் நலங்கருதி அல்லது வங்கிக்கொள்கை கருதி ரிசர்வ் பாங்க் பொதுவாக எல்லா வங்கிக் கம்பெனிகள் அல்லது குறிப்பிட்ட ஒரு வங்கிக் கம்பெனி கொடுக்கும் கடன் பற்றிய கொள்கைகளை வகுக்கலாம்.

அத்தகைய கொள்கைகளைச் சட்டப்படி எல்லா வங்கிகளுமோ அல்லது குறிப்பிட்ட வங்கியோ கட்டாயம் கடைப்பிடித்தே ஆக வேண்டும்.

(2) துணைப்பிரிவு (1) ல் மேற்குறிப்பிட்டபடி, ரிசர்வ் பாங்க் பொதுவாக எல்லா வங்கிக் கம்பெனிகளுக்கோ அல்லது ஒரு வங்கிக் கம்பெனிக்கோ அல்லது ஒரு வங்கிகளின் கூட்டத்திற்கோ (Group) தனது கட்டளைகளைக் கீழ்க்கண்டவாறு இடலாம்.

(அ) எக் காரணங்களுக்காகக் கடன் கொடுக்கலாம் அல்லது கொடுக்ககூடாது;

(ஆ) ஆவணங்களின் பேரில் கடன் தொடுக்கும் பொழுது இவ்வளவு விழுகாட்டிற்குக் குறையாமல் ஆவணங்களின் மதிப்பு இருக்க வேண்டும் என்று நிருணயித்தல்;

(இ) குறிப்பிட்ட ஒரு கம்பெனி, நிறுவனம், நபர்களின் கூட்டு (Association of persons) அல்லது தனி ஆளுக்கு ஒரு வங்கிக் கம்பெனியின் செலுத்திய முதல், காப்பு நிதி, வைப்புகள் ஆகியவற்றைப் பொறுத்து, அந்த வங்கிக் கம்பெனி அளிக்கக்கூடிய உயர்ந்தஅளவுக் கடனை நிருணயித்தல்;

(ஈ) குறிப்பிட்ட ஒரு கம்பெனி, நிறுவனம், நபர்களின் கூட்டு அல்லது தனிஆள் சார்பில் கொடுக்கக்கூடிய உச்ச அளவுப் பொறுப்புறுதியை நிருணயித்தல்.

(2) கடன் மற்றும் பொறுப்புறுதி மீதான நிபந்தனை, வட்டி விகிதம் ஆகியவற்றை நிருணயித்தல்.

வங்கிய ஒழுங்காற்று சட்டம் பிரிவு (35) A-ன் கீழ், ரிசர்வ் பாங்க் கீழ்க்கண்ட கட்டளைகளையும் பிறப்பிக்கலாம்.

(1) பொது நலங்கருதி அல்லது வங்கிக்கொள்கை நலங் கருதி அல்லது வைப்பாளர்களின் நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் முறையில் வங்கிக் கம்பெனியின் தொழில் நடத்தப்பட்டால் அதைத் தடுக்கவும் அல்லது பொதுவாக யாதொரு வங்கிக் கம்பெனியின் சரியான நிருவாகத்தை உண்டுபண்ணவோ, ரிசர்வ் பாங்க் ஒரு குறிப்பிட்ட வங்கிக் கம்பெனிக்கோ அல்லது எல்லா வங்கிக் கம்பெனிகளுக்குமோ அவ்வப்போது கட்டளையிடலாம். அத் தகைய கட்டளையைக் குறிப்பிட்ட வங்கிக் கம்பெனியோ அல்லது எல்லா வங்கிக் கம்பெனிகளுமோ கடைப்பிடித்தே தீர வேண்டும்.

வங்கியியல் ஒழுக்காற்றுச் சட்டம் பிரிவு 35 A (2) ன்படி மேற்கண்ட துணைப்பிரிவு (1) ல் கூறப்பட்ட அதிகாரங்களை ரிசர்வ் பாங்க் தானாகவோ அல்லது பிறர்சார்பிலோ எந்த ஒரு கட்டளையையும் நீக்கம் செய்யலாம் அல்லது திருத்தியமைக்கலாம். அவ்வாறு செய்யும்பொழுது ரிசர்வ் பாங்க் தான் சரி என்று நினைக்கின்ற எத்தகைய நிபந்தனைகளுக்கு, அந்த மாறுதல்கள், நீக்கங்கள் ஆகியவை உட்படும் என்பதையும் குறிப்பிடும்.

வங்கியியல் ஒழுங்காற்றுச்சட்டம் 36(1) (a)—ல் கூறப்பட்டபடி, பொதுவாக எல்லா வங்கிக் கம்பெனிகளையோ அல்லது ஏதாவது ஒரு வங்கிக் கம்பெனியையோ அவைகள் மேற்கொள்ளும் எந்த ஒரு குறிப்பிட்ட நடவடிக்கை அல்லது நடவடிக்கைகளின் தொகுப்பை (Class of transactions)ப் பற்றி எச்சரிக்கை அல்லது தடுக்க ரிசர்வ் பாங்கிற்கு அதிகாரம் உள்ளது.

வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம் பிரிவு 20 (3)-ன்படி எந்த ஒரு வங்கிக் கம்பெனியாவது வைப்பாளர்களின் நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் கடனோ, முன்கடனோ அளிக்குமாயின், ரிசர்வ் பாங்க் அவ் வங்கியை மேலும் அத்தகைய கடன்களைக் கொடுக்காமலிருக்குமாறு தடைசெய்யலாம். மேலும், அவ்வாறு முன்பே கொடுத்த கடனைக் குறிப்பிட்ட காலத்திற்குள் திரும்பப் பெறுமாறும் கட்டளையிடலாம்.

வங்கியியல் ஒழுங்காற்றுச்சட்டம், பிரிவு 36-ன்படி, ஒரு குறிப்பிட்ட வங்கிக் கம்பெனியோ அல்லது பொதுவாக எல்லா வங்கிக் கம்பெனிகளையுமோ ஒரு குறிப்பிட்ட அல்லது பொதுவான சில செயல்களில் ஈடுபடாதவாறு ரிசர்வ் பாங்க் தடைசெய்யலாம், அல்லது எச்சரிக்கலாம், வங்கிக் கம்பெனிக்குத் தனது மேலான அறிவுரைகளையும் வழங்கலாம்.

பொறுக்குக்கடன் கட்டுப்பாடானது கீழ்க்கண்ட முறைகளில் செயல்படுத்தப்படுகிறது.

1. குறிப்பிட்ட ஆவணங்களின் மீதான கடனின் குறைந்த அளவு வரம்பை (margin) நிருணயித்தல்;

2. இன்ன காரியங்களுக்கு, எவ்வளவு உச்ச அளவுக் (ceiling limit) கடன் கொடுக்கலாம் என்பதை நிருணயித்தல்;

3. குறிப்பிட்ட சிலவகைக் கடன்களுக்குப் பாரபட்ச வட்டி விகிதத்தை விதித்தல்.

ரிசர்வ் பாங்கின் பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை இருவகையாகப் பிரிக்கலாம்.

(1) 1956 மார்ச்சு வரையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

(2) 1956 மார்ச்சிலிருந்து மேற்கொள்ளப்பட்ட நட வடிக்கைகள்.

### 1956 மார்ச்சுக்கு முன்

பங்குச் சந்தை, பருத்திச் சந்தை, தங்கச் சந்தை ஆகிய வற்றில், ஊகவணிகம் (speculation) நடைபெறுவதைக் கவனித்த ரிசர்வ் பாங்க், 1943 ஜூலையில், அட்டவணையிலிட்ட வங்கிகளைப் பின்வருமாறு கேட்டுக் கொண்டது:

ஆலைகளுக்கு அல்லது தொழிற்சாலைகளுக்கு மறு விற்பனைக் காகச் சரக்கு வாங்குவதற்கு, வங்கிகள் கடன் கொடுப்பது பற்றியோ, வழக்கமான வியாபாரத்திற்காக வைத்திருக்கும் தங்கம், மற்றும் வெள்ளி பேரில், அங்கீகரிக்கப்பட்ட தங்க வியாபாரிகளுக்குக் கடன் கொடுப்பது பற்றியோ, மறுப்பு ஏதும் இல்லை. ஆனால், இத் தகைய கடன்கள் ஊகவணிக நோக்கங் களுக்காகக் கொடுக்கப்பட்டிருந்தால், பொது நலங்கருதி, அரசாங்கம், அக் கடன்களைத் தடை செய்ய நேரிடும்.

இது ரிசர்வ் பாங்க் வங்கிகளுக்குக் கொடுத்த ஓர் எச்சரிக்கையே ஆகும். பின்னர், 1947 சனவரியில், பங்குகள் பேரில் வங்கிகள் மிக அதிக அளவில் கடன் கொடுத்து வந்ததால், அக் கடன்களை ஒரு நியாயமான அளவிற்குக் கட்டுப்படுத்துமாறு ரிசர்வ் பாங்க் வங்கிகளைக் கேட்டுக் கொண்டது.

1949 செப்டம்பரில், ரூபாய் மதிப்புக் குறைப்பு (Rupee devaluation) செய்யப்பட்டபோது, ஊகவணிக நோக்கங் களுக்குக் கடன் கொடுக்காமல், உண்மையான வியாபாரத் தேவைகளுக்கு மட்டும் கடன் வழங்குமாறு, வங்கிகளை ரிசர்வ் பாங்க் கேட்டுக் கொண்டது. மேலும், ஓர் இலட்சத்திற்குமேல் கொடுக்கப்பட்டுள்ள கடன் அளவுகள் பற்றிய விபரத் தாக்கீதை ரிசர்வ் பாங்கிற்கு வங்கிகள் அனுப்ப வேண்டும். கொடுத்த கடன்கள் விரும்பத்தகாதவை என்று தெரிய வந்தால், அக் கடன்களைத் திரும்பப் பெறுமாறு வங்கிகளுக்கு, ரிசர்வ் பாங்க் கட்டளையிடலாம்.

1949-ல், வங்கிக் கம்பெனிகள் சட்டத்தின்கீழ், ரிசர்வ் பாங்க் அதிக அதிகாரங்களைப் பெற்றது.

1950 மே திங்களில் கச்சாச் சணல் சரக்கின் பேரில் கொடுக்கும் கடன்களைக் கட்டுப்படுத்துமாறு, எல்லா வங்கிக் கம்பெனிகளையும் ரிசர்வ் பாங்க் கேட்டுக் கொண்டது. ஆலைகள், வியாபாரிகள் தவிரப் பிறருக்குக் கச்சாச் சணல் வாங்குவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள எல்லாக் கடன்களையும் ஒரு குறிப்பிட்ட நாளுக்குள் திரும்பப் பெறுமாறு கல்கத்தா பகுதியில் உள்ள எல்லா அட்டவணையிலிட்ட வங்கிகளும் கேட்டுக் கொள்ளப் பட்டன; புதிய கடன்கள் ஏதும் கொடுக்க வேண்டாம் என்றும், ரிசர்வ் பாங்க் கேட்டுக் கொண்டது.

ரூபாயின் மதிப்புக் குறைப்பாலும், பாக்கிஸ்தானிலிருந்து கச்சாச் சணல் வரவில்லையாதலாலும், சணல் விலை உயர்ந்தது. சணல் சந்தையில் ஏற்பட்ட விலைஉயர்வைத் தடுப்பதற்காக, எல்லா வங்கிகளும் கச்சாச் சணல் பேரில் கொடுக்கும் கடன்களைக் கட்டுப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. ரிசர்வ் பாங்கின் இத்தகைய நடவடிக்கையால், வங்கிகள், கச்சாச் சணல்மீது கொடுத்த கடன் படிப்படியாகக் குறைந்தது.

1951-ல் தங்க வியாபாரமே செய்யாத வியாபாரிகளுக்குத் தங்கக்கட்டிகள்பேரில், பலகடன்கள் கணிசமானத்தொகைக்குச் சில வங்கிகள் கொடுத்திருந்ததை ரிசர்வ் பாங்க் அறிய வந்தது. வங்கிக் கடன், ஊக வணிக நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற ஐயம் எழுந்தது; அவ்வாறு பயன்படுத்தப்பட்டிருந்தால், உண்மையான வணிக, வியாபார நோக்கங்களுக்குக் கடன் கிடைப்பது கடினமாயிற்றே என்ற அச்சமும் எழுந்தது, 1951—ல் ஏப்ரல் இரண்டாம் நாள், இக் கடன்களைக் கொடுக்கும் போது ''மெதுவாகச் செல்லுமாறு'' (Go-slow) வங்கிகளை, ரிசர்வ் பாங்க் கேட்டுக் கொண்டது. ரிசர்வ் பாங்கின் இந் நடவடிக்கைக்கு நல்ல பலன் இருந்தது. தங்கம், வெள்ளி, தங்க-வெள்ளி நகைகள் ஆகியவற்றின் பேரில் மொத்தக் கடனில் 3.1% ஆக 1950 டிசம்பரில் இருந்த கடன் அளவு, 1952 மார்ச்சில் 1.9% ஆனது.

1951 நவம்பரிலிருந்து, ரிசர்வ் பாங்க் புதிய நிதிக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கியது என்று முன்பே குறிப்பிடப் பட்டது. கடன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் அதே சமயத்தில். சில சிறப்பு நோக்கங்களுக்குக் கடன்வசதிகள் கிடைக்கச் செய்வதில் ரிசர்வ் பாங்க் தன் கவனத்தைச் செலுத்தியது. 1952 துவக்கத்தில், அமெரிக்காவிலிருந்தும் தென்னாப்பிரிக்காவிலிருந்தும், இறக்குமதி செய்யப்பட்டிருந்த பருத்திக்குக் கடன் உதவி அளிக்க வேண்டியிருந்தது. இந் நிலைமையைச் சமாளிப்பதற்காக, வங்கிகள்

பருத்திமீது கடன் கொடுத்துக் கடனைத் திரும்ப பெறமுடியாவிடில், தான் அப் பருத்தியை வாங்கத் தயாராக இருக்கிறது என்று அரசாங்கம் அறிவித்தது. இதனைத் தொடர்ந்து, இந்தியப் பருத்தியையும் இறக்குமதி செய்யப்பட்ட பருத்தியையும் வாங்கு வதற்கு வங்கிகள் கடனளித்தால், வங்கிகளுக்கு நிதி உதவி செய்யும் என ரிசர்வ் பாங்க் அறிவித்துள்ளது.

1952—53-ல், தேயிலைத் தோட்டங்கள் பருவக் காலத்தில் நிதி வசதி இன்றித் தவித்தன, 1953—54-ல் பருவக் காலத்தில், தேயிலைத் தோட்டங்களுக்கு நிதி வசதி அளிப்பதற்காக, மத்திய அரசுடன் கலந்தாலோசித்து ரிசர்வ் பாங்க் ஒரு திட்டத்தைத் தீட்டி யது. இத் திட்டத்தின்படி அட்டவணையிலிட்ட வங்கிகளும் உச்சக் கூட்டுறவு வங்கிகளும் தங்கள் பகுதியிலுள்ள தேயிலைத் தோட் டங்களுக்குக் கடன் அளித்தால், அதனால் ஏற்படும் பற்றாக் குறையை அரசாங்கம் எடுத்துக் கொள்வதாக அறிவித்தது. தேயிலை விலை முன்னேறியதால் வங்கிகள் 1953 — 54 பருவக் காலத்தில் அவ்வளவாகக் கடன் பெறவேண்டிய அவசியம் எழவில்லை.

1953 மார்ச்சில், திருவாங்கூர், கொச்சியில் (Travancore-Cochin) குவிந்துவரும் ரப்பர் சரக்கைப் பற்றிய பிரச்சினையை ஆராய்ந்து அறிக்கை அனுப்புமாறு, ரிசர்வ் பாங்க் தனது அலுவலகர் ஒருவரை அனுப்பியது. தேவைப்படும் கூடுதல்நிதி வசதி அதிகம் இல்லையாதலாலும், அப் பகுதியில் இருந்த பெரிய இந்திய வங்கிகள் அந் நிதிவசதியை அளிக்கக்கூடும் என்றதாலும், ரிசர்வ் பாங்க் கூடுதல் நிதி வசதி அளிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

1954 சனவரியில், சில உணவுத் தானியங்கள்மீது இருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டது. இத்தகைய கட்டுப்பாடு நீக்கப்பட்ட உணவுத் தானியங்கள்மீது எந்த அளவுக்கு வங்கிகள் கடன் கொடுக்கின்றன என்பதைக் கண்காணிக்க, குறிப்பிட்ட இருபது வங்கிகளை, அவை (வங்கிகள்) உணவுத் தானியங்கள் பேரில் கொடுத்த கடன் பற்றிய விபரங்களை ஒவ்வொரு வாரமும் தனக்கு அனுப்புமாறு ரிசர்வ் பாங்க் கேட்டுக் கொண்டது.

### பொறுக்குக்கடன் கட்டுப்பாடு-1956-லிருந்து

1956க்கு முன் பொறுக்குக் கடன் கட்டுப்பாடு அவ்வளவாகப் பயன்படுத்தப்படவில்லை. 1956-லிருந்து பொறுக்குக்கடன் கட்டுப்பாடு எந்த அளவுக்குப் பயன்படுத்தப்பட்டது என்பதை இனிக் காண்போம்.

அத்தியாவசியப் பண்டங்கள் விற்பனைக்காகவும், தங்கம், பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றிற்காகவும் கொடுக்கப் படும் கடன் பற்றித் தொடர்ந்து கவனித்து வருவதற்காக, வங்கிகள் இவற்றின் பேரில் கொடுத்த கடன் பற்றிய விபரங்களைத் தனக்கு அனுப்புமாறு, 1956 ஏப்ரல் நான்காம்நாள், தனது சுற்றறிக்கைமூலம், எல்லா அட்டவணையிலிட்ட வங்கிகளையும் ரிசர்வ் பாங்க் கேட்டுக் கொண்டது.

1955 மார்ச்சில் அளித்த கடனைவிட 1956 மார்ச்சில் நெல், அரிசி ஆகியவற்றின் பேரில் அளித்த கடன் 12·98 கோடி ரூபாய் (111·5%) அதிகமாக இருந்தது. இதன் விளைவாக அரிசிவிலை உயர்ந்தது. சில கடன்கள், ஊக வணிக நோக்கங்களுக்கும் (Speculative purposes) பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்று கருதப்பட்டது. இந் நிலைமையைக் கட்டுப் படுத்துவதற்காக, நெல், அரிசி ஆகியவற்றின் பேரில் கொடுக்கப் படும் கடன் அளவை அதிகரிக்காமல் இருக்குமாறும் முன்பே அளித்த கடனுக்கு 50,000 ரூபாய்க்குமேல் கடன் அளவை அதிகரிக்காமல் இருக்குமாறும், 1957 மே 16ஆம் நாள் ரிசர்வ் பாங்க், எல்லா அட்டவணையிலிட்ட வங்கிகளுக்கும் கட்டளை இட்டது. மேலும், நெல், அரிசி ஆகியவற்றின் பேரில் கொடுத்த கடனுக்கு வரம்பினை (margin) 10% உயர்த்துமாறு ஒவ்வோர் அட்டவணையிலிடப்பட்ட வங்கியும் கட்டளையிடப்பட்டது. மேலும், கடன் அளவைக் குறைப்பதற்காக, 1955 மே திங்களில் வங்கிகள் அளித்த மொத்தக் கடனில் 25% அளவிற்கு அதிகமா காமல் கடன் அளவைக் கட்டுப்படுத்துமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. ரிசர்வ் பாங்கின் இந்தக் கட்டளை நல்ல பலனை அளித்தது. நெல், அரிசி ஆகியவற்றின் மீது அட்டவணை யிலிட்ட வங்கிகள் கொடுத்த கடன், 1956 மே 11-ல் 24·76 கோடி ரூபாயாகவும், மே 25-ல் 22·38 கோடி ரூபாயாகவும் சூன் 15-ல் 18·59 கோடி ரூபாயாகவும், சூன் 29-ல் 14·99 கோடி ரூபாயாகவும் படிப்படியாகக் குறைந்து வந்தது. வங்கிகள் முழு அளவிற்கு ஒத்துழைத்தன என்று ரிசர்வ் பாங்க் கருத்தைத் தெரி வித்தது. நெல், அரிசி பேரில் 1956 மே 11-ல் 24·76 கோடி ரூபாயாக இருந்த கடன், 1956 அக்டோபர் 12-ல் 4·5 கோடி ரூபாயாக இருந்தது. இதனால், 1956 நவம்பர் 14ஆம் நாள், ரிசர்வ் பாங்க் கட்டுப்பாடுகளை நீக்கியது. மும்முரப் பருவத்தில், அறுவடைத் தேவைக்கும், நெல் விற்பனைக்கும் உண்மையாக எழும் கடன் தேவைகளை அளிப்பதற்காகவே, கட்டுப்பாடு நீக்கப் பட்டது. ஆனால், ரிசர்வ் பாங்கின் இச் செயல் வெற்றியடைய

வில்லை. டிசம்பரிலும், சனவரியிலும் நெல், அரிசி மீதான கடன்கள் அதிகவேகமாக உயர்ந்ததால், 1957 பிப்ரவரி 9-ல் மீண்டும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

1957 சூனில், சர்க்கரைமீது பொறுக்குக்கடன் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. அட்டவணையிலிட்ட வங்கிகள் சர்க்கரையின் பேரில் கொடுத்த கடன், 1956 டிசம்பரில், 29·29 கோடி ரூபாயாக இருந்தது; 1957 மே யில் 58·59 கோடி ரூபாயாக இருந்தது. சர்க்கரை விலையும் அதிகமாகியிருந்தது. இந் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக, 1957 சூன் 29-ல், ரிசர்வ் பாங்க் கீழ்க்கண்டவாறு ஆணையிட்டது. குறைந்த அளவு வரம் பான 35%-க்கு உட்பட்டு, சர்க்கரைமீதான கடனின் வரம்பை 10% உயர்த்துமாறு எல்லா வங்கிகளுக்கும் கட்டளை பிறப்பிக்கப் பட்டது ;1957 சூலை 26-க்குள், சர்க்கரை பேரில் கொடுக்கப்படும் கடனையும் குறைக்குமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன; 1957 சூலை 26-க்குப் பிறகு, ஒவ்வொரு வாரமும் 1956-ல் அதற்கு ஒத்த வாரத்தில் (Corresponding week) இருந்த கடன் அளவுக்கு, 10%-க்கு அதிகமாகாமல் கடன் அளவை வங்கிகள் வைத்திருக்க வேண்டும்.

இக் கட்டளை பிறப்பிக்கப்பட்டதும், வங்கிகள் சர்க்கரைமீது கொடுத்த கடன் படிப்படியாகக் குறைந்தது. இக் கடன் 1957 சூனில் 58·30 கோடியாகவும், சூலையில் 50·51 கோடியாகவும், ஆகஸ்டில் 43·00 கோடியாகவும், செப்டம்பரில் 36·08 கோடி யாகவும், அக்டோபர் 25ஆம் நாள் 27·89 கோடி ரூபாயாகவும் இருந்தது. பருவக்காலக்கடன் தேவைகள் குறைந்ததால் இக் கடன் அளவுகள் குறைந்தனவா அல்லது ரிசர்வ் பாங்கின் நடவடிக்கையின் காரணமாகவா என்பதைக் கூற இயலவில்லை.

1958 சூலை 18ஆம் நாள், ரிசர்வ் பாங்க் இக் கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கியது. இதன் மூலம், குறைந்த அளவு வரம்பு 35% லிருந்து 45% க்கு உயர்த்தப்பட்டது. அட்டவணையிலிட்ட வங்கிகள் சர்க்கரையின் பேரில் கொடுத்த கடன் அதிகரித்து வந்த தாலும், சர்க்கரை விலை உயர்ந்து வந்தாலும், ரிசர்வ் பாங்க் இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ள நேர்ந்தது. இக் கட்டளைக்குப்பின், சர்க்கரைமீதான கடன், படிப்படியாக, மிக வேகமாகக் குறைந்ததைக் கீழ்க்கண்ட புள்ளி விபரங்களிலிருந்து அறியலாம்.

# அட்டவணை 1

அட்டவணையிலிட்ட வங்கிகள் சர்க்கரைமீது கொடுத்த கடன் (ரூபாய் கோடிக்கணக்கில்)

| | |
|---|---|
| 25- 7-1958 | 46·55 |
| 29- 8-1958 | 36·70 |
| 25- 9-1958 | 28·83 |
| 31-10-1958 | 21·57 |
| 28-11-1958 | 15·89 |

சர்க்கரை உற்பத்தி உயர்ந்திருந்ததால் 1960 டிசம்பர் 9-ல், சர்க்கரைமீதான கடனின் வரம்பு 45%-லிருந்து 25%-க்குக்குறைக்கப்பட்டது. 1961 ஏப்ரலில் சர்க்கரைக்கடன் மீதிருந்த எல்லாக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன.

சர்க்கரை விலை அதிகரித்ததாலும் சர்க்கரையின்பேரில் கடன் பெறுவோர், ஊக வணிக நோக்கங்களுக்கு அக் கடனைப் பயன்படுத்தினர் என்ற ஐயம் எழுந்ததாலும் 1963 ஏப்ரல் 27-ல், மீண்டும் சர்க்கரைமீது கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது; 45% வரம்பு விதிக்கப்பட்டது. இதனால், சர்க்கரைமீதான கடன் படிப்படியாகக் குறைந்தது. 1963 மார்ச்சு 29-ல், அட்டவணையிலிட்ட வங்கிகள் சர்க்கரையின் பேரில் கொடுத்த கடன் 86·03 கோடி ரூபாய். இக் கடன் 1963 ஏப்ரல் 26-ல் 82·21 கோடியாகவும், மே 31-ல் 71·56 கோடி ரூபாயாகவும், ஜூன் 28-ல் 61·54 கோடியாகவும், ஜூலை 26-ல் 48·05 கோடி ரூபாயாகவும் இருந்தது.

இதற்குப் பின்னர், பொறுக்குக் கடன் கட்டுப்பாட்டின் வரலாற்றில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன.

1. பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டைச் செம்மையாக்குவதற்காகச் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

2. மாறும் பொருளாதாரக் கொள்கைக்கும், அரசாங்கக் கொள்கைக்கும் ஏற்றாற்போல், பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டுக் கருவி கையாளப்பட வேண்டியிருந்தது.

3. சில வகைக் கடனாளிகளுக்குச் சலுகை அளிக்கும் வகையில், பொறுக்குக்கடன் கட்டுப்பாடு நெகிழ்ச்சி உடையதாக (flexible) ஆக்கப்பட்டது.

1957 பிப்ரவரி 9-ல் நெல், அரிசிமீது கொடுக்கப்படும் கடனுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதால், அவற்றின்மீதான கடன் ஓரளவுக்குக் குறைந்து வந்தது. ஆனால் கடன் அளவு அதிகமாகவே இருந்தது. அதாவது, 1957 ஏப்ரலில், 22 கோடி ரூபாயாக இருந்தது. நெல், அரிசி பிற உணவுத் தானியங்கள் ஆகியவற்றின் விலை உயர்ந்திருந்தது. நிலைமையைக் கட்டுப் படுத்துவதற்காக, இக் கடன்களின் மீதான வரம்பினை உயர்த்தும் படி, 1957 சூன் 7 ஆம் நாள், ரிசர்வ் பாங்க் எல்லா அட்டவணையி லிட்ட வங்கிகளுக்கும் கட்டளையிட்டது. தொடக்கத்தில் இந்தக் கட்டளை பலன் ஏதும் அளிக்கவில்லை. ஆகவே, 1957 சூன் 29-ல் மற்றுமோர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. 1957 சூலை, 26ஆம் நாள், நெல், அரிசி ஆகியவற்றின் பேரில் 11·09 கோடி ரூபாயாக இருந்த கடன், 1957 டிசம்பர் 27-ல் 6·18 கோடி ரூபாயாக இருந்தது. கோதுமை போன்ற உணவுத் தானியங்களைப் பொறுத்தவரை, 1957 சூலை 26-ல் 16·35 கோடி ரூபாயாக இருந்த கடன், 1957 டிசம்பர் 27-ல் 8·55 கோடி ரூபாயாக இருந்தது. கடன் அவ்வளவாகத் தேவைப்படவில்லை என்பது உண்மையாக இருக்கலாம். ஏனெனில், 1956 செப்டம்பரில், நெல், அரிசி ஆகியவற்றின் பேரில் அட்டவணையிலிட்ட வங்கிகள் கொடுத்த கடன் 5·4 கோடி ரூபாயாகவும், பிற உணவுத் தானியங்கள் பேரில் கொடுத்த கடன் 12·7 கோடி ரூபாயாகவும் இருந்தது; ஆனால் 1957 செப்டம்பரில் இக் கடன்கள் முறையே 4 கோடி ரூபாயாகவும், 8·9 கோடி ரூபாயாகவும் இருந்தன. ஆனால் அட்டவணையிலிட்ட வங்கிகள் உணவுத் தானியங்கள் பேரில் கொடுத்த கடன் அதிகமாகிக் கொண்டே இருந்தது. இக் கடன்கள், 1957 டிசம்பர் 13 ஆம் நாள் 13·49 கோடியாகவும், 1958 சனவரி 31ஆம் நாள் 16·38 கோடியாகவும், 1958 மார்ச்சு 28 ஆம் நாள் 19·64 கோடியாகவும், 1958 ஏப்ரல் 11 ஆம் நாள் 21·61 கோடி ரூபாயாகவும் இருந்தது. ஆனால், முந்தைய ஆண்டில் இருந்த கடன் அளவுடன் ஒப்பிடும்போது, 1958-ன் கடன் அளவு குறைவே, அதாவது, இக் கடன்கள் 1957 மே திங்களில் 42·5 கோடியாக இருந்தன. ஆனால் 1958 மே இறுதியில் 26·2 கோடி ரூபாயாகத்தான் இருந்தது.

1959 பிப்ரவரி ஒன்பதாம் நாள், நிலக்கடலையின் பேரில் வங்கிகள் கொடுக்கும் கடனுக்குப் பொறுக்குக்கடன் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. 1958 டிசம்பர் இறுதியில் நிலக்கடலைமீது வங்கிகள் கொடுத்த கடன் 9 கோடியாக இருந்தது. 1959 சனவரி மத்தியில் இது 15 கோடி ரூபாய்க்கு உயர்ந்திருந்தது. நிலைமையைக் கட்டுப்படுத்த, ரிசர்வ் பாங்க் கீழ்க்கண்ட கட்டளையைப் பிறப்பித்தது.

அட்டவணையிலிட்ட வங்கிகள் நிலக்கடலையின் பேரில் கடன் கொடுக்கும்போது குறைந்தது 45% வரம்பு வைத்திருக்க வேண்டும்; மேலும், வங்கிகள் நிலக்கடலைமீது கொடுக்கும் சராசரி மொத்தக்கடன் அளவை, ஒவ்வொரு திங்களிலும் அதற்கு ஒத்த (corresponding) 1957 அல்லது 1958-ல் (இதில் எது உயர்வோ அந்த அளவிற்கு) உள்ள திங்களில் கொடுக்கப்பட்டிருந்த கடன் அளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டும்.

1959 பிப்ரவரி 15-ல், 23 கோடி ரூபாயாக இருந்த கடன், மார்ச்சு இறுதியில் 17 கோடி ரூபாய்க்குக் குறைந்திருந்தது. ஏப்ரல் 10ஆம் நாள் 15·89 கோடி ரூபாயாகவும், மே 29-ல் 10·76 கோடி ரூபாயாகவும் இருந்தது. இவ் விளைவுகளைப் பார்க்கும்போது, ரிசர்வ் பாங்கின் கட்டளை வெற்றிபெற்றது என்றே கூற வேண்டியுள்ளது.

1964 ஏப்ரலில், அட்டவணையிலிட்ட வங்கிகள் நிலக்கடலைமீது கொடுக்கும் கடனைக் கட்டுப்படுத்துமாறு, ரிசர்வ் பாங்க் கட்டளையிட்டது. குறைந்த அளவு வரம்பு 45% லிருந்து 50%-க்கு உயர்த்தப்பட்டது. 1964 ஏப்ரல் 24-ல் 13·15 கோடி ரூபாயாக இருந்த கடன், மே 29-ல் 10·05 கோடியாகவும், ஜூன் 26-ல் 6·03 கோடி ரூபாயாகவும் படிப்படியாகக் குறைந்தது.

1958 ஜூன் திங்களிலிருந்து பஞ்சாப் மாநிலத்தில் கோதுமை விலை உயர்ந்து வந்ததைக் கட்டுப்படுத்துவதற்காக, 1958 செப்டம்பர் 10ஆம் நாள், கோதுமையின் பேரில் கொடுக்கப்படும் கடன்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

1958 டிசம்பர் 29ஆம் நாள், எல்லா உணவுத் தானியங்கள் மீதும் கொடுக்கப்படும் கடனுக்குப் புதிய சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

ஒரிஸ்ஸாவில், உணவுத்தானிய வியாபாரத்தை அரசு மேற்கொண்டதால், உணவுத்தானியங்கள் மீதிருந்த பொறுக்குக் கடன் கட்டுப்பாட்டில் மாறுதல் செய்ய நேர்ந்தது. பின்னர், வேறு சில மாநிலங்களும் உணவுதானியக் கொள்முதலை ஓரளவுக்கு மேற்கொண்டன. இதனால், அரசு சார்பில் உணவுத் தானியங்களைக் கொள்முதல் செய்யும் முகவருக்குக் கொடுக்கப்படும் கடனின் உச்ச அளவு (Ceiling Limit) 1959 ஏப்ரலில் தளர்த்தப்பட்டது.

நெல், அரிசி, பிற உணவுத் தானியங்கள் ஆகியவை ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு மாநிலத்திலும் வங்கிகள் கொடுக்கக் கூடிய கடன் அளவைக் குறிப்பிட்டு, 1959 சூலை 10-ல், ரிசர்வ் பாங்க் ஒரு கட்டளை இட்டது. பின்னர், கோதுமை, சந்தையில் கிடைத்ததால், கோதுமைமீது இருந்த உச்சஅளவுக் கடன்கட்டுப் பாடு, 1960 ஆகஸ்ட் 20-ல் நீக்கப்பட்டது; 1961 மேயில் எல்லாக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன.

1960-ல், சில மாறுபட்ட சூழ்நிலைகளில் ரிசர்வ் பாங்க் தனது கடன் கொள்கையைச் செயல்படுத்த வேண்டியிருந்தது. தொழில் உற்பத்தியில் வளர்ச்சி, விவசாயப் பொருள் உற்பத்தியில் வீழ்ச்சி, மொத்த முதலீட்டில் ஏற்றம், விலைவாசிகள் உயர்வால் ஏற்பட்ட மாற்றம், பணஅளிப்பிலும் வங்கிக் கடனிலும் பெருக்கம், பங்குச் சந்தையில் ஏற்பட்ட பரபரப்பு ஆகியவை நாட்டில் ஏற்பட்ட ஒரு சில மாறுதல்களாம்.

1960 சனவரி 16-ல், நெல், அரிசி ஆகியவற்றின்மீதான கடன்களின் உச்ச அளவை, ரிசர்வ் பாங்க் தளர்த்தியது. மத்தியப் பிரதேசத்திலும், ஆந்திராவிலும் உச்சஅளவு தொடர்ந்து அமுலில் இருந்தது. தமிழ் நாட்டிலும் ஒரிஸ்ஸாவிலும் உச்சஅளவு நீக்கப் பட்டது.

பங்குச் சந்தையின் நிலைமை ரிசர்வ் பாங்கின் கவனத்தை ஈர்த்தது. பங்குகளின் விலை மிக அதிக அளவிற்கு உயர்ந்திருந்தது. 1960 பிப்ரவரி 12ஆம் நாளோடு முடியும் ஆண்டிற்கு, பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றின்மீது கொடுக்கப்பட்டிருந்த கடன் 15·3 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருந்தது. அதாவது, இது மொத்தக்கடன் உயர்வில், 15% ஆகும். ஓர் ஆண்டிற்கு முன்னால் இது 8·6% ஆக இருந்தது. சாதாரணப் பங்குகளின் பேரில் கொடுக்கப்படும் வங்கிக் கடனைக் கட்டுப்படுத்துகையில், உண்மையான முதலீட்டு நோக்கங்களுக்கான கடன் தேவைகளைப் பாதிக்காமல், ஊக வணிக நோக்கங்களுக்கு மட்டும் கொடுக்கப்படும் கடனை மட்டும் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது. ஆகவே, 1960 மார்ச்சு 11-ல், அட்டவணையிலிட்ட வங்கிகள், தங்கள் பேரில் பங்குகளை வாங்கிப் பின்னர் விற்கும் பட்லா நடவடிக்கைகள் (Budla transactions) மீது தடைவிதிக்கப்பட்டது; மேலும், பிணையற்ற கடன்களுக்கு உச்ச அளவு குறிப்பிடப்பட்டது. இதன்படி, வங்கிகளின் மொத்தக் கடனில், பிணையற்ற கடன்கள் 1960 ஏப்ரல் திங்களிலிருந்து எந்த ஒரு திங்களிலும் அதற்கு ஒத்த (Corresponding) 1959ஆம் ஆண்டின் திங்களில் அளித்த கடனைவிட அதிகமாக இருக்கக் கூடாது. இக் கட்டுப்பாடுகள், பயனுள்ள நோக்கங்களுக்குக் கொடுக்கப்படும் கடனைக் கட்டுப்படுத்துவதாக

இருந்தால், அத்தகைய கடன்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என்று வங்கிகளுக்கு உறுதி அளிக்கப்பட்டது. 5000 ரூபாய்க்கு மேல் சாதாரணப் பங்குகள் பேரில் கொடுக்கப்படும் கடன்களுக்கு, குறைந்த அளவு வரம்பு 50% ஆக நிருணயிக்கப்பட்டது.

இத்தகைய கடும் நிபந்தனைகள் ஏன்? பங்குகள், பங்குத் தொகுப்புகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றின் பேரில் அட்டவணையிலிட்ட வங்கிகள் கொடுத்த கடன் பற்றிய புள்ளி விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை 2

அட்டவணையிலிட்ட வங்கிகள் பங்குகள் பேரில் கொடுத்த கடன்: (ரூபாய் கோடிக்கணக்கில்)

| | |
|---|---|
| 31-10-1958 | 79·16 |
| 28-11-1958 | 80·07 |
| 26-12-1958 | 81·12 |
| 30-10-1959 | 86·37 |
| 29- 1-1960 | 95·09 |
| 26- 2-1960 | 96·92 |
| 25- 3-1960 | 99 65 |

1958 அக்டோபருக்கும் 1960 மார்ச்சுக்கும் இடையில் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றின்மீது கொடுக்கப்பட்டிருந்த கடன் சுமார் 20 கோடி ரூபாய் அதிகமாகியதைக் காணலாம். வங்கிக் கடன், ஊக வணிக நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று ரிசர்வ் பாங்க் கருதியது. ரிசர்வ் பாங்கின் கருத்தை உறுதிப்படுத்தும் வகையில், பங்குகள் மற்றும் பிறவகை ஆவணங்களின் விலை 1959 ஏப்ரலில் 149·1 ஆக இருந்தது. 1960 மார்ச்சில் 161·7ஆக உயர்ந்திருந்தது. இக் காரணங்களினுல்தான் ரிசர்வ் பாங்க் மேற்கண்ட கடும் நடவடிக்கையை எடுக்கவேண்டியிருந்தது. இந் நடவடிக்கையின் விளைவாக, 1960 மார்ச்சில் 83·29 கோடி ரூபாயாக இருந்த பங்குகள் பேரில் கொடுக்கப்பட்ட கடன், மே மாதத்தில் 78 கோடி ரூபாயாக இருந்தது. ஆனுல், 1960 ஜுனில் பழையபடியும் உயர்ந்தது; அதாவது, 82·8 கோடி ரூபாயாக இருந்தது. 1960 ஜூலை மத்தியில் 80·87 கோடி ரூபாயாக இருந்தது. ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் ஆகிய திங்கள்களில் முறையே 80·63, 81·22, 75·46 கோடி ரூபாயாக இருந்தது. 1961-ல் வங்கிகள் பங்குகளின் பேரில் கொடுத்த கடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

## அட்டவணை 3

பங்குகளின் பேரில் அட்டவணையிலிட்ட வங்கிகள் கொடுத்த கடன்: (ரூபாய் கோடிக்கணக்கில்)

| | |
|---|---|
| 24- 2-1961 | 78·22 |
| 31- 3-1961 | 82·72 |
| 28- 4-1961 | 83·00 |
| 30- 6-1961 | 82·69 |
| 28- 7-1961 | 81·45 |
| 25- 8-1961 | 79·73 |
| 29- 9-1961 | 78·37 |
| 27-10-1961 | 79·96 |
| 24-11-1961 | 80·92 |
| 29-12-1961 | 85·22 |

ரிசர்வ் பாங்க் கட்டுப்பாடு விதித்ததால், 1960 ஏப்ரலில் பங்குகள் மீதான கடன் 78 கோடி ரூபாய்க்குக் குறைந்திருந்தது. 1961-ல் சில திங்கள்களில் கடன்கள் அதிகரித்த போதிலும், சில திங்கள்களில் குறைந்த போதிலும், முடிவில் 85 கோடி ரூபாயைத் தாண்டவில்லை. இதனைக் கவனித்த ரிசர்வ் பாங்க் 1962 சனவரியில், பங்குகள் மீதான கடன் வரம்பை 50%-லிருந்து 40%-க்குக் குறைத்தது. இத்தகைய மாற்றத்தால், பங்குகள் மீதான கடன் வேகமாக அதிகரித்தது என்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விபரங்களிலிருந்து அறியலாம்.

## அட்டவணை 4

பங்குகள் பேரில் அட்டவணையிலிட்ட வங்கிகள் கொடுத்த கடன்: (ரூபாய் கோடிக்கணக்கில்)

| | |
|---|---|
| 23- 2-1962 | 85·17 |
| 30- 3-1962 | 89·26 |
| 25- 5-1962 | 91·65 |
| 29- 6-1962 | 96·49 |
| 31- 8-1962 | 90·88 |
| 30-11-1962 | 91·43 |
| 25- 1-1963 | 92·03 |
| 29- 3-1963 | 92·38 |
| 31- 5-1963 | 93·63 |
| 20- 8-1963 | 91·05 |
| 25-10-1963 | 91·20 |

கச்சாச் சணல் மற்றும் சணல் சரக்குகள் விலையும் அவற்றின் மீதான கடனும் அதிகரித்ததால், அவற்றின்மீது 1960 டிசம்பர் 12-ல் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதன்படி சணல் சரக்கு மீதான கடனுக்கு ஒவ்வோர் அட்டவணையிலிட்ட வங்கியும் 40% குறைந்த அளவு வரம்பு வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது; ஆலைகளுக்குக் கச்சாச்சணல்பேரில் கொடுக்கும் கடனுக்கு 25% வரம்பும், பிறருக்கு 40% வரம்பும் வைத்திருத்தல் வேண்டும்.

1961 சூன் 23-ல் சணல் சரக்குகள் பேரில் கொடுக்கும் கடன்பற்றிய வரம்புத் தேவைகள் அகற்றப்பட்டன. 1961 ஆகஸ்ட் 26-ல் கச்சாச் சணல், சணல் சரக்குகள் ஆகியவைமீது இருந்த எல்லாக் கடன் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன.

**1962 சனவரி 13**

பங்குகள் பேரில் 5000 ரூபாய்க்கு மேல் கொடுக்கும் கடனுக்கு 50% வரம்பு வைத்திருக்குமாறு, 1960 மார்ச்சு 11-ல், ரிசர்வ் பாங்க் கட்டளையிட்டிருந்தது. பட்லா நடவடிக்கைகளுக்குக் கடன் கொடுப்பதும், அந் நடவடிக்கைகளில் வங்கிகள் ஈடுபடுவதும் தடைசெய்யப்பட்டிருந்தது. இக் கட்டுப்பாடுகளைப் பரிசீலனை செய்த பின்னர், பங்குகளின் மீதான வரம்பை 50% லிருந்து 40%-க்கு 1962 சனவரி 13-ல், குறைக்கப்பட்டது. ஆனால், பட்லா நடவடிக்கைகள் பற்றிய கட்டுப்பாடு தொடர்ந்து செயல் முறையில் இருந்தது.

**1962 பிப்ரவரி 28**

நெல், அரிசி, நிலக்கடலை ஆகியவற்றின் பேரில் வங்கிகள் கொடுக்கும் கடனின் உச்ச அளவு அதிகரிக்கப்பட்டது. நிலக் கடலை பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு 45% வரம்பும், பிற எண்ணெய் வித்துகளுக்கு 40% வரம்பும் விதிக்கப்பட்டது. நெல், அரிசி ஆகியவற்றின் பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு 35% வரம்பு விதிக்கப்பட்டது.

**1963 சனவரி 23**

1961-62-ல் அரிசி உற்பத்தி 1960-61-ல் இருந்ததைவிட ஓரளவுக்குக் குறைவாக இருந்தபோதிலும், 1962-ல் விலை உயர்ந் திருந்தது. அட்டவணையிலிட்ட வங்கிகளும் நெல், அரிசி ஆகியவற்றின் பேரில் 25%-லிருந்து 30% வரை அதிகக் கடன் கொடுத்திருந்தன. 1963 சனவரியில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப்பட்டன.

1. நெல், அரிசி ஆகியவற்றின் பண்டக இரசீதுகளின் (Warehouse receipts) பேரில் கொடுக்கும் கடன் களுக்கு 25% வரம்பும், நெல், அரிசி ஆகியவற்றின் பேரில் கொடுக்கும் கடனுக்கு 35% வரம்பும் விதிக்கப்பட்டது.

2. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தவிரப் பிறருக்குக் கொடுக்கப்படும் கடனுக்கான உச்சஅளவு பற்றிய சலுகை நிறுத்தப்பட்டது.

3. நெல், அரிசி ஆகியவற்றின் பேரிலும், அவற்றின் பண்டக இரசீதுகளின் பேரிலும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தவிரப் பிறருக்கு வங்கிகள் கொடுக்கும் கடனுக்கு உச்சஅளவு விதிக்கப்பட்டது.

**1963 மார்ச்சு 11**

கோதுமை தவிர, 'பிற உணவுத் தானியங்களின்' பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு 35% வரம்பும், அத் தானியங்களின் பண்டக இரசீதுகளின் பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு 25% வரம்பும் விதிக்கப்பட்டது.

**1963 ஏப்ரல் 27**

1957 ஜூன் 29லிருந்து 1957 டிசம்பர் 11 வரை சர்க்கரை பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு உச்சஅளவும், வரம்புத் தேவையும் நிருணயிக்கப்பட்டிருந்தது. 1958-ன் துவக்கத்தி லிருந்து 1961 ஏப்ரல் 20 வரை குறைந்த அளவு வரம்புத் தேவை மட்டும் செயல்முறையில் இருந்தது. சர்க்கரை உற்பத்தி பெருகியதால் 1961 ஏப்ரல் 21லிருந்து, சர்க்கரைமீது எந்த விதக் கட்டுப்பாடும் இல்லை. பின்னர், 1963 ஏப்ரல் 27-ல் சர்க்கரை உற்பத்தியாளர்கள் தவிர பிறருக்குக் கொடுக்கப்படும் கடனுக்கு 45% வரம்பு விதிக்கப்பட்டது.

**1963 மே 16**

1962 மே 1-க்குப் பிறகு தொடங்கிய புதிய பண்டகங்கள், உணவுப் பொருள்களின் பேரில் கொடுத்த இரசீதுகள் பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு, உச்சக்கடன் அளவிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. ஆனால் 25% வரம்பு தொடர்ந்து விதிக்கப்பட்டிருந்தது.

**1963 அக்டோபர் 30**

எந்த ஓர் அட்டவணையிலிட்ட வங்கியும் பங்குகள் பற்றிய பட்லா நடவடிக்கைகளில் (Budla transactions) ஈடுபடக் கூடாது என்று ரிசர்வ் பாங்க் கட்டளையிட்டது.

முதல் அங்காடிக்குப் (Capital market) புத்துயிர் கொடுக்க, பங்குகள் பேரில் அட்டவணையிலிட்ட வங்கிகள் கொடுக்கும் கடன் மீது இருந்த கட்டுப்பாடுகளை, ரிசர்வ் பாங்க் 1963 அக்டோபரில் நீக்கியது. 40% வரம்புத் தேவையும் நீக்கப்பட்டது. ரிசர்வ் பாங்க் விதித்திருந்த கட்டுப்பாடுகள், ஓரளவிற்கு வங்கிக் கடனைக் கட்டுப்படுத்தின என்ற முடிவுக்கு மட்டுமே வரமுடிகிறது.

**1964 பிப்ரவரி 8**

நெல், அரிசி, பிற உணவுத் தானியங்கள் (கோதுமை நீங்கலாக) ஆகியவற்றின் பேரில் கொடுக்கும் கடன்களுக்கு ஒவ்வோர் அட்டவணையிலிட்ட வங்கியும், சரக்கு மதிப்பில், 35% வரம்பு வைத்திருக்க வேண்டும். மேற்கண்ட சரக்குகளுக்கு மத்திய, மாநில பண்டக இரசீதின்பேரில் கொடுக்கும் கடனுக்கு 25% வரம்பு போதுமானது. பஞ்சாப் மாநிலத்தில், உரிமம் பெற்ற வியாபாரிகளுக்கும், ஆலைகளுக்கும் 25% வரம்பு போதுமானது.

**1964 மார்ச்சு 11**

1963-64-ல் நிலக்கடலை உற்பத்தி அவ்வளவாக உயரவில்லை. விலை உயர்ந்து இருந்தது. அதன்பேரில் கொடுக்கப்பட்ட வங்கிக்கடனும் பெருகி இருந்தது. 1964 சனவரியில், சென்ற ஆண்டின் கடன் அளவில் 170% கடன் அளிக்கப்பட்டிருந்தது. இதனால், ரிசர்வ் பாங்க் நிலக்கடலையின்மீது கொடுக்கப்படும் கடன் வரம்பை 45% லிருந்து 50%க்கு உயர்த்தியது. உச்சக் கடன் அளவும் உயர்த்தப்பட்டது. பிற எண்ணெய் வித்துகளுக்கு (oil seeds) 40% வரம்பு விதிக்கப்பட்டது.

**1964 ஏப்ரல் 21**

கோதுமை விலை கடுமையாக உயர்ந்து வந்ததால், 1961 மே 15-ல் நீக்கப்பட்டக் கடன் கட்டுப்பாடுகள், 1964 ஏப்ரல் 21-ல் மீண்டும் கொண்டு வரப்பட்டன; 35% வரம்பு விதிக்கப்பட்டது. மத்திய, மாநிலப் பண்டகக் கூட்டுருக்கள் கோதுமைக்குத் தரும் பண்டக இரசீதுகளின்பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு 25% வரம்பு போதுமானது.

**1964 ஜூலை 7**

எண்ணெய் வித்துகள், தாவர எண்ணெய் (vegetable oil) ஆகியவற்றின் பேரில் கொடுக்கப்படும் கடனுக்கும் பொறுக்குக் கடன்கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. வங்கிகள் இச் சரக்குகள் பேரில் அதிகக்கடன் கொடுத்ததாலும், அவற்றின் விலை ஏற்றத்தாலும், 1964 ஜூலை 7ஆம் நாள், இச் சரக்குகள்மீது கொடுக்கப்படும் கடனுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதன்படி வனஸ்பதியின் பேரில் கொடுக்கும் கடன்களுக்கு 50% வரம்பும், பிற எண்ணெய் வித்துகளின் பேரில் கொடுக்கும் கடனுக்கு 40% வரம்பும் வைத்திருக்குமாறு வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக 1964 ஜூலை 31ஆம் நாள், தாவர எண்ணெய்மீதான கடன் 13·15 கோடி ரூபாயாகவும், ஆகஸ்ட் 28-ல் 10.02 கோடி ரூபாயாகவும், செப்டம்பர் 25-ல் 8.44 கோடி ரூபாயாகவும் படிப்படியாகக் குறைந்தது. எண்ணெய் வித்துகளின்மீதான கடன் மேற்கண்ட தேதிகளில் முறையே 13·94, 12·48, 7·92 கோடி ரூபாயாக இருந்தது.

**1964 ஆகஸ்ட் 17**

உணவுத் தானியங்கள்பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு வரம்பு 35% லிருந்து 50%-க்கு உயர்த்தப்பட்டது. உணவுத் தானியங்களின் பண்டக இரசீதுகளின் பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு, 25% லிருந்து 40%-க்கு வரம்பு உயர்த்தப்பட்டது. பிற உணவுத் தானியங்களின் (நெல், அரிசி, கோதுமை நீங்கலாக) பேரில் கொடுக்கப்படும் உச்சக்கடன் அளவு 100%லிருந்து 90-க்குக் குறைக்கப்பட்டது.

**1965–66**

உணவுத் தானியங்கள், எண்ணெய் வித்துகள், எண்ணெய் வகைகள் ஆகியவற்றின் சந்தைவிலை மேலும் ஏறுமலிருக்க, அவற்றின்மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுபாடுகள் மேலும் இறுக்கப்பட்டன. அரிசி, நெல் ஆகியவற்றுக்கு மே-யிலும், நிலக்கடலைக்கு ஜூலையிலும், கோதுமை மற்றும் பிற உணவுத்தானியங்களுக்கு ஆகஸ்டிலும் 1964-ல் கொடுக்கப்பட்ட கடன் அளவிற்கு, 1965-66-க்கு உச்ச அளவுக்கடன் நிருணயிக்கப்பட்டது. பிற எண்ணெய் வித்துகள், தாவர எண்ணெய் (vegetable oil) ஆகியவற்றின் (நிலக்கடலை, பருத்தி விதை தவிர) பேரில் 1964-ல் கொடுக்கப்பட்ட கடனில் 90% அளவுக்கு உச்சக்கடன் அளவு 1965 ஆகஸ்டில் நிருணயிக்கப்பட்டது. பருத்தி ஆலைகள் தவிர பிறருக்குப் பருத்தி

யின்பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு, 1965 ஆகஸ்டில் வரம்பு விதிக்கப்பட்டது. சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறக்கு மதி செய்யப்படும் பருத்திக்கும், 1965-66-ல் விளையும் புதிய பருத்திக்கும் வரம்பு கட்டுப்பாடிலிருந்து முறையே 1965 செப்டம்பர் நான்காம் நாள் அன்றும், 1965 அக்டோபர் 13ஆம் நாள் அன்றும் விலக்கு அளிக்கப்பட்டது. 1965 நவம்பர் 12-ல் பஞ்சாப் மாநிலத்தில் எல்லைப்புறப் பகுதியிலுள்ள ஆறு மாவட்டங்களில் உணவுத் தானியங்களின் பேரில் அட்டவணையிலிட்ட வங்கிகள் கொடுக்கும் கடன் மீதிருந்த கட்டுப்பாடுகள் 1965 நவம்பர் 12-ல் தளர்த்தப்பட்டன. 1965 அக்டோபர் 1-ல் சரக்குக் கையிருப்பைக் குவித்து வைத்திருந்த ஐவுளித் தொழிலுக்கு, உண்டியல் அங்காடித் திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிப்பதற்காக ரிசர்வ் பாங்க், ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்தது.

உற்பத்திக் குறைவால் விலைவாசிகள் நிலைமை மோசமாகியது. பண அளிப்பு 1964-65-ல் இருந்ததைவிட 10·3% அதிகரித்தது. வைப்புகளைவிட பணத்தாள்களே மொத்தப் பண அளிப்பில் அதிகப் பங்கைப் பெற்றிருந்தன. 1965-ல் பருவ மழை தவறியதால், விவசாய உற்பத்தி குறைந்தது. விவசாயப் பொருள்கள் (குறிப்பாக உணவுத் தானியங்கள், உணவுக்கு உகந்த எண்ணெய் வகை) விலை வேகமாக உயரத் தாவியது. தொழில்களுக்குக் கச்சாப் பொருள் கிடைப்பது கடினமாக இருந்தது. 1966 மே யில், ரிசர்வ் பாங்கின் ஆளுநர், கடன் நிலைமையை ஆழ்ந்த கவனத்துடன் நோக்குமாறு வங்கிகளைக் கேட்டுக்கொண்டார்; உணவுத்தானியங்கள், சர்க்கரை, பருத்தி, சணல், எண்ணெய் வித்துகள், தாவர எண்ணெய் வகை ஆகியவற்றின்பேரில் சென்ற ஆண்டில் கொடுக்கப்பட்டக் கடன்களைத் திரும்பப் பெறுமாறும் வங்கிகளைக் கேட்டுக் கொண்டார். வைப்புகள் அதிகமாவதாலும், கடன்களைத் திரும்பப் பெறுவதாலும் மந்தப் பருவத்தில் கிடைக்கக்கூடிய பணத்தை அரசாங்கக் கருவூல உண்டியல்களில் முதலீடு செய்யுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. இச் சமயம் ஏற்பட்ட ரூபாய் மதிப்புக் குறைப்பின் (Rupee devoluation) காரணமாக, நிதியியல் நிலைமையையும், விலைவாசிகள் நிலைமையையும் மிகக் கவனத்துடன் கண்காணித்து வர வேண்டியிருந்தது. ரூபாய் மதிப்புக் குறைப்புக்குப் பிறகு பின்பற்றப்பட வேண்டிய கடன் கொள்கைகளைப் பற்றி, ரிசர்வ் பாங்கின் ஆளுநர், வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இதன் விளைவாக, தொழில்களுக்கும், ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவற்றுக்கும், கடன் கொடுக்கையில் தொழிலினங்கள் அதிகமான சரக்கு இருப்பைத் தேக்கி வைத்திருக்காமல் பார்க்குமாறு,

வங்கிகளை, ரிசர்வ் பாங்கின் ஆளுநர் கேட்டுக்கொண்டார். கடன்களைக் குறைக்குமாறும் வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

**1966 சனவரி 3**

நாட்டுப் பருத்திவிதை எண்ணெயின்பேரில் கொடுக்கப்படும் கடன்களுக்கு உச்சக்கடன் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டது. முன்னரே, இக் கடன்களுக்கு வரம்புத் தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

**1966 சனவரி 31**

கேரளாவில் உள்ள அட்டவணையிலிட்ட வங்கிகள் நெல், அரிசி, கோதுமை ஆகியவற்றின்பேரில் கேரளஅரசால் அங்கீகரிக்கப் பட்ட மொத்த விற்பனை வியாபாரிகளுக்குக் கொடுக்கும் கடனுக்கு உச்சக்கடன் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. குறைந்த அளவு வரம்பும் 50%-லிருந்து 25%-க்குக் குறைக்கப் பட்டது.

**1966 ஏப்ரல் 20**

மகாராஷ்டிர மாநிலத்தில், உணவுத் தானியங்களைக் கொள் முதல் செய்வதற்கும், விற்பதற்கும், அம் மாநில அரசால் அங்கீ கரிக்கப்பட்டவர்கள் தவிர வேறு யாருக்கும் நெல், அரிசி ஆகியவற்றின்பேரில் அட்டவணையிலிட்ட வங்கிகள் கடன் வழங்கக் கூடாது என்று ரிசர்வ் பாங்க் கட்டளையிட்டது.

**1966 சூன் 14**

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள உரிமம் பெற்ற வியாபாரி களுக்கும், ஆலைகளுக்கும் கோதுமையின்பேரில் சலுகை முறையில் 1965 நவம்பரிலிருந்து கொடுக்கப்பட்டு வந்த 25% வரம்பு 1966 ஏப்ரல் வரை நீடிக்கப்பட்டது; பின்னர் டிசம்பர் இறுதிவரை யில் இச் சலுகை அளிக்கப்பட்டது. ஆனால் கடன்கள் உணவுத் தானியங்களைப் பதுக்குவதற்காகப் பயன்படுத்தப் பட்டதால், இந்த வரம்புச் சலுகை 1966 ஆகஸ்ட் 16-ல் நிறுத்தப்பட்டது.

**1967 ஏப்ரல் 12**

இந்தியாவில் விளையும் பருத்திமீது, அட்டவணையிலிட்ட வங்கிகள் கொடுக்கும் கடனுக்கு உச்ச அளவு விதிக்கப்பட்டது, அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டவை தவிர, ஆலைகளுக்கும் வியாபாரிகளுக்கும் பருத்திமீது கொடுக்கப்படும் கடன்மீதுதடை விதிக்கப்பட்டது.

**1967 ஏப்ரல் 13**

நெல், அரிசி ஆகியவற்றின்மீது அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள் கொடுக்கும் கடனை ரிசர்வ் பாங்க் மேலும் இறுக்கியது. 1966-67-ல் நெல் உற்பத்தி குறையும் என்று எதிர்பார்க்கப் பட்டதால், ரிசர்வ் பாங்க் இக் கட்டுப்பாட்டை விதித்தது. 50% குறைந்த அளவு வரம்பு தொடர்ந்து செயலில் இருந்தது. மேலும், அரிசி விலை மிகவும் உயர்ந்திருந்ததும் ஒரு காரணமாகும். அரிசி யின் மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண் 1967 பிப்ரவரியில் 184 ஆக இருந்தது (1952–53=100) அதாவது 1966 பிப்ரவரியில் இருந்ததைவிட 18·7 விழுக்காடு உயர்ந்திருந்தது.

**1967 மே 4**

1967 ஏப்ரல் 12-ல் பருத்திமீதான கடனுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது என்று முன்பே கூறப்பட்டது. 1967 மே 4-ல் ஏற்றுமதி செய்யப்படும் பருத்திமீதான கடனுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

**1967 மே 2**

அட்டவணையிலிடாத வங்கிகள், மாநிலக்கூட்டுறவு வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவை இந்தியாவில் விளையும் பருத்தி மீது கொடுக்கும் கடனுக்கு உச்சஅளவு விதிக்கப்பட்டது.

**1967 ஜூலை 6**

நிலக்கடலை பிற எண்ணெய் வித்துகள் ஆகியவற்றின் பேரில் உள்ள பண்டக இரசீதுகளின் பேரில் கொடுக்கப்படும் கடனுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ‘பிற எண்ணெய் வித்துகள்’ மீது கொடுக்கப்படும் கடனின் உச்சஅளவு 90 விழுக்காட்டிலிருந்து 75 விழுக்காட்டிற்குக் குறைக்கப்பட்டது. வனஸ்பதி உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்படும் கடன்கள் குறைந்த அளவு வரம்புத் தேவையிலிருந்து விலக்குப்பெற்றன. சில எண்ணெய் ஏற்றுமதியாளர்களுக்குச் சில சலுகைகளும் அளிக்கப்பட்டன.

நிலக்கடலைமீது கொடுக்கப்படும் கடன்களைப் பொறுத்த வரை, சரக்கு மதிப்பில் குறைந்தது 50 விழுக்காடு அளவிற்காவது வரம்பு வைத்திருக்குமாறு வங்கிகளுக்குக் கட்டளையிடப்பட்டது. ‘பிற எண்ணெய் வித்துகளும்’ இந்தக் கட்டுப்பாட்டில் அடங்கும்.

**1967 செப்டம்பர் 14**

தாவர எண்ணெய்மீது கடன் கொடுப்பதுபற்றி விதிக்கப் பட்டிருந்த கடன் அளவு, குறைந்த அளவு வரம்புத் தேவை ஆகிய கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

**1967 நவம்பர் 1**

பருத்தி ஆலை தவிர பிறருக்குப் பருத்தியின் பேரில் கொடுக்கப்படும் கடனுக்குக் குறைந்த அளவு வரம்பு 35 விழுக் காடும், பருத்தி ஆலைகளுக்கு 25 விழுக்காடும் விதிக்கப்பட்டது.

**1967 நவம்பர் 2**

1966 அக்டோபரில் இருந்ததைவிட, 1967 அக்டோபரில் நாட்டுச் சர்க்கரை மொத்த விற்பனை விலை மும்மடங்கு அதிகமாகி யிருந்ததால், அதன்மீது கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது. அதன்மீது கொடுக்கப்படும் கடனுக்குக் குறைந்த 50 விழுக்காடு வரம்பு வைத்திருக்க வேண்டும் என்று ரிசர்வ் பாங்க் கட்டளையிட்டது.

**1967 நவம்பர் 16**

பருத்திமீது அடகின் (pledge) பேரில் 40 விழுக்காடு குறைந்த அளவு வரம்பும், அடைமானத்தின் (Hypothecation) பேரில் கடன் கொடுத்தால் 25 விழுக்காடு குறைந்த அளவு வரம்பும் விதிக்கப் பட்டது.

**1967 டிசம்பர் 9**

மாநில அரசாங்கங்களின் சார்பில் நெல், அரிசி ஆகியவை கொள்முதல் செய்வோர்க்கு நெல், அரிசிமீது கொடுக்கப்படும் கடனுக்கு விலக்கு அளிக்கப்பட்டது.

**1968 சனவரி 13**

தாவர எண்ணெய்மீது கொடுக்கப்படும் கடன்கள் இரு வகையாகப் பிரிக்கப்பட்டன.

1. வனஸ்பதி உற்பத்தியாளருக்கும் பிற பதிவு செய்யப் பட்ட எண்ணெய் ஆலைகளுக்கும் கொடுக்கப்படும் கடன்கள்.

2. மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் கடன்கள்.

இவ்விரு வகையினருக்கும் தனித்தனிக் கடன் உச்ச அளவுகள் வரையறுக்கப்பட்டன. மேலும், முதல் வகைக் கடனுளி

களுக்குக் கொடுக்கப்படும் கடன்களுக்குக் குறைந்த அளவு வரம்பு 35% ஆகவும், பிறருக்கு 60% ஆகவும் வரையறுக்கப் பட்டது. நிலக்கடலைக்கான பண்டக இரசீதின் (warehouse receipt) பேரில் கொடுக்கப்படும் கடன்களுக்குக் குறைந்த அளவு வரம்பு 35% ஆகவும், பிற வகையில் கொடுக்கப்படும் கடன்களுக்கு 50% ஆகவும் நிருணயிக்கப்பட்டது. எள் மற்றும் 'பிற எண்ணெய் வித்துகளின்' பேரில் கொடுக்கப்படும் கடன்களுக்குக் குறைந்தது 50% வரம்பு வைத்திருக்க வேண்டும்.

தாவர எண்ணெயின் பேரில் கொடுக்கப்படும் கடன்களுக்கு 60% குறைந்த அளவு வரம்பு விதிக்கப்பட்டது. (வனஸ்பதி உள்பட) ஆனுல், வனஸ்பதி உற்பத்தியாளருக்கும் பதிவு பெற்ற எண்ணெய் ஆலைகளுக்கும் கொடுக்கப்படும் கடன்களுக்கு 35% வரம்பு போதுமானது.

**1968 சனவரி 31**

வங்கிகள், பங்குகள்மீது கடன் கொடுப்பது பற்றி ஒரு சுற்றறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

1. வங்கிகள் பங்குகள்மீது கடன் கொடுப்பது பற்றிச் சில வழி முறைகளை ரிசர்வ் பாங்க் வகுத்துள்ளது. அவற்றின்படி, கடன் கொள்கை மாற்றியமைக்கப் பட்டது; ஆனுல் கட்டுப்பாடு இறுக்கப்படவில்லை.

2. வங்கிகள் தொடர்ந்து பங்குகள்மீது கடன் கொடுக்கலாம், ஆனுல் ரிசர்வ் பாங்க் வகுத்துள்ள வழி முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

3. பங்குகள் பேரில் முன்பே கொடுத்த கடன்களைத் திருப்பிக் கொடுக்குமாறு வங்கிகள் கேட்க வேண்டிய தில்லை.

4. பங்குத் தரகர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மேல் வரைப்பற்று வசதிகள் அவர்களின் வியாபாரத்தைப் பொருத்துத் தக்க அளவில் இருக்குமாயின், அக் கடன்கள் பாதிக்கப்பட வேண்டியதில்லை.

5. ஊக வணிக நோக்கங்களுக்குப் (speculative purposes) பயன்படுத்தப்படாமல் இருக்கும்வரை, முதலீட்டுக் கம்பெனிகளின் கடன் தேவைகள் அளிக்கப்படலாம்.

6. முதலீட்டாளர்களுக்குப் பங்குகள்மீது கொடுக்கப்படும் கடன்களைப் பொறுத்தவரை, அவர்களின் பங்குகள்

விற்பனைக்கு உகந்ததாகவும், வங்கிகள் வைத்திருக்கும் குறைந்த அளவு வரம்பு போதுமானதாகவும் இருக்கும் வரை, அவர்கள் கடனைத் திருப்பிக் கொடுப்பது பற்றி எத் திட்டமும் (Repayment programme) வகுக்க வேண்டியதில்லை.

7. நிருவாக முகவருக்குப் (Managing Agents) பங்குகளின் பேரில் கொடுக்கப்படும் கடன்களை மறுபரிசீலனை செய்தல் வேண்டும்.

8. கடன் திருப்பிக் கொடுத்தல் பற்றிய திட்டத்தை முடிவு செய்யும்போது கடனாளியின் திறனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

**1968 சனவரி 29**

வங்கிகள் அரசாங்க ஆவணங்கள் பேரில் கொடுக்கும் கடன்களை அதிகரிக்குமாறும் குறைந்த வட்டியில் கொடுக்குமாறும், ரிசர்வ் பாங்கின் ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

**1968 பிப்ரவரி 13**

பண்டகங்கள் (werehouse) கட்டுவதற்காக வங்கிகள் கடன் கொடுக்க மறுத்தது, ரிசர்வ் பாங்கின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், ரிசர்வ் பாங்க் அத்தகைய கடன்களைக் கொடுக்கலாம் என்று கருத்துத் தெரிவித்தது.

**1968 ஏப்ரல் 2**

பருத்தி உற்பத்தி திருப்தி அளிப்பதாக இருந்ததால், பருத்தி மீது கொடுக்கப்படும் கடன்மீதான கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது. சரக்கு மதிப்பில் 25% குறைந்த அளவு வரம்பு வைத்திருந்தால் போதுமானது.

**1968 மே 27**

''பிற உணவுத்தானியங்கள்'' பேரில் கொடுக்கப்படும் கடன்களுக்கு 50% ஆக இருந்த குறைந்தஅளவு வரம்பு 35% ஆக ஆக்கப்பட்டது. 'பிற உணவுத் தானியங்களின்' பண்டக இரசீதுபேரில் கொடுக்கப்படும் கடன்களுக்கு 40% ஆக இருந்த குறைந்த அளவு வரம்பு 25% ஆக ஆக்கப்பட்டது.

எண்ணெய் வித்துகளின் பேரில் கொடுக்கப்படும் கடனுக்குப் பதிவு செய்யப்பட்ட எண்ணெய் ஆலைகளுக்கு 25% குறைந்த

அளவு வரம்பும், பிறருக்கு 35% குறைந்தஅளவு வரம்பும் விதிக்கப்பட்டது; பண்டக இரசீதுகளின்பேரில் கொடுக்கப்படும் கடன்களுக்கும் 25% வரம்பு வைத்திருத்தல் வேண்டும்.

தாவர எண்ணெய் (வனஸ்பதி உட்பட) மீதான கடனுக்கு, வனஸ்பதி உற்பத்தியாளருக்கும், பதிவு செய்யப்பட்ட எண்ணெய் ஆலைகளுக்கும் 25% வரம்பும் பிறருக்கு 35% வரம்பும் வரையறுக்கப்பட்டது.

**1968 சூன் 17**

பருத்தி ஆலைகளுக்குப் பருத்திமீது கொடுக்கப்படும் கடன்களுக்கு 25%-லிருந்து 20% குறைந்த அளவு வரம்பு நிருணயிக்கப்பட்டது.

**1968 சூலை 22**

கோதுமைக்கான பண்டக இரசீதுகளின் பேரில் கொடுக்கப்படும் கடன்களுக்கு 50% ஆக இருந்த குறைந்த அளவு வரம்பு 35%-க்குக் குறைக்கப்பட்டது; பிற வகையில் கொடுக்கப்படும் கடன்களுக்கு 40%-லிருந்து 25%-க்குக் குறைக்கப்பட்டது.

**1968 அக்டோபர் 26**

கச்சாச் சணல், சணல் பொருள்கள் ஆகியவற்றின் விலை அதிகரித்ததால் அவற்றின்மீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. சணல் ஆலைகளுக்குக் கொடுக்கப்படும் கடனுக்கு 35% குறைந்த அளவு வரம்பு வைத்திருக்க வேண்டும்.

**1968-69**

எண்ணெய் வித்துகளின் உற்பத்தி குறைந்ததால், அவற்றின் விலைகள் உயர்ந்தன. ஆகவே, அவற்றின் மீதான கடனுக்கு 1968 நவம்பரில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்ட ஆலைகளுக்குக் கொடுக்கப்படும் கடனைப் பொறுத்தவரை 35% குறைந்த அளவு வரம்பும், பிறருக்கு 45% ஆகவும் நிருணயிக்கப்பட்டது.

தாவர எண்ணெயின் பேரில் வனஸ்பதி உற்பத்தியாளருக்கும், பதிவு செய்யப்பட்ட ஆலைகளுக்கும் கொடுக்கப்படும் கடனுக்கு 35% குறைந்த அளவு வரம்பும், பிறருக்கு 45% குறைந்த அளவு வரம்பும் நிருணயிக்கப்பட்டது.

பருத்தி உற்பத்தி திருப்தி அளிப்பதாக இருந்ததால், பருத்தி பேரில் கொடுக்கப்படும் கடன்மீது இருந்த எல்லாக் கட்டுப்பாடுகளும் 1968 நவம்பர் 26-ல் நீக்கப்பட்டன. ஆனால், ஆலைகள்

அல்லாத பிறருக்குக் கொடுக்கப்படும் கடன்களுக்கு, 25% குறைந்த அளவு வரம்பினை வங்கிகள் வைத்திருக்க வேண்டும்.

**1969-70**

கச்சாச் சணல் உற்பத்தி அதிகரித்ததாலும், அவற்றின்விலை குறைந்ததாலும், கச்சாச் சணல்மீது கடன் கொடுப்பது பற்றி 1968 அக்டோபரில் இடப்பட்டிருந்த கட்டுப்பாடுகள், 1969 செப்டம்பரில் நீக்கப்பட்டன.

எண்ணெய்வித்துகள், தாவர எண்ணெய், கச்சாப் பருத்தி ஆகியவற்றின் உற்பத்திக் குறைந்ததாலும் விலை ஏற்றத்தாலும் ஏற்பட்ட நிலைமையைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே 1970 சனவரி 21-ல் மேற்கண்ட பொருள்களின் பேரில் கொடுக்கப்படும் கடன் இறுக்கப்பட்டது. வங்கிக் கடனின் உதவியால் கூடுதலான உணவுத்தானியச் சரக்கு வைத்திருப்பதை ஊக்குவிக்கக்கூடாது என்பதற்காக, அவற்றின் மீதான கடன்மீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

எண்ணெய்வித்துகள், தாவர எண்ணெய் (வனஸ்பதி உட்பட) ஆகியவற்றின் பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு, சரக்கு மதிப்பில் குறைந்த அளவு 60% வரம்பினை வங்கிகள் எல்லாவகைக் கடனாளிகளுக்கும் வைத்திருக்கவேண்டும்.

உணவுத் தானியங்கள் பேரில் கொடுக்கப்படும் கடன்களுக்கு, வரம்பு 50%-க்கு உயர்த்தப்பட்டது.

எண்ணெய் வித்துகள், தாவர எண்ணெய் ஆகியவற்றைப் பொறுத்தவரை 1967-ல் இவற்றின்மீது அளித்த மொத்தக் கடனில், 70% அளவுக்குத்தான் 1969-70-ல் கடன் கொடுக்கலாம். உணவுத் தானியங்களைப் பொறுத்தவரையில், 1968-ல் உணவுத் தானியங்கள் பேரில் கொடுத்த மொத்தக் கடன் அளவில் 80% அளவுக்குத்தான் 1969-70-ல் வங்கிகள் கடன் கொடுக்கலாம்.

ஆலைகள் தவிர, பிறருக்குப் பருத்திமீது கொடுக்கும் கடனுக்கு, வரம்பு 50% லிருந்து 60%-க்கு உயர்த்தப்பட்டது; பருத்தி ஆலைகளுக்கு இந்த வரம்பு 40% ஆகும். ஆனால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் பருத்திக்கு இவ் வரம்புக் தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

உணவுத் தானியங்கள், எண்ணெய்வித்துகள், தாவர எண்ணெய்கள் (வனஸ்பதி உட்பட), பருத்தி ஆகியவற்றின் பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு, குறைந்தது 10% வட்டி வசூலிக்க வேண்டும் என்று ரிசர்வ் பாங்க் நிருணயித்தது. ஆனால், இந்திய உணவுத்தானியக் கூட்டுரு, மாநில அரசுகளின் சார்பில் உணவுத்

தானியக் கொள்முதல் அல்லது விநியோகம் செய்வோர்க்கு, இவ் விதியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

**1970 மார்ச்சு 11**

இறக்குமதி செய்யப்பட்ட சூரியகாந்தி எண்ணெயும் (Sunflower oil) மேற்கூறப்பட்ட 10% வட்டி விதியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

**1970 சனவரி 21**

ரிசர்வ் பாங்கால் இடப்பட்ட கட்டளையால் பாதிக்கப் பட்டவருக்குக்கடன் அளிக்கக்கூடாது என்று 1970 மார்ச்சு 17-ல் ரிசர்வ் பாங்க் மற்றொரு கட்டளையைப் பிறப்பித்தது. பத்திரங்கள் சேர்ந்த கேட்பு உண்டியல் (Demand documentary bill) பேரில் கடன் பெறுவோர் அக் கடன்களை நல்வழி யில் பயன்படுத்தவில்லை என்று ரிசர்வ் பாங்க் கருதியதால், அத்தகைய கடன்களைக் கொடுக்கும்போது வங்கிகள் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று ரிசர்வ் பாங்க் அறிவுரை கூறியது.

எண்ணெய் வித்துகள், தாவர எண்ணெய், பருத்தி ஆகிய வற்றின் விலை அதிகமாக உயர்ந்திருந்தபடியால், அவற்றின் மீதான கடனின் வட்டிவீதத்தை 10% லிருந்து 12%-க்கு உயர்த்து மாறு 1970 ஏப்ரல் 28-ல் வங்கிகளுக்கு ரிசர்வ் பாங்க் கட்டளை யிட்டது; இந்த வட்டி வீதம் எல்லா வகைக் கடனளிகளுக்கும் பொருந்தும். பருத்தி ஆலைகள் தவிர பிறருக்கு இந்தியப் பருத்தி மீது கொடுக்கும் கடனுக்கான குறைந்தஅளவு வரம்பினை 60% லிருந்து 75%-க்கு, ரிசர்வ் பாங்க் உயர்த்தியது. அரசாங்கத்தால் நிருவகிக்கப்படும் அல்லது அரசாங்கப் பருத்தி ஆலைகளுக்கும், நிதி நிலைமையைப் பொறுத்தவரை பலவீனமாக உள்ள பருத்தி ஆலை களுக்கும் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.

நாட்டுச் சர்க்கரையின் விலை குறைந்திருந்ததாலும், உற்பத்தி பெருகியிருந்ததாலும், அதன்மீது இருந்த கட்டுப்பாடுகள் 1970 சனவரி 21-ல் நீக்கப்பட்டன. இந்திய உணவுத்தானியக் கூட்டுரு விடமிருந்து வாங்கிய கோதுமைக்குப் பணம் செலுத்த முடியாமல் துன்பப்பட்டபோது, மாவு ஆலைகளுக்குக் கொடுக்கப்படும் கடனுக்கு முன்னால் இருந்த 50% வரம்பு 25%-க்கு 1970 ஏப்ரல் 10-ல் குறைக்கப்பட்டது. வங்கிகள் கொடுக்கும் கடனின் உச்ச அளவும் நீக்கப்பட்டது. பார்லிக்கு (Barley) 1970 ஏப்ரல் 28-ல் கட்டுப்பாடுகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

சர்க்கரை உற்பத்தி அதிகரித்ததாலும், சந்தையில் சர்க்கரையின் விலை குறைந்ததாலும், சர்க்கரையின் பேரில் கடன் கொடுப்பது பற்றிய 1963 ஏப்ரல் 27ஆம் நாளிலிருந்து தொடர்ந்து இருந்துவந்த கட்டுப்பாடுகள், 1970 மே நான்காம் நாள் நீக்கப்பட்டன. 1970 மே 30-ல், சர்க்கரை ஆலைகளுக்கு அதிகக் கடன் கொடுக்குமாறு வங்கிகளை ரிசர்வ் பாங்க் கேட்டுக் கொண்டது. மேலும், சந்தைச் சர்க்கரைக்கும் (open market sugar) கட்டுப்பாட்டுச் சர்க்கரைக்கும் (levy sugar) எந்தப் பாகுபாடும் பாராட்டாமல் ஒரே அளவு வரம்பை வைத்திருக்குமாறும் வங்கிகளுக்கு ரிசர்வ் பாங்க் கட்டளையிட்டது.

வனஸ்பதி உற்பத்தியாளர்கள் தங்களுக்கு வங்கிக் கடன் கிடைக்கவில்லை என்று ரிசர்வ் பாங்கிடம் முறையிட்டதால், ரிசர்வ் பாங்க், 1970 ஜூன் 8-ல் வனஸ்பதி உற்பத்தியாளருக்கும், பதிவு செய்யப்பட்ட எண்ணெய் ஆலைகளுக்கும் கொடுக்கப்படும் வங்கிக் கடன்மீது இருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது; இக் கடனாளிகளுக்கு வங்கிகள் கொடுக்கும் கடனுக்கான உச்ச அளவுக்கு விலக்கு அளிக்கப்பட்டது. வனஸ்பதி உற்பத்தியாளருக்குத் தாவர எண்ணெயின் பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு வங்கிகள் 40% வரம்பு வைத்திருந்தால் போதுமானது. உணவுக்குத் தகுந்ததல்லாத தாவர எண்ணெய் (Non-edible vegetable oil) பேரில் கொடுக்கப்படும் கடனுக்கான உச்ச அளவுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது

## 1970-71

1970–71-ல் பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டில் செய்யப்பட்ட மாறுதல்கள் அன்றி, பொதுக்கடன் கட்டுபாட்டிலும் மாறுதல்கள் செய்யப்பட்டன.

பாங்க் வீதம் 5%-லிருந்து 6%-க்கு 1971 சனவரி 9ஆம் நாள் உயர்த்தப்பட்டதும், நிகர ரொக்கத்தன்மை வீதம் உயர்த்தப்பட்டதும், புதிய உண்டியல் அங்காடித் திட்டம் கொண்டுவரப்பட்டதும் ஈண்டு நினைவுகூரத்தக்கது.

பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டு முறையில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப்பட்டன. விளைந்திருந்த புதிய கச்சாப் பருத்தியை விற்பனை செய்வதில் உதவுவதற்காக, வங்கிகள் கச்சாப் பருத்தி பேரில் கொடுக்கும் கடன்மீது விதிக்கப்பட்டிருந்த சில கட்டுப்பாடுகள் 1970 அக்டோபர் 23-ல் ஓரளவுக்குத் தளர்த்தப்பட்டன. கடனுக்கான உச்ச அளவு நீக்கப்பட்டு அதற்குப் பதில் வரம்புக் கிரமமுறை (Graded system of margins) கொண்டு

வரப்பட்டது. ஆனுல், பின்னர் பருத்திவிலை ஏறியதால், பருத்திக் கடன் மீதிருந்த கட்டுப்பாடு 1970 டிசம்பர் 12-ல் இறுக்கப்பட்டது. வங்கிக்கடன் உதவியால் கச்சாப் பருத்தியை வாங்கிப் பதுக்கல் செய்வோரை ஊக்கமிழக்கச் செய்வதற்காகவே, ரிசர்வ் பாங்க் இந் நடவடிக்கையை மேற்கொண்டது. பருத்தி ஆலைகள் அல்லாத பிற கடனுளிகளுக்குக் கொடுக்கப்படும் கடனுக்குக் குறைந்த அளவு வரம்பு உயர்த்தப்பட்டது; உச்சக் கடன் அளவு (Celing limit on advances) குறைக்கப்பட்டது. பருத்தி அறுவடை காலதாமதமானதால், பருத்தி உற்பத்தியாளர்களுக்குப் பருத்தியை விற்பதில் துன்பங்கள் ஏற்பட்டதால் 1971 ஜூன் 30-ல், சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.

பருத்தித் துணிகளின் பேரில் கொடுக்கப்பட்ட வங்கிக்கடன் அதிகரித்து வந்ததால், வங்கிகளை அத்தகைய கடன்களைக் குறைக்குமாறு ரிசர்வ் பாங்க் 1971 பிப்ரவரி 4 ஆம் நாள் கேட்டுக்கொண்டது. குறைந்த அளவு வரம்பு 25% லிருந்து 40%-க்கு உயர்த்தப்பட்டது. பலவீனமான பஞ்சு ஆலைகள் (sick mills) நிதி நிலைமையைப் பொறுத்தவரை பலவீனமாக உள்ள ஆலைகளைத் தவிர பிற கடனுளிக்குக் கடன் கொடுக்கையில், மேலும் அதிகமான வரம்பை விதிக்கும்படி பெரிய வணிக வங்கிகளை, 1971 ஏப்ரலில், ரிசர்வ் பாங்க் கேட்டுக்கொண்டது.

உணவுத் தானியங்களின் பேரில் கொடுக்கப்படும் கடன் மீதிருந்த கட்டுப்பாடுகளுக்குச் சில திருத்தங்கள், 1970 டிசம்பர் 17-ல் கொண்டுவரப்பட்டன. வணிக வங்கிகள் விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன் கொடுப்பதற்காகவும் கிராமீயப் புறங்களிலும் (Rural areas) சிறுநகர் புறங்களிலும் (Semi-urban areas) வேளாண்மைத் தேவைக்கு வங்கிகள் கடன் கொடுப்பதில் உதவி செய்வதற்காகவும், பருப்பு ஆலைகள் (Dal mills) போன்றவைக்கு (அரிசி ஆலைகள் நீங்கலாக) வங்கிக்கடன் கிடைக்கச் செய்வதற்காகவும் மேற்கூறப்பட்ட திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

எண்ணெய் வித்துகளின் உற்பத்தி நல்ல அளவுக்கு இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும், தாவர எண்ணெய், எண்ணெய் வித்துகள் ஆகியவற்றின் விலையில் ஏற்றம் காணப்பட்டது. இக் காரணத்தினுல், இப் பொருள்களின் மீதிருந்த கடன் கட்டுப்பாடுகள் 1971 சனவரி 25-ல் மேலும் இறுக்கப்பட்டன. எண்ணெய் வித்துகள், தாவர எண்ணெய், வனஸ்பதி ஆகியவற்றின் பேரில் கொடுக்கப்படும் கடனுக்கான குறைந்த அளவு

வரம்பு 60 விழுக்காட்டிலிருந்து 75 விழுக்காட்டிற்கு உயர்த்தப் பட்டது.

அஸ்ஸாம், நாகாலந்து, மேகாலயா, ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்களிலும், மணிப்பூர், நேஃபா (Nefa) திரிபுரா ஆகிய இடங் களிலும் உள்ள கடனாளிகளின் துன்பத்தை நீக்குவதற்காக, உணவுத்தானியங்கள், எண்ணெய் வித்துகள், தாவர எண்ணெய், பருத்தி ஆகியவை பேரில் மேற்கண்ட இடங்களில் உள்ள கடனாளி களுக்குக் கொடுக்கப்படும் கடன்கள், கட்டுப்பாட்டிலிருந்து 1971 பிப்ரவரியில், விலக்கு அளிக்கப்பட்டன.

கூட்டுறவுப் பருத்தி ஆலைகளுக்கு இந்தியப்பருத்தி பேரில் அடைமானத்தின் (Hypothecation) மீது கடன் கொடுத்தால் 30% வரம்பும், அடகின் (Pledge) பேரில் கடன் கொடுத்தால் 20% வரம்பும் வைத்திருக்க வேண்டும் என்று கூட்டுறவு வங்கிகளுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது; ஆனால், கடன் திருப்பிக் கொடுப்பது பற்றியும், வட்டி கொடுப்பது பற்றியும் குறிப்பிட்ட மாநில அரசு உத்தரவாதம் அளித்திருந்தால், 10% வரம்பு போதுமானது. நாட்டுச் சர்க்கரையின் பேரில் கூட்டுறவு மத்திய வங்கிகள் கொடுக்கும் கடன் உச்ச அளவுமீதிருந்த கட்டுப்பாடுகள் 1970 செப்டம்பரில் நீக்கப்பட்டன; ஆனால், அடகின் பேரில் கடன் கொடுத்தால் 25% வரம்பும், அடைமானமாயிருந்தால் 40% வரம்பும் வைத்திருக்கவேண்டும்.

## 1971-72

கச்சாப் பருத்தி, உணவுத் தானியங்கள், எண்ணெய் வித்துகள், தாவர எண்ணெய் (வனஸ்பதி உள்பட) ஆகிய வற்றின் பேரில் அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள் கொடுக்கும் கடன்மீது 1971—72-ல் பொறுக்குக்கடன் கட்டுப்பாடு தொடர்ந்து விதிக்கப்பட்டது. சர்க்கரை, நாட்டுச் சர்க்கரை ஆகியவற்றின் உற்பத்தி குறைந்ததாலும், விலை ஏறியதாலும், இப் பொருள்கள்மீதும் 1971-72-ல் பொறுக்குக்கடன் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. 1971—72-ல் செய்யப்பட்ட சில முக்கிய மாறுதல்கள் பற்றிக் கீழே விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

1970 டிசம்பரில் பருத்திமீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு தொடர்ந்து செயல்முறையில் இருந்தது. பின்னர், பருத்தி உற்பத்தி பெருகியதால், கட்டுப்பாடுகள் படிப்படியாகத் தளர்த் தப்பட்டன. இவ்வாறு செய்கையில் கீழ்க்கண்டவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டியிருந்தது.

1. புதுவகைப் பருத்தி உற்பத்திக்கு ஊக்கமளிக்கவேண்டும்.

2. வங்கி வசதி இல்லாத மாநிலங்களிலும், நாட்டின் எல்லைப்புறப் பகுதிகளிலும் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டியிருந்தது.

3. இந்தியப் பருத்திக் கூட்டுரு (Cotton corporation of India), தேசிய மற்றும் மாநில ஜவுளிக் கூட்டுருக்கள் (National and State textile corporations),

பிற பொது நிறுவனங்கள் ஆகியவற்றின் கடன் தேவைகளை நிறைவு செய்ய வேண்டியிருந்தது.

1970-71 தொடக்கத்தில் கச்சாப் பருத்தியின் உற்பத்தி குறைந்ததால், விலை உயர்ந்தது. ஆகவே, 1970 டிசம்பரில், கச்சாப் பருத்தியின் பேரில் கொடுக்கப்படும் கடன் மீதான கட்டுப்பாடு இறுக்கப்பட்டது. பருத்தி ஆலைகள்தவிர பிற கடனாளிகளுக்குக் கொடுக்கப்படும் கடனுக்குப் பருத்தி ரகத்தைப்பொறுத்து 60%-லிருந்து 75% வரை வரம்பு உயர்த்தப்பட்டது. உச்ச அளவுக்கடன் குறைக்கப்பட்டது. ஆலைகளைப் பொறுத்தவரை, வரம்புத் தேவையில், மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. பின்னர், 1971 ஆகஸ்டில், பம்பாய், அகமதாபாத் ஆகிய இடங்கள் தவிர பிற இடங்களில் உள்ள ஆலைகள் கச்சாப் பருத்தி வாங்குவதற்கும் இருப்பு வைத்துக்கொள்வதற்கும் வசதி அளிக்கும் வகையில், கட்டுப்பாடுகளில் 1971 ஆகஸ்டில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. 1971 நவம்பரில், புதிய பருத்திப் பருவத்திற்கான தனது கடன் கொள்கையை அறிவிக்கும் போது, ரிசர்வ் பாங்க் சில மாற்றங்களைச் செய்தது. ஆலைகள் தவிர, பிறருக்குக் கொடுக்கப்படும் கடனுக்கு, பருத்தி ரகத்தைப் பொறுத்து 50%-லிருந்து 75% வரை வரம்பு விதிக்கப்பட்டது; கடனின் உச்சஅளவும் உயர்த்தப்பட்டது.

பருத்தி உற்பத்தி அதிகரித்ததால், 1972 மார்ச்சில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. ஆலைகள் தவிர, பிறருக்குக் கொடுக்கப்படும் கடனுக்கு, வரம்பு 10% குறைக்கப்பட்டது.

புதுரகப் பருத்தி உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், அவைகளுக்குக் கடன் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. ஆனல், 40% வரம்பும் 12% வட்டியும் விதிக்கப்பட்டிருந்தது. 1972 மார்ச்சில் வரம்பு மட்டும் 25% க்குக் குறைக்கப்பட்டது.

இந்தியப் பருத்திக் கூட்டுரு, தேசிய, மாநில ஜவுளிக் கூட்டுருக்கள், பிற பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு வசதிஅளிக்கும் வகையில் சில தனி நிபந்தனைகளின்பேரில் கடன் அளவுகள் நிருணயிக்கப்பட்டன.

இமாசலப் பிரதேசம், ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களில் பருத்திமீது கொடுக்கும் கடன் பற்றிய கட்டுப்பாடுகளிலிருந்து, 1971 ஆகஸ்டில், விலக்கு அளிக்கப்பட்டது. எல்லைப் பகுதிகளில் ஏற்படும் துன்பங்களைக் குறைப்பதற்காக, பஞ்சாப் மாநிலத்தில் உள்ள மூன்று மாவட்ட எல்லைப் பகுதிகள், ஹரியாணவில் ஓர் எல்லைப்பகுதி, ராஜஸ்தானில் ஓர் எல்லைப்பகுதி ஆகியவற்றில் பருத்தியின் பேரில் கொடுக்கப்படும் கடன்களுக்கு வரம்புத் தேவை, உச்ச அளவுக்கடன், வட்டிவிகிதம் ஆகிய கட்டுப்பாடுகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. மேற்கு வங்காளத்தில் உள்ள ஆலைகளுக்கு வரம்புக் குறைக்கப்பட்டது போல, 1972 மே இறுதியில் பீகாரில் உள்ள மில்களுக்கும் வரம்பு குறைக்கப்பட்டது.

**உணவுத் தானியங்கள்**

உணவுத் தானியங்களைப் பொறுத்தவரை, உற்பத்தி அதிகரித்தபோது அல்லது உற்பத்தி அதிகரிக்கலாம் என்று எதிர் பார்க்கப்பட்டபோது, கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன, உற் பத்தியில் தேக்கம் ஏற்பட்டபோது அல்லது உற்பத்தி குறைந்த போது, பொறுக்குக் கடன் கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டன.

கோதுமை உற்பத்தி மனநிறைவு தரத்தக்க நிலையில் இருந்ததால் உச்ச அளவுக்கடன் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. பங்கீட்டு முறையில் விநியோகிக்கப்படும் உணவுத் தானியங்களுக்கு, அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட, உரிமை வழங்கப்பட்ட மொத்த வியாபாரிகளுக்கும், சில்லறை வியாபாரிகளுக்கும், கடன் கட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டது. உணவுத் தானியங்கள் பேரில் இமாசலப் பிரதேசத்திலும், ஒரிஸ்ஸாவிலும் கொடுக்கப்படும் கடன்களுக்கு கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

உணவுத் தானிய உற்பத்தி பெருகியதாலும் புதிய மற்றும் சிறிய கடனாளிகளுக்குக் கடன் வசதிகள் அளிப்பதற்காகவும், உணவுத் தானியங்கள் மீதிருந்த கட்டுப்பாட்டில் 1972 சனவரி 3-ல் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. மாவு ஆலைகளுக்கு, கோதுமையின்பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு வரம்புக் கட்டுப் பாட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. 1970 சனவரி 1ஆம்

நாளுக்குப் பின்னர் ஓர் இலட்சம் அல்லது அதற்குக் குறைவான மக்கள் தொகை உள்ள இடங்களில் திறக்கப்பட்ட புதிய வங்கி அலுவலகங்களுக்கு 50,000 ரூபாய் கூடுதல் அளவுக்கு நெல், அரிசி, உணவுத்தானியங்கள் ஆகியவற்றின்பேரில் கடன் கொடுக்க அனுமதிக்கப்பட்டது. இந்தியக் கடன் உத்தரவாதக் கூட்டுருவால் (Credit Guarantee Corporation of India) உத்தரவாதம் அளிக்கப் பட்டுள்ள வியாபாரிகளுக்கு, உயர்ந்த அளவு 20,000 ரூபாய் வரை உணவுத்தானியங்கள் பேரில் கொடுக்கப்படும் கடன்களுக்கு வரம்புத் தேவை. உச்சக்கடன் அளவு ஆகிய கட்டுப்பாட்டி லிருந்து விலக்கு அளிக்கப்பட்டது; ஆனல், அவ் வியாபாரி ஒரு வங்கியிடமிருந்து மட்டுமே கடன் பெறுபவராக இருத்தல் வேண்டும். மாநில அரசால் உரிமை வழங்கப்பட்ட வியாபாரி களுக்கும், அரிசி ஆலைகளுக்கும் நெல்லின் பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு, வரம்புத் தேவையிலிருந்தும், உச்சக்கடன் அளவி லிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டது. சென்ற ஆண்டில் அளித்த கடனைவிட, 10% அதிகக்கடன் அளிக்க வங்கிகள் அனுமதிக்கப் பட்டன.

### எண்ணெய் வித்துகள்

எண்ணெய் வித்துகள், தாவர எண்ணெய்கள் ஆகியவற் றின்மீதான கடன் பற்றிய வரம்பு, உச்சக்கடன் அளவு ஆகிய கட்டுப்பாடுகள் நிலக்கடலை, கடுகு விதை, ஆமணக்கு விதை, வனஸ்பதி போன்றவற்றுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் பிற வகைக்குப் பொருந்தா என்றும் 1971 ஆகஸ்ட் 7-ல் விளக்கம் அளிக்கப்பட்டது. ஆகவே, பிறவகை எண்ணெய் வித்துகளின் உற்பத்திப் பெருக வேண்டும் என்பதற்காகக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. 1971 சனவரி 3-ல், கடுகு எண்ணெய்க்கு உச்சக்கடன் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு அளிக் கப்பட்டது; வனஸ்பதி உற்பத்தியாளர்கள், பதிவு செய்யப்பட்ட எண்ணெய் ஆலைகள் ஆகியவற்றுக்குக் கொடுக்கப்படும் கடனுக் கும் உச்சக்கடன் அளவிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. எண்ணெய் வித்துகள், எண்ணெய் வகைகள், வனஸ்பதி ஆகியவற்றின் பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு, இந்தியக்கடன் உத்தரவாதக் கூட்டுருவால் (Credit Guarantee Corporation of India Ltd.) உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தால், உயர்ந்த அளவு 20,000 ரூபாய் வரையிலான கடனுக்கு உச்சக்கடன் அளவிலிருந்தும் வரம்புத் தேவைக்கட்டுப்பாட்டிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. நிலக்கடலை, வனஸ்பதி ஆகியவற்றின் பேரில் வனஸ்பதி உற்பத்தியாளருக்குக் கொடுக்கப்படும் கடனுக்கு

வரம்பு 75%-லிருந்து 60%-க்கு 1972 மே 30-ல் குறைக்கப்பட்டது; மத்திய, மாநிலப் பண்டகக் கூட்டுருக்களால் வனஸ்பதி, நிலக் கடலை ஆகியவற்றின்மீது கொடுக்கப்படும் பண்டக இரசீதுபேரில் கொடுக்கப்படும் கடனுக்கு வரம்பு 50%-க்குக் குறைக்கப்பட்டது.

**சர்க்கரை**

சர்க்கரை, நாட்டுச்சர்க்கரை ஆகியவற்றின் விலை தொடர்ந்து உயர்ந்து வந்ததாலும், அப் பொருள்கள் ஊக வணிக நோக்கங்களுக்காக வாங்கப்பட்டதாலும், அவற்றின்மீது 1971 செப்டம்பர் 23-ல் மீண்டும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. குறைந்த அளவு வரம்பு 50% ஆக நிருணயிக்கப்பட்டது; 1971 டிசம்பர் 27-ல் 65%-க்கு உயர்த்தப்பட்டது; சர்க்கரை ஆலைகள், சர்க்கரை உற்பத்தியாளர்கள் அல்லாத பிறருக்குக் கொடுக்கப் படும் கடனுக்கு, வங்கிகள் 12% வட்டி வசூலிக்க வேண்டும். ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் சர்க்கரையின்பேரில் கொடுக்கப்படும் கடனும், ஏற்றுமதிக்காக வைத்திருக்கும் சர்க்கரையின்மீது பெறும் கடனும் மேற்கண்ட கட்டுப்பாட்டில் அடங்காது.

தேசிய மற்றும் மாநில விற்பனைக் கூட்டுறவுக் கூட்டமைப் பிற்கும்,(National and State Marketing Federations) நுகர்வோர் மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் (Consumers' Whole Sale Co-operative Stores) சர்க்கரை, நாட்டுச்சர்க்கரை, ஆகிய வற்றின் பேரில் வங்கிகள் கொடுக்கும் கடன்கள் கட்டுப்பாட்டி லிருந்து 1972 ஏப்ரல் 19-ல் முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டன. அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அல்லது உரிமை வழங்கப்பட்ட மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும், அரசாங் கத்தால் அவர்களுக்குப் பங்கீடு செய்யப்பட்ட அளவுச் சர்க்கரை மீது கொடுக்கப்படும் கடனுக்கு, வரம்புத் தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. மத்திய, மாநிலப் பண்டகக் கூட்டுருக் களால் (Central and State Warehousing Corporations) அளிக்கப் படும் சேமிப்பு வசதிகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக அப் பண்டகக் கூட்டுருக்கள் கொடுக்கும் இரசீதின்பேரில் வங்கிகள் கொடுக்கும் கடனுக்கு 10% குறைவான வரம்பு வைத்திருந்தால் போதும். கட்டுப்பாட்டுக்குட்பட்ட பொருள்களின் பண்டக இரசீதின் பேரில் ஒவ்வொரு கடனுளிக்கும் கொடுக்கப்படும் வங்கிக் கடனுக்கு உயர்ந்த அளவு 25,000 ரூபாய்வரை உச்சக்கடன் அளவிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

பாகிஸ்தான், இந்தியாமீது போர் அறிவிப்பு விடுத்தபோது, சர்க்கரை, நாட்டுச்சர்க்கரை, எண்ணெய் வித்துகள், தாவர

எண்ணெய் வகைகள், உணவுத் தானியங்கள், பருத்தி ஆகியவற்றின் பேரில் எல்லைப்புறப் பகுதிக்கு அருகாமையில் உள்ள பகுதிகளிலும், கொடுக்கப்படும் கடனுக்கு 1971 டிசம்பர் 11ஆம் நாள் ரிசர்வ் பாங்க் விலக்கு அளித்தது. இவ் விலக்கு 1972 அக்டோபர் வரை அமுலில் இருந்தது.

கிராமியத் தொழில் திட்டத்தின் (Rural industrialisation projects) கீழ் உள்ள உற்பத்தி நிறுவனங்களுக்கு, உணவுத்தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், எண்ணெய்வகை, வனஸ்பதி, பருத்தி சர்க்கரை, நாட்டுச்சர்க்கரை ஆகியவை பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு, 1972 மே 30-ல், ரிசர்வ் பாங்க் முழுமையாக விலக்கு அளித்தது.

## 1972–73

1972-73-ல், பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டைச் செம்மையாக்குவதற்காகச் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. செயல் முறைகளும் செம்மையாக்கப்பட்டன.

உணவுத்தானியங்கள், எண்ணெய் வித்துகள், எண்ணெய் வகைகள், ஆகியவை சந்தையில் கிடைப்பது அரிதாக இருந்ததாலும் அவற்றின் விலை மிக வேகமாக உயர்ந்திருந்ததாலும் அவற்றின் பேரில் கொடுக்கப்படும் கடன்மீதிருந்த கட்டுப்பாட்டை ரிசர்வ் பாங்க் மேலும் இறுக்கியது. பருத்தி உற்பத்தி பெருகியிருந்த தால், அதன் மீதான கட்டுப்பாடு குறைக்கப்பட்டது.

எந்த அளவுக்குப் பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டில் 1972-73-ல் மாறுதல்கள் செய்யப்பட்டன என்பதுபற்றி இனி விரிவாகக் காண்போம்.

### உணவுத் தானியங்கள்

1972 நவம்பர் 15-ல், மும்முரப் பருவத்தின் கடன் கொள்கையை ரிசர்வ் பாங்க் அறிவித்தது. இதன்படி, உணவுத் தானியங்கள் பேரில் கொடுக்கப்படும் கடனின் அனுமதிக்கப்பட்ட அளவு, வங்கிவித அடிப்படையில் (Bankwise basis) நிருணயிக்கப் படாமல், கடனாளிவித அடிப்படையில் (partywise basis) நிருணயிக்கப்பட்டது. உணவுத்தானியங்களுக்குக் (குறிப்பாகக் பயறு வகைக்குக் (Pulses))கடன் கொடுக்கையில் எச்சரிக்கையுடன் கூடிய கொள்கையைப் பின்பற்றுமாறு ரிசர்வ் பாங்க் வங்கிகளுக்கு அறிவுரை கூறியது. சோளம் (Maize)மீது நீக்கப்பட்டிருந்த கடன் கட்டுப்பாடு மீண்டும் விதிக்கப்பட்டது.

உணவுத்தானியங்களின் விலை ஏறுமுகமாகவும், உற்பத்தி இறங்குமுகமாகவும் இருந்ததால், அவற்றின்மீதான கடனின் குறைந்த அளவு வரம்பு 50-%—லிருந்து 60%—க்கு 1973 ஏப்ரல் 18-ல் உயர்த்தப்பட்டது; குறைந்த அளவு வட்டி வீதமும் 10%-லிருந்து 12%-க்கு உயர்த்தப்பட்டது. இந்திய உணவுத் தானியக்கூட்டுரு, (Food corporation of India) மாநில அரசுகள், கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக்கள் (Co-operative marketing federations) மத்திய, மாநில பண்டகக் கூட்டுருக்கள் (Central & State warehousing Corporations) ஆகியவை மத்திய, மாநில அரசுகளால் உணவுத்தானியக் கொள்முதலுக்காக அல்லது விநியோகத்திற்காக முகவராக நியமிக்கப்பட்டிருந்தால், இந் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் கடன்கள், கடன் கட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக விலக்குப் பெறும்.

கோதுமை மொத்த வியாபாரத்தை (Wheat wholsale trade) அரசாங்கம் மேற்கொண்டதால், மொத்த வியாபாரிகளுக்கும், சில்லறை வியாபாரிகளுக்கும் கோதுமை மீது கடன் அளிக்கையில் சில குறிப்பிட்ட கொள்கைகளைக் கருத்தில் கொள்ளுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. 1973 மே 14ஆம் நாள் ரிசர்வ் பாங்க் வங்கிகளைக் கீழ்க்கண்டவாறு கேட்டுக் கொண்டது:

1. குறிப்பிட்ட மாநில அரசிடமிருந்து கோதுமைக் கையிருப்பைப் பெற்றிருப்பதற்கு உரிமம் பெற்ற சில்லறை வியாபாரிகள் தவிர, பிற மொத்த வியாபாரிகளுக்கும், சில்லறை வியாபாரிகளுக்கும் கோதுமையின்பேரில் கொடுத்தக் கடனில் வரவேண்டியது ஏதும் இருத்தலாகாது.

2. சில்லறை வியாபாரிகளுக்குக் கடன் கொடுக்கையில், அவர்கள் எந்த அளவிற்குச் சரக்கு வைத்திருக்க அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றனரோ, அச் சரக்கு மதிப்பின் அளவுக்குத்தான் வங்கிகள் கடன் கொடுக்கலாம்.

கோதுமை உற்பத்தி செய்யும் மாநிலங்களான பஞ்சாப்' ஹரியானா, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய இடங்களில் செயல்புரியும் வங்கிகள் தனியார்களுக்குக் கோதுமைபேரில் 20,000 ரூபாய்க்கு மேல் கொடுத்த கடன்களை மறு பரிசீலனை செய்தபின் மொத்த விற்பனை வியாபாரிகளைப் பொறுத்தவரை அக் கடன் அளவுகளை நீக்கம் செய்யவும், உரிமம் பெற்ற சில்லறை வியாபாரிகளைப் பொறுத்தவரை

அக் கடன் அளவுகளைத் தகுந்த அளவுக்கு நிருணயிக்கவும், ரிசர்வ் பாங்க், 1973 மே 15-ல் வங்கிகளைக் கேட்டுக்கொண்டது.

**தாவர எண்ணெய்கள் (வனஸ்பதி உட்பட)**

நிலக்கடலையின் விலை ஏற்றத்தாலும், குஜராத் மாநிலத்தில் நிலக்கடலையில் ஊக வணிகம் நடைபெறுவதாகத் தகவல் கிடைத்ததாலும், குஜராத் மாநிலத்தில் நிலக்கடலையின்பேரில் கொடுக்கப்படும் கடனுக்கு, வரம்பு 60%-லிருந்து 75%-க்கு, 1972 ஜூலை 24-ல் உயர்த்தப்பட்டது. இக் கட்டுப்பாடு, நிலக்கடலையைப் பொறுத்தவரை எல்லாக் கடனாளிகளுக்கும், வனஸ்பதியைப் பொறுத்தவரை வனஸ்பதி உற்பத்தியாளருக்கும் பொருந்தும். நிலக்கடலையின்பேரில் கொடுக்கப்படும் பண்டக இரசீதுகளின் பேரில், குஜராத்தில் கொடுக்கப்படும் கடன்களுக்கு வரம்பு 50%-லிருந்து 65%-க்கு உயர்த்தப்பட்டது. 1972 நவம்பர் 15-ல் மஹாராஷ்டிர மாநிலத்திற்கும் இத்தகைய உயர்ந்த, குறைந்த அளவு வரம்பு விதிக்கப்பட்டது.

1972 நவம்பர் 15-லிருந்து கடனாளி வித அடிப்படையில், உச்சக்கடன் அளவு நிருணயிக்கப்பட்டது.

விவசாயிகளுக்கு நேரடியாகக் கொடுக்கப்பட்ட கடன்களும், பிரதமக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் உறுப்பினருக்கு, கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட எண்ணெய் வித்துகளின்பேரில் கொடுத்த கடன்களும், அத்தகைய ஒவ்வொரு கடன் அளவும் 2500 ரூபாய்க்கு அதிகமாகாதவரை, அக் கடன்கள், வரம்பு மற்றும் உச்சக் கடன் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டன. மேலும் சிறு கடனாளிகளுக்கு, முழுமையாக அல்லது பகுதியாக உணவுத் தானியங்கள், எண்ணெய்வித்துகள், தாவர எண்ணெய் வகை ஆகியவற்றின் பேரில், இந்தியக் கடன் உத்தரவாதக் கூட்டுருவின் கடன் உத்தரவாதத் திட்டத்தின்கீழ் கொடுக்கப்படும் கடன்களுக்கு அக் கடனின் அளவிற்கு (உயர்ந்த அளவு 20,000 ரூபாய்) வரம்பு மற்றும் உச்சக்கடன் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. ஆனால், குறிப்பிட்ட கடனாளி ஒரு வங்கியிடமிருந்து மட்டும் கடன் பெற்றிருக்கவேண்டும்.

இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் வித்துகளும், எண்ணெய்களும், கட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டன. உணவிற்குகந்த (edible) எண்ணெய்வித்துகள், எண்ணெய் ஆகியவற்றின் உற்பத்தி நிலைமையும், சந்தை நிலைமையும் மிக மோசமாக இருந்ததால் அவற்றின்பேரில் கடன் கொடுக்குமுன்னர், வங்கிகள் ரிசர்வ் பாங்கின் முன்அனுமதியைப்

பெறவேண்டும். பல்வேறு அரசாங்கத்துறைகளுக்குத் தேவைப் படும் ஆளிவிதை எண்ணெய் (Linseed oil,) ஆமணக்கு எண்ணெய் (Castor seed oil) ஆகியவை எளிதில் கிடைக்கச் செய்வதற்காக, அவற்றின்மீது கொடுக்கப்படும் கடனின் வரம்பு 75%-லிருந்து 30%—க்குக் குறைக்கப்பட்டது.

### பருத்தி

1972–73-ல் பருத்திப் பருவக்காலத்தின்போது, பருத்தி எளிதாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருப் பினும், பருத்திமீதிருந்த கட்டுப்பாட்டைத் தொடர்ந்து செயல் படுத்த ரிசர்வ் பாங்க் முடிவுசெய்தது. ஆனல், கிடைக்கக்கூடிய பருத்தி தகுந்த முறையில் விநியோகிக்கப்படுவதற்காகக், கட்டுப் பாடுகளில் ஒரு சில சிறிய திருத்தங்கள் 1972 நவம்பர் 15-ல் செய்யப்பட்டன. (1) பம்பாய், அகமதாபாத் ஆகிய இடங் களில் உள்ள ஆலேகள் 12 வாரங்களுக்குத் தேவையான சரக்குக் கையிருப்பு வைத்திருக்குமாயின் அவற்றிற்கு 25% வரம்பும், 12 வாரத்திற்குக் கூடுதலான காலத்திற்குத் தேவையான சரக்குக் கையிருப்பு வைத்திருக்குமாயின் அவைகளுக்கு 50% வரம்பும் வைத்திருத்தல் வேண்டும். அரசாங்கக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட ஆலேகளுக்கும், பீகார், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் உள்ள ஆலேகளுக்கும், கையிருப்புச் சரக்கு தேவைப் படும் காலஅளவைப் பொறுத்து 20%-லிருந்து 35% வரை வரம்பு விதிக்கப்பட்டிருந்தது; மேற்கண்ட ஆலேகள் தவிர, பிற ஆலேகளுக்கு 14 வாரத்திற்குத் தேவைப்படும் கையிருப்புச் சரக்குக்கு 25% வரம்பும், 14 வாரத்திற்கு மேல் வைத்திருக்கும் கையிருப்புச் சரக்குக்கு 50% வரம்பும் விதிக்கப்பட்டிருந்தது. (2) ஆலேகள் தவிர, பிறருக்குக் கொடுக்கப்படும் கடனுக்கு, புதிய சரக்குகள், பழைய சரக்குகள், பல விற்பனேக் காலங்கள் ஆகியவை பற்றி இருந்த வேறுபாடுகள் நீக்கப்பட்டு, 50% வரம்பு விதிக்கப்பட்டது.

### சர்க்கரை

வெளிச்சந்தைச் சர்க்கரைக்கு, (Free market sugar) குறைந்த அளவு வரம்பான 65% தொடர்ந்து செயல்முறையில் இருந்தது. சர்க்கரை ஆலேகளுக்குக் கொடுக்கப்படும் கடனுக்கு, கட்டுப்பாட்டுச் சர்க்கரையைப் (Levy sugar) பொறுத்தவரை 10% வரம்பும், வெளிச்சந்தைச் சர்க்கரைக்கு 15% வரம்பும் விதிக்கப்பட்டிருந்தது. உற்பத்தி நிறுவனங்களுக்கு (அதாவது, தொழிலுக்குப் பயன்படுத்துவோருக்கு) கட்டுப்பாடுகளிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

1972 டிசம்பர் 20-ல், எல்லைப்புறப் பகுதியிலும் எல்லைப் புறப் பகுதிக்கு அருகாமையிலும், கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பொருள்களின்மீதான கடனுக்கு அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்கு பருத்தியைப் பொறுத்தவரை 1973 சூன் வரையிலும், கட்டுப் பாட்டுக்கு உட்பட்ட பிற பொருள்களுக்கு 1973 ஏப்ரல் வரையிலும் நீடிக்கப்பட்டது.

இவ்வாறு பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டுக் கொள்கையைப் பின்பற்றும்போது, நியாயமான தேவைகளுக்கும், பின்தங்கிய பகுதிகளுக்கும், விரும்பத்தக்க துறைகளுக்கும், உண்மையான தேவைகளுக்கும், சிறு கடனாளிகளுக்கும் தேவைப்படும் கடனை அளிப்பதற்காகச் சில சமயங்களில் கட்டுப்பாடுகள் தளர்த்தப் பட்டன; வேறு சில சமயங்களில் கட்டுப்பாடுகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

## 1973–74

பொதுக்கடன் கொள்கைக்குட்பட்டு, பொறுக்குக்கடன் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பொருள்களின் பேரில் கொடுக்கப்படும் கடன்களும் இறுக்கப்பட்டன. இந்த ஆண்டில் பருத்தி ஜவுளி, பருத்திநூல் ஆகியவற்றின்மீது பொறுக்குக் கடன் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. 1973 நவம்பர் 17-லிருந்து எல்லாவகைக் (பொறுக்குக்கடன்) கடனாளிகளிடமிருந்தும் வசூலிக்கப்படும் வட்டி வீதம் 12%-லிருந்து 13% க்கும், 1974 சூலை 23-லிருந்து 13%-லிருந்து 15%-க்கும் உயர்த்தப்பட்டது, வங்கிக் கடன் உதவியால் கூடுதலான கையிருப்புச் சரக்கு வைத்திருப்பதைத் தடுப்பதற்காக எல்லாக் கடன்களையும், குறிப்பாக 20,000 ரூபாய்க்கு அதிகமாக உள்ள கடன் கணக்குகளையும் மிகக் கவனத்துடன் கண்காணித்து வருமாறு எல்லா வங்கிகளும் ரிசர்வ் பாங்கால் கேட்டுக் கொள்ளப்பட்டன.

### உணவுத் தானியங்கள்

மாவு ஆலைகளுக்குக் கோதுமைபேரில் கொடுக்கப்படும் கடன் களுக்கு உச்சஅளவுக் கடன் கட்டுப்பாடோ வரம்புக் கட்டுப் பாடோ விதிக்கப்படவில்லை. ஆனால் 1973 நவம்பர் 17-லிருந்து குறைந்த அளவு வரம்பு 25% விதிக்கப்பட்டது. கோதுமை மொத்த விற்பனையாளர்களுக்குக் கோதுமைபேரில் கொடுக்கப் படும் கடன்கள்மீதான தடை தொடர்ந்து அமுலில் இருந்தது. 1970-71, 1971-72, 1972-73 ஆகிய ஆண்டுகளில் கோதுமை பேரில் எவரேனும் கடன் பெற்றிருந்தால், அக் கடன்களை வேறு

உணவுத்தானியங்கள் வாங்கிப் பதுக்குவதற்குப் பயன்படுத்தக் கூடாது என்றும் ரிசர்வ் பாங்க் உத்தரவிட்டது. அரிசி மொத்த விற்பனை அஸ்ஸாம் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டதால், அஸ்ஸாம் அரசால் அனுமதிக்கப்பட்டவர்களைத் தவிர பிறருக்கு அரிசிபேரில் கொடுக்கப்படும் கடனுக்குத் தடை விதிக்கப்பட்டது. உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், பிஹார், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் 1970 சனவரி 1ஆம் நாளுக்குப் பின்னர் ஓர் இலட்சம் அல்லது அதற்குக் குறைவான மக்கள் தொகையை உடைய இடங்களில் திறக்கப்பட்ட புதிய வங்கிக் கிளைகளை ஊக்குவிக்கும் வகையில், அத்தகைய ஒவ்வொரு வங்கியும் உணவுத்தானியங்கள்பேரில் கொடுக்கும் கடன் அளவு அத்தகைய ஒவ்வொரு வங்கிக்கும் 50,000 ரூபாயிலிருந்து ஓர் இலட்ச ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது. பிற மாநிலங்களில் 50,000 ரூபாய் அளவு தொடர்ந்து அமுலில் இருந்தது.

மாநில அரசுகளின் வசூல் திட்டத்திற்கு (Levy scheme) உட்பட்ட உரிமம் பெற்ற உரிமையாளர்களுக்கும், அரிசி ஆலைகளுக்கும் கட்டுப்பாட்டிற்கு அல்லது வசூலுக்குட்பட்ட நெல், அரிசி சரக்குகளுக்கு அளிக்கப்படும் கடன்களுக்கு வரம்புக் கட்டுப் பாட்டிலிருந்தும் உச்சஅளவுக் கடன் கட்டுப்பாட்டிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டது. இதுபோலவே, மாநில அரசுகளால் நியமிக்கப்பட்ட அல்லது உரிமம் வழங்கப்பட்ட உணவுத்தானிய மொத்த விற்பனையாளர், சில்லறை விற்பனையாளர்களுக்கு உணவுத்தானியங்கள்பேரில் வழங்கப்படும் கடன்களுக்குக் கட்டுப் பாட்டிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டது; இந்த ஆண்டில் இத்தகைய விலக்கு மஹாராஷ்டிர மாநிலத்துக்கும் அளிக்கப் பட்டது. அரிசி ஏற்றுமதிக்கு முன்னரும், பின்னரும் அரிசி பேரில் வங்கிகள் கொடுக்கும் கடன்களுக்குக் கட்டுப்பாட்டிலிருந்து முழுவிலக்கு அளிக்கப்பட்டது. உணவுத்தானியங்கள்பேரில் கடன் பெற்றோர் கடனைத் தவறான வழியில் பயன்படுத்துவதாகத் தெரிய வந்தால் மேற்கொண்டு கடன் கொடுக்கக்கூடாது என்றும் கொடுத்தக் கடனைத் திரும்பப் பெறுமாறும் வங்கிகளை ரிசர்வ் பாங்க் கேட்டுக் கொண்டது.

**எண்ணெய் வித்துகள், தாவர எண்ணெய் (வனஸ்பதி உட்பட)**

இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் வித்துகள், தாவர எண்ணெய் ஆகியவற்றின்பேரில் கொடுக்கப்படும் கடன்களுக்கு அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்குச் சலுகை 1973 நவம்பர் 17-ல் நிறுத்தப்பட்டது; ஆனால் இந்திய உணவுத் தானியக்கூட்டுறுவும்,

இந்திய வர்த்தகக் கூட்டுருவும் இதில் அடங்காது. ஆமணக்குவிதை ஆளிவிதை (Linseed) ஆகியவற்றின் பேரில் கொடுக்கப்படும் கடன் களுக்குக் குறைந்த அளவு வரம்பு 75%-லிருந்து 60%-க்கும், அப் பொருள்களின் பேரில் உள்ள பண்டக இரசீதுகளின் மீதான கடன் களுக்கு 65%-லிருந்து 50%-க்கும் வரம்பு அளவு குறைக்கப்பட்டது. ஆளிவிதை எண்ணெய் ஏற்றுமதிக்குக் கொடுக்கப்படும் கடன்கள் 1974 ஏப்ரல் 30-லிருந்து கட்டுப்பாட்டிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டது. உணவுக்கு உகந்த எண்ணெய், எண்ணெய் வித்துகளின் அளிப்பு நிலைமை திருப்தியளிக்காததால், அவற்றின் பேரில் புதுக் கடனாளிகளுக்குக் கடன் அளிக்கக்கூடாது என்றும், கடன் அளிப்பதானால் ரிசர்வ் பாங்கின் முன்அனுமதியைப் பெற வேண்டும் என்றும் வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

பருத்தி:—இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி பேரில் கொடுக்கப் படும் கடன்களுக்கு அளிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலக்கு 1973 நவம்பர் 17-ல் நிறுத்தப்பட்டது; இவ்வகைப் பருத்திக்கும் 25% குறைந்த அளவு வரம்பு விதிக்கப்பட்டது.

சர்க்கரை:— சர்க்கரை ஆலைகளுக்குக் கட்டுப்பாட்டுச் சர்க்கரை பேரில் கொடுக்கப்படும் கடன்களுக்குக் குறைந்த அளவு வரம்பு 10%-லிருந்து 15%-க்கும், வெளிச்சந்தைச் சர்க்கரைபேரில் கொடுக்கப்படும் கடன் வரம்பு 15%-லிருந்து 25%-க்கும் உயர்த்தப் பட்டது.

பருத்தி ஜவுளி நூல்: பருத்தி ஜவுளிகள், நூல் ஆகியவற்றின் விலை உயர்ந்துவந்ததால், அவற்றின் மீது 1973 நவம்பர் 17 லிருந்து பொறுக்குக்கடன் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஆகவே ஜவுளி மில்களுக்கு ஜவுளி பேரில் முன்பே கொடுத்தக் கடனுக்கு வரம்பை மேலும் 10% உயர்த்துமாறு வங்கிகளை ரிசர்வ் பாங்க் கேட்டுக்கொண்டது. புதிதாக வழங்கும் கடன்களுக்குத் தற்போது உள்ள வரம்பைவிட 10% அதிக வரம்பு வைத்திருக்கவேண்டும். இப் பொருள்களின்பேரில் உரிமையாளர்கள், வியாபாரிகள், விற்பனைமுகவர்கள் ஆகியோருக்குக் கொடுக்கப்படும் கடனுக்குக குறைந்த அளவு வரம்பு 40% எனவும் நிருணயிக்கப்பட்டது.

பொறுக்குக்கடன் கட்டுப்பாடுக்குட்பட்டப் பொருள்களின் பேரில் வங்கிகள் கொடுத்த கடன் கணிசமாகக் குறைந்துள்ளது என்பதை அட்டவணை 5—லிருந்து நன்கு அறியலாம். பொறுக்குக் கடன் கட்டுப்பாடு மிகவும் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது என்பதை இப் புள்ளி விபரங்கள் தெளிவாக்குகின்றன.

# அட்டவணை 5

**அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டப் பொருள்களின் பேரில் கொடுத்தக் கடன்**

(ரூபாய் கோடிக்கணக்கில்)

| பிணையம் | 1970 மார்ச்சு 13 | மொத்தக் கடனில் விழுக்காடு | 1971 மார்ச்சு 12 | மொத்தக் கடனில் விழுக்காடு | 1972 ஜூன் 29 | மொத்தக் கடனில் விழுக்காடு | 1973 மார்ச்சு 31 | மொத்தக் கடனில் விழுக்காடு | 1974 மார்ச்சு 31 | மொத்தக் கடனில் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. உணவுத் தானியங்கள் (உணவுத் தானியக் கொள்முதல் கடன் நீங்கலாக) | 54.96 | 1.4 | 52.01 | 1.1 | 98.00 | 1.8 | 32.64 | 0.5 | 38.90 | 0.5 |
| 2. சர்க்கரை | 158.77 | 4.1 | 196.52 | 4.2 | கி.வி. | கி.வி. | 113.76 | 1.9 | 113.73 | 1.6 |
| 3. நிலக்கடலை | 16.47 | 0.4 | 10.34 | 0.2 | 8.76 | 0.2 | 15.73 | 0.3 | 12.00 | 0.2 |
| 4. ஆளி விதை | 0.33 | — | 0.33 | — | 0.63 | — | 0.37 | — | 0.25 | — |
| 5. ஆமணக்கு விதை | 0·13 | — | 0·16 | — | 0·26 | — | 0·91 | — | 0·76 | — |
| 6. மணிலா எண்ணெய் | 7.62 | 0.2 | 9.02 | 0.2 | 5.83 | 0.1 | 6.11 | 0.1 | 6.06 | 0.1 |
| 7. கடுகுவிதை எண்ணெய் | 1.63 | — | 2.23 | 0.1 | கி.வி. | கி.வி. | 1.21 | — | 2.76 | — |

## அட்டவணை 5-ன் தொடர்ச்சி

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8. | ஆமணக்கு எண்ணெய் | 0.35 | — | 0.56 | — | 0.27 | — | 4.32 | 0.1 | 2.68 | — |
| 9. | ஆளி எண்ணெய் | 0.26 | — | 0.35 | — | 0.29 | — | 0.44 | — | 0.49 | — |
| 10. | வனஸ்பதி | 4.21 | 0.1 | 6.25 | 0.1 | 5.89 | 0.1 | 3.41 | 0.1 | 5.24 | 0.1 |
| 11. | பருத்தி | 145.28 | 3.7 | 147.05 | 3.1 | 163.10 | 3.0 | 182.95 | 2.9 | 250.38 | 3.4 |
| 12. | கச்சாச்சணல் | 36.05 | 0.9 | 33.37 | 0.7 | 21.82 | 0.4 | 16.09 | 0.2 | 64.50 | 0.9 |
| | மொத்தம் (1—12) | 426.06 | 10.9 | 458.19 | 9.8 | கி.வி. | கி.வி. | 378.29 | 6.1 | 497.75 | 6.8 |
| | மொத்த வங்கிக்கடன் (பிரிவு 42 (2) | 3914.45 | 100·0 | 4672.14 | 1000 | 5479.85 | 100. | 6115.04 | 100.0 | 7276.19 | 100.0 |

கி. வி. : கிடைக்கவில்லை.

(—) : மிகமிகக் குறைவு

ஆதாரம்—Report on currency and finance 1973-74 P. 102.

**அறிவுறுத்தல் (Moral Suasion)**

ஊக வணிக நோக்கங்களுக்குப் (Speculative Purposes) பயன் படுத்தப்படும் உணவுத்தானியங்கள் அல்லது பிற பொருள்கள் பேரில் கடன் கொடுக்காதிருக்குமாறு வங்கிகளை, ரிசர்வ் பாங்க், 1943 ஜூலையில் கேட்டுக் கொண்டது. பொருள்களைப் பதுக்கிச் செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதனால் ஏற்படும் விலை உயர்வால் லாபம் அடைவதைக் கட்டுப்படுத்துவதற்கு, அரசாங்கம் விரும்பியதை ஒட்டியே, ரிசர்வ் பாங்க் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தது. பின்னர், இந்த வேண்டுகோள் எச்சரிக்கையாக மாறியது. 1943 ஜூலை 20-ல், ரிசர்வ் பாங்க் வங்கிகளுக்கு அனுப்பியச் சுற்றறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

ஊக வணிக நோக்கங்களுக்கு வங்கிகளிடமிருந்து கடன் வாங்கப்படுகிறது என்று தெரியவந்தால், இந்தியப் பாதுகாப்பு விதி 94 B-யின் (Defence of India Rules—94B) கீழ் வங்கிகளின் வழக்கமான வியாபாரத்தில் குறுக்கிடுவது பற்றிக் கவலைப் படாமல், பொதுநலங்கருதி அத்தகையக் கடன்களை, அரசாங்கம் தடை செய்யவேண்டிய அவசியம் எழலாம்.

பங்குகள், அரசாங்க ஆவணங்கள் ஆகியவற்றில் ஊக வணிகத்தைத் தடை செய்வதற்காக, அவற்றின் பேரில் கடன் கொடுக்காமல் இருக்குமாறு வங்கிகளை 1944-ல் ரிசர்வ் பாங்க் கேட்டுக் கொண்டது.

வங்கி அலுவல் நேரத்திற்குப் பிறகு காசோலைகளுக்குப் பணம் கொடுப்பது பல வகையிலும் ஒரு விரும்பத்தகாத செயலாதலால், அப் பழக்கத்தைக் கைவிடுமாறு, வங்கிகளை ரிசர்வ் பாங்க் கேட்டுக் கொண்டது.

1946-ன் முதல் பாதியில், பங்குச் சந்தையில் பங்குகளின் விலை ஏற்றம் காணப்பட்டது. வங்கிக் கடன் ஊக வணிக நோக்கங்களுக்குப் பயன்படுத்தப் பட்டிருந்தது தெரிய வந்தது. 1929-ல் அமெரிக்கப் பங்குச் சந்தையில் ஏற்பட்ட வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டி, இந்திய வங்கிகள் தொடர்ந்து பங்குகளின்பேரில் கடன் கொடுத்து ஊக வணிகத்தை ஊக்குவித்தால், பேரபாயம் நேரிடும் என்று ரிசர்வ் பாங்க் எடுத்துரைத்தது. இத்தகைய ஊக வணிகச் செயல்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பால் செல்லுமுன் தடுத்து நிறுத்தப்படாவிடில் பங்குச் சந்தையில் ஏற்படும் வீழ்ச்சி, வங்கியியல் முறை மீது தீய விளைவுகளை ஏற்படுத்தும் என்று 1946 மே 24-ல் விடுத்த சுற்றறிக்கை மூலம் வங்கிகளுக்கு ரிசர்வ் பாங்க் தெரியப்படுத்தியது.

1947 சனவரி 29-ல் அனுப்பியச் சுற்றறிக்கையில் ரிசர்வ் பாங்க் வங்கிகளைப் பின் வருமாறு கேட்டுக்கொண்டது.

1. பங்குகள் பேரில் கொடுக்கும் கடனை மொத்தக் கடனில் ஒரு நியாயமான அளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டும்.

2. ஒவ்வொரு பங்குக்கும் கொடுக்கக்கூடிய உச்ச அளவுக் கடனை (ceiling limit) நிருணயித்தல் வேண்டும்.

1948 ஆகஸ்ட் 10—ல், அரசாங்க ஆவணங்களில் வங்கிகள் முதலீடு செய்வது பற்றியப் பொதுக் கொள்கையை ரிசர்வ் பாங்க் உருவாக்கியது. கணிசமான அளவுக்கு அரசாங்க ஆவணங்களில் முதலீடு செய்வதால் ஏற்படும் பயன்களை ரிசர்வ் பாங்க் வலியுறுத்திக் கூறியது.

1949 செப்டம்பரில் ரூபாய் மதிப்புக்குறைப்பு (Rupee devaluation) செய்யப்பட்டபோது, ரிசர்வ் பாங்கின் ஆளுநர் நாட்டிலுள்ள முக்கிய வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் விளைவாக, ரூபாய் மதிப்புக் குறைப்புக்குப்பிறகு பின்பற்ற வேண்டிய கடன் கொள்கையை வரையறுத்துக் கொண்டதோடு ஊக வணிக நோக்கங்களுக்கும் கடனளிக்காமல் இருந்து ரிசர்வ் பாங்குடன் ஒத்துழைக்குமாறு ரிசர்வ் பாங்கின் ஆளுநர் வேண்டுகோள் விடுத்தார்.

1957 சூனில், விவசாயப் பொருள்களின்பேரில் கொடுக்கும் கடனைக் குறைக்குமாறும், ஆனால், அதே சமயம் தொழிலுக்குத் தேவைப்படும் நிதி வசதியை அளிக்குமாறும் ரிசர்வ் பாங்கின் ஆளுநர் தமது சுற்றறிக்கை மூலம் வங்கிகளைக் கேட்டுக் கொண்டார். இதைத் தொடர்ந்து 1957 சூலையில், ஆளுநர், வங்கியர்களுடன் நடத்திய விவாதத்தின்போது, சூன் தொடக்கத்தில் வங்கிகள் கொடுத்திருந்த 938 கோடி ரூபாய்க் கடனை 840 கோடி ரூபாய்க்கு, அக்டோபர் 15-க்குள் குறைக்குமாறு ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

பங்குகளின் பேரில் கடன் கொடுக்கையில் எச்சரிக்கையான கொள்கையைப் பின்பற்றுமாறு, 1958 ஆகஸ்டில் ரிசர்வ் பாங்க் அனுப்பிய சுற்றறிக்கை வங்கிகளைக் கேட்டுக் கொண்டது. மும்முரப் பருவத்தின்போது ஏற்பட்ட கடன் பெருக்கம் பற்றித் தமது கவலையைத் தெரிவிக்கும் வகையில், 1959 பிப்ரவரி 23-ல் வங்கிகளுக்கு ரிசர்வ் பாங்கின் ஆளுநர் ஒரு கடிதம் அனுப்பினார். மும்முரப் பருவத்தின்போது மேலும் கடனைப் பெருக்காமல் இருக்குமாறும், ரிசர்வ் பாங்கிடம் கடன் உதவி

பெறுவதை மிகக் குறைந்த அளவுக்குக் கட்டுப்படுத்துமாறும் வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. கொடுத்த பிணையற்றக் கடன்களை (Unsecured loans) மறு பரிசீலனை செய்யுமாறும், வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. ஆனால் ரிசர்வ் பாங்கின் இந்த வேண்டுகோளுக்குப் பலனில்லை. 1958—59—ன் மும்முரப் பருவத்தில் ஏற்பட்ட நிகரக் கடன்பெருக்கம் 182 கோடி ரூபாயாகும். சென்ற நான்கு ஆண்டுகளில், இந்த அளவே உச்ச அளவாகும்.

1959 மே 21-ல் உணவுத் தானியங்கள், சர்க்கரை, நிலக் கடலை ஆகியவற்றின் பேரில் கடன் கொடுக்கையில் எச்சரிக்கையான கொள்கையை மேற்கொள்ளுமாறு அட்டவணையிலிடாத வங்கி களுக்கு 1959 மே 21-ல் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மேலும், அவ் வங்கிகள் கொடுக்கும் கடன்கள் சரக்குகளைப் பதுக்குவதற் காகப் பயன்படுத்தப்படாமல் உள்ளனவா என்பதைக் கவனித்து வருமாறும் வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

1959 ஜூன் 15-ல் வங்கிகளோடு நடத்திய பேச்சு வார்த்தையில், மந்தப் பருவத்தின் (slack season) போது கொடுக்க விருக்கும் கடனைக் குறைந்தது 100 கோடி ரூபாய் அளவுக்காவது குறைப்பது விரும்பத்தக்கது என்று ரிசர்வ் பாங்க் எடுத்துரைத்தது. வங்கிகள் தாமாகவே இதைச் செயல்படுத்தினால் எவ்விதக் கடினமு மின்றி உண்மையான கடன் தேவைகளை நிறைவு செய்வதோடு ரிசர்வ் பாங்கிடம் அதிக அளவில் கடன்பெற வேண்டிய அவசிய மும் எழாது என்று ரிசர்வ் பாங்க் சுட்டிக்காட்டியது.

1959 டிசம்பர் 11-ல் ரிசர்வ் பாங்கின் கட்டளைகளால் பாதிக்கப் பட்டோரின் உண்டியல்களை (Hundis) மறுதள்ளுபடி செய்யும் பழக்கத்தைத் தயவுசெய்து ஊக்குவிக்க வேண்டாம் என்று வங்கிகளை ரிசர்வ் பாங்க் கேட்டுக்கொண்டது ரிசர்வ் பாங்க் முன்னர் பிறப்பித்த வேண்டுகோள் பலனில்லாது. போவதைத் தடுப்பதற்காகவே, இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தொடர்ந்து ஏறிக்கொண்டிருக்கும் விலைவாசிகள் கவலை அளித்ததால் விலைவாசிகளைக் குறைப்பதில் உதவுவதற்காக மந்தப் பருவத்தின்போது கொடுக்கும் கடனைக் கணிசமான அளவுக்குக் குறைக்குமாறு, 1960 மே 8-ல், ரிசர்வ் பாங்கின் ஆளுநர், அட்டவணையிலிட்ட எல்லா வங்கிகளையும் கேட்டுக் கொண்டார்; வங்கிகள் அத்தகைய செயல்களை மேற்கொள்வது அவசியம் என்று வலியுறுத்தினர்; 110 கோடி ரூபாய் அல்லது 10% அளவுக்குக் கடனைக் குறைக்கும்படி வங்கிகளைக் கேட்டுக் கொண்டார். தேவையான அளவுக்குக் கடனைக் குறைத்துக் கொண்டு வருவதில்

எல்லா வங்கிகளுடைய முழுமையான ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று தாம் நம்புவதாக ஆளுநர் தமது வேண்டுகோளில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் மிகப் பரிதாபமாக, நிலைமையில் முன்னேற்றம் ஏதும் காணப்படவில்லை. 110 கோடி ரூபாய் அளவுக்குக் கடனைக் குறைக்குமாறு கேட்டுக்கொண்டதற்கு 20 கோடி ரூபாய் அளவுக்குத்தான் வங்கிகள் கடனைக்குறைத்திருந்தன.

1963—64-ல் பங்கீடு முறையும் (Quota system) பல விதப் பொறுக்குக் கடன் கட்டுப்பாடுகளும் இருந்தபோதிலும், வங்கிகளின் கடனை அவ்வளவாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. இவற்றைப் பார்க்கையில், பலனற்றப் பொறுக்குக்கடன் கட்டுப் பாடுகளைச் செயல்படுத்துவதில் காலத்தையும் உழைப்பையும் வீணாக்காமல், அறிவுறுத்தல் முறையை (moral suasion) ரிசர்வ் பாங்க் மேற்கொண்டிருக்கலாமே என்று ஜோஹ்ரி (C. K. Johri) கூறியுள்ளார். 1966 மந்தப் பருவத்தின்போது, அரசாங்க ஆவணங்களில் முதலீட்டை அதிகரிக்குமாறு வங்கிகளை ரிசர்வ் பாங்க் கேட்டுக்கொண்டது. இந்த அறிவுரையின் பலனாக வங்கிகளின் முதலீடு 298 கோடி ரூபாய் அளவுக்கு அதிகரித் திருந்தது. 1966 செப்டம்பரில், நில அடைமான வங்கிகளின் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யுமாறு வங்கிகளை ரிசர்வ் பாங்க் கேட்டுக்கொண்டது. இந்த அறிவுரையும் நல்ல பலனை அளித்தது. 1965-66-ல் நில அடைமான வங்கிகளின் கடன் பத்திரங்களில் வங்கிகளின் முதலீடு 93 இலட்ச ரூபாயாக இருந்தது; 1966—67-ல், 3·85 கோடி ரூபாயாக இருந்தது.

1969-ன் மந்தப் பருவத்தின் தொடக்கத்தில் வங்கித்தலைவர் களோடும் (Bank chairmen), தலைமை நிறைவேற்றலுவலரோடும் (chief executives) ரிசர்வ் பாங்கின் ஆளுநர் நடத்தியப் பேச்சு வார்த்தையின்போது கடன் நிலைமை நன்கு பரிசீலனைச் செய்யப் பட்டுக் கீழ்க்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இதுவரை குறுகியக் காலக் கருவூல மாற்று உண்டியல்களில் முதலீடு செய்ததுபோல் அல்லாமல், நீண்டகாலப் பொறுப் புரிமையர் ஆவணங்களில் (long dated trustee-securities) குறிப் பாக, மாநில மின்சார வாரியங்கள், தொழில் நிதியக் கூட்டுருக்கள், நிலவள வங்கிகள் ஆகியவை வெளியிடும் ஆவணங்களில் முதலீடு செய்வது நன்மை பயக்கவல்லது.

ரிசர்வ் பாங்கின் இந்த அறிவுரை ஓரளவுக்கு வெற்றிகர மாக அமைந்தது.

கடன் அளிப்பதில் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கும் படியும், வழங்கியக் கடன் பயன்படுத்துவதை மிகக் கவனத்துடன்

கண்காணிக்கும்படியும், வங்கிகளை, 1970 பிப்ரவரி 18-ல், ரிசர்வ் பாங்கின் ஆளுநர் கேட்டுக்கொண்டார். ரிசர்வ் பாங்கிடம் கடன் உதவிக்கு நெருங்குவதற்குப்பதில் வங்கிகள், வைப்புகளைச் சேகரிப்பதன்மூலம் தங்கள் வருவாயைப் பெருக்குவதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் ரிசர்வ் பாங்கின் ஆளுநர் கூறினார். ஆனால், இந்த அறிவுரைகள் பயனளிக்கவில்லை. ரிசர்வ் பாங்கிடம் வங்கிகள் அதிகக் கடன் பெற்றதால், அக் கடனைக் கட்டுப்படுத்துவதற்காகக் குறைந்த அளவு நிகர ரொக்கத்தன்மை வீதம் (minimum net liquidity ratio) 30%-லிருந்து 31%-ஆகவும் பின்னர் ஏப்ரல் கடைசி வெள்ளிக்கிழமையன்று 32% ஆகவும் உயர்த்தப்பட்டது. சட்டமுறை ரொக்கத்தன்மை வீதமும் (statutory liquidity ratio) 26%-லிருந்து 27%-க்கு 1970 ஏப்ரல் கடைசி வெள்ளிக்கிழமையன்று உயர்த்தப்பட்டது. அறிவுறுத்தல் மூலம் அடைய முடியாததைப் பொதுக்கடன் கட்டுப்பாட்டிலிருந்து ரிசர்வ் பாங்க் அடைய நினைத்தது. ஆனால், ரிசர்வ் பாங்கிற்குப் பொதுக்கடன் கட்டுப்பாடுகளும் உதவவில்லை.

முந்துரிமைத் துறைகளின் (priority sectors) கடன் தேவைகளை நிறைவு செய்வதற்காக, வங்கிகள், எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு வைப்புகளைச் சேகரிக்க வேண்டும் என்று ரிசர்வ் பாங்கின் ஆளுநர் 1970 நவம்பரில் வங்கிகளைக் கேட்டுக்கொண்டார்; வங்கிகளின் நியாயமான, பயனுள்ள செயல்களுக்குப் பாங்க் வீதத்தில், சலுகைவீதத்தில் மறுநிதி வசதி அளிக்கப்படும் என்றும் உறுதியளித்தார். முந்துரிமைத் துறைகளின் கடன் தேவைகளைக்கூடத் தங்களின் சொந்த வருவாயிலிருந்தே அளிக்கவேண்டும் என்றும், கடைசியாகத்தான். அதுவும் குறுகிய காலத்தேவைக்கு மட்டுமே, ரிசர்வ் பாங்கிடம் நெருங்க வேண்டும் என்றும் வங்கிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

1971 பிப்ரவரி 4-ல், கடன் நிலைமையைப் பரிசீலித்த பின் வங்கிகளின் கடன் பெருக்கத்தில் ஏற்பட்டச் சுருக்கத்தையும், ரிசர்வ் பாங்கிடம் வாங்கிய கடன் அளவு குறைந்திருப்பதையும் வெகுவாகப் பாராட்டியதோடு, தொடர்ந்து அவ்வாறு செயல்படுமாறும், ரிசர்வ் பாங்கின் ஆளுநர் கேட்டுக்கொண்டார்; ரொக்கக் கடன் முறையைப் (cash credit system) படிப்படியாக அகற்றிவிட்டு அதற்குப்பதில் மாற்று உண்டியல், கடன்முறை ஆகியவற்றைக் கடன் கொடுப்பதற்குப் பின்பற்றுமாறும் வங்கிகளைக் கேட்டுக் கொண்டார்.

1971-ல், மந்தப் பருவத்தின்போது, வங்கிகளின் ரொக்கத் தன்மைவாய்ந்த வருவாய்களும், வைப்புகளும் அதிகரித்திருந்தன.

வங்கிகள் கொடுத்த கடனின் அளவு குறைவாக இருந்தது. இவ் வகையில் அதிகமாக உள்ள வருவாயை, ரிசர்வ் பாங்கிடம் வாங்கியக் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காகவும், அரசாங்க ஆவணங்களிலும், பிற ஆவணங்களிலும் முதலீடு செய்வதற் காகவும் பயன்படுத்துமாறு வங்கிகளுக்கு ரிசர்வ் பாங்க் அறிவுரை வழங்கியது. அதே சமயம், முந்துரிமைத் துறைகளின் கடன் தேவைகள், தொழில்களின் நடைமுறை மூலதனத் தேவைகள், சணல், தேயிலை ஆகிய தொழில்களின் பருவக்காலத் தேவைகள் ஆகியவற்றிற்கு அதிகக் கவனம் செலுத்துமாறு வங்கிகள் ரிசர்வ் பாங்கால் கேட்டுக்கொள்ளப்பட்டன.

மும்முரப் பருவத்தின் (busy season) போது, தவிர்க்க இயலாதத் தேவைகளுக்கு மட்டுமே குறுகியக் காலத்திற்கு ரிசர்வ் பாங்கிடம் வங்கிகள் கடன் பெறலாம் என்று ரிசர்வ் பாங்கின் ஆளுநர், 1971 நவம்பர் 18–ல், தமது கடிதம்மூலம் தெரியப் படுத்தினார்.

1972 சூன் 5-ல், அரசாங்க ஆவணங்களிலும் பிற அனுமதிக் கப்பட்ட ஆவணங்களிலும், வங்கிகள் தங்கள் முதலீட்டை உயர்த்த வேண்டும் என்று ரிசர்வ் பாங்கின் ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

போட்டியின் காரணமாக வட்டி வீதத்தைக் குறைப்பதைத் தவிர்க்குமாறு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு, 1972 டிசம்பரில், ரிசர்வ் பாங்க் அறிவுரை கூறியது. மேலும், 25 இலட்ச ரூபாய் அல்லது அதற்குமேல் கடன் கொடுக்கும்போது, பிற வங்கிகள் கடனுக்கு வசூலிக்கும் வட்டியைவிடக் குறைவாக வட்டி வசூலிக்க வேண்டாம் என்றும் ரிசர்வ் பாங்க் கேட்டுக் கொண்டது. 1973 சனவரியில் மற்றொரு சுற்றறிக்கைமூலம், 25 இலட்ச ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்டக் கடன்களைப் பொறுத்தவரை, எல்லாப் பெரிய வங்கிகளும் கலந்தாலோசித்த பின்னர் ரிசர்வ் பாங்கின் முன் அனுமதி பெற்று, அக் கடன்களைக் கொடுக்கலாம் என்று ரிசர்வ் பாங்க் அறிவித்தது.

கடன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துமாறு வணிக வங்கிகளை, 1973 சூலையில், ரிசர்வ் பாங்க் கேட்டுக்கொண்டது.

அறிவுறுத்தல் முறையின் வெற்றி, தோல்வி கீழ்க்கண்டவற் றைப் பொறுத்து அமைகிறது.

1. மைய வங்கிக்கும் வணிக வங்கிகளுக்கும் பல்லாண்டு களாக உள்ள உறவு;

2. மைய வங்கியின் அதிகாரத்தையும், செல்வாக்கையும் எவ்வாறு வணிக வங்கிகள் நோக்குகின்றன;

3. மைய வங்கி தனது கொள்கை சரியானது என்று எந்த அளவுக்கு வணிக வங்கிகளை ஏற்கச் செய்யமுடியும்?

4. நாட்டின் வங்கியல் மற்றும் கடன் அமைப்பு.

ஐக்கிய வல்லரசு, பிரான்சு, ஸ்வீடன், ஹாலந்து ஆகிய நாடுகளில் அறிவுறுத்தல் முறை வெற்றியடைகிறது என்றால் அந் நாடுகளில் மைய வங்கியின் தலைமை எவ்வித நிபந்தனைகளுமின்றி வணிக வங்கிகளால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கனடா, ஆஸ்திரேலியா, அர்ஜென்டினா, தென்னாப்பிரிக்கா, நியூஜிலாந்து, சப்பான் ஆகிய நாடுகளில் அறிவுறுத்தல் ஏன் வெற்றியடைகிறது என்றால் அங்கெல்லாம் ஒரு சில பெரிய வணிக வங்கிகளிடம் மட்டுமே வருவாய்கள் குவிந்து இருப்பதால், இந்த வருவாய் களில் மாற்றங்கள் செய்தால், விரும்பிய மாற்றத்தை எளிதாக அடைய முடிகிறது.

ஆனால் இந்தியாவில், நீண்டகாலத்திற்கு மேற்கண்ட நிலைமை இல்லை. தொடக்கத்தில், ரிசர்வ் பாங்கிற்கும் இம்பீரியல் வங்கிக்கும் எந்த அளவுக்குக் கருத்து வேற்றுமைகள் இருந்தன என்பது பற்றி இந்த அத்தியாயத்திற்கு முன் அத்தியாயத்தில், 'ரிசர்வ் பாங்கின் கடன் நடவடிக்கைகள்' என்ற தலைப்பின்கீழ் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. நீண்டகாலத்திற்கு, அதாவது 1951 வரையில் வணிக வங்கிகளை ரிசர்வ் பாங்கிடம் நெருங்கவிடாமல், இம்பீரியல் வங்கி பார்த்து வந்தது.

1951-ல் பாங்க் வீத மாற்றமும், வெளி அங்காடி நடவடிக்கைக் கொள்கையில் மாற்றமும்தான், வணிக வங்கிகளை ரிசர்வ் பாங்கிடம் நாடிச் செல்ல வைத்தன. ஆகவே, 1951 லிருந்துதான் ரிசர்வ் பாங்க் வணிக வங்கிகளுடன் நெருங்கியத் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முடிந்தது.

மேலும் நீண்டகாலமாகக் கருவூல உண்டியல்களை ரிசர்வ் பாங்கிடம் மறுதள்ளுபடி செய்து நிதி உதவி பெறுவது ஒரு பெரிய பலவீனமாகச் சந்தையில் கருதப்பட்டதாக முன்பே கூறப்பட்டது.

1949 வரையில் ரிசர்வ் பாங்க், ஒரு பங்குதாரர்களின் வங்கியாக இருந்ததால், ஒரு பெரிய வணிக வங்கியாகக் கருதப் பட்டதே தவிர, வங்கியாகக் கருதப்படவில்லை.

வங்கியியல் அமைப்பைப் பொறுத்தவரை, பெரிய வணிக வங்கிகளிடம் வருவாய்க் குவிந்துள்ளது என்னவோ உண்மையாக இருக்கலாம். ஆனால், நீண்ட காலத்திற்கு அவ் வங்கிகள் தங்களிடம் மிகுந்த ரொக்க இருப்பைப் பெற்றிருந்ததால், ரிசர்வ் பாங்கின் கட்டுப்பாட்டிலிருந்து எந்த அளவுக்குச் சுதந்திர மாகச் செயல்பட முடிந்தது என்பது பற்றி இதற்குமுன் உள்ள அத்தியாயத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

வங்கிகளுக்கிடையே பொறுமை நிலவியதை, வங்கிகள் செய்தித் தாள்களில் கொடுத்துவந்த விளம்பரங்கள் மூலமும், அவற்றின் செயல்கள் மூலமும் நன்கறியலாம். வங்கிகள் நாட் டுடைமையாக்கப்பட்ட பின்னரும், போட்டியும் பொறுமையுமே தலைதூக்கி நிற்கின்றன. போட்டியின் காரணமாக வட்டிவீதத் தைக் குறைப்பதைத் தவிர்க்குமாறு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு 1972 டிசம்பரில் ரிசர்வ் பாங்க் வழங்கிய அறிவுரை யின் மூலம் வங்கிகளுக்கிடையே உள்ள உறவைப் பற்றி நன்கு அறியலாம்.

அறிவுறுத்தல் முறையை நேரடிக் கட்டுப்பாடு போன்ற கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளுடன் சேர்த்துப் பயன்படுத்தும்போது, இக் கருவி அதிக வலிமையைப் பெறுகிறது. ஆனால், அச் சமயங் களில், இக் கருவி ஓர் அறிவுறுத்தலா, அச்சுறுத்தலா அல்லது வற் புறுத்தலா என்ற ஐயப்பாடு எழத்தான் செய்யும். அறிவுறுத்தல் தனி ஒரு கடன் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட் டால் அது ஒரு வெறும் உறுத்தலாகவே அமையும்.

அமெரிக்க மைய வங்கியின் அறிவுறுத்தல் கொள்கை பற்றி கிளார்க் (Clark) கூறியிருப்பது, இந்திய நிலைமைக்கும் மிகப் பொருந்தும். அவர் கூறியிருப்பதாவது: ஒரு கடன் கட்டுப் பாட்டுக் கருவியாக அறிவுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய பயன் மிகக் குறைவே; சிற்சில சமயங்களில் நிலைமையைக் கட்டுப் படுத்தி இருப்பதில் ஐயம் ஏதும் இல்லை. ஆனால், (கடன்) பெருக் கத்திற்கான காரணங்கள் மிகுந்த வலிமையுடையனவாக இருந் தால், அறிவுறுத்தல்முறை பற்கள் இன்றிப் பலனுள்ளதாக அமையுமா?''

### பிற அதிகாரங்கள்

வைப்பாளர்கள் நலனைப் பாதுகாக்கவும், வங்கிகள் நல் முறையில் வளர்வதற்கான சூழ்நிலையை உருவாக்கவும் வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டத்தின்கீழ் ரிசர்வ் பாங்கிற்கு அதிகாரங்கள்

கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்த அத்தியாயத்தில், இவ் வதிகாரங்கள் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

1970 சனவரியில், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், கம்பெனிகளின் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றின்பேரில் கடன் கொடுக்கவோ அல்லது அக் கடனைப் புதுப்பிக்கவோ அல்லது அத்தகைய ஆவணங்களின் மீது 5 இலட்ச ரூபாய்க்கு மேல் எந்த ஒரு கடனாளிக்கும் கடன் கொடுக்கவோ ரிசர்வ் பாங்கின் அனுமதியைப் பெறவேண்டும்.

1965 நவம்பரில், கடன் அங்கீகரிப்புத் திட்டம் (Credit authorisation scheme) கொண்டுவரப்பட்டது. அதன்படி அட்டவணையிலிட்ட வங்கிகள் எந்த ஒரு கடனாளிக்கும் ஒரு கோடி ரூபாயோ அல்லது அதற்கு அதிகமாகவோ கடன் கொடுக்கவும் அல்லது அத்தகைய கடனாளி எல்லா வங்கிகளிடமிருந்தும் வாங்கிய மொத்தக் கடனின் அளவு 1 கோடி ரூபாயோ அல்லது அதிகமாகவோ இருந்தால், ரிசர்வ் பாங்கின் அனுமதியைப் பெற வேண்டும். 1970 சனவரியிலிருந்து நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ரிசர்வ் பாங்கிடமிருந்து கீழே குறிப்பிடப்பட்டவைகளுக்காக, முன்அனுமதியைப் பெறவேண்டும்.

1. ஓர் இலட்ச ரூபாய்க்கு அதிகமான கம்பெனிகளின் பங்குகளை அல்லது கடன் உறுதிப் பத்திரங்களை வாங்குதல் அல்லது ஒப்புறுதி (under-writing) செய்தல்;
2. தற்போதுள்ள கடனாளிக்கு 10 இலட்ச ரூபாய்க்கு அதிகமாகக் கொடுத்துள்ள கடன் மீது வட்டியையோ அல்லது வரம்பையோ குறைத்தல்;
3. பின்னால் கொடுக்கப்பட வேண்டிய பொறுப் புறுதியின் பேரில் 10 இலட்ச ரூபாய்க்கும் அதிகமாகக் கடன் அளித்தல்;
4. கடன் கொடுத்தல், பிற வசதிகள் அளித்தல் அல்லது தற்போது இருக்கும் வசதியை அதிகமாக்குதல் ஆகியவற்றால் வங்கியால் ஒரு கடனாளிக்கு அளிக்கப்படும் கடன் வசதிகள் ஆகியவற்றின் மொத்த அளவு 25 இலட்ச ரூபாய்க்கும் அதிகமாகுதல்.

### கடனைத் திட்டமிடுதல் (Credit planning)

மேற்கூறப்பட்ட எல்லா முறைகளுமே கடனைக் கட்டுப்படுத்தும் தன்மை உடையன. ஆனால் இந்தியா போன்ற வளர்ச்சியுறும் நாடுகளில் கடனைக் கட்டுப்படுத்தினால் மட்டும் போதாது.

(கிடைக்கக்கூடிய கடன் வசதிகளை ஒழுங்காகப் பகிர்ந்து அளிக்க வேண்டும்.) சிறு குறிப்பாக முந்துரிமைத் துறைகளாக இருக்கின்ற விவசாயம், தொழில்கள், ஏற்றுமதி ஆகிய துறைகளுக்குத் தேவையான நிதி வசதிகள் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். ரூபாய் பொறுக்குக்கடன் கட்டுப்பாடுகள் தேவையற்ற மற்றும் பயனற்ற துறைகளுக்குக் கடன் போய்ச் சேராமல் கட்டுப்படுத்தலாம். ஆனால் தேவையுள்ள அல்லது பயனுள்ள துறைகளுக்கு நிதி வசதிகள் கிடைக்கிறதா என்பதைப் பொறுக்குக்கடன் கட்டுப்பாடு உறுதி செய்யமுடியாது. வங்கிகளின் வளர்ச்சி எவ்வளவு வேகமாக இருந்த போதிலும், அவை செயல்படும் முறைகளிலும், கடன் வினியோகத்திலும் பல குறைபாடுகள் காணப்பட்டன. அவ் வங்கிகளின் இயக்குநர்கள் அவற்றில் பெரும்பாலும் பெரிய தொழிலதிபர்களும் வியாபாரிகளுமே அங்கம் வகித்தக் காரணத்தால், அவ் வங்கிகளின் பெரும்பான்மையான கடன்கள், அவற்றின் இயக்குநர்களுக்கோ, அல்லது அவர்கள் சம்பந்தப்பட்ட தொழில்களுக்கோ தான் கிடைத்தன. மொத்தக் கடனில், ஒரு பெரிய பங்கானது பெருந்தொழில்களுக்கும், பெரிய வியாபாரிகளுக்குமே போய்ச் சேர்ந்தது. ஆனால் விவசாயம், சிறுதொழில்கள். ஏற்றுமதி ஆகிய முக்கியத் துறைகள் அலட்சியப் படுத்தப்பட்டன. இச் சூழ்நிலைகளில்தான் வங்கிகளைச் சமுதாயக்கட்டுப்பாட்டுக்குள்ளாக்கிக்கடன் விநியோகிக்கும் முறைகளில் மாறுதல் செய்ய அரசாங்கம் முடிவு செய்தது. இருக்கின்ற கடன் வசதிகளை எவ்வளவுத் துறைகளுக்குப் பகிர்ந்தளிக்க முடியுமோ அவ்வளவுத் துறைக்கும் பகிர்ந்தளித்தல், கடன் தவறான முறைகளில் பயன்படுத்தப்படாமல் தடுத்தல், முந்துரிமைத் துறைகளுக்குக் கடன் வசதிகள் கிடைக்குமாறு செய்தல் ஆகியவை சமுதாயக் கட்டுப்பாட்டின் நோக்கங்களாகும். இத்தகையக் குறிக்கோள்களைக் கருத்தில் கொண்டுதான் 1968–ல் வங்கியியல் சட்டம் [Banking laws (amendment) Act 1968] திருத்தப்பட்டு 1969 பிப்ரவரியில் செயல்முறைக்குக் கொண்டுவரப்பட்டது. வங்கி இயக்குநர்களின் அவைகளை மாற்றியமைத்தல், தொழிலதிபர்கள் அல்லாத பெரும்பான்மை இயக்குநர்களை நியமித்தல், வங்கியர்களையே நிருவாக அவைகளின் தலைவர்களாக நியமித்தல், இயக்குநர்களுக்கோ அவர்கள் சம்பந்தப்பட்ட தொழிலகங்களுக்கோ கடன் அளிப்பதைத் தடைசெய்தல் ஆகிய மாறுதல்கள் இச் சட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்டன. தேவைப்பட்டால், இயக்குநர் அவையின் தலைவரை நீக்கித் தம்முடைய பிரதிநிதியை நியமிக்கும் அதிகாரத்தை ரிசர்வ் பாங்க் பெற்றிருந்தது. மேலும் ஓர் இயக்குநரையோ, அல்லது பார்வையாளரையோ நியமிக்கும் அதிகாரத்தையும் ரிசர்வ் பாங்க் வெற்றி பெற்றிருக்கிறது.

எல்லா வங்கிகளிடமிருந்தும் கிடைக்கும் கடன்களின் அளவு போதுமான அளவுக்கு இல்லாததால், தேவையுள்ள அல்லது விருப்பத்தக்க துறைகளுக்கு அக் கடன்கள் போய்ச் சேருகின்றன என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. இதுபற்றி முடிவு செய்யவே, 1968 பிப்ரவரியில் நிதியமைச்சரைத் தலைவராகவும் ஆளுநரைத் துணைத்தலைவராகவும் கொண்ட தேசியக் கடன் குழு (National credit council) அமைக்கப்பட்டது. சமுதாயக் கட்டுப்பாட்டை வெற்றிகரமாக்க, வங்கிகள் தங்களது அமைப்பில் தேவையான மாறுதல்களை ஏற்படுத்தின; இயக்குநர்களுக்கும், அவர்கள் சம்பந்தப்பட்டத் தொழிலகங்களுக்கும் கொடுக்கப்பட்ட கடன் அளவைக் குறைத்துக் கொண்டன. விவசாயத்திற்கும் சிறு தொழில்களுக்கும் கொடுக்கப்பட்ட கடன் அளவை அதிகமாக்கின. சமுதாய இலக்குகளை அடைவதற்கு இத்தகைய மாறுதல்கள் போதுமானதாக இல்லை. இயக்குநர் அவை மாற்றியமைக்கப்பட்ட போதிலும், தொழிலதிபர்களும் வியாபாரிகளும் இயக்குநர் அவையில் இருந்துகொண்டு தங்கள் விருப்பப்படி அதிகாரத்தைச் செலுத்தி வந்தனர். அத்தகைய இயக்குநர் அவைகளை மேலும் மாற்றியமைக்க ரிசர்வ் பாங்கிடம் இருந்த அதிகாரங்கள் போதுமானதாக இல்லை. இத்தகையச் சூழ்நிலையில் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதால் தேவையான குறிக்கோள்களை அடைவது எளிது என்று கருதப்பட்டது. ஆகவே, 1969, சூலை 19-ல் 14 பெரிய வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. இதனால் வங்கிகளின் (ஸ்டேட் பாங்க் உள்பட) மொத்த வைப்பில் 85 விழுக்காடு அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள்ளாகியது. நாட்டுடைமையாக்குவதற்கான சட்டம் (Banking companies acquisition and transfer of undertakings) 1970-ல் நிறைவேற்றப்பட்ட போதிலும், 1969 சூலை 19ஆம் தேதியே செயல் முறைக்கு வந்ததாகக் கருதப்பட்டது.

முந்துரிமைத் துறைகளான விவசாயம், சிறு தொழில்கள், ஏற்றுமதி ஆகியவற்றிற்கு அதிக நிதிவசதி கிடைக்க வேண்டும் என்பதற்காக ரிசர்வ் பாங்க் வங்கிகளுக்கு நிதி வசதிகளில் சிலச் சலுகைகள் அளித்தது. ஏற்றுமதித் துறைக்கு நியாயமான வட்டியில் அதிகமான பணவசதி கிடைக்க வேண்டும் என்று, வங்கிகளின்மீது சமுதாயக் கட்டுப்பாடு கொண்டு வருவதற்கு முன்பே, ரிசர்வ் பாங்க் கருதி வந்தது. 1958—ல் மாற்று உண்டியல் அங்காடித் திட்டத்தை ஏற்றுமதி உண்டியல்களுக்கும் விரிவாக்கி ஏற்றுமதித் துறைக்குத் தாராளமான நிதி வசதி கிடைக்க ஏற்பாடு செய்தது. ஆனால், ஏற்றுமதியாளர்கள் தவணை உண்டியல்களைப் (Usance bills) பயன்படுத்தத் தயங்கியதால் இத் திட்டத்தின்கீழ் வங்கிகள்

பயனடைய முடியவில்லை. இக் குறையை நீக்க, 1962-ல் ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் திருத்தப்பட்டது. அத் திருத்தத்தின் படி எந்த ஓர் அட்டவணையிலிட்ட வங்கியும் எந்த அளவிற்கு ஏற்று மதிக்காகக் கடன் கொடுக்கிறதோ, அந்த அளவிற்கு அதிகமாகா மல் 180 நாள்களுக்கு அதிகமாகாத தவணையளவுடைய தங்களு டைய புரோ நோட்டுகளை ரிசர்வ் பாங்கிடம் கொடுத்துக் கடன் பெறலாம். 1963 மார்ச்சில் ரிசர்வ் பாங்க் ஏற்றுமதி உண்டியல்கள் கடன் திட்டத்தைக்(Export bills credit scheme) கொண்டுவந்தது.

**வங்கிகள் அல்லாத நிறுவனங்கள் மீது கட்டுப்பாடு** (Control over non-banking institutions)

வங்கிகள்மீது கட்டுப்பாடு செலுத்தினுல் மட்டும், ரிசர்வ் பாங்க் நிதியியல் முறையைக் கட்டுப்படுத்த முடியாது. வங்கிகள் அல்லாத கம்பெனிகள், பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெறுதல் போன்ற சில வணிக வங்கிப் பணிகளையும் செய்துவரு கின்றன. இதனுல் நல்ல நிதிக் கொள்கையை உருவாக்குவதற்காக, அக் கம்பெனிகளையும் கட்டுப்படுத்தவேண்டிய அவசியம் எழுகிறது. இதற்காக, ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் 1963-ல் திருத்தப்பட்டு, ரிசர்வ் பாங்கிற்குத் தேவையான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. இவை, பிரிவு 45 ஜே, 45 கே, 45 எல் ஆகியவற்றில் காணப்படுகின்றன.

1. வங்கித் தொழிலில் ஈடுபடாத நிறுவனங்கள் வெளியிடும் தகவலறிக்கை அல்லது விளம்பரத்தைக் கட்டுப்படுத்தலாம் அல்லது தடைசெய்யலாம்.

2. அவை பெற்ற வைப்புகள் பற்றிய விபரங்களைக் கேட்கலாம்.

3. வைப்புகள் பெறுவது பற்றிக் கட்டளையைப் பிறப் பிக்கலாம்.

4. கட்டளைகளை மீறும் நிறுவனத்தை வைப்புகள் பெருமல் தடைசெய்யலாம்.

மேலும், மேற்கூறப்பட்ட தகவல்கள் சரிதானு என்று பார்க்கவும், எல்லாத் தகவல்களும் கொடுக்கப்பட்டுள்ளனவா என்று அறியவும், மேற்கொண்டு தகவல் பெறவும் கொடுக்கப் படாத தகவல்களைப்பெறவும் ரிசர்வ் பாங்க் வங்கித் தொழிலில் ஈடுபடாத நிறுவனங்களை ஆய்வு நடத்தலாம்.

ரிசர்வ் பாங்க் நடத்திய சர்வேயின் படி (மார்ச்சு 1962—மார்ச்சு 1964) வைப்புகளைப் பெறும் வங்கிகள் அல்லாத கம்பெனிகளின் எண்ணிக்கையும் அவை பெறும் வைப்புகளின் தொகையும் அதிகமாகி வருகின்றன என்று தெரியவந்தது. அவ் வைப்புகளில் பொது மக்களின் வைப்புகளே அதிகமாக இருந்தன. வங்கிகள் கொடுக்கும் வட்டியைவிட மிக அதிகமாக இருந்தது. மேலும் ஒரு குறிப்பிட்டக் காலஅளவைப் பெறாத ஆனால் கேட்டதும் திரும்பப் பெறக்கூடிய வைப்புகளாகவே அவை பெரும் பாலும் இருந்தன. 1966-ல் அக் கம்பெனிகளுக்குச் சில கட்டளைகளை ரிசர்வ் பாங்க் பிறப்பித்தது. அதன்படி குறுகிய கால வைப்புகளைப் பெறுவது தடைசெய்யப்பட்டது. வைப்புகள் பெறுவதற்குக் கொடுக்கப்படும் விளம்பரங்களில் சில விவரங்கள் கட்டாயமாகக் கொடுக்கப்படவேண்டும் என்று கோரப்பட்டது; இயக்குநர்கள் அவையின் அறிக்கையில் வைப்புகள் பற்றிய தகவல்கள் கொடுக்கப் படவேண்டும்.

ரிசர்வ் பாங்க்வசம் கடனைக் கட்டுப்படுத்தப் பலவிதமான கருவிகள் உள்ளன. பல்வேறுபட்டப் பொருளாதார நிலைமைகளைச் சமாளிக்க இக் கருவிகளை ரிசர்வ் பாங்க் பயன்படுத்தி வருகிறது. ஒரு காலத்தில் கடனைக் கட்டுப்படுத்துவதே மைய வங்கியின் முக்கிய மான வேலையாக இருந்தது. ஆனால் இப்பொழுது கடனைக் கட்டுப் படுத்துவதோடு அல்லாமல், தேவையான துறைகளுக்குக் கடன் வசதி கிடைக்கிறதா என்பதைக் கட்டுப்படுத்துவதும் ரிசர்வ் பாங்கின் வேலையாகிவிட்டது. மேலும் வங்கிகள் அல்லாத கம்பெனி களின் பண அங்காடி நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த வேண்டி யிருக்கிறது. வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதால், கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளையும் முறைகளையும் அதற்கேற்றவாறு மாற்றியமைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. வெற்றி கரமாகக் கடனைக் கட்டுப்படுத்துவது, ரிசர்வ் பாங்கிடம் எத்தனைக் கருவிகள் உள்ளன என்பதைப் பொறுத்தது அல்ல. ஆனால், அக் கருவிகள் எத் தருணத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். மற்றும் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதையும் பொறுத்ததே.

# 7. வங்கிகளை மேற்பார்வையிடல்

## (Supervision of Banks)

பாரம்பரிய மைய வங்கிப் பணிகளைப் புரிவதோடு, ரிசர்வ் பாங்க், வங்கியியல் முறை (Banking system) சீரிய முறையில் அமைவதற்கான முயற்சிகளையும் செய்துவருகிறது. வணிக வங்கிகளையும், கூட்டுறவு வங்கிகளையும், மேற்பார்வையிடவும், கட்டுப்படுத்தவும் ரிசர்வ் பாங்க் சட்டம், 1934, வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம், 1949 ஆகிய சட்டங்கள், ரிசர்வ் பாங்கிற்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்துள்ளன. வைப்புகளைப் பெறும் வங்கிகள் அல்லாத நிறுவனங்களிடமிருந்து (Non-banking institutions) தகவல்களைக் கேட்கவும், அவற்றுக்குக் கட்டளைகள் கொடுக்கவும், ரிசர்வ் பாங்க் அதிகாரம் பெற்றிருக்கிறது.

1949 க்கு முன்னல் வங்கிக் கம்பெனிகள் பற்றிய யாதொரு பரந்த சட்டமும் இல்லை. இந்தியக் கம்பெனிகள் சட்டத்தில் (Indian companies Act, 1913), வங்கிக் கம்பெனிகளைப் பற்றிச் சில சரத்துகள் (provisions) இருந்தன. 1949 மார்ச்சு மாதம், வங்கியக் கம்பெனிகள் சட்டம் (Banking companies Act, 1949) உருவாக்கப்பட்டது. 1953, 1956, 1959 முதல் 1963 வரை, 1965, 1969 ஆகிய ஆண்டுகளில், பல மாறுதல்கள் செய்யப்பட்டு, ரிசர்வ் பாங்கிற்கு வங்கிகள்மீது உள்ள அதிகாரங்களும், பொறுப்புகளும் அதிகமாக்கப்பட்டுள்ளன. வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல், வங்கிகளின் கிளைப்பெருக்கம், சொத்தின் ரொக்கத்தன்மை, நிருவாகம், வேலை செய்யும் முறைகள், வங்கி இணைப்பு (Bank amalgamation), திருப்பி அமைத்தல் (Reconstruction), கலைத்தல் (Liquidation) ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ரிசர்வ் பாங்கிடம் உள்ளது. 1967-ல், வங்கிகள்மீதான சமுதாயக் கட்டுப்பாடும், 1969-ல் வங்கிகள் தேசியமயமும், ரிசர்வ் பாங்கின் வாய்ப்புகளையும், பொறுப்புகளையும் அதிகமாக்கியுள்ளன. வேகமானப் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையானச்

சமுதாய, பொருளாதாரக் குறிக்கோள்களை அடைவதற்கு, வங்கிகள் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய பொறுப்புகளையும், ரிசர்வ் பாங்க் பெற்றிருக்கிறது.

வங்கிகள் மீதுள்ள சட்டமுறைக் கட்டுப்பாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

## வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல் (Licensing of Banks)

வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 22-ல் கூறப்பட்டுள்ளபடி, இந்தியாவில் வங்கித் தொழில் செய்ய விரும்பும் ஒவ்வொரு வங்கியும், ரிசர்வ் பாங்கிடமிருந்து உரிமம் (Licence) பெறவேண்டும். வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னால் செயல்பட்டு வந்த வங்கிகளும், சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து 6 மாதத்திற்குள் உரிமம்பெற ரிசர்வ் பாங்கிடம் விண்ணப்பிக்க வேண்டும். உரிமத்தை வழங்க, ரிசர்வ் பாங்க், எவ்வித நிபந்தனைகளை வேண்டுமானாலும் இடலாம். உரிமம் வழங்குமுன், வங்கிகளின் ஏடுகள், கணக்குகள், செயல்படும் முறைகள் ஆகியவற்றை ஆய்ந்து கீழ்க்கண்ட நிபந்தனைகள் நிறைவு செய்யப்படுகின்றன என்று, ரிசர்வ் பாங்க் தெரிந்து கொள்ளும்.

அ) தனது வைப்பாளர்களின் முழு உரிமைக் கோரிக்கைகளைத் தற்போதாவது அல்லது எதிர்காலத்திலாவது நிறைவேற்ற வல்லது;

ஆ) தற்போதுள்ள அல்லது வருங்கால வைப்பாளர்களின் நலனுக்கு யாதொரு குந்தகமும் ஏற்படாதவாறு வங்கியின் தொழில் நடக்கிறது அல்லது நடந்துவரும் என்ற நிலை;

இ) அயல்நாடுகளில் நிறுவப்பட்டு, இந்தியாவில் தொழில் நடத்தும் வங்கிக் கம்பெனிகள், இந்திய பாங்குக் கம்பெனிகள் சட்டத்திற்குட்பட்டுப் பொதுமக்கள் நலத்திற்காகத் தொழில் நடத்துதல் அவசியம்; மேலும், இந்தியாவில் நிறுவப்பட்டு வெளி நாட்டில் தொழில் புரியும் இந்திய வங்கிகள்மீது அந் நாட்டின் அரசு அல்லது சட்டம் யாதொரு வேறுபாடும் காட்டாமலிருத்தல் வேண்டும்.

## உரிமத்தை ரத்து செய்தல் (Cancellation of licence)

வழங்கிய உரிமத்தை ரத்து செய்யும் அதிகாரம் ரிசர்வ் பாங்கிற்கு உண்டு. ஒரு வங்கிக் கம்பெனி இந்தியாவில் வங்கித்

தொழில் புரிவதை நிறுத்திவிட்டாலும் அல்லது தன் சொத்து மற்றும் பொறுப்புகளைப் பிற வங்கிகளுக்கு மாற்றிவிட்டாலும் அல்லது ரிசர்வ் பாங்க் இட்ட நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறினாலும், உரிமம் ரத்து செய்யப்படலாம். உரிமத்தை ரத்து செய்யும் முன்னர், நிறைவேற்றத் தவறிய நிபந்தனைகளை நிறைவேற்ற, வங்கிக்கு ஒரு வாய்ப்பளிக்கப்படும். உரிமம் ரத்து செய்யப்படுவதை அறிந்து கொண்ட வங்கி, தனக்குத் தகவல் கிடைத்த முப்பது நாள்களுக்குள் மத்திய அரசுக்கு மேல்முறையீடு (appeal) செய்து கொள்ளலாம். அத்தகைய மேல் முறையீடு ஏதேனும் இருப்பின், மத்திய அரசு எவ்வாறு முடிவு செய்கிறதோ அம் முடிவே இறுதியானதாகும். மேல் முறையீடு ஏதும் இல்லாதிருப்பின் ரிசர்வ் பாங்கின் முடிவே இறுதியானதாகும்.

### உரிமம் வழங்குமுன் ஆய்வு (Inspection before granting licence)

உரிமம் வழங்குமுன், முன்பே கூறியதுபோல், ரிசர்வ் பாங்க் ஓர் ஆய்வு நடத்துகிறது. ஆய்வு நடத்துகையில் வங்கிகள் செயல்படும் முறையில் ஏதேனும் குறைகளைக் கண்டால், அக் குறைகளை அவ் வங்கிகளுக்குச் சுட்டிக்காட்டி அவைகளைச் சரி செய்வதற்கான அறிவுரைகளையும் அளிக்கிறது. வங்கிகள் அவ்வப்போது ரிசர்வ் பாங்குக்கு அனுப்பும் அறிக்கைகள் மூலம், குறைகள் எந்த அளவுக்கு நீக்கப்பட்டிருக்கின்றன அல்லது சரி செய்யப்பட்டிருக்கின்றன என்று ரிசர்வ் பாங்க் கண்காணிக்கிறது. குறைகள் சரி செய்யப்பட்டிருப்பின், ரிசர்வ் பாங்க் உரிமத்தை வழங்குகிறது. இப்படிக் குறைகளைச் சரிசெய்ய வாய்ப்பு கொடுத்தும், குறைகள் சரிசெய்யப்படாதிருப்பின், ரிசர்வ் பாங்க் உரிமம் வழங்க மறுக்கிறது, அல்லது முன்னரே உரிமம் வழங்கி இருந்தால் அதை ரத்து செய்கிறது.

1973 சூன் முடிய, உரிமம் வழங்கப்பட்ட வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 45; உரிமம் ரத்து செய்யப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை 52. பொதுத்துறையில் உள்ள 22 வங்கிகள் (ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா 1, ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா துணை வங்கிகள் 7, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் 14) உரிமம் பெற வேண்டியதில்லை. உரிமம் மறுக்கப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை 283 ஆகும்.

### கிளைகளுக்கு உரிமம் வழங்கும் கொள்கை

வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 23-ல் உள்ளபடி, வங்கிக் கம்பெனிகள் புது இடங்களில் தொழில் தொடங்குவதையும்

அல்லது நடப்புத் தொழில் இடத்தை (Present place of business) மாற்றுவதையும் கட்டுப்படுத்த, ரிசர்வ் பாங்கிற்கு அதிகாரம் உண்டு.

ரிசர்வ் பாங்கின் முன் அனுமதி பெருமல், எந்த ஒரு வங்கிக் கம்பெனியும், புது இடத்தில் தொழில் தொடங்கவோ அல்லது அதே மாநகரம், நகரம் அல்லது கிராமத்திற்குள் உள்ள தொழில் இடத்தை மாற்றவோ கூடாது.

இந்தியாவில் நிறுவப்பட்ட எந்த ஒரு வங்கிக் கம்பெனியும், ரிசர்வ் பாங்கின் முன் அனுமதி பெருமல், இந்தியாவுக்கு வெளியில் புதியதொரு தொழிலிடத்தைத் திறக்கக் கூடாது.

ஆனல், ஒரு மாதத்திற்கு அதிகமாகாத காலத்திற்குப் பொருட் காட்சி, மாநாடு, மேளா (Mela) அல்லது இது போன்ற பிற காரணங்கள் குறித்து முன்னரே தொழில் புரிந்து வரும் மாநகரம் அல்லது கிராமம் அல்லது அவற்றைச் சுற்றியுள்ள இடங்களில், தற்காலிகத் தொழிலிடம் ஒன்றைத் திறக்க, ரிசர்வ் பாங்கிடம் முன் அனுமதி பெற வேண்டியதில்லை.

இவ் வகையில் புது இடத்தில் தொழில் தொடக்கவோ அல்லது முன்பிருக்கும் தொழிலிடத்தை மாற்றவோ அனுமதி கொடுப்பதற்கு முன்னர், ரிசர்வ் பாங்க் சட்டம், 35ஆம் பிரிவின்படி, வங்கியின் வரலாறு, நிதி நிலைமை, நிருவாகத் திறன், முதலீடு, வருமான வாய்ப்புகள், பொது மக்களுக்குக்கூடும் நன்மைகள் ஆகியவைபற்றி ஓர் ஆய்வு நடத்தும். பொதுவான அல்லது குறிப்பிட்ட நிபந்தனைகளுடன், ரிசர்வ் பாங்க் அனுமதி வழங்கலாம். ரிசர்வ் பாங்க் இட்ட எந்த ஒரு நிபந்தனையையாவது, ஒரு வங்கிக் கம்பெனி ஏற்று நடக்கத் தவறுமாயின், ரிசர்வ் பாங்க், அக் கம்பெனிக்குப் போதுமான அவகாசம் அளித்து, ஏன் அதன்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கங்களைக் கேட்ட பிறகு, அக் கம்பெனிக்குக் கொடுத்த அனுமதியை ரத்து செய்யலாம்.

இரண்டாம் உலகப்போரின்போது, வங்கிகள் நகர்ப்புறங்களில் மட்டுமே, தங்கள் கிளை அலுவலங்களைத் திறந்து வந்தன. இதனுல், நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு, வங்கி வசதிகள் கிடைக்காமல் போயிற்று. 1956-க்கு முன்னுல், ரிசர்வ் பாங்க், வங்கிகளுக்குக் கிளைகள் திறப்பதற்கான உரிமம் அளிப்பதில், கடுமையான கொள்கையைப் பின்பற்றியது. 1956-லும் 1959-லும் அக் கொள்கை சற்று தளர்த்தப்பட்டது. வங்கிகள் சுதந்திரமாகக் கிளைகளை ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டன.

இதனால், வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை அதிகமானதேயொழிய, கிராமப்புறங்களும் சிறு நகர்ப்புறங்களும் வங்கி வசதிகள் இன்றித் தவித்தன. ஆகவே, 1962-ல், ரிசர்வ் பாங்க், தனது கொள்கையை மறுபரிசிலனை செய்ய நேர்ந்தது. வங்கி வசதிகளை நாட்டின் எல்லா இடங்களுக்கும் திட்டப்படி ஒழுங்கான முறையில் பெருக்குவதற்காக, ரிசர்வ் பாங்க், ஒரு புதுத் திட்டத்தை உருவாக்கியது. அதன்படி, எல்லா வங்கிகளும், தங்களுடைய புதுக்கிளைகளைத் திறப்பது பற்றிய ஒரு திட்டத்தை வகுக்குமாறும், அத் திட்டத்திற்கு ரிசர்வ் பாங்கின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டன. நாட்டில் வங்கிகள் இல்லாத இடங்கள்பற்றி, எல்லா வங்கிகளுக்கும் தெரிவிக்கப்பட்டன. இத்தகைய திட்டத்தால், நிறையக் கிளைகள் திறக்கப்பட்டன.

1969-ல், 14 பெரிய வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னர், முந்துரிமைத் துறைகளான (Priority sectors) வேளாண்மை, ஏற்றுமதி, சிறுதொழிகள் ஆகியவற்றுக்குத் தேவையான கடன்களை அளிக்கவும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள சேமிப்புத் தொகைகளைச் சேகரிக்கவும், வங்கி வசதிகளைப் பெருக்கவும், வகை செய்வதற்காக, ரிசர்வ் பாங்க், தன் உரிமம் வழங்கும் கொள்கையில் மாறுதல்கள் செய்தது.

1972 ஜூலை முதல் 1973 சூன் முடிய, வணிக வங்கிகள் திறந்த மொத்த அலுவலகங்களில் (15,362) 36·2 சதவிகிதம் பத்தாயிரத்திற்குட்பட்ட ஆனால் ஓர் இலட்சத்திற்குட்பட்ட மக்கள் தொகையையுடைய நகர்ப்புறங்களிலும், 16·7 சதவிகிதம் ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையையுடைய நகரங்களிலும், 16·3 சதவிகிதம் ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட ஆனால் பத்து இலட்சத்திற்குட்பட்ட மக்கள் தொகையையுடைய மாநகரங்களிலும் இருந்தன. இதற்குமுன் வங்கியே இல்லாத இடங்களில் புதிதாகத் திறக்கப்பட்டக் கிளைகளின் எண்ணிக்கைபற்றி அட்டவணை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அட்டவணை 1

## வணிக வங்கிகளால் திறக்கப்பட்டப் புதிய அலுவலகங்கள்

| | புதிய அலுவலகங்கள் | | | | | மொத்த வங்கி அலுவலகங்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1969-70 (ஜுலை-ஜுன்) | 1970-71 | 1971-72 | 1972-73 | 1973-74 | 30-6-72 | 30-6-73 | 30-6-74 |
| 1. ஸ்டேட் பாங்க் | 255<br>(185) | 412<br>(287) | 289<br>(164) | 292<br>(97) | 208<br>(65) | 2575 | 2867 | 3072 |
| 2. ஸ்டேட் பாங்கின் துணைவங்கிகள் (Subsidiaries) | 170<br>(125) | 173<br>(119) | 150<br>(85) | 181<br>(83) | 89<br>(31) | 1383 | 1563 | 1652 |
| 3. நாட்டுடைமையாக்கப்பட்ட 14 வங்கிகள் | 1185<br>(830) | 1052<br>(658) | 821<br>(470) | 926<br>(372) | 909<br>(317) | 7189 | 8109 | 9017 |
| 4. பிற அட்டவணையிலிட்ட வங்கிகள் | 229<br>(123) | 239<br>(122) | 340<br>(207) | 349<br>(132) | 378<br>(132) | 2240 | 2580 | 2943 |
| 5. வெளிநாட்டு வங்கிகள் | 1<br>(—) | —<br>(—) | —<br>(—) | —<br>(—) | —<br>(—) | 130 | 130 | 130 |

## அட்டவணை 1-ன் தொடர்ச்சி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6. அட்டவணையிலிட்ட அனைத்து வங்கிகளும் | 1840 (1263) | 1876 (1186) | 1600 (926) | 1748 (684) | 1584 (545) | 13517 | 15249 | 16814 |
| 7. அட்டவணையிலிடாத வங்கிகள் | 33 (23) | 14 (8) | 12 (10) | 8 (6) | 9 (2) | 105 | 113 | 122 |
| 8. வணிக வங்கிகள் அனைத்தும் | 1873 (1286) | 1890 (1194) | 1612 (936) | 1756 (690) | 1593 (547) | 13622 | 15362 | 16936 |

குறிப்பு : அடைப்புகளில் உள்ள எண் தொகை, வங்கியில்லாத இடங்களில் திறக்கப்பட்ட அலுவலகங்களைக் குறிக்கும்.

முதல் காப்பு, ரொக்கம், காப்பு நிதி, ரொக்கத்தன்மை வாய்ந்த சொத்துகள் (Capital, Cash reserve, Reserve Fund and liquid assets)

இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள வங்கிக் கம்பெனியின் செலுத்திய முதலும் (Paid-up capital) காப்பு நிதியும் (Reserve fund) கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

அ. பம்பாய் அல்லது கல்கத்தா அல்லது இவ்விரு நகரங்களிலும் வங்கித்தொழில் செய்துகொண்டு ஒரு மாநிலத்திற்கும் மேற்பட்ட இடங்களில் வங்கித் தொழில் செய்ய 10 இலட்சம் ரூபாய்.

ஆ. பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் வங்கித்தொழில் செய்யாமல், எல்லாத் தொழில் செய்யும் இடங்களும் ஒரே மாநிலத்தில் அமையுமாயின் முதன்மைத் தொழில் இடத்திற்கு ஓர் இலட்ச ரூபாயும், மற்றும் ஒரு மாவட்டத்தில் முதன்மைத் தொழில் இடம் இருப்பின் அம் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தொழில் இடத்திற்கு பத்தாயிரம் ரூபாய் வீதமும், மற்றும் அஃதே மாநிலத்தில் பிற மாவட்டங்களில் தொழில் இடங்கள் இருப்பின், அவ்வாறு இருக்கும் ஒவ்வொரு தொழில் இடத்திற்கும் இருபத்தைந்தாயிரம் ரூபாய் வீதமும் இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்ட கணக்குப்படி எந்த வங்கிக் கம்பெனிக்கும், செலுத்திய முதலும், காப்பு நிதியும் சேர்ந்து ஐந்து இலட்ச ரூபாய்க்குமேல் இருக்க வேண்டியதில்லை. ஓரே ஓர் இடத்தில் மட்டும் வங்கித்தொழில் செய்யும் வங்கிக் கம்பெனியின் செலுத்திய முதலும் காப்பு நிதியும் சேர்ந்து ஐம்பதாயிரம் ரூபாய்க்குமேல் இருக்க வேண்டியதில்லை.

1962 ஆம் ஆண்டு, வங்கிக் கம்பெனிகள் திருத்தச் சட்டத்திற்குப்பிறகு, வங்கித்தொழில் தொடங்கும் வங்கிக் கம்பெனியின் செலுத்திய முதல் ஐந்து இலட்ச ரூபாய்க்குக் குறையக்கூடாது. வங்கிகள் எந்த இடங்களில் அலுவலகங்கள் வைத்திருக்கின்றன என்பதைப் பொறுத்து, இந்தக் குறைந்த அளவு முதல் பத்து இலட்ச ரூபாய் வரை உயருகிறது.

வெளிநாட்டு வங்கியானால், அதன் செலுத்திய முதலும் காப்பும் பதினைந்து இலட்ச ரூபாய்க்குக் குறையக்கூடாது. பம்பாய் அல்லது கல்கத்தா அல்லது இவ்விரு நகரங்களிலும்

வங்கித்தொழில் செய்யின், இத் தொகை குறைந்தது இருபது இலட்சம் ரூபாயாக இருத்தல் வேண்டும். வெளிநாட்டில் இணைப்பு பெற்ற இத்தகைய வங்கிகள் மேற்கூறியத் தொகையை ரொக்கமாகவோ அல்லது அடமானமற்ற அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்கள் உருவிலோ அல்லது பகுதி ரொக்கமாகவும் மறுபகுதி ஆவணங்களாகவுமோ, ரிசர்வ் பாங்கில் வைத்திருக்கவேண்டும். மேலும், ஒவ்வொரு பட்டிகை ஆண்டின் (Calendar year) முடிவில், தனது கிளைகளின்மூலம் கிடைத்த லாபத்தில் 20 விழுக்காட்டை, ரிசர்வ் பாங்கிடம், ரொக்கமாகவோ, ஆவணங்களாகவோ செலுத்தி வைத்திருக்கவேண்டும். இத்தகைய வங்கிகள், இந்தியாவில் வங்கித்தொழிலை நிறுத்தி விட்டால், மேலே குறிப்பிட்டுள்ள ரிசர்வ் பாங்கிடம் செலுத்தப்பட்டுள்ள தொகை, இந்தியாவில் உள்ள கடன் கொடுத்தோரின் கோருரிமைக்குப் (claim) பற்றுப் பொறுப்பாகும் (charge).

வங்கித்தொழில் நடத்தும் எல்லா இடங்களுமோ அல்லது ஒரே மாநிலத்தில் உள்ள ஒரு தொழில் இடமோ அல்லது பல தொழில் இடங்களோ பம்பாய் அல்லது கல்கத்தாவில் இருப்பின் குறைந்த பட்ச செலுத்திய முதலும், காப்பும், ஐந்து இலட்ச ரூபாயும், மேலும், பம்பாய் அல்லது கல்கத்தா தவிர வேறு ஒவ்வொரு தொழில் இடத்திற்கும் இருபத்தைந்தாயிரம் ரூபாயும் இருக்க வேண்டும். ஆனால், செலுத்திய முதலும், காப்பும் சேர்ந்து, பத்து இலட்ச ரூபாய்க்கு மேல் இருக்க வேண்டியதில்லை.

அலுவலகம், துணை அலுவலகம், துணைக் கொடுப்பிடம் (Sub-pay office) அல்லது எங்கே வைப்புகள் பெற்றுக் காசோலைகள் மாற்றித் தரப்படுகின்றனவோ அவ்விடம் அல்லது பணம் கடனாகக் கொடுக்கப்படுகின்ற இடம் ஆகியவை வங்கித்தொழில் இடம் ஆகும். வங்கியின் தலைமைத் தொழில் இடத்திலிருந்து 25 மைல் சுற்றளவில் உள்ள எல்லா இடங்களும், ஒரே மாநிலத்தில் அமைந்துள்ள இடங்களாகக் கருதப்படும்.

வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 18-ல் கூறப்பட்டுள்ளபடி, அட்டவணையிலிடப்படாத வங்கிகள் (Non-scheduled banks) தங்களுடைய மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்புகளில் 3 விழுக்காட்டை ரொக்கமாகத் தங்களிடமோ அல்லது ரிசர்வ் பாங்கிலோ அல்லது ஸ்டேட் பாங்க் அல்லது அதன் துணை வங்கிகளிலோ அல்லது ஒரு பகுதியைத் தங்களிடமும், மறுபகுதியை மேற்குறிப்பிட்ட வங்கிகளிடமோ வைத்திருக்க வேண்டும். ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 42(1)ன் கீழ் அட்டவணையிலிட்ட வங்கிகளும் மேற்கூறப்பட்டுள்ளதுபோல் காப்பு ரொக்கம்

வைத்திருக்க வேண்டும். மேலும், வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 24-ல் கூறப்பட்டுள்ளபடி அட்டவணையில் இடப்பட்ட மற்றும் அட்டவணையில் இடப்படாத வங்கிகள் தங்களுடைய கேட்பு, தவணைப் பொறுப்புகளில் 25 விழுக்காட்டிற்குக் குறையாமல் ரொக்கம், தங்கம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வில்லங்கமில்லாத ஆவணங்கள் ஆகியவற்றைக் கணக்கு முடிக்கும் எந்த ஒரு நாளிலும் இந்தியாவில் வைத்திருக்க வேண்டும். பிரிவு 25-ல் கூறப்பட்டுள்ளபடி, இந்தியாவில் தொழில் புரியும் எல்லா வங்கிகளும், குறிப்பாகப் பிறநாட்டு வங்கிகள், ஒவ்வொரு காலாண்டு முடிவின் கடைசி வெள்ளிக்கிழமையன்று, இந்தியாவில் உள்ள தங்களுடைய மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்புகளில், 75 விழுக்காட்டைச் சொத்துவடிவில் இந்தியாவில் வைத்திருக்க வேண்டும்; இதன் உட்கருத்து என்னவெனில், மேற்கூறிய வங்கிகள் தாங்கள் திரட்டும் நிதியின் பெரும்பங்கை, இந்தியாவிலேயே முதலீடு செய்ய வேண்டும் என்பதே.

### காப்பு நிதி (Reserve Fund)

இந்தியாவில் நிறுவப்பட்ட வங்கிக் கம்பெனி ஒவ்வொன்றும் 29ஆம் பிரிவின்படி இலாப நட்டப் பட்டியல் தயார்செய்து கிடைக்கும் இலாபத்தில், இலாப ஈவு (dividend) அளிக்குமுன், இலாபத்தில், 20 விழுக்காட்டிற்குக் குறையாதத் தொகையைக் காப்பு நிதிக்கு மாற்றிவிட வேண்டும். (வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 17)

வைப்புப் பொறுப்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, போதுமான அளவு செலுத்திய முதலும், காப்பும் உள்ள வங்கிகளுக்கு, ரிசர்வ் பாங்கின் பரிந்துரையின்பேரில், மத்திய அரசு மேற்கூறப்பட்ட விதியிலிருந்து விலக்களிக்கலாம்.

காப்பு நிதியும், பங்கு முனைமக் கணக்கின் (Share premium account) கூட்டுத்தொகையும் சேர்ந்து, வங்கியின் செலுத்திய முதலுக்குச் சமமாக இருந்தால்தான், ரிசர்வ் பாங்க், மேற்கூறிய விதிவிலக்குக்கான பரிந்துரையைச் செய்யும்.

காப்பு நிதியிலிருந்தோ அல்லது பங்கு முனைமக் கணக்கிலிருந்தோ ஏதேனும் ஒதுக்கீடு செய்தால், அவ்வாறு செய்த 21 நாள்களுக்குள், எத்தகையச் சூழ்நிலையில் அவ்வாறு செய்யப்பட்டது என்பது பற்றி, ரிசர்வ் பாங்கிற்குத் தெரிவிக்கவேண்டும்.

மேற்கூறியபடி, தகவல் அறிக்கை அனுப்புவதில் காலதாமதமேற்படின், ரிசர்வ் பாங்க், தான் சரியென்று கருதினல், அதைப் பொறுத்துக் கொள்ளலாம் அல்லது கால வரம்பை நீடிக்கலாம்.

ஆய்வு (Inspection)

வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 35—ல், இது பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

மத்திய அரசின் உத்திரவுப்படி, ரிசர்வ் பாங்க் தனது அதிகாரிகளின்மூலம், எந்த ஒரு வங்கிக் கம்பெனியையும், அதன் புத்தகங்களையும் கணக்குகளையும் ஆய்வு செய்யலாம். அவ்வாறு ஆய்வு செய்தபின் தன் ஆய்வின் அறிக்கைபடி (A copy of the inspection report) ஒன்றை, ரிசர்வ் பாங்க், அவ் வங்கிக் கம்பெனிக்கு அனுப்பி வைக்கும்.

வங்கிக் கம்பெனியின் இயக்குநர் அல்லது இதர அலுவலர்கள், (staff) தங்கள் பொறுப்பில் அல்லது அதிகாரத்தில் உள்ள புத்தகங்கள், கணக்கீடுகள் அல்லது, வங்கிக்கம்பெனி பற்றிய தகவல்கள் ஆகியவைகளை, ஆய்வு நடத்தும் அலுவலகர் (officer) கேட்கும்போது கொடுக்க வேண்டும்.

தானுகவே ஆய்வு நடத்தினாலும், அல்லது மத்திய அரசினர் கட்டளைப்படி ஆய்வு நடத்தினாலும், ரிசர்வ் பாங்க் தனது ஆய்வு அறிக்கையை, மத்திய அரசினர்க்கு அனுப்பி வைக்கும். அவ் வறிக்கையின்படி, வங்கிக் கம்பெனியானது வைப்பாளர்கள் நலத்திற்குக் குந்தகம் ஏற்படும் வகையில் தொழில் நடத்துவதாகத் தெரியவந்தால், முறையீடு செய்யப் போதிய அவகாசம் அளித்து, முறையீடுகள் சரியில்லாதிருப்பின் வங்கிக் கம்பெனிமீது கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்கலாம்:—

1. புதிய வைப்புகள் வாங்கக்கூடாதென வங்கிக்கம்பெனியைத் தடை செய்யலாம்.

2. வங்கிக் கம்பெனியைக் கலைக்க வேண்டும் என்று ரிசர்வ் பாங்கை, பிரிவு 38-ன் கீழ், விண்ணப்பிக்குமாறு மத்திய அரசு கட்டளை இடலாம்.

மேற்படி உத்தரவிடுவதை மத்திய அரசு தன் விருப்பப்படி தள்ளிப்போடலாம் அல்லது மேற்கூறிய உத்தரவுகளைச் சில நிபந்தனைகளுக்கு உட்படுத்தி மாற்றலாம் அல்லது ரத்து செய்யலாம்.

வங்கிக் கம்பெனிகளுக்குப் போதிய அவகாசம் அளித்த பின்னர், மத்திய அரசினர், ரிசர்வ் பாங்க் அறிக்கையை முழுவதுமோ அல்லது தேவையான பகுதியை மட்டுமோ வெளியிடலாம்.

இப் பிரிவு விதியின்படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகளும், வங்கிக் கம்பெனியாகக் கருதப்படும்.

1. அயல்நாடுகளில் இணைப்புப் பெற்ற வங்கிக்கம்பெனி களின் இந்தியாவில் உள்ள எல்லாக் கிளைகளும்.

2. இந்தியாவில் இணைப்புப் பெற்ற வங்கிக் கம்பெனி களாயின்.

அவற்றால் வங்கித்தொழில் நடத்துவதற்கென இந்தியா விற்கு வெளியில் அமைக்கப்பட்ட எல்லாத் துணைக்கம்பெனி களும் மற்றும் இந்தியாவிலோ அல்லது இந்தியாவிற்கு வெளி யிலோ உள்ள எல்லாக் கிளைகளும்.

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டத்தின் பல்வேறு பிரிவு களில், உள்ள வணிகவங்கிகள் பற்றிய விதிமுறைகளை, வணிக வங்கிகள் பின்பற்றுகின்றனவா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள ரிசர்வ் பாங்க் ஆய்வு நடத்தலாம், விசாரணை நடத்த லாம், முடிவு செய்யலாம். உதாரணமாகப் பிரிவு 11-ன் கீழ், ஒரு வங்கியின் முதல் போதுமானதா என்பது பற்றியும், பிரிவு 22-ன் கீழ் உரிமம் பெறுவதற்கான தகுதி பற்றியும், பிரிவு 23-ன் கீழ்ப் புதுக்கிளைகள் திறப்பது பற்றியும், பிரிவு 44A—யின் கீழ் இணைப்புப் பற்றியும், பிரிவு 37, 44B, 45 ஆகியவற்றின்கீழ் வியாபார நிறுத்தம், கடனீந்தோர்/உறுப்பினர் ஆகியோரிடம் செய்து கொண்ட ஒப்பந்தம் அல்லது ஒத்திசைவு (Compromise) பற்றியும், பிரிவு 21 அல்லது பிற பிரிவுகளின்கீழ் இடப்பட்ட கட்டளைகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பது பற்றியும், ரிசர்வ் பாங்க் ஆய்வு அல்லது விசாரணை நடத்தித் தெரிந்து கொள்ளாம்.

நல்ல வங்கியியல் முறையை உருவாக்குதல், வங்கியச் சட்டங்கள், ஒழுங்கு முறைகளுக்குட்பட்டு வங்கிகளைச் செயல்பட வைத்தல், வங்கிகளை முறையான நிருவாகத்தின்கீழ் நடைபெறச் செய்தல் ஆகியவை ரிசர்வ் பாங்க் ஆய்வின் குறிக்கோள்களாகும். ஆய்வு நடத்தும்போது, ரிசர்வ் பாங்க் ஒரு வங்கியின் நடவடிக் கைகள் பற்றிப் பொதுவாகவும், குறிப்பாக, வங்கிகளின் நடவடிக்கை முறைகள், முதலீடுகள், கடன் கொள்கைகள், சொத்து நிலைமை, நிருவாகத் தரம் போன்றவை பற்றியும் பரிசீலிக்கிறது. வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டத்தின்கீழ், தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புகளைச் செவ்வனே நிறைவேற்ற, அச் சட்டத்தின் கீழ்வரும் எல்லா வங்கிகளையும் ஆய்வு செய் வதற்காக, ரிசர்வ் பாங்க், 1950 மார்ச்சு திங்களில், ஆய்வுக்குழு

ஒன்றை ஏற்படுத்தியது. வங்கிகளை எப்போதும் தன் கண் காணிப்பில் வைத்திருப்பதற்காக, ரிசர்வ் பாங்க், அடிக்கடி ஆய்வுகளை நடத்தி வருகிறது. திடீர் ஆய்வுகளும் நடத்தப்படு கின்றன. ஒவ்வொரு வங்கியையும், ஆண்டுக்கு ஒரு முறையாவது ஆய்வு செய்யவேண்டும் என்பதே, ரிசர்வ் பாங்கின் எண்ணமாகும்.

ஆய்வால் எழும் பல்வேறு பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட்ட வங்கியின் நிருவாகத்தினர் தங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்க ஒரு வாய்ப்பு அளித்த பிறகே, ரிசர்வ் பாங்க் அவ் வங்கியின்மீது நடவடிக்கை எடுக்கிறது. ஆய்வின் அடிப்படையில், ஆய்வு செய்யப்பட்ட வங்கியின் செயல் தரத்தை உயர்த்தவும், நிருவாகத்தை மாற்றியமைக்கவும், ரிசர்வ் பாங்க், எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்கிறது. குறிப்பிட்ட வங்கியின் செயல்கள்மீது கடுமையான கட்டுப்பாடு தேவைப்படின், வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம். பிரிவு 35A யின் கீழ், ரிசர்வ் பாங்க், அதற்கானக் கட்டளையைப் பிறப்பிக்கிறது. வங்கிகளின் இயக்குநர் அவைக் கூட்டங்களுக்குச் செல்வதற்கும், வங்கிகளின் செயல்களை அவ்வப்போது வங்கிகளுக்குச் சென்று கண்காணிக்கவும், ரிசர்வ் பாங்க், சில சமயங்களில் தனது அலுவலர்கள் சிலரை நியமிக் கிறது. இந்த அலுவலர்கள், வங்கிகளின் பல்வேறு பிரச்சினைகள் பற்றித் தேவைப்படும்போது தங்களுடைய அறிவுரைகளை வழங்கு கிறார்கள். வங்கிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, ரிசர்வ் பாங்கைக் கலந்தாலோசித்த பிறகு, வங்கியல் வல்லுநர்களை நியமிக்குமாறு, வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. தலைமை நிறைவேற்றலுவலராகப் (Chief executive officer) பணிபுரியத் தகுதி பெற்றவர்களைப் பெறுவதற்கு, ரிசர்வ் பாங்க், வங்கிகளுக்கு உதவி புரிகிறது; சில சமயங்களில் தனது அதிகாரி களையும் பதிலாயனுப்புகிறது (Deputes). ஒரு குறிப்பிட்ட வங்கி மீளவே முடியாது என்றாலோ, வைப்பாளர்கள், பொது மக்கள் நலத்தைப் பாதுகாக்கவேண்டும் என்றாலோதான், ரிசர்வ் பாங்க் அவ் வங்கியின்மீது கடும் நடவடிக்கைகளை எடுக்கிறது. ரிசர்வ் பாங்கின் இத்தகைய நடவடிக்கைகள், கீழ்க்கண்ட வகையில் அமையலாம்.

1. உரிமம் வழங்க மறுத்தல் அல்லது வழங்கிய உரிமத்தை ரத்து செய்தல்.

2. மத்திய அரசுக்குக் கடன் ஒத்திவைப்பு ஆணைக்கு (Moratorium) மனுச் செய்தல்.

3. வங்கியைக் கலைப்பதற்கு உயர்நீதி மன்றத்திற்கு மனுச் செய்தல்.

மத்திய அரசும், ரிசர்வ் பாங்கை, எந்த ஒரு வங்கியையும் ஆய்வு நடத்தக் கோரலாம். அந்த ஆய்வின்படி, குறிப்பிட்ட வங்கியின் செயல்கள் திருப்திகரமாக இல்லாதிருப்பின், புதுவைப்புகள் பெறுவதை மத்திய அரசாங்கம் தடை செய்யலாம் அல்லது அவ் வங்கியைக் கலைப்பதற்கு உயர்நீதி மன்றத்திற்கு மனுச்செய்யுமாறு, ரிசர்வ் பாங்கைக் கேட்டுக் கொள்ளலாம் அல்லது தேவைப்படின், அந்த வங்கி நிறுவனத்தையே எடுத்துக் கொள்ளலாம்.

ரிசர்வ் பாங்க் நடத்திய ஆய்வு பற்றிய விபரம் அட்டவணை 2-ல் தரப்பட்டதுது.

## அட்டவணை 2

**ரிசர்வ் பாங்க் நடத்திய ஆய்வு**

| | 1970–71 | 1971-72 | 1972-73 | 1973-74 |
|---|---|---|---|---|
| **நிதி சம்பந்தப்பட்ட ஆய்வுகள்** | | | | |
| ஆய்வு நடத்திய/ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட வங்கிகளின் எண்ணிக்கை | 47 | 37 | 44 | 24 |
| ஆய்வு நடத்திய அலுவலகங்களின் எண்ணிக்கை | 721 | 1116 | 1013 | 52 |
| **ஆய்வு—மைய வாரியாக (Centre-wise)** | | | | |
| மைய எண்ணிக்கை (Number of centres) | 58 | 76 | 194 | 614 |
| கிளைகளின் எண்ணிக்கை | 565 | 364 | 789 | 2218 |
| **ஒழுங்குமுறை ஆய்வு (Systems inspections)** | | | | |
| ஆய்வு செய்த வங்கிகளின் எண்ணிக்கை | — | 2 | 1 | 1 |

வங்கிகள் நிருவாகத்தின்மீது கட்டுப்பாடு

சரியான நிருவாகம் இன்றேல், வங்கிகள் தோல்வியுறும் என்பதை இந்தியாவில் ஏற்பட்ட வங்கித் தோல்விகள் பலமுறை நிரூபித்துள்ளன. வங்கிகள் நிருவகிக்கப்பட வேண்டிய முறைகள் பற்றி வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தில் (Banking Regulation Act) சில சரத்துகள் உள்ளன. முக்கியமானச் சரத்துகள் பற்றிக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிவு 10, வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம்

(1) எந்த ஒரு வங்கிக் கம்பெனியும்

(a) நிருவாக முகவுரை (Managing Agent) வேலையில் அமர்த்தவோ அல்லது நிருவாக முகவர்மூலம் நிருவாகத்தை நடத்தவோ கூடாது, அல்லது

(b) கீழே குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஒரு நபரையும் வேலையிலமர்த்தவோ அல்லது தொடர்ந்து (வேலையில்) வைத்திருக்கவோ கூடாது.

(i) நொடித்தவராகத் தீர்ப்பளிக்கப்பட்டவர் (adjudicated insolvent) அல்லது கொடுக்க வேண்டிய கடன்களைக் கொடுக்க முடியாமல் கடன் கொடுத்தவர்களோடு கடன் தீர்வு ஒத்திசைவு செய்துகொண்டவர், தற்காலிகமாக நிறுத்தி வைத்தவர் அல்லது ஒழுக்க இழிகுணம் (Moral turpitude) சம்பந்தப்பட்டக் குற்றத்திற்காகக் குற்ற நீதி மன்றத்தால் முடிவு செய்யப்பட்டபடித் தண்டனையடைந்த குற்றவாளி அல்லது

(ii) முழு ஊதியத்தை அல்லது பகுதி ஊதியத்தைக் கழிவு (Commission) வடிவில் அல்லது வங்கிக்கம்பெனியின் இலாபத்தில் ஒரு பங்கு வடிவில் பெறுபவர்.

(iii) மிக அதிக ஊதியம் பெறுபவர் என்று ரிசர்வ் பாங்கால் கருதப்படுபவர் அல்லது

(c) கீழே குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஒரு நபராலும், நிருவாகமும் நடத்தப்படக் கூடாது:

(i) வங்கிக் கம்பெனியின் துணைக்கம்பெனி (Subsidiary company) தவிர, மற்ற எந்தக் கம்பெனிலாவது இயக்குநராக இருப்பவர், அல்லது

(ii) மற்ற எந்தத் தொழிலிலோ அல்லது உத்தியோகத்திலோ ஈடுபட்டிருப்பவர், அல்லது

(iii) ஒரே சமயத்தில் ஐந்தாண்டுகட்கு அதிகமான பதவிக் காலத்திற்கு, வங்கிக்கம்பெனியை நிருவாகம் செய்ய ஒப்பந்தம் செய்து கொண்டவர்.

குறிப்பிட்ட நபருக்கு வங்கி கொடுக்கும் ஊதியம் மிகையானதா என்று முடிவு செய்யுமுன், ரிசர்வ் பாங்க் கீழே குறிப்பிடப்பட்டுள்ளனவற்றைக் கருத்தில் கொள்ளும்:

(i) வங்கியின் தோற்றம், நிதி நிலை, வரலாறு, அளவு, செடல்படும் எல்லை, நிதி வசதி, தொழிலின் அளவு, வருமானம் ஈட்டும் திறன்.

(ii) வங்கிக் கிளைகள், அலுவலகங்களின் எண்ணிக்கை.

(iii) ஊதியம் கோரும் நபரின் தகுதி, வயது, அனுபவம்.

(iv) இதே போன்ற பிறவங்கிகளில் இதே தகுதி வாய்ந்த நபருக்குக் கொடுக்கப்படும் ஊதியம்.

(v) வைப்பாளர்களின் நலன்.

பிரிவு 16

மற்ற எந்த வங்கியிலாவது இயக்குநராக இருப்பவரையோ அல்லது குறிப்பிடப்பட்டுள்ள வங்கிக் கம்பெனியின் மொத்த ஒட்டு உரிமையில் 20 விழுக்காட்டிற்கு மிகையான ஒட்டுரிமையைப் பெற்றுள்ள கம்பெனிகளில் இயககுநராக இருப்பவரையோ எந்த ஒரு வங்கியும், தனக்கு இயக்குநராக நியமிக்கக் கூடாது.

பிரிவு 10 A

வங்கியியலிலும் அதைச் சார்ந்தத் தொழில்களிலும் சிறந்த தேர்ச்சி, அனுபவம், ஆற்றல் மிக்கோர் வங்கி இயக்குநர்களாக இருப்பின் வங்கிகள் நன்கு வளர்ச்சியடையும். இதனைக் கருத்தில் கொண்டுதான், 1969 பிப்ரவரி 1ஆம் தேதியிலிருந்து, வங்கியின் இயக்குநர்கள் அவையில் 51 விழுக்காட்டிற்குக் குறையாமல் கீழே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளில் சிறந்த அறிவும் செய்முறை அனுபவமும் உடையவர்களே இயக்குநர்களாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

(1) கணக்குப் பதிவியில்

(2) வேளாண்மையும் கிராமியப் பொருளாதாரமும்

(3) வங்கியியல்

(4) கூட்டுறவு

(5) பொருளாதாரம்

(6) நிதி

(7) சட்டம்

(8) சிறு தொழில்

பிரிவு 10 B

வங்கியியல் அல்லது நிதியியல், பொருளாதாரம் அல்லது தொழில் நிருவாகம் ஆகியவற்றில் சிறந்த அறிவும் செய்முறை அனுபவமும் உடைய முழுநேரத் தலைவர் (Wholetime chairman) ஒருவரையே, ஒவ்வொரு வங்கியும் நிருவாகத்திற்காகப் பெற்றிருக்க வேண்டும். ஒரே சமயத்தில் அத்தகைய முழுநேரத் தலைவரின் பதவிக் காலம் ஐந்தாண்டுகளுக்கு அதிகமாக இருக்கக் கூடாது.

பிரிவு 36 AA

வங்கிகளின் தலைமை நிருவாக அலுவலகர்களை நீக்கும் அதிகாரத்தை ரிசர்வ் பாங்க் பெற்றிருக்கிறது. வங்கித் தலைவர், இயக்குநர் அல்லது தலைமை நிருவாக அலுவலகர் ஆகியோரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான காரணங்களை, ரிசர்வ் பாங்க் குறிப்பிட வேண்டும். பொதுநலம் கருதியோ அல்லது வைப்பாளர்களின் நலனுக்குக் குந்தகம் ஏற்படும் வகையில் வங்கி நிருவாகம் நடைபெறுவதைத் தடுப்பதற்காகவோ அல்லது வங்கி நிருவாகம் சீரான முறையில் நடைபெறச் செய்வதற்காகவோ, ரிசர்வ் பாங்க், மேற்கூறப்பட்டபடி அலுவலகர்களை நீக்குவதற்காக நடவடிக்கைகளை எடுக்கலாம். பதவி நீக்க ஆணை பிறப்பிக்குமுன், அவ்வாணையால் பாதிக்கப்படும் நபருக்கு முறையீடு செய்வதற்கான வாய்ப்பை, ரிசர்வ் பாங்க் அளிக்க வேண்டும். குறிப்பிட்ட அந்த நபர், ரிசர்வ் பாங்க் முறையீட்டைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கும்போது பதவியில் இருக்கக்கூடாது என்றும், நிருவாகத்துடன் எந்தவிதத் தொடர்பும் அவர் கொண்டிருக்கக்கூடாது என்றும் ரிசர்வ் பாங்க் கட்டளையிடலாம். பதவி நீக்க ஆணை

கிடைத்த தேதியிலிருந்து முப்பது நாள்களுக்குள், பதவியிலிருந்து நீக்கப்பட்டநபர், மத்திய அரசுக்கு மேன் முறையீடு செய்யலாம். மத்திய அரசின் தீர்ப்பே இறுதியானதாகும். இவ்வாறு பதவியிலிருந்து நீக்கப்பட்ட நபர் அவ் வங்கியில் எப் பதவியும் வகிக்கக் கூடாது. மற்றும், வேறு எந்த வங்கியின் நிருவாகத்திலும் ஐந்தாண்டுகளுக்கு அவர் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது. இவ் விதிகளை மீறிச் செயலாற்றுபவருக்கு, நாள் ஒன்றுக்கு இருநூற்றைம்பது ரூபாய் தண்டம் விதிக்கப்படும். பதவியிலிருந்து நீக்கப்பட்டவர், நட்டஈடு பெறமுடியாது. பதவியிலிருந்து நீக்கப்பட்டவருடைய இடத்தில், வேறொருவரை ரிசர்வ் பாங்க் நியமிக்கலாம். ரிசர்வ் பாங்கின் விருப்பத்தைப் பொறுத்து, அவருடைய பதவிக்காலம் அமையும்; ஆனல், அவர் மூன்றாண்டுகளுக்குமேல் பதவியில் இருக்க முடியாது;ஒரே சமயத்தில் மூன்றாண்டுக் காலத்திற்கு மிகாமல், அவர் பதவிக்காலம் நீடிக்கப்படலாம்.

பொதுநலங்கருதி அல்லது வங்கியின் நலம்கருதி அல்லது வைப்பாளர்களின் நலங்கருதி, ரிசர்வ் பாங்க் கூடுதல் இயக்குநர் அல்லது இயக்குநர்களை ஒரு வங்கியில் நியமிக்கலாம். அந்த வங்கியின் இயக்குநர்கள் அவையின் உயர்ந்த அளவு எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு அல்லது ஐந்து—இவற்றில் எது குறைவோ, அந்த எண்ணிக்கைக்கு மிகாத கூடுதல் இயக்குநர்களையே ரிசர்வ் பாங்க் நியமிக்கலாம். இவ்வாறு நியமிக்கப்பட்ட இயக்குநர் வங்கிக் கம்பெனியில் பங்குத் தகுதி(Minimum share qualification) பெற்றிருக்க வேண்டியதில்லை. அவருடைய பதவிக்காலம், ரிசர்வ் பாங்கின் விருப்பத்தைப் பொறுத்தது; ஆனல் மூன்றாண்டுகளுக்கு அதிகமாகக்கூடாது; மேலும், மறுநியமனம் ஏதும் ஒரே சமயத்தில், மூன்றாண்டுகளுக்கு அதிகமாக இருக்கக்கூடாது.

### வங்கி நடவடிக்கை முறைகள்மீது கட்டுப்பாடு (Control over methods of operation)

வங்கிகள் தங்கள் நிதிகளை ஒழுங்கற்ற முறையில் முதலீடுகள் செய்தோ கடன் கொடுத்தோ வீணாக்கக்கூடாது என்பதற்காக ரிசர்வ் பாங்க் கடுமையான கட்டுப்பாட்டைச் செலுத்தி வருகிறது. இது பற்றியச் சட்டச் சம்பந்த சரத்துகள் கீழே கூறப்பட்டுள்ளன.

### வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 8

எந்த ஒரு வங்கிக் கம்பெனியும், நேரடியாகவோ அல்லது பிறர் சார்பிலோ சரக்குகளை வாங்கல், விற்றல், மாற்றல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது; ஆனல், பிணையமாக வைக்கப்பட்ட சரக்குகளை விற்று வரவேண்டியக் கடன் தொகையை எடுத்து

கொள்ளலாம். மேலும், வசூல் அல்லது ஆவண மாற்றுதல் (negotiation) முறையில் பெறப்பட்ட மாற்று உண்டியல்களை வாங்கல், விற்றல், மாற்றல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடலாம். தொடரத்தகு பாத்தியதைப் (actionable claim) பங்குத்தொகுப்பு கள் (stocks) பங்குகள், பணம், தங்கக்கட்டிகள் ஆகியவை பற்றிய நடவடிக்கைகளிலும் ஈடுபடலாம். மேலும், பிரிவு (6) (1) (a) யில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மாற்று உண்டியல்கள், உண்டியல்கள், புரோநோட்டுகள், கூப்பன்கள், பணவிடை (draft), கப்பல் இரசீது (bill oflading), இரயில் இரசீது(railway receipt), வாரண்டு (warrant) கடன்பத்திரம் (debenture), சான்றிதழ் (certificate), பங்குச் சாற்றுச்சீட்டுகள், (scrips), வாணிக உறுதிக்கடிதம் (letter of credit), பயணக் காசோலை (travellers cheque), பிறநாட்டுக் கடன் பத்திரம், பத்திரம் ஆகியவை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் வங்கிகள் ஈடுபடலாம்.

பிரிவு 9-ல் கூறப்பட்டுள்ளபடி, எந்த ஒரு வங்கிக் கம்பெனியும் வங்கித் தொழிலுக்குத் தொடர்பற்றச் சொத்துகளை வாங்கவோ விற்கவோ கூடாது. ஆகவே, எந்த ஒரு வங்கிக் கம்பெனியாவது அசையாச் சொத்து (immovable property), (எதனையும் சொந்த உபயோகத்திற்கின்றி), பெற்ற ஏழு ஆண்டுகளுக்கு மேல் வைத் திருக்கக்கூடாது. ஆனால், ரிசர்வ் பாங்க், வைப்பாளர்களின் நலங் கருதி மேற்கூறப்பட்ட ஏழாண்டுக்கால அளவைப் பன்னிரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கலாம். பிரிவு 19-ல் கூறப்பட்டுள்ளபடி, எந்த ஒரு வங்கிக்கம்பெனியும் தனது செலுத்திய முதலும், காப்பும் சேர்ந்து 30 விழுக்காடு, அல்லது எந்தக் கம்பெனியின் பங்கில் ஈடு படுகிறதோ அக் கம்பெனியின் செலுத்திய முதலில் 30 விழுக்காடு- இதில் எது குறைவானதோ அந்த அளவிற்கு மிகுதியாகப் பிணைய ராகவோ (pledgee), அடைமானம் பெறுபவராகவோ (mortgagee), அல்லது முழு உரிமையராகவோ (absolute owner) மற்றக் கம்பெனி யின் பங்குகளை வைத்திருக்கக் கூடாது. மேலும் ஒரு வங்கிக் கம் பெனியானது, தனது நிருவாகர் அல்லது நிருவாக இயக்குநருக்குத் தொடர்புள்ள அல்லது அக்கறையுள்ள எந்தக் கம்பெனியின் பங்கையும் வைத்திருக்கலாகாது.

பிரிவு 20—ல் கூறப்பட்டுள்ளபடி, எந்த வங்கிக் கம்பெனியும்

அ) தனது சொந்தப் பங்குகளைப் பிணையாக ஏற்றுக் கடனோ முன் பணமோ அளிக்கக்கூடாது.

ஆ) எவ்விதப் பிணையமும் இல்லாமல் கடனோ முன் பணமோ

(i) தனது இயக்குநர்கள் எவருக்கும் அல்லது

(ii) தனிப்பட்டக் கூட்டு நிறுவனங்கள் அல்லது தனியார் கம்பெனிகள் இவற்றில் வங்கிக் கம்பெனியின் இயக்குநர்கள் கூட்டாளியாகவோ, முகவராகவோ, உத்தரவாதம் கொடுப்பவராகவோ, அக்கறை காட்டுபவராகவோ அல்லது கூட்டாளி அல்லது உத்தரவாதம் அளிப்பவர் என்ற நிலையில் வங்கி இயக்குநரோடு தொடர்புபெற்ற தனி நபருக்கோ அல்லது இவர்கள் சார்பிலோ கொடுக்கலாகாது.

பிரிவு 20 A–ல் கூறப்பட்டுள்ளபடி, மேற்கூறப்பட்ட கடன் எதனையும், ரிசர்வ் பாங்கின் அனுமதியின்றி, தள்ளுபடி செய்யக் கூடாது; அப்படித் தள்ளுபடி செய்தாலும், அது செல்லாது. பிரிவு 21-ல் கூறப்பட்டுள்ளபடி கடன் கொள்கை, நிபந்தனை, வட்டி விகிதம் ஆகியவற்றை நிருணயிப்பது போன்ற அதிகாரங்களைச் செலுத்திக் குறிப்பிட்ட வங்கியையோ அல்லது எல்லா வங்கிகளையுமோ ரிசர்வ் பாங்க் கட்டுப்படுத்தலாம்.

தணிக்கை (Audit)

பிரிவு 30 வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம்

கம்பெனிகளைத் தணிக்கை செய்யத் தகுதியுள்ள தணிக்கையரே வங்கியின் இலாப நட்டக்கணக்கு, இருப்பு நிலைக்குறிப்பு ஆகியவற்றைத் தணிக்கை செய்யலாம். தணிக்கையரை நியமனம், மறுநியமனம், அல்லது நீக்கல் செய்ய வங்கிக் கம்பெனி, ரிசர்வ் பாங்கின் முன் ஒப்புதல்களைப் பெறவேண்டும். பொதுநலன் கருதியோ அல்லது வைப்பாளர் நலன் கருதியோ அல்லது வங்கியின் நலன் கருதியோ குறிப்பிட்ட ஒரு நடவடிக்கை அல்லது நடவடிக்கைகளைத் தணிக்கைச் செய்யுமாறு தணிக்கையரை ரிசர்வ் பாங்க் ஆணையிடலாம். தணிக்கை முடிந்தவுடன், அத் தணிக்கைப் பற்றிய அறிக்கையை, ரிசர்வ் பாங்குக்கு அனுப்பவேண்டும். ரிசர்வ் பாங்க் ஆணையின்படிச் செய்யப்பட்டத் தணிக்கைச் செலவுகளை, வங்கிக் கம்பெனிதான் ஏற்கவேண்டும். வங்கியின் கணக்கு, இருப்பு நிலைக் குறிப்பு ஆகியவற்றைத் தணிக்கையர் அறிக்கையுடன் ஒரு குறிப்பிட்ட முறையில் வங்கி வெளியிடவேண்டும். அவ்வாறு வெளியிட்ட மூன்று படிகளை (copies) ரிசர்வ் பாங்கிற்கு அனுப்ப வேண்டும். கணக்கு ஆண்டு முடிவுற்ற நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள், மேற்கூறப்பட்ட படிகள் (copies) ரிசர்வ் பாங்கிற்கு அனுப்பப்பட வேண்டும். இந்த மூன்று மாத கால அளவை, மேலும் மூன்று மாதங்களுக்கு ரிசர்வ் பாங்க் நீடித்துத் தரலாம்.

**வங்கிகள் இணைப்பு (Amalgamation of banks)**

1960-க்கு முன்னர், வங்கிக் கம்பெனிகள் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி, எந்த வங்கிக் கம்பெனியும், ரிசர்வ் பாங்க் சம்மதமின்றி, வேறொரு வங்கிக் கம்பெனியோடு இணைப்பு நடத்தக்கூடாது. பிரிவு 36(1) (b)–யில் கூறப்பட்டுள்ளபடி இணைப்பினை நாடும் வங்கிக் கம்பெனிகள் ரிசர்வ் பாங்கிற்கு மனுச்செய்து, தங்கள் கம்பெனிகளை இணைக்க, நடுவராக இருந்து உதவிபுரிய வேண்டும் என்று கோரினால், ரிசர்வ் பாங்க் உதவி புரிய முன் வருகிறது.

1960-ல் வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் (Banking Regulation Act) திருத்தப்படும் முன்னர் பிரிவு 44A யின் கீழ் தன்விருப்ப வங்கி இணைப்புகள் (Voluntary bank amalgamations) நடைபெற்று வந்தன. 1960-க்கு முன் ஏற்பட்ட வங்கி இணைப்புகள், அவ்வளவு ஊக்கமளிக்கக் கூடியதாக இல்லை. சிறிய, பலவீனமான வங்கிகளை நீக்குவதன்மூலம், வங்கியியல் முறையைப் பலப்படுத்துவதற்காகவும் இணைப்புகளை விரைவுபடுத்தவும் வேண்டி, 1960–ல் வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு, ரிசர்வ் பாங்கிற்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. ஆகவே 1960-லிருந்து எங்கெல்லாம் கட்டாய இணைப்பு அவசியமோ அங்கெல்லாம் கட்டாய இணைப்பும் (Compulsory amalgamation) எங்கெல்லாம் தன்விருப்ப (voluntary) அடிப்படையில் இணைப்பு முடியுமோ அங்கெல்லாம் தன்விருப்ப இணைப்பும் கொண்டுவரப்படுகின்றன.

பிரிவு 44 A:-இணைக்கப்பட வேண்டிய வங்கிக் கம்பெனிகள், எத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு இணைப்புச் செய்ய இருக்கின்றன என்பது பற்றி ஒரு நகல் தயார்செய்து, தனித்தனியே தங்களுடையப் பங்குதாரர்களைக்கூட்டி, வங்கியின் மூன்றில் இரு பங்குக்குக் குறையாதப் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்களால் பெரும்பான்மையுடன், கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றி, இணைப்புத் திட்டம் அங்கீகரிக்கப் பட்டாலன்றி, இணைப்புச் செய்யஇயலாது.

பங்குதாரர் ஒவ்வொருவருக்கும் கூட்டத்தின் நோக்கம், இடம், நேரம் ஆகியவை குறிப்பிடப்பட்டக் கூட்ட அறிக்கையை (notice) அனுப்ப வேண்டும்; தொடர்ந்து மூன்று வாரங்களுக்கு, வாரம் ஒரு முறையேனும், அவ் வங்கி பதிவு செய்யப்பட்ட அலுவலகம் உள்ள ஊரில் வெளியாகும் இரண்டு பத்திரிக்கைகளிலாவது கூட்டம் பற்றிய அறிக்கையை வெளியிடவேண்டும்.

இவ் விரு பத்திரிக்கைகளில் ஒன்று அந்த ஊர் அல்லது ஊர்களில் உள்ள மக்கள் புரிந்து கொள்ளும் மொழியில் வெளியாகும் பத்திரிக்கையாக இருக்கவேண்டும்.

கூட்டத்தில் இணைப்புத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்த பங்குதாரருக்கும் அல்லது கூட்டத் தலைவரிடம் இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து எழுதிக் கொடுத்த பங்குதாரருக்கும், ரிசர்வ் பாங்க் இணைப்புத் திட்டத்தை அனுமதிக்கும்போது, அவரது பங்குத் தொகைகளை வங்கி திருப்பித்தர வேண்டும். அப்படித் திருப்பித் தரப்படவேண்டிய பங்குகளின் மதிப்பு பற்றி, ரிசர்வ் பாங்க் மதிப்பீடே முடிவானதாகும்.

இரு வங்கிகளின் போதிய அளவு பெரும்பான்மைப் பங்கு தாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இணைப்புத் திட்டத்தை, ரிசர்வ் பாங்கிற்கு அனுப்ப வேண்டும். அத் திட்டத்தை அனு மதித்து, எழுத்துமூலமாக அதுபற்றி இரு வங்கிகளுக்கும் ரிசர்வ் பாங்க் தெரியப்படுத்தும். அதுமுதல் அந்த இணைப்புத் திட்டம், இரு வங்கிக் கம்பெனிகளையும், அவற்றின் பங்குதாரர் களையும் கட்டுப்படுத்தும். ரிசர்வ் பாங்க் இணைப்புத் திட்டத்தை அனுமதித்ததுமுதல், இணைக்கப்படும் கம்பெனியின் சொத்து, பொறுப்புகள், இணைக்கும் கம்பெனிக்கு மாற்றப்பட்டனவா கின்றன.

இணையும் வங்கிகளின் வைப்பாளர்களின் நலத்தில் இணைப்புத்திட்டம் அமைகிறது என ரிசர்வ் பாங்க் கருதினாலும், வங்கியியல் அமைப்பைப் பலப்படுத்தும் வகையில் இணைப்புப் பயனுள்ளதாக இருக்கும் என ரிசர்வ் பாங்க் கருதினாலும், இணைப்புகளுக்குப் பொதுவாக ரிசர்வ் பாங்க் ஊக்கமளிக்கிறது. ஒரு வங்கியின் சொத்துகளையும் பொறுப்புகளையும் மற்றொரு வங்கிக்கு மாற்றுவதன்மூலம் வங்கி அமைப்புப் பலமுறுமாயின் அப்போதும், ரிசர்வ் பாங்க் இணைப்புகளுக்கு ஊக்கமளிக்கிறது.

## கட்டாய இணைப்பு (Compulsory Amalgamation)

வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 45, வங்கிகளின் கட்டாய இணைப்பிற்கு வகை செய்கிறது. இப் பிரிவின்படி ஒரு வங்கிக் கம்பெனியின் உறுப்பினர்கள் அல்லது கடனீந்தோர், சம்மதமின்றி எந்த வங்கிக் கம்பெனியுடனும் (ஸ்டேட் பாங்க், ஸ்டேட் பாங்க் துணை வங்கிகள் உட்பட) கட்டாய இணைப்புச் செய்யப்படலாம். பலவீனமான, சரியாக நிருவகிக்கப்படாத வங்கிகளைப் பொறுத்தவரை, ரிசர்வ் பாங்க், மத்திய அரசைக்

கலந்தாலோசித்த பின்னர், இப் பிரிவின்கீழ், ரிசர்வ் பாங்க், இணைப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கும் குறிப்பிட்ட ஒரு வங்கிக்குக் கடன் ஒத்திவைப்பு (Moratorium) ஆணை வழங்கு மாறு ரிசர்வ் பாங்க், மத்திய அரசுக்கு விண்ணப்பிக்கலாம். ரிசர்வ் பாங்கின் விண்ணப்பத்தின்பேரில், மத்திய அரசு கடன் ஒத்திவைப்பு ஆணை வழங்கலாம். கடன் ஒத்திவைப்புக்காலம், ஆறு மாதங்களுக்கு மிகக்கூடாது. இந்த ஆறுமாத காலத்தில், மத்திய அரசின் உத்தரவின்றி, வங்கியானது, தனது வைப்பாளர் களுக்கோ, கடனீந்தோர்களுக்கோ பணம் ஏதும் கொடுக்கக் கூடாது. இந்த ஆறுமாதக் காலத்தில், அத்தகைய வங்கியைப் புனரமைக்கவோ அல்லது இணைப்பிற்கானத் திட்டத்தையோ வகுக்க ரிசர்வ் பேங்க் அதிகாரம் பெற்றுள்ளது. வைப்பாளர் களின் நலங்கருதி அல்லது வங்கியின் நிருவாகம் சீரான முறையில் அமையவேண்டும் எனக்கருதி அல்லது பொதுநலங்கருதி அல்லது நாட்டிலுள்ள வங்கியியல் அமைப்பின் நலங்கருதி ரிசர்வ் பாங்க் மேற்கூறப்பட்டத் திட்டத்தைத் தயாரிக்கலாம். செயல் முறை விதிகளை ஆய்ந்த பின்னர், வங்கிக் கம்பெனி கலைப்பு நடவடிக்கைள் பற்றித் தன் அறிவுரைகளை, ரிசர்வ் பாங்க் வழங்க லாம். ஆய்வு செய்த பின்னர், வங்கி கலைக்கப்படுவதற்குமுன், தன் அறிக்கையை, ரிசர்வ் பாங்க் கொடுக்கலாம். வங்கியைக் கலைப்பு செய்ய வந்த கலைப்பதிகாரியிடம் (Liquidator), கலைப்புப் பற்றிய தகவல்களையும், அறிக்கைகளையும் தனக்கு அனுப்புமாறு, ரிசர்வ் பாங்க் உத்தரவிடலாம். 1960 செப்டம்பரிலிருந்து 1971 ஜூன் முடிய, 49·95 கோடி ரூபாய் மொத்த வைப்புகளைப் பெற்ற அறுபது வங்கிகளுக்குக் கடன் ஒத்திவைப்பு ஆணை கொடுக்கப்பட்டது.

**பிரிவு 44 B யில் கூறப்பட்டுள்ளபடி**

வங்கி வைப்பாளர்களின் நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் அமையவில்லை என ரிசர்வ் பாங்க் சான்று அளித்தா லன்றி, எந்த உயர்நீதி மன்றமும், குறிப்பிட்ட ஒரு வங்கி தனது உறுப்பினர்கள் அல்லது கடனீந்தோர்களுடன் ஒப்பந்தம், ஏற்பாடுகள், அல்லது அத்தகைய ஒப்பந்தம் அல்லது ஏற்பாடு களில் திருத்தங்கள் செய்து கொண்டால், அவற்றை அனுமதிக்கக் கூடாது. பிரிவு 36 A E யின் கீழ், ரிசர்வ் பாங்கியின் அறிக்கையைப் பெற்றதும் மத்திய அரசினர் வைப்பாளர் நலங்கருதி அல்லது பொது வங்கியக் கொள்கை நலங்கருதி அல்லது பொதுவாக மேன்மையான கடன் வசதிகள் அளிக்கக் கருதி, வங்கி நிறுவனத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

வங்கி இணைப்புப் பற்றிய புள்ளிவிவரங்கள் அட்டவணை 3-ல் தரப்பட்டுள்ளன.

## அட்டவணை 3

வங்கிக் கலப்புகள், இணைப்புகள், சொத்து, பொறுப்பு மாற்றல்கள்

| ஆண்டு | தன்விருப்ப இணைப்பு (வங்கிய ஒழுங் காற்றுச் சட்டம், பிரிவு 44 A) | கட்டாயக் கலப்பு (வங்கியஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 45) | *பிற கலப்புகள் | சொத்து, பொறுப்பு மாற்றல்கள் (கம்பெனிச் சட்டம் பிரிவு293 (1) (a) 7) | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1960 | 2 | — | — | 5 | 7 |
| 1961 | 1 | 30 | 2 | 3 | 36 |
| 1962 | 3 | 1 | 2 | 5 | 11 |
| 1963 | 2 | 1 | 4 | 15 | 22 |
| 1964 | 7 | 9 | 1 | 62 | 79 |
| 1965 | 5 | 4 | 3 | 21 | 33 |
| 1966 | — | — | 2 | 5 | 7 |
| 1967 | — | — | 3 | 6 | 9 |
| 1968–69 சனவரி-சூன் | — | 2 | — | 2 | 4 |
| 1969–70 சூலை-சூன் | — | 2 | — | 2 | 4 |
| 1970–71 | 1 | — | — | 1 | 2 |
| 1971–72 | — | — | — | 1 | 1 |
| 1972–73 | — | — | — | — | — |

* ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா மற்றும்/அல்லது ஸ்டேட் பாங்கின் துணை வங்கிகளால் எடுத்துக் கொள்ளப்பட்ட வங்கிகள்.

வங்கிகள் தொடர்ந்து பணியாற்றிவரும்போதும், கலைக்கப் படும்போதும் வைப்பாளர்களின் நலத்தை ரிசர்வ் பாங்க் பாது காத்து வருகிறது. மத்திய அரசால் 1952 ஜூலையில் நியமிக்கப் பட்ட 'கலைப்பு நடவடிக்கைகள் குழுவின்'(Liquidation Proceedings Committee) பரிந்துரையின் பேரில், 1953 டிசம்பரில், வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்திற்குச் சில திருத்தங்கள் கொண்டு வரப் பட்டன. அத் திருத்தங்களின்படி, ரிசர்வ் பாங்க் மனுச் செய்தால் ரிசர்வ் பாங்கோ, ஸ்டேட் பாங்கோ அல்லது மத்திய அரசால் குறிப்பிடப்படும் எந்த ஒரு வங்கியோ ஒரு வங்கியைக் கலைப்பதற்கு அதிகாரபூர்வமான கலைப்பதிகாரியாக நியமிக்கப்படலாம். கலைப்பு நடவடிக்கைகளைத் துரிதமாக்கவும், மேற்கூறப்பட்ட திருத்தங்கள் வகை செய்தன. ரிசர்வ் பாங்க் கோரியபோது கலைப்பலுவலர்கள் தங்கள் பொறுப்பில், கலைப்பில் உள்ள வங்கிகள் நிலைமை பற்றிய விவரத் தாக்கீதுகளை (Returns) ரிசர்வ் பாங்கிற்கு அனுப்ப வேண்டும். இதனால், கலைப்பு நடவடிக்கைகள், செலவு ஆகியவை பற்றி, ரிசர்வ் பாங்க் அவ்வப்போது கவனிக்க முடிகிறது. மத்திய அரசு அல்லது உயர்நீதிமன்றம் ஆணையிட்டால், வங்கிக் கலைப்பு நடவடிக்கைகளில் ஏதேனும் ஒழுங்கற்றவையா என்று ஆய்வு நடத்தித் தெரிந்து கொள்ள, வங்கியியல் ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 45Q—வின் கீழ் ரிசர்வ் பாங்க் அதிகாரம் பெற்று இருக்கிறது; தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக, ஆய்வு அறிக்கையைத் தன்னை ஆய்வு செய்யுமாறு நியமித்தவருக்கு அனுப்பி வைக்கிறது.

மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக 1970—71-ல் மூன்று வங்கிகளையும், 1971-72-ல் மூன்று வங்கிகளையும், 1972-73-ல் நான்கு வங்கிகளையும் அரசாங்க உத்தரவின் பேரில் (வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 45) ரிசர்வ் பாங்க் ஆய்வு செய்தது. கலைப்பிலுள்ள இரண்டு வங்கிகளை 1970-71—ல் ரிசர்வ் பாங்க் ஆய்வு செய்தது; 1971-72, 1972-73-ல் இத்தகைய நிகழ்ச்சிகள் ஏதும் இல்லை.

1970-71-ல், பத்து வங்கிகளும், 1971-72-ல் ஆறு வங்கி களும், 1972-1973-ல் நான்கு வங்கிகளும் உயர்நீதி மன்ற உத்தரவின் பேரில் கலைக்கப்பட்டன; இந்த மூன்றாண்டுகளில் கலைக்கப்பட்ட எல்லா வங்கிகளுமே, அட்டவணையிலிடப் படாதவை. 1970—71-ல் ஒரு வங்கியும், 1971-72-ல் ஒரு வங்கியும், 1972-73-ல் மூன்று வங்கிகளும் வங்கியியல் ஒழுங் காற்றுச்சட்டம், பிரிவு 44 (1) ன் கீழ்க் கலைக்கப்பட்டன.

### கடன் தகவல் பணி (Credit information Service)

தங்களுடைய வாடிக்கையருக்குக் கொடுத்த கடன் பற்றியத் தகவல்களை, வங்கிகள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்வதில்லை. இதனால் வாடிக்கையர் பல வங்கிகளிடமிருந்தும், தமது சக்திக்கப்பாற்பட்ட கடன்களை வாங்க முடிந்தது. எல்லா வங்கிகளிடமிருந்தும், வாடிக்கையர் பெறும் கடன் பற்றியத் தகவல்கள் சேகரிக்கப்பட்டால், வாடிக்கையர் பெறும் மிகையான கடனைக் கட்டுப்படுத்த முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு தான் 1962-ல், ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் திருத்தி அமைக்கப்பட்டு அத்தியாயம் III A இணைக்கப்பட்டது. இதன் படி, தனியொரு வங்கி, நிதி நிறுவனம் ஆகியவை அவற்றின் வாடிக்கையருக்குக் கொடுத்த கடன் பற்றியத் தகவல்களைச் சேகரிக்க, ரிசர்வ் பாங்க் அதிகாரம் பெற்றுள்ளது. இத் தகவல்களைக் கோரி வங்கிகளும், நிறுவனங்களும் மனுச் செய்தால் ரிசர்வ் பாங்க், பிரிவு 45C 45D (ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம்) யின் கீழ்த் தகவல்களைத் தரும். 1969-70-ல் 1938 மனுக்களுக்கும், 1970-71-ல் 1458 மனுக்களுக்கும், 1971-72-ல் 2255 மனுக்களுக்கும், 1972-73ல் 1186 மனுக்களுக்கும், மேற் கூறிய வகையில் ரிசர்வ் பாங்க் தகவலளித்தது. (1974 ஜூலை 12 லிருந்து, மத்திய அரசு உத்தரவின்பேரில், ஒவ்வொரு வங்கியிலுமுள்ள மிகப்பெரிய முதல் ஐம்பது கடனாளிகளின் கடன் அளவுகள் முடக்கம் (frozen) செய்யப்பட்டுள்ளன.

### ரிசர்வ் பாங்கின் பிற அதிகாரங்கள்

குறிப்பிட்ட ஒரு நடவடிக்கை அல்லது சில வகை நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றிக் குறிப்பிட்ட ஒரு வங்கிக் கம்பெனியையோ அல்லது பொதுவாக எல்லா வங்கிக் கம்பெனிகளையுமோ ரிசர்வ் பாங்க் எச்சரிக்கலாம். அல்லது தடை விதிக்கலாம். வங்கிக் கம்பெனிகள் ஏதும் இணைப்பு (amalgamation) பற்றி முடிவு செய்திருப்பின், அக் கம்பெனிகள் கேட்டுக் கொண்டால் பிரிவு 74A யின் கீழ் ரிசர்வ் பாங்க் இடைநிலையராகவோ (Intermediary) அல்லது மற்ற நிலையிலோ இருந்து, அவைகளுக்கு உதவலாம்.

பொதுநலன் கருதி அல்லது வங்கியக் கொள்கை நலன் கருதி அல்லது வங்கிக் கம்பெனி அல்லது வைப்பாளர்களின் நலனுக்குப் புறம்பான முறையில் வங்கி செயல்படுவதைத் தவிர்க்கக் கருதி, ரிசர்வ் பாங்க், கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

1. வங்கிக் கம்பெனியின் இயக்குநர்கள் கூட்டமொன்றைக் கூட்டி வங்கி நடவடிக்கைகள் பற்றியச் செய்தி எதனையும் பரிசீலனை செய்யக் கோரலாம்; அல்லது வங்கிக் கம்பெனியின் அலுவலகர் ஒருவரை, அச் செய்தி பற்றி ரிசர்வ் பாங்க் அலுவலகரிடம் விவாதிக்குமாறு கேட்டுக்கொள்ளலாம்.

2. தனது அலுவலகர்களில் ஒருவர் அல்லது பலரை, வங்கிக் கம்பெனியின் இயக்குநர் அவைக்கூட்டம், இயக்குநர் அவையால் அமைக்கப்பட்ட குழுவின் கூட்டம் அல்லது வேறு கூட்ட நடவடிக்கைகள் பற்றிக் கவனித்து வர அனுப்பலாம்; அப்படி அனுப்பப் பட்ட அலுவலகருக்குக் கூட்டத்தில் ஏதும் கூற வாய்ப்பு அளிக்கும்படி வங்கிக் கம்பெனியைக் கேட்டுக் கொள்ளலாம்; கூட்ட நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கையைத் தனக்கு (ரிசர்வ் பாங்கிற்கு) அனுப்புமாறு அலுவலகரைக் கேட்டுக் கொள்ளலாம்.

3. வங்கிக் கம்பெனியின் இயக்குநர் அவை அல்லது அந்த அவையால் அமைக்கப்பட்ட குழு ஆகியவற்றை மேற் கூறப்பட்டக் கூட்டங்களைப் பற்றிய எல்லா அறிவிப்பு களையும், தகவல்களையும் ரிசர்வ் பாங்கின் அலுவலக ருக்கு எழுத்துமூலம் தெரிவிக்கும்படிக் கேட்டுக் கொள்ளலாம்.

4. வங்கிக் கம்பெனி அதன் கிளைகள், அலுவலகங்கள் ஆகியவை நடத்தப்படும் விதத்தைப் பார்வையிட்டு அறிக்கையை அனுப்புமாறு தனது அலுவலகரில் ஒருவரை அல்லது பலரை ரிசர்வ் பாங்க் நியமிக்கலாம்.

5. ஆய்வின்போது அல்லது ஆய்வின் காரணமாகத் தெரிய வந்த வங்கியின் நிலைமையின் விளைவால், ரிசர்வ் பாங்க், அவசியம் எனக்கருதும் மாற்றங்களைக் குறிப் பிட்ட காலத்திற்குள் வங்கியின் நிருவாகத்தில் செய்யு மாறு வங்கியைக் கோரலாம்.

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 53 (2), வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 36 (2)ஆகியவற்றின்கீழ், ரிசர்வ் பாங்கின் மத்திய அவையின் இயக்குநர்கள் ரிசர்வ் பாங்க் வேலை செய்யும்முறை பற்றியும், இந்தியாவில் வங்கியியல் வளர்ச்சி, போக்கு (trent) பற்றியும் மத்திய அரசுக்கு ஒவ்வோர் ஆண்டு (சூலை - சூன்) முடிவிலும் ஓர் அறிக்கை அனுப்பவேண்டும்.

ஒரு வங்கிக் கம்பெனி பெயர் மாற்றம் செய்யும்போது அத்தகையப் பெயர் பற்றித் தனக்கு எவ்வித மறுப்பும் இல்லை என ரிசர்வ் பாங்க் சான்று அளிக்கவேண்டும் (பிரிவு 49 B).

ஒரு வங்கிக்கம்பெனி தனது அமைப்பு முறையேட்டில் (Memorandum of Association) மாறுதல் செய்தால், அம் மாறுதல் பற்றித் தனக்கு எவ்வித மறுப்பும் இல்லை என ரிசர்வ் பாங்க் சான்று அளிக்கவேண்டும் (பிரிவு 49C).

விதிகளை வகுக்குமுன், மத்திய அரசு, ரிசர்வ் பாங்கின் யோசனையைக் கேட்க வேண்டும் (பிரிவு 52).

வங்கிக் கம்பெனிச் சட்டத்திலுள்ள சரத்துகளிலிருந்து எந்த ஒரு வங்கிக்கும் விதிவிலக்கு அளிக்குமாறு மத்திய அரசுக்கு, ரிசர்வ் பாங்க் பரிந்துரைக்கலாம் (பிரிவு 53).

பிரிவு 21 அல்லது பிரிவு 35A யின் கீழ், ரிசர்வ் பாங்க் இட்ட, வங்கியக் கொள்கை பற்றிய கட்டளைகளை ஒரு தடவைக்கு மேல் நிறைவேற்றத் தவறினாலும், வைப்பாளர் நலனைப் பாதிக்கும் வகையில் நிருவாகம் நடத்தி வந்தாலும், ரிசர்வ் பாங்க் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில், மத்திய அரசு, அந்த வங்கியைத் தானே மேற்கொள்ளலாம்.

**வங்கி அலுவலர்க்குக் கல்வியும், பயிற்சியும்**

நிருவகிக்கின்ற வங்கியர்களின் தரம், கல்வி, வங்கியலில் பெற்ற பயிற்சி ஆகியவற்றைப் பொறுத்தே வங்கி நிருவாகம் அமையும். வணிக, கூட்டுறவு வங்கிகளின் அலுவலர்களுக்காகவும், ரிசர்வ் பாங்கின் அலுவலர்களுக்காகவும் பல்வேறு பயிற்சி வகுப்புகளை ரிசர்வ் பாங்க் கடந்த 20 ஆண்டுகளாக நடத்தி வருகிறது. 1954-ல் பம்பாயில் வங்கியர் பயிற்சிக் கல்லூரியை (Bankers' training college) ரிசர்வ் பாங்க் நிறுவியது. இக் கல்லூரி, இங்கிலாந்தில் உள்ள பயிற்சி நிறுவனத்தின் மாதிரியில் நிறுவப்பட்டுள்ளது. கல்லூரிக்கான வல்லுநர்கள், ரிசர்வ் பாங்கிலிருந்து அனுப்பப்படுகிறார்கள். இதை நடத்துவதற்கு வங்கியியல் துறையிலுள்ள முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அறிவுரை சபையின் (Advisory Council) உதவியை ரிசர்வ் பாங்க் பெறுகிறது. இங்கு வணிக வங்கியியல் பற்றிய இரு பொது வகுப்புகளும், தொழிற்கடன், வெளிநாட்டுச் செலாவணி, அமைப்பு மற்றும் ஆள்துறை (Personnel) ஆகியவை யடங்கிய சிறப்பு வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. 1954 லிருந்து 1974 ஜூன் முடிய, இக் கல்லூரியில், மொத்தம் 7232

அலுவலர்கள் பயிற்சி பெற்றனர். வேளாண்மைக்கடன் பற்றிய வகுப்புகளும் மாநில, மத்தியக்கூட்டுறவு வங்கிகளின் நிருவாக அலுவலர்க்கான வகுப்புகளும் 1969 வரை இங்கேதான் நடத்தப் பட்டன; பின்னர் இத்தகைய வகுப்புகள் (1969-ல் பூனாவில் ஆரம்பிக்கப்பட்ட) கூட்டுறவு வங்கியர்களின் பயிற்சிக் கல்லூரியில் (Cooperative bankers' training college) நடத்தப்படுகின்றன. இக் கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி மாநில, மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கிளை நிருவாகருக்கான வகுப்புகளையும், மாநில, பிரதம நிலவள வங்கிகளின் நிருவாக அலுவலருக்கான வகுப்பு களையும், வணிக வங்கிகளின் இடைத்தர அலுவலருக்கான வேளாண்மைக் கடன் பற்றிய வகுப்புகளையும் நடத்தி வருகிறது. கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 1974 ஜூன் முடிய, மொத் தம் 2858 அலுவலர்கள் இக் கல்லூரியில் பயிற்சி பெற்றனர். 1974 பிப்ரவரியிலிருந்து இக் கல்லூரி விவசாய வங்கிக் கல்லூரி (College of agricultural banks) 'CAB' என்று மறுபெயரிடப் பட்டுள்ளது.

ரிசர்வ் பாங்கின் கண்காணிப்பு அலுவலர்களின் நன்மைக் காக, ஓர் அலுவலர் பயிற்சிக் கல்லூரியை (Staff training college), ரிசர்வ் பாங்க் 1963-ல் சென்னையில் நிறுவியது, ரிசர்வ் பாங்கில் புதிதாக வேலையிலமர்த்தப்பட்ட எழுத்தர்களுக்கும், ரிசர்வ் பாங்கில் ஐந்தாண்டுகளாகப் பணிபுரியும் எழுத்தர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காகப் பம்பாய், கல்கத்தா, சென்னை, புதுடில்லி ஆகிய இடங்களில் உள்ள ரிசர்வ் பாங்கின் அலுவலகங் களின் வட்டாரப் பயிற்சி மையங்கள் (Zonal training centres) செயல்படுகின்றன. இக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 1973 ஜூன் முடிய மொத்தம் 3775 அலுவலர்கள் இக் கல்லூரியில் பயிற்சி பெற்றனர்.

1969-ல் பம்பாயில் தேசிய வங்கி நிருவாகச் சங்கம் (National Institute of Bank Management) அமைப்பதில் ரிசர்வ் பாங்க் மிகுந்த அக்கறை காட்டியது. இச் சங்கம் நாட்டிலுள்ள பயிற்சி நிறுவனங்களின் தலைமை நிறுவனமாகச் செயல்படுகிறது. மத்திய அரசின் ஆதரவைப்பெற்ற இச் சங்கம் தனது நிதித் தேவைகளை ரிசர்வ் பாங்க், ஸ்டேட் பாங்க், வணிக வங்கிகள் ஆகியவற் றிடமிருந்து பெறுகிறது. உயர்மட்ட நிருவாக அலுவலர்க்குப் பயிற்சி அளித்தல், வங்கியத்தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றி ஆராய்ச்சி செய்தல், வங்கிகளுக்குக் கொள்கைகளைத் திட்டமாக்குவதில் ஆலோசனையளித்தல் ஆகியவை இச் சங்கம் புரியும் பணிகளாகும்.

1972 ஆகஸ்ட் திங்களில் இச் சங்கம் இரு உயர்மட்ட நிருவாக மாநாடுகளை நடத்தியது. 1972-73-ல் (சூன்-சூலை) இச் சங்கம் நடத்திய 14 நிகழ்ச்சிகளில் 350 அலுவலர்கள் பங்கேற்றனர். 1973 ஏப்ரலில் பல்வேறு வங்கிகளின் உயர் நிறைவேற்றலுவலர்கள் (Chief executive officers) பல்வேறு பிரச்சினைகள் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்த ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது.

**வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு** (Deposit Insurance Corporation)

வங்கி வைப்புகள் காப்பீடு செய்யப்படவேண்டும் என்று நீண்ட காலமாகவே கருதப்பட்டது. 1950-ல் கிராமிய வங்கிய விசாரணைக் குழுவினர் (Rural Banking Enquiry committee) வைப்புகளைக் காப்பீடு செய்ய, ஒரு திட்டத்தைக் கொண்டு வருவது பற்றி ஆதரவு தெரிவித்தனர். பின்னர், 1954-ல் தனியார்த் துறைக்கான நிதிக்குழுவும்(Committee on Finance for Private sector) ஷ்ராஃப் குழுவும் (Shroff Committee) வைப்புக் காப்பீட்டைச் செயல்படுத்தவேண்டும் என்று பரிந்துரைத்த தோடு, ஒரு மாதிரித் திட்டத்தையும் உருவாக்கின. ஆனால், அது பற்றி எவ்வித முயற்சியும் செய்யப்படவில்லை.

லக்ஷ்மி பாங்கும் (Laxmi Bank) பாலாய் சென்ட்ரல் பாங்கும் (Palai Central Bank)மூழ்கியதால் வைப்புகளைக் காப்பீடு செய்வது பற்றிய எண்ணம் மீண்டும் எழுந்தது. வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு மசோதா (Deposit Insurance Corporation Bill) 1961 டிசம்பர் 7-ல் இந்தியக் குடியரசுத் தலைவரால் அங்கீகரிக்கப் பட்டது. 1962 சனவரி 1-ல், கூட்டுரு அமைக்கப்பட்டது.

கூட்டுருவின் அனுமதித்த முதல் 1கோடி ரூபாயாகும். இந்த ஒரு கோடியை, ரிசர்வ் பாங்க் முழுமையாகச் செலுத்தியது. ரிசர்வ் பாங்கின் ஆளுநரைத் தலைவராகவும், ரிசர்வ் பாங்கால் நியமிக்கப்படும் ரிசர்வ் பாங்கின் ஓர் உதவி ஆளுநர், மத்திய அரசால் நியமிக்கப்படும் ஒரு அதிகாரி, ரிசர்வ் பாங்குடன் கலந்தாலோசித்த பிறகு மத்திய அரசால் நியமிக்கப்படும் வாணிபம், தொழில், நிதி ஆகியவற்றில் நிபுணர்களாக உள்ள இரு இயக்குநர்கள், ஆகியோரைக் கொண்ட ஓர் அவையிடம் கூட்டுருவின் நிருவாகம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடைசியாகக் கூறப்பட்ட இரு இயக்குநர்கள் அரசாங்க அலுவலகர்களாகவோ, ரிசர்வ் பாங்க் அலுவலகர்களாகவோ,வணிகக் கம்பெனி அலுவலகர் களாகவோ அல்லது வணிகக்கம்பெனி சம்பந்தப்பட்ட அலுவலகர்

களாகவோ இருக்கக்கூடாது. கூட்டுருவின் அன்றாட அலுவல்கள் இயக்குநர் அவையால் அமைக்கப்பட்ட ஒரு குழுவிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளன.

பொது நலன் சம்பந்தப்பட்ட கொள்கைகளைப் பொறுத்த வரை, மத்திய அரசு ரிசர்வ் பாங்கைக் கலந்தாலோசித்து, அவ்வப்பொழுது, கொடுக்கும் உத்தரவுகளை வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு பின்பற்றவேண்டும் என்று வைப்புக் காப்பீட்டுக் கூட்டுருச் சட்டம் கூறுகிறது. மாநில, மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும், ஓர் இலட்ச ரூபாயோ அல்லது அதற்கு மிகையான செலுத்திய முதலையும், காப்பு நிதியையும் பெற்றுள்ள நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளுக்கும் காப்பீட்டு திட்ட வசதிகளை அளிக்க 1968 டிசம்பரில் வைப்புக் காப்பீட்டுக் கூட்டுருச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு, கூட்டுருவுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

1973 சூன் முடிய, காப்பீடு பெற்ற கூட்டுறவு வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 404 ஆகும். எந்தெந்த மாநிலங்களில் கூட்டுறவு வங்கிகள் வைப்புக் காப்புத் திட்டத்தின் கீழ் வரவில்லையோ, அம் மாநிலங்களை, இத் திட்டத்தின்கீழ் வசதி பெறுவதற்குச் சட்ட சம்பந்த ஏற்பாடுகளைச் செய்யுமாறு, ரிசர்வ் பாங்க் வற்புறுத்தி வருகிறது. வைப்புக் காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் எல்லா வணிக வங்கிகளும், காப்பீடு பெற்ற வங்கிகளாகப் பதிவு செய்து கொள்ளவேண்டும்; 1973 சூன் முடியக் காப்பீடு பெற்ற மொத்த வங்கிகளின் எண்ணிக்கை 81 ஆகும். ஒவ்வொரு வங்கியிலுமுள்ள ஒவ்வொரு வைப் பாளரைப் பொறுத்தவரைக் காப்பீட்டுக்குத் தகுதி பெற்ற தொகையின் அளவு ஆரம்பத்தில் 1,500 ரூபாயாக இருந்தது. 1968 சனவரி 1 ஆம் நாளிலிருந்து, இத் தொகை 5,000 ரூபாயாகவும், 1970 ஏப்ரல் 1ஆம் நாளிலிருந்து 10,000 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. வைப்பாளர் தமது வங்கிக்குக் கொடுக்க வேண்டிய கடன் போக எஞ்சியுள்ள வைப்புத் தொகையே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். மத்திய, மாநில அரசுகளின் வைப்புகள், பிற நாட்டு அரசின் வைப்புகள், பிற நாட்டு வங்கிக் கம்பெனிகளின் வைப்புகள், ஆகியவை இத் திட்டத்தில் அடங்கா. 1971-க்கும் முன்னல் ஒவ்வொரு 100 ரூபாய்க்கும் காப்பீட்டுக் கட்டணத் தொகை (Insurance premium) 5 பைசாவாக இருந்தது. 1971 அக்டோபர் 1 ஆம் நாள் முதல், 4 பைசாவாக ஆக்கப்பட்டது. 1973 சூன் முடிய கொடுக்கப்பட்ட மொத்த கோருரிமைத் தொகை 113 இலட்ச ரூபாயாகும்.

1 கோடி ரூபாயாக இருந்த மூலதனம், 1972 சனவரி 1ஆம் நாளிலிருந்து 1·50 கோடி ரூபாயாகியது. வைப்புக் காப்பீட்டுக் கூட்டுருவின் முழு மூலதனத்தையும் ரிசர்வ் பாங்கே செலுத்தியுள்ளது. கூட்டுரு ரிசர்வ் பாங்கிடமிருந்து 5 இலட்ச ரூபாய் வரை கடன்பெறும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. 1972 செப்டம்பர் முடிவில் மொத்த வைப்புக் கணக்குகளில் 96·3 விழுக்காடும், காப்பீடு பெற்ற வங்கிகளின் மதிப்பிடக் கூடிய வைப்புத் தொகையில் 59·9 விழுக்காடும், வைப்புக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ்ப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளன.

1974 சூன் முடிய காப்பீடு பெற்ற வணிக வங்கிகளின் எண்ணிக்கை 80 ஆகும். டில்லி, ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள கூட்டுறவு வங்கிகளுக்கும் காப்பீட்டுத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டது. ஆந்திரப்பிரதேசம், ஜம்முகாஷ்மீர், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, டில்லி, கோவா, டமன், டியூ ஆகிய மாநிலங்களில் உள்ள 423 கூட்டுறவு வங்கிகள் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இடம் பெறுகின்றன.

# 8. ரிசர்வ் பாங்கும் கிராமியக் கடனும்
## (Reserve Bank of India and Rural credit)

உலகில் உள்ள மற்ற மைய வங்கிகளோடு ஒப்பிடும்போது, இந்திய ரிசர்வ் பாங்க், சில தனித்தன்மை வாய்ந்த பணிகளைப் புரிகிறது அப் பணிகளில் ஒன்றே, கிராமியக்கடன் வசதி அளித்தல் ஆகும், இந்தியா வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட நாடாக இருப்பதால், ரிசர்வ் பாங்க் இப் பணியைப் புரிகிறது.

ரிசர்வ் பாங்க் தொடங்கப்படுவதற்கு முன்னர், சர் மால்கம் டார்லிங் (Sir Malcolm Darling) என்பவரைக் கூட்டுறவுக் கடன் பற்றித் தமது கருத்துகளைத் தெரிவிக்குமாறு, மத்திய அரசாங்கம் நியமித்தது. கூட்டுறவுக் கடன் வேளாண்மைக் கடன்துறை அமைப்பு ஆகியவை பற்றிய சர் மால்கம் டார்லிங்கின் அறிக்கையை, ரிசர்வ் பாங்க் 1935 ஜூன் திங்களில் பெற்றது. அவ் வறிக்கையை அடிப்படையாகவும், தனது பிற கொள்கைகளையும் கருத்தில் கொண்டு, வேளாண்மைக்கடன் பற்றியத் தனது சொந்தக் கொள்கையை, பிரிவு 55 (1)-ன் கீழ் ரிசர்வ் பாங்க் வகுத்தது.

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 54 - ன் படி, ஒரு வேளாண்மைக்கடன் துறை (Agricultural Credit Department) கிராமியக் கடன் வசதிகளைக் கவனிப்பதற்காகவே ரிசர்வ் பாங்கில் உள்ளது. இத் துறையின் முக்கிய பணிகளாவன:-

1. கிராமியக் கடன் பற்றிய எல்லாப் பிரச்சனைகளையும் ஆராய்வதற்கும், மத்திய, மாநில அரசுகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் பிற வங்கிகளுக்குத் தகுந்த அலோசனை அளிக்கவும் வல்லுநர்களை வைத்திருத்தல். 2. ரிசர்வ் பாங்கின் கிராமியக் கடன் பற்றிய நடவடிக்கைகளை மாநிலக் கூட்டுறவு வங்கிகள், பிற வங்கிகள் அல்லது கிராமியக் கடன் வழங்கும் பிற நிறுவனங்களின் கடன் கொள்கைகளோடு இணைத்துச் செயல்படுதல்,

ரிசர்வ் பாங்க் 1935 ஏப்ரலில் தொடங்கப்பட்டபோதே வேளாண்மைக் கடன் துறையும் தொடங்கப்பட்டது. தொடக்கக் காலத்தில்,கிராமியக் கடன் பற்றிய பிரச்சனைகளை விரிவாக ஆராய் வதே, இத் துறையின் இன்றியமையாத பணியாக இருந்தது. இவ் வாராய்ச்சியின் விளைவாக, ரிசர்வ் பாங்க், மத்திய அரசிடம் இரு அறிக்கைகளைச் சமர்ப்பித்தது. முன்அறிக்கையை (Preliminary report) 1936 லும், சட்ட முறையான அறிக்கையை (Statutory report) 1937 லும் ரிசர்வ் பாங்க் சமர்ப்பித்தது. அந்த அறிக்கை யின்படி:-இந்தியாவில் விவசாயிகளுக்குத் தேவையான முழுக்கடன் களையும் லேவாதேவிக்காரர்களே கொடுத்து வந்தார்கள்; கூட்டுற வுத் துறையும், பிற நிறுவனங்களும் அளித்துவந்தக் கடன் வசதிகள் மிகக் குறைந்த அளவே ஆகும். லேவாதேவிக்காரர்கள் மிக அதிகமான வட்டியை வசூலித்ததாலும், கடன் கொடுப் பதில் பல தீய வழிகளைப் பின் பற்றியதாலும், லேவாதேவிக் காரர்களைக் கட்டுப்படுத்தச் சட்டம் கொண்டுவரவேண்டும் என்று இவ் வறிக்கை கூறியது. கூட்டுறவுத் துறையின் செயல்திறன் திருப்திகரமாக இல்லாவிடினும், கூட்டுறவு அமைப்பைத் திருத்தி யமைத்தால், அத் துறை கிராமியக்கடன் வழங்க மிகவும் பொருத்தமானதாக அமையும் என்று அவ் வறிக்கை மேலும் கூறியது.

1949 வரையில், மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் குறுகிய காலத் தற்காலிகக் கடன் தேவைகளை மட்டுமே ரிசர்வ் பாங்க் அளித்து வந்தது. கூட்டுறவு இயக்கத்திற்கோ, கூட்டுறவு வங்கி யியல் முறைக்கோ, எந்த ஒரு தனி அக்கறையும் ரிசர்வ் பாங்க் எடுத்துக்கொள்ளவில்லை. 1949-ல், ரிசர்வ் பாங்க் நாட்டுடைமை யாக்கப்பட்டதிலிருந்து, கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரை யில் (குறிப்பாகக் கூட்டுறவுக்கடன்) ரிசர்வ் பாங்க் கொள்கைகளில் வளர்ச்சியும், புரட்சிகரமான மாறுதல்களும் காணப்படுகின்றன. 1935 லிருந்து 1947 வரை கூட்டுறவு இயக்கத்தை மாற்றி யமைப்பதற்கும், வேளாண்மைக் கடனில் தன் பங்கை அதிக மாக்குவதற்கும் ரிசர்வ் பாங்க் எடுத்துக் கொண்ட முயற்சிகள் வெற்றியடையவில்லை. கூட்டுறவு இயக்கத்தை எவ்வாறு மாற்றி யமைக்கலாம் என்பதைப் பரிசீலனை செய்வதிலேயே காலம் கடந்து விட்டது. அந்நியர் ஆட்சியின் காரணமாக, அரசாங்கக் கொள் கையும் தெளிவற்றதாக இருந்தது. பெரும்பாலும், மாநிலக் கூட்டுறவு வங்கிகளின், குறுகியக் காலக்கடன் தேவைகளை மட்டும், ரிசர்வ் பாங்க் கவனித்து வந்தது. மாநிலக் கூட்டுறவு வங்கி களுக்குச் சாதகமான நிபந்தனைகளில் கடன் கொடுத்தால்தான், இந்திய விவசாயிகள் பயனடைவர் என, 1947-ல்தான்,

ரிசர்வ் பாங்க் உணர்ந்தது. இதனைக் கருத்தில் கொண்டுதான், 1954-ல் ரிசர்வ் பாங்கின் வேளாண்மைக் கடன்துறை, மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சலுகை வீதத்தில் கடன் அளிக்கும் திட்டம் ஒன்றைத் தீட்டி, தீவிரமாகச் செயல்படுத்தியது. 1942 லிருந்தே சலுகை வீதத்தில் கடனளிக்கப்பட்ட போதிலும், 1947—க்குப் பின்னர்தான், சலுகைகள் அதிகரிக்கப்பட்டன. 1949-ல் ரிசர்வ் பாங்க் நாட்டுடைமையாக்கப்பட்டபோது, வேளாண்மைக்கடன் அளிக்க, ரிசர்வ் பாங்க்தான் மிகப் பொறுத்தமான நிறுவனம் என்று முழுமையாகக் கருதப்பட்டது. கிராமியக்கடன் நிலைமை பற்றி மறுபரிசீலனை செய்யவும், ரிசர்வ் பாங்க் எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிப் பரிந்துரைக்கவும், 1949-ல் கிராமிய வங்கி விசாரணைக்குழு (Rural Banking Enquiry committee)அமைக்கப்பட்டது. கிராமியக் கடன் பற்றி, ரிசர்வ் பாங்க் எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசனையைத் தெரிவிக்க, 1951-ல் ரிசர்வ் பாங்க், ஒரு நிபுணர்கள் மாநாட்டைக் கூட்டியது. அம் மாநாட்டின் பரிந்துரையின் பேரில், மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக்கப்படும் கடன் முறைகளின் மீதான கட்டுப் பாடுகள் மேலும் தளர்த்தப்பட்டன; கூட்டுறவு நிறுவனங்களின் செயல்களையும், ரிசர்வ் பாங்கின் கொள்கைகளையும் இணைப் பதற்காக, 1951-ல் ஒரு நிலையான வேளாண்மைக் கடன் அறிவுரைக் குழு (Standing advisory committee on agricultural credit) நிறுவப்பட்டது 1956-ல், இக் குழு திருத்தியமைக்கப் பட்டது.

1955 ல், ரிசர்வ் பாங்க் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு, கிராமியக் கடனைக் கவனிப்பதற்காக, ஒரு துணைஆளுநர் பதவி உருவாக்கப்பட்டது. இத் துணைஆளுநரின் கீழ்ப் பணிபுரியும் வேளாண்மைக் கடன்துறையின் தலைமை அலுவலகர், இத் துறை யின் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பைப் பெற்றிருக்கிறார். ரிசர்வ் பாங்கின் வட்டார அலுவலகங்கள் நாட்டின் எல்லா முக்கிய இடங்களிலும் இருப்பதால், பல்வேறு மாநில அரசு களோடும், கூட்டுறவுத் துறைகளோடும், ரிசர்வ் பாங்க் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளமுடிகிறது.

**கிராமியக் கடன் ஆராய்ச்சிக்குப் பின்**

அகில இந்தியக் கிராமியக் கடன் குழு ஆராய்ச்சி அறிக்கை யின்படி, (All-India rural credit survey committee report) லேவாதேவிக்காரர்களும், வியாபாரிகளுமே, விவசாயிகளின் 70 விழுக்காட்டுக் கடன் தேவையை நிறைவுசெய்து வந்தனர்.

ஆனால், கூட்டுறவுச் சங்கங்களும், அரசாங்கமும் சேர்ந்து 3 விழுக்காட்டுக் கடனே கொடுத்துவந்தன. லேவாதேவிகாரர்கள், அதிக வட்டியில் கடன் கொடுத்து வந்தார்களே தவிர, கடனின் நோக்கம் பற்றிக் கவலைப்பட்டாரில்லை. அவ் வறிக்கை கிராமியக் கடன் நிலைமைபற்றிப் பின் வருமாறு கூறியது. கிராமியக்கடன் சரியான அளவுக்குக் குறைவுபட்டதாகவும், முறையற்றதாகவும், சரியான நோக்கத்திற்குப் பயன்படாத தாகவும் இருந்ததோடுமட்டுமல்லாமல் தகுந்தவர்களுக்கும் போய்ச் சேரத் தவறியது. ஆகையால்தான் அவ் வறிக்கை ''கூட்டுறவு முறை தோல்வியடைந்து விட்டது; ஆனால் அது வெற்றியடைய வேண்டும்'' என்று கூறியதோடு அல்லாமல், கூட்டுறவுக் கடன் இயக்கம் வெற்றியடைவதற்கான சூழ்நிலையை உருவாக்குதல் அவசியம் என்று வலியுறுத்தியது. இதற்காக, அவ் வறிக்கை, இணைந்த கிராமியக் கடன் திட்டத்தின் படி (Integrated scheme of rural credit) பல பரிந்துரைகளை வழங்கியது. இத் திட்டத்தின் சிறப்புகளாவன: 1. கூட்டுறவுக்கடன் நிறுவனங்களின் பங்குகளைப் பெறுவதன்மூலம் அரசாங்கம் கூட்டுச் சேருதல். 2. கடனையும் பிற பொருளாதாரச் செயல்களையும் இணைத்தல். 3. கிராம மக்களின் தேவைகளுக்குத் தகுந்தாற்போல் பயிற்சி பெற்ற, திறமையுள்ள அலுவலர்கள்மூலம் நிருவகித்தல். இத் திட்டத்தில், ரிசர்வ் பாங்குக்கு ஒரு முக்கிய பங்கு அளிக்கப் பட்டது. கிராமப்புறங்களில் வங்கி வசதிகளைப் பெருக்கவும், இம்பீரியல் பாங்கை ஸ்டேட் பாங்காக மாற்றவும், இக் குழு பரிந்துரைத்தது. குழுவின் பரிந்துரையின்படி, ரிசர்வ் பாங்க், மத்திய, மாநில அரசுகளோடு ஒன்றுசேர்ந்து கூட்டுறவுத்துறை வளர்வதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும். இரண்டாவதாக, மாநில அரசுகள், ரிசர்வ் பாங்கிடமிருந்து கடன் பெற்றுக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் பங்குத்தொகையை வாங்கலாம். மூன்றாவதாக, ரிசர்வ் பாங்க் கூட்டுறவுக்கடன் துறைக்கு நேரடியாகக் குறுகியக்கால, மத்தியக்கால மற்றும் நீண்ட காலக் கடன் வசதிகளை அளிக்கிறது.

மேற்கூறிய நிதி வசதிகளை அளிப்பதற்காக, ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், 1955-ல் திருத்தப்பட்டு பிரிவு 46A பிரிவு46B ஆகிய இரு பிரிவுகள் சேர்க்கப்பட்டன. இவ் விருபிரிவு களின்படி தேசிய வேளாண்மைக்கடன் (நீண்டகால நடவடிக்கை) நிதியும் (National Agricultural credit (Long term operations) fund), தேசிய வேளாண்மை (நிலைப் பேறுக்க) நிதியும் (National agricultural stabilisation fund) ஏற்படுத்தப்பட்டன.

தேசிய வேளாண்மைக்கடன் (நீண்டகால) நடவடிக்கை நிதி

இந் நிதி கீழ்க்கண்டவாறு பயன்படுத்தப்படுகிறது.

1. கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் பங்கு மூலதனத்தை வாங்குவதற்காக, மாநில அரசுகளுக்கு 20 ஆண்டுகளுக்கு அதிகப்படாத கடனும், முன்பணமும் அளித்தல்;

2. விவசாயம் அல்லது அதைச் சார்ந்த நோக்கங்களுக்கு மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு, ஐந்து ஆண்டிற்கு மேற்படாத மத்தியக்கால முன்பணம் அளித்தல்;

3. நிலவள வங்கிகளுக்கு 20 ஆண்டுகளுக்கு அதிகப்படாதக் கடன்களைக் கொடுத்தல்;

4. நிலவள வங்கிகளின் கடன் பத்திரங்களை வாங்குதல்.

1956—ல், இந் நிதி 10 கோடி ரூபாயுடன் தொடங்கப்பட்டது. தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு 5 கோடி ரூபாய் இந் நிதிக்குச் செலுத்தப்பட்டது. கூட்டுறவுக் கடன் குழுவின் (Committee on co-operative credit) பரிந்துரையின் பேரில் ரிசர்வ் பாங்க் இந் நிதிக்குத் தனது செலுத்தல்களை அதிகமாக்கியது.

தேசிய வேளாண்மைக் கடன் (நிலைப் பேருக்க) நிதி

இந் நிதி 1956-ல் 1 கோடி ரூபாயுடன் தொடங்கப்பட்டது. ஆண்டொன்றுக்கு, ரிசர்வ் பாங்க், இந் நிதிக்கு, ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியது. பின்னர் அத் தொகை மேலும் அதிகரிக்கப் பட்டது.

1. பிரிவு 17(4) ன் கீழ் மாநிலக் கூட்டுறவு வங்கிளிடமிருந்து வரவேண்டிய குறுகியக்காலக் கடன்களையும் பிரிவு 17 (2) ன் கீழ் மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் மாற்று உண்டியல்களையும், புரோ நோட்டுகளையும் வாங்கியதாலோ அல்லது மறுதள்ளுபடி செய்ததாலோ ஏற்பட்ட கடன்களை, அவ் வங்கிகள் கொடுக்கமுடியாத சூழ்நிலை உருவாகுமாயின், ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத மத்தியக் காலக் கடனாக, அக் குறுகியக்காலக் கடன்களை மாற்றுவதற்கு இந் நிதி பயன்படுத்தப்படுகிறது.

அகில இந்தியக் கிராமியக் கடன்குழு, கூட்டுறவுக்கடன் குழு ஆகிய குழுக்களின் பரிந்துரையின்பேரில் ரிசர்வ் பாங்க் எடுத்துக் கொண்ட முயற்சிகளும், ரிசர்வ் பாங்க் அளிக்கும் குறுகியக்

17

கால மற்றும் மத்தியக்காலக் கடன் வசதிகளும், உண்மையிலேயே ஒரு மைய வங்கி செய்ய வேண்டிய பணிகளுக்கு அப்பாற்பட்டதாகும். தீவிர விவசாயச் சாகுபடித் திட்டங்கள் பலவற்றின்கீழ் ரிசர்வ் பாங்க் செய்துவரும் பணிகள், ரிசர்வ் பாங்கின் தீவிர ஈடுபாட்டை எடுத்துக்காட்டுகின்றன. தொடக்கத்தில் நிலவள வங்கிகளின் கடன் பத்திரங்களை ஓரளவிற்கு மட்டுமே ரிசர்வ் பாங்க் வாங்கிவந்தது மேலும் பல வசதிகளை அளிப்பதற்காகப் பின்னர் 1963-ல் வேளாண்மை மறுநிதிக்கூட்டுரு (Agricultural Refinance Corporation) நிறுவப்பட்டது.

1953-ல், ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் திருத்தப் பட்டு பிரிவு 17-ன் புதிய துணைப் பிரிவான (2) (B) யின்படி சிறு தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்கும், ரிசர்வ் பாங்க் கடன் அளிக்கும் பொறுப்பை ஏற்றது. 1956-ல் கைத்தறித் தொழில்களுக்கு நிதியளிக்கும் திட்டங்களை வகுத்தது. 1968-69-ல் மேலும் 22 குடிசைத்தொழில்களும் சிறு தொழில்களும், இத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. தொழில் கூட்டுறவு சங்கங்களின் மூலதனத்தைப் பலப்படுத்தவும், அவற்றில் மாறுதல்களை உண்டாக்கவும், ரிசர்வ் பாங்க் முயற்சிகள் எடுத்துக் கொண்டது. 1954-க்குப் பிறகு (அகில இந்தியக் கிராமியக் கடன் குழு ஆராய்ச்சி அறிக்கை) கிராமியக்கடன் துறையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைத் தெரிந்துகொள்ள, 1966-ல், அகில இந்தியக் கிராமியக்கடன் மறு பரிசீலனைக்குழு (All-India rural credit review committee) ஒன்றை, ரிசர்வ் பாங்க் அமைத்தது. அக் குழு, 1969 ஜூலையில் தன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. அக் குழு கூட்டுறவுக் கடன் அமைப்பை மாற்றி அமைக்கவேண்டும் என்றும், கிராமியக் கடன் இணைப்புத் திட்டத்தைச் சீரமைக்க வேண்டும் என்றும், வலியுறுத்தியது. விவசாயக் கடன் பிரச்சினையைப் பார்க்கும்போது, கூட்டுறவுத் துறையை மட்டுமே வளர்ப்பதில் முயற்சிகள் எடுத்துக்கொண்டால் போதாது என்றும் வணிக வங்கிகள், குறிப்பாக, நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகள் வேளாண்மைக்கடன் கொடுக்க முன்வர வேண்டும் என்றும் குழு கூறியது. கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதில் ரிசர்வ் பாங்கின் பங்கை அதிகமாக்கி, இக் குழு பரிந்துரை செய்தது.

1951-ல், ஒரு சில மாநிலங்களில், மாநிலக் கூட்டுறவு வங்கிகள் இல்லை. வேறு சில மாநிலங்களில், மாநிலக் கூட்டுறவு வங்கிகள் இருந்தும், அவை திருப்திகரமாகச் செயல்படவில்லை. மேலும், பல மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மிகக் குறைந்த

வைப்புக்களுடனும் ஆனுல், மிக அதிகக் காலங்கடந்த கடன் களுடனும் செயல்பட்டு வந்தன. பல கூட்டுறவுச் சங்கங்கள் மிக அதிகமானக் காலங்கடந்த கடன்களால் சீர்குலேந்து பலவீனமாக இருந்தன. இத்தகைய கூட்டுறவு அமைப்பைச் சீர்ப்படுத்துவதில், மாநிலக் கூட்டுறவு வங்கிகளே மாநில அரசுகளின்மூலம் வலுப் படுத்துவதில், ரிசர்வ் பாங்க் முயற்சி எடுத்துக்கொண்டது. மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகளேப் பொறுத்த வரையில், செயல்பட முடியாத நிலேமை உண்டானபோது, அவற்றுக்குப் புனர்வாழ்வு கொடுக்கப் பல வழிவகைகளே வகுத்ததோடு அல்லாமல், பல குழுக்களே அமைத்து, அவற்றின் வளர்ச்சியை ரிசர்வ் பாங்க் கண்காணித்தது. கூட்டுறவுச் சங்கங் களேப் பொறுத்தவரை, அவற்றை இணேப்பதற்கும், மாற்றி யமைப்பதற்கும், செயலற்றச் சங்கங்களேக் கலேப்பதற்கும் தேவை யான திட்டங்களே மாநில அரசுகளுக்கு வகுத்துக் கொடுப்பதில் ரிசர்வ் பாங்க் உதவி செய்கிறது. மேலும், அத் திட்டங்கள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பதையும் ரிசர்வ் பாங்க் கண்காணிக்கிறது.

மத்தியக்கால விவசாயக் கடன்களேப் பொறுத்தவரை, பல்வேறு தேவைகளுக்கு எவ்வளவு கடன் கொடுக்கவேண்டும், கடனேத் திருப்பிக் கொடுக்கக்கூடிய திறன், கடனுக்கானப் பிணேயங்கள், கடன்களேப் பயன்படுத்துவதைக் கண்காணித்தல் ஆகியவை பற்றி ரிசர்வ் பாங்க் சில விதிமுறைகளே ஏற்படுத்தி உள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் மேற்பார்வைக்கான ஏற்பாடு களேப் பொறுத்தவரை, இத்தகைய மேற்பார்வையானது கடன் வசதி அளிக்கும் வங்கிகளிடமே இருக்கவேண்டும் என்பது ரிசர்வ் பாங்கின் கருத்தாகும்; எந்தெந்த மாநிலங்களில் இவ்வாறு இல்லேயோ, அம் மாநிலங்களில் கடன் அளிக்கும் வங்கிகளிடம் இவ் வேலேயை மாற்றுமாறு, அம் மாநில அரசாங்கங்களே ரிசர்வ் பாங்க் கேட்டுக்கொள்கிறது.

சில மாநிலங்களில், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் நிதி நிலேமையும், நிருவாக நிலேமையும் மிகவும் பலவீனமாக இருப்பதால், ரிசர்வ் பாங்க் கொடுக்கும் தாராள நிதிவசதியைப் பெற முடிவதில்லே. இதனுல், கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் அளிக்கும் அட்டவணேயிலிட்ட வணிக வங்கிகளுக்கு, ரிசர்வ் பாங்க் $4\frac{1}{2}$ விழுக்காட்டில் சலுகையைக் காட்டி, மறுநிதி வசதி அளிக்கிறது.

மேற்கூறிய பணிகளேச் செய்யும்பொழுது, ரிசர்வ் பாங்க், மத்திய, மாநில அரசாங்கங்கள், திட்டக்குழு, மாநிலக் கூட்டுறவு

வங்கிகள் மற்றும் மத்திய நிலவள வங்கிகளின் கூட்டமைப்பு (Federation) தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு (National Co-operative Development Corporation) ஆகியவற்ருேடு ஒத்து ழைக்கிறது. மேலும், கிராமியக்கடன் பொறுப்பை ஏற்றிருக்கும் உதவி ஆளுநர் ஒவ்வோர் ஆண்டும், மாநில அரசுகளோடும், கூட்டுறவு நிறுவனங்களுடனும், கூட்டுறவு வளர்ச்சி மற்றும் கூட்டுறவுக் கடன் நிலைமை பற்றி விவாதிக்கிருர், மறு பரிசீலனையும் செய்கிருர்.

தொடக்கத்தில், கூட்டுறவுத் துறைகளிலும் மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட துறைகளிலும் பணியாற்றுவோருக்குப் பயிற்சி அளிப்பதற்கான ஏற்பாடுகளை, ரிசர்வ் பாங்க் செய்து வந்தது. 1962-ல், ரிசர்வ் பாங்கின் இப் பணியானது, தேசியக் கூட்டுறவு ஒன்றியத்திற்கும் (National co-operative union), மாநிலக் கூட்டுறவு ஒன்றியத்துக்கும் (State co-operative unions) மாற்றப் பட்டது. அப்படி மாற்றியபோதிலும் மாநில, மத்திய நகர்ப்புற வங்கிகளில் பணிபுரிவோர்க்கு, ரிசர்வ் பாங்க், பூனுவில் உள்ள தன்னுடைய கூட்டுறவு வங்கியர்களின் பயிற்சிக் கல்லூரியில், சிறப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. வணிக வங்கி களில் பணியாற்றுவோருக்காக, வேளாண்மைக் கடன் பற்றியத் தனி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. பூனுவில், மேற்கூறிய கல்லூரி அமைக்கப்படுவதற்குமுன், இத்தகைய வகுப்புகள் பம்பாயில் உள்ள வங்கியர் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்பட்டு வந்தன. கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுக்கும், ரிசர்வ் பாங்கிற்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்து வதற்காக, ரிசர்வ் பாங்க் 1951-ல் வேளாண்மைக் கடன் பற்றிய அறிவுரை வழங்கும் நிலையான குழுவை (Standing committee on agricultural credit) ஏற்படுத்தியது. இக் குழு 14 உறுப்பினர்களை உடையது. இக் குழு, வேளாண்மைக் கடன்துறை பற்றியப் பிரச்சினைகளையும், அது சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றியும், ரிசர்வ் பாங்கிற்கு அறிவுரை கூறுகிறது. அகில இந்தியக் கிராமியக் கடன் ஆராய்ச்சிக் குழுவின் அறிவுரையின்பேரில், இக் குழு 1956-ல் மாற்றியமைக்கப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட பிறகு, இக் குழு வில் 6 உறுப்பினர்களே இருந்தனர்; மேலும், அது ஒரு நிபுணர் குழாம்(Expert body)ஆகியது. நாளடைவில், கூட்டுறவு விவசாயக் கடன்மட்டுமின்றிச் சிறு தொழில்கள், குடிசைத்தொழில்கள், நகர்ப் புறக்கடன் ஆகியவைபற்றியும் இக் குழு கவனித்து வந்ததால்1965-லிருந்து இக் குழு கிராமிய மற்றும், கூட்டுறவுக் கடன் பற்றிய அறிவுரை வழங்கும் நிலையான குழு (Standing advisory committee on rural and co-operative credit) என்று அழைக்கப்

படுகிறது. கூட்டுறவு இயக்கம் வேலை செய்வதைப் பரிசீலனை செய்வதோடு மட்டுமல்லாமல், அவ்வப்போது ரிசர்வ் பாங்கால் குறிப்பிடப்படும் கொள்கைகள் பற்றியும் தன்னுடைய சிறந்த ஆலோசனைகளை இக் குழு தெரிவித்து வருகிறது.

ரிசர்வ் பாங்கின் பணிகள் பல கோணங்களிலும் அதிக அளவில் வளர்ந்து விட்டபடியாலும் கிராமியக் கடன் தேவைகள் அதிகமாகிவிட்டபடியாலும், மேற்கூறிய அறிவுரைக் குழு போதாது எனக்கருதி ஒரு வேளாண்மைக் கடன் அவை (Agricultural credit board) அமைக்கவேண்டும் என்று அகில இந்தியக் கிராமியக்கடன் மறு பரிசீலனைக்குழு (All-India Rural credit Review Committee) பரிந்துரைத்தது. அதன்படி, 1970 பிப்ரவரியில், ரிசர்வ் பாங்கின் ஆளுநரைத் தலைவராகவும், கிராமியக் கடன் பொறுப்பை வகிக்கும் உதவி ஆளுநரை உதவித் தலைவராகவும், மற்றும் 12 உறுப்பினர்களையும் (மத்திய அவையின் இரு சார்பாளர்கள் மத்திய அவையின் 3 இயக்குநர்கள், ரிசர்வ் பாங்க், கூட்டுறவு மற்றும் வணிக வங்கிகளின் 6 சார்பாளர்கள், செயலாளராகப் பணிபுரியும் வேளாண்மைக்கடன் துறையின் தலைமை அலுவலகர்) கொண்ட வேளாண்மைக் கடன் அவை அமைக்கப்பட்டது.

**ரிசர்வ் பாங்க் அளிக்கும் நிதி வசதிகள்**

ரிசர்வ் பாங்க் கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக்கும் கடன் வசதிகள் பற்றி இப்பொழுது காண்போம்.

குறுகியக்கால மற்றும் மத்தியக்காலக் கடன் அளிக்க, ஒவ்வொரு மாநிலத்திலும் மாநிலக் கூட்டுறவு வங்கியும், மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், கிராம அளவில் கூட்டுறவுக்கடன் சங்கங்களும் உள்ளன. மத்தியக் கூட்டுறவு நிலவள வங்கி, தன் கிளைகளின்மூலமோ அல்லது வட்டார அளவில் உள்ள நிலவள வங்கிகள்மூலமோ, நீண்டகாலக் கடன்களை அளிக்கிறது. விவசாயிகளுக்கு ரிசர்வ் பாங்க் நேரடியாகக் கடன் ஏதும் கொடுக்க முடியாது. விவசாயிகளுக்குத் தேவையானக் கடன் வசதிகளை மாநிலக் கூட்டுறவு வங்கிகள்மூலம், ரிசர்வ் பாங்க் அளிக்கிறது. ரிசர்வ் பாங்க் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் மூலம் அளிக்கும் கடன்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை: 1. குறுகியக்காலக் கடன் 2. மத்தியக் காலக்கடன் 3. நீண்ட காலக்கடன். மேலும், கூட்டுறவு முறையில் நிறுவப்பட்டுள்ள குடிசைத் தொழில்களுக்கும், சிறுதொழில்களுக்கும் மாநிலக் கூட்டுறவு வங்கிகள்மூலம், ரிசர்வ் பாங்க் கடன் வசதிகள் அளிக்கிறது.

1. வேளாண்மைக் கடன் (Agricultural Finance) பிரிவு 17(2)b:- இந்தியாவில் எழுதப்பட்டதும், கொடுக்கப்பட வேண்டியதுமான, இரண்டு நல்ல கையொப்பங்களைப் பெற்று, அவ் விரு கையொப்பங்களில் ஒரு கையொப்பம் அட்டவணையிலிட்ட வங்கியினுடையதாகவோ அல்லது மாநிலக் கூட்டுறவு வங்கியினுடையதாகவோ உடைய, பருவக்காலக் கடன் தேவைகளுக்காகவோ அல்லது விவசாயப் பயிர்களை விற்பதற்காகவோ எழுதப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட, கருணை நாள்கள்(Days of grace)தவிர, வாங்கிய அல்லது மறுதள்ளுபடி செய்த நாளிலிருந்து, 15 திங்களுக்குள் முதிர்வடையக்கூடிய மாற்று உண்டியல்களையும் புரோநோட்டுகளையும், ரிசர்வ் பாங்க் வாங்கலாம் அல்லது மறு தள்ளுபடி செய்யலாம்.

பிரிவு 17(2) (b)ன் கீழ் வாங்கவோ அல்லது மறுதள்ளுபடி செய்யவோ தகுதி பெற்ற உண்டியல்கள், புரோநோட்டுகள் ஆகியவற்றைப் பிணையமாக (security) ஏற்று மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பிரிவு 17(4) (C) கீழ், ரிசர்வ் பாங்க் கடன் அளிக்கலாம்.

மேற்கூறிய மாற்று உண்டியல்களிலும், புரோநோட்டுகளிலும், மாநிலக் கூட்டுறவு வங்கி, முதல் கையெழுத்தை இடுகிறது. இரண்டாவது கையெழுத்தை, மத்தியக் கூட்டுறவு வங்கி இடுகிறது. அப்படி இடப்பட்ட கையெழுத்துகள், நல்ல கையெழுத்துகள் என்று ரிசர்வ் பாங்கால் கருதப்படவேண்டுமாயின், அந்த நிறுவனங்கள் தணிக்கைப்படி (Audit) 'A' அல்லது 'B' பிரிவில் இருந்திருக்கவேண்டும். கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் பரிந்துரையின்பேரில் தணிக்கைப்படி 'C' பிரிவில் இடப்பட்ட வங்கிகளும், இரண்டாவது கையெழுத்தை இடலாம். மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வலிமையற்றவையாக இருப்பின், மாநில அரசாங்கங்களின் பரிந்துரையின் பேரில், மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரிசர்வ் பாங்க் பிரிவு 17(4) (C) ன் கீழ் கடன் தரலாம். பிரிவு 17(4) (a) ன் கீழ், அரசாங்கம் அல்லது பொறுப்புரிமையர் (Trustee) முதலீடு செய்யத் தகுதி பெற்ற ஆவணங்களின் பேரில், மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பருவக்கால விவசாய நட-வடிக்கைகளுக்குத் தேவையான கடன் வசதியை, ரிசர்வ் பாங்க் அளிக்கலாம்.

தற்போதுள்ள நடைமுறைப்படி, விவசாயத்துக்குத் தேவையான குறுகியக் காலக்கடன் அளவுகள் ஒவ்வோர் ஆண்டும், ஒவ்வொரு மத்தியக் கூட்டுறவு வங்கிக்கும், நிருணயிக்கப்படுகிறது. அக் கடன் அளவு கூட்டுறவுத்துறைப் பதிவாளரால் பரிந்துரை செய்யப்பட்டு, மத்தியக் கூட்டுறவு வங்கியின் சார்பில் மாநிலக்

கூட்டுறவு வங்கி விண்ணப்பிக்கிறது. மத்திய வங்கியின் நிதி நிலைமை, தணிக்கையில் அது எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது, அதன் கடன் திட்டம், அதனுடைய சொந்த நிதிகள் ஆகியவற்றைப் பொறுத்து மத்திய வங்கி பெறக்கூடியக் கடனின் அளவு நிருணயிக்கப்படுகிறது. ஏதேனும் ஒரு மத்திய வங்கி செயல்படும் இடத்தில், தீவிர விவசாயச் சாகுபடித் திட்டம் ஏதேனும் செயலில் இருக்குமாயின் அத் திட்டத்திற்குத் தேவையான கடனின் அளவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## விவசாயச் சம்பந்தப்பட்டச் செயல்களுக்கு மத்தியக்காலக் கடன்

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் பிரிவு 17 (4AA) பிரிவு 46A (2) (b) ஆகியவற்றின்கீழ் ரிசர்வ் பாங்க், மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு 15 திங்களுக்குக் குறையாத, ஆனல் 5 ஆண்டுகளுக்கு அதிகமாகாத மத்தியக் காலக் கடன்களைக் கொடுக்கலாம். இத்தகையக் கடன்கள் விவசாயத்திற்கும், ரிசர்வ் பாங்கின் மத்திய அவையால் அவ்வப்போது முடிவு செய்யப்படுகின்றன. விவசாயச் சம்பந்தப்பட்ட பிற செயல்களுக்கும், கொடுக்கப்படலாம். இத்தகைய கடன் பற்றிய முதலும், வட்டியும் திருப்பிக் கொடுப்பது பற்றி, மாநில அரசாங்கங்கள் உத்தரவாதம் அளித்திருக்க வேண்டும். இத்தகையக் கடன்கள், பொது நிதியிலிருந்தே கொடுக்கப்பட்டு வந்தன; 1956-ல் இருந்து தேசிய வேளாண்மைக்கடன் (நீண்ட கால நடவடிக்கைகள்) நிதியிலிருந்து கொடுக்கப்படுகின்றது. 1956-ல் ரிசர்வ் பாங்க் சட்டம் திருத்தியமைக்கப்பட்ட பிறகு, நடுத்தர மற்றும் சிறிய விவசாயிகளுக்குக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், அரிசி ஆலைகள், கடலை எண்ணெய் ஆலைகள் ஆகியவற்றில் பங்கு வாங்கவும் மத்தியக்காலக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. 1961-லிருந்து கூட்டுறவுக்கடன் சங்கங்களின் உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க, மத்தியக்காலக் கடன் கொடுக்கப்படுகிறது. 1967-ல் கூட்டுறவு விவசாயக்கடன் சங்கத்தின் உறுப்பினர்களுக்குக் கோழிப் பண்ணைகள் அமைக்கவும் மத்தியக்காலக் கடன் கொடுக்கப்படுகிறது. இத்தகைய மத்தியக்காலக் கடன்கள் மூன்று அல்லது 5 சமமான வருடாந்திரத் தவணைகளில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

மத்திய வங்கி பெறக்கூடிய மத்தியக்காலக் கடன், அதனுடைய சொந்த நிதியின் அளவைப் பொறுத்ததாகும். தகுதியுள்ள மத்திய வங்கிக்கு, அதன் சொந்த நிதியில் 2 பங்கு அளவிற்குக் கூடுதலானக் கடன்களும் கொடுக்கப்படுகின்றன.

மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பாங்க் வீதத்திலிருந்து 2 விழுக்காடு குறைந்த அளவில் மத்தியக்காலக் கடன்கள் கொடுக்கப்பட்டு வந்தன. ஆனால், 1960-ல் இருந்து, பாங்க் வீதத்திலிருந்து $1\frac{1}{2}$ விழுக்காடு குறைவிலேயே கொடுக்கப்படுகின்றன. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் பங்கு வாங்குவதற்காக மாநிலக் கூட்டுறவு வங்கிகள்மூலம் கொடுக்கப்படும் கடனுக்குப் பாங்க் வீதத்திலேயே வட்டி வசூல் செய்யப்படுகின்றது.

குறுகியக் காலக்கடன்களை மத்தியக் காலக் கடன்களாக மாற்றுவதற்காகக் கொடுக்கப்படும் மத்தியக்காலக் கடன்கள்.

இக் கடன், தேசிய வேளாண்மைக் கடன் (நிலைப்பெருக்கம்) நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது. மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் குறுகியக்கால விவசாயக் கடன்களை, மத்தியக்காலக் கடன்களாக மாற்றவேண்டிய அவசியம் ஏற்படின், அத்தகைய கடன்களை வழங்கவே, இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது. அத்தகையக் கடன்கள், மாநில அரசால் முழு அளவிற்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். அத்தகையக் கடன்கள் எந்தெந்த இடங்களில், வழக்கமான விளைச்சலில் 50 விழுக்காடுதான் இருக்கிறதோ, அந்த இடங்களுக்கே அளிக்கப்படும். தேசிய வேளாண்மைக்கடன் (நிலைப்பெருக்கம்) நிதியைப் பயன்படுத்தக் கூடிய விதிகளின்கீழ் மத்தியக்கூட்டுறவு வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், ரிசர்வ் பாங்க் ஆகியவை வைத்துள்ள நிதிகளிலிருந்து, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் கொடுத்துள்ள குறுகியக்கால விவசாயக் கடன்களில் 85 விழுக்காட்டையே பெறலாம். எஞ்சியுள்ள 15 விழுக்காட்டை, தங்களுடைய சொந்த நிதியிலிருந்து ஈடுகட்ட வேண்டும். பாங்கு வீதத்திலிருந்து $1\frac{1}{2}$ விழுக்காடு குறைவான சலுகை வீதத்தில் இக் கடன் வழங்கப்படுகிறது.

விவசாயத்திற்கு நீண்ட காலக் கடன்

மத்திய நிலவள வங்கிகளின் கடன் பத்திரங்களை வாங்குவதன்மூலம், விவசாயத்திற்கான நீண்டகாலக் கடனை ரிசர்வ் பாங்க் அளிக்கிறது. சாதாரணக்கடன் பத்திரங்கள், (Ordinary debentures) கிராமியக்கடன் பத்திரங்கள்(Rural debentures) ஆகிய இரு வகைக் கடன் பத்திரங்களை மத்திய நிலவள வங்கிகள் விற்கின்றன. பொதுவாகப் பயனுள்ள காரணங்களுக்கும், பழைய கடன்களை மீட்கவும், இந் நிதிகளிலிருந்து, கடன்கள் கொடுக்கப்படுகின்றன. மொத்த வெளியீட்டில் 10 விழுக்காடு அல்லது பொதுமக்கள் வாங்காமல் விட்டுவிடும் பகுதி, ஆகிய இவ்

விரண்டில் எது குறைவோ, அதனை, 1948-லிருந்து ரிசர்வ் பாங்க் வாங்கி வந்தது. 1950-ல், இது, 20 விழுக்காடாக ஆக்கப்பட்டது. இக் கடன் பத்திரங்களைப் பிரிவு 17 (8)-ன் கீழ் ரிசர்வ் பாங்க் பொது நிதியிலிருந்து வாங்குகிறது. அரசாங்கத்தால், முதல் மற்றும் வட்டி கொடுப்பது பற்றி உத்தரவாதம் அளிக்கப்பட்ட கடன் பத்திரங்களைப் பிரிவு 17(4) (a) ன் கீழ், கடன் கொடுப்பதற்குத் தகுதி பெற்ற பிணையங்களாக ரிசர்வ் பாங்க் கருதுகிறது. ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ், கூட்டுறவு நிலவள வங்கிகளால் கொடுக்கப்படும் நீண்டகாலக் கடன்களின் சிறப்பு அதிகமாக ஆகிவிட்டபடியால், மத்திய நிலவள வங்கிகள் தங்களுடைய கடன் பத்திரங்களை விற்பதற்காக ரிசர்வ் பாங்க் தவிர ஸ்டேட் பாங்க், மத்திய, மாநில அரசுகள், ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு (Life Insurance Corporation of India) ஆகியப் பொதுத் துறை நிறுவனங்களின் ஆதரவையும் பெறவேண்டிய இன்றியமையாமை உண்டாகிறது. கடன் கொள்கைகள், செயல்படும் திறமை, காலங்கடந்த கடன்களின் அளவு, கடன் கொடுப்பதின் நோக்கங்கள் ஆகியவற்றைக் கவனித்த பின்னர் இத் திட்டங்களின்கீழ், நிலவள வங்கிகளுக்குக் கடன் வசதிகள் செய்துதரப் படுகின்றன. கடன் பத்திரங்களை விற்றுப் பெற்ற மொத்தப் பணத்தில், 90 விழுக்காட்டிற்குக் குறையாமல் பயனுள்ள காரணங்களுக்குக் கடனைக் கொடுக்கவேண்டும். அவற்றில் 70 விழுக்காடு, எளிதில் கண்டுபிடிக்கக்கூடிய காரணங்களுக்காகவும் இருத்தல் வேண்டும்.

ரிசர்வ் பாங்கின் முயற்சி காரணமாக, 1957-லிருந்து, நிலவள வங்கிகள், 'கிராமியக் கடன் பத்திரங்கள்' என்ற புது வகைக்கடன் பத்திரங்களை விற்கத் தொடங்கின. இத்தகையப் பத்திரங்களை, இரு வகைகளாகப் பிரிக்கலாம்: (1) பதினைந்து ஆண்டுக் கால அளவை உடைய கடன் பத்திரங்களை, ரிசர்வ் பாங்க் முழுவதும் எடுத்துக் கொள்கிறது. (2) பெரும்பாலும் கிராமப் பகுதிகளில் இருந்து தனி நபர்கள் வாங்குவதற்காக வெளியிடப்படும் 7 ஆண்டு குறுகியக் காலக் கடன் பத்திரங்களின் மொத்த வெளியீட்டில் 8/15 பாகத்தை, ரிசர்வ் பாங்க் எடுத்துக் கொள்கிறது. இத்தகையக் கடன்பத்திரங்களை ரிசர்வ் பாங்க் தேசிய விவசாயக் கடன் (நீண்டகால நடவடிக்கைகள்) நிதியிலிருந்து வாங்குகிறது.

### மாநில அரசுகளுக்கு நீண்டகாலக் கடன்கள்

கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் பங்குத் தொகைக்குச் செலுத்துவதற்காக மாநில அரசுகளுக்குத் தேசீய வேளாண்மைக்

கடன்(நீண்டகால நடவடிக்கை) நிதியிலிருந்து ரிசர்வ் பாங்க் நீண்ட காலக் கடன்களை வழங்குகிறது. மத்திய, மாநிலக் கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு விவசாயச் சங்கங்கள், மத்திய நிலவள வங்கிகள் ஆகியவற்றிற்கும், 1969-70-லிருந்து பிரதம நிலவள வங்கிகள், நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் (Urban co-operative banks) ஆகியவற்றிற்கும், மேற்கூறிய நிதியிலிருந்து கடன்கள் கொடுக்கப்படுகின்றன. இத்தகையக் கடன்களை, மாநில அரசு களுக்குக் கொடுப்பதில், ரிசர்வ் பாங்க் நிறைய விதிமுறைகளை வகுத்துள்ளது. அதன்படி நிறுவனங்களின் நிதி நிலைமை கூடுத லாகக் கடன் வாங்குவதின் அவசியம், கடன் அளிப்பதில், பின் பற்ற வேண்டிய முறைகள், காலங்கடந்த கடனின் அளவுகள், சொந்த முயற்சியில் பங்குத்தொகையை உருவாக்கக்கூடிய திறன், வைப்புகளைச் சேகரிப்பதில் திறமை, ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மாநில அரசுகளுக்குக் கொடுக்க வேண்டிய கடன் அளவை ரிசர்வ் பாங்க் நிருணயிக்கிறது.

பொதுவாகக் கடன்கள் 12 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியவை ஆகும். ஆனால், ஒரு சில நேரங் களில் கால அளவு நீட்டிக்கப்படுகிறது. சமமான தவணைகளில் கடன்களைத் திருப்பிக் கொடுக்கவேண்டும். மூன்றும் ஆண்டின் முடிவில், முதல் தவணை ஆரம்பமாகும். முதலிரண்டு ஆண்டு களுக்குக் கடன்களின்மீது வட்டி ஏதும் கிடையாது. அதற்கு அடுத்த 3 ஆண்டுகளுக்கு 2 விழுக்காடு, அதற்கு அடுத்த 4 ஆண்டு களுக்கு $2\frac{1}{2}$ விழுக்காடு, மீதம் உள்ள 3 ஆண்டுகளுக்கு 3 விழுக்காடு. கடன் கால அளவு 12 ஆண்டுகளுக்குமேல் அதிகமாகும் போது பதின்மூன்று பதினன்காவது ஆண்டுகளில் 3 விழுக்காடும், அதற்குப்பிறகு $3\frac{1}{2}$ விழுக்காடும் ஆகும்.

### வேளாண்மை அல்லாத நிதி (Non-agricultural finance)

குடிசை மற்றும் சிறு தொழில்களின் உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகளுக்காகக் கொடுக்கப்படும் குறுகியக் காலக் கடன் :—

1953-ல் ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டத்துடன் இணைக்கப்பட்ட துணைப்பிரிவு 17(2) (bb) ன் கீழ், குடிசை மற்றும் சிறு தொழில்களின் உற்பத்தி மற்றும் விற்பனைக்காக, நிதி உதவி அளிக்க ரிசர்வ் பாங்க் அதிகாரம் பெற்றுள்ளது. 1956—ல் கைத்தறி நெசவுத்தொழில், இந்தத் துணைப் பிரிவின்கீழ் உதவியளிக்கப்படுவ தற்குத் தகுதியுடையது என்று ரிசர்வ் பாங்கால் அங்கீகரிக்கப்பட்டு ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டபோதுதான், முதன் முதலில்

இத்தகையக் கடன் கொடுக்கப்பட்டது. முதன்முதல் இத்தகையக் கடன், கைத்தறித் துணிகளைத் தங்கள் சொந்தக் கணக்கில் உற்பத்தி செய்து, அவற்றை விற்பதற்குச் செயலில் உள்ள ஒவ்வொரு கைத்தறிக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு பணம் (ரூ. 300) என்று ஓர் ஏற்பாடு செய்துகொண்டிருக்கும் கைத்தறி உற்பத்தி மற்றும் விற்பனையாளர் சங்கங்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டது. இவ் வசதி, பண உதவி செய்யும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்குக்கடன் கொடுப்பதன் மூலம் அளிக்கப்பட்டது. மாநிலக் கூட்டுறவு வங்கிகள்மூலம் நிதிவசதி அளிக்கப்படும் வட்டார நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இந்தத் துணைப்பிரிவின்கீழ், கடன் வசதிபெறத் தகுதியுடையனவாகும். பாங்க் வீதத்திலிருந்து $1\frac{1}{2}$ விழுக்காடு குறைந்த வட்டி வீதத்தில் ரிசர்வ் பாங்க் இக் கடன்களை அளிக்கிறது. மேலும், நெசவாளர்ச் சங்கங்களுக்கு ஒரு குறிப்பிட்ட வட்டி வீதத்தில் (தொடக்கக் காலத்தில் 3 விழுக்காடு) கடன் அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது. அவ்வாறு கொடுக்கப்பட்ட கடன்களின் உயர்ந்த அளவு, மத்தியக் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரையில், அவற்றின் சொந்த முதலின் (Owned Capital) அளவுக்குச் சமமாகவும், வட்டார நெசவாளர் சங்கங்களைப் பொறுத்தவரை அவை செலுத்திய முதல் மற்றும் சட்ட முறைக்காப்பு நிதி (Paid-up capital and reserve fund) யைப்போல் மும் மடங்கு அளவு என்றும் நிருணயிக்கப் பட்டிருந்தது. ஆனல் 1965—66-ல் கைத்தறிகளின் அடிப்படையில் கடனளிக்கும் முறை கைவிடப் பட்டது. அதற்குப் பதில், முந்திய ஆண்டு உற்பத்தியின் அளவு, விற்பனை செய்யப்பட்ட அளவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கடன் அளிக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. இவ் வசதி 1968—69-ல் பட்டு மற்றும், கம்பளிக் கைத்தறி நெசவாளர் சங்கங்கள் மற்றும், மின்தறிச் சங்கங்கள் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும், விற்பனை நடவடிக்கைகளுக்கும் அளிக்கப்பட்டது.

1968-69-ல், ரிசர்வ் பாங்க், 22 கூடுதல் குடிசை மற்றும் சிறு தொழில்களை, ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17(2) (bb)17(4)C ன் கீழ் கடன் பெறத் தகுதி பெற்றவை யாக்கிப் பாங்க் வீதத்தில் கடன் கொடுக்க முன்வந்தது; தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் கொடுக்கும் தொழிற் கூட்டுறவு வங்கிகளின் சொந்த நிதியைப்போல், 4 பங்கு அளவுற்கு ரிசர்வ் பாங்க் கடன் கொடுக்க இசைந்தது. மேலும் அங்கீகரிக்கப் பட்ட குடிசை, சிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி வசதியளிக்கும் கூட்டுறவு வங்கிகளுக்குப் பிரிவு 17(2) (bb) ன் கீழ் மறுநிதி வசதியளிக்க, ரிசர்வ் பாங்க் ஒப்புக்கொண்டது.

**வணிகக் காரணங்களுக்கான குறுகியக் காலக்கடன்**

1951—ல் ரிசர்வ் பாங்க் சட்டம் திருத்தப்பட்ட பிறகு 1952-லிருந்து பிரிவு 17 (2)(a) ன் கீழ், உண்மையான வணிக அல்லது வியாபார நடவடிக்கைகளால் எழக்கூடிய உண்டியல்களை வாங்கும் அல்லது மறுதள்ளுபடி செய்யும் வசதிகள், கூட்டுறவு வங்கிகளுக்கும் கிடைத்தன. இப் பிரிவின்படி தலைமை மற்றும், வட்டார நெசவாளர் சங்கங்களுக்கு, தறிநூல் வியாபாரத்திற்குக் கடன் வழங்கும் பொருட்டு, மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு, ரிசர்வ் பாங்க் கடன் வசதி அளிக்கிறது. இப் பிரிவின்கீழ்க் கடன் பெறுவதற்குக் கீழ்க்கண்ட விதிமுறைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

1. இந்தியாவில் எழுதப்பட்டதும் கொடுக்கப்படவேண்டியதாகவும், உண்டியல் இருத்தல் சிறப்பாகும்.
2. அது உண்மையான வியாபார நடவடிக்கையால் எழுந்ததாக இருத்தல் வேண்டும்.
3. 90 நாள்களுக்கு ரொக்கத்தன்மை அடையக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.

**கூட்டுறவுத் துறைக்கு விநியோகக் கடன் (Distribution credit for co-operatives)**

தலைமை அல்லது பிரதமக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிடம் இரசாயன உர வர்த்தகத்திற்குத் தேவையானக் கடன்களைக் கொடுப்பதற்காக, மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரிசர்வ் பாங்க் கடன் அளிக்கிறது. இரசாயன உர விநியோகத்திற்குத் தேவைப்படும் கடன்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மாநில அரசாங்கத்திடமும், கூட்டுறவு வங்கிகளிடமும், ஸ்டேட் பாங்கிடமும் பெறுகின்றன. இதற்கு முன், மத்திய அரசு கொடுத்து வந்த 18 மாதக்கடன் உதவியால், மாநில அரசுகள், தாங்களாவோ அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவோ இரசாயன உரத்தை வாங்கி விநியோகித்து வந்தன. 1966-ல் மத்திய அரசு, மேற்கூறப்பட்ட கடன் வசதிகள் அளிப்பதை நிறுத்தி விட்டதால், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கடன் பெறுவதற்காக, ரிசர்வ் பாங்கிடம் நெருங்க வேண்டியதாயிற்று. மாநில விற்பனைச் சங்கங்கள் நேரடியாகக் கடன் கொடுக்கவோ அல்லது பிரதமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கியின் மூலம் கடன் கொடுக்கவோ, இரசாயன உர விநியோகத்திற்குத் தேவையான கடன்களை மாநில அரசின் உத்தரவாதத்தின்பேரில் ரிசர்வ் பாங்க், பாங்க் வீதத்தில்

கொடுக்கிறது. மேலும், 6 மாதத்திற்குள், கடன் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு பிரிவின்கீழும் எப்படிக் கடன் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று மேலே கூறப்பட்டது. ரிசர்வ் பாங்க் பல்வேறு பிரிவுகளின்கீழ்க் கொடுத்துள்ள கடன்களின் மொத்த அளவு அட்டவணை 1,2 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அட்டவணை 1

**ரிசர்வ் பாங்கும் கூட்டுறவுக் கடனும்**
**மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குக் குறுகியக் காலக் கடன்**

(ரூபாய் இலட்சக் கணக்கில்)

| ஆண்டு | பருவக்கால விவசாய நடவடிக்கைகள் | | பயர்கள் விற்பனைக் காக (பருத்தி உட்பட) | | இரசாயன உரம் வாங்கவும் விநியோகிக்கவும் | | கைத்தறி நெசவாளர் சங்கங்கள்: நூல் வாங்க | | கைத்தறி நெசவாளர் சங்கங்கள்: உற்பத்தி மற்றும் விற்பனைச் செயல் களுக்காக | | பிற தொழில்களின் உற்பத்தி மற்றும் விற்பனைச் செயல் களுக்காக | | பொது வங்கியியல் நோக்கத்துக்காக | | சர்க்கரைச் சரக்கின் பேரில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Amount drawn | Outstanding amount | Amount drawn | Amount outstanding | Amount drawn | Amount outstanding | Amount drawn | Amount outstanding | Amount drawn | Amount outstanding | Amount drawn | Amount outstanding | Amount drawn | Amount outstanding | Amount drawn | Amount outstanding |
| 1950-51 | 537 | 339 | | | | | — | — | — | — | | | 42 | 2 | — | — |
| 1955-56 | 2300 | 1233 | | | | | — | — | — | — | | | 39 | 13 | — | — |
| 1960-61 | 13166 | 7914 | — | — | — | — | 42 | 12 | 240 | 241 | — | — | 319 | 9 | 470 | — |

### அட்டவணை 1-ன் தொடர்ச்சி

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1965-66 | 24937 | 14472 | — | — | — | — | 311 | 39 | 555 | 557 | — | — | 3723 | — | — | — |
| 1969-70 | 41667 | 23482 | 710 | 490 | 3752 | 959 | 11 | 6 | 949 | 642 | — | — | 2130 | 33 | — | — |
| 1970-71 | 41320 | 26538 | 779 | 344 | 1127 | 172 | 4 | 3 | 1236 | 783 | 2 | 2 | 2024 | — | — | — |
| 1971-72 | 48267 | 25106 | 1279 | 734 | 2304 | 236 | 14 | — | 1491 | 952 | 59 | 33 | 1413 | 58 | 792 | — |
| 1972-73 | 54984 | 23728 | 9538 | 1220 | 750 | — | 8 | 3 | 913 | 773 | 30 | 11 | 1281 | — | — | — |
| 1973-74 | 60329 | 20781 | 4529 | 1117 | — | — | 30 | — | 1339 | 503 | 47 | ·28 | 1028 | 30 | — | — |

# அட்டவணை 2

## தேசிய வேளாண்மைக் கடன் (நீண்டகால நடவடிக்கைகள்) நிதி

(ரூபாய் இலட்சக் கணக்கில்)

| ஆண்டு | அரசாங்க மற்றும் பொறுப்புரிமையர் ஆவணங்களின் அடகின் பேரில் (குறுகியக்காலக்கடனை மத்தியக்காலக் கடனாக மாற்றுவதற்கு) | | தேசிய வேளாண்மைக் கடன் (நிலைப்பேறுக்க நிதியிலிருந்து)(குறுகியக் காலக் கடன்களை மத்தியககாலக் கடனாக மாற்றுவதற்கு) | | மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு மத்தியக்காலக்கடன் | | | | கூட்டுறவுக்கடன் சங்கங்களின் பங்குகளுக்குச் செலுத்த, மாநில அரசுக்கு நீண்ட காலக் கடன் | | நில அடைமான வங்கிகளின் கிராமியக் கடன் பத்திரங்கள் | | நில அடைமான வங்கிகளின் சாதாரண கடன் பத்திரங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வேளாண்மை நோக்கங்களுக்காக | | சர்க்கரை ஆலைகளின் பங்குகளை வாங்குவதற்கு உறுப்பினருக்கு கடன் வழங்குவதற்காக | | | | | | | |
| | Amount drawn | Amount outstanding | Amount drawn | Amount outstanding | Amount drawn | Amount outstanding | Amount drawn | Amount outstanding | Amount drawn | Amount outstanding | Amount drawn | Amount outstanding | Amount drawn | Amount outstanding |
| 1950-51 | | | | | | | | | | | | | 12 | 18 |
| 1955-56 | | | | | 11 | 11 | | | | | | | 10 | 73 |
| 1960-61 | | | | | 468 | 763 | — | — | 275 | 1995 | 33 | 107 | 3 | 67 |

## அட்டவணை 2-ன் தொடர்ச்சி

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1965-66 | | | | | 706 | 1165 | — | — | 253 | 2941 | 129 | 548 | 450 | 1545 |
| 1969-70 | 152 | 19 | 443 | 521 | 952 | 1410 | — | 8 | 680 | 3383 | 94 | 950 | 420 | 2784 |
| 1970-71 | 253 | 170 | 365 | 435 | 1483 | 1948 | 37 | 43 | 1249 | 4193 | 18 | 959 | 419 | 3192 |
| 1971-72 | 754 | 705 | 2602 | 2145 | 1415 | 2219 | 25 | 68 | 1414 | 5134 | 133 | 1064 | 441 | 3626 |
| 1972-73 | 648 | 905 | 2075 | 2845 | 832 | 2134 | 79 | 120 | 1869 | 6555 | 83 | 1125 | 276 | 3261 |
| 1973-74 | 1089 | 1205 | 9245 | 5280 | 602 | 1760 | 40 | 117 | 802 | 6800 | 20 | 1128 | 109 | 2927 |

**கூட்டுறவு வங்கிகளைக் கண்காணித்தல் (Inspection of co-operative banks)**

கூட்டுறவு இயக்கத்தின் மிகத் துரிதமான வளர்ச்சியினாலும், கூட்டுறவுத்துறைக்கு ரிசர்வ் பாங்க் அளித்து வரும் கடன் தொகைப் பெருக்கத்தாலும், மாநில, மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும் பிற தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களையும் ஆய்வு(Inspection) செய்யவேண்டியதன் இன்றியமையாமை நன்கு உணரப்பட்டது. ரிசர்வ் பாங்க், கூட்டுறவு வங்கிகளுக்கு அளித்து வரும் கோடிக் கணக்கு ரூபாய் மதிப்புள்ள கடன்கள், ஒழுங்காகப் பயன்படுத்தப் படுகின்றனவா, என்பதை அறிய ஆய்வு இன்றியமையாததே.

கூட்டுறவுத்துறை நன்முறையில் வளர 1952-லிருந்து மாநில, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், மத்திய நிலவள வங்கிகள் ஆகியவற்றை ரிசர்வ் பாங்க் அவ்வப்போது ஆய்வு நடத்த ஆரம் பித்தது. உண்மையிலேயே இந்த ஒரு பொறுப்பு ரிசர்வ் பாங்க் தானாகவே எடுத்துக் கொண்டதாகும். மேற்கூறிய, கூட்டுறவு நிறுவனங்களும், இத்தகைய ஆய்வுக்கு இசைந்தன. தலைமை விற்பனைக் கூட்டமைப்பு (Apex marketing federation) மாநிலக் கைத்தறி நெசவாளர் சங்கங்கள் ஆகியவற்றையும் ரிசர்வ் பாங்க் ஆய்வு நடத்தி வருகிறது.

படிப்படியாக, ஆய்வின் நோக்கம் விரிவாக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வங்கிகள் பணியாற்றுவதில் தவறுகள் இருப்பின் அவற்றைச் சுட்டிக்காட்டி, அத் தவறுகளை எவ்வளவு விரைவாகத் திருத்த முடியுமோ அவ்வளவு விரைவாகத் திருத்தச் செய்ய வைப்பதே, ஆய்வின் நோக்கமாகும். கூட்டுறவு நிறுவனங்கள் பணி புரிவதில் உள்ள குறைகள், குறைகளைப் போக்க ஆலோசனைகள், இணைந்த சங்கங்கள் பணிபுரிவதில் உள்ள குறைகள், அக் குறைகளால் கூட்டுறவு வங்கிகள் பாதிக்கப்படின், அப் பாதிப்பைக் குறைக்க வழிமுறைகள், கூட்டுறவுத்துறை செய்ய வேண்டிய தணிக்கை, விசாரணைகள் ஆகியவை பற்றிக் கூட்டுறவுப் பதிவாள ருக்கும், அவர் வழியாகச் சம்பந்தப்பட்டக் கூட்டுறவு நிறுவனங் களுக்கும் ரிசர்வ் பாங்க் தனது விரிவான அறிக்கைமூலம் தெரியப் படுத்துகிறது. எந்த அளவுக்குக் குறைகள் நீக்கப்பட்டுள்ளன, எந்தெந்த ஆலோசனைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பது பற்றி அவ் வங்கிகளிடமிருந்து விவரமான அறிக்கைகளைப் பெற்று ரிசர்வ் பாங்க் தெரிந்து கொள்ளும். மேலும், வருடாந்திர ஆய்வு நடத்தும் போதும், ரிசர்வ் பாங்க் இவை பற்றிக் கவனிக்கும். வங்கிகள் எந்த அளவுக்குக் குறைகளை நீக்கியிருக்கின்றன என்பதைப் பொறுத்துதான் அவ் வங்கிகளுக்கான கடன் அளவை ரிசர்வ் பாங்க் நிருணயிக்கிறது.

பிற அதிகாரங்கள்

1965-ல், வங்கியியல் சட்டத்தின் (கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருந்தியது) படி, 1966 மார்ச்சு 1ஆம் நாளிலிருந்து வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், ஆகியவற்றின்கீழ், கூட்டுறவு வங்கிகள் கொண்டு வரப்பட்டதால், ரிசர்வ் பாங்க் நடத்தும் கூட்டுறவு வங்கிகளின் ஆய்வு சட்டபூர்வ மாகியது. இதனால், ரிசர்வ் பாங்க், தனது ஆய்வு அறிக்கையை கூட்டுறவுப் பதிவாளருக்கு அனுப்பாமல், நேரடியாக வங்கிகளுக்கே அனுப்பி விடுகிறது. இச் சட்டத்தினால், வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின்கீழ் வணிக வங்கிகள்மீது கட்டுப்பாடு செலுத்துவது போல், கூட்டுறவு வங்கிகள்மீதும் கட்டுப்பாடு செலுத்தும் அதிகா ரத்தை, 1966-லிருந்து ரிசர்வ் பாங்க் பெற்றது. கூட்டுறவு வங்கிகளின் தொழிற் பெருக்கம் அதிகமாகி விட்டபடியால், கூட்டுறவு வங்கிகள் ரிசர்வ் பாங்கின் அதிகாரத்திற்கு உட்படாமல் இருப்பது ஆபத்து எனக் கருதப்பட்டதால், மேற்கூறப்பட்ட திருத் தங்கள் கொண்டுவரப்பட்டன. இத் திருத்தங்களின்படி, வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியச் சட்டம் ஆகியச் சட்டங்களின் சில சரத்துகள் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும், ஓர் இலட்ச ரூபாய்க்குக் குறையாது செலுத்திய முதலும், காப்பு நிதியும் பெற்றுள்ள வங்கித்தொழில் புரியும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொருந்தும்; ஆனால்

(1) பிரதம விவசாயக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்,

(2) ஓர் இலட்ச ரூபாய்க்குக் குறைவாகச் செலுத்திய முதல் காப்பு ஆகியவற்றைப் பெற்றுள்ள விவசாயமில்லாத, பிரதமக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், (Non-agricultural primary credit societies)

(3) தமது உறுப்பினர்க்கு மட்டும் கடனளிக்கும், உறுப்பி னரல்லாதாரிடம் வைப்பு ஏதும் பெற்றுக் கொள்ளா திருக்கும், வங்கித் தொழில் தன் முக்கியத் தொழிலாகப் புரியாதிருக்கும் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்,

(4) எந்த விதமான வங்கித் தொழிலையும் புரியாத எல்லாக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிற்குப் பொருந்தாது.

இத் திருத்தங்களினால் கூட்டுறவு வங்கிகள் அட்டவணையிலிட்ட வங்கிகளுடன் சமநிலை பெற்றன. எல்லாக் கூட்டுறவு வங்கிகளும் ரிசர்வ் பாங்கிடம் கடன்பெறத் தகுதி பெற்றன.

அட்டவணையிலிட்ட வங்கிகளைப் போலவே, மாநிலக் கூட்டுறவு வங்கிகளும் தங்களுடைய மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்புக் களில், மூன்று விழுக்காட்டைக் குறைந்த அளவு ரொக்க இருப்பாக ரிசர்வ் பாங்கிடம் வைத்திருக்க வேண்டும். மாநிலக் கூட்டுறவு வங்கிகள் அல்லாத பிற கூட்டுறவு வங்கிகள் தங்களின் மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்புக்களில் மூன்று விழுக் காட்டைத் தங்களிடமோ, அல்லது நடப்புக் கணக்கில் தங்களுக்குக் கடன் கொடுக்கும் வங்கியிடமோ, வைத்திருக்கவேண்டும்.

பிரதமக் கூட்டுறவு வங்கியைப் பொறுத்தவரை, மேற்கூறப் பட்ட 3 விழுக்காட்டுத் தொகையைத் தனது மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலோ அல்லது பகுதித் தொகையைத் தன்னிடம் ரொக்கமாகவும், எஞ்சியத் தொகையை மாவட்ட மத்திய வங்கி யிலுள்ள கணக்கிலோ வைத்திருக்க வேண்டும்.

1969 மார்ச் 1 ஆம் தேதிக்கு முன்னர் எல்லாக் கூட்டுறவு வங்கிகளும் தங்களுடைய மொத்தக் கேட்பு, தவணைப் பொறுப்பு களில், இருபது விழுக்காட்டை (ரிசர்வ் பாங்கிடம் வைக்க வேண்டிய குறைந்த அளவு ரொக்க இருப்பு உட்பட) ரொக்கத் தன்மை வாய்ந்த சொத்துகள் வடிவில் வைத்திருக்க வேண்டும் என்று ரிசர்வ் பாங்க் கட்டளையிட்டது. 1969 மார்ச் 1 முதல் (ரிசர்வ் பாங்கிடம் வைக்க வேண்டிய குறைந்த அளவு ரொக்க இருப்பான மூன்று விழுக்காடு அல்லாமல்) மேற்கூறிய விழுக் காடானது 25 ஆக, ஆக்கப்பட்டது. மேலும், கடன்மீது கட்டுப் பாடு, உரிமம் வழங்கல், கிளைகள் திறத்தல், கட்டளைகள் பிறப் பித்தல் (வணிக வங்கிகளுக்கு உள்ளதுபோல) ஆகியவை பற்றிய கட்டுப்பாடுகள் கூட்டுறவு வங்கிகளுக்கும் விதிக்கப்பட்டன.

### பங்குகள் வைத்திருப்பது பற்றிய கட்டுப்பாடுகள்

ரிசர்வ் பாங்க் விதிக்கக்கூடிய நிபந்தனைகளுக்கும் வரையறை களுக்கும் உட்பட்டதன்றி, எந்தக் கூட்டுறவு வங்கியும், மற்றொரு கூட்டுறவு வங்கியின் பங்குகளை வைத்திருக்கக்கூடாது. ஆனால், கீழ்க்கண்ட பங்குகள் இவ் விதியிலிருந்து விலக்குப்பெறும்.

மாநில அரசு பங்கு வாங்குவதற்காகக் கொடுத்த தொகையி லிருந்து வாங்கிய பங்குகள், தான் இணைந்துள்ள மாநிலக் கூட்டுறவு வங்கியில் மத்தியக் கூட்டுறவு வங்கி வைத்திருக்கும் பங்குகள், பிரதமக் கூட்டுறவு வங்கி தான் இணைந்துள்ள மத்தியக் கூட்டுறவு வங்கியிலோ அல்லது அது பதிவு செய்யப்பட்டுள்ள மாநிலத்திலுள்ள மாநிலக்கூட்டுறவு வங்கியில் வைத்திருக்கும் பங்குகள்.

### கடனளிப்பதன் மீதான கட்டுப்பாடுகள்

தனது பங்குகளையே பிணையமாகப் பெற்று, எந்தக் கூட்டுறவு வங்கியும் கடனளிக்கக் கூடாது. இயக்குநர்கள் அல்லது அவர்கள் கூட்டாளி, நிருவாகமுகவர் அல்லது பொறுப்புறுதி அளிப்பவர் என்ற நிலையில் தொடர்புள்ள நிறுவனம், தனிக்கம்பெனி அல்லது தனி நபர்களுக்குக் கொடுக்கும் கடன் பிணைக்கடனாக (Secured loans) இருக்கவேண்டும். கூட்டுறவு வங்கியின் தலைவர் தொடர்புற்றிருக்கும் எந்தக் கம்பெனிக்கும் பிணையில்லாக் கடன் (Unsecured loans) கொடுக்கலாகாது. அரசாங்கத்திற்குச் செய்துள்ள பணி அல்லது வியாபார நடவடிக்கையின் அடிப்படையில் எழுந்துள்ள மாற்று உண்டியல் அல்லது தனக்குத் தரப்பட்டுள்ள நம்பிக்கை இரசீது (Trust receipt) ஆகியவற்றின் பேரில், கூட்டுறவு வங்கிகள் பிணையில்லாக் கடன் அளிக்கலாம்.

### உரிமம் வழங்குதல் (Granting licence)

பிரதமக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு உரிமம் தேவையில்லை. மற்ற எந்தக் கூட்டுறவுச் சங்கமும், வங்கித் தொழில் புரிய ரிசர்வ் பாங்கிடம் உரிமம் பெற வேண்டும். பிரதம நாணயச் சங்கம், கூட்டுறவு வங்கியாக மாறினால், அவ்வாறு மாறிய மூன்று மாதங்களுக்குள், உரிமம் பெற ரிசர்வ் பாங்கிடம் விண்ணப்பிக்க வேண்டும். பிரதம நாணயச் சங்கமல்லாத பிற கூட்டுறவுச் சங்கம் ஏதும், வங்கித் தொழிலைத் தொடங்குமுன், ரிசர்வ் பாங்கிடம் உரிமத்திற்காக விண்ணப்பிக்க வேண்டும். வங்கியச் சட்டம் (கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருந்தியது), 1965, செயல்முறைக்கு வருமுன் பணியாற்றி வந்த கூட்டுறவு வங்கிகளுக்கும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தைப் பிரித்ததாலோ அல்லது மற்றச் சங்கங்களை இணைத்ததாலோ உண்டாகும் கூட்டுறவு வங்கிக்கும், மேற்கூறப்பட்ட விதிகள் பொருந்தா.

மற்ற வங்கிகளுக்கு உள்ள விதிமுறைப்படியே, கூட்டுறவு வங்கியும், ஒரு புதுத் தொழில் இடம் திறப்பதற்கு, ரிசர்வ் பாங்கின் முன் அனுமதியைப் பெறவேண்டும். தனது விவகார எல்லைக்குள் (Area of operation) கிளைகள் திறப்பதற்கு, மத்தியக் கூட்டுறவு வங்கி, ரிசர்வ் பாங்கின் முன் அனுமதியைப் பெறவேண்டியதில்லை.

### பணம் அனுப்புகை வசதித் திட்டம் (Remittence Facilities Scheme)

அமெரிக்கா போன்ற வங்கியியலில் வளர்ச்சியுற்ற நாடுகளில் எவ்விதக் கட்டணமுமின்றியோ அல்லது மிகக்குறைந்த கட்டணத்திலோ, ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பணம் அனுப்புகை செய்யப்படுகிறது. ரிசர்வ் பாங்க், தனது ஆரம்ப காலத்தி

லிருந்தே, பணம் அனுப்புகையைக் குறைந்த செலவுள்ளதாக்கவும் திறம்படச் செய்யவும் எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. 1950-ல் கிராமிய வங்கிக் குழுவாலும் விசாரணைக்குப் பின்னர் அகில இந்தியக் கிராமியக்கடன் ஆராய்ச்சிக் குழுவாலும், கூட்டுறவு வங்கிகளுக்குப் பணம் அனுப்புகைத் திட்டம் நன்கு தாராளமாக அளிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இப் பரிந்துரை களின் பேரில் ரிசர்வ் பாங்கில் கணக்கு வைத்துள்ள மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு எவ்விதக் கட்டணமுமின்றிப் பணமாற்றல்கள் செய்யப்படுகின்றன. மாநிலக் கூட்டுறவு வங்கியால், மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு, எவ்விதக் கட்டணமும் இன்றிப் பணம் அனுப்புகை செய்யப்படுகிறது. எல்லாவிதக் கூட்டுறவு நிறுவனங் களுக்குக்கிடையிலும், சலுகை வீதத்தில், பணம் அனுப்புகை செய்யப்படுகிறது.

## வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு(Agricultural Refinance Corporatoin)

1963 சூலை 1-ல் வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு அமைக்கப் பட்டது. விவசாயத்திற்குத் தேவையான குறுகியக் கால, நீண்ட காலக் கடன்களைக் கொடுக்கத் தேவைப்படும் நிதியைச் சேகரிப் பதே, இந்தக் கூட்டுருவின் குறிக்கோளாகும். இக் கூட்டுரு ஒரு மறுநிதி அளிக்கும் நிறுவனமேயாகும். இது, நீண்டகாலக் கடன்களைக் கொடுக்கிறது. தற்போது இயங்கும் கடன் நிறுவனங் களால் (கடன் தொகை மிக அதிகமாக உள்ளதால் அல்லது ஒவ்வாத கடன் நிபந்தனைகளால்) கடன் வழங்க இயலாத நிலையில் கூட, இக் கூட்டுரு கடன் கொடுக்க முன்வருகிறது.

ரிசர்வ் பாங்க், மத்திய நிலவள வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு, காப்பீட்டு மற்றும் முதலீட்டுக் கம்பெனிகள், கூட்டுறவுக் காப்பீட்டுச் சங்கங்கள், மற்றும் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் ஆகியவை மட்டுமே வேளாண்மை மறுநிதிக் கூட்டுருவின், உறுப்பினராகலாம். இக் கூட்டுருவின் முதல் திருப்பிக் கொடுத்தல் (Return of Capital) பற்றியும், குறைந்த அளவு இலாப ஈவுத்தொகையாக (Guaranteed Minimum Note of Divident) $4\frac{1}{2}$ விழுக்காடு கொடுப் பது பற்றியும் மத்திய அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. இக் கூட்டுருவின் அனுமதித்த முதல்(Authorised capital) 25 கோடி ரூபாயாகும். செலுத்திய முதல் 5 கோடி ரூபாய். 2·94 கோடி ரூபாயை, ரிசர்வ் பாங்க் செலுத்தியது.

வேளாண்மை மறுநிதிக் கூட்டுருவின் நிருவாகம் ஒன்பது இயக்குநர்களைக் கொண்ட அவையால் நடத்தப்படுகிறது. ரிசர்வ்

பாங்கின் உதவி ஆளுநரே, அவையின் தலைவர். ரிசர்வ் பாங்க், தனது அலுவலகரில் ஒருவரை, ஓர் இயக்குநராக நியமிக்கிறது. மேலும், ரிசர்வ் பாங்க், வேளாண்மை மறுநிதிக் கூட்டுருவின் அவையைக் கலந்தாலோசித்த பின்னர், ஒரு நிருவாக இயக்குநரை நியமிக்கிறது. மத்திய அரசு 3 இயக்குநர்களை நியமிக்கிறது. எஞ்சியுள்ள 3 இயக்குநர்கள் பங்குதாரர்களால் (1 இயக்குநர் மத்திய நிலவள வங்கி, ஓர் இயக்குநர் மாநிலக் கூட்டுறவு வங்கி, 1 இயக்குநர் பிற பங்குதாரர்கள்) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இக் கூட்டுரு, தனது செலுத்திய முதல் (Paid up capital), காப்பு நிதி (Reserve fund) ஆகிய இரண்டின் கூட்டுத் தொகையைப்போல் 20 பங்கு அளவுக்குக் கடன் வாங்கலாம். தேவைப்படும் நிதியைக் கீழ்க்கண்ட வகையிலும் எழுப்பலாம்.

1. மத்திய அரசால் உத்தரவாதம் செய்யப்பட்ட பத்திரங்கள், கடன் பத்திரங்கள் ஆகியவை விற்பதன் மூலம் பெறலாம்.

2. பொறுப்புரிமையர் (Trustee) முதலீடு செய்யத் தகுந்த ஆவணங்கள் பேரில், 18 திங்களுக்கு அதிகமாகாத கடன்களை ரிசர்வ் பாங்கிடமோ (ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் பிரிவு 17(4E)ன் கீழ்), மத்திய அரசிடமோ, மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட பிற நிறுவனங்களிடமோ கடனுகப் பெறலாம்.

3. மத்திய அரசு, மாநில அரசுகள், மத்திய நிலவள வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், அட்டவணையிலிட்ட வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து 12 திங்களுக்கோ அதற்கு அதிகமாகவோ, வைப்புகளைப் பெறலாம்.

4. மத்திய அரசின் முன் அனுமதி பெற்று, இந்தியாவில் அல்லது இந்தியாவிற்கு வெளியில் உள்ள வங்கிகள் அல்லது நிறுவனங்களிடமிருந்து வெளிநாட்டுக்குச் செலாவணிக் கடனைப் பெறலாம்.

வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு நடைமுறை முதலைப் பெருக்குவதற்காக, பங்குதாரரான ரிசர்வ் பாங்க் பெறக்கூடிய இலாப ஈவுத்தொகையை எந்தவித வட்டியும் பெறுமல் வேளாண்மை மறுநிதிக் கூட்டுருவிடம் 15 ஆண்டுகளுக்கு வைத்திருக்க வகை செய்யப்பட்டுள்ளது.

பங்குதாரர்களான மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மத்திய நிலவள வங்கிகள், அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள் ஆகியவை வேளாண்மை மறுநிதிக் கூட்டுருவிடம் மறுநிதி வசதி பெறத் தகுதி பெற்றவை. மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அல்லாமல், பிற கூட்டுறவு நிறுவனங்களுக்கும், ரிசர்வ் பாங்க் அனுமதியின்பேரில், வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு நேரடியாகக் கடன் கொடுக்கலாம். மேலும், இக் கூட்டுரு, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் (அரசாங்கத்தால், முதல் மற்றும் வட்டி திருப்பிக் கொடுப்பது பற்றி உத்தரவாதம் செய்யப்பட்ட) கடன் பத்திரங்களையும் வாங்க அதிகாரம் பெற்றிருக்கிறது. பொதுவாக, விவசாய வளர்ச்சியைப் பெருக்கக்கூடிய பெரும்பாலான செயல்களுக்கு, இக் கூட்டுரு நிதிவசதி அளிக்கிறது.

வேளாண்மை மறுநிதிக் கூட்டுருவிடமிருந்து கடன் பெற வேண்டுமாயின் திட்டமானது கீழ்க் கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

1. வருங்கால முன்னேற்றத்திற்கான திட்டமாக இருத்தல் வேண்டும்.

2. நடைமுறைக்கு ஒவ்வாததாக இருக்கக் கூடாது.

3, பொருளாதார அளவில் நல்ல திட்டமாகவும் வியாபார அளவில் இலாபமளிக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

4. ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அல்லது குறிப்பிட்ட பயிருக்கான திட்டம் வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவை, நேரடி மேற்பார்வைக்கும் தகுந்ததாக இருக்க வேண்டும்.

திட்டத்தைப் பற்றிய முழு விவரங்கள், தேவையான கடனளவு, மேற்பார்வைக்கான ஏற்பாடுகள், குறுகியக் காலக்கடன் ஏற்பாடுகள், ஆகியவை பற்றிய விபரங்களை, மறுநிதி வசதிபெறும் நிறுவனங்கள் தரவேண்டும்.

இத் திட்டங்களைப் பரிசீலனை செய்ததும், வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு, தன் நிபுணர் குழாம்மூலம், திட்டங்களை மதிப்பிடுகிறது. நேரடியாகத் தன் அலுவலகர்களை அனுப்பி, அத் திட்டத்தை உண்மையிலேயே செயல்படுத்த முடியுமா என்று பல கோணங்களிலும் ஆராய்ந்த பிறகு, வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு, அத் திட்டங்களை அனுமதிக்கிறது.

தகுந்த ஆவணங்கள் பேரில் அல்லது அரசாங்க உறுதியின் பேரில் வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு, கடன் அளிக்கும் நிறுவனங்களுக்குத் தேவையான கடனை அளிக்கிறது. நிலவள வங்கிகள் விற்கும், உறுதியளிக்கப்பட்ட கடன் பத்திரங்களில் 75 விழுக்காட்டை, இம் மறுநிதிக் கூட்டுரு வாங்குகிறது. மாநில அரசால் உறுதியளிக்கப்பட்ட கடன் பத்திரங்களில் 25 விழுக்காட்டை இக் கூட்டுரு வாங்குகிறது. மாநிலக் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்த வரை, அரசு உறுதி பேரில் அவை கொடுத்தகடனின் முழு அளவிற்கு, இக் கூட்டுரு கடன் கொடுக்கிறது. அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளைப் பொறுத்தவரை, இக் கூட்டுரு, துணை அடைமானத்தின் பேரில் 50 விழுக்காடு அளவிற்கு, மறுநிதி வசதி அளிக்கிறது. பொதுவாக 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டு வரை மத்தியக்காலக் கடன்களையும் அல்லது 5 ஆண்டுக்கு மேற்பட்ட நீண்டகாலக் கடன்களையும் இக் கூட்டுரு அளிக்கிறது. வேளாண்மை மறுநிதிக் கூட்டுருச் சட்டபடி, 25 ஆண்டுக்கு, இக் கூட்டுரு நீண்டகாலக் கடன் கொடுக்கலாம் என்று இருந்தபோதிலும், தற்போது 15 ஆண்டுகளுக்கு மட்டுமே இக் கூட்டுரு கடன் வழங்குகிறது. ஆனால் ஒரு சில விதிவிலக்குப் பெற்ற நிறுவனங்களுக்கு, இக் கூட்டுரு, 20 ஆண்டுகளுக்குக் கடன் அளிக்கிறது. மத்திய நிலவள வங்கிகள் குறைந்த அளவு 5 இலட்ச ரூபாயைக் கடனாகப் பெறலாம். பிற நிறுவனங்கள் குறைந்த அளவுக் கடனாக, 1 இலட்ச ரூபாயே பெறமுடியும்.

தனது பணிகளைத் திறம்படச் செய்யவும், தன்னால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் சரியாகச் செயல்படுகின்றனவா என்று கண்காணிக்கவும், விவசாய வளர்ச்சிக்கான புதியத் திட்டங்களை உருவாக்குவதில் மாநில அலுவலர்க்கு உதவவும், இக் கூட்டுரு அகமதாபாத், பெங்களூர், போபால், புவனேஸ்வரம், பம்பாய், கல்கத்தா, சண்டிகர், ஹைதராபாத், ஜெய்ப்பூர், கான்பூர், சென்னை, பாட்னா ஆகிய இடங்களில் கிளை அலுவலகங்களைத் திறந்துள்ளது.

1963-64-ல் 2 கோடி ரூபாய் ஒதுக்கீட்டைப் பெற்ற மூன்று திட்டங்களுக்கானத் தொழிலை, இக் கூட்டுரு ஆரம்பித்தது.

அகில இந்தியக் கிராமியக் கடன் மறுபரிசீலனைக் குழு மறுநிதி வசதிகள் அளிப்பது பற்றியும் விவசாயத்தில் சிறப்பாக முதலீடு செய்வது பற்றியும், பின்வருமாறு கூறியுள்ளது. வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு மேலும் அதிகமான பங்கு வகிக்கவேண்டும் என்று பரிந்துரைத்தது. மேலும், வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு, உலக வங்கியிடமிருந்து (World bank) கடன்பெற முயற்சி செய்யவேண்டும் என்றும், அக் குழு பரிந்துரைத்தது.

எதிர்க்காலத்தில், வேளாண்மை மறுநிதிக் கூட்டுருவின் பணிகளைப் பெருக்கும்பொழுது, மத்திய அரசு, ரிசர்வ் பாங்க், வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு ஆகியோர் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அக் குழு கூறியுள்ளது. வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு கடன் கொடுப்பது பற்றியும், கடன் பயன் படுத்தப்படுவதன்மீது மேற்பார்வை பற்றியும் பரந்த திட்டத்தை உருவாக்க வேண்டும்; மத்திய அரசு இலாபகரமான முதலீடு செய்யத் தகுதிபெற்ற இடங்களைத் தெரிவித்தல் வேண்டும்; ரிசர்வ் பாங்க், வேளாண்மை மறுநிதிக் கூட்டுருவுக்குத் தேவையான நிதி வசதிகளைத் தனது நீண்டகால நடவடிக்கைகள் நிதியிலிருந்து கொடுக்கிறது. மேலும் ரிசர்வ் பாங்க் வேளாண்மை மறுநிதிக் கூட்டுருவின் செலவுகளிலும் பங்கேற்கிறது. அரசாங்கத் துறைகள், குறுகியக் கால மற்றும் நீண்டகாலக் கடன்களை அளிக்கும் நிறுவனங்கள், உர அளிப்புச் செய்யும் நிறுவனங்கள் ஆகியவற்றுக் கிடையே நெருங்கியச் செயல் இணைப்பை (Co-ordination) ஏற்படுத்த இக்கூட்டுரு முயற்சி செய்ய வேண்டும்.

மத்திய அரசு, ரிசர்வ் பாங்க் ஆகியவற்றிடமும், வெளிச் சந்தையிலிருந்தும் கடன் பெற்றும், தனது பங்குகளை விற்றும், 1972-73-ல் தன் வருவாய்களைக் கூட்டுரு பெருக்கிக் கொண்டது. 1972-73-ல் மத்திய அரசிடமிருந்து 40·7 கோடி ரூபாயும், ரிசர்வ் பாங்கின் தேசிய வேளாண்மைக்கடன் (நீண்டகால நடவடிக்கை) நிதியிலிருந்து 30 கோடி ரூபாயும், வெளிச்சந்தையிலிருந்து 38·7 கோடி ரூபாயும் இக் கூட்டுரு கடனைப் பெற்றது.

பன்னாட்டு வளர்ச்சிச் சங்கத்தின் (International development association) உதவியால் 315·91 மில்லியன் டாலருக்கான 12 திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பை இக் கூட்டுரு பெற்றுள்ளது. மேலும், இக் கூட்டுரு உத்தரப்பிரதேசத்தில் தாரைப் பகுதியில் (Tarai area) மேற்கொள்ள இருக்கும் ஒரு திட்டத்திற்கு 13 மில்லியன் டாலர் அளவுக்கு, உலக பாங்க் நிதி உதவி செய்ய இருக்கிறது.

1972-73-ல் வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு 196·6 கோடி ரூபாய்க்கான 230 திட்டங்களை ஏற்றுக் கொண்டது. இந்த 230 திட்டங்களில், 116 திட்டங்கள் மத்திய நிலவள வங்கிகளாலும், 10 திட்டங்கள் மாநிலக் கூட்டுறவு வங்கிகளாலும், 104 திட்டங்கள் அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளாலும் செயல்படுத்தப் பட்டன. மேற்கூறப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்தாக, மத்திய நிலவள வங்கிகள் 145·4 கோடி ரூபாயும், மாநிலக் கூட்டுறவு வங்கிகள் 2·1 கோடி ரூபாயும், அட்டவணையிலிட்ட

வணிக வங்கிகள் 24·8 கோடி ரூபாயும் மறுநிதி வசதி பெற்றன. நிலவள வங்கிகளின் சிறப்பு வளர்ச்சிக்கடன் பத்திரங்களை (Special development debentures) 86·1 கோடி ரூபாய்க்கு இக் கூட்டுரு வாங்கியது.

இக் கூட்டுரு தொடங்கப்பட்டதிலிருந்து, 1974 சூன் முடிய மொத்தம் 1457 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட மொத்த நிதி உதவி (Total financial assistance sanctioned) 806·90 கோடி ரூபாய் ஆகும். கூட்டுருவால் மேற் கொள்ளப்பட்ட பொறுப்பு (Corporation's commitment) 704·10 கோடி ரூபாயாகும். பயன்படுத்தப்பட்ட தொகை (Amount utilised) 316·67 கோடி ரூபாயாகும்.

# பிற்சேர்க்கை 1

**கிராமியக் கடன் பற்றிய ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டத்தின் முக்கியச் சாத்துகள் (1973 மார்ச்சு இறுதியில்)**

| பிரிவு | நோக்கம் | கடன் விதம் | கால அளவு | பிணையம் | வட்டி வீதம்* | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| **17 (2) (a)** | உண்மையான வணிக அல்லது வியாபார நடவடிக்கைகளுக்கு நிதி அளிப்பதற்காக | இந்தியாவில் எழுதப் பட்டதும் கொடுக்கப்பட வேண்டியதுமான மாற்று உண்டியல்களையும் புரோநோட்டுகளையும் வாங்குதல் அல்லது மறு தள்ளுபடி செய்தல் | வாங்கிய அல்லது மறு தள்ளுபடி செய்தநாளிலிருந்து 90 நாள்களுக்குள் முதிர்வடையக் கூடியது | இருநல்ல கையெழுத்துகளைப் பெற்று அவற்றில் ஒரு கையெழுத்து அட்டவணையிலிட்ட வங்கி அல்லது மாநிலக் கூட்டுறவு வங்கியுடையதாகவோ உடைய வியாபார அல்லது வணிக மாற்று உண்டியல்கள் | ரிசர்வ் பாங்க் வீதம் | கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்த வரை, மாநிலக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் வாங்குவதற்காகக் கடன் கொடுக்க மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. |
| **17 (2) (b)** | பருவகாலவிவசாய நடவடிக்கைகளுக்கும், பயிர்களை விற்பதற் | இந்நோக்கத்திற்காக எழுதப் பட்டதும், இந்தியாவில் கொடுக்கப் படவேண்டிய | 15 திங்கள், ஆனால் பொதுவாக 12 திங்களுக்கே | இரண்டு அல்லது அதற்கு அதிகமான நல்ல கையெழுத்துகளில் ஒரு | பாங்க்வீதத்தை விட 2% குறைவு | இரண்டாம் கையெழுத்தை இடும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் சார்பில் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கும் நிதி அளிப்பதற்காக | துமான மாற்று உண்டியல்களையும் புரோநோட்டுகளையும் வாங்குதல் அல்லது மறுதள்ளுபடி செய்தல் | | கையெழுத்து அட்டவணையிலிட்ட வங்கியினுடையதாகவோ அல்லது மாநிலக்கூட்டுறவு வங்கியினுடையதாகவோ உடைய விவசாயத் தாள் (Agricultural paper) | | குக் கடன் அளவுகள் நிர்ணயிக்கப் படுகிறது |
| 17(2)(bb) | ரிசர்வ் பாங்கால் அனுமதிக்கப்பட்டக் குடிசை மற்றும் சிறு தொழில்களின் உற்பத்திக்கும், விற்பனைச் செயல்களுக்கும் | இந்நோக்கத்திற்காக எழுதப்பட்டதும், இந்தியாவில் கொடுக்கப்பட வேண்டியதுமான மாற்று உண்டியல்களையும் புரோநோட்டுகளையும் வாங்குதல் அல்லது மறுதள்ளுபடி செய்தல் | வாங்கிய அல்லது மறுதள்ளுபடி செய்த நாளிலிருந்து 12 திங்களுக்குள் முதிர்வு அடையக் கூடியவை | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நல்ல கையெழுத்துகளில், ஒரு கையெழுத்து மாநிலக் கூட்டுறவு வங்கியினுடையதாகவோ அல்லது மாநில நிதியக் கூட்டுருவினுடையதாகவோ | பாங்க் வீதத்தை விட $1\frac{1}{2}\%$ குறைவு | 1968-69க்கு முன்னுல் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு (பருத்தி மட்டும்) மாத்திரமே இத் திட்டம். 1968-69 லிருந்து பட்டு கம்பளிக் கைத்தறி நெசவுத் தொழில்களுக்கும், மின்விசைத் தறிகளுக்கும் இத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இதுவன்றி 22 குடிசை, சிறு தொழில்களும் ரிசர்வ் பாங்கால் |

## பிற்சேர்க்கை 1-ன் தொடர்ச்சி

| பிரிவு | நோக்கம் | கடன் விதம் | கால அளவு | பிணையம் | வட்டி வீதம்* | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | உடைய வட்டி மற்றும் முதல் திருப்பிக் கொடுப்பது பற்றி மாநில அரசால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட குடிசை மற்றும் சிறு தொழில்களின் மாற்று உண்டியல்கள் | | அனுமதிக்கப் பட்டன. கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு நிதிவசதி அளிக்கும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் சார்பில் அல்லது மாநிலக் கைத்தறி நெசவாளர் சங்கங்களின் சார்பில் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு ஒவ்வோர் ஆண்டிற்கும் ஏப்ரல் முதல் மார்ச்சு முடிய கடன் அளவுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. |
| 17(4)(a) | மாநிலக்கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி வசதிகளைப் பெருக்கவும், பொது வங்கியியல் | கடன்களும் முன் பணமும் | கோரியதும் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியவை அல்லது 90 நாள்களுக் | பாங்க் பொறுப்புரிமையர் முதலீடு செய்வதற்கு அதிகாரம் பெற்ற பங்குத் | பாங்க் வீதம் | குறிப்பிட்ட மாநில அரசால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட மத்தியநிலவள வங்கிகளின் கடன் பத்திரங்கள் இப் பிரிவின் கீழ் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தொழிலுக்கும் | | கு அதிகமாகாத குறிப்பிட்டத்தவணைமுடிவில் திருப்பிக் கொடுக்க வேண்டியவை | தொகுப்புகள், நிதிகள், ஆவணங்கள் (அசையாச் சொத்துகள் தவிர) | | கடன் அளிப்பதற்காக அரசாங்க ஆவணங்களுக்குச் சமமாகக் கருதப்படும் |
| 17(4)(a) | பருவகால விவசாய நடவடிக்கைகளுக்கும் விவசாயப் பயிர் விற்பனைக்கும் கடன் அளிப்பதற்காக | கடன்களும் முன் பணமும் | பொதுவாக 12 திங்களுக்குள் கடன்களை ரிசர்வ் பாங்க் திருப்பிக் கேட்பதில்லை. | ,, | பாங்க் வீதத்தைவிட 2% குறைவு. | பொதுவாக, கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரடியாகக் கடன் கொடுக்கும் மாநிலக் கூட்டுறவு வங்கிகள் நிதியைப் பெற்றுக் கொள்கின்றன. |
| 17(4)(c) | உண்மையான வணிக அல்லது வியாபார நடவடிக்கைகளுக்குக் கடன் அளிப்பதற்காக | கடன்களும் முன் பணமும் | கோரியதும் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியவை அல்லது 90 நாள்களுக்கு அதிகமாகாத குறிப்பிட்ட தவணைமுடிவில் திருப் | பிரிவு 17 (2) (a) யின் கீழ் வாங்க அல்லது மறுதள்ளுபடி செய்யத் தகுதி பெற்ற பத்திரங்களின் ஆதாரத்தைப் பெற்ற மாநிலக் கூட்டு | பாங்க் வீதம். | |

## பிற்சேர்க்கை 1–ன் தொடர்ச்சி

| பிரிவு | நோக்கம் | கடன் விதம் | கால அளவு | பிணையம் | வட்டி வீதம்* | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | பிக்கொடுக்கப்பட வேண்டியவை. | றவு வங்கிகளின் கேட்புப் புரோநோட்டுகள் | | |
| 17(4)(c) | பருவகால விவசாய நடவடிக்கைகளுக்கும் விவசாயப் பயிர் விற்பனைக்கும் கடன் அளிப்பதற்காக (கலப்பு விவசாயத்திற்கும் பயிர்களை விற்பதற்கு முன் செய்யப்படும் செயல்களுக்கும், உட்பட) | கடன்களும் முன் பணமும் | இருப்பினும், பொதுவாக 12 திங்களுக்குள் கடனைத் திருப்பிக்கொடுக்குமாறு ரிசர்வ் பாங்க் கேட்பதில்லை. | பிரிவு 17 (2) (b) யின் கீழ் வாங்க அல்லது மறுதள்ளுபடி செய்யத் தகுதி பெற்ற பத்திரங்களின் ஆதாரத்தை பெற்ற மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் கேட்புப் புரோநோட்டுகள் | பாங்க் வீதத்தைவிட 2% குறைவு | பருவகால விவசாய நடவடிக்கைகளுக்கும், பொருள் விற்பனைக்கும் பிரிவு 17(2) (b) யின் கீழ் மறுதள்ளுபடி செய்து கொடுப்பதற்குப் பதிலாகச் சுலபமாகக் கடன் கொடுக்கும் பொருட்டு, இப்பிரிவின் கீழ் கடன் கொடுக்கப்படுகிறது. |
| 17(4)(c) | பருவகால விவசாய | கடன்களும் முன் பணமும் | இருப்பினும், பொதுவாக | குறிப்பிட்ட மாநில அர | பாங்க் வீதத்தைவிட 2% | கூட்டுறவு இயக்கம் போதுமான அள |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | நடவடிக்கைகளுக்கும், விவசாயப்பயிர் விற்பனைக்கும் கடன் அளிப்பதற்காக(கலப்பு விவசாயத்திற்கும் பயிர்களை விற்பதற்கு முன் செய்யப்படும் செயல்களுக்கும், உட்பட) | | 12 திங்களுக்குள் கடனைத் திருப்பிக்கொடுக்குமாறு ரிசர்வ் பாங்க் கேட்பதில்லை | சின் உத்திரவாதத்துடன் கூடிய ஆதரவைப் பெற்ற மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் கேட்பு புரோ நோட்டுகள். | குறைவு. | விற்கு வளர்ச்சியுறுத மாநிலங்களில் அரசாங்க உத்தரவாதத்தின் பேரில் கடன் கொடுக்கப்படுகிறது. மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும், மத்திய கூட்டுறவு வங்கிகளின் சார்பில், தனிக் கடன் அளவுகள் நிர்ணயிக்கப்பட்டுக் கடன் வழங்கப்படுகிறது. |
| 17(4)(c) | ரசாயன உரம் வினியோகிக்கக் கடன் கொடுப்பதற்காக | கடன்களும்முன் பணமும் | கோரியதும் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியவை அல்லது 90 நாள்களுக்கு அதிகமாகாத குறிப்பிட்ட தவணைமுடிவில் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டிய | குறிப்பிட்ட மாநில அரசின் உத்திரவாதத்துடன் கூடிய ஆதரவைப் பெற்ற மாநிலக் கூட்டுறவு வங்கியின் கேட்பு புரோ நோட்டுகள் | 1972-லிருந்து வட்டி விகிதம் பாங்க் வீதத்தை விட 2% அதிகம் | ரசாயன உரவிற்பனையில் ஈடுபட்டிருக்கும் மாநில விற்பனைச் சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதற்காக, மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு ஒவ்வோர் ஆண்டிற்கும் கடன் அளவு நிர்ணயிக்கப்பட்டுக் கடன் அளிக்கப் படுகிறது. ஒவ்வொரு தடவையும் பணம் எடுத்ததிலிருந்து 6 திங் |

## பிற்சேர்க்கை 1—ன் தொடர்ச்சி

| பிரிவு | நோக்கம் | கடன் விதம் | காலஅளவு | பிணையம் | வட்டி வீதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | வை. பொதுவாக, 6 திங்கள்களுக்குள், ரிசர்வ் பாங்க் இக்கடனைத் திருப்பிக் கேட்பதில்லை. | | | களுக்குள், திருப்பிக்கொடுக்க வேண்டும். |
| 17(4)(d) | உண்மையான வணிக அல்லது வியாபார நடவடிக்கைகளுக்கும் மற்றும் அல்லது பருவகால விவசாய நடவடிக்கைகளுக்கும், விவசாயப்பயிர்விற்பனைக்கும் கடன் அளிப்பதற்காக | கடன்களும்முன் பணமும் | கோரியதும் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியவை அல்லது 90 நாள்களுக்கதிகமாகாத குறிப்பிட்டதீதவணை முடிவில் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டியவை. | எந்த ஒரு குறிப்பிட்ட வங்கிக்கோ, மாற்றப்பட்ட அல்லது உரிமை மாற்றப்பட்ட அல்லது அடகுவைக்கப்பட்ட, சரக்கு உரிமைப் பத்திரங்களின் ஆதாரத்தைப் பெற்ற எந்த ஒரு | வணிக, வியாபார நடவடிக்கைகளுக்குப் பாங்க் விதம். பருவகால விவசாய நடவடிக்கைகளுக்கும் பயிர் விற்பனைக்கும் பாங்க் வீதத்தை விட 2% குறைவு. | இப் பிரிவில் 'உரிமைப் பத்திரங்கள்' எனக் கூறப்பட்டிருப்பது, பதிவு செய்த உரிமம் உடைய பண்டகத்தால் கொடுக்கப் படும் பண்டக இரசீதைக் குறிக்கும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | அட்டவணையிலிட்ட அல்லது மாநிலக் கூட்டுறவு வங்கியின் கேட்புப் புரோநோட்டுகள் | | |
| பிரிவு 46(2) (a) யின் கீழ் தீர்மானிக்கப்பட்டபடி பிரிவு யின் கீழ் | மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், விவசாயக்கடன் சங்கங்கள், மத்திய நிலவள வங்கிகள், பிரதம நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் பங்குகளுக்கு நேரடியாகவோ அல்லது நேரடியாக இல்லாமலோ செலுத்துவதற்காக | மாநில அரசுகளுக்குக் கடன்களும் முன்பணமும் | கடன் வழங்கிய தேதியிலிருந்து 20 ஆண்டுகள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் வழக்கமாகப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கே கடன் கொடுக்கப்படுகிறது. | குறிப்பிடப்பட்ட மாநில அரசால் கொடுக்கப்பட்ட ‍தவணைப் புரோ நோட்டுகள் | முதல்இரண்டு ஆண்டுகள்-இல்லை, அடுத்த 3 ஆண்டுகள் 2% அடுத்த 4 ஆண்டுகள் $2\frac{1}{2}$% அடுத்த 3 ஆண்டுகள் 3% சில விதிவிலக்கு பெற்ற கடன்களுக்கு அடுத்த 2 ஆண்டு 3% 14 ஆம் ஆண்டுக்குப் பிறகு $3\frac{1}{2}$% | தேசிய வேளாண்மைக் கடன் (நீண்டகால நடவடிக்கைகள் நிதியிலிருந்து கடன் கொடுக்கப் படுகிறது. சமமான ஆண்டுத் தவணைகளில் முதல் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். மூன்றாண்டு முடிவுற்றதும், முதல் தவணை தொடங்கும். |

## பிற்சேர்க்கை 1-ன் தொடர்ச்சி

| பிரிவு | நோக்கம் | கடன் விதம் | கால அளவு | பிணையம் | வட்டி வீதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| பிரிவு 46 A (2)-ன் கீழ் தீர்மானிக்கப்பட்டபடி பிரிவு 17 (4 AA) யின் கீழ் | வேளாண்மை நோக்கங்களுக்குக் கடன் கொடுப்பதற்காக (நிலத்தைப் பண்படுத்துதல், கரை கட்டுதல், பிற நிலச் சீர்திருத்தம், பழத் தோட்டம், பிற தோட்டம் அமைத்தல் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துதல், பெருக்குதல், கால்நடை வாங்குதல், கருவிகள், இயந்திரசாதனங்களை வாங்குதல், | கடன்களும்முன் பணமும் | 15 திங்களுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடையே உள்ள கால அளவிற்குக் கடன் கொடுக்கப்படுகிறது; பொதுவாக, 3 ஆண்டிற்குக் கடன் கொடுக்கப்படுகிறது; ஆனால் 25 விழுக்காடு அளவுக் கடன் ஐந்து ஆண்டுகளுக்குக் கொடுக்கப்படலாம்; கடன் நீர்ப்பாசன நோக்கத்திற்காக இருந் | கடன்களுக்குக் குறிப்பிட்ட மாநில அரசு உத்திர வாதம் அளித்திருக்க வேண்டும். ஒவ்வொரு கடனுக்கும், அவ்வப்போது குறிப்பிடப்படும் பிணையங்கள் | விவசாய நோக்கங்களுக்குப் பாங்க்வீதத்தைவிட 1½% குறைவு. சர்க்கரை ஆலையில் பங்கு வாங்குவது போன்ற நோக்கங்களுக்கு பாங்க் வீதம் | இப் பிரிவின் கீழ் சர்க்கரை ஆலைகளில் பங்கு வாங்க பாங்க் வீதத்தில் கடன் கொடுக்கப்படுகிறது. விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள், அல்லது பால் வழங்கும் சங்கங்களின் உறுப்பினர்கள், பால் தரும் கால்நடைகளை வாங்கவும், கோழி, வாத்துப் பண்ணைகள் அமைக்கவும் சலுகை வீதத்தில் இப் பிரிவின் கீழ் கடன் கொடுக்கப்படுகிறது. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | விவசாயத்திற்குத் தகுந்த போக்குவரத்துச்சாதனங்களை வாங்குதல், மாட்டுக் கொட்டில் அமைத்தல் பிற விவசாய சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள், மற்றும் ரிசர்வ் பாங்கின் மத்திய அவையால் அவ்வப்போது முடிவு செய்யப்படும் பிற விவசாய நடவடிக்கைகள் | | தால் கடன் கால அளவு நீட்டிக்கப் படலாம் | | | |
| பிரிவு 46A (2) (c)-ன் கீழ் தீர்மானிக்கப்பட்டபடி பிரிவு 17 (4)(AA) யின் கீழ் | மத்திய நில வள வங்கிகளுக்குக் கடனும் முன் பணமும் அளிப்பதற்காக | கடனும் முன் பணமும் | 20 ஆண்டுகளுக்கு அதிகமாகாத குறிப்பிட்ட தவணைகளுக்கு | முதல் திருப்பிக்கொடுப்பது பற்றியும் வட்டி கொடுப்பது பற்றியும் சம்பந்தப் | பாங்க் வீதம் | இந் நோக்கத்திற்குக் கடன் கொடுக்க நிதி பெரும்பாலும் பயன்படுத்தப் படவில்லை. |

## பிற்சேர்க்கை 1-ன் தொடர்ச்சி

| பிரிவு | நோக்கம் | கடன் விதம் | கால அளவு | பிணையம் | வட்டி விதம்* | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | பட்ட மாநில அரசும் உத்திரவாதம் அளித்திருக்க வேண்டும் | | |
| 46 A (2) (d) | மத்திய நிலவள வங்கிகளின்கடன் பத்திரங்களை வாங்குவதற்காக | | | கடன் பத்திரங்களின் முதல் திருப்பிக் கொடுப்பது பற்றியும், வட்டி கொடுப்பது பற்றியும் மாநிலஅரசு உத்திரவாதம் அளித்திருக்க வேண்டும். | எந்த வீதத்தில் கடன் பத்திரங்கள் வெளிடப்படுகின்றனவோ, அந்த வீதத்தில் | மத்திய நிலவளவங்கிகள் வெளியிடும் 'கிராமியக் கடன் பத்திரங்களை, ஒவ்வோர் வெளியீட்டிலும் 8/15பங்கை ரிசர்வ் பாங்க் 1957-58-லிருந்து வாங்க ஆரம்பித்துள்ளது. மத்திய நிலவள வங்கிகளின் சாதாரணக் கடன்பத்திரங்கள், பிரிவு 17 (8)-ன் கீழ் பொது நிதியிலிருந்துரிசர்வ்பாங்கால் வாங்கப்படுகிறது. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பிரிவு 46 B யின் கீழ் தீர்மானிக்கப்பட்டபடி பிரிவு 17 (4) AA-ன் கீழ் | பிரிவு 17 (2), 17 (4) ஆகியவற்றின் கீழ் வேளாண்மை நோக்கங்களுக்காகக் கொடுக்கப்படும் கடன்களை விளைச்சலின்மை, மழையின்மை, வெள்ளம்அல்லது இயற்கையான ஆபத்துகள்ஆகியவற்றின் விளைவால் திருப்பிக் கொடுக்க இயலாத நிலையில் தேங்கி நிற்கும் கடன் பாக்கியைக் கொடுக்க வகை செய்யும் வகையில் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குக் | கடனும் முன் பணமும் | 15 திங்களுக்கும், 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கால அளவிற்கு ; பொதுவாக 3 ஆண்டுகளுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. | முதல் திருப்பிக்கொடுப்பது பற்றியும், வட்டி கொடுப்பது பற்றியும், மாநில அரசு உத்திரவாதம் அளித்திருக்க வேண்டும். | பாங்க் வீதத்தை விட $1\frac{1}{2}$ % குறைவு | இப் பிரிவின் கீழ் கொடுக்கப் படும் கடன்கள் தேசிய வேளாண்மைக் கடன் (நிலைப்பேருக்கம்) நிதியிலிருந்து. குறுகியக் காலக் கடன்களை மத்தியக் காலக் கடன்களாக மாற்றுவதற்காகக் கொடுக்கப்படும் கடன்களே ஆகும். |

## பிற்சேர்க்கை 1—ன் தொடர்ச்சி

| பிரிவு | நோக்கம் | கடன் விதம் | கால அளவு | பிணையம் | வட்டி வீதம்* | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | கடன் கொடுப்பதற்காக. | | | | | |

* சலுகை வட்டி வீதம் கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

# 9. ரிசர்வ் பாங்கும் தொழில் நிதியும்
## (Reserve Bank of India and industrial finance)

இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களில், திட்டமிட்டபடி தொழில் வளர்ச்சி அமைய வேண்டுமானுல், போதிய அளவு நிதி இன்றியமையாது தேவைப்படும். இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில், மிகக் குறைந்த முதல் ஆக்கமே (Capital formation) காணப்படுகிறது; முதலீடு செய்வதற்கு முதல் (Capital) கிடைப்பது கடினமாக இருக்கிறது. நன்கு பரந்து அமைந்த முதல் அங்காடி இல்லாத காரணத்தால், தொழில்துறைக்குத் தேவையான மத்திய, நீண்டகாலக் கடன்களை அளிக்கத் தகுந்த நிதி நிறுவன அமைப்பின் இன்றியமையாமை ஏற்பட்டது. இதனுல் தான், ரிசர்வ் பாங்க் அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் தொழிற்கடன் அளிப்பதற்கான நிறுவனங்களை நிறுவ முயற்சி செய்தது. இந்தியாவில் தொழில் வளர்ச்சி வங்கிகளின் (Industrial development banks) தோற்றம், ஓர் அண்மைக்கால நிகழ்ச்சியே. இவ் வங்கிகள் தொழில்களின் மத்திய, நீண்டகாலக் கடன்தேவைகளை அளித்துப் பொருளாதார முன்னேற்றத்தில், தொழில்களின் பங்கை அதிகமாக்க முடியும். தொழிற்கடன் கொடுப்பதில் அதிகப் பங்கேற்றிருப்பது ரிசர்வ் பாங்கின் மற்றோர் குறிப்பிடத்தக்க சிறப்பியல்பாகும். ரிசர்வ் பாங்கின் பெருமுயற்சியின் விளைவாக இந்தியாவில் பல நிதி நிறுவனங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இத்தகைய நிதி நிறுவனங்களில் ஒன்றுதான், முதன் முதலாக 1948-ல் அமைக்கப்பட்ட இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு (Industrial finance corporation of India) ஆகும். 1953-லிருந்து, ஒவ்வொரு மாநிலத்திலும்,மாநில நிதியக் கூட்டுரு (State financail corporations) அமைக்கப்பட்டு வருகிறது. தற்போதுச் அத்தகைய மாநில நிதியக்கூட்டுருக்கள், 18 உள்ளன. 1958-ல் முன்னணியில் உள்ள வணிக வங்கிகளுடன் ரிசர்வ் பாங்க் கூட்டு, சேர்ந்து தொழில் மறுநிதிக் கூட்டுருவை (Refinance corporation for Industry) ஆரம்பித்தது. இக்கூட்டுரு, வங்கிகள் தொழில் களுக்குக் கொடுக்கும் கடன்களின் பேரில், மத்தியக் கால மறுநிதி

வசதி அளித்து வந்தது. 1960-ல் சிறுதொழில்களுக்குக் கடன் வசதி அளிப்பதற்காகக் கடன் உத்தரவாதத் திட்டம் (Credit guarantee scheme) ஒன்றை, மத்திய அரசின் சார்பில், ரிசர்வ் பாங்க் கொண்டு வந்தது.

இந் நிறுவனங்கள் அல்லாமல், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் அமைப்பதிலும், ரிசர்வ் பாங்க் மிகுந்த ஆர்வம் காட்டியது. உலக வங்கி (World Bank) பிறநாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் 1955-ம் ஆண்டில் இந்தியத்தொழில், நாணய முதலீட்டுக் கூட்டுரு (Industrial credit and investment corporation of India) நிறுவப்பட்டது. தனியார் துறையில் புதுத் தொழில்களைத் தொடங்கவும், தொழில்களை விரிவாக்கவும், புதுமைப்படுத்தவும், தொழில் நுட்ப நிருவாக அறிவுரைகளை வழங்கவும் இக் கூட்டுரு உதவும். மாநில அளவில் 17 மாநில நிதியக் கூட்டுருக்களைத் தவிர, தமிழ்நாட்டில், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கூட்டுரு(Tamil nadu industrial investment corporation) (1949-ல் கம்பெனியாக ஆரம்பிக்கப்பட்டது) ஒன்றும் இருக்கிறது; மாநில நிதியக் கூட்டுருச் சட்டத்தின், பல விதிகள் இக் கூட்டுருவுக்கும் பொருந்தும்.

மேற்கூறியவை தவிர, இரண்டு மிகப் பெரிய முதலீட்டு நிறுவனங்களும் இந்தியாவில் உள்ளன. (1) 250 ஆயுள் காப்பீட்டுக் கம்பெனிகள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவற்றின் சொத்துகளும், பொறுப்புகளும் மாற்றப்பட்டு 1956 சனவரியில், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு (Life Insurance Corporation of India) அமைக்கப்பட்டது. (2) 1964 பிப்ரவரில், இந்திய யூனிட் ட்ரஸ்ட் (Unit trust of India) ஆரம்பிக்கப்பட்டது. ரிசர்வ் பாங்க், யூனிட் ட்ரஸ்ட் அமைப்பதில் மிகுந்த அக்கறை காட்டியது. இவ்விரு நிறுவனங்களும் தொழிற் கம்பெனிகளில் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை வாங்குதல், ஒப்புறுதி செய்தல் (Underwriting) ஆகிய பணிகளைச் செய்கின்றன. ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு, மின்சார வாரியங்களுக்கும், நகராட்சிகளுக்கும், வீடு கட்டும் திட்டங்களுக்காக மாநில அரசுகளுக்கும் கடன் கொடுத்து வருகிறது.

மேற்கூறப்பட்ட நிறுவனங்கள், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கடன் தேவைகளை, ஓரளவுக்கு நிறைவு செய்து வந்தன. ஆனால், ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் திட்டமிட்டபடி போதுமான அளவுக்கு நிதிவசதி கிடைத்ததா என்பது ஐயமே. ஒவ்வொரு நிதி நிறுவனமும் தனக்கென்று ஒதுக்கப்பட்ட தனிப்பட்ட பணிகளைச் செய்து வருகிறது. ஆனால், இந் நிறுவனங்களுக்கிடையே போதுமான இணைப்பும், போதுமான நிதிவசதி

களும் இல்லையாதலால், மிகுந்த நிதிவசதிகளையுடைய மற்றொரு பெரிய நிறுவனம் இன்றியமையாது தேவைப் பட்டது. ஆகவே, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (Industrial development bank of India) 1964 சூலையில், செயல் படத் தொடங்கியது. நீண்டகாலம் வரை, ரிசர்வ் பாங்கால் முழுமையாக உரிமையாக்கப்பட்ட ஒரு துணை நிறுவனமாகவே, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி பணியாற்றியது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி அமைக்கப்பட்டதிலிருந்து நிதி நிறுவனங் களின் அமைப்பில் பல மாறுதல்கள் செய்யப்பட்டன. இந்தியத் தொழில் நிதிக் கூட்டுருவில், மத்திய அரசும், ரிசர்வ் பாங்கும் பெற்றிருந்த பங்குகள், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிக்கு 1964-ல் மாற்றப்பட்டன; இதனால், தொழில் வளர்ச்சி வங்கி, தொழில் வளர்ச்சிக் கூட்டுருவில் 50 விழுக்காடு பங்குதாரராக ஆக முடிந்தது. 1964-ல் தொழில் மறுநிதிக் கூட்டுரு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிக்கு முழுவதும் மாற்றப்பட்டது.

## இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு

முதல் அங்காடி (Capital market) நன்கு வளர்ச்சியுறாத தாலும், வெளியீட்டகங்களும் (Issue houses) ஒப்புறுதி நிறுவனங் களும் (Underwriting institutions) இல்லாததாலும், இங்கிலாந்தி லுள்ள வணிக வங்கிகளைப் பின்பற்றி இந்திய வணிக வங்கிகள் தொழில்களுக்கு நீண்டகாலக் கடன் அளிக்க மறுத்ததாலும், தொழில்களுக்கு நீண்டகாலக் கடன் அளிக்கத் தனி நிறுவனம் தேவை என்று கருதி, 1948 ஆம் ஆண்டு, இந்தியத் தொழில் நிதிக்கூட்டுரு ஏற்படுத்தப்பட்டது. மத்திய, நீண்டகாலக் கடன்களைத் தனியார் துறையிலுள்ள வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பெனிகளுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அளிப்பதே, இக் கூட்டுருவின் நோக்கமாகும். பின்னர், பொதுத் துறையில் உள்ள கம்பெனிகளும் இக் கூட்டுருவிலிருந்து கடன் பெறத் தகுதி பெற்றன. இந்தியாவில் பதிவு செய்யப்பட்டு அமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட தனியார் கம்பெனிகளும் இக் கூட்டுருவி லிருந்து நிதி உதவி பெறத் தகுதி பெற்றன.

புதுத் தொழில்களையமைக்கவும், புனரமைப்புக்கும், புதுமை யாக்கத்திற்கும், பெருக்கம் செய்வதற்கும், விரிவுபடுத்துவதற்கும் இக் கூட்டுரு கடன் உதவி அளிக்கிறது. இக் குறிக்கோளுக்காக ரிசர்வ் பாங்க், ரூபாய்க் கடன்களையும், தேவைப்பட்டால், வெளிநாட்டுச் செலாவணிக் கடன்களையும், நீண்டகாலக் கடனாகக் கொடுக்கிறது. சலுகைப் பங்குகள் (Preference Shares), கடன் பத்திரங்கள் (Debentures) ஆகியவற்றை வாங்குதல் அல்லது

ஒப்புறுதியளித்தல், வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்களுக்கு உத்தரவாதமளித்தல், நீண்டகாலக் கடன் அளித்தல் ஆகிய வழிகளில் இக் கூட்டுரு உதவி செய்கிறது.

தொழில் நிதிக் கூட்டுரு, மத்திய அரசுக்கும் ரிசர்வ் பாங்கிற்கும், அவர்கள் பங்குதாரர்களாக இருப்பதால் பெறக் கூடிய இலாப ஈவுத் தொகையை, ஒரு தனிக்காப்பு நிதியில் ஒரு கோடி ரூபாய் ஆகும் வரை சேர்த்து வந்தது. அவ்வாறு மாற்றல் செய்யப்பட்ட இலாப ஈவுத் தொகை, ஒரு கோடி ரூபாயாக ஆகிவிட்டபடியால், 1968 ஜூன் 30 ஆம் தேதியிலிருந்து, தொழில் வளர்ச்சி வங்கி, தான் பங்குதாரராகப் பெறவேண்டிய இலாப ஈவுத் தொகையைப் பெற ஆரம்பித்தது.

### ரிசர்வ் பாங்கின் உதவிகள்

ரிசர்வ் பாங்க் தன்னிடமிருந்த சிறந்த வல்லுநர்களைத் தொழில் நிதிக் கூட்டுருவின் பொது நிருவாகத்தினராகப் பணியாற்ற அனுப்பி வந்தது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி அமைக்கப்படும் வரையில், இரண்டு இயக்குநர்களை நியமிக்கும் அதிகாரத்தையும் ரிசர்வ் பாங்க் பெற்றிருந்தது. கூட்டுரு பல திட்டங்களைச் செயல்படுத்துவதைக் கண்காணித்து வந்ததால், அவ்வப்போது தேவையான அறிவுரைகளையும், உதவிகளையும் வழங்க முடிந்தது.

### ரிசர்வ் பாங்க் அளிக்கும் கடன் வசதிகள்

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17 (4B)யில் கூறப்பட்டுள்ளபடி, மத்திய, மாநில அரசுகளின் ஆவணங்கள் மீது 90 நாள்களுக்கு அதிகப்படாத ஒரு குறிப்பிட்ட காலத்துக்கோ அல்லது கோரியதும் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன்களையோ, ரிசர்வ் பாங்க், இந்தியத் தொழில் நிதிக் கூட்டுருவுக்குக் கொடுக்கலாம். இப் பிரிவின் கீழ், மத்திய அரசின் ஆவணங்களின் பேரில் 18 திங்களுக்கு அதிகமாகாத தவணைகளுக்கும், ரிசர்வ் பாங்க் கடன் கொடுக்கலாம். மேலும், மத்திய அரசால் உத்தரவாதம் செய்யப்பட்டு 18 திங்களுக்குள் முதிர்வு அடையக்கூடிய தொழில்நிதிக் கூட்டுருவின் பத்திரங்கள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றின் பேரிலும், 18 திங்களுக்கு அதிகப்படாத ஒரு குறிப்பிட்ட தவணைக்கு, உயர்ந்த அளவு மொத்தத்தில் 3 கோடி ரூபாய் அளவுக்கு, ரிசர்வ் பாங்க், கூட்டுருவுக்குக் கடன் கொடுக்கலாம். ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17 (11)-ன் கீழ் இந்தியத் தொழில் நிதிக் கூட்டுருவுக்கு, அதன்

பத்திரங்களையும், கடன் பத்திரங்களையும் வெளியிடுவதிலும், நிருவகிப்பதிலும் ரிசர்வ் பாங்க் முகவராகப் பணியாற்றுகிறது.

இந்தியத் தொழில் நிதிக் கூட்டுருவின் முதலில், 50 விழுக்காட்டைப் பெற்றிருப்பதால் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, தொழில் நிதிக் கூட்டுருவின் நிருவாகத்தில் சிறந்த பங்கைப் பெற்றிருக்கிறது. கூட்டுருவின் இயக்குநர் அவையின் முழு நேரத் தலைவரை நியமிக்குமுன், மத்திய அரசு, தொழில் வளர்ச்சி வங்கியைக் கலந்தாலோசிக்கிறது. தொழில் நிதிக் கூட்டுருவின் 12 இயக்குநர்களில், 4 இயக்குநர்கள் தொழில் வளர்ச்சி வங்கியாலும், 2 இயக்குநர்கள் மத்திய அரசாலும், எஞ்சியுள்ள 6 இயக்குநர்கள் பங்குதாரர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தொழில் வளர்ச்சி வங்கி கேட்கும்போது, தனது நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைக் கூட்டுரு அளிக்க வேண்டும். எந்த ஒரு தனி நிறுவனத்திற்கும், 1 கோடி ரூபாய்க்குமேல் கடன் கொடுக்கும் போதோ அல்லது நான்கு தடவைக்குமேல் கடன் கொடுக்கும் போதோ, தொழில் வளர்ச்சி வங்கியின் அனுமதியைப் பெற வேண்டும். மேலும் எந்த ஒரு தனி நிறுவனத்திற்கும், 50 இலட்ச ரூபாய்க்கு அதிகமாகக் கடன் கொடுத்தால், அது பற்றித் தொழில் வளர்ச்சி வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். பங்குத் தொகுப்புகள், பங்குகள், பத்திரங்கள், கடன்பத்திரங்கள் ஆகியவை ஒப்புறுதிமூலம் பெற்றவையாயின், ஏழு ஆண்டுகளுக்கு மேல் வைத்திருக்க வேண்டுமானால், தொழில் வளர்ச்சி வங்கியின் முன் அனுமதியைப் பெறவேண்டும். மேலும், எந்த ஒரு தொழில் நிறுவனத்தையோ அல்லது அதன் சொத்து, பொறுப்புகளையோ எடுத்துக்கொள்ள வேண்டுமாயின், தொழில் வளர்ச்சி வங்கியின் முன் அனுமதியைப்பெற வேண்டும்.

### தொழில் வளர்ச்சி வங்கியின் பிற அதிகாரங்கள்

(1) தொழில் நிதிக்கூட்டுருவின் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுதல்.

(2) கூட்டுரு, தன் கடன் விகிதங்களில் மாறுதல்கள் செய்யின், அவற்றிற்கு ஒப்புதல் தெரிவித்தல்.

மேற்கூறப்பட்டவற்றை நன்கு கவனித்தால், தொழில் வளர்ச்சி வங்கிக்கும் தொழில் நிதிக் கூட்டுருக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு புலனாகும். கூட்டுரு, நாளடைவில், படிப்படியாகத் தொழில் வளர்ச்சி வங்கிக்கு, இந்தியத் தொழில்நிதிக் கூட்டுருச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி மாற்றப்படும்.

கூட்டுருவின் அனுமதித்த முதலான 10 கோடி ரூபாய், 5000 ரூபாய் மதிப்புள்ள 20000 பங்குகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அண்மையில், அனுமதித்த முதல் 20 கோடி ரூபாயாக ஆக்கப்பட்டது.

**1974 மார்ச்சு இறுதியில்**

செலுத்திய முதல் 10 கோடி ரூபாய்; காப்பு நிதியில்(இந்தியத் தொழில் நிதிக்கூட்டுருச் சட்டம், பிரிவு 32 (A)-ன்கீழ் வைத்தி ருக்க வேண்டிய சிறப்புக் காப்பு நிதி, அது அல்லாத பிற காப்பு நிதிகள் உட்பட) இருந்த மொத்தத்தொகை 15.54 கோடி ரூபாய். 85.18 கோடி ரூபாய்க்குப் பத்திரங்களையும் கடன் பத்திரங்களையும் வெளியிட்டிருந்தது; மொத்தம் 90.46 கோடி ரூபாய்க்குக் கடன் வாங்கியிருந்தது (ரிசர்வ் பாங்க் —, மத்திய அரசு 67.35 கோடி, வெளிநாட்டுச் செலாவணிக் கடன் 23.11 கோடி); 1971-72, 1972-73, 1973-74 ஆகிய ஆண்டுகளில் அரசாங்க ஆவணங்களில், யாதொரு முதலீடும் செய்யவில்லை. பங்குத் தொகுப்புகள், பங்குகள் (இந்திய யூனிட் டிரஸ்ட் ஆரம்ப முதலுக்குச் செலுத்தியது உட்பட) ஆகியவற்றில் செய்த முதலீடு 14.11கோடி ரூபாய்; பத்திரங்களிலும், கடன் பத்திரங்களிலும் செய்த முதலீடு 4.92 கோடி ரூபாய்; கொடுத்த கடனும், முன் பணமும் 192.56 கோடி ரூபாய்; உத்தரவாதம், ஒப்புறுதி அளித்த வகையில் 11.53 கோடி ரூபாய்.

இந்தியத் தொழில் நிதிக்கூட்டுருச் சட்டம், 1952-ல், திருத்தி அமைக்கப்பட்டு, பிரிவு 21 (3)(a),(3) (b) ஆகியவற்றின்கீழ், 1953 ஜூலைத் திங்களிலிருந்து, இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு, ரிசர்வ் பாங்கிடமிருந்து கடன் பெற்று வருகிறது. 1955-ல் இக் கூட்டுரு வின் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு 1956 நவம்பரிலிருந்து இந்தியத் தொழில் நிதிக்கூட்டுருச் சட்டம், பிரிவு 21 (4)-ன்கீழ் மத்திய அரசிடமிருந்து, இக் கூட்டுரு கடன் பெற்று வருகிறது. அட்டவணை 1-ல், பத்தி 2-ல், ரிசர்வ் பாங்கிடமிருந்து பெற்ற கடன் தொகை பற்றிய புள்ளி விபரங்கள் தரப்பட்டுள்ளன. கூட்டுரு, ரிசர்வ் பாங்கிடமிருந்து பெற்ற கடனைப் பிற கடன்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ரிசர்வ் பாங்கிடமிருந்து பெற்ற கடன் குறைந்த அளவே என்று தெரிய வருகிறது. மேலும் ஒரே சீராகக் கடன் பெறப்படவில்லை. ஒரு சில ஆண்டுகளில் கடனே வாங்க வில்லை. ஒரு சில ஆண்டுகளில் குறைந்த கடனே வாங்கியுள்ளது.

## அட்டவணை 1

### இந்தியத் தொழில் நிதிக்கூட்டுரு பெற்ற கடன்கள்

(ரூபாய் கோடிக் கணக்கில்)

| ஆண்டு ஏப்ரல்-மார்ச்ச | மொத்தம் 1 | ரிசர்வ் பாங்க் 2 | மத்திய அரசு 3 | வெளிநாட்டுச் செலாவணிக் கடன்கள் 4 |
|---|---|---|---|---|
| 1953-54 | 0.30 | 0.30 | — | |
| 1954-55 | — | — | — | |
| 1955-56 | 0.61 | 0.61 | — | |
| 1956-57 | 7.07 | 1.07 | 6.00 | |
| 1957-58 | 15.00 | — | 15.00 | |
| 1958-59 | 10.94 | 0.94 | 10.00 | |
| 1959-60 | 9.13 | 0.88 | 8.25 | |
| 1960-61 | 15.76 | 0.51 | 15.25 | — |
| 1961-62 | 17.75 | — | 17.75 | — |
| 1962-63 | 24.85 | — | 23.75 | 1.10 |
| 1963-64 | 34.01 | 1.24 | 29.75 | 3.02 |
| 1964-65 | 43.04 | — | 37.60 | 5.44 |
| 1965-66 | 59.41 | 0.82 | 50.94 | 7.65 |
| 1966-67 | 86.75 | — | 67.69 | 19.06 |
| 1967-68 | 93.86 | 0.86 | 72.69 | 20.31 |
| 1968-69 | 102.22 | — | 81.47 | 20.75 |
| 1969-70 | 101.71 | — | 80.99 | 20.72 |
| 1970-71 | 101.82 | 1.66 | 79.04 | 21.12 |
| 1971-72 | 98.06 | 0.36 | 75.67 | 22.03 |
| 1972-73 | 95.35 | — | 71.35 | 24.00 |
| 1973-74 | 90.46 | — | 67.35 | 23.11 |

**மாநில நிதியக் கூட்டுருக்கள் (State Financial Corporations)**

மாநில நிதியக் கூட்டுருக்கள் சட்டம் (State Financial Corporations Act) 1951 அக்டோபரில் நிறைவேற்றப்பட்டு, 1952 ஆகஸ்டு 1-ல் செயல்முறைக்கு வந்தது. மாநில நிதியக் கூட்டுருக்கள் சட்டத்தை உருவாக்குவதில், ரிசர்வ் பாங்க் ஒரு முக்கியப் பங்கு பெற்றிருந்தது. இச் சட்டப்படி, மாநில அரசுகள், தங்கள் மாநிலங்களில் உள்ள மத்திய, சிறு தொழில்களின் நீண்டகாலக் கடன் தேவைகளை அளிப்பதற்காக, மாநில நிதியக் கூட்டுருவை அமைக்கலாம். தமிழ்நாடு, நாகாலாந்து தவிர, எல்லா மாநிலங்களிலும், மாநில நிதியக் கூட்டுரு ஒன்று உள்ளது. தமிழ் நாட்டில், 1949-ல் நிறுவப்பட்டத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (Tamilnadu industrial investment corporation Limited) மாநில நிதியக் கூட்டுருவின் எல்லாப் பணிகளையும் புரிந்து வருகிறது. டெல்லியிலும், இமாசலப் பிரதேசத்திலும், மாநில நிதியக் கூட்டுரு உள்ளது. மத்திய, மற்றும் சிறுதொழில் களுக்கு மாநில நிதியக் கூட்டுரு, கடன்கள் அளித்தல், பங்குகள், பத்திரங்கள், கடன்பத்திரங்கள் ஆகியவற்றை ஒப்புறுதி செய்தல், இந்தியாவில் முதற் கருவிப் பொருள்கள் (Capital goods) வாங்கியதால் ஏற்பட்ட கடனைத் திருப்பிக் கொடுப்பது பற்றி உறுதி அளித்தல் ஆகிய வழிகளில் உதவி செய்கிறது. பங்குத் தொகை, கொடுத்த கடன்களைத் திருப்பிப் பெறுதல், முதலீட்டினால் ஏற்படும் வருமானங்கள், பத்திரங்களை விற்றல், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுகடன் வசதி பெறுதல், ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியாவிடமிருந்து ஓரளவு கடன்பெறல், பொது மக்களிடமிருந்து வைப்புகள் பெறல், எப்போதாவது மாநில அரசிடமிருந்து கடன்பெறல் ஆகிய வழிகள் மூலம் மாநில நிதியக் கூட்டுரு வேண்டிய நிதியைப் பெறுகிறது.

மாநில நிதியக் கூட்டுருக்கள் செயல்படுவதில், ரிசர்வ் பாங்க் மிகுந்த அக்கறை காட்டுகிறது; மேலும், கீழ்க்கண்ட வழிகளில் உதவிகளையும் செய்கிறது.

1. 1964–ல் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி அமைக்கப் படுவதற்கு முன் ரிசர்வ் பாங்க் சட்டம், பிரிவு 17 (8)-ன் படி, ரிசர்வ் பாங்க், மாநில நிதியக் கூட்டுருக்களின் பங்குகளையும், பத்திரங்களையும் வாங்கி வந்தது.
2. கூட்டுருக்களின் சந்தை நடவடிக்கைகளை அங்கீகரித்தல்.
3. கூட்டுருக்கள் வேலை செய்வதையும், அவற்றின் கணக்குப் புத்தகங்களையும் ஆய்வு செய்தல்.

4. மாநில அரசுகள், நிருவாக இயக்குநர்களை நியமிக்க யோசனை தெரிவித்தால், அதைப் பரிசீலனை செய்தல்.

5. ஒவ்வொரு கூட்டுருவிலும், இயக்குநர் அவையில், ஓர் இயக்குநரை நியமித்தல்.

6. ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டத்தில் கூறப்பட்டுள்ள படி கூட்டுருக்களுக்குக் கடன் கொடுத்தல்.

(1) ரிசர்வ் பாங்க் சட்டம், பிரிவு 17 (4)-ன்படி 90 நாள்களுக்கு அதிகமாகாத குறுகிய காலக் கடன்களை ரிசர்வ் பாங்க் கொடுக்கலாம்.

(2) பிரிவு 17 (4A)—ல் கூறப்பட்டுள்ளபடி மத்திய, மாநில அரசுகளின் ஆவணங்கள் பேரிலும், மாநில அரசால் உத்தரவாதமளிக்கப்பட்டு, 18 திங்கள்களுக்குள் முதிர்வடையும் மாநில நிதியக் கூட்டுருவின் பத்திரங்கள், கடன் பத்திரங்கள் ஆகியவை பேரிலும் கொடுக்கப்பட்ட கடனின் மொத்த அளவு மாநில நிதியக் கூட்டுருவின் செலுத்திய மூலதனத்தில், 60 விழுக்காட்டிற்கு அதிகமாகாத வரை, 18 திங்களுக்கு அதிகமாகாத கடன்களை ரிசர்வ் பாங்க், மாநில நிதியக் கூட்டுருவுக்குக் கொடுக்கலாம்.

17 (2) (bb)-ல் உள்ளபடி, இரண்டு நல்ல கையெழுத்துகளைப் பெற்ற புரோநோட்டு, உண்டியல்களில், ஒரு கையெழுத்து மாநில நிதியக் கூட்டுருவினுடையதாக இருப்பின் அத்தகைய புரோநோட்டு, உண்டியல்களை, ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா மறுதள்ளுபடி செய்யவும், வாங்கவும், விற்கவும் செய்கிறது; ரிசர்வ் பாங்கால் அங்கீகரிக்கப்பட்ட, குடிசை மற்றும் சிறு தொழில்களுக்கு உற்பத்திக் கடனுக்காகவோ விற்பனைக் கடனுக்காகவோ, அப் புரோநோட்டுகளும், உண்டியல்களும் எழுந்திருந்தால், மாநில அரசு வட்டி மற்றும் முதல் திருப்பிக்கொடுப்பது பற்றி உத்தரவாதம் அளித்திருக்க வேண்டும்.

ரிசர்வ் பாங்க், மாநில நிதியக் கூட்டுருக்களுக்கிடையே பல மாநாடுகள் நடத்துவதன் மூலம், மாநில நிதியக் கூட்டுருக்கள், தங்கள் கொள்கைகள், நடவடிக்கைகள் ஆகியவைபற்றிக் கலந்தாலோசிக்க முடிகிறது.

மாநில நிதியக் கூட்டுருக்கள் நகர்ப்புறங்களிலேயே அதிகக் கவனம் செலுத்தி வருகின்றன. பொதுவாக, எல்லாக் கூட்டுருக் களும் தாங்கள் வழங்கிய பெரும்பாலான கடன்களைத் திரும்பப் பெற முடியாத சிக்கல்களைப் பெற்றுள்ளன.

ரிசர்வ் பாங்கும், தொழில்வளர்ச்சி வங்கியும், மாநில நிதியக் கூட்டுருக்களின் பல்வேறு சிக்கல்களைத் தீர்ப்பதிலும், அவற்றின் செயல்திறனைச் செம்மையாக்குவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றன.

இந்தியத் தொழில்நிதிக் கூட்டுருவுக்கும், மாநில நிதியக் கூட்டுருக்களுக்கும் போட்டியிருப்பதாகக் கருதக் கூடாது. தொழில்நிதியக் கூட்டுரு, 20 இலட்ச ரூபாய்க்கு அதிகமான கடன் மனுக்களைக் கவனிக்கிறது. மாநில நிதியக் கூட்டுருக்கள், கம்பெனிகள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைப் பொறுத்த வரை, 20 இலட்ச ரூபாய்க்கு அதிகமாகாத கடன் மனுக்களையும், ஏனையோரின் 10 இலட்ச ரூபாய்க்கு அதிகமாகாத கடன் மனுக் களையும் கவனிக்கின்றன.

**1974 மார்ச்சு இறுதியில்**

மொத்தம் 18 மாநில நிதியக் கூட்டுருக்கள் இருந்தன: அவற்றின் செலுத்திய முதல் 26·32 கோடி ரூபாய். காப்பு நிதி 92 இலட்ச ரூபாய். 115·20 கோடி ரூபாய்க்குப் பத்திரங் களையும் கடன்பத்திரங்களையும் வெளியிட்டிருந்தன. ரிசர்வ் பாங்கிடமிருந்து 4·48 கோடியும், இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கியிடமிருந்து 64·06 கோடியும், மாநில அரசுகளிடமிருந்து 3·39 கோடியும், பிறரிடமிருந்து 71 இலட்ச ரூபாயும் கடனகை வாங்கி இருந்தன. அரசாங்க ஆவணங்களில் 1·38 கோடியும், பங்குகளில் 10·93 கோடியும், கடன், முன்பணம் ஆகியவற்றில் 215·34 கோடியும், கடன்பத்திரங்களில் 57 இலட்சமும், உத்தரவாதம் மற்றும் ஒப்புறுதி அளித்த வகையில் 7·11 கோடி ரூபாயையும் முதலீடு செய்திருந்தன. அனுமதித்த கடன் (Sanctioned loans) 99·68 கோடி ரூபாய்; பட்டுவாடா செய்த கடன் (Disbursed loans) 54·11 கோடி ரூபாய்; வர வேண்டிய மொத்தக் கடன் 215·31 கோடி ரூபாய்.

அட்டவணை 2-ல் குறிப்பிட்டுள்ளபடி, மாநில நிதியக் கூட்டுருக்கள், பல நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ரிசர்வ் பாங்கிடமிருந்து அவ்வள வாகக் கடன் வாங்கவில்லை என்று தெரியவருகிறது.

## அட்டவணை 2

மாநில நிதியக் கூட்டுருக்கள் பெற்ற கடன்கள்

(ரூபாய் கோடிக்கணக்கில்)

| ஆண்டு (ஏப்ரல்-மார்ச்) | ரிசர்வ் பாங்க் | இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி | மாநில அரசு | பிறவகையினர் |
|---|---|---|---|---|
| 1960-61 | 0.13 | | 1.00 | |
| 1961-62 | 0.34 | | 1.02 | |
| 1962-63 | 0.76 | | 2.54 | |
| 1963-64 | 1.61 | | 4.78 | |
| 1964-65 | 2.41 | | 7.88 | |
| 1965-66 | 1.33 | | 11.85 | |
| 1966-67 | 1·78 | | 14.50 | |
| 1967-68 | 2.58 | | 16.88 | |
| 1968-69 | 2.41 | | 23.32 | |
| 1969-70 | 2.57 | 22.38 | 3.01 | 0.47 |
| 1970-71 | 2.39 | 31.56 | 2.08 | 0.11 |
| 1971-72 | 4.68 | 42.96 | 3.28 | 0.49 |
| 1972-73 | 3.99 | 52.79 | 2.58 | 0.50 |
| 1973-74 | 4.48 | 64.06 | 3.39 | 0.71 |

**இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி** (Industrial Development Bank)

தனியார் துறை, பொதுத்துறை ஆகிய இரு துறைகளில் உள்ள தயாரிப்புத் தொழில், போக்குவரத்து, மின்விசை உற்பத்தி, சுரங்கம், அளிப்புத் தொழில் போன்றவைகளுக்கு நிதிவசதி அளிக்க, 1964 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 1 ஆம் நாள், இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி செயல்படத் தொடங்கியது. ஆரம்பத்தில் தனியார் துறையில் உள்ள நிறுவனங்களுக்கு மட்டுமே கடன் வசதி அளித்து வந்தது. 1968-ல் கொண்டுவரப்பட்ட ஏற்றுமதிக்கான நேரடிக் கடன் திட்டத்தின் கீழ், 1968 டிசம்பரிலிருந்து தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் உள்ள ஏற்றுமதியாளர்கள் கடன் பெற முடியும்.

இவ் வங்கியின் உதவி நேரடியாகவும் மற்றும் வங்கிகள், பிற நிதி நிலையங்கள் வழியும் அமையலாம்.

இந்தியத் தொழில்நிதிக் கூட்டுரு, மாநில நிதியக் கூட்டுருக்கள் போன்ற நிறுவனங்களுக்கு மறுகடன் வசதியளித்தல், உத்தரவாதமளித்தல், நீண்டகாலக் கடன் நிதி நிறுவனங்கள் மற்

றும் பிற அறிவிக்கப்பட்ட நிறுவனங்களின் பங்குகள், பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குதல் ஆகிய பணிகளை இவ் வங்கி செய்து வருகிறது.

தொழில் நிறுவனங்களுக்குக் கடனுகவும், முன் கடனுகவும் நேரடி உதவி அளிக்கப்படுகிறது. வங்கிகளோடு சேர்ந்து ஏற்றுமதிக்குத் தேவையான கடன்களை அளித்தல், பங்குகள், பத்திரங்கள் அல்லது கடன் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குதல் அல்லது ஒப்புறுதி செய்தல், தொழில் நிறுவனங்களின் உண்டியல், புரோநோட்டுகள் ஆகியவற்றைத் தள்ளுபடி செய்தல், மறு தள்ளுபடி செய்தல் ஆகிய அதிகாரங்களை இவ் வங்கி பெற்றிருக்கின்றது. இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கிமீது, கடன் அளிப்பதுபற்றி யாதொரு கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை.

**1. அ. மறுநிதி வசதிகள்** (Refinance facilities)

மறுகடன் அளிக்கக் குறைந்த அளவுக் கடன் 2 இலட்சம் ரூபாய். 1970 ஏப்ரலிலிருந்து சிறுதொழில்களுக்குக் குறைந்த அளவு மறுகடன் 10000 ரூபாயாகும். கடன் காலஅளவு குறைந்த அளவு, 3 ஆண்டுகளாக இருக்க வேண்டும். கடனின் உயர்ந்த கால அளவு மாநிலக் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரை, 10 ஆண்டுகளாகவும் நீண்ட காலக் கடன் நிதி நிறுவனங்களைப் பொறுத்தவரை 25 ஆண்டுகளாகவும் உள்ளது.

இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி, பொதுவாகத் தகுதி பெற்ற கடன் அளவில் 80விழுக்காட்டை மறுகடனுகை அளிக்கிறது. ஆனல், கடன் உத்தரவாதத் திட்டத்தின்கீழ் வரும் சிறுதொழில்களுக்கும், பிற தொழில்களுக்கும் 5 இலட்ச ரூபாய் வரை, 100 விழுக்காடு அளவிற்கு மறுகடன் அளிக்கிறது. ஏற்றுமதிக் கடன் உள்பட 1972-73-ல் அளித்த மறுகடன் 33·43 கோடி ரூபாயாகும்.

**1. ஆ. மத்தியக் கால ஏற்றுமதிக் கடன் மறுநிதித் திட்டம்** (Scheme for refinancing of medium-term export credits)

தகுதி பெற்ற வங்கிகள், தாங்கள் ஏற்றுமதியாளருக்குக் கொடுக்கும் மத்திய கால ஏற்றுமதிக் கடன்களின் பேரில், 100 விழுக்காடு அளவிற்கு மறுகடன் வசதிகளைப் பெறலாம். மறுகடன் வசதிக்குத் தகுதிபெறக் கடன் காலஅளவு 6 மாதத்திற்கு அதிகமாகவும், ஆனல் ஐந்து ஆண்டுகளுக்கு அதிகமாகாமலும் இருக்க வேண்டும். (உயர்ந்தபட்சக் கால அளவு 7 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என மாற்றப்படலாம்.) குறைந்தபட்ச ஏற்றுமதிக்

கடன் அளவு ஏதும் நிருணயிக்கப்படவில்லை. மேலும், எந்த ஓர் ஏற்றுமதியாளரும் பெறக்கூடிய ஏற்றுமதிக் கடனுக்கு, உயர்ந்த பட்ச அளவு விதிக்கப்படவில்லை.

2. தொழிலுக்கு நேரடி உதவி (Direct assistance to industry)

தொழில் நிறுவனங்களுக்குக் கடன் கொடுத்தல், கடன்களுக்கு உத்தரவாதமளித்தல், பங்குகள் மற்றும், கடன் பத்திரங்களை ஒப்புறுதி செய்தல் ஆகிய வழிகள்மூலம் இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி நேரடி உதவிசெய்கிறது. அகில இந்தியக் கடன் நிறுவனங்களைக் கலந்தாலோசித்து, பெரிய மற்றும் முக்கியமான தொழில் நிறுவனங்கட்குக் கடன் அளிப்பதோடு மட்டுமல்லாமல் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில்கள், பிற நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெறமுடியாத ஆனால், கடன் பெறத் தகுதிபெற்ற தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் தேவைகளையும், இவ் வங்கி கவனிக்கிறது. 1969 ஜூலைத் திங்களிலிருந்து, மத்திய மற்றும் சிறுதொழில்களுக்குச் சலுகை முறையில், இவ் வங்கி கடனளிக்க முன்வந்தது. இதன்படி வட்டியில் சலுகை, கடன் திருப்பிக் கொடுக்க வேண்டிய கால அளவில் நீட்டிப்பு ஆகியவை அளிக்கப்படுகின்றன. திங்கள்தோறும், இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி கூட்டும் கூட்டங்களின்மூலம் பிரநிதி நிறுவனங்களுடன் (இந்தியத் தொழில்நிதிக் கூட்டுரு, இந்தியத் தொழில் நாணய முதலீட்டுக் கூட்டுரு, ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு, வணிக வங்கிகள்) நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக் கொள்கிறது. ஏற்றுமதிக்கு அளித்த நேரடி உதவி உள்பட, தொழில் நிறுவனங்களுக்கு 1972–73-ல் அளித்த நேரடிக் கடன் உதவி 57.22 கோடி ரூபாய் ஆகும்.

3. ஏற்றுமதிகளுக்கு நேரடி நிதி உதவி (Direct finance for exports)

ஏற்றுமதி செய்யும் தொழில் நிறுவனங்களுக்குத் தகுதி பெற்ற வணிக வங்கிகளும், இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கியும் கூட்டுச் சேர்ந்து கடன் வசதிகளையும் உத்தரவாத வசதிகளையும் 1968ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 6ஆம் நாளிலிருந்து அளிக்கின்றன. வெளிநாட்டுச் செலாவணியில் பங்கேற்கத் தகுதிபெற்ற எல்லா உரிமம் பெற்ற அட்டவணையிலிட்ட வங்கிகளும், இத் திட்டத்தில் பங்கேற்கலாம். ஏற்றுமதி செய்வதற்கு முன்னரும் பின்னரும் கடன் வசதி அளிக்கப்படுகிறது.

4. மறுதள்ளுபடி உதவி (Rediscount assistance)

மறு தள்ளுபடி உதவித் திட்டத்தின்கீழ், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, உள்நாட்டு இயந்திரங்களை விற்பதன்மூலம் எழக்

கூடிய உண்டியல்களையும், புரோநோட்டுகளையும், மறு தள்ளுபடி செய்கிறது. 1965 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள்முதல் இயந்திரங்கள் வாங்குவோர்க்கு இந்திய இயந்திர உற்பத்தியாளர் களுக்குப் பின்னல் செலுத்தும் (Deferred payment) வசதிகளை அளித்துவருகிறது. இத் திட்டத்தின்படி, இயந்திர உற்பத்தியாளர் களால் அல்லது இயந்திர உற்பத்தியாளர்கள் மீது எழுதப்பட்ட உண்டியல்களையும், புரோநோட்டுகளையும் வங்கிகள் கழிவு செய்து, பின்னர் அவற்றை இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கியிடம், அவ் வப்போது நிருணயிக்கப்படும் தள்ளுபடி வீதத்தில், மறு தள்ளுபடி செய்து கொள்ளுகின்றன. ஆனல் வங்கிகளின் தள்ளுபடி வீதம், இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கியின் மறுதள்ளுபடி வீதத்திற்கு 1 விழுக்காட்டுக்கு அதிகமாக இருக்கக் கூடாது. பின் செலுத்துதல் கால அளவு குறைந்தபட்சம் 6 திங்களும் அதிகப் பட்சம் 7 ஆண்டு களும் ஆகும்.

இத் திட்டத்தின்கீழ், தனியார் துறையில் இயந்திரம் வாங்கிப் பயன்படுத்துவோர்க்கு மட்டுமே, முதலில் நிதி உதவி அளிக்கப்பட்டது. 1969ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 9ஆம் நாளிலிருந்து, பொதுத்துறையில் இயந்திரம் வாங்கிப் பயன்படுத்துவோர்க்கும், அரசாங்கக் கம்பெனிகளுக்கும், இத் திட்டத்தின்கீழ் உதவி அளிக்கப்படுகிறது.

1967 ஆம் ஆண்டு, செப்டம்பர்த் திங்களிலிருந்து, தனியார் துறையில், சாலைப் போக்குவரத்தில் ஈடுபட்டிருப்போர் மோட்டார் வாகனங்களை வாங்குவதால் எழக்கூடிய உண்டியல்களை மறுதள்ளு படி செய்வதற்குத் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. குறைந்த அளவுத்தொகை, ஒரு நடவடிக்கைக்கு 10,000 ரூபாய் என நிருணயிக்கப்பட்டுள்ளது. 1972–73-ல், மறுதள்ளுபடி செய்யப்பட்ட மாற்று உண்டியல்களில் மதிப்பு 49.84 கோடி ரூபாய் ஆகும்.

### வளர்ச்சி உதவி நிதி (Development Assistance Fund)

இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி, 1965ஆம் ஆண்டு மார்ச் திங்கள், வளர்ச்சி உதவி நிதியை ஏற்படுத்தியது. மத்திய அரசின் முன் அனுமதியின் பேரில் இந் நிதியிலிருந்து, பிற நிதி நிறுவனங்கள் தேவையான நிதியைக் கொடுக்க இயலாத தொழில்களுக்குத் தொழில்வளர்ச்சி வங்கி நிதிவசதியளிக்கிறது.

இவ் வங்கியின் அனுமதித்த மூலதனம் 50 கோடி ரூபாயாகும். இது,100 கோடி ரூபாயாக மத்திய அரசின் முன்அனுமதியின்பேரில் மாற்றப்படலாம். தொடக்கத்தில், இந்தியத் தொழில்வளர்ச்சி

வங்கியின் செலுத்திய மூலதனமான 10 கோடி ரூபாயை ரிசர்வ் பாங்க் பெற்றிருந்தது. 1967 ஆம் ஆண்டு இத் தொகை 20 கோடியாக உயர்த்தப்பட்டது. இதைத் தவிர, இத் தொழில்வளர்ச்சி வங்கி, முக்கியமாக, மத்திய அரசிடமிருந்தும், ரிசர்வ் பாங்கிடமிருந்தும் கடன் வசதிகளைப் பெறுகிறது. ரிசர்வ் பாங்க், இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கிக்கு, தேசியத் தொழில் கடன் (நீண்ட கால நடவடிக்கை) நிதி [National Industrial Credit (Long Term Operations) Fund] யிலிருந்து கடன் கொடுக்கிறது. இந் நிதி, 1964ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஏற்படுத்தப்பட்டது; ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 46C-ன்கீழ் ரிசர்வ் பாங்க் 10 கோடி ரூபாய் செலுத்தியது. ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் பிரிவு 46C, பிரிவு 17(4G) ஆகியவற்றின்படி, ரிசர்வ் பாங்க், இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கியின் பத்திரங்கள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காகவும், பிற நிதி நிறுவனங்களின் பங்குகள், பத்திரங்கள் அல்லது கடன் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காக இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கிக்குக் கடன் கொடுக்கவும் அல்லது இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கியின் பிற வியாபாரங்களுக்காகவும் இந் நிதி பயன்படுத்தப்படுகிறது.

ரிசர்வ் பாங்கிடமிருந்து, இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி, கீழ்க்கண்ட முறையில் கடன் பெறலாம்:

1. டிரஸ்டி ஆவணங்கள் மீது, 90 நாள்களுக்கு அதிகமாகாத கால அளவிற்கும்.

2. பிரிவு 17(4A) ரிசர்வ் பாங்க் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி, உண்மையான வியாபார் நடவடிக்கைகளால் எழும் உண்டியல்கள் அல்லது புரோநோட்டுகள், இரண்டு அல்லது அதற்கு அதிகமான கையொப்பங்களைப் பெற்றிருந்து 5 ஆண்டுகளுக்குள் முதிர்வடைவதாக இருப்பின், அவற்றின் மீதும் கடன் வாங்கலாம்.

மத்திய அரசின் உத்தரவாதத்துடனோ அல்லது உத்தரவாதம் இல்லாமலோ, பத்திரங்கள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றை விற்கலாம்.

12 திங்களுக்குக் குறையாத கால அளவிற்கு, வைப்புகளைப் பெறலாம். மத்திய அரசின் முன்அனுமதி பெற்று, வெளிநாட்டுச் செலாவணிக் கடன்களை, வெளிநாட்டு வங்கிகள் அல்லது நிறுவனங்களிடமிருந்து பெறலாம்.

இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி, தனது வருமானம், இலாபம் ஆகியவை மீது யாதொரு வரியும் கொடுக்க வேண்டிய தில்லை.

இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கியின் நிருவாகம், ரிசர்வ் பாங்கின் இயக்குநர் அவையால் நடத்தப்படுகிறது. ரிசர்வ் பாங்கின் மத்திய அவையில் முன்னால் 15 பேர் இருந்தனர். இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி அமைக்கப்பட்ட பிறகு, மத்திய அவையில் உள்ள இயக்குநர்களின் எண்ணிக்கை, 20-க்கு உயர்த்தப் பட்டது. மத்திய அவையின் ஆளுநரே தலைவராகவும், உதவி ஆளுநரே உதவித் தலைவராகவும் இருந்தனர். மத்திய அவையின் தலைவர். துணைத்தலைவர் உட்பட 10 இயக்குநர்களைக் கொண்ட ஒரு செயற்குழு, இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கியின் வழக்க மான வியாபார அலுவல்களைக் கவனிக்க ஏற்படுத்தப்பட்டது. வேறு காரணங்களுக்காகவும், மேலும் தேவைப்படும் குழுக்களை மத்தியஅவை அமைக்கலாம். இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கியின் தலைமை அலுவலகம் பம்பாயிலும், வட்டார அலுவலகங்கள் கல்கத்தா, புதுடில்லி, சென்னை ஆகிய இடங்களிலும் உள்ளன. அட்டவணை 3-ல் தரப்பட்டுள்ள புள்ளிவிவரங்களைப் பார்க்கும் போது ரிசர்வ் பாங்கைவிட மத்திய அரசிடமிருந்தே, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி அதிகமான கடன்களைப் பெற்று வந்துள் ளது என்பது தெரிகிறது. 1969-70-லிருந்து ரிசர்வ் பாங்க் அதிகக் கடன் வசதிகளை அளித்து வருகிறது.

## அட்டவணை 3

இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி பெற்ற கடன்கள்

(ரூபாய் கோடிக்கணக்கில்)

| ஆண்டு (ஜூன் இறுதியில்) | ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியாவிடமிருந்து | மத்திய அரசிடமிருந்து |
|---|---|---|
| 1965 | 2·17 | 55·00 |
| 1966 | 3·84 | 92·90 |
| 1967 | 5·24 | 127·50 |
| 1968 | 6·09 | 152·50 |
| 1969 | 6·27 | 177·50 |
| 1970 | 26·27 | 176·79 |
| 1971 | 55·04 | 173·09 |
| 1972 | 92·82 | 166·51 |
| 1973 | 129·09 | 157·63 |
| 1974 | 198·70 | 145·76 |

**1974 மார்ச்சு இறுதியில்**

செலுத்திய முதல் 50 கோடி ரூபாய். காப்பு நிதியில் 25·40 கோடி ரூபாய் இருந்தது. பத்திரங்களும், கடன் பத்திரங்களும் விற்றுப் பெற்ற தொகை 28·69 கோடி ரூபாய். வாங்கிய மொத்தக் கடன் 312·09 கோடி ரூபாய். இதில் 154·46 கோடி ரூபாய் ரிசர்வ் பாங்கிடமிருந்தும், 157·63 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்தும் பெற்ற கடன்களாகும். அரசாங்க ஆவணங்களில் 8·71 கோடி ரூபாயும், பங்குகளிலும் பங்குத் தொகுப்புகளிலும், 35·29 கோடி ரூபாயும், பத்திரங்கள் மற்றும் கடன் பத்திரங்களில் 27·97கோடி ரூபாயும் முதலீடு செய்திருந்தது. மொத்தம் அளித்த கடனும், முன் பணமும் 228·91 கோடி ரூபாய். தள்ளுபடி அல்லது மறுதள்ளுபடி செய்த மாற்று உண்டியல்கள், புரோநோட்டுகள் ஆகியவற்றின் மதிப்பு 136·45 கோடி ரூபாய். உத்தரவாதம் மற்றும் ஒப்புறுதி அளித்த வகையில் 48·67 கோடி ரூபாய்.

1974 சூன் திங்கள் இறுதியில், மொத்தம் அனுமதித்த கடன் (Sanctioned loans) 230·6 கோடி ரூபாய். இது 1972-73-ல் அனுமதித்த கடனை 136.8 கோடி ரூபாயைவிட 69 விழுக்காடு அதிகம். 1973-74-ல் ஒப்புதல் அளித்த மனுக்களின் எண்ணிக்கை 3702 ஆகும். பட்டுவாடா செய்த தொகை 161·8 கோடி ரூபாய். இது 1972-73 அளவைவிட 52 விழுக்காடு அதிகம். இப் புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது, 1974 சூன் திங்களோடு பத்து ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கியின் வளர்ச்சி ஊக்கமளிப்பதாகவும் நிறைவூட்டுவதாகவும் உள்ளது.

1964 சூலைத் திங்களில், இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி தொடங்கப்பட்டதிலிருந்து 1974 சூன் முடிய அனுமதித்த மொத்தக் கடன் 982·5 கோடி ரூபாய் ஆகும் (உத்தரவாதம் அளித்த 28·5 கோடி ரூபாய் நீங்கலாக). பயன்படுத்தப்பட்ட தொகை (Utilised amount) 726·3 கோடி ரூபாய் ஆகும்.

**ரிசர்வ் பாங்கின் கடன் உதவி பற்றிய புள்ளிவிவரங்கள்**

இந்தியத் தொழில்நிதிக் கூட்டுரு, மாநில நிதியக் கூட்டுருக்கள், இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி ஆகியவற்றிற்கு ரிசர்வ் பாங்க் அளித்த நீண்ட, மத்திய மற்றும் குறுகிய காலக் கடன்கள் அட்டவணை 4-ல் தரப்பட்டுள்ளன.

# அட்டவணை 4

## ரிசர்வ் பாங்கும் தொழிற்கடனும்

ரூபாய் இலட்சக்கணக்கில்

| ஆண்டு | நீண்டகாலக் கடன் | | | | | | | | மத்தியக்காலக் கடன் | குறுகியகாலக் கடன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொழில்நிதிக் கூட்டுரு | | மாநிலநிதியக் கூட்டுரு | | தொழில்வளர்ச்சி வங்கி | | | | | |
| ஏப்ரல்-மார்ச் | பங்குகள் | பத்திரங்கள் | பங்குகள் | பத்திரங்கள் | பங்குகள் | பத்திரங்கள் | பிறவகையில் | தொழில் நிதிக் கூட்டுருவுக்கு ரி. பா. சட்டம் பிரிவு 17(4B)(b) | மாநிலநிதியக் கூட்டுருக்களுக்கு ரி. பா. சட்டம் பிரிவு 17 (4A) | மாநிலநிதியக் கூட்டுருக்களுக்கு ரி. பா. சட்டம் பிரிவு 17 (4)(a) |
| 1953-54 | 102.70 | 200 | 87.50 | — | | | | — | | |
| 1957-58 | 102.70 | 200 | 200 | 3.24 | | | | — | | 2.50 |
| 1961-62 | 142.70 | 200 | 245 | 6.75 | | | | — | | 34.00 |
| 1962-63 | 142.70 | 220 | 243 | 18.75 | | | | — | 5 | 71.33 |
| 1963-64 | 142.70 | 220 | 243 | 18.75 | | | | 124 | 94 | 63.65 |
| 1964-65 | | 220 | 243 | 20.85 | 1000 | — | 124.93 | — | 191 | 52.10 |
| 1965-66 | | 220 | 243 | 20.85 | 1000 | — | 308.87 | 82 | 77 | 51.69 |
| 1966-67 | | 220 | 243 | 20.85 | 1000 | — | 517.90 | — | 132 | 50.05 |
| 1967-68 | | 220 | 243 | 20.85 | 2000 | — | 597.38 | 86 | 180 | 76.05 |
| 1968-69 | | 220 | 243 | 17.85 | 2000 | — | 626.71 | — | 222 | 24.00 |
| 1969-70 | | 220 | 243 | 18.00 | 2000 | — | 627.00 | — | 222 | 29.00 |
| 1970-71 | | 220 | 243 | 18.00 | 3000 | — | 2984.00 | 166 | 172 | 71.00 |
| 1971-72 | | 220 | 243 | 2.00 | 4000 | — | 7833.00 | 205 | 443 | 42.00 |
| 1972-73 | | 220 | 243 | 2.00 | 4000 | — | 9527.00 | — | 388 | 42.00 |
| 1973-74 | | 220 | 243 | 2.00 | 5000 | — | 15444.00 | 40 | 462 | 2.00 |

### வங்கிகளும் தொழிற்கடனும்

இந்திய வணிக வங்கிகள் தொழில்களுக்கு மத்திய காலக் கடன் கொடுப்பதுபற்றி, அவ்வப்போது கருத்துகள் பரிமாறப் பட்டு வந்திருக்கின்றன. இந்திய மைய வங்கி விசாரணைக்குழு (Indian Central Banking Enquiry Committee) வணிக வங்கிகள் நீண்டகாலக் கடன் கொடுப்பதை விரும்பவில்லை. 1954-ல் தனியார் துறைக்கான நிதிக்குழு (Committee on finance for private sector) மத்தியகால மற்றும் நீண்டகாலக் கடன்கள் அளிக்க மறைமுகமாக (indirectly) வங்கிகள் பங்குபெற வேண்டும் என்று கூறியது. 1953-ல் பன்னாட்டு நாணயநிதித் தூதுக்குழுவும் இக் கருத்தையே தெரிவித்தது. மறுநிதிக் கூட்டுரு (தனியார்துறை, வரையறுக்கப்பட்டது) கம்பெனிகள் சட்டம் 1956-ன்கீழ்ப் பதிவு செய்யப்பட்டு, 1958 ஜூன் திங்களில் நிறுவப்பட்டது. 1964-ல், இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கியால், மறுநிதிக் கூட்டுரு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந் நிறுவனம் 1964 வரை வங்கிகள் கொடுத்த மத்தியகாலக் கடன்களின் பேரில், மறுகடன் வசதிகள் அளித்து வந்தது. தற்போது மிகவும் பரந்த முறையில் இப் பணிகளை இந்தியத் தொழில்வளர்ச்சி வங்கி செய்து வருகிறது.

### சிறுதொழில்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டம்(Credit guarantee scheme)

இந்தியப் பொருளாதாரத்தில், சிறுதொழில்களின் பங்கை மிகைப்படுத்த வேண்டிய அவசியமில்லை. பெரும்பாலும், சிறு தொழில்கள், தனி நபராலோ அல்லது கூட்டுறவு முறையிலோ நடைபெறுகின்றன. இச் சிறுதொழில்களுக்குத் தேவையான அளவுக்கு நிதி வசதியளிக்க, யாவரும் நீண்டகாலமாகத் தயங்கினர். கடன் பெற எல்லாத் தகுதிகளையும் பெற்றிருக்கவில்லை என்பது உண்மையாகவே இருக்கலாம். வங்கிகள்கூடச் சிறு தொழில்களுக்குக் கடன் கொடுத்தால், தாங்கள் கொடுக்கும் கடனுக்கே ஆபத்து ஏற்படும் என்று எண்ணி, நீண்ட காலமாகச் சிறுதொழில்களைப் புறக்கணித்து வந்தன. வங்கிகள்மீது கொண்டு வரப்பட்ட சமுதாயக் கட்டுப்பாடு (Social control) கூட, அவ்வளவு வெற்றியடையவில்லை. 1959-ல், ரிசர்வ் பாங்க் முயற்சியினால் ஹைதராபாத்தில் நடைபெற்ற சிறுதொழில்களுக்குக் கடன் அளிப்பது பற்றிய மாநாட்டில், சிறுதொழில்களுக்குக் கடன் கொடுப்பதால் ஏற்படும் நட்டத்தை வேறு யாரேனும் பங்கேற்க முன் வருவாராயின், மேன்மேலும், சிறுதொழில்களுக்குக் கடன் கொடுக்கலாம் என்று கூறப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு தான், இந்திய அரசு, ரிசர்வ் பாங்கைக் கலந்தாலோசித்து, 1960

சூலையில், சிறுதொழில்களுக்கு வங்கிகளும், பிற நிறுவனங்களும் அளிக்கும் கடன்பற்றி உத்தரவாதம் அளிக்கவே கடன் உத்தர வாதத் திட்டத்தைக்(Credit guarantee scheme) கொண்டுவந்தது. ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17 (11A)-ன்படி, ரிசர்வ் பாங்க் மத்திய அரசின் முகவராகப் பணியாற்றுவதால், ரிசர்வ் பாங்க் இத் திட்டத்தைச் செயல்படுத்துமாறு மத்திய அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும், ரிசர்வ் பாங்கே இத் திட்டத்தின்கீழ் 'உத்தரவாதமளிக்கும்' நிறுவனமாகும் (Guarantee Organisation). ஆரம்பத்தில், தேர்ந்து எடுக்கப்பட்ட இருபத்து இரண்டு மாவட்டங்களில் மட்டுமே இத் திட்டம் அமல் படுத்தப்பட்டது. இத் திட்டம், 1963 சனவரியில், நாடு முழுவதும் நீட்டிக்கப்பட்டது. மேலும், இத் திட்டம் தேவைக்குத் தகுந் தாற்போல் அவ்வப்போது தளர்த்தப்பட்டுள்ளது.

அட்டவணையிலிட்ட வங்கிகள், அட்டவணையிலிடப் படாத வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், சில நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற் றுக்கு இத் திட்டத்தின்கீழ் வசதிகள் அளிக்கப்படுகின்றன. பொருள்களை உற்பத்தி செய்தல், பாதுகாத்தல் ஆகிய வற்றில் ஈடுபட்டிருக்கும் சிறு தொழில்களுக்குத்தான் கடன் வசதியே தவிர, முழுமையாக வியாபாரத்தில் ஈடுபடும் பிற சிறு தொழில்களுக்கு இல்லை. இத் திட்டத்தின்படி, இயந்திர சாதனங் களில் $7\frac{1}{2}$ இலட்ச ரூபாய்க்கு அதிகமில்லாத முதலீடு செய்யப்பட்ட தொழிலே, சிறு தொழிலாகக் கருதப்படும். எல்லாவிதக் கடன் வசதிகளும் (கடன்கள், ரொக்கக் கடன்கள், மேல்வரைப் பற்றுகள், உத்தரவாதத்தின்மீது கொடுக்கப்படும் கடன்கள், பின் செலுத்தல் கடன்கள்) அளிக்கப்படுகின்றன. சிறுதொழில்களுக்குக் கடன் கொடுத்த நிறுவனம், கடனைத் திரும்பப் பெற முடியாதபோது, எவ்வளவு கடன்தொகை திரும்பப் பெற வேண்டுமோ அதில் 75 விழுக்காடோ அல்லது உத்தரவாதம் அளிக்கப்பட்ட தொகை, இவை இரண்டில் எது குறைவோ, அதை ரிசர்வ் பாங்கி டமிருந்து பெறலாம். உயர்ந்தஅளவுக் கடன் அளவு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால் ரிசர்வ் பாங்கிடமிருந்து பெறக் கூடிய நட்டத்தொகை, ஒவ்வோர் உத்தரவாதத்திற்கும் ஒவ் வொரு கடனாளியைப் பொறுத்தவரை, நடைமுறை மூலதனக் கடனைப் பொறுத்தவரை $7\frac{1}{2}$ இலட்ச ரூபாயும், நீண்டகாலக் கடனைப் பொறுத்தவரை $2\frac{1}{2}$ இலட்ச ரூபாயும் ஆகும்.

கடன் அளிக்கும் நிறுவனம், தான் சிறுதொழில்களுக்குக் கொடுத்த தகுதி பெற்ற எல்லாக் கடன்களுக்கும், ரிசர்வ்பாங்கிடம் உத்தரவாத ஒப்பந்தம் செய்துகொள்ளலாம்.

இந்த உத்தரவாதத் திட்டத்தின்கீழ், அட்டவணையிலிட்ட வங்கிகள் மேலும் பயனடைய, ரிசர்வ் பாங்கும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியும் பல ஊக்கங்களை (Inducements) அளித்திருக்கின்றன. சிறுதொழில்களுக்கு அளிக்கப்படும் குறுகிய காலக் கடன்கள் பேரில் ரிசர்வ் பாங்க், பாங்க் வீதத்தில் மறுநிதி வசதி அளிக்கிறது. 1968 மார்ச் திங்களிலிருந்து, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி மறுநிதி வசதிகளை $4\frac{1}{2}$ விழுக்காட்டில் அளிக்கிறது. ஆனால், கடன் நிறுவனங்களின் கடன்வீதம் 8 விழுக்காட்டுக்கு அதிகமாக இருக்கக்கூடாது. 1968 ஏப்ரலில் மறுகடனுக்குத் தகுதி பெற்ற குறைந்தபட்சக் கடன் அளவு ரூபாய், ஓர் இலட்சத்திற்கு 20,000 ரூபாயாகவும், 1970 ஏப்ரலில் குறைந்தபட்சக் கடன் அளவு 10,000 ரூபாயாகவும் அளிக்கப்பட்டது. மறுகடன் வசதி 100 விழுக்காடு அளவுக்குக் (முன்னால் 80 விழுக்காடு) கொடுக்கப்படுகிறது.

1974 மார்ச் இறுதியில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட தொகை 1395.92 கோடி ரூபாய். தவணைமுடிவில் திருப்பித் தராத கடன்களின் எண்ணிக்கை 9582 ஆகவும், கடன்தொகை 28.73 கோடி ரூபாயாகவும் இருந்தன. இத் திட்டத்தின்கீழ் கொடுத்த கோருரிமைகளின் (claims) எண்ணிக்கை 808 ஆகவும், தொகை 90 இலட்ச ரூபாயாகவும் இருந்தது.

### யூனிட் டிரஸ்ட் (Unit Trust of India)

யூனிட் டிரஸ்ட், 1964 பிப்ரவரியில் அமைக்கப்படுவதில், ரிசர்வ் பாங்க் முக்கியப் பங்கேற்றிருந்தது. யூனிட் டிரஸ்ட் 1964 ஜூலையில் செயல்படத் தொடங்கியது. நடுத்தர வருமானம் உடைய சிறு முதலீடு செய்வோர்க்குப் பாதுகாப்பான முதலீடு செய்ய, வசதிகளை ஏற்படுத்தித் தருவதே யூனிட் டிரஸ்டின் நோக்கமாகும், இவ் வசதிகளை அளிப்பதனால் நாட்டின் சேமிப்பைச் சேகரிப்பதோடல்லாமல், கிடைக்கக்கூடிய மூலதனம் நல்வழியில் பயன்படுத்தப்படுவதையும் யூனிட் டிரஸ்ட் உறுதி செய்கிறது. யூனிட்டுகள் விற்பதன்மூலம், யூனிட் டிரஸ்ட் நாட்டின் சேமிப்பை ஒன்றுகத் திரட்டுகிறது. பலதரப்பட்ட கம்பெனிகளின் பங்குகள், கடன்பத்திரங்கள் ஆகியவற்றில் செய்த முதலீடுகளே யூனிட் டிரஸ்டின் சொத்தாகும். சிறு முதலீடு செய்வோர்க்குக் கீழ்க்கண்ட நன்மைகளை யூனிட் டிரஸ்ட் அளிக்கிறது. 1. நிதியானது சீரான வழியில் பரந்த முறையில் முதலீடு செய்யப்படுவதால் குறைந்த நட்டப் பயம் (less risk), 2. நிபுணர்கள் நிருவாகத்தால் ஏற்படக்கூடிய நன்மை, 3. சீரான வருமானம், 4. யூனிட் டிரஸ்ட் எப்போதும் யூனிட்டுகளை வாங்கத் தயாராக இருப்பதால் யூனிட்டுகள் ரொக்கத் தன்மையுடையனவாக இருக்கின்றன.

யூனிட் டிரஸ்டின் மூலதனம், 5 கோடி ரூபாய். அத்தொகையில் 2.5 கோடி ரூபாய் ரிசர்வ் பாங்காலும், 75 இலட்ச ரூபாய் ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவாலும், 75 இலட்ச ரூபாய் ஸ்டேட் பாங்காலும், 1 கோடி ரூபாய் அட்டவணையிலிட்ட வங்கிகளாலும் பிற நிதி நிறுவனங்களாலும் செலுத்தப்பட்டவை ஆகும்.

ரிசர்வ் பாங்க், பிற வங்கிகள், கடன் நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து யூனிட் டிரஸ்ட் கடன் பெறலாம். ரிசர்வ் பாங்கிடமிருந்து, யூனிட் டிரஸ்ட், கீழ்க்கண்ட கடன்களைப் பெறலாம்:

1. பொறுப்புரிமையர் முதலீடு செய்யத்தக்க ஆவணங்கள் மீது 90 நாள்களுக்கு அதிகப்படாத கடன்

2. மத்திய அரசின் அனுமதியுடனும் உத்தரவாதத்துடனும் கடன் பெறுவதற்காகவே வெளியிடப்பட்ட யூனிட் டிரஸ்ட் பத்திரங்கள் மீது 18 திங்களுக்கு அதிகப்படாத கடன்கள்

3. ரிசர்வ் பாங்கால் குறிப்பிடப்படும் பிற சொத்துகளின் பேரிலும், ரிசர்வ் பாங்க் இடும் நிபந்தனைகளின் பேரிலும், ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் பிரிவு 17(4BBB)-ல் கூறப்பட்டுள்ளன. யூனிட் திட்டம் அல்லாத பிற யூனிட் திட்டங்களின்கீழ், எந்த ஒரு சமயத்திலும், யூனிட் டிரஸ்ட் வாங்கக்கூடிய கடன், அத்தகைய ஒவ்வொரு திட்டத்தின்படியும் 5 கோடி ரூபாய்க்கு அதிகமாகக் கூடாது; எல்லாத் திட்டங்களின்படி, மொத்தத்தில் 10 கோடி ரூபாய்க்கு அதிகமாகக் கூடாது;

யூனிட் டிரஸ்ட்டின் நிருவாகம் பொறுப்புரிமையர்கள் (Trustees) உடைய ஓர் அவையால் (Board) நடத்தப்படுகிறது. இந்த அவையில் ரிசர்வ் பாங்கால் நியமிக்கப்படும் தலைவர் மற்றும் வாணிபம், தொழில், வங்கியியல், நிதியியல், முதலீடு ஆகியவற்றில் தேர்ந்த அறிவு படைத்த நான்கு பொறுப்புரிமையரும், ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவால் நியமிக்கப்படும் ஒரு பொறுப்புரிமையரும், ஸ்டேட் பாங்கால் நியமிக்கப்படும் ஒரு பொறுப்புரிமையரும், பிற நிறுவனங்களால் நியமிக்கப்படும் இரண்டு பொறுப்புரிமையரும் உள்ளனர். ரிசர்வ் பாங்க் ஒரு நிறைவேற்றும் பொறுப்புரிமையரையும் (Executive trustee) நியமிக்கிறது.

பொதுமக்கள் சம்பந்தப்பட்ட கொள்கைகளைப் பொறுத்த வரை ரிசர்வ் பாங்க், யூனிட் டிரஸ்ட்டுக்குத் தன் அறிவுரைகளை வழங்க அதிகாரம் பெற்றிருக்கிறது.

யூனிட் டிரஸ்ட் முதலீடு செய்வது பற்றிச் சில விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

யூனிட் டிரஸ்ட், யூனிட் திட்டத்தில் 5 விழுக்காட்டுக்குமேல் எந்த ஒரு கம்பெனியிலோ குறிப்பிட்ட கம்பெனியிலோ வெளியிடும் ஆவணங்களில் 15 விழுக்காடு, இவ் விரண்டில் எது குறைவோ, அதற்குமேல் முதலீடு செய்யலாகாது. புதுத்தொழில் நிறுவனங்களின் ஆரம்ப விற்பனைகளில், யூனிட் திட்ட நிதியில் 5 விழுக்காட்டுக்குமேல் முதலீடு செய்யலாகாது. யூனிட் திட்டத்தின் (1964) கீழ், மூலதனத்தால் ஏற்படும் வருமானத்தையும், செலவினங்களையும் ஆரம்ப மூலதனம் (பல நிறுவனங்களால் செலுத்தப்பட்டது), யூனிட் டிரஸ்ட் மூலதனம் (யூனிட் விற்பனையால் எழுந்தது) ஆகியவற்றுக்கு இடையே தக்க அளவில் ஒதுக்கப்படுகிறது. நிருவாகச் செலவுகளை (வட்டி தவிர) மொத்த வருமானத்தில் உயர்ந்த அளவு 5 விழுக்காட்டுக்குக் கட்டுப்படுத்த வேண்டும். 5 விழுக்காட்டுச் செலவு, யூனிட் டிரஸ்ட் மூலதனத்திற்கு ஒதுக்கப்படுகிறது. 5 விழுக்காட்டுக்குமேல் அதிகம் உள்ள செலவுகள், ஆரம்ப மூலதனத்திற்கு ஒதுக்கப்படுகின்றன. குறிப்பிடத்தக்க சிறப்பு என்னவெனில், யூனிட் திட்டப்படி, வருமானத்தில் குறைந்தது 90 விழுக்காட்டை, (யூனிட் மூலதனத்திற்கு ஒதுக்கப்பட்ட நிருவாக மற்றும் பிற செலவினங்கள் போக), யூனிட்தாரர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

யூனிட் டிரஸ்ட் தனது இலாபம், வருமானம் ஆகியவற்றின் மீது யாதொரு வரியும் கொடுக்கவேண்டியதில்லை. மேலும், யூனிட் டிரஸ்ட் பெறவேண்டிய இலாப ஈவுத்தொகை மற்றும் வட்டித் தொகையை யாதொரு வரிக்குறைப்பும் இல்லாமல் பெறலாம். யூனிட்தாரர்கள் தனி ஆளாயிருந்தால் (individuals) யூனிட் டிரஸ்ட்டிடமிருந்து பெறக்கூடிய 1000 ரூபாய் வருமானத்திற்கு, வருமானவரி விலக்கு 1970-71 வரை அளிக்கப்பட்டது. 1971-72-லிருந்து யூனிட் டிரஸ்ட், இந்தியக் கம்பெனிகளின் பங்குகள், பிறநாட்டு ஆவணங்கள், கிராமியக் கடன்பத்திரங்கள், கூட்டுறவு வங்கிகள், நிறுவனங்களின் வைப்புகள், சிறு சேமிப்புத் திட்ட அஞ்சலக வைப்புக் கணக்குகள் ஆகியவற்றில் முதலீடு செய்வதால் வரும் வருமானங்களுக்கு 3000 ரூபாய் வரை வருமானவரி விலக்கு அளித்துள்ளது.

யூனிட் டிரஸ்ட் இந்தியாவிலுள்ள யூனிட்தாரர்களுக்கு எந்த ஒரு வரிப்பிடித்தமும் இன்றி வருமானத்தைக் கொடுக்கிறது. யூனிட்தாரர் இந்தியாவில் இல்லாது (Non-resident) 3000 ரூபாய்க்கு அதிகமாக வருமானம் பெற்ருல், யூனிட் டிரஸ்ட் 15 விழுக்காடுவரை பிடித்தம் செய்கிறது.

1973-74-ல் 30·30 கோடி ரூபாய் மதிப்புள்ள யூனிட்டுகள் 1,00,069 மனுக்களின்பேரில் விற்கப்பட்டிருந்தன. 3·69 கோடி ரூபாய் மதிப்புள்ள யூனிட்டுகள் 13,979 மனுக்களுக்காக, யூனிட் டிரஸ்டால் திருப்பி வாங்கப்பட்டன. 1974 ஜூன் திங்கள் இறுதியில் கொடுக்கப்பட வேண்டிய 5:92 கோடி மனுக்களின் யூனிட் மதிப்புத் தொகை 151·52 கோடி ரூபாய் ஆகும். யூனிட் டிரஸ்டின் மறுமுதலீட்டுத் திட்டத்தின் (Reinvestment Plan) கீழ் மறுமுதலீடு செய்யப்பட்ட தொகை 117·95 இலட்ச ரூபாயாகும். 1974 ஜூன் 30ஆம் நாள்வரை, 2764 பேர் யூனிட் இணைந்த காப்பீட்டுத் திட்டத்தில் (Unit linked Insurance Scheme) சேர்ந்திருந்தனர். 1973-74 முடிவில் முதலீட்டின் மதிப்பு, 172 கோடி ரூபாய் ஆகும். சாதாரணப் பங்குகளில் 76 கோடி ரூபாயும், சலுகைப் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றில் 70 கோடி ரூபாயும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. 1973-74-ல் யூனிட் டிரஸ்டின் மொத்த வருமானம், 13·83 கோடி ரூபாய் ஆகும். (1972-73-ல் 11·79 கோடி ரூபாய்); செலவுகள் போக யூனிட்தாரர்களுக்குக் கொடுக்கவேண்டிய தொகை 12·87 கோடி ரூபாய் ஆகும் (1972-73-ல் 10·77 கோடி ரூபாய்). சென்ற ஆண்டைப் போலவே, 1973-74-லும் 8·5 விழுக்காடு இலாப ஈவுத் தொகையை யூனிட் டிரஸ்ட் வழங்க இருக்கிறது.

யூனிட் டிரஸ்ட் மிக வெற்றிகரமாகத் தனது முதல் பத்து ஆண்டுகளை முடித்துவிட்டு, பதினொன்றும் ஆண்டில் வெற்றிநடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்று கூறினுல் அது மிகையாகாது.

# 10. வெளிநாட்டுச் செலாவணி நிருவாகமும் கட்டுப்பாடும்

## (Exchange management and control)

ரூபாயின் புதுமதிப்பைப் பாதுகாப்பது ரிசர்வ் பாங்கின் ஓர் அரிய பணியாகும். இப் பணியைச் செவ்வனே செய்வதற்காகத்தான், ரிசர்வ் பாங்க் நாட்டில் உள்ள எல்லா வெளிநாட்டுச் செலாவணிக் காப்பையும் வைத்திருக்கிறது. ரூபாயின் புறமதிப்பிற்கும் அகமதிப்பிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை அறியாதவர் இலர். ரூபாயின் புறமதிப்பு, பிற புறக் காரணங்களாலும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, ரூபாயின் புற மதிப்பைக் காத்திட, நல்ல நிதியியல் கொள்கையை வகுத்திடுதல் அவசியம்.

குறுகியகால வர்த்தக ஏற்றத்தாழ்வுகளால், நாணயமாற்று வீதத்தில் ஏற்படும் மாறுதல்களையும், ரிசர்வ் பாங்க் தன்னிடமுள்ள வெளிநாட்டுச் செலாவணிக் காப்பின் உதவியால் சீர் செய்ய வேண்டும். தங்கம், (ரிசர்வ் பாங்கின்) வெளிநாட்டில் உள்ள சொத்துகள், வெளிநாட்டு இருப்புகள் ஆகியவை அதிகாரப் பூர்வமான பிற காப்புகளாகும். காப்புகள் தேவையான அளவுக்குக் கிடைக்காமல் பற்றுக்குறை ஏற்படும்போது, பன்னாட்டு நாணய நிதியில் (IMF) இந்தியா ஓர் உறுப்பினராக இருப்பதால், அந் நிதியிலிருந்து, அவ்வப்போது உள்ள விதிமுறைகளுக்குட்பட்டுக் கடன் பெறுகிறது. இந்தியா, 1970-லிருந்து, சிறப்பு எடுப்பு உரிமைகளைப் (Special drawing rights) பெற்றிருக்கிறது. இப்படிப் பலவகைகளில், வெளிநாட்டுச் செலாவணி பெற்ற போதிலும், இந்தியா வளர்ந்துவரும் நாடாக இருப்பதால், எவ்வளவு பெற்றும் பற்றுக்குறையாகவே இருக்கிறது. இதனால் வெளிநாட்டுச் செலாவணிமீது கட்டுப்பாடு செலுத்த வேண்டிய

அவசியம் எழுகிறது. பன்னாட்டு நாணயநிதி, விதிகள் XIV (Article XIV) கீழ், பன்னாட்டு நாணயநிதியில் அங்கத்தினர்களாக உள்ள நாடுகள், வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடுகளை வைத்திருக்கலாம்.

இரண்டாவது உலகப்போர் மூண்டபோது, 1939 செப்டம்பரில், இந்தியப் பாதுகாப்பு விதிகளின்கீழ், இந்தியாவில் வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. 1947-ல் வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் (Foreign exchange regulation act) கொண்டுவரப்பட்ட பிறகு, சட்ட முறைப்படி வெளிநாட்டுக் செலாவணிக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17 (12)-ல் உள்ளபடி, ரிசர்வ் பாங்க், தனது கணக்கிலும், பிரிவு 17 (11)-ல் உள்ளபடி, அரசாங்கத்தின் சார்பிலும் வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கையில் ஈடுபடலாம். ரிசர்வ் பாங்க் வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடக்கூடியது பற்றி, ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 40, கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை ஆகிய இடங்களில் உள்ள ரிசர்வ் பாங்கின் கிளைகளிலும், அல்லது மத்திய அரசால் முடிவு செய்யப்பட்ட பிற கிளைகளிலும் அங்கீகரிக்கப்பட்டவர்களிடமிருந்து, மத்திய அரசு நிருணயித்த நாணய மாற்று வீதத்தில் அவ்வப்போது, மத்திய அரசால் பொதுவாக அல்லது குறிப்பாக இடப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு, வெளிநாட்டுச் செலாவணியை ரிசர்வ் பாங்க் வாங்கலாம் அல்லது விற்கலாம்.

ஆனால், எந்த ஒரு நபரும், 2 இலட்ச ரூபாய்க்குக் குறைந்த வெளிநாட்டுச் செலாவணியை வாங்கவோ, விற்கவோ ரிசர்வ் பாங்கிடம் கோரக்கூடாது.

1947ஆம் ஆண்டு, வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ், வெளிநாட்டுச் செலாவணி வாங்கவோ, விற்கவோ உரிமை பெற்றவரே மேற்கூறப்பட்ட பிரிவின்கீழ், அங்கீகரிக்கப்பட்ட நபர் எனப்படுவார்.

வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து, ரிசர்வ் பாங்க் வெளிநாட்டுச் செலாவணி வாங்குவதற்கோ அல்லது விற்பதற்கோ குறைந்த அளவு, உயர்ந்த அளவு வீதங்களை, இந்திய அரசாங்கம், இப் பிரிவில் பெற்றுள்ள அதிகாரத்தின்படி, அவ்வப்போது நிருணயிக்கிறது. இந்தியா பன்னாட்டு நாணய நிதியில் உறுப்பினராக ஆனதாலும், 1966 ஜூனில், ரூபாய் மதிப்புக் குறைப்பு, (Rupee devaluation)'

1967 நவம்பரில் ஸ்டர்லிங் மதிப்புக் குறைப்பு, ஆகிய காரணங்களாலும், பிரிவு 40(மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி) பரந்த நோக்கு உடையதாக ஆக்கப்பட்டது. பிரிவு 17(3) (a)-ல் கூறப்பட்டுள்ளபடி 1 இலட்ச ரூபாய் மதிப்பிற்குக் குறையாத அளவிற்கு வெளிநாட்டுச் செலாவணியை அட்டவணையிலிட்ட வங்கிகளுக்கோ, அல்லது அவ் வங்கிகளிடமிருந்தோ, வாங்க, விற்க ரிசர்வ் பாங்க் அதிகாரம் பெற்றுள்ளது. பிரிவு 40—ல், மத்திய அரசு நிருணயிக்கும் வீதத்திற்கு உட்பட்டு, ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் பிரிவு 17-ன் கீழ், வெளிநாட்டுச் செலாவணி பற்றிய அன்றாட நடவடிக்கைகளை ரிசர்வ் பாங்க் மேற்கொள்கிறது.

நாணய மாற்று வீதம் (Exchange rate)

வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி, ரிசர்வ் பாங்கால் அங்கீகரிக்கப்பட்ட வீதத்தைத் தவிர வேறு எந்த வீதத்திலும் எவரும் வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது. பன்னாட்டு நாணய நிதியில் இந்தியா ஓர் அங்கத்தினராக இருப்பதால், பன்னாட்டு நாணய நிதிக்குத் தங்கம் அல்லது அமெரிக்க டாலரில் ரூபாயின் மதிப்பைத் தெரியப்படுத்தவேண்டும். உடனடி நடவடிக்கைகளின் (Spot transactions) போது, அத்தகைய அறிவிக்கப்பட்ட வீதத்திலிருந்து 1 விழுக்காடு அளவிற்குத்தான் ஏற்றமோ, இறக்கமோ அனுமதிக்கப்படுகிறது. தற்போது பன்னாட்டு நாணய நிதிக்குத் தெரிவித்துள்ளபடி ரூபாயின் சுத்தமான தங்க மதிப்பு 0.118489 கிராம் ஆகும். பன்னாட்டு வியாபாரத்தைப் பொறுத்தவரை, பல்வேறு வெளிநாட்டுச் செலாவணியின் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகிறது. ஸ்டர்லிங் உலகப் பிரசித்தி பெற்ற வெளிநாட்டுச் செலாவணியாக இருப்பதால், ரூபாய்க்கும் ஸ்டர்லிங்குக்கும் இன்றையவரை நெருங்கியத் தொடர்பு உள்ளது. 1927-ல் 1 ரூபாய், 1 ஷில்லிங் 6 பென்ஸ்க்குச் சமம் (ரூ1- 1 ஷில்லிங் 6 பென்ஸ்) என்ற வீதத்தில் இருந்தது. 1966 சூன்வரை, இவ் விகிதம் நிலைத்திருந்தது. 1966 சூனில் 1 ரூபாய், $11\frac{3}{7}$ பென்சுக்குச் சமமாக இருந்தது. 1967 நவம்பரில், ஸ்டர்லிங் மதிப்புக் குறைப்பால், ரூபாய் ஸ்டர்லிங் வீதம் ரூ1—1ஷில்லிங் $1\frac{1}{3}$ பென்ஸ் ஆக ஆக்கப்பட்டது. நிலையான நாணய மாற்று வீதம் அமைய வேண்டுமாயின் ரிசர்வ் பாங்க் தேவைக்கும், அளிப்பிற்கும் ஏற்றாற்போல், அதிகாரப் பூர்வமான வீதத்தில் வெளிநாட்டுச் செலாவணியை வாங்கவும், விற்கவும் வேண்டும். 1967 நவம்பரிலிருந்து ரிசர்வ் பாங்க், உடனடி மற்றும் முன்னேக்கிய ஸ்டர்லிங்கை (Spot and forward sterling) அங்கீகரிக்கப்பட்டவர்களிடமிருந்து 6 திங்களுக்குட்பட்ட காலத்திற்கு, ரூபாய் 100=£5.5556 என்ற வீதத்தில்

வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. உடனடி ஸ்டர்லிங்கை, ரிசர்வ் பாங்க், £5.5380 = 100 ரூபாய் என்ற வீதத்தில் விற்கிறது. 1946 அக்டோபரிலிருந்து ரிசர்வ் பாங்க் ஈடுபட்டிருந்த முன்னேக்கியப் பேரங்கள், (Forward transactions) 1966 ஜுனில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளர்கள், பொது மக்களிடமிருந்து, ஸ்டர்லிங் வாங்குவது, விற்பது பற்றி இந்திய வெளிநாட்டுச் செலாவணி உரிமையாளர்கள் சங்கம், ரிசர்வ் பாங்கைக் கலந்தாலோசித்து, வீதத்தை முடிவு செய்கிறது. பிற செலாவணிகளுக்கு வங்கிகள் தாங்கள் நிருணயிக்கும் வீதத்தில், வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கையில் ஈடுபடலாம். அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளர்கள், தங்கள் நடப்புத் தேவைகள் மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கான வெளிநாட்டுச் செலாவணியை இலண்டன் வெளிநாட்டுச் செலாவணி அங்காடியிலிருந்தோ அல்லது வங்கிகளிடமிருந்தோ பெறுகின்றனர்.

இரண்டாவது உலகப்போரின் விளைவால், ரிசர்வ் பாங்கின் பணிகள் பெருகின. வெளிநாட்டுச் செலாவணிமீது, இந்தியப் பாதுகாப்பு விதி, பகுதி XIV-ன் கீழ், அரசாங்கம் கட்டுப்பாடு செலுத்திய போதிலும், நிருவாக வசதி குறித்து ரிசர்வ் பாங்க் அரசாங்க முகவராக இருந்ததால், அப் பணி ரிசர்வ் பாங்கிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணி பற்றிய நடவடிக்கைகளைத் தனி ஒரு துறையே திறம்படக் கவனிக்க முடியும் என்று கருதப்பட்டதால், வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் துறை அமைக்கப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணி கட்டுப்பாட்டுத்துறையின் தலைமைச் செயலகம் பம்பாயில், ரிசர்வ் பாங்கின் மத்திய அலுவலகத்தில் தொடங்கப்பட்டது. கல்கத்தாவில் வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் துறையின் தனிக்கிளை அலுவலகம் திறக்கப்பட்டது. லாகூரில் 1940-லும், கான்பூரில் 1942-லும் கிளை அலுவலகங்கள் திறக்கப்பட்டன.

வெளிநாட்டுச் செலாவணி நிருவாகம் (Exchange management)

வெளிநாட்டுச் செலாவணி நிருவாகம், போரின்போது, அவ்வளவு கடினமாக இல்லை. அட்டவணையிலிட்ட வங்கிகளிடமிருந்து மிகுந்த அளவில் ஸ்டர்லிங்குகளை வாங்கியிருந்ததால், ரிசர்வ் பாங்க், அதிக அளவு உபரி ஸ்டர்லிங்குகளைப் பெற்று இருந்தது.

பிரிட்டிஷ் அரசிடமிருந்து, 1939 மேத் திங்களில், டெண்டர் மூலம் ஸ்டர்லிங் வாங்குவதை ரிசர்வ் பாங்க் நிறுத்திக்கொண்டது.

ஸ்டர்லிங் விற்பனையைப் பொறுத்தவரை ரிசர்வ் பாங்க், அவசியம் ஏற்பட்டபோது மட்டும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு உதவியது. 1941 மார்ச்சு திங்களிலும், 1944 அக்டோபர் திங்களிலும் ஸ்டர்லிங்கை ரிசர்வ் பாங்க் ஓரளவுக்கு விற்றது. 1945 ஏப்ரல் திங்களில், ரிசர்வ் பாங்க் ஸ்டர்லிங்குகளை அளவின்றி விற்றது.

தங்கம், வெள்ளி ஆகியவற்றின் விலை, போர்க்காலத்தின் போது, ஏறுமுகமாகவே இருந்தது. அதே சமயம் பணவீக்கத்தின் விலைகள் அதிகமாயின. பணவீக்கத்தின் விளைவுகளைக் கட்டுப் படுத்தவும், தங்கம், வெள்ளி விற்பனைகளைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. போர்க்காலத்தில் தங்கம், வெள்ளி ஆகிய வற்றின்மீது கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், அவை செம்மையாக இல்லை. 1943 ஆகஸ்ட் 16-ல் ஐக்கிய வல்லரசுக்கும் (U. K.) அமெரிக்க அரசாங்கத்திற்கும் 1945 வரை, ரிசர்வ் பாங்க் தங்கத்தை விற்றுவந்தது.

1936 செப்டம்பரிலிருந்து 1947 சனவரி வரை ரிசர்வ் பாங்க் தன்னிடம் இருந்த சாவரின்களைத் (Sovereigns) தங்கக் கட்டி பெற்று மாற்றிக் கொண்டது.

போர்த் தொடக்கத்திலிருந்தே, வெள்ளி அதிகார பூர்வமாக விற்கப்பட்டது. வெள்ளியைப் பொறுத்தவரை, அதன்விலை உயராமல் காப்பதே, தொடக்கத்தில், ரிசர்வ் பாங்கின் கொள்கையாக இருந்தது. தொடக்கத்தில், லண்டனிலுள்ள இந்திய அலுவலகம், வெள்ளியை விற்றது. 1939 டிசம்பர் திங்கள் 14 ஆம் நாள், ரிசர்வ் பாங்க் பம்பாய் அலுவலகத்திலேயே வெள்ளி விற்பனையைத் தொடங்கியது. 1939 அக்டோபரில், ரிசர்வ் பாங்கின் முன் அனுமதியின்றி, வெள்ளி இறக்குமதி செய்யக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. 1939 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 18 ஆம் நாளிலிருந்து வெள்ளி இறக்குமதி செய்ய உரிமம் வழங்கியதோடு, இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளியின் குறைந்த அளவு, உயர்ந்த அளவிற்பனை விலைகளையும் நிருணயித்தது. 1940 லிருந்து 1943 வரை இந்தியா ஒரு நிகர வெள்ளி ஏற்றுமதியாளராக (Net silver exporter) இருந்தது. 1942 பிப்ரவரி 2-ல் தற்காலிகமாக வெள்ளி விற்பனை நிறுத்தப்பட்டது. 1942 அக்டோபர் 14-ல் வெள்ளி விற்பனையை ரிசர்வ் பாங்க் நிரந்தரமாகக் கைவிட்டது. 1939 லிருந்து 1946 வரை 181 மில்லியன் அவுன்சு வெள்ளியை இந்தியச் சந்தையில் அரசு விற்றிருந்தது.

வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு (Exchange control)

இரண்டாவது உலகப்போருக்கு முன்னரே அனைத்து நாடுகளும் வெளி நாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தன. ஆகையால் போர் மூண்டவுடன் வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டது. இந்தியாவிலும், இம் மாதிரியே செய்யப்பட்டது. வெளிநாட்டுக் செலாவணிப் பற்றுக்குறையால், இந்தியாவில் வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது என்று கூறினுல் அது அவ்வளவாகப் பொருந்தாது. உண்மையில் அமெரிக்க டாலரைப் பாதுகாக்கவே, வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு, இந்தியாவில் கொண்டுவரப்பட்டது. ஸ்டார்லிங் எல்லைக்குட்பட்ட நாடுகளில் (Steling area countries) இந்தியாவும் ஒன்று. பாங்க் ஆஃப் இங்கிலாந்து நடுநிலைமை வகித்தது. இந்தியாவில், அரசாங்க முகவராக, ரிசர்வ் பாங்க் கட்டுப்பாடுகளைச் செலுத்தியது. கட்டுப்பாட்டுக்கான அறிவிப்புகளை இந்தியப் பாதுகாப்பு விதி (Defence of India rules) மற்றும் கடல் சுங்கச் சட்டம் (Marine customs act) 1878 ஆகியவற்றின்கீழ் அவ்வப்போது அரசாங்கம் விடுத்து வந்தது. 1947-ல் தான் வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் (Foreign exchange Regulation Act) கொண்டு வரப்பட்டது. அறிவிப்புகள், சுற்றறிக்கைகள்மூலம் தனது கொள்கைகளைத் தெரியப்படுத்தி, ரிசர்வ் பாங்க், கட்டுப்பாடுகளைச் செலுத்தியது. எப்படிப்பட்ட கட்டுப்பாடுகள் வேண்டுமென்பதை அரசாங்கமே நிருணயித்த போதிலும், ரிசர்வ் பாங்கின் அறிவுரைகளைக் கேட்டறிந்த பின்னரே, அரசாங்கம் அவ்வாறு செய்தது.

போர்க் காலத்தில், டாலரைப் பாதுகாப்பதே வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டின் பெரிய பணியாக இருந்தது. தொடக்கத்திலேயே கட்டுப்பாடுகள் மிகவும் பரந்தபோக்கு உடையனவாக இருந்தன. போர்க்கால அனுபவங்கள் மூலம், கட்டுப்பாடுகளில் இருந்த குறைபாடுகளை நீக்க முடிந்தது. போர் முடிவில் கட்டுப்பாடுகள் நிரந்தரமாகி விட்டன. போருக்குப்பின், இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக, 'வல்லரசின் டாலர் சேர்த்து வைக்கும் திட்டத்திற்குச் (Empire dollor) செலுத்தும் தொகையைத் தனியே ஒதுக்கி வைக்குமாறு ரிசர்வ் பாங்க் கேட்டுக்கொண்டது. ஆனால், இம் முயற்சி தோல்வியடையவே, இந்திய அரசு, ஐக்கிய வல்லரசை (United kingdom) டாலராக மாற்றக்கூடிய ஸ்டார்லிங் காப்பு வசதிகளைத் தருமாறு. கேட்டுக் கொண்டது. இம் முயற்சியே வெற்றிபெற்றது.

போருக்குப் பிறகு, பல நாடுகளில் கட்டுப்பாடுகள் தளர்த்தப் பட்டன. ஆனால், இந்தியா வளர்ந்து வரும் நாடாகையால், கட்டுப்பாடுகள் மேலும் இறுக்கப்பட்டன. திட்டமிட்டப் பொருளாதார முன்னேற்றம் காண, வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு, நிரந்தரமாகத் தேவைப்பட்டது. வெளிநாட்டுச் செலவாணிக் கட்டுப்பாட்டுத் தன்மையில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருப்பினும், அடிப்படை அமைப்பில் போர்க் காலத்தில் இருந்தது போலவே, யாதொரு மாறுதலும் இன்றியுள்ளது.

1939 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், முதன்முதல் வெளி நாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுக்கான வழிகள் வகுக்கப் பட்டன. தங்கம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணியைப் பாதுகாத்து, நாட்டின் தேவைகளுக்குப் பயன்படும் வகையில் வைத்திருப்பதே வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டின் நோக்கமாக இருந்தது. பாங்க் ஆஃப் இங்கிலாந்து கூறியபடி, ஆங்கிலேய ஆட்சிக்குட்பட்ட எல்லா நாடுகளும் தங்களுடைய எல்லா வெளிநாட்டுச் செலாவணியையும் இலண்டனில் வைத் திருக்கவேண்டும். அதாவது, ஸ்டர்லிங் எல்லைக்குட்பட்ட நாடு களில் உள்ள எல்லா நாடுகளுக்கும் கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணி, பொதுவான இடத்தில் (பாங்க் ஆஃப் இங்கிலாந்து) வைக்கப்படுவதோடு, பாங்க் ஆஃப் இங்கிலாந்து அவற்றின்மீது கட்டுப்பாடும் செலுத்தியது. நாடுகளின் தேவைகளுக்குத் தகுந்த முறையில், பாங்க் ஆஃப் இங்கிலாந்து, கொடுத்து வந்தது. இந்தியா, வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுத்திட்டம் ஒன்றை அமைக்க முடியுமானால் ஸ்டர்லிங் வட்டாரத்தில் சேர வசதியாக இருக்கும் என்று, பாங்க் ஆஃப் இங்கிலாந்து இந்தியா விடம் அறிவித்தது. அதன்படி ஸ்டர்லிங் விற்பனைக்கு எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை. பிற வெளிநாட்டுச் செலாவணி விற்பனை பற்றிய தங்களுடைய எல்லா நடவடிக்கைகளையும் பற்றிய பதிவேடுகளை வங்கிகள் வைத்திருக்க வேண்டும். ஆனால் ஏற்றுமதி, இறக்குமதி, முதல் மாற்றல்கள் ஆகியவை எவற்றின் மீதும் கட்டுப்பாடு ஏதும் விதிக்கப்படவில்லை.

விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டுகளின்படி இந்திய அரசு, இந்தியப் பாதுகாப்பு விதி பகுதி XIV-ன் கீழ், பின் குறிப்பிட்டுள்ள அதிகாரங்களைப் பெற்றது.

1. வெளிநாட்டுச் செலாவணியை நேரடியாகவோ அல்லது நேரடியாக இல்லாமலோ உத்தரவு இல்லாமல் பெறுவதைத் தடை செய்தல் (இந்தியப் பாதுகாப்பு விதி 91)

2. இந்திய வாசிகள் தங்களிடமுள்ள வெளிநாட்டுச் செலாவணி, வெளிநாட்டு ஆவணங்கள் பற்றித் தெரிவிக்கவேண்டும். உத்தரவிட்டபோது அவற்றை ஒப்படைத்தல் வேண்டும் (இந்தியப் பாதுகாப்பு விதி 92, 94)

3) இந்தியாவிற்கு வெளியில் உள்ள இந்தியர்களிடமிருந்து இந்தியாவில் வசிப்போர் ஆவணங்களைப் பெறவோ அல்லது ஆவணங்களை உத்தரவு இன்றி அனுப்பவோ கூடாது. (இந்தியப் பாதுகாப்பு விதி 93)

4) தங்கக்கட்டி வியாபாரத்தில் உத்தரவின்றி ஈடுபடக் கூடாது. (இந்தியப் பாதுகாப்பு விதி 91)

இந்தியப் பாதுகாப்பு விதி 91 (1)-ன்கீழ், வெளிநாட்டுச் செலாவணி என்பது கீழ்க்கண்டவாறு வரையறுத்துக் கூறப் பட்டுள்ளது. இந்தியாவில் சட்டப்படி புழக்கத்திலுள்ள செலாவணி தவிர, பிற செலாவணிகள் எல்லாம் வெளிநாட்டுச் செலாவணி ஆகும். ஆகவே மேற்கூறப்பட்ட (இந்தியப் பாது காப்பு விதி 91-லிருந்து 94 வரை) விதிகள் ரூபாய்ச் செலாவணி தவிர, பிற எல்லாச் செலாவணிகளுக்கும் பொருந்தும்.

இந்திய அரசு, ரிசர்வ் பாங்கிடம் உரிமம் பெறுமல் தங்கம் ஏற்றுமதி,இறக்குமதி செய்வதைத் தடை செய்யவிருந்தது.

வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடல், வெளிநாட்டு ஆவணங்களைப் பெற உரிமம் அளித்தல், ஆவணங்கள் ஏற்று மதியைத் தடைசெய்தல், தங்கக்கட்டிகள் வியாபாரத்தில் ஈடுபடல், தங்கநாணயங்கள், தங்கக்கட்டிகள் ஏற்றுமதி, இறக்குமதிக்கு உரிமம் வழங்குதல் ஆகிய பணிகள் மத்திய அரசால், 1939 செப்டம்பர் 3—லிருந்து ரிசர்வ் பாங்குக்கு மாற்றப்பட்டன.

ரிசர்வ் பாங்க், எல்லா அட்டவணையிலிட்ட வங்கிகளுக்கும், அறிக்கை அனுப்பியது, அந்த அறிக்கை, அரசு, ரிசர்வ் பாங்குக்கு வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபட அதிகாரம் அளித்துள்ளது என்று தெரிவித்தது. வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடும் வங்கிகளோ, தனி ஒருவரோ, மனுச் செய்தால் உரிமம் வழங்கவும் அவ்வப்போது வெளிநாட்டுச் செலாவணி பற்றி உத்தரவிடவும் ரிசர்வ் பாங்க் அதிகாரம் பெற்றது. வெளிநாட்டுச் செலாவணியில் அனுபவம் பெற்ற வங்கிகளுக்கு ரிசர்வ் பாங்க் உரிமம் வழங்கியது.

வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளுக்குப் பொது வரையறைகள் விதிக்கப்பட்டன.

1. ஸ்டர்லிங் விற்பது, வாங்குவதுமீது யாதொரு கட்டுப்பாடும் இல்லை.

2. வெளிநாட்டுச் செலாவணி சுதந்திரமாக வாங்க அனுமதிக்கப்பட்டது.

3. குறிப்பிட்ட மனுவில் அங்கீகரிக்கப்பட்ட வங்கிக்கு மனுச்செய்பவருக்கே வெளிநாட்டுச் செலாவணி (ஸ்டர்லிங் தவிர) விற்கலாம். அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் ரிசர்வ் பாங்குக்கு, அம் மனுவை அனுப்பும்.

4. பிற நாட்டுச் செலாவணியாக மாற்றல் செய்ய, ஸ்டர்லிங் வாங்குவோருக்கும் அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளருக்கும், ஸ்டர்லிங்கை விற்கலாம். ஆனல், வங்கிகள், எந்த நோக்கத்திற்கு ஸ்டர்லிங் விற்கப் பட்டது என்பது பற்றி இலண்டன் அலுவலகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும்.

5. உண்மையான வணிக நோக்கங்களுக்கு, முன்னேக்கிய நடவடிக்கைகள் (Futures of forward transactions) அனுமதிக்கப்பட்டன.

6. வெளிநாட்டு வங்கிகளின் கணக்குகளுக்கு ரூபாய் மாற்றல்கள் செய்தால், அதுபற்றி ரிசர்வ் பாங்கிற்கு விபரம் தெரிவித்தால் அத்தகைய நடவடிக்கைகள் அனுமதிக்கப்படும்.

7. தனி ஒருவர் வெளி நாட்டுச் செலாவணிக் கணக்குகள் (ஸ்டர்லிங் கணக்குகள் தவிர) திறக்கத் தடை விதிக்கப் பட்டது.

தொடக்கத்தில், இறக்குமதிகள்மீது கட்டுப்பாடுகள் இல்லை. தங்க நாணயம், தங்கக்கட்டி ஆகியவற்றை ஏற்றுமதி, இறக்குமதி செய்ய, ரிசர்வ் பாங்க் உரிமம் இல்லாமல் ஈடுபடக் கூடாது என்று ரிசர்வ் பாங்க், வங்கிகளிடம் தெரிவித்தது. உரிமம், அங்கீ கரிக்கப்பட்ட உரிமையாளருக்கு மட்டும், அவர்கள் மனுச்செய்தால் கொடுக்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளர்கள் தங்க விற்பனை, வாங்கல் ஆகியவை பற்றிய விபரங்களை ஒவ்வொரு வாரமும், தவருமல், ரிசர்வ் பாங்குக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

**அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளருக்கு உரிமம் வழங்குதல் (Licensing authorised dealers)**

அட்டவணையிலிட்ட வங்கிகள் வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத்தில் ஈடுபட உரிமம் பெறத் தகுதி பெற்றவை, தொடக்கத்தில் குறிப்பிட்ட சில வங்கிகளுக்கு மட்டுமே ரிசர்வ் பாங்க், உரிமம் வழங்கியது. பின்னர் இந்திய வங்கிகளை ஊக்கு விப்பதற்காக விதிகள் தளர்த்தப்பட்டன. ஆனால், கீழ்க்கண்ட நிபந்தனைகளை வங்கிகள் நிறைவு செய்யவேண்டும்.

1. வங்கி நல்ல நிலைமையில் இருத்தல்;

2. வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தைப் பெறக் கூடிய திறமை பெற்றிருத்தல்; வெளிநாடுகளில் வெளி நாட்டுச் செலாவணியில் ஈடுபட முகவர் நியமன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல்.

3. வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளில் அனுபவம் பெற்ற நிருவாகிகளை நியமித்திருக்க வேண்டும்.

1945–ல், வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளில் நல்ல வளர்ச்சி காட்டக்கூடிய வங்கிகளுக்கு மட்டும், புது உரிமம் வழங்கத் தீர்மானம் செய்யப்பட்டது.

1947-ல் வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்காற்றுச் சட்டம் வந்தபிறகு, முன்னால் கொடுக்கப்பட்ட உரிமங்கள் செல்லாதவை யாக ஆனதால், ரிசர்வ் பாங்க் புது உரிமங்களை வழங்கியது. ஆனால் உரிமம் வழங்கும் கொள்கைகளில் மாறுதல் ஏதும் இல்லை.

பொதுமக்களோடு, நேரடியாக ரிசர்வ் பாங்க், வெளி நாட்டுச் செலாவணி நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை. ரிசர்வ் பாங்கின் வெளிநாட்டுச் செலாவணித் துறை, வெளிநாட்டுச் செலாவணிகளை வாங்குதல், விற்றல் பற்றிய நடவடிக்கைகளைக் கவனிக்கிறது. ரிசர்வ் பாங்க், வெளிநாட்டுச் செலாவணி ஒழுங் காற்றுச் சட்டத்தின் (Foreign exchange regulation act) கீழ், பெற்றுள்ள அதிகாரத்தின்கீழ், சில அட்டவணையிலிட்ட வங்கி களுக்கும் வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபட உரிமம் வழங்கு கிறது. பொதுமக்கள் இந்த அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளரில் மூலம்தான் வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளின் ஈடுபடலாம். நடவடிக்கையில் ஏற்படும் காலதாமதம், மற்றும் சில இடர்கள் ஆகியவற்றைத் தவிர்க்க 1968-ல், ரிசர்வ் பாங்கின் அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளர்கள், குறிப்பிட்ட சில வெளி நாட்டுச் செலாவணி நடவடிக்கைகளில் முன்அனுமதியின்றி ஈடு

படலாம் என்று ரிசர்வ் பாங்க் சில விதிமுறைகளைத் தளர்த்தியது. அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளர்கள் அல்லாமல், மற்றும் சிலரும் ரிசர்வ் பாங்கின் உரிமம் பெற்று வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.

## ஸ்டர்லிங் வட்டார ஏற்பாடுகள் (Sterling area arrangements)

சில நாடுகள் ஒன்று சேர்ந்து, 'ஸ்டர்லிங் வட்டாரம்' ஒன்றை உண்டாக்கியுள்ளன. அதில் இந்தியாவும் அங்கம் வகிக்கிறது. ஐக்கிய வல்லரசு (U.K) முக்கிய அங்கம் வகிக்கிறது. அங்கத்தினராக உள்ள எல்லா நாடுகளும் தங்களுடைய எல்லா வருவாயையும் ஸ்டர்லிங்கில் வைத்திருக்க வேண்டும். ஸ்டர்லிங் அல்லாத பிற செலாவணி சம்பாத்தியங்களை ஸ்டர்லிங் வைப்புகளாக மாற்றிக் கொள்ளலாம்.

ஸ்டர்லிங் வட்டாரத்தில் நிலவிய டாலர் நிலைமையைப் பொறுத்தே, கட்டுபாடுகளும் அமைந்தன. 1641 ஜூலை 12-ல், இந்தியப் பாதுகாப்பு விதி திருத்தப்படும் வரை, இந்தியாவில் ஸ்டர்லிங் வட்டாரம் என்பது என்ன என்ற சட்ட ரீதியான இலக்கணம் இல்லை. கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துவதில் ரிசர்வ் பாங்குக்கு, மத்திய அரசு, நிறைய அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறது. ரிசர்வ் பாங்க், அங்கீகாரம் பெற்ற உரிமையாளருக்குச் சில அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறது.

ஸ்டர்லிங் வட்டாரத்தில் உள்ள எல்லா நாடுகளும் ஒரே சமயத்தில் ஸ்டர்லிங் இருப்புகளை எடுத்தால், ஐக்கிய வல்லரசின் நிலைமை பாதிக்கப்படுமாதலால், 1968 செப்டம்பரில், ஐக்கிய வல்லரசு, ஒவ்வொரு நாடும் பெற்றுள்ள ஸ்டர்லிங் இருப்புகளை, அமெரிக்க டாலருக்குச் சரியான மதிப்பில் கொடுக்க உத்தரவாதம் அளித்தது. இதன்படி எல்லா நாடுகளும், தங்களது புற ஒதுக்கீட்டில் 90 விழுக்காட்டை உத்தரவாதம் பெற்ற ஸ்டர்லிங் வடிவில் வைத்திருக்கலாம். 10 விழுக்காட்டை உத்தரவாதம் பெறாத ஸ்டர்லிங்காக வைத்திருக்கலாம்.

## பன்னாட்டு நாணய நிதியில் அங்கம் வகித்தல்

பன்னாட்டு நாணய நிதியில் (I.M.F.) இந்தியா அங்கத்தினராக இருப்பதால், இந்திய அரசாங்கத்தின் சார்பில் ரிசர்வ் பாங்க் செயல்படுகிறது. பன்னாட்டு நாணய நிதியில் அங்கத்தினராக இருந்தால், சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவும், பின்பற்றவும் வேண்டும். இதன்படி, அங்கத்தினராக உள்ள நாடுகள் தங்கள் நாணய மாற்றுவீதத்தை நிலையாக வைத்திருக்க வேண்டும். அது போலவே இந்தியா தனது நாண மாற்றுவீதத்தைப் பன்னாட்டு

நாணய நிதிக்கு அறிவித்துள்ளது. பன்னாட்டு நாணய நிதியின் முன்அனுமதியைப் பெற்றே, நாணய மாற்று வீதத்தில் ஏற்படும் எல்லா மாறுதல்களும் செய்யப்படுகின்றன. பன்னாட்டு நாணய நிதி தன்னிடம் அங்கத்தினராக உள்ள நாடுகளுக்கு நிதி வசதிகள் அளிக்கிறது. ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் தேசிய வருமானம் தங்கம், மற்றும் டாலர் இருப்புகள், சராசரி இறக்குமதிகள், ஏற்றுமதிகள் ஆகியவற்றைப் பொறுத்துப் பங்கீடு (quota) தரப் படுகிறது. பங்கீட்டளவு, அவ்வப்போது மாற்றியமைக்கப்பட் கிறது. அங்கத்தினராக உள்ள நாடுகள், தங்களுக்கான பங்கீட் டளவில் 25 விழுக்காடு அல்லது தங்களுடைய தங்கம் அல்லது டாலர் ஒதுக்கீடுகளில் 1 விழுக்காட்டை, தங்களது செலாவணி யிலும் வைத்திருக்க வேண்டும். இத்தகையச் செலுத்தல்கள் மூலம் பன்னாட்டு நாணய நிதி கடன் தர முடிகிறது. தங்கள் செலா வணிக்குப் பதில், பிறநாட்டுச் செலாவணிகளை நாடுகள் வாங்கலாம் ஆனால் அவ்வாறு வாங்குவதால், பன்னாட்டு நாணய நிதியில் செலாவணி வாங்கும் அங்கத்தினரின் செலாவணியில், வாங்கிய தேதியிலிருந்து 12 மாதங்களுக்கு முன்னால்வரையிலான கால அளவில் உள்ள பங்கீட்டளவில் 25 விழுக்காடு அதிகமாகாமலும், அங்கத்தினர் பங்கீட்டளவில் 200 விழுக்காட்டுக்கு அதிகமாகா மலும் இருக்கவேண்டும். ஒவ்வொரு நாடும், அதனுடைய பங்கீட் டளவு, தங்கம் செலுத்திய அளவு ஆகியவை சேர்ந்த அளவுக்கு, வெளிநாட்டுச் செலாவணியைப் பன்னாட்டு நாணய நிதியிலிருந்து பெறலாம். கடன்பெறும் நாடுகளுக்குச் சாதகமாக, மேற்கூறப் பட்ட சில நிபந்தனைகளைப் பன்னாட்டு நாணய நிதி, விதிவிலக்கல் செய்யலாம். கடந்த சில ஆண்டுகளாகப் பன்னாட்டு நாணய நிதி இவ்வாறு விதிவிலக்கல் செய்து வந்துள்ளது. இவ்வாறு, கடனாகப் பெறும் செலாவணியை, மூன்றிலிருந்து ஐந்து ஆண்டுகளில் திருப்பித் தரவேண்டும். கடன் வாங்கிய தொகை, மற்றும் கால அளவைப்பொறுத்து வட்டி வசூலிக்கப்படுகிறது.

மேற்கூறப்பட்டபடி நேரடியாகச் செலாவணி பெறுவதோ டல்லாமல், 1962-லிருந்து பன்னாட்டு நாணய நிதியின் ஆதர வளிக்கும் ஏற்பாடுகள் (Stand by arrangements) என்ற திட்டத் தின் கீழ் சில விதிமுறைகளைப் பின்பற்றினால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வெளிநாட்டுச் செலாவணி வாங்கலாம். அங்கத்தினர் நாட்டின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு ஏற்றுமதிக் குறைவால் ஏற்படும் தற்காலிகப் பற்றாக்குறைக்காகவும், பன்னாட்டு நாணய நிதி, கடன்வசதிகள் அளிக்கிறது.

### வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டின் நோக்கங்கள்

முன்பே கூறப்பட்டதுபோல, ரூபாயின் புறமதிப்பைப் பாது காக்க நிதியியல் கொள்கை மட்டும் போதாது. உலகப் போரின் போதும், அதற்குப் பின்னரும் வெளிநாட்டுச் செலாவணியைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

வெளிநாட்டுச் செலாவணிக்கு ஏற்படும் தேவையை, அளிப் பிற்கு ஏற்றாற்போல் சரிசெய்வதே வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டின் நோக்கமாகும். பலவகையில் கடன்பெற்றும், வெளி நாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை இருப்பின் வெளிநாட்டுச் செலா வணிமீது கட்டுப்பாடு செலுத்துவதைத் தவிர, யாதொரு வழியும் இல்லை. கட்டுப்பாட்டின்படி கிடைக்கக்கூடிய வெளிநாட்டுச் செலாவணியை, நியாயமான தேவைகட்குப் பங்கீடு செய்வது கட்டுப்பாட்டின் முக்கிய அம்சமாகும். வெளிநாட்டுச் செலாவணி கட்டுப்பாட்டின் மூலம் வெளிநாட்டுச் செலாவணி பெறுவதன் மீதும், செலுத்துவதின்மீதும் கட்டுப்பாடு செலுத்தப்படும். வெளிநாட்டுச் செலாவணி செலுத்தல்மீது கட்டுப்பாடு விதிப்ப தால், வெளிநாட்டுச் செலாவணித் தேவையைக் கட்டுப்படுத் தலாம். வெளிநாட்டுச் செலாவணி பெறுவதின்மீது கட்டுப்பாடு விதிப்பதால், நாட்டில் கிடைக்கக்கூடிய வெளிநாட்டுச் செலா வணி ஒரே இடமான, மைய வங்கியின் கைகளில் இருப்பதோடு, அது நன்முறையில் பயன்படுத்தப்படலாம்.

வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு இரண்டாவது உலகப்போர் தொடக்க நாளிலிருந்தே உள்ளது. போரின்போது ஸ்டர்லிங் அல்லாத பிற வெளிநாட்டுச் செலாவணிகள்மீது கட்டுப் பாடு இருந்தது. போர் முடிவுற்றபோது வெளிநாட்டுச் செலா வணிக் கட்டுப்பாடு நிரந்தரமாக இருக்க வேண்டும் என்று தோன்றியது. ஆகவே, 1947-ல் வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்பட்டு, 1947 மார்ச்சு 15-ல் அமு லுக்குக் கொண்டு வரப்பட்டது. இச் சட்டத்தை ரிசர்வ் பாங்க், மத்திய அரசு அவ்வப்போது வெளியிடும் கொள்கைக்கேற்றாற் போல் செயல்படுத்துகிறது. 1947 ஜூலை 15-லிருந்து, சுதந்திரமாக ஸ்டர்லிங்குகளைப் பிறவெளிநாட்டுச் செலாவணிகளாக மாற்றலாம் எனப்பட்டதால், அதிக அளவில் ஏற்பட்ட முதல் மாற்றங்களைத் தடுக்க வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. 1951 பிப்ரவரி 27-லிருந்து ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும் வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு விரிவுபடுத்தப்பட்டது.

1963 மார்ச்சு 11-லிருந்து கோவா, டாமன், டையூ ஆகிய வற்றுடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும் வெளிநாட்டுச் செலாவணி கட்டுப்பாடு விரிவுபடுத்தப்பட்டது. 1960 நவம்பர் வரை வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டிற்கு நேபாளத் துடன் ஈடுபடும் நடவடிக்கையும் உட்பட்டிருந்தது; ஆனால் 1960 நவம்பரில் அக் கட்டுப்பாடு எடுக்கப்பட்டுவிட்டது. நேபாளம் தானாகவே வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டை மேற் கொண்டது. ஆனால் இந்தியாவிற்கும் நேபாளத்திற்கும் இடையே எந்த வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடும் இல்லை. 1947 லிருந்து, இந்தியாவில், வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு புதிய அர்த்தம் பெற்றுள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ், நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியுற, வெளிநாட்டுச் செலாவணி கிடைப்பது அரிதாக இருப்பதாலும், இறக்குமதிகள் அதிகமாக இருப்பதாலும், வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப் பாடு முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டு வாணிப அமைச்ச ரகம், வெளிநாட்டு வியாபாரம் மீது, செலுத்தும் கட்டுப்பாடு அல்லாமல், ரிசர்வ் பாங்கும் அதிகாரம் செலுத்தியது. வர்த்தகக் கட்டுப்பாடு, சரக்கு மாற்றல்களை மட்டும் பொறுத்தது. ஆனால் ரிசர்வ் பாங்கோ, இறக்குமதிக்கு எவ்வாறு பணம் கொடுக்கப்படு கிறது, விதிமுறைகள் சரியாகப் பின்பற்றப்படுகின்றனவா, ஏற்றுமதியால் கிடைத்த செலாவணி எவ்வாறு பெறப்படுகிறது என்பன பற்றி மேற்பார்வையிடுகிறது. ரிசர்வ் பாங்கின் வெளி நாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு மிகப் பரந்த நோக்கு உடைய தாகும். அமைச்சரகத்தின் வியாபாரக் கட்டுப்பாடும், ரிசர்வ் பாங்கின் வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடும் இணைந்து செயல்படுகின்றன.

### இறக்குமதியின்மீது கட்டுப்பாடு

ஸ்டர்லிங் வட்டாரத்தில் உள்ள நாடுகளில் வெளிநாட்டுச் செலாவணியைப் பாதுகாப்பதே செலாவணிக் கட்டுப்பாட்டின் முக்கியக் குறிகோள் ஆகும். இதற்காக 1940 மே முதல் இறக்குமதிக் கட்டுப்பாடு செய்யப்பட்டது. வியாபாரப் பண மாற்றல்கள் மீதும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. 1941 அக்டோபர் 21-ல்தான், இலாபம் அனுப்புவதுமீது கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது. 1940-நவம்பர் 23-ல், எல்லாத் தனியார் டாலர் இருப்புகளையும் ஒப்படைக்குமாறு ரிசர்வ் பாங்க் கேட்டுக்கொண்டது.

### இறக்குமதிக்குச் செலுத்தல்கள் (Payments for imports)

அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளர்கள் பற்றுத் திருமுகம் (Letter of credit) திறக்க அனுமதிக்கப்படுகிறூர்கள். அல்லது இறக்குமதி உரிமத்தோடு வெளிநாட்டுச் செலாவணி கட்டுப் பாட்டுப் படியினேயும் இணைத்து இறக்குமதி செய்த மதிப்பிற்குப் பணம் அனுப்பலாம். உரிமம், பல ஆண்டுகளுக்குக் கொடுக்கப் பட்டிருந்தால், அத்தகைய உரிமத்தின் கீழ், முதன்முதல் இறக்குமதி செய்யுமுன்னர்,

1. ரிசர்வ் பாங்கின் முன்அனுமதியைப் பெறவேண்டும்.

2. வங்கியின் உத்தரவாதம் தேவை.

இறக்குமதிக்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகை, எந் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறதோ, அந் நாட்டின் செலாவணியில் கொடுக்கப்படவேண்டும். அல்லது அந் நாட்டினர் இந்தியாவில் கணக்கு வைத்திருப்பின் ரூபாயாகச் செலுத்தலாம். ஸ்டர்லிங் வட்டார நாடாயிருப்பின், அந் நாடு ஒத்துக்கொள்ளும் பிற செலாவணியில் செலுத்தலாம். கிழக்கிந்திய ஐரோப்பிய நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்திருந்தால், ரூபாய் கொடுத்துத்தான் கணக்கைச் சரி செய்யவேண்டும். முதற்கருவிப் பொருள்கள் (Capital goods) தவிர பிற இறக்குமதிகளுக்கு, முன்பணம் அனுப்புதல், வழக்கமாக அனுமதிக்கப்படுவதில்லே. வெளிநாட்டு அரசுகள் அல்லது நிதி நிறுவனங்கள் கொடுக்கும் கடன் உதவியின் பேரில் இறக்குமதி செய்யத் தனிவிதி முறைகள் உள்ளன. இதுபற்றி அவ்வப்போது ரிசர்வ் பாங்க் அங்கீகரிக்கப் பட்ட உரிமையாளர்களுக்கு அறிவுரைகள் கூறுகிறது.

### பிற செலுத்தல்கள்

பயணங்களின் மீதான வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு இப்போது ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளது. வியாபாரம், கல்வி, மருத்துவ வசதி ஆகியவற்றைப் பெறத் தேவையான அளவுக்கு வெளிநாட்டுச் செலாவணி தரப்படுகிறது. வெளிநாட்டுச் செலாவணி தேவைப்படாவிடினும் வெளிநாட்டுப் பயணங்களுக்கு 'P' மனுவை, ரிசர்வ் பாங்க், அனுமதிக்க வேண்டும். இக் கட்டுப்பாடும் தளர்த்தப்பட்டு 1970 பிப்ரவரியில் வெளிநாட்டுப் பயணங்களுக்கு ஓரளவு வெளிநாட்டுச் செலாவணி, சில நிபந்தனேகளின் பேரில் வழங்கப்படுகிறது. தவிர்க்கமுடியா வெளிநாட்டுச் செலாவணிச் செலவினங்களுக்காகவும், நிலேமை நாட்டின் நலனுக்குச் சாதகமாக உள்ளபோதும் கட்டுப்பாடுகள்

தளர்த்தப்படுகின்றன. வெளிநாட்டவர்கள் இந்தியாவில் வசிப்பவர்களாயின் தங்கள் சேமிப்பையும், ஓய்வுபெற்றதும் கிடைக்கும் தொகையையும் தங்கள் நாடுகளுக்கு அனுப்ப அனுமதிக்கப்படுகிறார்கள்.

ஏற்றுமதி வரவுத் தொகை மீது கட்டுப்பாடு (Control over export proceeds)

1940 மார்ச்சு திங்களில் இந்தியாவில், ஏற்றுமதி மீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதன்படி அமெரிக்கா, பெல்ஜியம், நெதர்லாந்து, ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சணல், சணல்பண்டங்கள், ரப்பர் ஆகிய பொருள்களின் மீது ஏற்றுமதிக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது. ஏற்றுமதியால் பெறக்கூடிய வெளிநாட்டுச் செலாவணியை ரிசர்வ் பாங்கிடம் ஒப்படைக்கவும் குறிப்பிட்ட சில முறைகளில் மட்டுமே ஏற்றுமதிக்கான வெளிநாட்டுச் செலாவணியைப் பெறவுமே ஏற்றுமதி மீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரிசர்வ் பாங்கின் பெருமுயற்சியும், கண்காணிப்பும் அதிகம் தேவைப்பட்டது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைகளில், ஏற்றுமதிமீது, கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

1. எல்லா ஏற்றுமதியாளர்களும் ஏற்றுமதிமூலம் பெறக்கூடிய முழு வெளிநாட்டுச் செலாவணியையும் ரிசர்வ் பாங்க் நிருணயிக்கும் வீதத்திலும், குறிப்பிட்ட காலத்திற்குள்ளும் கொடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்ட மனுவில் உறுதிமொழி அளிக்கவேண்டும்.
2. கப்பல் சம்பந்தப்பட்ட எல்லாப் பத்திரங்களையும் அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளர்கள்மூலம் மாற்றல் செய்யவேண்டும்.
3. அனுமதிக்கப்பட்ட முறையில் பற்றுவரவைப் பெற வேண்டும்.

ஏற்றுமதி மதிப்பை அனுமதிக்கப்பட்ட செலாவணிகளிலோ, உண்டியல் மூலமாகவோ அல்லது பண இடமாற்றங்கள் மூலமாகவோ பெறலாம். ஏற்றுமதி செய்த 6 மாதங்களுக்குள் வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுவிடவேண்டும். ஆனல், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளைப் பொறுத்தவரை, ஏற்றுமதி மதிப்பை 3 மாதங்களுக்குள் பெற்றுவிடவேண்டும். பொறிச்சாதனப் பொருள்களின் ஏற்றுமதியைப்

(Export of engineering goods) பொறுத்தவரை ரிசர்வ் பாங்க் வெளிநாட்டுச் செலாவணியைப் பெறுவதற்கு, 5 ஆண்டு முதல் 10 ஆண்டுகள்வரை கால அளவை, நிருணயிக்கலாம்.

ஏற்றுமதியைப் பெருக்கி வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுவதைப் பெருக்க வேண்டும் என்பதற்காகச் சில வசதிகள் அளிக்கப்படுகின்றன. அதிக அளவில் ஏற்றுமதி செய்து வெளி நாட்டுச் செலாவணியைப் பெற்றிருக்கும் நல்ல தொழில் நிறுவனங்களுக்கு ரிசர்வ் பாங்க் வெளிநாட்டுச் செலாவணி களுக்குத் தாராளமாக அனுமதி வழங்குகிறது. வெளிநாட்டு வர்த்தக அமைச்சரவையில் ஏற்றுமதியங்கள் (Export houses) என்று பதிவு செய்து கொண்ட ஏற்றுமதியாளர்கள் வழக்கமான ஏற்றுமதியின்றிப் பிற பொறிசாதனப் பொருள்கள் போன்ற சரக்குகளை ஓர் ஆண்டுக்கு 5 இலட்ச ரூபாய்க்குமேல் ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்கள், கச்சாச் சணல் போன்ற வழக்க மான ஏற்றுமதியை 25 இலட்ச ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்களும் இத் திட்டத்தின் கீழ் வசதி பெறலாம். இவ்வாறு பெற்ற அனுமதியை ஏற்றுமதி அபிவிருத்தி, வெளி நாட்டுப் பயணங்கள், விளம்பரம், சந்தைபற்றி அறிதல், பொருட்காட்சிகளில் பங்கு பெறுதல் ஆகிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம். ஏற்றுமதி செய்ய போதுமான நிதி வசதி கிடைக்காமல் இருப்பதால் ஏற்றுமதி செய்வோர் இறக்குமதி செய்வோரிடம் முன்கூட்டியே பணத்தைப்பெற அனுமதிக்கப்படு கிறார்கள். அவ்வாறு முன்கூட்டியே பெறும் பணத்திற்கு வட்டி வீதம் அதிகமாக இருக்கக்கூடாது. முன்பணம் பெற்ற ஓர் ஆண்டு காலத்திற்குள், பொருளை ஏற்றுமதி செய்திடல் வேண்டும்.

ரிசர்வ் பாங்கிடம் உரிமம் பெறாமல், தங்கம் மற்றும் வெள்ளி ஏற்றுமதியோ அல்லது இறக்குமதியோ செய்யக்கூடாது எனத் தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளது. தங்கம் இறக்குமதி செய்ய கீழ்க்கண்ட நேரங்களில் மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது.

(1) தங்கம் இறக்குமதிக்கு வெளிநாட்டுச் செலாவணியில் பணம் கொடுக்கப்பட வேண்டாம் என்று சமயத்திலும் அல்லது மிக முக்கியமான நோக்கத்திற்காக மிக அத்தியாவசியத் தேவையைப் பூர்த்தி செய்யவும்;

(2) தங்க நகைகள் செய்து ஏற்றுமதி செய்யப்படுமாயின், அதற்காகவும் தங்கம் இறக்குமதி செய்யலாம்.

வெள்ளி பற்றிய கட்டுப்பாடுகளும் மேற்கூறியவை போன்றவையே.

**தங்க நகைகள், செலாவணித் தாள்கள், நாணயங்கள்**

இந்திய அரசு, இந்தியப் பாதுகாப்பு விதி, பிரிவு 90B யின் மூலம், 1940 நவம்பர் திங்கள் இரண்டாம் நாளில், பணத்தை ஏற்றுமதி செய்ய ரிசர்வ் பாங்கின் அனுமதி கட்டாயம் தேவை என்ற விதியை ஏற்படுத்தியது. 1941 சனவரி 11 முதல், வைரங்கள், விலையுயர்ந்த கற்கள், நகைகள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்ய ரிசர்வ் பாங்கின் அனுமதி தேவை என்று அரசு உத்தரவு பிறப்பித்தது.

தங்க நகைகள், செலாவணித்தாள்கள், நாணயங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டின் கீழ்வருகிறது. ரூபாய் நோட்டுகளைத் தபால் மூலமோ அல்லது பிற வழிகளிலோ இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிற்கு வரும் வெளிநாட்டுப் பயணிகள் இந்தியச் செலாவணி, இந்திய நாணயங்கள் ஆகியவற்றைக் கொண்டுவரக் கூடாது. ஆனால் பர்மா, நேபாளம் ஆகிய இடங்களிலிருந்து வரும் பயணிகள், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, இந்திய ரூபாயைக் கொண்டு வரலாம். இதுபோலவே, இந்தியாவிற்கு வெளியே செல்லும் பயணிகளும் தங்களுடன் இந்தியச் செலாவணியை எடுத்துச் செல்லக் கூடாது. வெளிநாட்டுச் செலாவணி எவ்வளவு வேண்டுமானாலும்இந்தியாவிற்குள் கொண்டு வரலாம். ஆனால் வெளிநாட்டுச் செலாவணியை இந்தியாவிலிருந்து எடுத்துச் செல்வதுமீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவில் வெளிநாட்டு முதலீடுகளும், வெளிநாட்டில் இந்திய முதலீடுகளும்**

வெளிநாட்டு மூலதனம் இந்தியாவில் முதலீடு செய்யப்படுவதை இந்தியா வரவேற்கிறது. வெளிநாட்டு முதலீடுகளைப் பொறுத்தவரை வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுக் கொள்கை, பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு 1949 ஏப்ரலில் அளித்த அறிக்கைப்படி அமைந்துள்ளது.

1. இந்திய மூலதனத்துக்கும் வெளிநாட்டு மூலதனத்துக்கும் எந்தவிதப் பாகுபாடும் கிடையாது.

2. இலாபத்தையும், முதலையும் திருப்பி அனுப்ப முழுச் சுதந்திரம் உண்டு.

3. நாட்டுடைமையாக்கப்படும்போது, நியாயமான நட்டஈடு கொடுக்கப்படும்.

குறிப்பிட்ட விதிமுறைகளைப் பூர்த்திசெய்யின், இலாபத்தை அனுப்ப யாதொரு தடையும்இல்லை. இத்தகையப் பணமாற்றல்கள் விற்பனை ஊதியம் (Royalty) தொழில் நுட்பச் செலுத்தல்கள் (Technical consultancy fees) ஆகியவற்றிற்கு ரிசர்வ் பாங்கின் முன் அனுமதி தேவை. 1950 சனவரி 1-க்குப் பின்னர், இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டத் தொழில்களில் முதலீடு செய்திருந்தால் அம் முதலீடு, இலாபம் ஆகியவற்றை மாற்றல் செய்யலாம். ஆனல், இத் திட்டம் பங்குச்சந்தையில் வாங்கிய பங்குகளுக்குப் பொருந்தாது. தவணைமுறையில், 1950-க்கு முன் செய்யப்பட்ட முதலீடுகளை, ரிசர்வ் பாங்க் முன் அனுமதியின்றித் திரும்ப அனுப்பலாம்.

வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள், எந்த ஓர் இந்தியத் தொழில் அல்லது வியாபாரத்திலும் முதலீடு செய்ய அனுமதிக்கப்படுவர். ஆனல், முதல் அல்லது இலாபத்தை, இந்தியாவிலிருந்து வெளியே எடுத்துச் செல்லக் கூடாது.

வெளிநாட்டு ஆவணங்களை, இந்தியர்கள் வாங்கப் பொதுவாக அனுமதிக்கப்படமாட்டார்கள். இந்திய ஏற்றுமதியில் பெருக்கம் ஏற்படுமாயின் அல்லது வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியம் அதிகமாகுமாயின், இந்தியர்கள் வெளிநாடுகளில் முதலீடு செய்ய அனுமதிக்கப்படுவார்கள். ஆனல், இந்தியாவிற்கு அனுப்பப்படும் இலாபம், இலாப ஈவுத்தொகை, வட்டி ஆகியவை மீது எவ்விதக் கட்டுப்பாடும் கிடையாது.

**புள்ளி விபரத் தாக்கீதுகள் (Statistical returns)**

அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளர்கள், வெளிநாட்டுச் செலாவணி விற்பதைக் கண்காணிப்பதற்காக, அவர்கள் வெளிநாட்டுச் செலாவணி விற்றதற்கான அறிக்கைகளையும் அதற்கான மனுக்களையும் ரிசர்வ் பாங்குக்கு அனுப்பவேண்டும். இவை ரிசர்வ் பாங்கின் வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுத்துறையால் பரிசீலிக்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளர்கள் பெறும் வெளிநாட்டுச் செலாவணி பற்றி ரிசர்வ் பாங்கிற்குத் தெரியப்படுத்த வேண்டும். இவ் விபரங்களின் அடிப்படையில், ரிசர்வ் பாங்க், வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் சரியாகப் பின்பற்றப்படுகின்றனவா என்று கண்காணிப்பதோடு இந்தியாவில் வெளிநாட்டுச் செலுத்துநிலையையும் (Balance of payments) தயார் செய்கிறது.

**ஸ்டர்லிங் நடவடிக்கைகள்**

ரிசர்வ் பாங்கின் ஸ்டர்லிங் நடவடிக்கைகள் பற்றிய புள்ளி விவரங்கள், கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

1935-36-லிருந்து, 1973-74 வரையில், 1946-47, 1956-57, 1957-58, 1960-61, 1961-62, 1962-63, 1964-65, 1968-69, 1969-70, 1970-71, 1971-72 ஆகிய ஆண்டுகளில், ஸ்டர்லிங் நிகர விற்பனையே அதிகம்; பிற ஆண்டுகளில், ஸ்டர்லிங் வாங்கியதே அதிகம் என்பதை அட்டவணைமூலம் அறியலாம். அரசாங்க நடவடிக்கைகள் பற்றிய புள்ளி விபரங்கள், இப் புள்ளி விபரங்களில் அடங்கா.

## அட்டவணை 1.

**ரிசர்வ் பாங்கின் ஸ்டர்லிங் நடவடிக்கைகள் நிகரக் கொள்முதல் விற்பனை**

| | (+) | (—) |
|---|---|---|
| | | ரூபாய் |
| | ஆயிரக்கணக்கில் | இலட்சக்கணக்கில் |
| 1944-45 | 8,69,95 | 115,99 |
| 1945-46 | 7,92,67 | 105,65 |
| 1946-47 | —6,55,36 | —87,51 |
| 1947-48 | 914,76 | 121,90 |
| 1948-49 | —5,26,58 | —70,31 |
| 1949-50 | 13,95,48 | 185,98 |
| 1950-51 | 23,55,55 | 313,95 |
| 1951-52 | 3,90,01 | 51,73 |
| 1952-53 | 7,39,82 | 98,57 |
| 1953-54 | 9,22,93 | 123,05 |
| 1954-55 | 7,13,62 | 95,12 |
| 1955-56 | 3,88,41 | 51,72 |
| 1956-57 | —14,43,03 | —192,67 |
| 1957-58 | —8,92,96 | —119,23 |
| 1958-59 | 1,03,61 | 13,72 |

| | | |
|---|---|---|
| 1959-60 | 4,29,51 | 57,24 |
| 1960-61 | —3,08,02 | —41,14 |
| 1961-62 | —4,03,65 | —53,91 |
| 1962-63 | —1,54,01 | —20,63 |
| 1963-64 | —4,93,29 | 65,74 |
| 1964-65 | —2,74,47 | —36,68 |
| 1965-66 | 4,02,11 | 53,50 |
| 1966-67 | 4,13,98 | 104,15 |
| 1967-68 | 2,54,56 | 53,82 |
| 1968-69 | —89,21 | —13,99 |
| 1969-70 | —1,01,63 | —19,30 |
| 1970-71 | —4,99,20 | —90,94 |
| 1971-72 | —69,44 | —19,29 |
| 1972-73 | 9,52,55 | 176,89 |
| 1973-74 | 20,93,53 | 387,28 |

# 11 . ரிசர்வ் பாங்கின் அமைப்பு

## (Organisation of the Reserve Bank)

தொடக்கத்தில் ரிசர்வ் பாங்கில் இரண்டு துறைகள் மட்டுமே இருந்தன. தொடர்ந்த வளர்ச்சியினுலும் முன்னேற்றத் திலுைம் பின்பு அத் துறைகளின் எண்ணிக்கை மிகுந்தன. இப் பொழுது மத்திய அலுவலகத்தில் 13 துறைகள் உள்ளன. அவை முறையே:

1. செயலாளர் துறை (Secretary's Department)
2. நிருவாகமும், ஆள்துறையும் (Department of Administration and personnel)
3. கணக்குகள், செலவினங்கள் துறை (Department of Accounts and Expenditure)
4. கட்டடத் துறை (Premises Department)
5. ஆய்வுத் துறை (Inspection Department)
6. சட்டத் துறை (Legal Department)
7. வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் துறை (Exchange control Department)
8. வேளாண்மைக் கடன்துறை(Agricultural credit Department)
9. வங்கியியல் நடவடிக்கையும் வளர்ச்சித் துறையும் (Department of Banking operations and Development)
10. தொழில் நிதித் துறை (Industrial finance Department)
11. வங்கியியலில் ஈடுபடாத கம்பெனிகளின் துறை (Department of non-banking companies)

12. பொருளியல் துறை (Economic Department)

13. புள்ளி இயல்துறை (Department of Statistics)

ரிசர்வ் பாங்கில் தொடக்கக் காலத்திலிருந்தே இயங்கி வரும் இரண்டு துறைகளான பணத்தாள் வெளியிடும் துறை (Issue Department) பற்றியும் வங்கியியல் துறை (Banking Department) பற்றியும் இப்பொழுது காண்போம்.

**பணத்தாள் வெளியிடும் துறை (Issue Department)**

பணத்தாள் வெளியிடும் பணி மிகச் சீரிய முறையில் நடத்தப் படல்வேண்டும் என்பதற்காக, இந்தியா 10 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு,ஒவ்வொரு வட்டமும் பணம் வெளியிடும் துறையின் கிளை நிறுவனத்தின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிளை நிறுவனமும் பணத்துறை (Cash Department) பொதுத்துறை (General Department) என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்விரு துறைகளும் நாணய அலுவலகர் (Currrency officer) ஒருவரின் பொறுப்பில் உள்ளன.

**பணத்துறை**

ரிசர்வ் பாங்கிற்கும் பணப்பெட்டகங்களுக்கும் இடையே நடக்கும் பணநடவடிக்கை பணம் அனுப்புதல் ஆகிய பணி களைப் பணத்துறைப் பார்த்துவருகிறது. கருவூல அலுவலகரின் (Treasury officer) தலைமையில் பணத்துறை செயல்படுகிறது. பணம் வெளியிடும் துறையும்,வங்கியியல் துறையும் ஒரே கட்டடத் தில் செயல்பட்டால் அவ் விரண்டையும்,பொதுவான ஒரு கருவூல அலுவலகர் பார்த்துக் கொள்கிறார். ரிசர்வ் பாங்கின் பேரில் எழுதப்பட்ட காசோலைகளுக்கு, அரசாங்கங்களுக்கும், வங்கிகளுக் கும் பணம் கொடுத்தலும், மேலும், அரசாங்கங்களிடமிருந்தும் வங்கிகளிடமிருந்தும் வைப்புகளைப் பெறுதலும் ஆகிய பிற பணிகளையும் இத் துறை செய்யும்.

**பொதுத்துறை**

நாசிக்கில் (Nasik) இருக்கும் இந்தியப் பத்திரங்கள் அச்சகத் திலிருந்து(India security press)பணத்தாள்களை வெளியிடும் ஏற்பாடு களைச் செய்தல், பணப்பெட்டகங்களுக்கு அவற்றை அனுப்புதல், பணத்தாள் வெளியிடும் துறையின் சொத்துகளைப் பராமரித்தல், பணப்புழக்கம் பற்றியக் கணக்குகளைப் பராமரித்தல், ஆகியப் பணி களைப் பொதுத்துறை செய்கிறது.இந்தப் பொதுத்துறை ஆறு பிரிவி

களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன: 1. நீக்கம் செய்யப் பட்ட தாள்களைச் சரிபார்க்கும் கிளை (Cancelled note verification branch)

1. பணம் வெளியிடும் துறையால் நீக்கம் செய்யப்பட்ட பழைய, பயனற்ற மற்றும் புழக்கத்திற்குத் தகுதி யற்றத் தாள்களை அளவாலும், தரத்தாலும் (Quantity and quality checks) தணிக்கை செய்து, அது பற்றி, ஆணை பிறப்பிக்கிறது.

2. நீக்கம் செய்யப்பட்ட தாள்கள் பெட்டகப் பிரிவு: (Cancelled note vault section)

இப் பிரிவு நீக்கம் செய்யப்பட்ட தாள்களைத் தீக்கிரையாக்கி அழிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறது.

3. கோருரிமைக் கிளை (claims branch)

ரிசர்வ் பாங்கின், தாள்கள் திருப்பி அளிக்கும் விதிகளுக்கு (Bank's note refund rules) உட்பட்டு, இப் பகுதி தொலைந்து போன, திருடப்பட்ட, வீணான, மாற்றப்பட்ட மற்றும் செம்மையற்ற தாள்கள் பற்றிய மனுக்களைக் கவனிக்கிறது.

4. ஆக்கக் கிளை (Resources branch)

பல்வேறு இடங்களில் பணத்தாள்களை வெளியிடும் ஏற்பாடு களைச் செய்வதும், தேவைக்குமேல் இருக்கும் தாளைப் பணப் பெட்டகங்கள்மூலமாக வாங்கிக் குறைப்பதும் இப் பிரிவின் வேலையாகும்.

5. கணக்கு கிளை (Account's branch)

புழக்கத்திலுள்ள தாளின் கணக்கும், இருப்பிலுள்ள தாளின் கணக்கும் வெளியீட்டுத் துறையின் பெட்டகத்தில் உள்ள தாள் மற்றும் நாணயங்களின் நிலுவை பற்றிய கணக்கு வகையும் இங்கே இருக்கும்.

6. பதிவுக் கிளை (Registration branch)

பம்பாய் அலுவலகத்தில் மட்டுமே உள்ள இப் பிரிவு மைய வங்கி வெளியிட்ட உயர் எண் பணத்தாள் பற்றிய (High denomination notes) பதிவு ஏட்டையும், விலக்கிய உயர் எண் பணத்தாள் பற்றிய பதிவு ஏட்டையும் வைத்திருக்கும் பொறுப்பைப் பெற்றிருக்கிறது.

## வங்கியியல் துறை (Banking Department)

ரிசர்வ் பாங்க் அரசாங்க வங்கியாகவும், வங்கியர்களின் வங்கியாகவும் செயல்படுவதால் உண்டாகும் பணிகள் இந்தத் துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. ஜெய்ப்பூரில் உள்ள பொதுக்கடன் அலுவலகம் தவிரப் பத்து அலுவலகங்கள் இந்தத் துறைக்கு உள்ளன. இந்தத் துறை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவை

1. பொது கணக்குத் துறை (Public accounts department)
2. பொதுக் கடன் அலுவலகம் (Public debt office)
3. வைப்புக் கணக்குத் துறை (Deposit accounts department)
4. ஆவணத் துறை(Securities Department)

இத் துறை நான்கையும் பற்றி ஒரு சிறு குறிப்பு கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

## பொதுக் கணக்குத் துறை (Public accounts department)

இந்தத் துறை மத்திய, மாநில அரசுகள், அரசாங்கத்துறை, ஆகியவற்றின் வைப்பினைப் பெறுவதோடல்லாமல் அவை பற்றிய கணக்கையும் வைத்திருக்கிறது. அரசின் பண நடவடிக்கைகளை நோக்குதல், அரசின் காசோலைகளை வசூல் செய்தல், அரசின் கடன்களுக்கு வட்டிப்பணம் கொடுத்தல், அரசுக் கடன்களைத் திருப்பிக் கொடுத்தல், கருவூல உண்டியல்களை (Treasury bills) வெளியிடுதல், அவற்றைத் திரும்பப் பெறுதல் ஆகியவை இத் துறையின் தலையாய பணிகளாகும். மத்திய, மாநில அரசுகளுக்குச் சேரவேண்டியப் பணத்தைப் பெற்று அரசாங்கத்தின் கணக்கில் வைப்பதோடு அரசுகளின் சார்பாகக் கொடுக்கவேண்டிய பணத்தையும், இத் துறை கொடுக்கிறது.

## பொதுக்கடன் அலுவலகம் (Public Debt Office)

அரசாங்கக்கடன் பத்திரங்களை வெளியிடல், கெடு நாள்களில் அவற்றை மீட்டல், அவற்றிற்கான வட்டியைத் தவணைதோறும் கொடுத்தல், கடன் பத்திரங்களைப் புதுப்பித்தல், மாற்றுதல், ஒன்றுக்குதல் (Consolidation) பிரித்தல் (Sub-division) போன்ற வேலைகளை இத் துறை செய்கிறது.

## வைப்புக் கணக்கின் துறை (Deposit Accounts Department)

இந்தத் துறை ரிசர்வ் பாங்கின் கணக்கினையும், அட்டவணையிலிட்ட வங்கிகள் (Scheduled banks) சட்டப்படி வைக்க வேண்டிய

இருப்புகளையும் கூட்டுறவு மற்றும் அட்டவணையிலிடாத வங்கிகளின் (Non-scheduled Banks) வைப்புகளையும் காத்துவருகிறது. ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டத்தின் 42-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளபடி அட்டவணையிலிட்ட வங்கிகள் சட்டப்படி அனுப்பும் கணக்கினையும், விவரத் தாக்கீதுகளையும், இந்தத் துறை வாங்கிக் கொள்கிறது. மேலும், பிறநாட்டு மைய வங்கிகளின் நடப்பு வைப்புக் கணக்குகளும், இந்தத் துறையின் பொறுப்பில் உள்ளன. ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியச் சட்டம், பிரிவு, 17 (13)-ன்படி பன்னாட்டுப் புனரமைப்பு, வளர்ச்சி வங்கி (International Bank for Reconstruction and Development) மற்றும், பன்னாட்டு நாணய நிதி (Internationl Monetary Fund) நடப்புக் கணக்கின்கீழ் ரூபாய் வசதிகளை (Rupee Facilities) பிறநாட்டு மைய வங்கிகளுக்கு, ரிசர்வ் பாங்க் தருகிறது. மாநிலக் கூட்டுறவு வங்கிகள், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (Industrial Development Bank of India) இந்தியத் தொழில்நிதிக் கூட்டுரு (Industrial Finance Corporation of India) மாநில நிதியக் கூட்டுருக்கள் (State Financial Corporations) வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு (Agricultural Refinance Corporation) வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு (Deposit Insurance Corporation) ஆகிய நிறுவனங்களின் தகுதிபெற்ற மாற்றுச் சீட்டுகளை மறுதள்ளுபடி செய்தல் மற்றும் கடன் வசதி அளித்தல் போன்ற பணிகளையும் இந்தத் துறை செய்கிறது. அட்டவணையிலிட்ட வங்கிகளுக்கும், மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும், மத்திய அவை அவ்வப்போது அனுப்பும் ஆணைகளுக்கேற்பக் கடன் வசதிகளை, இத் துறையே செய்து கொடுக்கிறது. பல்வேறு இடங்களில் உள்ள தீர்வகங்கள் (Clearing houses) செயல்படுவதையும் கண்காணிக்கிறது.

## ஆவணத்துறை (Securities Department)

அரசாங்கத்துறை மற்றும் ஒப்புதல் பெற்ற நிறுவனங்கள் சார்பில் ஆவணம் வாங்குதல், விற்றல், மற்றும் அரசாங்க அதிகாரிகளால் கொடுக்கப்படும் ஆவணங்களைப் போற்றிக் காத்தல் போன்ற பணிகளை இத் துறை செய்கிறது. ரிசர்வ் பாங்கின் ஒப்புதல் பெற்ற தரகர்கள் வழியாய் ஆவணங்கள் வாங்கவும், விற்கவும்படுகின்றன. காலக்கெடு முடிவில் வட்டியை வசூல்செய்து பத்திரங்களின் உரிமையாளர்களுக்கு இத் துறை அனுப்பி வைக்கிறது. மேலும், பணத்தாள் வெளியிடும் துறை, வங்கியியல் துறை ஆகியவற்றின் ஆவணத்தையும் தன்னுடைய காப்பில் வைத்துக் கொள்கிறது. காப்பீட்டுக் கம்பெனிகளும், பிறநாட்டு வங்கிகளும் சட்டப்படி வைக்க வேண்டிய வைப்புகளுக்காக ஆவணங்

களைக் கொடுக்கும்போது அவற்றை இத் துறை வைத்துக்கொள்கிறது. வங்கிகள் மற்றும் நிதியகங்கள் கடன் பெறுவதற்காக ஈடு கொடுக்கும் ஆவணத்தையும் வைத்துக்கொள்கிறது. ரிசர்வ் பாங்கில், வங்கிகளின் சார்பில் கருவூல மாற்றுச் சீட்டுகளை வாங்கல்-விற்றல் ஆகிய பணியை இத் துறை ஏற்றிருக்கிறது.

மத்திய அலுவலகத் துறைகள் (Central office departments)

பம்பாயில் உள்ள மைய அலுவலகத்தில் 13 துறைகள் உள்ளன என்று முன்பே கூறப்பட்டது. அத் துறைகளின் பணிகளை இங்கே காண்போம்.

செயலாளர் துறை (Secretary's Department)

ஆளுநருக்கும், மத்திய அவைக்கும் நேரடித் தொடர்புள்ள அலுவல்களை இத் துறை நோக்கும். பொதுக்கடன் துறை நிருவாகம், மத்திய, மாநில அரசுகளுக்கு அவ்வப்போது கடன் உதவி அளித்தல், ரிசர்வ் பாங்கின் வெளி அங்காடி நடவடிக்கைகளைக் கவனித்தல், மத்திய, மாநில அரசுகளின் கடன் மற்றும் கருவூல மாற்று உண்டியல்களை வெளியிடல் பற்றிய செய்திகள், அரசாங்க உபரி நிதிகளை முதலீடு செய்தல், பன்னாட்டு நிதி நிறுவனத்தோடும் (International financial institutions) உலக வங்கியோடும் (World Bank) ரிசர்வ் பாங்க் தொடர்புள்ள வேலைகளைக் கவனித்தல், ஆகிய பணிகளை இத் துறை செய்கிறது. பொது மக்களிடமிருந்து கடன் எழுப்புவதற்கான அறிவுரைகளை மாநகராட்சிகளுக்கு இத் துறை அளிக்கிறது. இத் துறை மும்முரப் பருவத்திற்கும் (Busy season) மந்தப் பருவத்திற்குமான (Slack season) கடன் கொள்கையை உருவாக்கியதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. கடன் கொள்கை மற்றும் வங்கியியல்பற்றிய வேலைகளைக் கவனிக்க இத் துறையில் ஒரு கடன் திட்ட வங்கிய வளர்ச்சிக் கழகம்(Credit Planning and Banking Development Cell) அமைக்கப்பட்டுள்ளது. பண அங்காடியில் (Money market) அவ்வப்போது ஏற்படும் நிதி பற்றிய மாறுதல்களை விளக்கமான அறிக்கைகள் மூலம் இத் துறை தெரிவிக்கிறது.

நிருவாகமும் ஆள்துறையும் (Department of Administration and Personnel)

இத் துறை, தலைமை நிருவாகரின் பொறுப்பில் உள்ளது. அலுவலர்க்குப் பயிற்சி அளித்தல், பொது நிருவாகம், வங்கி அலுவலர்களை நியமித்தல், பதவிக் காலத்தை முடிவு செய்தல், அலுவலர்களுடைய நலன்களைக் கவனித்தல் ஆகியவை இத் துறையின் பணிகளாகும். இத் துறையில் ஐந்து பிரிவுகள் உள்ளன.

**ஆள் எடுக்கும் பிரிவு (Recruitment Section)**

முதல் பிரிவான ஆள் எடுக்குப் பிரிவு அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள் அல்லாத மற்ற எல்லா அலுவலர்களையும் தேர்ந்தெடுத்துப் பணியில் அமர்த்தும் பொறுப்பைப் பெற்றிருக்கிறது.

**பயிற்சி அளிக்கும் பிரிவு (Training Section)**

இரண்டாவது பிரிவான பயிற்சி அளிக்கும் பிரிவு பாங்கின் எல்லா அலுவலர்களுக்கும் அளிக்கப்படும் பயிற்சி வசதிகளைக் கண்காணிக்கிறது. ரிசர்வ் பாங்கால் நடத்தப்படும் பயிற்சிக் கல்லூரி, கூட்டுறவு வங்கியர்களின் பயிற்சிக் கல்லூரி, அலுவலர்களின் பயிற்சிக் கல்லூரி, பிரதேசப் பயிற்சிக் கல்லூரிகள் ஆகியவற்றை இத் துறை கவனிக்கிறது.

**அலுவலர் பகுதி (Staff Section)**

மூன்றும் பகுதியான இப் பகுதி, அலுவலகங்கள் மற்றும் பிற துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட அலுவலர் எண்ணிக்கை, அலுவலர்களின் மாற்றல்கள், பதவி உயர்வுகள், சார்பாளர்களாக அனுப்புதல், ஒழுங்கு மற்றும் பணி முடிவுகள், முறையீடுகள் போன்றவற்றைக் கவனிக்கிறது.

**ஆள் துறை உறவுப் பிரிவு (Personal Relations Section)**

நான்காம் பிரிவான இப் பிரிவு பொது ஊதியக் கொள்கை, வேலை நிலைமை, அலுவலர்ச் சங்கங்கள், தொழில் தகராறுகளை நீதிமன்றங்களின்மூலம் தீர்த்துவைத்தல் போன்ற பணிகளைச் செய்கிறது. மேலும், ரிசர்வ் பாங்க் அலுவலர்ச் சிற்றுண்டிச்சாலைக்கு நிதி அளித்தல், அதைக் கவனித்தல், விளையாட்டுச் சங்கங்கள் நடத்தல், மருத்துவ வசதி அளித்தல் போன்ற இதரப் பணிகளையும் இப் பிரிவு செய்கிறது.

**அமைப்பு-முறைகள் பிரிவு (Organisation and methods division)**

ஐந்தாம் பிரிவான இப் பிரிவு 1967 ஆகஸ்ட் திங்களில் அமைக்கப்பட்டது. ரிசர்வ் பாங்கின் பல்வேறு துறைகளும் திறம்படச் செயல்படுவதற்காக இப் பிரிவு வேலை செய்யும் வகையையும் முறைகளையும் அவ்வப்போது சீர்ப்படுத்துகிறது. அலுவலர்கள், தாங்கள் வேலை செய்யும் முறைகளில் முன்னேற்றம் காணமுடியும் என்று கருதி, இப் பிரிவு அலுவலர்களின் ஆய்வுரைத் திட்டத்தை வகுத்திருக்கிறது. அப்படி அலுவலர்களிடமிருந்து வரும் எல்லா ஆய்வுரைகளையும் ஆராய்ந்து, நல்ல ஆய்வுரைகளுக்குப் பரிசும் கொடுக்கிறது. ரிசர்வ் பாங்கில் உள்ள இந்திப் பிரிவு இத்

துறையைச் சேர்ந்ததாகும். ரிசர்வ் பாங்கில், இந்தி மொழியைப் பரப்புவதில் இப் பிரிவு சம்பந்தப்பட்டுள்ளது. ரிசர்வ் பாங்கின் செய்தி அறிக்கைகள் (Press notifications) பொது மக்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய அறிக்கைகள், ரிசர்வ் பாங்கின் விதிகள், கட்டுப்பாடுகள் போன்றவற்றை இந்தியில் மொழி பெயர்த்தளிப்பது இந்த இந்திப் பிரிவின் பணிகளாகும். பாங்க் அலுவலர்களுக்கான இந்தி வகுப்பையும் இப் பிரிவே நடத்துகிறது.

உத்தியோக அவை (Services board)

1968 ஜூலைத் திங்களில் அமைக்கப்பட்ட இந்த அவை ஒரு பகுதி நேரத் தலைவர், முழு நேரச் செயலாளர், ஆளுநரால் நியமிக்கப்படும் அங்கத்தினர்கள் ஆகியோரைக் கொண்டது. ஆள் நியமனம், நியமனம் செய்யும்போது பின்பற்ற வேண்டிய கொள்கைகள், பதவி உயர்வுகள், பதவி மாற்றங்கள், ஒழுங்கு நடவடிக்கைகள் ஆகியவைபற்றித் தமது ஆலோசனைகளை ஆளுநரால் கேட்கப்படும் பொழுது, இந்த அவை தெரிவிக்க வேண்டும்.

கணக்குகள் செலவினங்கள் துறை (Department of accounts & expenditure)

தலைமைக் கணக்கர் ஒருவரின் பொறுப்பில் இருக்கும் இத் துறை, காகிதப்பணம் வெளியிடும் துறையிலும், வங்கியியல் துறையிலும் உள்ள ரிசர்வ் பாங்க் கணக்குகளைப் பராமரிக்கும் வேலையையும்,கண்காணிக்கும்வேலையையும்செய்கிறது. வரந்தோறும் மற்றும் ஆண்டுதோறும் கணக்குகளைத் தயார் செய்வதும், பல்வேறு துறைகளின் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதும் இத் துறையாகும். பணத்தாளின்அமைப்பு—அச்சடிப்பு, வெளியீடு மற்றும் நாணயங்களை உருவாக்கல், வினியோகித்தல், பணப்பெட்டகங்கள் அமைத்தல், ரிசர்வ் பாங்கின் பணம் அனுப்புகை வசதித் திட்டம் (Reserve banks remittance facilities scheme)பிறநாட்டு மையவங்கி பன்னாட்டு நாணய நிதி (I.M.F.)மேலும் பன்னாட்டுப் புனரமைப்பு வங்கி (I. B. R.D.)ஆகியவற்றின் கணக்குகள் ஆகியவை பற்றிய கொள்கைகளைக் கவனிக்கிறது. பாங்க் அலுவலர்களின் சேமநல நிதி, (provident fund) ஓய்வுநிதி, உத்தரவாத நிதி ஆகியவை இவ் இலாக்காவிலேயே உள்ளன. மேற்கண்ட நிதிகளிலிருந்து கடன் கொடுத்தல், பாங்க் அலுவலர்களுக்கு வீடு கட்டக் கடன் கொடுத்தல் ஆகிய வேலைகளையும் இவ் விலாக்கா செய்கிறது. பிற நாட்டு மைய வங்கிகளுடன் ரிசர்வ் பாங்க் வைத்திருக்கும் கணக்குகள் ரிசர்வ் பாங்கின் மொத்த முதலீடுகள் பற்றிய கணக்குகள், மத்திய அரசின் கருவூல மாற்று உண்டியல்களின் கணக்குகள் ஆகியவை இத் துறையில் உள்ளன. மேலும் இத் துறை

மத்திய, மாநில அரசுகளுக்கான கடன்களை எழுப்புதல், திருப்பி அளித்தல் அதுசம்பந்தப்பட்ட செயல்முறைச்செய்திகளைச் கவனித் தல், பொதுக் கடனை நிருவகித்தல், ரிசர்வ் பாங்கின் பொதுக் கடன் அலுவலகங்களை மேற்பார்வையிடல், மற்றும் மாநில அரசு களின் ரூபாய்க் கடன்களின் கணக்குகளை வைத்திருத்தல் ஆகிய பணிகளைச் செய்கிறது. அலுவலகங்களின் அகக் கண்காணிப்புக் கான (Internal inspection) ஏற்பாடுகளையும் செய்கிறது. இத் துறையின் ஒருசில கணக்குப் பணிகள் நாக்பூரில் உள்ள வங்கியல் துறையின் மத்தியக் கணக்குப் பிரிவால் செய்யப்படுகின்றன. மத்தியக் கணக்குப் பிரிவு மத்திய, மாநில அரசுகளின் முக்கிய கணக்குகளை நிருவகித்தல், அரசாங்கங்களுக்குத் அவ்வப் போதைக் குத் தேவையான கடன்களைக் கொடுத்தல், கடன்களைத் திருப்பி வாங்குதல், மாநில அரசுகளின் உபரி நிதியை மத்திய அரசின் கருவூல மாற்று உண்டியல்களில் முதலீடு செய்தல் ஆகியவற்றைக் கவனிச்கிறது.

## கட்டடத்துறை (Premises Department)

ஒரு மேற்பார்வைப் பொறியாளரின் உதவியுடன், ஒரு தலைமை அதிகாரி இத் துறையின் பணிகளைச் செய்கிறார். இத் துறை பாங்க் அலுவலகங்களுக்கும், பயிற்சி நிறுவனங்களுக்கும் கட்டடம் கட்டுதல், அலுவலர்களுக்குக் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல் ஆகியவற்றைச் செய்கிறது. அலுவலகங் களுக்கும், குடியிருப்புக்கும் கட்டடங்களை வாடகைக்கு விடும் ஏற்பாடுகளையும் இத் துறை செய்கிறது. அந்தந்த இடத்திற்கு உரிய அலுவலகங்கள் (local offices) அக் கட்டடங்களைப் பேணிய போதிலும் கட்டடப் பராமரிப்புச் சேவையை இத் துறையே ஏற்கிறது. அலுவலகக் கட்டடங்களாக இருப்பின், அவற் றுக்குத் தேவையான முழு வசதி செய்து கொடுப்பதும், குடியிருப்புக் கட்டடங்களாக இருப்பின் அவற்றுக்கான வாடகையை முடிவு செய்வதும் இத் துறையின் பணியாகும்.

## ஆய்வுத் துறை (Inspection Department)

பாங்க் கண்காணிப்பாளரின் பொறுப்பில் செயல்படும் இத் துறை அவ்வப்போது பாங்கின் அலுவலகங்களையும், துறை களையும் அக ஆய்வு (Internal Inspection) செய்து, அதற்கான அறிக்கைகளைக் கணக்குகள்-செலவினங்கள் துறைக்கு (Departmet of accounts and expenditure) அனுப்பிவைக்கிறது. வேலைப் பளுவைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, இருக்கக்கூடிய அலுவலர் களின் எண்ணிக்கை போதுமா என்று ஆராய்ந்து, அது பற்றிய பரிந்துரைகளையும் செய்கிறது. 1969 ஜூலை வரை, இத் துறை

ரிசர்வ் பாங்கின் அலுவலகங்களையும் துறைகளையும் ஆய்வு செய்யும்போது, அகத் தணிக்கையும் (Internal audit) செய்து வந்தது. அதற்குப்பிறகு, இந்த அகத் தணிக்கையானது பம்பாய், கல்கத்தா, சென்னை, புதுடில்லி ஆகிய இடங்களில் உள்ள வட்டாரத் தணிக்கைக் கழகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த வட்டாரத் தணிக்கைக் கழகங்கள் ரிசர்வ் பாங்க் பொறுப்பிலேயே இயங்குகின்றன. இந்த வட்டாரத் தணிக்கைக் கழகங்கள் கணக்குகளைப் பரிசீலித்தல், பல்வேறு அலுவலகங் களிலும், துறைகளிலும், திடீர்ச் சோதனை செய்தல் ஆகிய பணிகளைச் செய்கின்றன. இத் துறை அலுவலக நிருவாக சம்பந்தப்பட்ட செயல்முறை பற்றி ஆழ்ந்த கவனம் செலுத்தி வருகிறது. இந்த ஏற்பாடுகள், ரிசர்வ் பாங்க் மைய அலுவலகத் தால் இடப்படும் நிருவாக உத்தரவுகளை அலுவலகங்கள் சரியாகப் பின்பற்றுகின்றனவா என்று கண்காணிக்கவே ஆகும்.

சட்டத்துறை (Legal Department)

சட்ட ஆலோசகரைத் தலைவராகக் கொண்ட சட்டத் துறையின் முக்கியப்பணி ரிசர்வ் பாங்கின் பல்வேறு துறைகளால் அவ்வப்போது குறிப்பிடப்படும் பல்வேறு செய்திகள் பற்றித் தனது மேலான அறிவுரைகளை வழங்குவதேயாகும். ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியாச் சட்டம், வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் (Banking regulation act), வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்கு முறைச் சட்டம் (Foreign exchange regulation act), பொதுக்கடன் சட்டம் (Public debt act), தொழில் தகராறுகளின் சட்டம் (Industrial despectes act), ஆகியச் சட்டங்களின் சரத்துகளுக்கு இத் துறை விளக்கம் அளிக்கிறது. ரிசர்வ் பாங்க் அலுவலர்கள் சம்பந்தப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பற்றிய விளக்கங்களையும் இத் துறை அடிக்கடி அளித்து வருகிறது. புதிய பூர்வாங்கச் சட்ட நகல்களைத் தயார் செய்வதும், இருக்கின்ற சட்டங்களுக்குத் திருத்தங்கள் கொணர்வதும் இவ் விலாகாவின் பணிகள். மேலும், விதிகள், ஒழுங்கு முறைகள், சட்டபூர்வமான அறிவிப்புகள், மேற்கூறப்பட்ட சட்டங்களின் கீழ் இடப்பட்ட உத்தரவுகள் ஆகியவை பற்றித் திருத்தங்களையும் இத் துறை கொணர்கிறது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (Industrial development bank of India), யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா (Unit trust of India), வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு (Agricultural refinance corporation), வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு (Deposit insurance corporation) ஆகிய நிறுவனங்களுக்கும் இத் துறை சட்ட ஆலோசகராகப் பணிபுரிகிறது.

## 7. வெளிநாட்டு செலாவணிக் கட்டுப்பாட்டுத்துறை

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, இந்தியப் பாதுகாப்பு விதிகளின் கீழ் (Defence of India Rules) மத்திய அரசாங்கம் வெளிநாட்டுச் செலாவணியைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்களை ரிசர்வ் பாங்கிற்குத் தற்காலிகமாக அளித்தது. 1939 செம்டம்பரில் இத் துறை அமைக்கப்பட்டது. இந்தியப் பாதுகாப்புச்சட்ட விதிகளின் கீழ், ரிசர்வ் பாங்கிடம் ஒப்படைக்கப் பட்ட வெளிநாட்டுச் செலாவணி, தங்கக்கட்டிகள், பத்திரங்கள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை இத் துறை கவனித்து வந்தது. ஆனால், பின்னர்,இப் பணிகள் வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்காற்றுச் சட்டத்தின் (Foreign exchange regulation act) கீழ் சட்டபூர்வமாக ரிசர்வ் பாங்கிற்குக் கொடுக்கப்பட்டன. இத் துறை, வங்கியல் நடவடிக்கை மற்றும் வளர்ச்சித் துறையுடன் (Department of banking operations and development) இணைந்து அதிகாரப்பூர்வமாக வெளிநாட்டுச் செலாவணி வைத்திருப்பவர் களைக் கண்காணிக்கிறது. பம்பாயிலுள்ள இத் துறையின் மைய அலுவலகம் கட்டுப்பாடு அதிகாரியின் (controller) தலைமையில் இயங்குகிறது. இத் துறையின் பணிகள் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளன. 1. ஏற்றுமதிகள் 2. வாணிபம் (ஏற்றுமதி அல்லாதது) 3. உரிமம் மற்றும் முகவர் ஏற்பாடுகள் (licensing and agency arrangements) 4. கடன்கள் மற்றும் மேல்வரைப் பற்றுகள் (loans and overdrafts) 5. தனியார் பயணம் (travel-private) 6. பொதுத்துறையினர் பயணம் (travel-public) 7. வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகள் 8. புள்ளியியல் 9. கொள்கை மற்றும் ஒருங்கிணைப்பு 10. வெளியீடுகள் (publications) இத் துறையின் கிளை அலுவலகங்கள் அகமதாபாத், பம்பாய், கல்கத்தா, கான்பூர், சென்னை, புதுடில்லி ஆகிய இடங்களில் இருக்கின்றன. இத் துறையின் ஒருசில பணிகளுடன் செயல்படும் (முக்கியமாக பயண மனுக்களைக் கையாளுதல்) சிறிய அலுவலகங்கள் பெங்களூர், ஹைதராபாத், ஜெய்பூர், நாக்பூர், பாட்னு ஆகிய இடங்களில் இருக்கின்றன.

### வேளாண்மைக் கடன் துறை

1933-ல் ரிசர்வ் பாங்க் மசோதா கொண்டு வரப்பட்ட போதே வேளாண்மைக்கடன் அளிப்பதற்காக ஒரு தனித்துறை வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி 1936 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் பிரிவு 54-ன்கீழ், இத் துறை உருவாக்கப்பட்டது. நிபுணர்கள்மூலம் வேளாண்மைக்கடன் பற்றி ஆராய்தல்,

ரிசர்வ் பாங்கின் வேளாண்மைக்கடன் செயல்களை மாநில கூட்டுறவு வங்கிகள் மற்றும் வேளாண்மைக்கடன் வழங்கும் பிற நிறுவனங்களோடு இணைத்தல் முதலியன தொடக்கக் காலத்தில் இத் துறையின் சட்ட ரீதியான பணிகளாக இருந்தன. நாளடைவில், ரிசர்வ் பாங்கின் வளர்ச்சியோடு, இத் துறையின் பணிகளும் மேலும், மேலும் வளர்ந்துள்ளன. வேளாண்மை, குடிசைத்தொழில்கள், மற்றும் சிறுதொழில்கள் ஆகியவை தேவையான கடன் வசதிகளைப் பெற்றால்தான் முன்னேறும் என்பதை நன்குணர்ந்த ரிசர்வ் பாங்க் மத்திய, மாநில அரசுகள், அகில இந்திய நிறுவனங்கள் ஆகியவற்றுடன் ஒன்றுசேர்ந்து ஒரு வலிமையானதும், வளமையானதுமான கூட்டுறவுக் கடன் அமைப்பை உருவாக்குவதில் முனைந்திருக்கிறது. வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின் (Banking regulation act) கீழ்க் கூட்டுறவு வங்கிகள்மீதும் கட்டுப்பாடுகள் கொண்டுவரப் பட்டதால் ரிசர்வ் பாங்கின் பொறுப்புகள் அதிகமாகியுள்ளன. தற்போது இத் துறையின் பணிகள் 12 பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. அவை : 1. திட்டமிடுதலும் திருப்பி அமைத்தலும் (planning and reconstruction) 2. நடவடிக்கைகள் (operations) 3. வணிக வங்கிகள் 4. நிலவள வங்கிகள் (Land development banks) 5. கண்காணிப்பும் உரிமம் அளித்தலும் I (inspection and licensing I) 6. கண்காணிப்பும் உரிமம் அளித்தலும் II (inspection and licensing II) 7. வங்கியியல் ஒழுங்கு முறைகள் (banking regulations) 8. தாக்கீதுகள் மற்றும் கிளைகளுக்கு உரிமம் வழங்குதல் (returns and branch licensing) 9. கட்டுக் கடன் (package credit) 10. செய்தியும், தகவலும் (documentation and information) 11. வெளியீடுகள் (publications) 12. நிருவாகம் (administration) முதலியன. தலைமை அதிகாரி ஒருவரின்கீழ் செயல்படும் இத் துறையின் மத்திய அலுவலகம் பம்பாயில் உள்ளது. இத் துறையின் 16 வட்டார அலுவலகங்கள் (regional offices) அகமதாபாத், பெங்களூர், பம்பாய், புவனேஸ்வரம், கல்கத்தா, சண்டிகார், கௌஹாத்தி ஹைதரபாத், இந்தூர், ஜெய்பூர், கான்பூர், சென்னை, புதுடில்லி, பாட்னு, ஸ்ரீநகர், திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் இருக்கின்றன.

9. வங்கியியல் நடவடிக்கையும் வளர்ச்சித்துறையும் (Department of Banking Operations and Development)

இத் துறையின் பணிகள், நடவடிக்கைகள் பிரிவு, கண்காணிப்புப் பிரிவு ஆகிய இரு பிரிவுகளிடமும் பகிர்ந்து அளிக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் ஒரு தலைமை அலுவலகரின்

கீழ்ப் பணியாற்றுகிறது. இத் துறையின் வட்டார அலுவலகங்கள் அகமதாபாத், பெங்களூர், பைகுலா (பம்பாய்), கல்கத்தா, ஹைதரபாத், கான்பூர், சென்னை, புதுடில்லி திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் இருக்கின்றன. வணிக வங்கிகளின் மீதான மேற்பார்வை, கட்டுப்பாடு மற்றும் வளர்ச்சி சம்பந்தப்பட்ட பணிகளை இத் துறை புரிகிறது. வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் (Bankingr egulation act), ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் ஆகியவற்றின்கீழ் வணிக வங்கிகள் சம்பந்தப்பட்ட பணிகளை ரிசர்வ் பாங்க் கவனிக்கிறது. ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் (State bank of India act), ஸ்டேட் பாங்க் (துணை வங்கிகள்) சட்டம் (State Bank (subsidiaries) act), வங்கிகள் நாட்டுடைமைச் சட்டம் (Bank nationalisation act), ஆகியச் சட்டங்களின் கீழ்க் கொடுக்கப்பட்ட அதிகாரங்களையும் இத் துறை பெற்றிருக்கிறது. இத் துறையின் முக்கியப் பணிகள் வருமாறு : 1. வங்கித்தொழில் ஆரம்பிக்கவும் வங்கித் தொழிலைத் தொடர்ந்து செய்யவும் மற்றும், புது அலுவலகங்கள் ஆரம்பிப்பதற்காகவும் வங்கிகள் அனுப்பும் மனுக்களைப் பரிசீலித்தல். 2. வங்கிய ஒழுங்காற்றுச் சட்டப்படி வங்கிகள் போதுமான பண வசதியோடு சிறந்த நிருவாகத்தில் நன்முறையில் வளர அவ்வப்போது வங்கிகளைக் கண்காணிப்பதும் அதைத் தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதும். 3. வங்கிக்கடன் ஒழுங்குமுறையும் கட்டுப்பாடும் (Regulation and control of bank credit) 4. வங்கிகளிடமிருந்து வரும் கடன் மனுக்களைக் கவனித்தல். 5. வங்கிகளின் சுயத்தொழில் கலப்புகளுக்கும் (voluntary mergers) கட்டாயத்தொழில் இணைப்புகளுக்கும் (compulsory amalgamation) வேண்டிய உதவிகளைச் செய்தல் 6. கலைக்கப்படும் வங்கிகளை மேற்பார்வையிடல் (supervision over banks in liquidation) 7. வங்கிகளுக்கும், அரசாங்கத்திற்கும் வங்கியியல் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட செய்திகள் பற்றி அறிவுரை கூறல். 8. வங்கிகளுக்கு அவற்றின் இயக்குநர் அமைப்புப்பற்றி அறிவுரை கூறல், இயக்குநர் அவைத்தலைவரின் நியமனம் குறித்து ஒப்புதல் தெரிவித்தல் 9. அரசாங்கத்திற்கு வங்கிகளால் கொடுக்கப்படும் போனஸ் பங்குகள் பற்றி அறிவுரை கூறல்.

### 10. தொழில் நிதித்துறை (Industrial finance department)

இவ் விலாகாவின் மத்திய அலுவலகம் தலைமை அலுவலகர் ஒருவரின் கீழ்ச் செயல்படுகிறது. இத் துறை 4 பிரிவுகளைக் கொண்டது. 1. நடவடிக்கைகள் பிரிவு (Operations division)

2. கண்காணிப்புகள் பிரிவு (Inspections division) 3. திட்டமிடும் பிரிவு (Planning division) 4. உத்தரவாதப் பிரிவு (Guarantee division).

நடவடிக்கைகள் பிரிவு

இப் பிரிவு மாநில நிதியக் கூட்டுருக்கள் (State financial corporations) சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளைக் கவனிக்கிறது; மாநில நிதியக்கூட்டுருக்களுக்குக் கடன் அளித்தல், அவற்றின் ஆவணங்கள் விற்பனைக்கு ஒப்புதல் அளித்தல் மற்றும் அறிவுரை கூறல், அவற்றின் விவரத் தாக்கீதுகளைப் (Returns) பரிசீலனை செய்தல் ஆகியவை இப் பிரிவின் பணிகள்.

கண்காணிப்புப் பிரிவு

மாநில நிதியக் கூட்டுருக்கள் சட்டம், 1951 (State financia corporations act) பிரிவு 37 A–யின்கீழ் மாநில நிதியக் கூட்டுருக்களைக் கண்காணிக்கிறது.

திட்டமிடும் பிரிவு

இப் பிரிவு சிறு தொழில்கள் சம்பந்தப்பட்ட புள்ளி விபரங்களைச் சேகரித்து அவற்றை ஆராய்தல், அவற்றின் குறைபாடுகள் ஆகியவற்றைக் கவனிக்கிறது,

உத்தரவாதப் பிரிவு

இப் பிரிவு மத்திய அரசின் கடன் உத்தரவாதத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பை ஏற்றிருக்கிறது.

தேவையான அளவுக்குக் கடன் வசதி அளித்துத் தொழில்களை (குறிப்பாகச் சிறுதொழில்களை) வளர்க்கவும், மாநில நிதியக் கூட்டுருக்கள், வங்கிகள் மற்றும் இதர நிறுவனங்களோடு நெருங்கியத் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காகவும், இத் துறை பம்பாய், கல்கத்தா, சென்னை, புது டில்லி ஆகிய இடங்களில் 1967-ல் வட்டார அலுவலகங்களை ஆரம்பித்துள்ளது.

11. வங்கியியலில் ஈடுபடாத கம்பெனிகளின் துறை (Department of non-banking companies)

இத் துறை 1966 மார்ச்சு மாதம் கல்கத்தாவில் நிறுவப்பட்டது. ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், அத்தியாயம் -ல் உள்ள பல்வேறு பிரிவுகளின்கீழ் வங்கித் தொழில் மற்றும் நிதி சம்பந்தப்படாத கம்பெனிகளுடைய வைப்புகளைக் கட்டுப்படுத்துதல், வங்கித் தொழில் செய்யாத, ஆனால் நிதி சம்பந்தப்பட்ட கம்பெனிகளின் வைப்புகளையும், வியாபாரத்தையும்

ஒழுங்குபடுத்துதல் ஆகியப் பணிகளைச் செய்கிறது. வங்கித்தொழில் செய்யாத கம்பெனிகள் வைப்புகள் ஏற்றுக்கொள்வதைச் சீர்ப் படுத்துவதே இத் துறையின் முக்கியமான வேலையாகும். இதற்காக அவ்வப்போது இத் துறை வங்கித்தொழில் செய்யாத கம்பெனி களிடமிருந்து வியாபாரம் மற்றும் அவற்றால் ஏற்றுக்கொள் ளப்பட்ட வைப்புகள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கிறது. அத் தக வல்களையும் அக் கம்பெனிகளின் இருப்புநிலைக் குறிப்புகளையும் அக் கம்பெனிகள் வைப்பு ஏற்றுக் கொள்ளுதல் பற்றிய ரிசர்வ் பாங்க் விதிகளைச் சரியாகப் பின்பற்றுகின்றனவா என்றும் மிகக் கவனத் துடன் இத் துறை பார்த்துவருகிறது. தேவை ஏற்படும்போது வங்கித் தொழில் செய்யாத நிதிக் கம்பெனிகளின் நடவடிக்கை களையும் ஆய்வு செய்கிறது.

### ஆராய்ச்சி மற்றும் பொருளாதாரத் துறை

பொருளாதாரம் மற்றும் நிதியியல் சம்பந்தப்பட்ட செய்திகள் பற்றி மத்திய, மாநில அரசுகள் ரிசர்வ் பாங்கின் அறிவுரைகளைக் கேட்கின்றன. விரிவான மற்றும் சரியான தகவல்களைச் சேகரித்து வைத்திருந்தால்தான் ரிசர்வ் பாங்க் தன்னுடைய அறிவுரைகளைக் கூறமுடியும், இத் தகவல்களைச் சேகரிப்பதே 1945-ல் அமைக்கப்பட்ட பொருளாதார மற்றும் புள்ளியியல் துறைகளின் பணிகளாகும். இவ்விரு துறைகளும் ஒரு நிறைவேற்றியக்குநரின் (Executive director) பொறுப்பில் உள்ளன. அந்த இயக்குநர் நான்கு ஆலோசகர்களின் உதவியைப் பெறு கிறார். (மூன்று ஆலோசகர்கள் பொருளாதாரத்துறைக்கும், ஒரு ஆலோசகர் புள்ளியியல் துறைக்கும்.)

### பொருளாதாரத்துறை (Economic department)

இத் துறையில் ஒன்பது பிரிவுகள் உள்ளன.

#### வங்கியியல் பிரிவு:

இப் பிரிவு வங்கி நடத்தல், கடன் கொள்கைகள், பொருக்குக்கடன் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவை உருவாக்குவதற்கான விவரங்களை விசாரணைகள் (surveys) நடத்திச் சேகரிக்கிறது. மேலும் வங்கியியல் சிக்கல்கள்மீது ஆராய்ச்சி நடத்துதல், உலக வங்கியியல், நிதியியல் கொள்கைகளில் அவ்வப் போது ஏற்படும் மாறுதல்களைக் கவனித்து வருதல் ஆகியப் பணி களையும் இத் துறை கவனித்து வருகிறது.

நிதியியல் பொருளாதாரப் பிரிவு: (Monetary economics division)

பண விநியோகம், பண அங்காடி, முதல் அங்காடி, விலை வாசிகள், தொழில்களின் உற்பத்தி ஆகியவற்றில் இப் பிரிவு சம்பந்தப்பட்டுள்ளது.

பொது வரி பகுப்புப் பிரிவு (Fiscal analysis division)

மத்திய, மாநில அரசுகளின் வரவு செலவுத் திட்டங்கள் பொதுவரி, நிதி சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகள் ஆகியற்றில் இத் துறை ஈடுபடுகிறது.

திட்டமிடுதல், சிறப்புப் படிப்புப் பிரிவு: (Division of planning and special studies)

இப் பிரிவு நாட்டின் பொருளாதாரத் திட்டங்கள் (குறிப்பாக நிதிவருவாய்), பற்றிய ஆராய்ச்சி செய்கிறது. இதற்காகத் திட்டக் குழுவிடம் இப் பிரிவு நெருங்கியத் தொடர்பு கொண்டுள்ளது.

பன்னாட்டு நிதிப்பிரிவு: (Division of International Finance)

இந்தியாவின் அயல்நாட்டுச் செலுத்துநிலை பற்றிய புள்ளி விவரங்களை இப் பிரிவு சேகரிக்கிறது. பொருளாதார நிலைமையை மறுபரிசீலனை செய்தல், பன்னாட்டுப் பொருளாதாரச் சிக்கல்களை ஆராய்தல், பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களில் ஏற்படும் மாற்றங்களைக் கவனித்தல் ஆகியவை இப் பிரிவின் இதரப் பணிகளாகும்.

வணிகப் பிரிவு: (Division of trade)

இந்தியாவின் அந்நிய வாணிபம், வாணிபக் கொள்கைகள், வாணிப ஒப்பந்தங்கள், பல நாடுகளோடு செயல்படும் முறை, உலக வாணிப நிறுவனங்களில் ஏற்படும் மாற்றங்களை அவ்வப் போது கவனித்தல், இந்தியத் தொழில்களில் பிறநாட்டவருடன் கூட்டு பற்றியபுள்ளி விபரங்களைச் சேகரித்தல் ஆகியவை இப் பிரிவின் பணிகளாகும்.

கிராமியப் பொருளாதாரப் பிரிவு: (Rural economics division)

இப் பிரிவு விவசாய உற்பத்தி, விவசாய வரி, நிலச்சாகுபடி முறைகள், மற்றும் கிராமியப் பொருளாதாரச் சிக்கல்களைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறது.

கிராமிய விசாரணைகள் பிரிவு:- (Division of rural surveys)

இப் பிரிவு கிராமியக்கடன் விசாரணைகளை நடத்துகிறது. பிற துறைகளால் குறிப்பிடப்படும் சிக்கல்கள் மீது இப் பிரிவு தன்னுடைய ஆராய்ச்சிகளை நடத்துகிறது.

**வெளியீடுகள், செய்தித்துறை உறவுகள் பிரிவு** (Division of publications and press relations)

ரிசர்வ் பாங்கின் செயல்கள், கொள்கைகள், வெளியீடுகள் பற்றிச் செய்தித் தாள்களில் வரும் விளக்கங்களை இப் பிரிவு கையாள்கிறது.

**13. புள்ளி இயல்துறை** (Department of statistics)

நாட்டின் வங்கியியல், மற்றும் நிதியியல் துறைகள் பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதும், அவற்றைத் தொகுப்பதும் இத் துறையின் பணிகள். இத் துறையில் 4 பிரிவுகள் உள்ளன. 1. கம்பெனி நிதியும் நிதிப் புழக்கமும் (Company finance and flow of funds) 2. புள்ளி நிரலிடல் (Data processing) 3. பொருட் புலப் புலனுய்வும் புள்ளியியல் அறிவும். (Econometric studies and statistical intelligence) 4. துணர், செலாவணி அறிக்கை மற்றைய வெளியீடுகளும் (Bulletin, currency report and other publications) பொதுத்துறை மற்றும் தனியார்த் துறையில் உள்ள கம்பெனிகளின் இருப்பையும், லாபநட்டக் கணக்குகளையும் தீவிரமாக ஆராய்ந்தபிறகு, கம்பெனிகள் வேலைசெய்வது பற்றிய அறிக்கையை இத் துறை தயார் செய்கிறது. ரிசர்வ் பாங்கின் வெளியீடுகளில் நடப்புப் புள்ளிவிவரம் சம்பந்தப்பட்ட பகுதியை இத் துறையே தயார் செய்கிறது.

# 12. கணக்கு விவர அறிக்கைகளும், வெளியீடுகளும்

ரிசர்வ் பாங்கின் வாராந்திர மற்றும் வருடாந்திரக் கணக்கு அறிக்கையிலிருந்து, ரிசர்வ் பாங்க், அரசாங்க வங்கியாக, வங்கியரின் வங்கியாக, வெளிநாட்டுச் செலாவணியைக் கட்டுப் படுத்தும் நிறுவனமாகச் செய்த நடவடிக்கைகளைப் பற்றிய விவரங் களை அறியலாம். ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 53-ன்கீழ், ஒவ்வொரு வெள்ளிக்கிழமை முடிவிலும், ரிசர்வ் பாங்க் தனது பணத்தாள் வெளியிடும் துறை, வங்கியல் துறை ஆகியவற் றின் நடவடிக்கைகள் பற்றிய வாராந்திரக் கணக்கை, மத்திய அரசிடம் சமர்ப்பிக்கவேண்டும். மத்திய அவைக் குழுவின் (Commitee of the central board) வாராந்திரக் கூட்டம் முடிந்த பிறகே மேற்கூறப்பட்ட வாராந்திர அறிக்கையோ, இருப்புநிலைக் குறிப்போ வெளியிடப்படுகிறது. வருடாந்திர இருப்புநிலைக் குறிப்பு (Balance sheet), இலாப நட்டக் கணக்கு ஆகியவையும் இம் மாதிரி மத்திய அவைக் குழுவின் கூட்டம் முடிவுற்ற பிறகே வெளியிடப்படுகின்றன. ரிசர்வ் பாங்க் கணக்குகள், ஜூலை 1-லிருந்து ஜூன் முப்பது வரையிலான ஓராண்டிற்குத் தயார் செய்யப் படுகின்றன. அட்டவணையிலிட்ட வங்கிகள்பற்றிய வாராந்திர அறிக்கைகள், பணஅளிப்பு, வங்கிக்கடன், அரசாங்க ஆண்டு வரவு செலவு நடவடிக்கைகள், அயல் நாட்டுச் செலுத்துநிலை (Balance of payment) ஆகியவற்றினால் நிதிப் போக்கில் ஏற்படும் மாறுதல்களை ரிசர்வ் பாங்கின் வாராந்திரக் கணக்கு அறிக்கை களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**ரிசர்வ் பாங்கின் கணக்கு அறிக்கை**

**பணத்தாள் வெளியிடும் துறை-பொறுப்புகள்** (Issue Department-Liabilities)

பணத்தாள் வெளியிடும் துறையின் பொறுப்புகள் பக்கம் நோக்கும்போது, பெறுப்புக்கள் இருவகையாகப் பிரிக்கப்

பட்டுள்ளன என்பது தெரியவரும். அவை முறையே (1) வங்கியியல் துறையில் உள்ள பணத்தாள்கள் (2) புழக்கத்தில் உள்ள பணத் தாள்கள். இவ் விரண்டும் சேர்ந்துதான், மொத்தமாக வெளியிடப் பட்டுள்ள பணத்தாள்களைக் குறிக்கின்றன. வங்கியியல்துறை, தனது உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்ய, பணத்தாள்களை வைத்துள்ளது; இப் பணத் தாள்கள் ரிசர்வ் பாங்கின் ரொக்க மாகவே கருதப்படும். ரிசர்வ் பாங்கிற்கு வெளியிலுள்ள பணத் தாள்கள் புழக்கத்தில் உள்ள பணத்தாள்களாகும்—அதாவது பொதுமக்கள், வங்கிகள், கருவூலங்கள் ஆகியோரிடம் உள்ள பணத் தாள்கள் புழக்கத்தில் உள்ள பணத்தாள்களாகும்.

### காகிதப் பணம் வெளியிடும் துறையின் சொத்துகள்

தங்கநாணயம், தங்கக்கட்டிகள், வெளிநாட்டு ஆவணங்கள், ரூபாய் நாணயங்கள், ரூபாய் ஆவணங்கள் ஆகியவையே பணத் தாள் வெளியிடும் துறையின் சொத்துகளாகும். ரிசர்வ் பாங்க் வாங்குவதற்குத் தகுதி பெற்ற, இந்தியாவில் செலுத்தப்பட வேண்டிய மாற்று உண்டியல்கள், புரோநோட்டுகள் ஆகியவை யும் ரிசர்வ் பாங்கின் சொத்துகளாகும். ஆனால், இதுவரை அத் தகைய மாற்று உண்டியல்களும், புரோநோட்டுகளும் பணத் தாள் வெளியிடும் துறையின் சொத்துகளில் இடம் பெறவில்லை. முதல் அத்தியாயத்தில் கூறப்பட்டது போல, ரிசர்வ் பாங்க், குறைந்த பட்சம் 200 கோடி ரூபாய் மதிப்பளவிற்குத் தங்கமும், அரசாங்க ஆவணங்களும் பெற்றிருக்கவேண்டும். இந்த 200 கோடி ரூபாயில், குறைந்தது 115 கோடி ரூபாய் மதிப்பிற்குத் தங்கம் பெற்றிருக்கவேண்டும். ரிசர்வ் பாங்கின் எல்லாத் தங்கக் கட்டிகளும் காகிதப்பணம் வெளியிடும் துறையின் அலுவலகங் களிலும், ரிசர்வ் பாங்கின் சார்பில், இந்திய அரசாங்க நாணயச் சாலை (Mint) களிலும் இருக்கிறது. பன்னாட்டு நாணய நிதியில் (IMF) அங்கத்தினராக உள்ள எந்த ஓர் அந்நிய நாட்டின் செலாவணியிலும், செலுத்தப்படவேண்டிய ஆவணங்களே வெளி நாட்டு ஆவணங்களாகக் கருதப்படுகின்றன.

வெளிநாட்டு ஆவணங்கள் என்பவை கீழ்க்கண்டவற்றைக் குறிக்கும்.

1. வெளிநாட்டு வங்கியில் காகிதப்பணம் வெளியிடும் துறையின் வரவில் வைக்கப்பட்டிருக்கும் இருப்புகள்.
2. 90 நாள்களுக்கு அதிகமாகாத முதிர்வை உடைய, இரண்டு அல்லது அதற்கு அதிகமான நல்ல கையொப்

பங்களைப்பெற்று, வெளிநாட்டின்மீது எழுதப்பட்டதும், கொடுக்கப்பட வேண்டியதுமான மாற்று உண்டியல்கள்.

3. ஐந்து ஆண்டுகளுக்கு முதிர்வடையும் வெளிநாட்டு அரசின் ஆவணங்கள். சில ஆண்டுகளுக்கு முன் வரை, ஐக்கிய அரசின் (U.K) குறுகிய கால ஆவணங்களே அதிகமாக இருந்தன. ஆனால் தற்போது பல்வேறு வெளிநாட்டு அரசுகளின் ஆவணங்களை, ரிசர்வ் பாங்க் பெற்றுள்ளது.

ரிசர்வ் பாங்க் அலுவலகங்களில் இருக்கும் பணப்பெட்டகங்களில் உள்ள ரூபாயும், ரிசர்வ் பாங்கின் முகவர், அரசாங்கக் கருவூலங்கள் ஆகியவற்றில் உள்ள ரூபாயும், பணத்தாள் வெளியிடும் துறையில் உள்ள ரூபாய் நாணயம் என்று குறிப்பிடப் படுகிறது. 1940-லிருந்து, இந்திய அரசு வெளியிடும் ஒரு ரூபாய்த் தாள்களும் ரூபாய் நாணயத்தில் அடங்கும். ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 38-ன் படி மத்திய அரசு, ரிசர்வ் பாங்க் மூலம்தான் ஒரு ரூபாய்த் தாள்களையும் புழக்கத்தில் விடுகிறது. ரிசர்வ் பாங்க் ரூபாய் நாணயங்களைப் புழக்கத்தில் விடுவது தவிர வேறு எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்துவதில்லை.

ரூபாய் ஆவணங்கள் எனப்படுவது அரசாங்கக் கருவூல மாற்றுச் சீட்டுகளையும், மத்திய அரசின் எந்த ஒரு கால முதிர்வையும் உடைய ஆவணங்களையும் குறிக்கும்.

### வங்கியியல் துறை-பொறுப்புகள் (Banking Department-Liabilities)

இப் பகுதியில் முதலாவதாக வருவது செலுத்திய முதல், ரிசர்வ் பாங்கின் தொடக்கக் காலத்திலிருந்து, செலுத்திய முதல் 5 கோடி ரூபாயாகவே உள்ளது. 1949 சனவரி 1-ல், ரிசர்வ் பாங்க் நாட்டுடைமையாக்கப்பட்டபோது அம் முதல், இந்திய அரசுக்குச் சொந்தமான முதலாக ஆயிற்று. ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 46-ன்படி மத்திய அரசு, 5 கோடி ரூபாய்க்கான அரசு ஆவணங்களை ரிசர்வ் பாங்கின் காப்பு நிதிக்காகச் செலுத்தியது. காகிதப்பணம் வெளியிடும் துறையில் இருந்தத் தங்கம், 1956 அக்டோபரில் மறு மதிப்பீடு செய்யப்பட்டதால் கிடைத்த 75 கோடி ரூபாய் இலாபத்தைக் காப்பு நிதிக்கு மாற்றியதால், காப்பு நிதி 1957ஜூன் 30-ல், 80 கோடியானது. 1969 பிப்ரவரியில், தங்கம் மீண்டும் மறு மதிப்பீடு செய்யப்பட்டு, அதனால் உண்டான இலாபம் காப்புநிதிக்கு மாற்றப்பட்டதால், காப்பு நிதி 150 கோடி ரூபாயானது.

1956-லிருந்து ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் பிரிவு 46 A-யின்கீழ், தேசிய வேளாண்மைக்கடன் (நீண்டகால நடவடிக்கை) நிதி (National Agricultural Credit (long term operations) Fund) பிரிவு 46 B-யின்படி தேசிய வேளாண்மைக் கடன் (நிலைப் பேறுக்க) நிதி (National Agricultural Credit (stabilisation) Fund), 1964 ஜூலைத் திங்களிலிருந்து ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 46 C-ன்படி தேசியத்தொழில் கடன்(நீண்டகாலநடவடிக்கை நிதி (National industrial Credit (long term operatiosn) Fund) ஆகியவையும் பொறுப்புகளில் இடம்பெறுகின்றன.

ரிசர்வ் பாங்கின் வங்கியியல் துறையில் உள்ள வைப்புகளை 3 வகையாகப் பிரிக்கலாம்.

1. அரசாங்கத்தினுடையது
2. வங்கிகளுடையது
3. பிறருடையது.

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 20, 21, 21A ஆகியவற்றின்கீழ் ரிசர்வ் பாங்க் மத்திய, மாநில அரசுகளின் வைப்புகளை (வட்டி ஏதும் கொடுக்காமல்) ஏற்றுக்கொள்கிறது. பொதுமக்கள், ரிசர்வ் பாங்க், வெளிநாட்டு அரசாங்கங்கள், பன்னாட்டு நிதி நிறுவனங்கள் ஆகியவற்றோடு அரசாங்கம் ஈடுபடுவதால், அரசாங்க இருப்புகளில் நிறைய மாற்றங்கள் காணப்படுவது இயற்கையே.

**வங்கிகளின் வைப்புகள்:**

1. ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 42 (1)-ன் படி, அட்டவணையிலிட்ட வங்கிகள் சட்டப்படி வைக்க வேண்டிய வைப்புகள்.
2. அட்டவணையிலிடாத மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ரிசர்வ் பாங்கிடம் கடன் மற்றும் பிற வசதிகள் பெறுவதற்காக ரிசர்வ் பாங்கின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வைத்திருக்கும் வைப்புகள்.
3. ரிசர்வ் பாங்கிடம் கணக்குத் திறக்க அனுமதிக்கப்பட்ட அட்டவணையிலிடாத வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளின் வைப்புகள்.

சட்டப்படி வைக்க வேண்டிய வைப்புக்களுக்கும் அதிகமாக, வங்கிகள், ரிசர்வ் பாங்கிடம் வைப்புகளை வைத்துள்ளன.

இத்தகைய அதிகப்படி வைப்புகளில் ஏற்படும் மாறுதல்கள் பணச் சந்தையில் உள்ள நிலைமையைப் பிரதிபலிக்கின்றன. மும்முரப் பருவத்தின் (busy season) (நவம்பர்-ஏப்ரல் வரை) போது அதிகப்படியான வைப்புகள் குறைகின்றன. மந்தப் பருவத்தின் (slack season) (மே முதல் அக்டோபர் வரை) போது, மேலும் அதிகமான வைப்புகளை ரிசர்வ் பாங்கிடம் வங்கிகள் வைக்கின்றன. தற்போது அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள் 1950—51-க்கு முன்னால் வைத்துவந்தது போல, மிக அதிகமான வைப்புகளை வைப்பதில்லை. ஆனால், ரிசர்வ் பாங்கிடம், அதிகமான கடன்களைப் பெற ஆரம்பித்துள்ளன.

பிற வைப்புகள்

பிற வைப்புகள் என்று இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கீழ் கண்டவற்றைக் குறிக்கும்.

1. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI), இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு (IFCI), மாநில நிதியக்கூட்டுரு (SFC), வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு (ARC), இந்திய யூனிட் டிரஸ்ட் (UTI), வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு (DIC), ஆகியவற்றின் வைப்புகள்.
2. ரிசர்வ் பாங்கில் வேலை செய்வோரின் சேமநல நிதி (Provident fund), ஊதிய நிதி, உத்தரவாத நிதி ஆகியவை சம்பந்தப்பட்ட வைப்புகள்.
3. வெளிநாடுகள், வெளிநாட்டு மைய வங்கிகள் ஆகியவற்றின் வைப்புகள்.
4. பன்னாட்டு நாணயநிதி (IMF), பன்னாட்டுப் புனரமைப்பு வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் கணக்கில் உள்ள வைப்புகள்.

இந்தியாவின் வெளி நாட்டுச்செலாவணி நடவடிக்கைகளுக்காக, இந்தியாவுக்கு ஒதுக்கப்படும் பங்கீட்டில், 10 விழுக்காடு, பன்னாட்டு நாணய நிதியின் கணக்கில் வரவில் வைக்கப்படுகிறது. பன்னாட்டு நாணய நிதியின் சார்பில் பெறும் ரூபாய்களும், இக் கணக்கில், வரவு வைக்கப்படுகிறது. இந்தியாவிற்கு ஒதுக்கப்படும் பங்கீட்டில் குறைந்த அளவு 1 விழுக்காட்டை இக் கணக்கில் எப்போதும் வைத்திருக்கவேண்டும். பன்னாட்டு நாணய நிதியின் சார்பில், ரிசர்வ் பாங்குக்கு ஏற்படும் நிருவாகச் செலவை மேற்கொள்ளவும், பன்னாட்டு நாணய நிதி தனது நிருவாகத் தேவைகளைப் பெறுவதற்காகவும் பன்னாட்டு நாணய நிதியின் இரண்டா

வது கணக்கு உள்ளது. அவ்வப்போது முதல் கணக்கிலிருந்து, சிறு தொகைகள் இரண்டாவது கணக்கிற்கு மாற்றப்படுகின்றன.

பன்னாட்டு வளர்ச்சிச் சங்கம் (International developmen association), பன்னாட்டு நிதியக் கூட்டுரு (International financial corporation), ஆசிய வளர்ச்சி வங்கி (Asian development bank) ஆகிய நிறுனவங்களின் வைப்புகளும் இத் தலைப்பில் அடங்கும்.

ரிசர்வ் பாங்கின் பணமாற்றல் திட்டத்தின் (remittance facilities scheme) கீழ், ரிசர்வ் பாங்க் அலுவலகங்கள், ரிசர்வ் பாங்க் முகவர், அரசாங்கக் கருவூலங்கள் ஆகியோரால் எழுதப்பட்ட தந்திவழி மாற்றம் (telegraphic transfer), அஞ்சல் வழி மாற்றம் (mail transfer), கொடுக்க வேண்டிய பணவிடை (outstanding drafts) ஆகியவை அயல் நாட்டு) செலுத்து நிலைத் (balance of payment) தலைப்பின்கீழ் இடம் பெறுகின்றன.

ரிசர்வ் பாங்க் அலுவலகங்களுக்கிடையே வழியில் உள்ள இனங்கள் (in-transit), வட்டி, தள்ளுபடி, நாணய மாற்றல் தரகு ஆகியவை வடிவில் ரிசர்வ் பாங்க் பெறும்வருமானங்கள் அனுமத்துக் கணக்கில் இடம் பெறுகின்றன.

**வங்கியியல் துறையின் சொத்துகள்**

ரூபாய் நாணயங்கள், சிறு நாணயங்கள் ஆகியவை வங்கியியல் துறையில் ரொக்கமாகும். இங்கே கொடுக்கப் பட்டுள்ள பணத்தாள்கள் வங்கியியல் துறையின் பொறுப்புகளின் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள பணத்தாள்களுக்குச் சமம். ''மாற்றுச் சீட்டு வாங்கியதும் தள்ளுபடி செய்ததும்,'' எனக் குறிப் பிடப்பட்டிருப்பது அரசாங்கக் கருவூல மாற்றுச் சீட்டுகளைத் தள்ளுபடி செய்ததையும், வணிக உண்டியல்களை மறு தள்ளுபடி செய்ததையும் குறிக்கும். கருவூல உண்டியல்கள், பெரும்பாலும் மத்திய அரசின் உண்டியல்களே ஆகும்.

பிற நாட்டு மைய வங்கிகளில் வைக்கப்பட்டுள்ள ரொக்க இருப்புகள், வெளிநாட்டு அரசு ஆவணங்கள் ஆகியவை வெளி நாட்டில் உள்ள இருப்புகளாகக் கருதப்படும்.

மத்திய அரசு, மாநில அரசுகளின் ரூபாய் ஆவணங்கள், இந்திய ஸ்டேட் பாங்க் தொழில் நிதிக்கூட்டுரு (IFC), மாநில நிதியக்கூட்டுரு (SFC), இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI), இந்திய யூனிட் டிரஸ்ட் (UTI) வைப்புக் காப்பீட்டுகூட்டுரு (D I) வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு (ARC), ஆகியவற்றின் பங்குகள், நில அடமான வங்கிகளின் கடன்பத்திரங்கள்

(LMB defentures), ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 17(8)-ன்படி மத்திய, மாநில அரசுகளின் ஆவணங்கள், மத்திய அரசால், மத்திய அவையின் பரிந்துரையின்பேரில், அங்கீகரிக்கப் பட்ட நிறுவனங்களின் ஆவணங்கள் ஆகியவற்றை வாங்கவும், விற்கவும், வைத்திருக்கவும் ரிசர்வ் பாங்க் அதிகாரம் பெற்றுள்ளது. ஸ்டேட் பாங்க் மூலதனத்திலோ அல்லது பிற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் மூலதனத்திலோ முதலீடு செய்யவும், செய்த முதலீடுகளை விற்கவும், ரிசர்வ் பாங்க் அதிகாரம் பெற்றுள்ளது.

**கடன்**

மத்திய, மாநில அரசுகளுக்குக் கொடுத்த குறுகியக் காலக் கடனே, இங்குக் 'கடன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசு 1943-44-லிருந்து வழிவகைக் கடன்களைப் பெறவில்லை.

**பிற கடன்கள்**

பிரிவு 17-ன்கீழ் பல துணைப்பிரிவுகளின்படி, ரிசர்வ் பாங்க், அட்டவணையிலிட்ட வங்கிகள், மாநிலக்கூட்டுறவு வங்கிகள், தொழில் நிதியக்கூட்டுரு, மாநில நிதியக்கூட்டுரு ஆகியவற்றுக்குப் பல்வேறு நிதிகளின்கீழ் கொடுத்த கடன், இத் தலைப்பின் கீழ்க் குறிப்பிடப்படுகிறது.

**பிற சொத்துகள்**

கட்டடம், மனைத்துணைப் பொருள்கள், இலாப நட்டக்கணக்குக்கு, மாற்றப்படாமல் செலவினங்களின் தலைப்பில் உள்ள பற்று இருப்பு (debit balance), வசூல் ஆகும் தருவாயில் உள்ள பிறவகைச் சொத்துகள் ஆகியவை ''பிற சொத்துகள்' என்று குறிப்பிடப்படுகிறது.

ரிசர்வ் பாங்கின் பணத்தாள் வெளியிடும் துறையிலும் வங்கியியல் துறையிலும் 1971—72, 1972—73 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்கள், ஆட்டவணை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

பணத்தாள் வெளியிடும் துறையை நோக்கும்போது புழக்கத்தில் இருந்த நோட்டுகள், 1971—72—ல் இருந்ததை விட 1972—73-ல் 616·27 கோடி ரூபாய்க்கு அதிகரித்திருந்தன. வெளிநாட்டு ஆவணங்கள் 67 கோடி ரூபாய்க்குக் குறைந்திருந்தன. இந்திய அரசின் ரூபாய் ஆவணங்கள் 711·5 கோடி ரூபாய்க்கு அதிகரித்திருந்தன.

வங்கியியல் துறையை நோக்கும்போது, 1973 மார்ச்சு இறுதியில், மத்திய அரசின் வைப்புகள் சுமார் 75% குறைந்திருப்பதையும், மாநில அரசுகளின் வைப்புகள் சுமார் 330% உயர்ந்திருப்பதையும் காணலாம். மத்திய அரசின் வைப்புகள் கணிசமாகக் குறைந்ததால், மொத்த வைப்புகளும் குறைந்தன. வெளிநாட்டில் வைத்திருந்த இருப்புகள் சுமார் 22 கோடி ரூபாய்க்கு அதிகரித்திருந்தது. மாநில அரசுகளுக்கும் அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளுக்கும் கொடுத்த கடன் மிகவும் குறைந்திருந்தது. ஆனால் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுத்த கடன் குறையவில்லை. 1972-73-ல் கடன்கட்டுப்பாட்டை மேலும் இறுக்கியதால்தான் இவ்வாறு கடன் தொகை குறைந்திருந்தது. மேலும், மாநில அரசுகள் பெறும் மேல்வரைப் பற்றுகள்மீது கடுமையான கட்டுப்பாடு விதித்திருந்ததால், மாநில அரசுகளுக்குக் கொடுத்த கடனும் கணிசமாகக் குறைந்திருந்தது. ஆனால் மிக அதிக அளவிற்கு உயர்ந்திருந்தன. கடனை அதிகரிப்பதற்குப் பதில், முதலீடுகளை அதிகரித்திருந்ததை இதிலிருந்து அறியலாம்.

இந்த அத்தியாயத்தின் இறுதியில் ரிசர்வ் பாங்க் தொடங்கப்பட்டதிலிருந்து 1973—74 வரை, ரிசர்வ் பாங்கின் பணத்தாள் வெளியிடும் துறை, வங்கியியல் துறை ஆகியவற்றின் இருப்பு நிலைக்குறிப்புகள் தரப்பட்டுள்ளன. அவற்றின் உதவியால் ரிசர்வ் பாங்கின் வளர்ச்சியின் போக்கை (trend) அறியலாம்.

# அட்டவணை 1

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா பணத்தாள் வெளியிடும் துறை

(ரூபாய் இலட்சக் கணக்கில்)

| பொறுப்புகள் | 1971-72 (ஏப்.-மார்.) | 1972-73 (ஏப்.-மார்.) |
|---|---|---|
| வங்கியியல் துறையில் உள்ள பணத்தாள்கள் | 18,13 | 18,75 |
| புழக்கத்தில் உள்ள பணத்தாள்கள் | 4637,18 | 5253,45 |
| மொத்தம் வெளியிட்ட பணத்தாள்கள் | (4,655,31) | (5,272,20) |
| மொத்தப் பொறுப்புகள் | 4,655,31 | 5,272,20 |

| சொத்துகள் | 1971-72 (ஏப்.-மார்.) | 1972-73 (ஏப்.-மார்.) |
|---|---|---|
| தங்க நாணயங்களும் கட்டிகளும் | 182,53 | 182,53 |
| வெளிநாட்டு ஆவணங்கள் | 238,65 | 171,65 |
| ரூபாய் நாணயங்கள் | 36,27 | 8,66 |
| இந்திய அரசின் ரூபாய் ஆவணங்கள் | 4,197,86 | 4,909,36 |
| மொத்தச் சொத்துகள் | 4,655,31 | 5,272,20 |

வங்கியியல் துறை

| | 1971–72 | 1972–73 |
|---|---|---|
| செலுத்தப்பட்ட முதல் | 5,00 | 5,00 |
| காப்புநிதி | 150,00 | 150,00 |
| தேசிய வேளாண்மைக் கடன் (நீண்டகால நடவடிக்கை) நிதி | 190,00 | 209,00 |
| தேசிய வேளாண்மைக் கடன் (நிலைப்பேறுக்க) நிதி | 39,00 | 45,00 |
| தேசிய தொழிற் கடன் (நீண்டகால நடவடிக்கை) நிதி | 135,00 | 175,00 |
| **வைப்புக்கள்** | | |
| 1. அரசாங்கம் | | |
| (அ) மத்திய அரசு | 214,86 | 53,83 |
| (ஆ) மாநில அரசுகள் | 4,96 | 16,79 |
| 2. வங்கிகள் | | |
| (அ) அட்டவணையிலிட்ட வங்கிகள் | 281,34 | 278,57 |
| (ஆ) அட்டவணையிலிட்ட மாநிலக் கூட்டுறவு வங்கிகள் | 12,93 | 17,30 |
| (இ) அட்டவணையிலிடாத மாநிலக் கூட்டுறவு வங்கிகள் | 89 | 1,12 |
| (ஈ) பிற வங்கிகள் | 54 | 45 |
| 3. பிற வகையினர் | 110,09 | 85,17 |
| பிற கடன்களும், பொறுப்புகளும் | 544,66 | 614,48 |
| மொத்தப் பொறுப்புகள் | 1,689,27 | 1,651,71 |

| | 1971–72 | 1972–73 |
|---|---|---|
| பணத்தாள்களும், ரூபாய் நாணயங்களும் | 18,26 | 18,84 |
| உண்டியல்கள் வாங்கியதும், மறுதள்ளுபடி செய்ததும் | | |
| (அ) இந்தியாவிற்குள் | 41,80 | 35,40 |
| (ஆ) இந்தியாவிற்கு வெளியில் | — | — |
| (இ) அரசாங்கக் கருவூல மாற்று உண்டியல்கள் | 69,36 | 96,92 |
| வெளிநாடுகளில் உள்ள இருப்புகள் | 182,17 | 204,37 |
| முதலீடுகள் | 87,32 | 513,96 |
| **கடன்கள்** | | |
| (அ) மத்திய அரசு | — | — |
| (ஆ) மாநில அரசுகள் | 625,20 | 134,68 |
| வங்கிகள்:— | | |
| (அ) அட்டவணையிலிட்ட வங்கிகள் | 207,45 | 138,45 |
| (ஆ) மாநிலக் கூட்டுறவு வங்கிகள் | 323,26 | 322,17 |
| (இ) பிற வகையினர் | 88,23 | 130,47 |
| பிற சொத்துகள் | 46,22 | 56,46 |
| மொத்தச் சொத்துகள் | 1,689,27 | 1,651,71 |

**அட்டவணையிலிட்ட வங்கிகளின் கணக்கு அறிக்கைகள்**

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 43-ன்கீழ் ஒவ்வொரு வாரமும் ரிசர்வ் பாங்க் அட்டவணையிலிட்ட வங்கிகளின் வியாபார நிலைமை பற்றிப்புள்ளிவிபர அறிக்கையைத் தயார் செய்து வெளியிட்டு வருகிறது. 1966 ஆகஸ்ட் திங்கள் 12ஆம் நாள் முதல், அட்டவணையிலிட்ட மாநிலக் கூட்டுறவு வங்கிகள் பற்றியும் ரிசர்வ் பாங்க் அறிக்கை தயார் செய்கிறது.

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 42 (2)-ன்படி ஒவ்வொரு வெள்ளிக்கிழமை முடிவிலும், அட்டவணையிலிட்ட வங்கிகள் தரும் விபரங்களின் அடிப்படையில்தான், ரிசர்வ் பாங்க், மேற்கூறிய அறிக்கையைத் தயார் செய்கின்றது. அந்த வாரத்தில் சொத்துகளிலும், பொறுப்புகளிலும் ஏற்பட்டுள்ள மாறுதல்களை இவ் வறிக்கை தெரியப்படுத்துகிறது. எந்த ஒரு வங்கியாவது அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியாத நிலைமையில் இருந்தால், அத்தகைய வங்கிகள் பற்றித் தற்காலிகமான விவரங்களை வெளியிடுகிறது. பின்னர் அவ் வங்கிகள் அறிக்கையை அனுப்பியதும், ரிசர்வ் பாங்க் தனது துணரிலும் (Reserve bank of India bulletin) வருடாந்திரச் செலாவணி மற்றும் நிதி அறிக்கையிலும் (Report on currency and finance) அவ் விபரங்களைச் சேர்க்கிறது. இந்திய அட்டவணையிலிட்ட வங்கிகள், வெளிநாட்டு வங்கிகள், அட்டவணையிலிடாத வங்கிகள் ஆகியவற்றின் வியாபாரம் பற்றியும், ரிசர்வ் பாங்க் தனது செலாவணி மற்றும் நிதி அறிக்கை (Report on currency and finance) மூலம் தெரிவிக்கிறது. வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், 1949, பிரிவு 27 (1)-ன்கீழ் மேற்கூறப்பட்ட வங்கிகள் ரிசர்வ் பாங்கிற்குச் சமர்ப்பிக்கும் அறிக்கைகளின் அடிப்படையில் ரிசர்வ் பாங்க், தனது அறிக்கைகளைத்தயார் செய்கிறது. ''இந்தியாவில் உள்ள வங்கிகள் பற்றிய அட்டவணை'' (Statistical tables relating to banks in India) யில் இந்திய வணிக வங்கிகளின் வெளிநாடுகளில் உள்ள சொத்து, பொறுப்புகள் பற்றிய புள்ளி விபரங்களை, ரிசர்வ் பாங்க் வெளியிடுகிறது. அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளின் சொத்து, பொறுப்பு அறிக்கைகளில் உள்ள இனங்கள் (items) பற்றி ஒரு சிறு விளக்கம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

கோரியதும் கொடுக்கப்பட வேண்டிய பொறுப்புகள் எல்லாம் கேட்புப் பொறுப்புகள். கேட்புப் பொறுப்புகளை 3 விதமாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. கேட்பு வைப்புகள்.

2. வங்கிகளிடமிருந்து பெறும் கடன்கள்

3. பிற கேட்புப் பொறுப்புகள்.

கேட்புப் பொறுப்புகள் என்று குறிப்பிடுவன, நடப்புக் கணக்குகள், சேமிப்புக்கணக்கு வைப்புகளில் கேட்புப் பொறுப்பு களுக்கு உட்பட்ட பகுதி, தொடர்வைப்புகள் (recurring deposit) முன் கடன் பெறுவதற்காக வைக்கப்பட்டுள்ள, கோரியதும் கொடுக்கப்பட வேண்டிய வைப்புகள் ஆகியவற்றைக் குறிக்கும்.

வங்கிகளிடமிருந்து பெறும் கடன் எனப்படுவது ரிசர்வ் பாங்க், ஸ்டேட் பாங்க் (State bank of India), வேளாண்மை மறு நிதிக்கூட்டுரு (Agricultural Refinance Corporation) இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (Industrial development bank of India) அல்லது பிற அறிவிக்கப்பட்ட வங்கிகள் (other notified banks) ஆகியவை தவிர, பிற வங்கிகளிடமிருந்து பெறும் கடனைக் குறிக்கிறது.

பிற கேட்புப் பொறுப்புகள் எனப்படுவது கொடுபடவேண்டிய மாற்று உண்டியல்கள், கொடுக்கப்படாத இலாப ஈவுத்தொகை, ரிசர்வ் பாங்கால் கொடுக்கப்படவேண்டிய அனுமத்துக் கணக்கில் உள்ள தொகை ஆகியவற்றைக் குறிக்கும்.

**தவணைப்பொறுப்புகள்**:—தவணைவைப்புகள், வங்கிகளிடமிருந்து (ரிசர்வ் பாங்க், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு, ஸ்டேட் பாங்க் மற்றும் பிற வங்கிகளிடமிருந்து) பெறும் கடன்கள், மற்றும் பிற தவணைப் பொறுப்புகள் ஆகிய வற்றைக் குறிக்கும்.

**தவணை வைப்புகள்**:—தவணை வைப்புகள் என்பது தொடர் கணக்குகள், அலுவலர் பாதுகாப்பு வைப்புகள், கோரியதும், கொடுக்கப்படவேண்டியதல்லாத வாணிக உறுதிக் கடிதத்தின் பேரில் வைக்கப்பட்டிருக்கும் வரம்புகள், (Margins) முன் கடனுக் காகப் பிணையங்களாக வைக்கப்பட்டிருக்கும் தவணை வைப்புகள் ஆகியவற்றைக் குறிக்கும்.

**பிற தவணைப்பொறுப்புகள்**:—கோரியதும் கொடுக்கப்பட வேண் டியதல்லாத வைப்புகள் தவணைப் பொறுப்புகள் ஆகும்.

செலுத்தப்பட்ட முதல், காப்பு நிதி, இலாப நட்டக் கணக்கில் உள்ள வரவு இருப்புகள் ஆகியவை கேட்புப்பொறுப்பு களிலோ அல்லது தவணைப்பொறுப்புகளிலோ சேர்க்கப்படாதவை ஆகும்.

ஸ்டேட் பாங்க், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு மற்றும்/அல்லது பிற அறிவிக்கப் பட்ட வங்கிகள், அட்டவணையிலிட்ட வங்கிகளுக்குக் கொடுத்த கடன் அடுத்து இடம் பெறுகிறது. மாநிலக் கூட்டுறவு வங்கிகள் மாநில அரசிடமிருந்து பெற்றகடனும் இத் தலைப்பின்கீழ் அடங்கும்.

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் பிரிவு 17(4)(a), 17(4)(C), 17(3A) -ஆகியவற்றின்கீழ், ரிசர்வ் பாங்க் கொடுத்தக் கடன் அடுத்து இடம் பெறுகிறது. உண்டியல் அங்காடித் திட்டத்தின் கீழ் பிரிவு 17(4)(C), 17(4)(b) ஆகியவற்றின்கீழ் கொடுத்தக் கடன் தனியாகக் காட்டப்பட்டுள்ளது.

ரொக்கம் என்பது செலாவணித் தாள்களையும், நாணயங் களையும் குறிக்கும். வெளிநாட்டுச் செலாவணித் தாள்கள், இதில் அடங்காது.

ரிசர்வ் பாங்கிடம் உள்ள காப்பு இருப்புகள் எனப்படுவது, ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், பிரிவு 42(1)-ன்கீழ், சட்ட முறைப்படி வங்கிகள் வைத்திருக்கவேண்டிய காப்பு ரொக்கத்தைக் குறிக்கும்.

நடப்புக் கணக்கில் பிற வங்கிகளிடம் வைத்துள்ள இருப்புகள், அவ் வங்கிகளிடம் வைத்துள்ள கேட்புப் பொறுப்புகளைக் குறிக்கும். இவை பற்றியப் புள்ளி விவரங்களை ரிசர்வ் பாங்க் தனது வெளி யீடுகளில் 1951 நவம்பரிலிருந்துதான் வெளியிட்டு வருகிறது.

கோரியதும் திரும்பிக் கொடுக்கப்பட வேண்டிய அழைப்புக் கடன்கள் அடுத்து இடம் பெறுகின்றன. 15 நாள்களுக்கோ அல்லது அதற்கு உட்பட்ட நாள்களுக்கோ கொடுக்கப்படும் கடன்கள் இதில் அடங்கும். ஆனல் 15 நாள்களுக்கு அதிகப்பட்ட கடன்கள் 'வங்கிகளிடமிருந்து வரவேண்டியவை' என்ற தலைப்பின் கீழ்க் குறிப்பிடப்படும்.

முதலீடுகள் என்பன கீழ்க்கண்டவற்றில் செய்த முத லீட்டைக் குறிக்கும்.

மத்திய, மாநில அரசுகளின் ஆவணங்கள் (கருவூல உண்டியல்கள் உள்பட), கருவூல வைப்பு இரசீதுகள் (Treasury deposit receipts), கருவூலச் சேமிப்பு வைப்புச் சான் றிதழ்கள் ஆகியவை.

கடன்கள் எனப்படுபவை கடன்களையும், ரொக்கக் கடன் களையும், மேல்வரைப் பற்றுகளையும், வியாபார நிறுவனங்களில் வைத்துள்ள வைப்புகளையும் குறிக்கும்.

வாங்கிய மற்றும், தள்ளுபடி செய்த உள்நாட்டு உண்டியல்கள் பற்றியப் புள்ளி விவரங்கள், 1951 நவம்பரிலிருந்துதான் தனியாகக் காட்டப்படுகின்றன. அதற்குமுன் 'கடன்கள்' என்ற தலைப்பில், அவை சேர்க்கப்பட்டன.

வெளிநாட்டு உண்டியல்கள் என்பது வாங்கிய மற்றும் தள்ளுபடி செய்த ஏற்றுமதி உண்டியல்களைக் குறிக்கும். 1954 மே யிலிருந்துதான் இது பற்றியப் புள்ளி விவரங்கள், ரிசர்வ் பாங்கின் வெளியீடுகளில் தனியாகக் கொடுக்கப்படுகின்றன.

அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளின் சொத்துகளிலும் பொறுப்புகளிலும் 1971–72, 1972–73 ஆகிய இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியப் புள்ளி விவரங்கள் அட்டவணை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை 2

அட்டவணையிலிட்ட வங்கிகளின் சொத்துகளும், பொறுப்புகளும்

(ரூபாய் இலட்சக் கணக்கில்)

| | 1971-72 | 1972-73 |
|---|---|---|
| 1. இந்தியாவில் உள்ள கேட்புப் பொறுப்புகள் | | |
| (அ) கேட்பு வைப்புகள் | | |
| (1) வங்கிகளிடமிருந்து | 188,53 | 202,03 |
| (2) பிறரிடமிருந்து | 3,126,81 | 3,747,01 |
| (ஆ) வங்கிகளிடமிருந்து பெற்ற கடன் (ரிசர்வ் பாங்க், ஸ்டேட் பாங்க், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு, பிற அறிவிக்கப் பட்ட வங்கிகள் தவிர) | 47,13 | 72,75 |
| (இ) பிற கேட்புப் பொறுப்புகள் | 218,68 | 272,25 |
| 2. இந்தியாவில் உள்ள தவணைப் பொறுப்புகள் | | |
| (அ) தவணைப் பொறுப்புகள் | | |
| (1) வங்கிகளிடமிருந்து | 40,22 | 90,74 |
| (2) பிறரிடமிருந்து | 3,979,12 | 4,840,96 |

| | | |
|---|---|---|
| (ஆ) வங்கிகளிடமிருந்து பெற்ற கடன் (ரிசர்வ் பாங்க், ஸ்டேட் பாங்க், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு, பிற அறிவிக்கப் பட்ட வங்கிகள் தவிர) | 5,38 | 13,47 |
| (இ) பிற தவணைப் பொறுப்புகள் | 51,82 | 45,55 |
| 3. ஸ்டேட் பாங்க், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு, பிற அறிவிக்கப்பட்ட வங்கி களிடமிருந்து பெற்ற கடன் | 68,69 | 74,14 |
| 4. ரிசர்வ் பாங்கிடம் பெற்ற கடன்கள் | 207,45 | 138,45 |
| மேற்கூறியக் கடனில் பிரிவு 17 (4) (c) யின் கீழ் | 98,42 | 30,61 |
| 5. இந்தியாவில் உள்ள ரொக்கம் | 180,48 | 220,00 |
| 6. ரிசர்வ் பாங்கில் உள்ள ரொக்க இருப்புகள் | 266.82 | 264,19 |
| 7. நடப்புக் கணக்கில் பிற வங்கி களிடம் இந்தியாவில் உள்ள இருப்புகள் | 83,86 | 104,15 |
| 8. அழைப்புக் கடன்கள் | 52,12 | 125,52 |
| 9. முதலீடுகள் | 1,650,29 | 2,162,29 |
| 10. அ. கடன், ரொக்கக் கடன், மேல் வரைப்பற்று (வங்கி களிடமிருந்து வரவேண் டியது தவிர) | 4,196,62 | 4,966,51 |
| ஆ. வங்கிகளிடமிருந்து வர வேண்டியது | 32,60 | 37,05 |
| 11. உள்நாட்டு உண்டியல்கள் வாங் கியதும் மறுதள்ளுபடி செய்ததும் | 845,92 | 842,52 |
| 12. வெளிநாட்டு உண்டியல்கள் வாங்கியதும் மறுதள்ளுபடி செய்ததும் | 220,83 | 257,03 |
| 13. 10, 11, 12 ஆகியவற்றின் கூட்டுத்தொகை | 5,263,36 | 6,066,06 |

1973 மார்ச்சு இறுதியில், 1972 மார்ச்சு இறுதியில் இருந்ததைவிட, 1482.03 கோடி ரூபாய்க்கு அட்டவணையிலிட்ட வணிக வங்கிகளின் மொத்த வைப்புகள் அதிகமாகியிருந்தன. (மார்ச்சு 1972-7105.93 கோடி ரூபாய், மார்ச்சு 1973-8587.96 கோடி ரூபாய்) தவணை வைப்புகள் 861.84 கோடி ரூபாய் அளவுக்கும், கேட்பு வைப்புகள் 620.20 கோடி ரூபாய் அளவுக்கும் அதிகரித்திருந்தன. கொடுத்த கடன் 802.70 கோடி ரூபாய் அதிகரித்திருந்தது. அரசாங்க ஆவணங்களில் செய்த முதலீடுகள் 197.82 கோடி ரூபாய்க்கு அதிகரித்திருந்தன. ஆனால் ரிசர்வ் பாங்கிடமிருந்து பெற்ற கடன் 69 கோடி ரூபாய் குறைந்திருந்தது. ரிசர்வ் பாங்கிடம் வைத்திருந்த காப்பு ரொக்கமும் 2·63 கோடி ரூபாய்க்குக் குறைந்திருந்தது. கடன்-வைப்பு வீதம் (Credit deposit ratio) 74·1%-லிருந்து 70.6%-க்குக் குறைந்திருந்தது. அதுபோலவே ரொக்க-வைப்புவீதமும் (Cash-deposit ratio) 6.3%-லிருந்து, 5.6%-க்குக் குறைந்திருந்தது.

ரிசர்வ் பாங்கின் வருமானமும் செலவும்

ரூபாய் ஆவணங்கள், பிற நாட்டு ஆவணங்கள் ஆகியவைமூலம் பெறும் வட்டி, வங்கிகளுக்குக் கொடுக்கும் கடனுக்குப் பெறும் வட்டி, மாநில அரசுகளுக்குக் கொடுக்கும் கடன்களுக்குப் பெறும் வட்டி, இந்திய அரசு மற்றும் வெளிநாட்டு அரசாங்கக் கருவூல உண்டியல்கள் ஆகியவற்றை மறுதள்ளுபடி செய்வதன்மூலம் பெறும் தள்ளுபடி, ஸ்டர்லிங் விற்பதாலும், அரசாங்கக் கணக்கில் ஸ்டர்லிங் விற்பதாலும், அரசாங்கக் கணக்கில் ஸ்டர்லிங் மாற்றல் செய்வதாலும் ஏற்படக் கூடிய இலாபங்கள், பணம் அனுப்புகைத் திட்டத்தின் கீழ் கிடைக்கும் வருமானங்கள், மத்திய, மாநில அரசுகளின் பொதுக்கடனை நிருவகிப்பதற்காகக் கிடைக்கும் தரகு, அரசாங்கம் மற்றும் பிறர் சார்பில் ஆவணங்களை வாங்குவதால் கிடைக்கக்கூடிய வருமானம் ஆகியப் பல வழிகளின் மூலம் ரிசர்வ் பாங்க் தன் வருமானத்தைப் பெறுகிறது.

நிறுவனச் செலவுகள், முகவர் செலவுகள், காசோலைகள் போன்றவற்றை அச்சடிக்க ஏற்படும் செலவுகள் ஆகியவை ரிசர்வ் பாங்கின் முக்கியச் செலவினங்கள் ஆகும்.

அட்டவணை 3-ல், 1958-59, 1968-69, 1969-70, 1970—71, 1971—72, 1972-73 ஆகிய ஆண்டுகளுக்கு ரிசர்வ் பாங்கின் வரவினங்கள், செலவினங்கள் பற்றியப் புள்ளி விபரங்கள் கொடுக்கப் பட்டுள்ளன.

1935-லிருந்து 1974 சூன் வரை, ரிசர்வ் பாங்க் மத்திய அரசுக்குக் கொடுத்த இலாபத்தொகை பற்றியப் புள்ளி விபரங்கள் அட்டவணை 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 1941-லிருந்துதான், ரிசர்வ் பாங்க் அதிக அளவுக்கு இலாபத் தொகையை, மத்திய அரசுக்கு மாற்றல் செய்தது. 1963-64 வரை, ரிசர்வ் பாங்கின் இலாபத் தொகைகளில் ஏற்றத் தாழ்வுகள் இருந்தபோதிலும், 1964-65—லிருந்து இலாபத்தொகை தொடர்ந்து மிக வேகமாக உயர்ந்து வருவதைக் காணலாம்.

# அட்டவணை 3

## ரிசர்வ் பாங்கின் வருமானமும் செலவுகளும்

(ரூபாய் கோடிக்கணக்கில்)

| இனங்கள் (சூலை-சூன்) | 1958-59 | 1968-69 | 1969-70 | 1970-71 | 1971-72 | 1972-73 |
|---|---|---|---|---|---|---|
| 1. வருமானம் (சட்ட முறைப்படி ஒதுக்கல் செய்தபின்) | 47·26 | 99·35 | 105·45 | 136·46 | 157·17 | 171·29 |
| 2. செலவுகள் | 7·26 | 29·35 | 30·45 | 36·46 | 37·17 | 41·29 |
| நிறுவனச் செலவுகள் | 3·78 | 14·25 | 14·84 | 20·59 | 20·93 | 22·89 |
| முகவர் செலவுகள் | 1·00 | 6·66 | 6·99 | 7·21 | 7·28 | 8·31 |
| அச்சடிப்புச் செலவுகள் | 1.15 | 5·09 | 4·73 | 4·91 | 4·80 | 4·96 |
| பிற செலவுகள் | 1·33 | 3·35 | 3·89 | 3·75 | 4·16 | 5·13 |
| 3. நிகர இருப்பு | 40·00 | 70·00 | 75·00 | 100·00 | 120·00 | 130·00 |
| 4. மத்திய அரசுக்கு மாற்றல் செய்த தொகை | 40·00 | 70·00 | 75·00 | 100·00 | 120·00 | 130.00 |

## அட்டவணை 4

### ரிசர்வ் பாங்க் மத்திய அரசுக்கு மாற்றிய இலாபத்தொகை

(ரூபாய் ஆயிரக் கணக்கில்)

| ஆண்டு | தொகை | ஆண்டு | தொகை |
|---|---|---|---|
| ஏப்ரல்–டிசம்பர் 1935 | 42,93 | 1954-55 | 20,00,11 |
| சனவரி–டிசம்பர் 1936 | 35,92 | 1955-56 | 20,00,08 |
| சனவரி-டிசம்பர் 1937 | 10,41 | 1956-57 | 30,00,14 |
| சனவரி-டிசம்பர் 1938 | 20,95 | 1957-58 | 30,00,09 |
| சனவரி-டிசம்பர் 1939 | 5,00 | 1958-59 | 40,00,23 |
| சனவரி–சூன் 1940 | 20,54 | 1959-60 | 40,00,13 |
| சூலை 1940-சூன் 1941 | 2,61,76 | 1960-61 | 42,50,01 |
| 1941-42 | 3,24,04 | 1961-62 | 43,50,01 |
| 1942-43 | 7,49,81 | 1962-63 | 44,50,01 |
| 1943-44 | 10,06,58 | 1963-64 | 40,00,01 |
| 1944-45 | 14,69,27 | 1964-65 | 48,00,01 |
| 1945-46 | 13,43,43 | 1965-66 | 50,00,00 |
| 1946-47 | 7,82,27 | 1966-67 | 60,00,01 |
| 1947-48 | 10,18,28 | 1967-68 | 65,00,00 |
| 1948-49 | 8,95,70 | 1968-69 | 70,00,00 |
| 1949-50 | 9,90,82 | 1969-70 | 75,00,00 |
| 1950-51 | 8,33,65 | 1970-71 | 100,00,00 |
| 1951-52 | 7,50,00 | 1971-72 | 120,00,00 |
| 1952-53 | 12,50,14 | 1972-73 | 130,00,01 |
| 1953-54 | 17,50,46 | 1973-74 | 145,00,00 |

## ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியாவின் வெளியீடுகள்

ரிசர்வ் பாங்கின் வெளியீடுகளில் உள்ள புள்ளி விவரங்களும் செய்திகளும் மிகவும் அதிகாரப் பூர்வமானவை. ஆதலால் அவற்றின் மதிப்பே தனிதான். நாட்டின் பொருளாதாரப் போக்குப் பற்றி அறியவும், புள்ளி விவரங்களின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கவும், ரிசர்வ் பாங்கின் வெளியீடுகள் மிகவும் உதவுகின்றன. ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு, ரிசர்வ் பாங்க் வெளியீடுகள் தங்கச் சுரங்கத்திற்கு ஒப்பாகும் என்றால், அது மிகையாகாது. ரிசர்வ் பாங்க் வெளியீடுகள் மூலம் கிடைக்கக் கூடிய புள்ளிவிவரங்கள், செய்திகள் ஆகியவை இன்றி எந்த ஒரு முடிவாவது எடுக்க முடியமா என்பது ஐயமே.

ரிசர்வ் பாங்கின் நடவடிக்கைகள், வங்கியியல்,நிதியியல் ஆகியவற்றின் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, நாட்டில் ஏற்படும் முக்கிய மாற்றங்கள் மற்றும் பற்பல முக்கியமானச் செய்திகள் ஆகியவை ரிசர்வ் பாங்க் வெளியீடுகளில் காணப்படுகின்றன. ரிசர்வ் பாங்க் வெளியீடுகள் கணக்கற்றவை. அவற்றின் முக்கியமான வெளியீடுகள் பற்றி ஈண்டுக் காண்போம்.

ரிசர்வ் பாங்கின் வழக்கமான வெளியீடுகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

1. ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா துணர், மற்றும் வாராந்திரப் புள்ளி விவர இணைப்பு (Reserve bank of India bulletin and its Weekly Statistical Supplement)

2. ரிசர்வ் பாங்க் வெளியிடும் ஆண்டு அறிக்கைகள் : (Several annual reports issued by the bank)

அவ் வறிக்கைகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை முக்கியமானவையாகும்.

அ. மத்திய இயக்குநர்கள் அவையின் அறிக்கை. (Report of the central board of directors)

ஆ. ரிசர்வ் பாங்க் செயல்படுவது பற்றிய செலாவணி, நிதி அறிக்கை. (Report on currency and finance)

இ. இந்தியாவில் வங்கிகளின் வளர்ச்சியும், போக்கும் பற்றிய அறிக்கை. (Report on trend and progress of banking in India)

ஈ. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியிடப் படும் கூட்டுறவு இயக்கம் பற்றிய மறுபரிசீலனை அறிக்கை. (Review of the Cooperate movement in India)

3. பலவிதப் புள்ளிவிவரச் சேர்க்கைகள் (Statistical compilations)

அ. இந்தியாவில் உள்ள வங்கிகள் பற்றியப் புள்ளி விபர அட்டவணைகள் (Statistical tables relating to banks in India)

ஆ. இந்தியக் கூட்டுறவு இயக்கம் பற்றியப் புள்ளி விவர அறிக்கைகள் (Statistical statements relating to the Co-operative movement in India)
ஆகியவை புள்ளி விவரச் சேர்க்கைகளில் சில.

4. சிறப்பு வெளியீடுகள் (Special publications)

ரிசர்வ் பாங்க், அடிக்கடி, சில சிறப்பு வெளியீடுகளையும் வெளியிட்டுள்ளது. அவற்றில் சில ' கீழே குறிப்பிடப் பட்டுள்ளவை ஆகும்.

அ. சில முக்கியமானப் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ரிசர்வ் பாங்கால் நியமிக்கப்படும் குழுக்களின் அறிக்கைகள். (Reports of adhoc expert committees)

ஆ. கிராமியக்கடன், கூட்டுறவு, கம்பெனி நிதி, அயல்நாட்டுச் செலுத்து நிலை பற்றிய ரிசர்வ் பாங்க்கின் ஆராய்ச்சி அறிக்கைகள் (Several monographs containig the banks investigations)

ரிசர்வ் பாங்க்கின் முக்கிய வெளியீடுகள் பற்றி, ஒரு சிறு விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா துணர் (Reserve Bank of India Bulletin)

ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா துணர், நாட்டின் பொருளாதாரப் போக்குப் பற்றியப் புள்ளி விவரங்களையும் பிற தகவல் களையும் தொகுத்து அளிக்கிறது. ரிசர்வ் பாங்க், குறிப்பாக, பொருளாதாரத்துறை மற்றும் புள்ளியியல் துறை ஆகியவை நடத்தியச் சிறப்புப் பரிசீலனை இத்துணரில் அடங்கியுள்ளது. நிதி நிலைமை, பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றிய கட்டுரைகள், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் ஏற்படும் முக்கிய மாறுதல்கள், நிதியியல், மற்றும் வங்கியியல் பற்றிய சட்டதிட்டங்கள், கடன்

கட்டுப்பாடு, வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு ஆகியவை பற்றியும், இத் துணரில் கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. ஒரு புள்ளிவிவரப் பிரிவும் ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா துணரில் இருக்கிறது. நிதியியல் மற்றும் பொருளாதாரப் புள்ளி விவரங்களை வாராந்திரப் புள்ளி விவர இணைப்புகளிலிருந்து ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா துணரின் ஆண்டு இணைப்பான இந்தியப் பொருளாதாரம் பற்றியச் சில அடிப்படைப் புள்ளி விவரங்கள் (Some Basic Statistics relating to Indian Economy) பொருளாதாரத்தின் பல்வேறு பிரச்சினைகள்பற்றி, ஓராண்டிற்கான புள்ளி விபரங்களைத் தருகின்றன.

## மத்திய இயக்குநர் அவையின் அறிக்கை

எத்தகையப் பொருளாதாரச் சூழ்நிலையில் ரிசர்வ் பாங்க் செயல்பட்டுள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டு சூலையிலிருந்து சூன் வரை, ரிசர்வ் பாங்கின் நிதியியல் மற்றும் கடன் கொள்கைகள், செயல்கள் ஆகியவை பற்றி இவ் வறிக்கையில் குறிப்பிடப்படுகிறது. இவ் வறிக்கையை ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் பிரிவு 53 (2) ன் கீழ், மத்திய அரசுக்கு, ரிசர்வ் பாங்க் சமர்ப்பிக்கிறது.

## செலாவணி, நிதி அறிக்கை

ரிசர்வ் பாங்க் தொடங்கப்படுவதற்கு முன்னர் செலாவணிக் கட்டுப்பாட்டு அதிகாரி (currency controller) வெளியிட்டு வந்த செலாவணி அறிக்கையின் தொடர்ச்சியே இது. பொருளாதார மற்றும், நிதி சம்பந்தப்பட்ட வளர்ச்சிகள், மாற்றங்கள், இந்தியப் பொருளாதார நிறுவன அமைப்பில் ஏற்படும் மாறுதல்கள், ஆகியவை இவ் வறிக்கையில் இடம் பெறும். மிகப்பரந்த முறையில், ஏப்ரல் முதல் மார்ச்சு இறுதிவரை கொடுக்கப்படும் இப் புள்ளிவிபரங்கள் ஆராய்ச்சியாளருக்கும் மிகவும் பயன்படும் வகையில் அமைந்துள்ளன.

## இந்தியாவில் வங்கியியல் போக்கும், வளர்ச்சியும் பற்றிய அறிக்கை

இவ் வறிக்கை வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 36 (2)—ன் படி, வெளியிடப்படுகிறது. வங்கியியல் வளர்ச்சி, (சூன் மாதத்தில் முடியும் ஓர் ஆண்டில்) வங்கியியல் கொள்கைகளில் மாற்றங்கள், வங்கியியலை வலுப்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் ஆகியவற்றை இவ் வறிக்கை வெளியிடுகிறது.

இந்தியக் கூட்டுறவு இயக்கம் பற்றிய மறுபரிசீலனை அறிக்கை

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ் வறிக்கை வெளியிடப்படும். கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி, அதன் கொள்கைகளில் ஏற்படும் மாறுதல்கள், குறுகியகால மற்றும், நீண்டகாலக் கூட்டுறவுக்கடன் அமைப்பு, கூட்டுறவு விற்பனை இயக்கம், கூட்டுறவுப் பயிற்சி, மற்றும் கல்விமுறை, கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் ஆகியவைபற்றியும், பிற கூட்டுறவு இயக்கத்தின் நடவடிக்கைகள் பற்றிய விவரங்களையும் இவ் வறிக்கை தெரிவிக்கிறது.

இந்திய வங்கியியல் மற்றும் நிதியியல்பற்றிய புள்ளி விவர அறிக்கை

இது, 1954-ல் வெளியிடப்பட்டது. வங்கியியல், நிதியியல் பற்றிக் கிடைத்த எல்லாப் புள்ளி விபரங்களும் 1952 வரை இதில் கொடுக்கப்பட்டுள்ளன. பின்னர் அண்மைப் போக்கை (recent trend) உள்ளடக்கும் வகையில், 1964-ல் இவ் வறிக்கைக்கு இரு இணைப்புகள் வெளியிடப்பட்டன.

ரிசர்வ் பாங்கின் பணிகளும் செயல்முறையும்

இந் நூல் முதன்முதல் 1941 இல் வெளியிடப்பட்டது. பின்னர், ரிசர்வ் பாங்கின் வளர்ச்சியின் காரணமாக, இந் நூலுக்குத் திருத்தங்கள் செய்யப்பட்டு 1958 செப்டம்பரில் வெளியிடப்பட்டது. பின்னர், மேலும் சில திருத்தங்களோடு, 1970 ஜூலையில் வெளியிடப்பட்டது. ரிசர்வ் பாங்கின் பணிகளும், செயல்முறையும், சுருக்கமாகவும் தெளிவாகவும் இதில் கூறப்பட்டுள்ளன.

இந்தியக் கூட்டுறவு இயக்கம்பற்றியப் புள்ளி விவர அறிக்கை

இந்தியக் கூட்டுறவு இயக்கம் பற்றியப் புள்ளிவிவர அறிக்கை இரு பிரிவுகளை உடையது. 1962—63 வரை, இரு பிரிவுகளும் ஒன்றாகவே இருந்தன. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி காரணமாக இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அவையாவன:

1. கூட்டுறவுக்கடன் சங்கங்கள்

2. பிற கூட்டுறவுச் சங்கங்கள்.

மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், விவசாயக் கூட்டுறவுக்கடன் சங்கங்கள், கூட்டுறவுத் தொழில் வங்கிகள், விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் அல்லாத பிற சங்கங்கள், மத்தியக் கூட்டுறவு

நிலவள வங்கிகள், பிரதம் நிலவள வங்கிகள், கூட்டுறவுக் கடன் இயக்கத்தின் தணிக்கை ஆகியவற்றின் புள்ளிவிவரங்கள் முதல் பிரிவில் அடங்கும்.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், மாநில, மத்தியக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள், நீர்ப்பாசனச் சங்கங்கள், வீடுகட்டும் சங்கங்கள், போக்குவரத்துச் சங்கங்கள், கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள், கூட்டுறவு நூற்பு ஆலைகள், கூட்டுறவுத் தொழில் பேட்டைகள், கூட்டுறவு மேற்பார்வைச் சங்கங்கள் ஆகியவை இரண்டாவது பிரிவில் அடங்கும்.

ரிசர்வ் பாங்கின் வரலாறு

1935 விருந்து 1951 வரை பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள ரிசர்வ் பாங்கின் வளர்ச்சியின் வரலாறே இந் நூல் ஆகும். தேஷ்முக் (Dr. C.D. Deshmukh) அவர்களைத் தலைவராகவும், அஞ்சாரியா (J. J. Anjaria), சரய்யா (R.G. Saraiya) டட்டா Dr. Bhabatosh Datta) ஆகியோரைக் கொண்ட குழுவின் துணையுடன் திரு. சிம்ஹாவால் (S. L. N. Simha) தயார் செய்யப்பட்டு 1970 ஏப்ரலில் இந் நூல் வெளிப்பட்டது.

# அட்டவணை 5

## ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா

### பணத்தாள் வெளியிடும் துறை-சொத்துகளும் பொறுப்புகளும்

(ரூபாய் கோடிக் கணக்கில்)

| | பொறுப்புகள் | | | | சொத்துகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு (ஏப்ரல்-மார்ச்சு) | புழகத்தில் உள்ள பணத்தாள்கள் | வங்கியியல் துறையில் உள்ள பணத் தாள்கள் | மொத்த பொறுப்புகள் அல்லது சொத்துகள் | தங்க நாணயமும் கட்டியும் | பிறநாட்டு ஆவணங்கள் | ரூபாய் நாணயங்கள் | இந்திய அரசாங் கத்தின் ரூபாய் ஆவணங்கள் |
| 1935-36 | 164.06 | 27.58 | 191.64 | 44.42 | 62.09 | 55.51 | 29.62 |
| 1936-37 | 175.81 | 25.81 | 201.62 | 44.42 | 69.57 | 64.01 | 23.62 |
| 1937-38 | 186.15 | 25.61 | 211.76 | 44.42 | 79.92 | 60.24 | 27.19 |
| 1938-39 | 182.36 | 28.28 | 210.64 | 44.42 | 66.95 | 67.11 | 32.16 |
| 1939-40 | 209.22 | 18.79 | 228.01 | 44.41 | 78.64 | 67.52 | 37.44 |
| 1940-41 | 241.41 | 17.27 | 258.67 | 44.41 | 129.92 | 35.87 | 48.47 |
| 1941-42 | 307.68 | 12.22 | 319.90 | 44.41 | 165.00 | 35.28 | 75.20 |
| 1942-43 | 513.44 | 11.80 | 525.24 | 44.41 | 319.11 | 22.33 | 139.39 |
| 1943-44 | 777.17 | 10.50 | 787.61 | 44.41 | 643.52 | 14.28 | 85.45 |
| 1944-45 | 968.69 | 10.93 | 979.61 | 44.41 | 863.74 | 13.51 | 57.95 |
| 1945-46 | 1162.64 | 16.41 | 1179.05 | 44.41 | 1061.27 | 15.52 | 57.84 |
| 1946-47 | 1222.96 | 32.61 | 1255.57 | 44.41 | 1133.89 | 19.43 | 57.84 |
| 1947-48 | 1227.82 | 47.12 | 1274.95 | 44.41 | 1135.33 | 32.36 | 62.84 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1948-49 | 1237.42 | 22.02 | 1259.45 | 42.49 | 907.47 | 43.86 | 265.62 |
| 1949-50 | 1128.94 | 24.00 | 1152.94 | 40.02 | 647.04 | 50.53 | 415.36 |
| 1950-51 | 1247.41 | 11.72 | 1259.13 | 40.02 | 678.15 | 54.34 | 486.63 |
| 1951-52 | 1141.11 | 35.82 | 1176.93 | 40.02 | 603.15 | 69.13 | 464.64 |
| 1952-53 | 1133.12 | 17.03 | 1150.15 | 40.02 | 578.15 | 82.12 | 449.86 |
| 1953-54 | 1185.92 | 17.23 | 1203.16 | 40.02 | 648.15 | 93.65 | 421.34 |
| 1954-55 | 1277.09 | 15.92 | 1293.02 | 40.02 | 646.85 | 102.20 | 503.95 |
| 1955-56 | 1466.64 | 11.77 | 1478.41 | 40.02 | 656.42 | 103.16 | 678.82 |
| 1956-57 | 1526.09 | 11.77 | 1537.86 | 117.76 | 412.52 | 122.61 | 884.97 |
| 1957-58 | 1579.13 | 10.21 | 1589.35 | 117.76 | 171.19 | 129.29 | 1171.10 |
| 1958-59 | 1701.53 | 15.60 | 1717.12 | 117.76 | 178.01 | 130.09 | 1291.26 |
| 1959-60 | 1844.90 | 21.94 | 1866.84 | 117.76 | 163.01 | 124.14 | 1461.93 |
| 1960-61 | 1984.74 | 7.84 | 1992.59 | 117.76 | 123.01 | 119.62 | 1632.20 |
| 1961-62 | 2070.30 | 25.37 | 2095.67 | 117.76 | 113.86 | 116.91 | 1747.14 |
| 1962-63 | 2241.96 | 8.56 | 2250.52 | 117.76 | 105.08 | 116.26 | 1911.42 |
| 1963-64 | 2454.00 | 19.80 | 2473.80 | 117.76 | 112.46 | 109.11 | 2134.47 |
| 1964-65 | 2606.86 | 40.03 | 2646.89 | 133.76 | 77.46 | 97.75 | 2337.92 |
| 1965-66 | 2866.36 | 24.86 | 2891.21 | 115.89 | 95.05 | 94.00 | 2586.27 |
| 1966-67 | 3019.77 | 45.53 | 3065.30 | 115.89 | 186.42 | 78.07 | 2684.92 |
| 1967-68 | 3193.96 | 47.75 | 3241.71 | 115.89 | 166.42 | 78.96 | 2880.44 |
| 1968-69 | 3496.67 | 39.53 | 3536.20 | 182.53 | 216.42 | 75.77 | 3061.48 |
| 1969-70 | 3842.56 | 23.38 | 3865.93 | 182.53 | 331.42 | 64.63 | 3287.35 |
| 1970-71 | 4211.77 | 9.59 | 4221.36 | 182.53 | 273.42 | 51.67 | 3713.73 |
| 1971-72 | 4637.18 | 18.13 | 4655.31 | 182.53 | 238.65 | 36.27 | 4197.85 |
| 1972-73 | 5253.45 | 18.75 | 5272.20 | 182.53 | 171.65 | 8.66 | 4909.35 |
| 1973-74 | 6126.54 | 33.14 | 6159.68 | 182.53 | 141.74 | 5.07 | 5830.34 |

# அட்டவணை 6

## ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா, வங்கியல் துறை

(ரூபாய் கோடிக்கணக்கில்)

| | பொறுப்புகள் | | | | | | | | | | சொத்துகள் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வைப்புகள் | | | | | | | | | | | | கடன்கள் | | | | | | வாங்கிய அல்லது தள்ளுபடி செய்த உண்டியல்கள் | | |
| ஆண்டு (ஏப்ரல்-மார்ச்சு) | மொத்தம் | மத்திய அரசு | மாநில அரசுகள் | அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள் | அட்டவணையிலிட்ட மாநிலக் கூட்டுறவு வங்கிகள் | அட்டவணையிலிட்ட மாநிலக் கூட்டுறவு வங்கிகள் | பிற வங்கிகள் | பிற வகையினர் | பிற பொறுப்புக்கள் | மொத்தப் பொறுப்புகள் அல்லது சொத்துகள் | பணத்தாள்களும் நாணயங்களும் | வெளிநாட்டில் உள்ள இருப்புகள் | மத்திய அரசு | மாநில அரசுகள் | அட்டவணையிலிட்ட வணிக வங்கிகள் | மாநிலக் கூட்டுறவு வங்கிகள் | பிற வகையினர் | உள்நாட்டு உண்டியல்கள் | அரசாங்கக் கருவூல உண்டியல்கள் | முதலீடுகள் | பிற சொத்துகள் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 1935-36 | 38.61 | 11.26 | | | 27.26 | | | 0.09 | 0.91 | 49.52 | 27.68 | 14.99 | 0.87 | | | 0.01 | | | — | 5.48 | 0.51 |
| 1936-37 | 36.79 | 9.83 | | | 26.56 | | | 1.40 | 1.14 | 47.93 | 25.91 | 13.62 | 1.54 | | | 0.01 | | | 0.01 | 6.05 | 0.81 |
| 1937-38 | 37.02 | 11.37 | | | 24.96 | | | 0.70 | 0.86 | 47.89 | 25.69 | 13.48 | 0.79 | | | 0.02 | | | 0.06 | 7.12 | 0.72 |
| 1938-39 | 31.85 | 9.59 | 3.62 | | 16.19 | | | 0.75 | 2.97 | 43.12 | 28.38 | 4.21 | 1.72 | | | 0.02 | | | 1.53 | 6.30 | 0.90 |
| 1939-40 | 32.71 | 6.84 | 4.66 | | 17.82 | | | 1.04 | 3.89 | 44.25 | 18.88 | 12.34 | 1.05 | | | 0.10 | | | 2.87 | 7.25 | 1.75 |
| 1940-41 | 56.15 | 10.03 | 5.26 | | 36.84 | | | 1.92 | 4.67 | 68.71 | 17.39 | 39.32 | 2.01 | | | 0.07 | | | 0.97 | 7.78 | 1.17 |
| 1941-42 | 59.22 | 9.65 | 5.53 | | 37.73 | | | 3.89 | 6.74 | 73.55 | 12.35 | 46.08 | 4.09 | | | 0.04 | | | 0.27 | 8.96 | 1.76 |
| 1942-43 | 81.75 | 12.99 | 7.40 | | 57.36 | | | 3.29 | 8.61 | 99.66 | 11.93 | 75.11 | 1.49 | | | 0.04 | | | 0.68 | 7.12 | 3.30 |
| 1943-44 | 113.81 | 29.31 | 12.54 | | 64.69 | | | 6.65 | 11.43 | 134.63 | 10.67 | 111.72 | 0.49 | | | 0.15 | | | 0.91 | 7.61 | 3.08 |
| 1944-45 | 283.32 | 162.67 | 16.02 | | 90.57 | | | 13.25 | 14.87 | 307.38 | 11.19 | 277.28 | 0.43 | | | 0.11 | | | 1.46 | 13.13 | 3.78 |
| 1945-46 | 514.38 | 386.92 | 19.46 | | 90.22 | | | 16.56 | 17.54 | 540.71 | 16.72 | 488.23 | 0.22 | | | 0.12 | | | 3.35 | 24.65 | 7.42 |
| 1946-47 | 590.44 | 469.54 | 21.23 | | 85.04 | | | 14.24 | 18.71 | 618.76 | 32.85 | 528.83 | 0.05 | | | 0.82 | | | 2.33 | 31.70 | 22.18 |
| 1947-48 | 520.40 | 353.74 | 15.43 | | 102.47 | | | 34.21 | 27.61 | 544.96 | 47.24 | 406.95 | 1.57 | | | 0.21 | | | 2.62 | 81.53 | 4.85 |
| 1948-49 | 393.72 | 222.17 | 16.62 | | 80.53 | | | 56.52 | 30.16 | 419.05 | 22.13 | 307.78 | 1.71 | | | 3.34 | | | 4.28 | 75.65 | 4.14 |
| 1949-50 | 295.69 | 141.19 | 23.12 | | 67.00 | | | 64.39 | 15.76 | 321.45 | 24.12 | 180.91 | 3.35 | | | 8.39 | | | 4.30 | 96.04 | 4.34 |
| 1950-51 | 320.03 | 162.04 | 26.40 | | 59.28 | | | 72.31 | 33.10 | 353.13 | 11.89 | 206.03 | 1.56 | | | 16.75 | | | 8.21 | 99.20 | 9·50 |
| 1951-52 | 318.11 | 180.16 | 25.06 | | 46.99 | | | 65.90 | 35.90 | 354.01 | 35.98 | 119.92 | 0.94 | | | 61.37 | | | 3.72 | 102.09 | 29.99 |
| 1952-53 | 264.96 | 135.78 | 19.85 | | 46.52 | | | 62.81 | 40.69 | 305.65 | 17.23 | 145.53 | 3.30 | | | 26.95 | | | 8.80 | 96.12 | 7.72 |
| 1953-54 | 214.52 | 65.77 | 62.59 | | 42.41 | | | 43.76 | 35.08 | 249.60 | 17.55 | 104.82 | 0.51 | | | 41.10 | | | 10.74 | 66.16 | 8.72 |
| 1954-55 | 188.97 | 59.45 | 60.27 | | 47.72 | | | 21.53 | 39.86 | 228.83 | 16.22 | 83.15 | 0.45 | | | 47.87 | | | 10.37 | 49.38 | 21.39 |
| 1955-56 | 199.30 | 67.34 | 62.03 | | 53.24 | | | 16.68 | 59.47 | 258.77 | 11.92 | 89.72 | — | | | 79.94 | | | 12 23 | 47.19 | 17.77 |
| 1956-57 | 228.56 | 64.57 | 31.95 | | 57.77 | | | 74.28 | 171.03 | 399.59 | 11.95 | 114.31 | 7.65 | | | 127.87 | | | 2.98 | 121.22 | 13.61 |
| 1957-58 | 288.53 | 48.33 | 54.85 | | 67.83 | | | 117.52 | 177.46 | 465.99 | 10.35 | 95.81 | 21.23 | | | 78.40 | | | 7.68 | 238.44 | 14.08 |
| 1958-59 | 267.19 | 53.83 | 26.72 | | 67.57 | | | 119.07 | 190.67 | 457.86 | 15.67 | 35.05 | 24.77 | | | 113.44 | | | 5.18 | 251.70 | 12.05 |
| 1959-60 | 299.12 | 63.15 | 42.97 | | 92.90 | | | 100.10 | 216.34 | 515.46 | 22.02 | 34.11 | 22.34 | | | 156.54 | | | 33.60 | 232.58 | 14.26 |
| 1960-61 | 264.25 | 76.46 | 28.99 | | 70.85 | | | 87.96 | 221.39 | 485.64 | 7.94 | 13.24 | 39.02 | | | 185.50 | | | 39.17 | 180.95 | 19.82 |
| 1961-62 | 312.27 | 71.30 | 15.89 | | 72.73 | | | 152.36 | 231.84 | 544.12 | 25.42 | 15.84 | 80.89 | | | 177.69 | | | 46.60 | 163.43 | 34.24 |
| 1962-63 | 337.09 | 55.83 | 31.42 | 74.91 | 2.49 | | 0.04 | 172.39 | 263.18 | 600 27 | 8.62 | 11.30 | 54.76 | | 71.28 | 134.35 | 1.68 | | 66.00 | 216.87 | 35.40 |
| 1963-64 | 340.88 | 84.15 | 15.97 | 76.66 | 2.34 | | 0.04 | 161.71 | 282.76 | 623.64 | 19.87 | 13.82 | 70.62 | | 84.16 | 133.98 | 2.82 | | 64.60 | 203.63 | 30.13 |
| 1964-65 | 370.27 | 90.91 | 24.72 | 95.67 | 3.06 | | 0.03 | 155.87 | 329.46 | 699.72 | 40.14 | 8.25 | — | 73.97 | 154.02 | 149.90 | 3.46 | | 86.51 | 142.82 | 41.65 |
| 1965-66 | 374.91 | 51.44 | 25.76 | 99.77 | 4.07 | | 0.02 | 193.85 | 349.28 | 724.19 | 24.93 | 14.87 | — | 211.21 | 73.52 | 165.85 | 5.20 | | 53.01 | 132.25 | 43.34 |
| 1966-67 | 569.17 | 116.90 | 38.90 | 127.82 | 5.84 | 0.63 | 0.11 | 278.97 | 416.32 | 985.49 | 45.65 | 48.21 | — | 70.66 | 139.72 | 170.68 | 7.01 | | 228.13 | 238.13 | 37.31 |
| 1967-68 | 533.27 | 52.71 | 13.74 | 130.53 | 5.72 | 0.79 | 0.09 | 329.68 | 426.18 | 959.45 | 47.89 | 128.53 | — | 119.73 | 103.91 | 197.67 | 9.40 | | 168.88 | 123.00 | 60.45 |
| 1968-69 | 569.38 | 59.91 | 18.12 | 186.43 | 6.88 | 0.52 | 0.46 | 297.05 | 571.91 | 1141.29 | 39.65 | 103.37 | — | 151.82 | 105.65 | 246.56 | 8.73 | | 170.58 | 274.07 | 40.8c |
| 1969-70 | 508.00 | 167.64 | 8.21 | 164.11 | 8.90 | 0.57 | 0.15 | 159.24 | 609.90 | 1117.90 | 23.51 | 135.14 | — | 211.98 | 238.02 | 275.51 | 8.78 | | 61.92 | 118.87 | 44.17 |
| 1970-71 | 553.03 | 250.55 | 13.37 | 207.10 | 9.33 | 0.78 | 0.26 | 71.65 | 688.67 | 1241.71 | 9.67 | 77.01 | — | 249.51 | 368.37 | 306.49 | 33.93 | 6.71 | 31.38 | 113.15 | 45.50 |
| 1971-72 | 625.60 | 214.86 | 4.96 | 281.34 | 12.93 | 0.89 | 0.54 | 110.09 | 1063.67 | 1689.27 | 18.26 | 182.17 | — | 625.20 | 207.45 | 323.26 | 88.23 | 41.90 | 69.36 | 87.32 | 46.22 |
| 1972-73 | 453.22 | 53.83 | 16.79 | 278.57 | 17.30 | 1.12 | 0.45 | 85.17 | 1198.49 | 1651.71 | 18.84 | 204.37 | — | 134.68 | 138.68 | 322.17 | 130.47 | 35.40 | 96.92 | 513.96 | 56.46 |
| 1973-74 | 919.04 | 140.47 | 19.39 | 609.70 | 15.66 | 1.34 | 2.80 | 129.68 | 1447.78 | 2366.82 | 33.21 | 388.14 | — | 251.56 | 408.52 | 317.36 | 196.88 | 256.79 | 141.75 | 294.17 | 92.16 |

# 13. முடிவுரை

ரிசர்வ் பாங்க் தொடங்கப்பட்டுச் சுமார் 40 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 40 ஆண்டுகளில், ரிசர்வ் பாங்கின் கொள்கைகளிலும், பணிகளிலும், குறிக்கோள்களிலும் எண்ணற்ற மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பிற நாட்டு மைய வங்கிகளைப் பின்பற்றி, ரிசர்வ் பாங்க் அமைக்கப்பட்டதால், தொடக்கத்தில் ஒழுங்குமுறைப் பணிகளே அதிகமாக இருந்தன. வளரும் பொருளாதாரத்தின் மாறும் தேவைகளுக்கு ஏற்றாற்போல், ரிசர்வ் பாங்க் தன்னுடைய பணிகளை மாற்றியமைத்துக் கொண்டுள்ளது. ஆகவே, காலப்போக்கில், ரிசர்வ் பாங்கின் பணிகளும் அதிகமாயின. ஒழுங்குமுறைப் பணிகளைப் புரிவதோடல்லாமல், பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதற்குத் தேவையான பணிகளையும் ரிசர்வ் பாங்க் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தொடக்கத்தில், மைய வங்கியின் பாரம்பரியப் பணிகளான பணத்தாள் வெளியிடல், அரசாங்க வங்கியராகப் பணிபுரிதல் ஆகிய பணிகளையே புரிந்துவந்தது. இரண்டாம் உலகப் போரின்போது, போர்க்கால நிதித் தேவைகளை அரசாங்கத்திற்குக் கிடைக்கச் செய்வதே ரிசர்வ் பாங்கின் பெரிய பணியாக இருந்தது. பின்னர், போரினால் சீர்குலைந்துபோன பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்துவதில், ரிசர்வ் பாங்க் முனைந்திருந்தது. போருக்குப் பின்னர், நாட்டுப் பிரிவினையால் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்க்க வேண்டியிருந்தது. தொடக்கத்திலிருந்து இத்தகைய பணிகளையே அதிகமாகப் புரிந்து வந்ததால், மைய வங்கிப் பணிகளில் அதிகக் கவனம் செலுத்த முடியவில்லை.

திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றத்திற்காக, இந்திய அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்ததால், அவற்றை நிறைவேற்றுவதற்குத் தேவைப்பட்ட நிதி வசதிகளைத் திரட்ட

வேண்டியிருந்தது. ரிசர்வ் பாங்க், அதிக அளவுக்குப் பல்வேறு வகையிலும், அரசாங்கத்திற்கு உதவ வேண்டிருந்தது. இதனுல் தான், 1951 லிருந்து ரிசர்வ் பாங்கின் கொள்கைகளில் பல மாற்றங்களைக் காணமுடிகிறது.

திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கு, அரசாங்கத்திற்கு, ரிசர்வ் பாங்க் நிதியுதவி அளித்தால் மட்டும் போதாது. நாடெங்கிலும் வங்கி வசதிகளைப் பெருக்க வேண்டிய முயற்சிகளை, ரிசர்வ் பாங்க் மேற்கொண்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள வருவாயைத் திரட்டுவதில், தனது முழுக் கவனத்தையும் செலுத்தியது. கடன் கட்டுப்பாடு, சிக்கல் நிறைந்த ஒன்றுனதால், மிகக் கவனமாகக் கையாள வேண்டியிருந்தது.

ரிசர்வ் பாங்க், பாங்க் வீதத்தை 1935 லிருந்து 1974 வரை, 10 முறைதான் மாற்றியது. பிற நாட்டு மைய வங்கிகளுடன் ஒப்பிடும்போது, இந்த அளவு மிகக் குறைவே. ஆனுல் பாங்க் வீத மாறுதல்கள் அவ்வளவு பலனளிக்கக் கூடியதாக இல்லை. 1951 வரையில் இந்தியாவில் ஓர் உண்டியல் அங்காடி இல்லாததும் இதற்குக் காரணமாகும். எளிய பணநிலைமை, வங்கிகளிடம் தேவைக்கு அதிகமாக இருந்த ரொக்க இருப்பு ஆகியனவும் பாங்க் வீதம் வெற்றி பெருததற்குக் காரணங் களாகும்.

1952-ல் உண்டியல் அங்காடித் திட்டம் ஒன்றை ரிசர்வ் பாங்க் கொண்டுவந்தபோதிலும், அத் திட்டம் பெயரளவுத் திட்டமே. தொடக்கத்தில் வெற்றிகரமாகச் செயல்பட்ட போதிலும், 1956-லிருந்து ரிசர்வ் பாங்க், தான் அளித்துவந்த சலுகைகளை, ஒன்றன்பின் ஒன்றுக நிறுத்திக் கொண்டதால், இத் திட்டம் ஒரு நொண்டித் திட்டமானது. இந்த மாற்று உண்டியல் அங்காடியில், மாற்று உண்டியல்களும் இல்லை, உண்டியல்களுக்கு அங்காடியும் இல்லை அல்லது அவற்றுக்கான திட்டமும் இல்லை என்றுதான் தெரியவருகிறது. நாட்டில் உண்டியல் அங்காடி இல்லாதிருப்பதால், பணச் சந்தைக்கும் தனக்கும் அது எவ்வளவு பெரிய குறைபாடு என்பதை ரிசர்வ் பாங்க் உணராமல் இல்லை. ஒரு கடன் கருவியாக மாற்று உண்டியலின் பங்கைப் பெருக்குவதற்கும், இந்தியாவில், ஒரு மாற்று உண்டியல் அங்காடியை உருவாக்கவும் (for the **creation** of a bill market in India) கருத்துகளைத் தெரிவிக்க, 1970 பிப்ரவரியில் ஒரு குழுவை ரிசர்வ் பாங்க் நியமித்தது. 1952-ல், உண்டியல், அங்காடித் திட்டத்தின்கீழ் மறுதள்ளுபடி செய்யப்படும் உண்டியல்கள் இல்லை; அவற்றுக்கான அங்காடியும் பணச்

சந்தையில் இல்லை என்று அக் குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியது. அக் குழுவின் பரிந்துரையின் பேரில் சில திருத்தங் களோடு 1970-ல் 'புதிய உண்டியல் மறுதள்ளுபடித் திட்டம்' கொண்டுவரப்பட்ட போதிலும், அத் திட்டம் 'புதிய மொந்தை யில் ஊற்றிய பழைய கள்' போலத்தான் இருக்கிறது. நினைத் தால், சில உண்டியல்கள் இத் திட்டத்தில் இடம்பெறும் என்பதும், சில உண்டியல்கள் இடம் பெரு என்று ரிசர்வ் பாங்க் அறிவிப்பதும், வங்கிகள் நினைத்தால் உண்டியல்களை மறுதள்ளுபடி செய்து கொள்வதும், சில சமயங்களில் ரிசர்வ் பாங்கை அணுகாமல் இருப்பதையும் கூர்ந்து கவனித்தால், ரிசர்வ் பாங்கும் வங்கிகளும் ஓடிப் பிடித்து விளையாடுகின்றனவோ என்று தோன்றுகிறது. 1952 ஆம் ஆண்டின் உண்டியல் அங்காடித் திட்டத்தில், நாட்டுப் பாங்கர்களின் உண்டியல்கள் இடம் பெருததால், அத் திட்டம் தோல்வியடைந்தது என்று கருத்துத் தெரிவிக்காதவரே இல்லை எனலாம். இப் புதிய திட்டத்திலும், நாட்டுப் பாங்கர்களின் உண்டியல்களைச் சேர்க்காததால், குறை கூறுவோருக்கு ரிசர்வ் பாங்க், ஒரு வாய்ப்பை அளித்துவிட்டது. இப் புதிய திட்டத்தையாவது செயல்முறைக்கு உகந்த திட்டமாக ரிசர்வ் பாங்க் வகுத்திருக்கலாம். நாட்டில், உண்டியல் அங்காடி இல்லாததற்கு ரிசர்வ் பாங்கை மட்டும் குறைகூறலாகாது. வங்கிகளும், வியாபாரிகளும் மாற்று உண்டியலை, ஒரு கடன் கருவியாக, அதிக அளவுக்குப் பயன்படுத்தக்கூடிய போக்கை மேற்கொள்ள வேண்டும். ரிசர்வ் பாங்க் மறுதள்ளுபடி வசதிகளை அளிக்கவில்லை என்பதால்தான், மாற்று உண்டியல்களை அதிகமாகப் பயன்படுத்த முடியவில்லை என்று ரிசர்வ் பாங்கைக் குறை கூறுவதை, வங்கிகள் நிறுத்திக் கொள்ளவேண்டும். ரிசர்வ் பாங்கும் வங்கிகளைக் குறை கூருமல், மாற்று உண்டியல், ஒரு கடன் கருவியாக வளரவேண்டும் என்று பேச்சளவில் நிறுத்திக் கொள்ளாமல், வங்கிகளை ஊக்குவிக்கும் வகையில் பல சலுகைகளை அளித்து, உண்டியல் அங்காடித் திட்டத்தை வெற்றியடையச் செய்யவேண்டும்.

வெளி அங்காடி நடவடிக்கைகளைப் பொறுத்தவரை, ரிசர்வ் பாங்க் தொடக்கத்திலிருந்து செய்து வந்த தவற்றை 1951-ல் தான் திருத்தியதோ என்று தோன்றலாம். ஆனல் உண்மை அது அன்று. நாட்டில் எளிய பணநிலைமை நிலவியதால் ரிசர்வ் பாங்க் வெளி அங்காடியில் அதிகமாக வாங்குபவராகவே திகழ வேண்டியிருந்தது. உண்டியல் அங்காடி இல்லாததும் அதற்கு ஒரு காரணமாகும்.

'காப்பு ரொக்க வீத மாறுதல்' கடன் கட்டுப்பாட்டு முறையை ரிசர்வ் பாங்க் அவ்வளவாகப் பயன்படுத்தவில்லை. நீண்டகாலத்திற்கு வங்கிகளின் காப்பு ரொக்கத்தைப் பெற்றிருந்ததேயொழிய, அதனை மாற்றக்கூடிய அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. 1960-ல் காப்பு ரொக்கத்தில் மாறுதல்கள் செய்வதற்கு ரிசர்வ் பாங்கிற்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்ட பிறகே, இது ஒரு பலமுள்ள கடன்கட்டுப்பாட்டுக் கருவியாக மாறியது.

உண்டியல் அங்காடி இல்லாததாலும், ஆவணங்கள் அங்காடி பரந்ததாகவும் அகலமானதாகவும் அமையாததாலும், வங்கிகளின் காப்பு ரொக்கத்தை மாற்றுவதற்கு நீண்டகாலமாக அதிகாரம் பெறவில்லையாதலாலும், ரிசர்வ் பாங்க், பொறுக்குக் கடன் கட்டுப்பாட்டு முறையை மேற்கொள்ள வேண்டியிருந்தது. தொடக்கத்தில் இம் முறை அவ்வளவு வெற்றிகரமாக இல்லை. கடந்த சில ஆண்டுகளாக மிக அதிக அளவுக்கு, ரிசர்வ் பாங்க், இக் கருவியைக் கையாண்டு வெற்றி பெற்றுள்ளது. பொறுக்குக் கடன் கட்டுப்பாட்டு முறையை அதிக அளவுக்குக் கையாள்வதால் ரிசர்வ் பாங்க் சர்வாதிகாரப் போக்கைப் பின்பற்றுகிறது என்று வங்கிகள் குறை கூறலாம். ஆனால், இந்தியப் பணச் சந்தையின் குறைகளையும், பலவீனத்தையும் பார்க்கும்போது பொறுக்குக் கடன் கட்டுப்பாட்டு முறை தவிர வேறு எந்த முறையை ரிசர்வ் பாங்க் மேற்கொள்ளமுடியும்?

தொடக்கத்தில் வங்கிகள், கடன் உதவி கேட்டு ரிசர்வ் பாங்கிடம் நெருங்கவில்லை என்று பலர் குறை கூறிவந்தனர். பழக்கத்தின் காரணமாக இம்பீரியல் வங்கியையே மைய வங்கியாகப் பாவித்து வந்தன. அச் சமயத்தில் எளிய பணநிலைமை நிலவியதால்தான், ரிசர்வ் பாங்கிடம் வங்கிகள் நெருங்கவில்லை. இன்றைய நிலைமையைப் பார்க்கும்போது, வணிக வங்கிகளைத் தன்னிடம் கடன் உதவி கேட்டு நெருங்க வேண்டா என்று ரிசர்வ் பாங்க் பலமுறை கேட்டுக்கொண்டுள்ளது. வங்கிகள் ஏன்நெருங்கவில்லை என்றிருந்த நிலைமை மாறி, ஏன் நெருங்குகின்றன என்ற பிரச்சினை தற்போது தலைதூக்கி நிற்கிறது.

நாட்டில் விலைவாசிகள் ஏறுமுகமாக இருப்பதற்கு ரிசர்வ் பாங்க்கைக் குறை கூறுவோரும் உண்டு. விலைவாசிகள் உயர்வதற்குப் பல காரணங்கள் உள்ளன என்பதைப் பொருளாதாரம் படித்தவர்கள் நன்கறிவர். ரிசர்வ் பாங்க் மட்டுமே காரணம் என்றால், அப் பிரச்சினைக்கு என்றைக்கோ ஒரு முடிவு கண்டிருக்கலாம். ரிசர்வ் பாங்க், தகுந்த கட்டுப்பாட்டு

நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடில், விலைவாசிகள் மேலும் உயர்ந்திருக்குமே என்பதை ரிசர்வ் பாங்கைக் குறைகூறுவோர் உணரவேண்டும்.

பலாய் சென்ட்ரல் பாங்க், லக்ஷ்மி பாங்க் (Laxmi Bank) ஆகியவை தோல்வியுற்றபோது ரிசர்வ் பாங்கைத் தாக்காத வர்களே இல்லை. ரிசர்வ் பாங்க் தொடக்கப்பட்டதிலிருந்து வங்கித் தோல்விகள் குறைந்து வந்துள்ளதை நாம் காண்கிறோம். வங்கிகளைக் கட்டுப்படுத்தவும், கண்காணிக்கவும், ரிசர்வ் பாங்கிற்கு அதிக அதிகாரங்கள் கடந்த சில ஆண்டுகளில் கொடுக்கப் பட்டுள்ளன. இவ் வதிகாரங்களை நன்முறையில் பயன்படுத்தி, மேலும் வங்கித் தோல்விகள் ஏற்படாமல், ரிசர்வ் பாங்க் பாது காக்கும் என்பதில் ஐயம் இல்லை.

கிராமியக்கடன் போதுமான அளவுக்கு அளிக்கப்படவில்லை என்பது முற்றிலும் உண்மையே. 'கூட்டுறவு இயக்கம் தோல்வி யடைந்து விட்டது; ஆனால் அது வெற்றியடைய வேண்டும்' என்று ஓர் அறிக்கை கூறியது. தோல்வியடைந்த முறையை இறுக்கிப் பிடித்துக்கொண்டு கிராமியக்கடன் வசதிகளைப் பெருக்க முடியாது என்பதை நன்குணர்ந்த ரிசர்வ் பாங்க், கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு வழிகளிலும் கிராமியக்கடன் வசதிகளைப் பெருக்க முயற்சிசெய்து வருகிறது. முன்னுரிமைத் துறைகள் என்று அழைக்கப்படும் வேளாண்மை, சிறு தொழில்கள், ஏற்றுமதிகள் ஆகியவற்றிற்கு மேலும் கடன் வசதி அளிக்குமாறு வணிக வங்கி களைக் கேட்டுக் கொள்வதோடு அவைகளுக்குப் பல சலுகைகளையும் ரிசர்வ் பாங்க் அளித்து வருகிறது.

இந்தியாவில் நீண்டகாலக்கடன் நிறுவனங்களே இல்லை என்பது மிகப் பெரிய குறைபாடு என்று நூலாசிரியர்கள் பலர் கடுமையாகக் குறை கூறி எழுதி வந்தனர். அத்தகைய நிலைமை மாறியுள்ளது. ரிசர்வ் பாங்கின் பெரு முயற்சியால் நீண்டகாலக் கடன் அளிக்கும் நிறுவனங்கள் பிறந்துள்ளன. அந் நிறுவனங்களைத் திறம்படச் செயல்பட வைப்பதில், ரிசர்வ் பாங்க், பெரிய பொறுப்பைப் பெற்றுள்ளது.

வெளிநாட்டுச் செலாவணி நிருவாகத்தை வெற்றிகரமாக ரிசர்வ் பாங்க் நடத்திச் செல்கிறது. போர்க்காலத்தில் ரிசர்வ் பாங்கின் வெளிநாட்டுச் செலாவணி நிருவாகத்தைப் பாராட்டா தாரே இல்லை எனலாம்.

மாறும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தனது அக அமைப்பில் எவ்வளவோ மாறுதல்களை ரிசர்வ் பாங்க் செய்து கொண்டு வருகிறது.

ரிசர்வ் பாங்கின் அறிக்கைகளும், வெளியீடுகளும், ஆராய்ச்சி யாளருக்கும் பொருளாதார வல்லுநருக்கும் எந்த அளவுக்குப் பயனளிக்கின்றன என்பதை இங்கே கூறி முடிக்க இயலாது.

ரிசர்வ் பாங்க், மத்திய அரசுக்கு மாற்றல் செய்யும் இலாபத் தொகை ஒரு வற்றாத தங்கச் சுரங்கத்திற்கு ஒப்பாகும்.

நாட்டுப் பாங்கர்கள், பணச்சந்தைக்கு அப்பால் இருப்பதும் உண்டியல் அங்காடி இல்லாததும், ரிசர்வ் பாங்கின் குறுகிய வரலாற்றில் இருபெரும் கரும்புள்ளிகள் ஆகும். காலப் போக்கில் இக் குறைபாடுகளை அகற்றி ரிசர்வ் பாங்க் தன் வரலாற்றைப் புனிதமாக்கும் என்று நாம் முழுமையாக நம்பலாம்.

ரிசர்வ் பாங்கின் நடவடிக்கைகளும், செயல்களும் காலங் கடந்தவையாக உள்ளன என்று பலரும் குறை கூறுகின்றனர். (1) [ 'Monetary Policy—Too little, Too late'—Economic and Political weekly, 3rd August, 1974, Page 1221. (2) 'RBI—No policy for money supply'—Commerce, 14th September, 1974, p. 435.) ரிசர்வ் பாங்க் சில சமயங்களில் அவசரப்பட்டுவிட்டது என்று குறை கூறுவோரும் உண்டு. எதற்கெடுத்தாலும் ரிசர்வ் பாங்கை ஒரு பலி ஆடாக (Scape goat) ஆக்குவதை அவர்கள் நிறுத்திக் கொள்வாராக.

அமைதியாக நிற்பதற்கு இந்தியா மிகவேகமாக ஓடிக் கொண்டிருக்க வேண்டும் என்று சில ஆண்டுகளுக்கு முன் கால்பிரெய்த் கூறினர் ('India has to run fast, to stand still'-Galbraith). அதுபோலவே ரிசர்வ் பாங்கும் ஓடிக்கொண்டே யிருக்க வேண்டும். ஆனல் ரிசர்வ் பாங்க் ஓட வேண்டிய பாதை கல்லும் முள்ளும் நிறைந்ததாகவும், முடிவற்று நீண்டதாகவும் உள்ளது. இருப்பினும், இப் பயணம் இனிது தொடரட்டும்.

# மேற்கோள் நூற்பட்டியல்


1. Almaula, N. I., Operations of the Reserve Bank of India.
2. Basu, A. K., Fundamentals of Banking Theory and Practice (Fourth Edition).
3. Gupta, G. P., The Reserve Bank of India and Monetary Management (Second Edition).
4. Iyangar, H. V. R., Monetary Policy and Economic Growth (First Edition).
5. Johri, C. K., Monetary Policy in a Developing Economy.
6. Manaktala, T. R., Economic Development and Monetary Management in India (First Edition).
7. Muranjan, S. K., Modern Banking in India (Third Edition).
8. Panandikar, S. G., Banking in India (Nineth Revised-Edition).
9. Raman, A., Central Banking in India.
10. Sayers, R. S., Modern Banking (Seventh Edition).
11. Sen, S. N., Central Banking in Undeveloped Money Markets (Third Edition).
12. Sharma. K. K., Reserve Bank of India and Rural Credit.
13. Simha, S. L. N., Reform of the Indian Banking System.

14. Tannan, M. L., Banking Law and Practice in India (Eleventh Edition).

15. Tyagi, R. B., Recent Trends in the Cooperative Movement in India.

16. Vaish, M. C., Monetary Theory (Fifth Edition).

17. Reserve Bank of India :

1. The Reserve Bank of India—Functions and working.
2. History of the Reserve Bank of India 1935-51.
3. Annual Report and Trend and Progress of Banking in India.
4. Reports on Currency and Finance.
5. Reserve Bank of India Bulletins.
6. Banking and Monetary Statistics of India.
7. Supplement to Banking and Monetary Statistics of India, Part I and II.
8. Reserve Bank of India—General Regulations (As amended upto 14-12-1970).
9. Reserve Bank of India—Scheduled Banks' Regulations, 1951 (As amended upto May, 1966).

18. State Bank of India Monthly Review.

# கலைச்சொல் அகராதி

## A

Acceptance House — ஏற்பகம்
Accommodation Bill — பணமுடை உண்டியல்
Actionable claim — தொடரத்தகு பாத்தியதை
Advisory Council — அறிவுரை சபை
Agent — முகவர்
Agricultural Refinance Corporation — வேளாண்மை மறுநிதிக் கூட்டுரு
All India Rural Credit Review Committee — அகில இந்தியக் கிராமியக் கடன் மறுபரிசீலனைக் குழு
Appeal — முறையீடு
Asian Development Bank — ஆசிய வளர்ச்சி வங்கி
Audit — தணிக்கை
Authorised Dealer — அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளர்

## B

Balance of payment — அயல் நாட்டுச் செலுத்துநிலை
Balance sheet — இருப்புநிலைக் குறிப்பு
Bank rate — பாங்க் வீதம்
Basic quota — அடிப்படைப் பங்கீடு
Bazaar bill rate — அங்காடி உண்டியல் வீதம்
Bill market — உண்டியல் அங்காடி

Bill of lading — கப்பல் இரசீது
Bulletin — துணர்
Busy season — மும்முரப் பருவம்

## C

Call loan Market — அழைப்புக் கடன் அங்காடி
Capital Formation — முதலாக்கம்
Capital goods — முதற் கருவிப் பொருள்கள்
Capital market — முதல் அங்காடி
Cash-Deposit Ratio — ரொக்க-வைப்பு வீதம்
Cash Reserve variation — காப்பு ரொக்க மாறுதல்
Ceiling — உச்ச அளவு
Central Banking Enquiry Committee — மைய வங்கி விசாரணைக் குழு
Central Warehousing Corporation — மத்தியப் பண்டகக் கூட்டுரு
Chairman — தலைவர்
Cheap money policy — மலிவுப் பணக்கொள்கை
Claim — கோருரிமை, பாத்தியதை
Clearing House — தீர்வகம்
Collateral loan market — துணைக்கடன் அங்காடி
Commercial paper — வணிகத்தாள்
Compromise — ஒத்திசைவு
Compulsory amalgamation — கட்டாய இணைப்பு
Credit Authorisation Scheme — கடன் அங்கீகரிப்புத் திட்டம்
Credit-Deposit Ratio — கடன்–வைப்பு வீதம்
Credit Guarantee Corporation of India — இந்தியக் கடன் உத்தரவாதக் கூட்டுரு
Credit Instrument — கடன் கருவி
Currency Chest — பணப் பெட்டகம்

## D

Days of grace — கருணை நாள்கள்
Dealer — உரிமையாளர்

Debenture — கடன் பத்திரம்
Deficit Financing — பற்றுக்குறை நிதியாக்கம்
Deposit Insurance Corporation— வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு
Depression — தொழில் மந்தம்
Demand Bill — கேட்பு உண்டியல்
Demand deposits — கேட்பு வைப்புகள்
Demand Documentary Bill — ஆவணங்களிணைந்த கேட்பு உண்டியல்
Direct control — நேரடிக் கட்டுப்பாடு
Discount house — தள்ளுபடியகம்
Discount rate — தள்ளுபடி விகிதம்
Dividend — இலாப ஈவு
Dock warrant — துறைமுகச் சீட்டு
Documentary bill — ஆவணங்கள் சேர்ந்த உண்டியல்
Documents of Title to Goods — சரக்குரிமை ஆவணங்கள்
Durable Consumer Goods — நீடித்த நுகர்வுப் பொருள்கள்

## E

Easy Money Condition — எளிய பண நிலைமை
Economic depression — பொருளாதார மந்த நிலைமை
Economic Recovery — பொருளாதார மீட்சி
Exchange rate — நாணய மாற்று வீதம்
Executive Director — நிறைவேற்றியக்குநர்
Expert Committee — நிபுணர் குழாம்
Export house — ஏற்றுமதியகம்
External Value — புற மதிப்பு

## F

Federation — கூட்டமைப்பு
Financial market — நிதியியல் அங்காடி
Fixed Fiduciary System — வரையறை செய்யப்பட்ட நம்பிக்கைத் திட்டம்
Flexible — நெகிழ்வுடைய
Fluctuation — ஏற்றத்தாழ்வு

Food Corporation of India — இந்திய உணவுத் தானியக் கூட்டுருவு
Forward transaction — முன்னோக்கிய பேரம்
Full employment — வேலை நிறைவு

## G

General price level — பொது விலை மட்டம்
General trend — பொதுப்போக்கு
Gilt edged Securitiy — சிறப்பீட்டுப் பத்திரம்
Government Securities Market — அரசாங்க ஆவணங்கள் அங்காடி.
Graded System of Margin — வரம்புக் கிரம முறை

## H

Hundi — உண்டியல்
Hypothication — அடைமானம்

## I

Immovable property — அசையாச் சொத்து
Impound — முடக்கம் செய்
Indigenous Banker — நாட்டுப் பாங்கர்
Industrial Development Bank — தொழில் வளர்ச்சி வங்கி
Industrial Finance Corporation — தொழில் நிதிக் கூட்டுரு
Inflation — பணவீக்கம்
Interbank Call Money Rate — வங்கிகளுக்கிடையே உள்ள அழைப்புக்கடன் வீதம்
Intermediary — இடைநிலையர்
Intermediate Treasury Bill — இடைக்காலக் கருவூல உண்டியல்
Internal audit — அகத் தணிக்கை
Internal Inspection — அக ஆய்வு
International Development Association — பன்னாட்டு வளர்ச்சிச் சங்கம்
International Finance Corporation — பன்னாட்டு நிதிக் கூட்டுரு

International Monetary Fund — பன்னாட்டு நாணய நிதி
Investment-Deposit Ratio — முதலீடு-வைப்பு வீதம்
Issue Department — பணம் வெளியிடும் துறை
Items — இனங்கள்

## L

Letter of credit — வாணிக உறுதிக் கடிதம்
Liability — பொறுப்பு
Licence — உரிமம்
Life Insurance Corporation — ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு
Liquidation — கலைப்பு
Liquidator — கலைப்பலுவலகர்
Liquidity Ratio — ரொக்கத்தன்மை விகிதம்

## M

Mail Transfer — அஞ்சல் வழி மாற்றம்
Managing Agent — நிருவாக முகவர்
Margin — வரம்பு
Maturity — தவணை முதிர்வு
Memorandum of Association — அமைப்பு முறையேடு
Merger — கலப்பு
Minimum Reserve System — குறைந்த அளவுக் காப்புத் திட்டம்
Mint — நாணயச்சாலை
Monetary chaos — நிதிக்குழப்பம்
Moral Turpitude — ஒழுக்க இழிகுணம்
Moratorium — (கடன் தீர்ப்பு) நிறுத்துதல்

## N

National Agricultural Credit (Longterm operations) Fund — தேசிய வேளாண்மைக் கடன் (நீண்டகால நடவடிக்கை) நிதி
National Agricultural Credit (Stabilisation) Fund — தேசிய வேளாண்மைக் கடன் (நிலைபேறுக்க) நிதி
National Cooperative Development Corporation — தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கூட்டுரு

National Credit Council — தேசியக் கடன் குழு
National Industrial Credit (long-term operations) Fund — தேசியத் தொழிற்கடன் (நீண்ட கால நடவடிக்கை) நிதி
Nationalisation — நாட்டுடைமையாக்கல்
Negotiability — ஆவண மாற்றுத் தன்மை
Net Liquidity Ratio — நிகரரொக்கத்தன்மை விகிதம்
Non-Scheduled Banks — அட்டவணையிலிடா வங்கிகள்
Notified Banks — அறிவிக்கப்பட்ட வங்கிகள்

## O

Officer — அலுவலகர்
Open market operation — வெளி அங்காடி நடவடிக்கை
Over draft — மேல் வரைப் பற்று
Owned Capital — சொந்த முதல்

## P

Paid-up Capital — செலுத்திய முதல்
Payable on Demand — கோரியதும் கொடுபட வேண்டியதும்
Penal rate — தண்டனை வீதம்
Pledge — அடகு
Proportional Reserve System — வீதாச்சாரக் காப்புத் திட்டம்
Provident Fund — சேமநல நிதி
Priority Sector — முந்துரிமைத் துறை

## Q

Qualitative Credit Control — கடன் தன்மைக் கட்டுப்பாடு
Quantitative Credit Control — கடன் கணியக் கட்டுப்பாடு

## R

Reaction — மறு விளைவு
Recent trend — அண்மைப் போக்கு
Recession — தேக்கம்

| | |
|---|---|
| Recovery | — மீட்சி |
| Rediscount | — மறுதள்ளுபடி |
| Regional Board | — வட்டார அவை |
| Reinvestment Plan | — மறு முதலீட்டுத் திட்டம் |
| Reserve Fund | — காப்பு நிதி |
| Royal Commission on Currency and Finance | — செலாவணி மற்றும் நிதி பற்றிய அரசினர் குழுவின் அறிக்கை |
| Royalty | — விற்பனை ஊதியம் |
| Rural Banking Enquiry Committee | — கிராமியவங்கியியல் விசாரணைக் குழு |

## S

| | |
|---|---|
| Rural Economy | — கிராமியப் பொருளாதாரம் |
| Scheduled Bank | — அட்டவணையிலிட்ட வங்கி |
| Scrip | — பங்குச் சான்றுச் சீட்டு |
| Secured loan | — பிணைக்கடன் |
| Security | — பிணையம் |
| Selective Credit Control | — பொறுக்குக் கடன் கட்டுப்பாடு |
| Share Premium account | — பங்கு முனைமக் கணக்கு |
| Slack season | — மந்தப் பருவம் |
| Social Control | — சமுதாயக் கட்டுப்பாடு |
| Solvency | — கடன் தீர்க்கும் நிலை |
| Sound Borrower | — நாணயமுள்ள கடனாளி |
| Special Drawing Right | — சிறப்பு எடுப்பு உரிமை |
| Speculation | — ஊக வணிகம் |
| Spot Transaction | — உடனடி நடவடிக்கை |
| Stabilisation | — நிலைபேறுக்கம் |
| Staff | — அலுவலர் |
| Stamp Duty | — முத்திரைக் கட்டணம் |
| State Financial Corporation | — மாநில நிதியக் கூட்டுரு |
| Statistical Return | — புள்ளி விவரத் தாக்கீது |
| Statutory Cash Reserve | — சட்டமுறைக் காப்பு ரொக்கம் |
| Statutory Corporation | — சட்டமுறைக் கூட்டுரு |

Statutory Liquidity Ratio — சட்டமுறை ரொக்கத் தன்மை வீதம்
Statutory Report — சட்டமுறை அறிக்கை
Stock — பங்குத் தொகுப்பு
Stock Certificate — பங்குத் தொகுப்புச் சான்றிதழ்
Sub market — துணை அங்காடி
Sub-Pay Office — துணைக் கொடுப்பிடம்
Subsidiary Company — துணைக் கம்பெனி

## T

Telegraphic Transfer — தந்தி வழி மாற்றம்
Term lending Institution — நீண்டகாலக் கடனளிக்கும் நிறுவனம்
Time deposits — தவணை வைப்புகள்
Traditional — பாரம்பரிய
Traveller's Cheque — பயணக் காசோலை
Treasury Bill — கருவூல உண்டியல்
Treasury Bill Market — கருவூல உண்டியல் அங்காடி
Treasury Deposit Receipt — கருவூல வைப்பு இரசீது
Treasury Savings Deposit Certificate — கருவூல சேமிப்பு வைப்புச் சான்றிதழ்
Trustee Security — பொறுப்புரிமையர் ஆவணம்

## W

Warehouse — பண்டகம்
Ways and Means Advance — வழிவகைக் கடன்
Wholesale Price General Index Number — மொத்த விற்பனை விலைப் பொதுக் குறியீட்டெண்
Window Dressing — புறச்சோடனை
World Bank — உலக வங்கி